தொல்காப்பியம்

உரைவளம்

சொல்லதிகாரம்

வினையியல்

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

(உரைவளம்)

வினையியல்

பதிப்பாசிரியர்:
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பியநூல் உரைவள வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு 17

Bibliographical Data

Title of the book	:	Tolkāppiyam, Vinaiyiyal
Author	:	A. SIVALINGANAR International Institute of Tamil Studies, T.T.T.I. Tharamani, Madras-600 113.
Publisher	:	International Institute of Tamil Studies, T.T.T.I. Tharamani, Madras-600 113.
Publication Number	:	96
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	September 1984
Paper used	:	16·2 kg D/Demy
Size of the book	:	21 × 14 cms
Printing type used	:	10 point
Number of Copies	:	2200
Number of pages	:	xxiv + 328
Price	:	Rs. 20/- (Twenty Rupees only)
Printers	:	Sri Gomathy Achagam, 7, Chinnappa Rowther Street, Triplicane, Madras-5.
Binding	:	Card board
Artist	:	Eswari
Subject	:	Grammar
Summary	:	Commentaries on Tolkāppiyam Vinaiyiyal

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் இதுவரை, 16 நூல்களை வெளியிட்டுள்ளது. தொல்காப்பிய இயல் ஒவ்வொன்றற்கும் ஒவ்வோர் உரைவள நூல் வெளியிட்டு வருகிறது. வினையியல் உரைவள நூலாகிய இந்நூல் 17 ஆம் நூலாகும்.

இதில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார் உரைகளும், வேண்டிய அளவில் வெள்ளைவாரணனார், ஆதித்தர் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புரையும், இக்கால அறிஞர் பெருமக்களின் ஆய்வுரைகளும், தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு டாக்டர் சி. இலக்குவனாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும், பதிப்பாசிரியர் கருத்துரைகளும் அடங்கியுள்ளன.

வழக்கம்போல் இந்நூலையும் சிறப்பாக உருவாக்கிய பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனாரையும், அவர்க்கு உதவியவர்களையும் பாராட்டுகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் திட்டங்களுக்கு முழு ஆதரவு அளித்து வரும் நிறுவனத் தலைவரும் தமிழ்நாடு அரசுக் கல்வியமைச்சரும் ஆம் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு என்றென்றும் நன்றியுடையேன்.

நூல் வெளியீட்டுக்கு ஊக்கம் அளித்து வரும் தமிழறிஞர் கட்கும், குறுகிய காலத்தில் நன்முறையில் அச்சிட்டுதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும் நன்றி.

சென்னை
1-9-1984

ச. வே. சுப்பிரமணியன்

பதிப்புரை

'வினையியல் உரைவளம்' என்னும் இந்நூல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் 17 ஆம் நூலாக வெளிவருகின்றது.

முன்னைய வெளியீடுகளிற் போலவே இதன் கண்ணும் இளம்பூரணர் முதலியோர் உரைகளும், இக்காலத்தார் உரை உரைக்குறிப்புகளும், சூத்திரங்களுக்கு டாக்டர் இலக்குவனாரின் ஆங்கிலமொழி பெயர்ப்பும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும், பிறவும் அமைந்துள்ளன.

இந்நூல் வெளிவரத் துணைபுரிந்தோர் டாக்டர் வை. இரத்தினசபாபதி, புலவர் க. வா. சச்சிதானந்தம் ஆகியோர். அவர் தமக்கு நன்றி.

தரமான நூல்களை வெளியிட்டு வருபவரும் நிறுவன இயக்குநரும் ஆம் மதிப்பிற்குரிய டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கும், நிறுவன வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வரும் தமிழ்நாடு அரசுக் கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களுக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய ஸ்ரீகோமதி அச்சகவுரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்களுக்கும், நூலறி புலவர்க்கும் நன்றி.

சென்னை
1-9-1984

ஆ. சி.

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	iii
பதிப்புரை	iv
பொருளடக்கம்	v vi
System of Transliteration	vii
சுருக்க விளக்கம்	viii ix
வினையியல் —பொருட்சுருக்கம்	x xxiv
வினைச்சொற் பொது விலக்கணம்	1—8
காலம் மூன்று	8—10
காலம்-பெயர், முறை தொகை	10—18
வினைச்சொற் பாகுபாடு	18—22
தன்மைப் பன்மை வினைமுற்று	22—36
தன்மையொருமை வினைமுற்று	36—42
செய்கு முடிபு	42—50
உயர்திணைப்படர்க்கை யொருமை வினைமுற்று	50—54
உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று	54—58
மார் வினையொடு முடிதல்	58—63
உயர்திணை வினைமுற்றின் தொகை	64—69
உளப்பாட்டுத் தன்மை வினைமுற்று	70—74
யார்	74—77
ஆ ஓ வாதல்	77—82
குறிப்பு வினைமுற்று	82—102
அஃறிணைப் பன்மை வினைமுற்று	103—108
அஃறிணையொருமை வினைமுற்று	108—115
அஃறிணை வினைமுற்றின் தொகை	115—117
எவன்	117—220
குறிப்பு வினைமுற்று	120—134
விரவுவினை—பெயர், முறை, தொகை	134—141
முன்னிலை யொருமை வினைமுற்று	142—148
முன்னிலைப் பன்மை வினைமுற்று	148—158

ஏனை வினைகள்	159—165
வியங்கோள்	165—177
செய்யும் என்னும் முற்று	177—182
வினையெச்ச வாய்பாடுகள்	182—208
வினைமுதல் வினைகொள்வன	208—211
வேறு முடிபு	211—226
அடுக்கி முடியுமாறு	226—230
பெயரெச்சம் முடியுமாறு	231—244
செய்யும்—முடிபுவேறுபாடு	244—250
சிறப்புவிதி	251—257
இடைப்பிறவரல்	257—260
செய்யும்—ஈறுகெடுதல்	261—264
செய்தென் எச்சம்	264—267
செய்யுமென் எச்சம்	267—270
கால மயக்கம்—விரைவுப் பொருளில்	271—274
கால மயக்கம்—மிக்கதனிடமாக	274—285
இது செயல் வேண்டும்	285—290
வினா—எதிர்மறைப் பொருள்தரல்	290—295
கால மயக்கம்—இயற்கையும் தெளிவும் பற்றி	296—300
செயப்படுபொருள் செய் பொருளாதல்	300—404
காலமயக்கம்—இறப்பும் எதிர்வும்	305—307
காலமயக்கம்—இறப்பு நிகழ்வும்	307—314
பயன்படுத்தப் பெற்ற நூல்கள்	315—316
சொல், தொடர் அகராதி	317—327
சூத்திர முதற்குறிப்பகராதி.	328

System Transliteration

உயிரெழுத்துகள்—Vowels

அ—a
ஆ—ā
இ—i
ஈ—ī
உ—u
ஊ—ū
எ—e
ஏ—ē
ஐ—ai
ஒ—o
ஓ—ō
ஔ—au

மெய்யெழுத்துகள்—Consonants

வல்லினம்	மெல்லினம்	இடையினம்
க்—k	ங்—ṅ	ய்—y
ச்—s	ஞ—ñ	ர்—r
ட்—ṭ	ண்—ṇ	ல்—l
த்—th	ந்—n	வ்—v
ப்—p	ம்—m	ழ்—ḻ
ற்—ṟ	ன்—ṉ	ள்—ḷ

சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு

ஆதி—ஆதித்தர்

ஆ.மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு

இ.கொ—இலக்கணக் கொத்து

இல—இலக்குவனார்

இல.வி.—இலக்கண விளக்கம்

இ.ள்.—இதன் பொருள்

உ.ம்—உதாரணம்

உயிர்.ம—உயிர்மயங்கியல்

எச்ச—எச்சவியல்

எ-டு—எடுத்துக்காட்டு

எழு, எழுத்—எழுத்ததிகாரம்

எ-று—என்றவாறு

ஐங்குறு—ஐங்குறுநூறு

கலி—கலித்தொகை

களவழி—களவழிநாற்பது

கிளவி—கிளவியாக்கம்

குறுந்—குறுந்தொகை

குற்றி குற்றியலுகரப் புணரியல்

குறள்—திருக்குறள்

சிலப்—சிலப்பதிகாரம்

சிவ—சிவலிங்கனார்

சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை

சீவக—சீவக சிந்தாமணி

சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்

சூ—சூத்திரம்

செய்—செய்யுளியல்

சொல்—சொல்லதிகாரம்

தொல்—தொல்காப்பியம்

தொன்—தொன்னூல் விளக்கம்

நச்—நச்சினார்க்கினியர்
நற்—நற்றிணை
நன்—நன்னூல்
நாலடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நூன்—நூன்மரபு
நேமி—நேமிநாதம்
பதிற்—பதிற்றுப் பத்து
பி.இ.நூ—பிற்கால இலக்கண நூல்கள்
பி.கு.—பிறகுறிப்பு
புண—புணரியல்
புள்ளி—புள்ளி மயங்கியல்
புறம்—புறநானூறு
பூவ—பூவராகம்பிள்ளை
பெய, பெயரி—பெயரியல
பெரும்பாண்—பெரும்பாணாற்றுப்படை
பொருந—பொருநராற்றுப்படை
பொருள்—பொருளதிகாரம்
மலைபடு—மலைபடுகடாம்
முத்து—முத்துவீரியம்
வினை—வினையியல்
வீர—வீரசோழியம்
வெள்—வெள்ளைவாரணனார்
வேற்—வேற்றுமையியல்
வேற்.ம.—வேற்றுமை மயங்கியல்

வினையியல்-பொருட் சுருக்கம்

வினையியல்

வினை என்பதற்குத் தொழில் என்பது பொருள். அது தொழில் நிகழ்ச்சியைப் பற்றிய சொல்லுக்கு ஆகியது. அதனால் வினை என்பது வினைச் சொல் எனப் பொருள்படும். வினைச் சொல் பற்றிய இலக்கணம் வினையியல் எனப்பட்டது. இங்கே வினைச் சொல் பற்றிய இலக்கணம் கூறும் ஒரு பிரிவுக்கு வினை யியல் எனப் பெயராயிற்று.

வினைச் சொல்லின் பொது விலக்கணம்

வினைச் சொல் என்பது வேற்றுமையுருபு ஏலாது; (பெயர்ச் சொல் ஏற்கும்) காலம் ஏற்று வரும். (1) காலம் மூன்று வகை. (2) இறந்த காலம், நிகழ்காலம் எதிர் காலம் என்பன அவை. அம்மூன்று காலங்களையும் உணர்த்துவது தெரிநிலை வினை. குறிப்பு வினையும் அம்முக்காலங்களையும் உணர்த்தும் (3)

உ-ம் : உண்டான் — இறந்த காலம்
உண்ணா நின்றான் —நிகழ் காலம்
உண்பான் — எதிர் காலம்
} தெரிநிலை வினை முற்று

பண்டு கரியன் — இறந்த காலம்
இன்று கரியன் — நிகழ்காலம்
நாளை கரியனாம் — எதிர் காலம்
} குறிப்பு வினைமுற்று

தெரிநிலை வினை முற்றுக்குக் காலம் சொல்லிலேயே விளங்கித் தோன்றும். குறிப்பினால் தான் காலம் தோன்றும் குறிப்பு வினை முற்றுக்கு.

குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காலம் காட்டி வரும் வினைச் சொற்கள் மூவகைப்படும். அவை உயர்திணை வினைச் சொல் அஃறிணை வினைச்சொல் அவ்விரண்டுக்கும் பொதுவாக வரும் விரவு வினைச்சொல் என்பனவாம்.

உ-ம் : உண்டான் — தெரிநிலை; கரியன்—குறிப்பு - உயர்திணை
உண்டது — தெரிநிலை; கரியது—குறிப்பு — அஃறிணை
வந்தனை—முன்னிலை;—கரியை—குறிப்பு— பொதுத்திணை

பிறைக் கோட்டுக்குள் உள்ள எண்கள் வினையியற் சூத்திர எண்கள்.

சிறப்பிலக்கணம்

வினைச் சொல் மூன்றிடத்துக்கு வரும். மூன்றிடமாவன தன்மை, முன்னிலை, படர்க்கை யென்பன. அம்மூன்றனுள் தன்மையிடம் உயர்திணைக்கே யுரியது ; படர்க்கை யிடத்தில் ஆண்பால் பெண்பால் பலர்பால் என்னும் மூன்றும் உயர்திணைக்கும், ஒன்றன்பால் பலவின் பால் என்னும் இரண்டும் அஃறிணைக்கும் உரியன. முன்னிலை உயர்திணை அஃறிணை யாகிய இரண்டுக்கும் உரியது.

தன்மை-பன்மை.

உயர்திணைக்குரிய தன்மை வினைமுற்று பன்மை, ஒருமை என இருவகைப்படும். பன்மை வினை முற்றுகள் தனிப்பன்மை வினைமுற்று, உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று என இரு வகைப்படும். பொதுவில் உண்டேம் என வரின் தனித்தன்மைப் பன்மை. முன்னின்றானையோ படர்க்கையானையோ இருவரையுமோ சேர்த்துச் சொல்லப்படும் போது அது உளப்பாட்டுப் பன்மை எனப்படும். அப்பன்மைச் சொற்கள் எட்டு வகையான இறுதிகளை (விகுதிகளை) யுடையதாய் வரும். அவை அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும் என்பன.

உ-ம்: அம்-உண்டனம், உண்ணாநின்றனம், உண்பம் கரியம்
ஆம்-உண்டாம், உண்ணா நின்றாம் உண்பாம்; கரியாம்
} யானும் நீயும்

எம்-உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்பெம்; கரியெம்
ஏம்-உண்டேம், உண்ணா நின்றேம், உண்பேம்; கரியேம்
} யானும் அவனும்

கும்-உண்கும், டும்-உண்டும், தும்-வருதும், றும்-சேறும்—யானும் நீயும் அவனும்.

தன்மை-ஒருமை.

தன்மை யொருமை வினைமுற்றுச் சொற்கள் என், ஏன், அல், கு, டு, து, று என்பனவற்றை யிறுதியாகக் கொண்டு வரும்.

உ-ம்: என்—உண்டெனென், உண்ணாநின்றனென், உண்பென்; கரியென்

ஏன்—உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன்; கரியேன்

அல்—உண்பல், வருவல்.

கு-உண்கு; டு-உண்டு; து-வந்து, வருது; று-சென்று, சேறு. இவையாவும் யான் என்னும் பெயரைக் கொண்டு முடியும் (6).

குவ்வீற்றுச்சொல் செய்கு என்னும் வாயபாடாகச் சொல்லப் படும். அச் செய்கு என் வாய்ப்பாட்டுத் தன்மை யொருமை வினை முற்றானது காண்குயான் (காண்பேன்யான்) எனப் பெய ருடன் முடிதல் வேண்டும். அது காண்கு வந்தேன் (காண்பேன் வந்தேன்) என வினையொடு முடிந்தாலும் தன்மை யொருமை வினைமுற்றாகவே கருதப்படும் (7) அதுபோலவே 'கும்' ஈறாக முடியும் செய்கும் என்னும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்றும் காண்கும் யாம் எனப் பெயருடன் முடிதலே யன்றிக் 'காண்கும் வந்தேம்' என வினையுடன் முடிந்தாலும் தன்மைப் பன்மை வினை முற்றாகவே கருதப்படும்.

உயர்திணைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று.

உயர்திணை ஆண்பால் பெண்பால் பலர்பால் என்னும் மூன்று பிரிவுடையது. அன் ஆன் என்பனவற்றை இறுதியாக வுடைய வினைச் சொற்கள் ஆண்பால் வினைமுற்றுச் சொற் களாம்.

அன்—உண்டனன், உண்ணாநின்றனன்,
உண்பன்; கரியன்
ஆன்—உண்டான், உண்ணாநின்றான்,
உண்பான்; கரியான்
} அவன்

அள், ஆள் என்பனவற்றை யிறுதியில் கொண்ட வினைச் சொற்கள் பெண்பால் வினைமுற்றுச் சொற்களாம்.

உ-ம்: அள்—உண்டனள், உண்ணா
நின்றனள், உண்பள்; கரியள்
ஆள்—உண்டாள் உண்ணா நின்றாள்
உண்பாள், கரியாள்
} அவள் (8)

அர், ஆர், ப, மார் என்பனவற்றை இறுதியாகவுடைய வினைச் சொற்கள் பலர்பால் வினைமுற்றுச் சொற்களாம்.

உ-ம்: அர்—உண்டனர், உண்ணா
நின்றனர், உண்பர்; கரியர்
ஆர்—உண்டார், உண்ணா நின்றார்,
உண்பார்; கரியார்
} அவர்

ப—உண்ப அவர் (9)

மார்—கொண்மார் வந்தார்—மார் ஈற்றுச்சொல் மட்டும் வினைகொண்டு முடியும் (10)

இது வரை சொல்லப் பட்ட ஈறுகள் அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும், கு, டு, து, று, என், ஏன், அல், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார் என்னும் இருபத்து மூன்று. இவ் வீறுகளையுடைய சொற்கள் உயர்திணை வினைமுற்றுச் சொற்களாம் (11)

யார் என்பது வினாப் பொருளைத் தரும் குறிப்புவினை முற்றாம். இது யார் அவன், யார் அவள், யார் அவர் என உயர் திணை மூன்று பாலுக்கும் வரும். (13).

மேலே கூறப்பட்ட ஈறுகளுள் ஆஎன்பதைக் கொண்ட ஈறுகளின் ஆகாரம் செய்யுளில் வரும்போது ஓகாரமாக மாறிவருதலும் உண்டு.

உ—ம் ஆன்—நிற்றந்தான்—நிற்றந்தோன்
ஆள்—பெயர்ந்தாள்—பெயர்ந்தோள்
ஆர்—காடிறந்தார்—காடிறந்தோர் (14)

ஆய் என முடியும் முன்னிலை வினைச்சொல்லின் ஆகாரமும் ஓகாரமாகும் உ-ம் வந்தாய்—வந்தோய். (15)

உயர்திணைப் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

உயர்திணைக்குறிப்பு வினை முற்று பொருளடிப்படையில் ஆறுவகையில் வரும் அவை :-

(1) ஆறாம் வேற்றுமைக்குரிய கிழமைப் பொருளடிப்படையில் வரும்.

உ-ம்: கச்சினன், கச்சு என்பது ஒருவன் உடைமைப்பொருள்.

2. ஏழாம் வேற்றுமைக்குரிய நிலம் பொருளடிப்படையில் வரும்.

உ-ம்: நிலத்தன். நிலம் என்பது இடம். ஊரினன், அகத்தன் என்பன போல்வனவும் கொள்க.

3. ஒப்புமையாதல் அடிப்படையில் வரும். உ-ம்: புலிபோல்வான், பொன்னன்னன்.

4. பண்பு அடிப்படையில் வரும். உ-ம்: கரியன், செய்யன்

5. மேற்கூறப்பட்ட நான்கு வகையில் வருவதேயன்றி ஐயாட்டையான் எனக்கால அடிப்படையிலும், 6. துணங்கைக் கூத்தாடும் இடத்தில் உள்ளான் என்ற பொருளில் துணங்கையான் எனத் தொழில் நிகழும் இடத்தின் அடிப்படையிலும் வரும்(16)

இனிச் சொல்லடிப்படையில் வரும் குறிப்பு வினை முற்றாவன.

அன்மை—அல்லன், அல்லள், அல்லர்
இன்மை—இலன், இலள், இலர்
உண்மை—உளன், உளள், உளர்
வன்மை—வல்லன், வல்லள், வல்லர்

இன்மை—இருவகையில் வரும். சாத்தன் இலன் என்றால் இன்மை சாத்தன் மேலது. சாத்தன் பொருள் இலன் என்றால் இன்மை பொருள் மேலது. அதனால் பொருள் இலன் என்பதில் உள்ள இலன் என்பது உடைமைக்கு (உடைமைப் பொருளுக்கு) மறுதலை (17)

மேலே கூறப்பட்ட உயர்திணைக் குறிப்பு வினை முற்றுகள் யாவும் ஒருமையிலும் பன்மையிலும் வந்து குறிப்பாற் காலம் உணர்த்துவனவாயினும் தமக்கெனத் தனியிறுகள் இன்றி உயர் திணைத் தெரிநிலை வினைகளுக்குக் கூறிய அம், ஆம், அன், ஆன் முதலிய ஈறுகளையே கொண்டு வரும் (18)

அஃறிணைப் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று

பலவின்பால் படர்க்கை வினைமுற்று

அ, ஆ, வ என்னும் மூன்றெழுத்துகளை இறுதியில் கொண்டு வரும் வினைச் சொற்கள் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுச் சொற்களாம்.

உ-ம்: அ—உண்டன, உண்ணாநின்றன, உண்பன

ஆ—உண்ணா (எதிர் மறையில் மட்டும் வரும். முக் காலத்துக்கும் உரியது)

வ—வருவ, உண்ணுவ (எதிர்காலம்) வருவ என்பது வா+வ எனப் பிரிக்கப்படின் வகரவீற்றுப் பலவின் பாலாம்.

ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று

து, று, டு என்பனவற்றை யிறுதியாகவுடைய வினைச்சொற் கள் ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுகளாகும்.

உ-ம்: து—வந்தது, வாரா நின்றது, வருவது—மூன்று காலம்.

று—உண்டன்று. இறந்த காலம். 'று', 'அன்' சாரியை பெற்று வந்தது.

டு - குண்டுகட்டு (கண்+டு=கண்ணையுடையது) குறிப்பு வினை (20)

மேலே கூறப்பட்ட பன்மையும் ஒருமையுமாகிய பால்களை (பலவின்பால், ஒன்றன் பால்களை) அறியுமாறு வந்த அந்த ஆறீற்றுச் சொற்களும் அஃறிணைக் குரியனவாம். (21)

எவன் என்பது வினாவினை. அது 'அஃது எவன்' என ஒன்றன் பாலுக்கும், 'அவை எவன்' எனப் பலவின்பாற்கும் உரிய தாகும் (22)

அஃறிணைக் குறிப்பு வினைமுற்று

உயர்திணைக் குறிப்பு வினை முற்றுப் போலவே அஃறிணை வினைக் குறிப்பு முற்றும் பொருளடிப்படையிலும் சொல்லடிப் படையிலுமாக வரும். பொருளடிப்படையில் வருவன :-

பண்பின் அடிப்படையில் கரிது என ஒருமையிலும், கரிய எனப் பன்மையிலும் வரும்.

பண்பினாகிய சினை முதற்கிளவியடிபடையில் 'நெடுஞ் செவித்து' என வரும். இது ஒருமை (ஒன்றன்பால்). 'நெடுஞ் செவிய' என்பது பன்மை (பலவின்பால்).

ஒப்பொடு வரும் கிளவியடிப்படையில் 'பொன்னன்னது' என ஒன்றன்பாற்கும், 'பொன்னன்ன' எனப் பலவின்பாற்கும் வரும்.

இனிச் சொல் பற்றி வருவன வருமாறு :-
இன்று, அன்று, உடைத்து என்பன் ஒன்றன்பாற் சொல்.
இல, அல்ல, உடைய, உள என்பன பலவின்பாற்சொல் (23)

பலவின் பாலையும் (பன்மையையும்) ஒன்றன்பாலையும் (ஒருமையையும்) உணர்த்தி முக்காலமும் உணர்த்தி வந்த மேலே குறித்த சொற்கள் யாவும்—குறிப்பு வினை முற்றுகள் யாவும் அஃறிணைத்தெரிநிலை வினைகள் போல அவற்றின் ஈறுகளையே கொண்டு முடியும். (உதாரணம் மேலே காட்டியனவே) (24)

இருதிணைப் பொது வினைகள்

இருதிணைப் பொது வினைகள் எட்டு அவை:

முன்னிலை, வியங்கோள், வினையெச்சம், இல்லை, வேறு, செய்ம்மன, செய்யும், செய்த (பெயரெச்சம்) என்பனவாகும். இவை தத்தம் பொதுமை நிலையிலிருந்து ஒருகால் உயர்திணைக் கும் ஒருகால் அஃறிணைக்கும் உரியவாக மாறி வரும். (25)

முன்னிலை ஒருமை

முன்னிலையொருமை வினைச்சொற்கள் இ, ஐ, ஆய் என்பனவற்றை இறுதியில் கொண்டுவரும் அவை உயர்திணை

ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்றற்கும் பொதுவாக வரும்.

உம்: இ-உண்டி (உண்டாய்)—இறந்தகாலம்.

ஐ—உண்டனை. உண்ணா நின்றனை, உண்பை-மூன்று காலம்.

ஆய்—உண்டாய், உண்ணா நின்றாய், உண்பாய்-மூன்று காலம். கழலினை, கரியை, நாட்டை, பொன்னன்னை என முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று வரும். அது, கழலினாய், கரியாய், நாட்டாய், பொன்னன்னாய் என ஆய் ஈறு பெற்றும்வரும். (26)

முன்னிலைப் பன்மை

உயர்திணைப் பலர்பாலுக்கும் அஃறிணைப் பலவின்பாலுக்கும் இர் ஈர் மின் என்பனவற்றை யிறுதியாகவுடைய வினைச் சொற்கள் முன்னிலைப்பன்மை வினைமுற்றுகளாக வரும்.

இர்- உண்டனிர், உண்ணா நின்றனிர், உண்ணுவிர் } மூன்று
ஈர்-உண்டீர், உண்ணாநின்றீர், உண்ணுவீர் } காலம்
மின்-உண்மின், உண்ணுமின்—எதிர்காலம்.

கழலினிர், கரியிர், நாட்டிர், பொன்னன்னிர் என இர் ஈறு பெற்றும், கறலினீர், கரியீர், நாட்டீர், பொன்னன்னீர் என ஈர் ஈறு பெற்றும் முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்றுகள் வரும். (27).

பிறபொது வினை

முன்னிலையொழிந்த ஏனைய பொதுவினைகள் யாவும் தத்தம் பொருளுக்கு ஏற்ப மூன்றிடத்துக்கும் ஐந்து பாலுக்கும் உரியவாய் வரும் (28) (உதாரணம் இது பற்றிய சூத்திரத்துக் காண்க.)

வியங்கோள்

வியங்கோள் மூன்றிடத்துக்கும் ஐந்துபாலுக்கும் வரும் என மேலே குறிப்பிட்டாலும் முன்னிலைக்கும் தன்மைக்கும் வாராது. படர்க்கை ஐம்பாலுக்குமே பொதுவாக வரும்.

செல்க அவன், செல்க அவள், செல்க அவர், செல்க அது, செல்க அவை என்பன உதாரணங்கள்.

வியங்கோளுக்கு ஈறு தனியாக ஆசிரியர் கூறவில்லை. என்றாலும் மெய்யூர்ந்த அகரவீறும், அல்ஈறும், ஆல்ஈறும் ஆசிரியர் தம் சூத்திரங்களில் ஆண்டுள்ளார் ஆதலின் அவையே ஈறுகளாகக் கொள்ளல் வேண்டும். இய, இயர் போல்வனவும் உண்டு,

செய்யும் (முற்று)

செய்யும் என்னும் முற்று பலர்பால் படர்க்கையிலும், முன்னிலையிலும், தன்மையிலும் வாராது. எனவே உயர்திணை ஆண்பால், பெண்பால் அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கிலும் வரும்.

உ.ம்: உண்ணும் அவன், உண்ணும் அவள். உண்ணும் அது, உண்ணும் அவை.

வினையெச்சம்

வினையெச்சம் உயிரீறும் மெய்யீறுமாக ஒன்பது வாய்பாடுகளில் அடங்கும் சொற்களாகவும், பின் முன் கால் கடை வழி இடத்து என்பன போலும் சொற்களையிறுதியிற் கொண்டனவாகவும் வரும் (31, 32). வாய்பாடுகள்:

செய்து—உண்டு வந்தான்—இறந்தகாலம்
செய்யூ—உண்ணூஉ வந்தான்—இறந்தகாலம்
செய்பு—உண்ணுபு வந்தான்—நிகழ்காலம்
செய்தென—உண்டென வந்தான்—இறந்த காலம்
செய்யியர்—உண்ணியர் வந்தான்—எதிர்காலம்
செய்யிய—உண்ணிய வந்தான்—எதிர்காலம்
செயின்—உண்ணின் வருவன்—எதிர்காலம்
செய—உண்ண வருவான்—எதிர்காலம்
செயற்கு—உணற்கு வருவான்—எதிர்காலம்

ஓடி என இகரவீறும், போய் என யகர வீறும் செய்து என்பதில் அடங்கும். (மேலே குறிப்பிட்டவற்றுள் பிறகாலங்களை ஏற்பனவும் உண்டு. அறிக)

பின்—உண்டபின் வருவான்
முன்—உண்ணுமுன் வருவான்
கால்—உண்டக்கால் வருவான்
கடை—உண்டக்கடை வருவான்
வழி—உண்டவழி வருவான்
இடத்து—உண்டவிடத்து வந்தான்

(மேலே குறிப்பிட்டன பிற காலங்களுடன் வருவன அறிந்து கொள்க.)

உண்பாக்கு, உண்பான், உண்ணுவான், எனப் பாக்கு, பான், வான் என்பனவற்றை யிறுதியிலுடையனவும் வினையெச்சங் களாக வரும்.

இன்றி, அன்றி, அல்லால், அல்லது என்பன குறிப்பு வினை யெச்சங்களாக வரும். வருதலின்றி ஓயான், உண்டன்றிச் செல்லான், உண்டல்லால் வாரான், உண்டல்லது வாரான் எனக் கொள்க.

வினையெச்சம் முடியுமாறு

மேற்கூறப்பட்ட வினையெச்சங்களுள் செய்து, செய்பு, செய்யூ என்னும் மூன்று வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் தமக்குரிய வினைமுதல் வினையைக் கொண்டு முடியும்.

உ-ம்: செய்து-உண்டு வந்தான் செய்பு-உண்ணுபு வந்தான் செய்யூஉ - உண்ணூஉ வந்தான்.

உண்ணுதல் தொழிலுக்குரிய வினைமுதலின் தொழிலே வருதல் தொழிலும் ஆம். அதனால் இவை தம் வினை முதல் வினை கொண்டன. (33)

அம் மூன்று வாய்பாட்டு வினையெச்சங்களும் சினையின் தொழிலாகவரின் சினையின் தொழிலே கொண்டு முடிதலும், அச்சினையையுடைய முதலின் தொழிலைக் கொண்டு முடிதலும் உண்டு.

செய்து—கையிற்று வீழ்ந்தது, கையிற்று வீழ்ந்தான்
செய்பு—கையிறுபு வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தான்
செய்யூஉ—கையிறூஉ வீழ்ந்தது, கையிறூஉ வீழ்ந்தான்.

இவற்றுள் கையாகிய சினையின் தொழிலாகிய இற்று என்னும் எச்சம் அச்சினையின் தொழிலாகிய வீழ்ந்தது என்பதைக் கொண்டு முடிந்ததையும், வீழ்ந்தான் என அதன் முதல் வினையைக் கொண்டு முடிந்ததையும் காண்க. (34)

பிற எச்சங்கள் யாவும் தன் வினைமுதல் வினையையாவது பிற வினைமுதல் வினையையாவது கொண்டு முடியும்.

உ-ம் செய்தென—மழை பெய்தெனப் புகழ்பெற்றது—தன்வினை
மழைபெய்தெனமரம் குழைத்தது—பிறவினை
செய்யியர்—மழை பெய்யியர் எழுந்தது—தன்வினை
மழை பெய்யியர் பலிகொடுத்தார்—பிறவினை
செய்யிய—மழைபெய்யிய முழங்கும்—தன்வினை
மழைபெய்யிய வான் பழிச்சுதும்—பிறவினை

செய்யின்—மழைபெய்யிற் புகழ்பெறும்—தன்வினை
மழைபெய்யிற் குளம் நிறையும்—பிறவினை
செய—மழைபெய்யப் புகழ் பெற்றது—தன்வினை
மழைபெய்ய மரம் குழைத்தது—பிறவினை
செயற்கு—மழைபெய்தற்கு முழங்கும்—தன்வினை
மழை பெய்தற்குக் கடவுளை வாழ்த்துதும்—பிறவினை
பின்—கடந்தபின் இளமை வாராது—தன்வினை
கணவன் இனிது உண்டபின் காதலி முகம் மலர்ந்தது—பிறவினை
முன்—முருகன் சூரனையழிக்குமுன் தன் உருவம் காட்டினான்—தன்வினை
முருகன் தன் உருவம் காட்டுமுன் சூரன் முருகனை உணரவில்லை—பிறவினை
கால்—உண்டக்கால் உறங்குவான்—தன்வினை
உண்டக்கால் பசிதீரும்—பிறவினை
கடை—உண்டக்கடை உறங்குவான்—தன்வினை
உண்டக்கடைப் பசிதீரும்—பிறவினை
வழி—உண்டவழி உறங்குவான்—தன்வினை
உண்டவழிப் பசிதீரும்—பிறவினை
இடத்து—உண்டவிடத்து உறங்குவான்—தன்வினை
உண்டவிடத்துப் பசிதீரும்—பிறவினை (35)

வினையெச்சங்கள் அடுக்கி வந்து முடிதல்

மேற்குறித்த வாய்பாட்டு வினையெச்சச் சொற்கள் அடுக்கி வரும்போது அவை தனித்தனி வினைகொண்டு முடியாமல் இறுதிச்சொல் கொண்டு முடியும் வினையையே மற்றவையும் கொண்டு முடியும். அடுக்கி வரும்போது ஒருவாய்பாடே அடுக்கி வருதலும், பல வாய்பாடுகள் தம்முள் அடுக்கி வருதலும் உண்டு.

உ-ம் : உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான். இது செய்து என்னும் வாய்பாட்டு எச்சம் நான்கு அடுக்கி வந்து பாடி என்பது கொண்டு முடிந்த வந்தான் என்னும் வினையுடன் மற்றைய மூன்றும் முடிந்தவாறு காண்க.

உண்டு பருகூத் தின்குபு வந்தான். இதில் செய்து, செய்யூ, செய்பு என்னும் வாய்பாட்டுச் சொற்கள் அடுக்கி வந்து தின்குபு வின் முடிபாகிய வந்தான் என்பதையே மற்றை வாய்பாட்டு எச்சங்களும் முடிந்தவாறு காண்க. (36)

பெயரெச்சம்

பெயரெச்சம் செய்த, செய்யும் என்னும் இரண்டு வாய்பாடுகளில் வரும். செய்த என்பது இறந்த காலத்துக்கும், செய்யும் என்பது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் வரும். அவை தொழில் தோன்றுதற்குக் காரணமாக அமையும் வினைமுதல், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் கொண்டு முடியும்.

உ-ம் : செய்த – உண்ட சாத்தன், உண்ட இலை, உண்ட சாலை, உண்ட ஊண், உண்ட வேளை, உண்ட உணவு.
செய்யும்—உண்ணும்சாத்தன், உண்ணும்இலை, உண்ணும் சாலை, உண்ணும் ஊண், உண்ணும்வேளை,
உண்ணும் உணவு (ஊன்—உண்ணுதல் தொழில்)
அரசன் ஆ கொடுத்த பார்ப்பான்—இது இன்னதற்குஎன்பது பட வந்தது.
ஆடை ஒலித்த கூலி—இது இது பயன் என்பதுபட வந்தது
இவ்விரண்டு வகையும் சிறுபான்மை வரும் (37)

செய்யும் என்னும் வாய்பாட்டுச்சொல் பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலைகளில் வாராது என்று முன்னர்க் கூறப் பட்டது. அது முற்றாக இருக்கும் நிலைமைக்கு. இங்கே எச்சமாக இரும்பதற்குக் கூறப்படுதலின் அது விலக்கப் பட்ட பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலைகளுக்கும் வரும். உண்ணும் அவர், உண்ணும்யான் உண்ணும்நீ எனக் காண்க. (38)

எதிர்மறையெச்சம்

இது வரை பெயரெச்சச் சொற்களும் வினையெச்சச் சொற்களும் செயல் நிகழும் உடன்பாட்டு நிலையில் கூறப்பட்டன. அவை செயல் நிகழாமையை யுணர்த்தும் எதிர்மறை நிலையிலும் அமைத்துக் கூறப்படும். அப்படிக் கூறப்படினும் வினையெச்சம் பெயரெச்சம் என்னும் பொருண்மைத் தன்மையில் மாறுபடா.

உ-ம்: பெயரெச்சம்—உண்ணாத இல்லம், உண்ணாச்சோறு
வினையெச்சம்—உண்ணாது வந்தான்.
உண்ணான் என வினை முற்றும் வரும்.

இடைப்பிறவரல்

பெயரெச் வினையெச்சங்களுக்கும் அவை கொண்டு முடியும் பெயர் வினைகளுக்கும் இடையில் பொருத்தமுறப் பிறசொற்கள் வரவும் கூடும்,

உ-ம்: வந்த காட்டுள் வாழ் யானை உண்ட கையுடன் வந்தான். } பெயரெச்சத்து இடைப்பிறவரல்.
உண்டு சாத்தன் வந்தான் உழுது ஏரொடு வந்தான் } வினையெச்சத்து இடைப்பிறவரல்.

எச்சங்களும் இடைவரலாம்.

உ-ம்: உழுது ஓடி வந்தான். வினையெச்சம் இடை வந்தது. கவளம் கொள்ளாக் களித்த யானை—பெயரெச்சம் இடை வந்தது. (40)

செய்யும் என் எச்சத் திரிபு.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தில் உள்ள இறுதி எழுத்தின் அயல் நின்ற உகரமும் அதனால் ஊரப்பட்ட மெய்யும் கெட்டு வருதலும் உண்டு.

உ-ம்: வாவும்புரவி—வாம்புரவி
போகும்போது—போம்போது.

செய்யும் என்பது முற்றாக வரின் உகரம் மட்டும் கெடுதலும் உகரம்தான் ஊர்ந்த மெய்யொடும் கெடுதலும் உண்டு.

உ-ம்: கலுழுமே—கலுழ்மே
மொழியுமே—மொழிமே (41)

காலமயக்கம்

நீ உண்டு வருவாய் - இத்தொடரில் வருவாய் என்னும் எதிர் காலத்துக்கு முன்னர் உண்டு என்னும் இறந்தகால எச்சம் வந்த ததாயினும் அது இறந்த காலத்தை உணர்த்தாமல் எதிர்காலத் தையுணர்த்தியது. இவ்வாறு வழக்கு இருப்பதால் செய்து என்னும் இறந்த காலச் சொல் எதிர்காலத்தும் ஆளப்படும் என்பது அறியப்படும். எனவே இவ்வாறு வருவது காலவழு அமைதி. (42)

ஞாயிறும் திங்களும் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப் பன. அவற்றின் இயக்கம் பற்றிக்குறிப்பிடும்போது இயங்கியது, இயங்கா நின்றது, இயங்குவது என்னும் முக்கால வினைகளுள் ஒன்றைக் குறிப்பிடின் ஏனைக் காலங்களுக்குப் பொருந்தாது. எனினும் ஏதேனும் ஒருகாலவினைச்சொல் கொண்டே குறிப்பிட வேண்டும். அதற்கு ஏற்றது செய்யும் என்னும் வாய்பாட்டுநிகழ் காலச் சொல்லே. அதனால் ஞாயிறு இயங்கும், திங்கள் இயங்கும் என்னல் வேண்டும். அதனால் மூன்று காலத்தும் இடைவெளியின்றித் தொடர்ந்து நடக்கும் தொழிலைச் செய்யும்

பொருள்களைப் பற்றி அவற்றின் தொழிலொடு கூறுங்கால் செய்யும் என்னும் வாய்பாட்டுவினைச் சொல்லால் கூறல் வேண்டும் என்க.(43)

எதிர்காலத்தாலோ நிகழ்காலத்தாலோ சொல்லவேண்டிய ஒரு தொழிலை விரைவுகுறித்து இறந்தகாலத்தால் சொல்லலாம். சாப்பிட்டு வெளியில் புறப்பட இருந்த இருவருள், ஒருவன் சாப்பிட்டு வந்து, மற்றவனைச் 'சாப்பிட்டாயா' என்று கேட்கும் போது, இன்னும் சாப்பிடவே தொடங்காத மற்றவன், 'சாப்பிடுவேன்' என்று சொல்வதற்குப் பதில் விரைவு காரணமாக 'இதோ சாப்பிட்டேன்' என்று இறந்த காலச் சொல்லால் கூறுவான். அவ்வாறேசாப்பிட்டுக்கொண்டிருந்தானாயின் 'சாப்பிடுகிறேன்' என் நிகழ்காலச் சொல்லால் சொல்லவேண்டியவன் விரைவு காரணமாக 'இதோ சாப்பிட்டேன்' என்று இறந்தகாலச் சொல்லால் கூறுவன. இவ்வாறு கூறுதலும் அமைதி(44)

நல்வினைகளுள் அல்லது தீவினைகளுள் மிக்கது ஒன்றை ஒருவன் செய்யாதிருக்கவும் செய்ததாகச் சுட்டிச் சொல்லிப்பின் அவ்வொன்றனால் விளையும் பயனை அவன் அடைவதுபற்றிச் சொல்லும்போது, எந்தகாலத்துச்சொல்லால் சொல்லவேண்டும் எனின், செய்யும் என்னும் நிகழ்காலச் சொல்லால் சொல்ல வேண்டும்.

தவம் செய்ய இருப்பானைப் பற்றித் தவம் செய்வான் சுவர்க்கம் புகுவான் என்னலாம். இது முறை. இப்போது தவம் செய்கிறான் இனிச் சுவர்க்கம் புகுவான் என்பதும்முறை. யாரும் தவம் செய்யாதிருக்க அதை ஒருவன் செய்ததாகச் சொல்லி அதன் பயனை (சுவர்க்கம்புகல்)அவன் அடைவதைப் பற்றிச் சொல்லும் போது, தவம் செய்ததில்லையாகலின் சுவர்க்கம் புக்கான் என இறந்த காலத்தாலோ புகுகின்றான் என நிகழ்காலத்தாலோ புகுவான் என எதிர்காலத்தாலோ சொல்லல் கூடாது. அதனால் ஒரு விதிமுறை வற்புறுத்திக் கூறுவது போலக் கூற வேண்டியிருத்தலின், எக் காலத்துக்கும் பொருந்தும் செய்யும் என்னும் வாய்பாட்டால் சுவர்க்கம்புகும் எனக் கூறல் வேண்டும். 'தவம் செய்தான் சுவர்க்கம் புகும்' என்று காண்க. இவ்வாறே தீவினையில் மிக்கதுக்குத் 'தாயைக் கொன்றான் நிரயம் புகும்' எனக் காண்க. (47)

எதிர்காலத்தில் நிகழக் கூடிய ஒரு செயல், அது வழக்கமாக நடைபெற்று வருவது இயல்பாயின் இறந்த காலத்திலாவது நிகழ் காலத்திலாவது சொல்லப்படும்.

ஒரு காட்டுவழிப் போவோர் கொள்ளையடிக்கப்படுதலைப் பலகாலும் கண்டவன் அக்காட்டின் இயல்பாகக்(கொள்ளையடிக் கப்படுதலைக்) கருதுமாயின் அதன் இயல்பு கூறுவான், இக்காட் டுட் போவான் கொள்ளையடிக்கப்பட்டான் என இறந்த காலத் தால் சொல்லலாம்; அல்லது கொள்ளையடிக்கப்படும் என நிகழ் காலத்தாலும் சொல்லலாம். இவ்வாறு சொல்வது இயற்கை கருதியாம்.

இனி முன்னோர்தம் நூலில் 'எறும்பு முட்டை கொண்டு மேட்டுநிலம் (திட்டை) ஏறின் மழை பெய்யும்' என்று சொல்லிய தைத் தெளிவாகக் கொண்டவன், எறும்பு முட்டைகொண்டு மேடு ஏறியது கண்டபோது, மழை பெய்யாதிருக்கவும் 'மழை பெய்தது' அல்லது 'மழை பெய்யும்' என இறந்த காலத்தாலும் நிகழ்காலத்தாலும் சொல்லலாம். இது நூலில் தெளிந்தது கருதியதாம்.(48)

மூன்று காலமும் ஒரு தொடரில் வந்து மயங்கு மொழிப் பொருளவாய் வருதல் உண்டு.

'பண்டு இப்பொழிலில் நாம் விளையாடுவோம்' என்பதில் பண்டு என்றதற்கேற்ப விளையாடினோம் என்னாமல் விளை யாடுவோம் என எதிர்காலத்தால் கூறியது காண்க. இதில் இறந்தகாலம் எதிர்காலமாக மயங்கியது.

அவன் நாளை வாளொடு வந்தான் என்றால் நீ என்செய் வாய்? இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலத்துக்கேற்ப 'வருவான் என்றால்' எனவரவேண்டியது 'வந்தான் என்றால்' என இறந்த காலத்தால் வந்தது. இதில் எதிர்காலம் இறந்தகால மாக மயங்கியது.

'இவள் பண்டு இப்பொழிலில் விளையாடும்'—இத் தொட ரில் பண்டு என்பதற்கேற்ப விளையாடினாள் என்னாமல் விளை யாடும் என நிகழ்காலச் சொல்லால் கூறியது இறந்தகாலம் நிகழ் காலமாக மயங்கியதாம். நாளை இப்பொழிலில் விளையாடும்— இத்தொடரில் நாளை என்பதற்கேற்ப விளையாடுவாள் என்னா மல் விளையாடும் என நிகழ் காலத்தால் கூறியது எதிர்காலம் நிகழ்காலமாக மயங்கியதாம் (49)

பிற

இது செயல் வேண்டும்

'இது செயல் வேண்டும்' என்னும் பொருள்பட வரும் தொடரில் உள்ள 'வேண்டும்' என்னும் (பொருள்படும்) சொல்,

தனக்கு முன் உள்ள வினையின் கருத்தாவுக்குரியதாக வருதலும், வேறு ஓர் கருத்தாவுக்குரியதாக வருதலும் ஆகிய இரு நிலைமையும் உடையதாம்.

சாத்தன் ஓதல் வேண்டும்—இத்தொடரில் வேண்டும் என்பது தனக்கு முன் உள்ள ஓதுதல் தெரிழிலுக்குரிய வினை முதலாகிய சாத்தனுடையதாக வந்தது. சாத்தன் தான் ஓதுதலை விரும்பும் என்பது பொருள்.

'சாத்தன் தந்தை மகன் ஓதல் வேண்டும்'—இத்தொடரில் 'வேண்டும்' என்பது தனக்கு முன் உள்ள ஓதல் என்பதன் வினை முதலாகிய சாத்தனுக்குரியதாக இல்லாமல் அவன் தந்தைக் குரிய வினையாக இருப்பது காணலாம்.

வன்புற வரும் வினாச் சொல்

வினா எழுத்துடைய விசைச்சொல் வலியுறுத்தற் பொருட்டு வருதலும் எண்டு. தன்னை வைதவனை நோக்கி 'நீ என்னை வைதாய்' என்று ஒருவன் சொல்ல, மற்றவன் 'வைதேனே' என வினா மூலமே தான் வைதமையை வலியுறுத்தல் உண்டு. வைதமை, உண்மையாயிருந்தும் கள்ளுண்டு களித்தபோது வைதமை, தெளிந்தபோது உணராமையால் வையவில்லை என வற்புறுத்தவும் அதாவது வைதமையை மறுக்கவும் 'வைதேனே' என அவ்வினாச் சொல் வரும். (47)

செயப்படு பொருள்

செயப்படு பொருளைச் செய்தது (வினை முதல்) போலச் சொல்லுதலும் உலக வழக்கில் உண்டு. நெல் விற்கும்—இது 'நெல் விற்கப்படும்' என்று கூற வேண்டுவது. ஏனெனில் நெல் விற்கப்படுவதேயன்றி விற்பது அன்று. நெல் விற்றது என இறந்த காலத்தும் நெல் விற்பது என எதிர்காலத்தும் கூறப்படும். (49)

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

(உரைவளம்)

வினையியல்

வினைச்சொற் பொதுவிலக்கணம்

195. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (1)

(வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்)

ஆங்கில மொழி பெயர்ப்பு:

இலக்குவனார்

The verb has no cases but only tenses

பிற்கால இலக்கண நூல்கள் :

நேமிநாதம் - சொல். 38

இறப்பு நிகழ்வு எதிர்வாம் காலங்கள் ஏற்றும்
குறிப்பும் உருபேற்றல் கூடாத்—திறத்தவுமாய்
[முற்றெச்சம் என்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றி
டத்து நிற்கும் வினைச்சொற்கள் நேர்ந்து.]

இளம்பூரணர்

என்பது சூத்திரம்.

*என்னுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே வினைச் சொல் ஆமாறு உணர்த்திய எடுத்துக் கொண்டார், அதனான் இவ்வோத்து வினையியல் என்னும் பெயர்த்தாயிற்று.

உரை : வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது; ஆராயிற் காலத்தோடு புலப்படும், என்றவாறு.

[1]ஈண்டு வேற்றுமை என்பது உருபை.

வ-று : உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டுகொள்க.

சேனாவரையர்

நிறுத்தமுறையானே வினைச்சொல் ஆமாறு உணர்த்திய எடுத்துக் கொண்டார்; அதனான் இவ்வோத்து வினையியல் என்னும் பெயர்த்தாயிற்று.

இதன் பொருள்: வினையென்று சொல்லப்படுவது வேற்றுமை யொடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும், எ-று.

ஈண்டு வேற்றுமை என்றது உருபை.

உ-ம் : உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டு கொள்க.

‡வேற்றுமை கொள்ளாது என்னாது 'காலமொடு தோன்றும்' எனின், [2]தொழினிலை யொட்டுந் தொழிற்பெயரும் வினைச்

---

* இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்என்றிருத்தல் வேண்டுவது என்னுதலிற்றோவெனின் என்றிருப்பது பொருத்தம் இன்று; ஏடெழுதியோர் தவறாகலாம்.

1. வேற்றுமை என்பது வேற்றுமைப் பொருளையும் உருபையும் குறிக்கும். ஈண்டு உருபைக் குறித்தது. (உண்டான் என்பதை உண்டலைச் செய்தான் என வேற்றுமைப் பொருள்பட விரிக்கலாம். ஆனால் உண்டானை என விரிக்கலாகாது).

2. தொழினிலையொட்டுந் தொழிற்பெயர்—வினையா லணையும் பெயர்.

‡ வேற்றுமையுருபேற்றல் பெயரின் சிறப்பிலக்கணம், காலம் ஏற்றல் வினையின் சிறப்பிலக்கணம். எனவே வினையெனப்படுவது காலமொடு தோன்றும் என்று

சொல்லாவான் செல்லும் ஆகலானும், காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளாது எனின் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் எனப்படும் ஆகலானும், அவ்விரு திறமும் நீக்குதற்கு 'வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்' என்றார். வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள; அவையும் ஆராயுங்காற் காலமுடைய வென்றற்கு 'நினையுங் காலை' என்றார். [3]அவை யிவை என்பது முன்னர்ச் சூத்திரத்தாற் பெறப்படும்.

உணர்த்தப்படும் வினைச்சொற்க ளெல்லாம் பொது விலக்கணம் உணர்த்தியவாறு.

தெய்வச்சிலையார்

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், வினையியல் என்னும் பெயர்த்து. வினைச்சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். நிறுத்த முறையானே பெயர் இலக்கணங் கூறி அதன்பின் வினையிலக்கணங் கூற வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், வினைச் சொல் இலக்கணம் பொது வகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : வினையென்று சொல்லப்படுவது வேற்றுமை யுருபு ஏலாது; காலத்தொடு தோன்றும், ஆராயுங் காலத்து, எ-று.

மட்டும் சொன்னால் போதும். அப்படிச் சொன்னல் வினையாலணையும் பெயர் காலம் காட்டுதலின் தவறாகி விடும். அதனால் வேற்றுமை கொள்ளாது என்பதைச் சொல்லியாக வேண்டும், காலமொடு தோன்றும் என்னாமல் வேற்றுமை கொள்ளாது என்பதை மட்டில் சொன்னால் இடைச்சொல் உரிச்சொற்களும் வேற்றுமை கொள்ளாமையின் அவ்விரண்டும் வினைச் சொல் எனப்பட்டு விடும். அவ்விரண்டும் காலமும் கொள்ளாமையின் அவற்றை விலக்கக் காலமொடு தோன்றும் என்றும் சொல்லியாக வேண்டும்.

3. அவை - குறிப்பு வினைகள். சூ. 16, 17 காண்க.

[4]வினை என்பது தொழில் உணர்த்தும் சொல்லாதலின் அது வேற்றுமை கொண்டு நிற்பதும் ஒரு நிலை உண்டு. அந்நிலை ஒழியக் காலத்தோடு பொருந்தி நிற்குமது நம்மால் வினைச் சொல் என வேண்டப்பட்டது என்றவாறு.

உ-ம்: அஃதாவது உண்டலைச் செய்தான் என்பது ஈண்டுத் [5]தின்றான் எனக் காலத்தொடு ஒட்டி நிற்பது.

நச்சினார்க்கினியர்

என்பது சூத்திரம். இது நிறுத்த முறையானே வினை இலக் கணம் உணர்த்தினமையின், இவ்வோத்து வினையியல் எனக் காரணப்பெயர் பெற்றது. இச்சூத்திரம், வினைச்சொற்கெல் லாம் பொது இலக்கணம் உணர்த்துகின்றது.

இ-ள்: வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது—வினைச்சொல் என்று சொல்லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது, நினையுங்காலைக் காலமொடுதோன்றும்—ஆராயுங்கால் காலத்தோடு புலப்படும், எ-று.

‡வினை என்றது [1]முதனிலையை. இஃது ஆகுபெயராய்த் தன்னால் பிறக்கின்ற சொல்லையுணர்த்திற்று.

உ-ம்: உண், தின், கடு, செய் என்பன வினை. உண்டல், தின்றல், கருமை, செம்மை என்பன அம்முதல் நிலையால் பிறந்த வினைப்பெயர். உண்டான், தின்றான், கரியன், செய்யன் என் பன அம்முதல் நிலையால் பிறந்த வினைச் சொல். இங்ஙனம் வினையாற் பிறத்தலின் 'வினையியல்' என்றார்.

---

4. தொழில் உணர்த்தும் சொல் - தொழிற்பெயர். அது வேற்றுமை கொள்ளும் (உண்டல்-உண்டலை) காலம் கொள்ளாது. அப்பெயரை யொழித்துக் காலமொடு தோன்றும் உண்டான் போலும் சொற்களே ஈண்டு வினைச்சொல் எனப்படும்.

5. தின்றான் என்பதற்குப் பதில் உண்டான் என்பதிருப்பின் தொடர் இயைபுடையதாகும் — சிவ.

1. முதனிலை—பகுதி.

‡ இப்பகுதிக்குச் சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புக் காண்க.

கல்லாடனார்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், வினையது இலக்கணம் உணர்த்தினமையின் வினையியல் என்னும் பெயர்த்து.

மேல் ஒத்தினோடு இவ்வோத்திடை இயைபு என்னையோ வெனின், முன்னைப் பெயரியலுள் நிறுத்த முறையானே பெயர் உணர்த்தி அதன் பின்னர் வினை உணர்த்திய தொடங்கினார் என்பது.

இதன் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், வினைச் சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வினைச்சொல் என்று சொல்லப்படுவது அறுவகை உருபினையும் ஏலாதே ஆராயுங்கால் காலத்தோடு புலப்படும், எ-று.

உ-ம்: உண்டான் என்பது வேற்றுமை கொள்ளாது எனல் வேண்டியது.

$மேல், 'கூறியமுறையின் (வேற்றுமையியல் 8) என்ற சூத்தி...நின்றது பெயர்க்கு யாது ஆகாது என்பதேயன்றி வினைக் காயின் முதலும்இடையும் எல்லாம் ஆம் என்பதூஉம் கொள்ளக் கிடந்தமையின் அது விலக்கிய என்பது.

'நினையுங்காலை' என்றதனான் காலம் தன்னை மூன்று என்பாரும், •தொழிலாவது பொருளினது புடைபெயச்சி யாதலின் அஃது ஒருகணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லா மையின் நிகழ்ச்சி என்பதொன்று இல்லை; ஆதலின் இறப்பும் எதிர்வும் எனக்காலம் இரண்டே என்பாரும், நிகழ்காலம் ஒன்றே உண்டு என்பாரும் எனப் பல மதம் உண்டு என்பது அறிவிக்கப் பட்டது.

வெள்ளைவாரணனார்

வினையென்பது பல பொருள் ஒரு சொல்லாய்த் தொழிற் பண்பினையும் அதன் காரியமாகிய வினை நிகழ்ச்சியையும் உணர்த்தும். தொழிற்பண்பை யுணர்த்தும் சொல்லை உரிச் சொல் எனவும் அதன் காரியமாகிய வினைநிகழ்ச்சியை

$ இப்பகுதி விளங்கவில்லை.

யுணர்த்துஞ் சொல்லை வினைச்சொல் எனவும் கூறுதல் மரபு. வினைச்சொல்லாவது வேற்றுமையுருபு ஏலாது வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காலம் உணர்த்தி நிற்பதாகும். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்றாம்.

இறந்தகாலம் என்பது தொழில் முற்றுப்பெற்ற நிலை. நிகழ்காலம் என்பது தொழில் தொடங்கி முடிவு பெறாது தொடர்ந்து நிகழும்நிலை. எதிர்காலம் என்பது தொழிலே தொடங்கப் பெறாத நிலை. இம்மூவகைக் காலங்களுள் ஒன்றை வெளிப்படையாகக் காட்டும் சொற்களை வினையென்றும், இக்காலங்களைக் குறிப்பாக வுணர்த்துஞ் சொற்களைக் குறிப்பு என்றும் கூறுவர் தொல்காப்பியர். இவற்றை முறையே தெரிநிலை வினையென்றும் குறிப்பு வினையென்றும் வழங்குவர் பிற்கால ஆசிரியர்கள். இவ்வினைச் சொற்கள் முற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூவகைப்படும். பாலுணர்த்தும் ஈறுகளாகிய விகுதிகளோடு கூடிப் பொருள்முற்றி (நிறைந்து) நிற்குஞ் சொற்கள் வினைமுற்றுகளாகும். ஐம்பாலாகிய வினைமுதலை யுணர்த்தும் விகுதியுறுப்புக் குறைந்த குறைச் சொற்களாய் மற்றொரு வினைச் சொல்லோ டல்லது முற்றுப் பெறாது நிற்பன வினையெச்சங்களாம். பாலுணர்த்தும் விகுதியின்றிக் குறைந்த குறைச் சொற்களாய்ப் பெயரை எச்சமாகவுடைய வினைச் சொற்கள் பெயரெச்சம் எனப்படும். இம்மூவகை வினைச் சொற்களின் இலக்கணம் உணர்த்தினமையால் இது வினையியல் என்னும் பெயர்த்தாயிற்று.

இவ்வியலிலுள்ள சூத்திரங்களை 49 ஆக இளம்பூரணரும், 51 ஆகச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும், 54 ஆகத் தெய்வச்சிலையாரும் பகுத்து உரை வரைந்துள்ளார்கள். எச்சவியலிலுள்ள ‘இறப்பின் நிகழ்வின்’, ‘எவ்வயின் வினையும்’, ‘அவைதாம், தத்தம்கிளவி’ என வரும் மூன்று சூத்திரங்களையும் வினையிலக்கணமாதல் ஒப்புமை பற்றி இவ்வியலின் இறுதியில் தெய்வச்சிலையார் சேர்த்துரைத்தமையான் அவர் கருத்துப்படி இவ்வியலின் சூத்திரங்கள் 54 ஆயின. வினைச் சொற்கள் எல்லாவற்றையும் உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, இருதிணைக்கும் உரியன என மூன்று வகையாகத் தொல்காப்பியர் இவ்வியலிற் பகுத்துணர்த்துகின்றார்.

இது வினைச் சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

இ-ள் : வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்கால் காலத்தொடு புலப்படும், எ-று.

இங்கு வேற்றுமை என்றது வேற்றுமையுருபினை.

உ-ம் : உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டு கொள்க. 'வேற்றுமை கொள்ளாது' என்னாது 'காலமொடு தோன்றும்' என்பதே கூறின், வினையாலணையும் பெயரும் தொழிற்பெயரும் வினைச்சொல் எ ாக் கொள்ள நேரும். 'காலமொடு தோன்றும்' என்னாது 'வேற்றுமை கொள்ளாது' என்று மட்டும் கூறின், இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் எனக் கொள்ள வேண்டி வரும். ஆதலால் இவ்விரு திறமும் நீக்குதற்கு 'வேற்றுமை கொளாது காலமொடு தோன்றும்' என்றார். வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள. அவையும் ஆராயுங்கால் காலமுடையன என்றற்கு 'நினையுங்காலை' என்றார். இவ்வாறு பின் உணர்த்தப்படும் வினைச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் உணர்த்தினார் என்பர் சேனாவரையர்'

ஆதித்தர்

வினைச்சொல் வேற்றுமையுருபு ஏற்காது; ஆயின் காலம் காட்டும்.

உண்டான் — இறந்த காலம், உண்கிறான் — நிகழ் காலம், உண்பான் — எதிர்காலம், இவன் கரியன் — குறிப்புவினை, இவன் அழகன் — குறிப்புவினை.

[1] எனப்படுவது — பகுதிப்பொருள் விகுதி

[2] நினையுங்காலை — இசைநிறை, 'வினை' முதலடியின் எதுகை நோக்கி 'நினை' வந்தது.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

உரைகாரர் நால்வரும் இச்சூத்திரம் வினையது பொதுவிலக்கணம் கூறுகின்றது என்றனர். பொருளின் புடைபெயர்ச்சியைக் கூறுதல் வினைக்குச் சிறப்பிலக்கணமாயிருக்க; ஆசிரியர் இச்சூத்திரப் பொருளை வினையிலக்கணமாகக் கூறுவரோ? 'வினை' என்ற குறியானே அதன் இலக்கணம் பெறப்படுதலின் அதனை இங்குக் கூறாது, வினை என்பது வேற்றுமையுருபை ஏற்காது

---

1. இது தவறு. 2. நினையுங்காலை என்பதற்குச் சிறப்பில்லை என்று கருதி இவ்வாறு இசைநிறை என்றார். சேனாவரையரும் கல்லாடனாரும் இதன் சிறப்பை யுணர்ந்து எழுதியன காண்க.

காலத்தை வெளிப்படையானும் குறிப்பானும் காட்டும் என்று அதன் தன்மையைக் கூறினர் என்க. இவ்வாறே 'இடையெனப் படுப' (இடையியல் 1) 'உரிச்சொற்கிளவி' (உரியியல் 1) என்ற சூத்திரங்களும் முறையே இடைச்சொல் உரிச்சொல் இவற்றின் இலக்கணத்தைக் கூறவில்லை என்பது ஆங்காங்குக்காட்டப்படும். 'பொருண்மை சுட்டல்' (வேற். 5) 'கூறியமுறையின்' (வேற். 8) பெயர்நிலைக் கிளவி' (வேற். 9) என்றசூத்திரங்களாற் பெயரது, இலக்கணம் கூறப்பட்டது என்ற உரைகாரர்களது கொள்கை நேரிதன்று என்றும் ஆங்காங்கே காட்டப்பட்டது.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், 'வினை என்றது முதனிலையை; இஃது ஆகுபெயராய்த் தன்னாற் பிறக்கின்ற சொல்லை உணர்த்திற்று' என்று கூறுவர். இங்கு முதனிலை யென்பதற்குப் பகுதி என்று பொருள்கொண்டு அவ்வாறு கூறிய தாகத் தோன்றுகின்றது. உண், தின் முதலிய முதனிலைகள் வினையாயின், உண்டான், தின்றான் என்னுமிடத்து உண், தின் என்பனவற்றின் பொருள் மாறுபடாமையால் உண்டான் தின் றான் என்பன ஆகுபெயராய் வினையாகக் கூறப்படுகின்றன என்று கொள்வது நேர்மையன்று. ''வினையே செய்வது செயப் படு பொருளே ...ஆயெட்டென்ப தொழின் முதனிலையே'' (வேற். ம. 29) என்னுஞ் சூத்திரக் குறிப்பில் வினை என்பதற்கு 'கிருதி' என்று பொருள் கூறப்பட்டது. இங்கு ஆகுபெயரால் அக் கிருதியை யுணர்த்துஞ் சொல் என்பதே வினைக்குப் பொரு ளாகும். அவ்வாறு கொள்ளின் உண் தின் என்பன எவ்வாறு வினையோ அவ்வாறே உண்டான் தின்றான் என்பனவும் வினை யாகும்.

காலம் மூன்று

196. காலந் தாமே மூன்றென மொழிப
(காலம் தாமே மூன்றுஎன மொழிப) (2)

ஆ. மொ: இல.

The scholars say that the tenses are three

பி. இ. நூ:

அடுத்த சூத்திரத்திற்காண்க.

---

1. கிருதி-செயல்

முத்துவீரியம். வினையியல் 1

காலந்தாமே மூன்றென மொழிப.

இளம்.

உரை : மேல் தோற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்று என்று சொல்லுவர் புலவர், எ-று.

சேனா.

இ-ள் : மேல் தோற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்று என்று சொல்லுவர் புலவர், எ-று.

தாம் என்பது கட்டுரைச் சுவைபட நின்றது.

தெய்.

காலத்துக்குத் தொகை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்ட காலந்தாம் மூன்று என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

அதன்வகை வருஞ் சூத்திரத்துக் கூறுப.

நச்.

இது முற்கூறிய காலம் இனைத் தென்கின்றது.

இ-ள் : காலந்தாமே மூன்று என மொழிப-மேல் தோற்று வாய் செய்யப்பட்ட காலந்தாம் மூன்று என்று கூறுவர் புலவர், எ-று.

கல்.

என்-எனின், மேற் காலமோடு தோன்றும் என்றார், அக் காலத்தை இனைத்தென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : காலம் எனப்படுவனதாம் மூன்று என்று சொல்லுப ஆசிரியர் எ-று

சிவலிங்கனார்

'காலந்தாமே மூன்றென மொழிப' என்றதனால் ஆசிரியர் தம் முன்னோர் கருத்தைக் கூறினார் எனக்கொள்ளுதல் வேண்டும். அக்கருத்தைத் தாமும் உடன்பட்டவர் என்பதை அடுத்த சூத்திரத்தில் மூன்று காலத்தையும் குறிப்பிட்டமையால் அறியலாம். 'வேற்றுமை தாமே ஏழ்என மொழிப' (வேற்.1) எனத்தம் முன்னோர் கருத்தைக்கூறியவர், தம் கருத்து இன்னது என்பதை 'விளிகொள்வதன்கண் விளியொ டெட்டே' (வேற்.2)

எனத் தெளிவுபடுத்தினார். ஆசிரியர் முன்னோர் கருத்தை ஏற்பதும் மறுப்பதும் உண்டு.

நிகழ்காலம் ஒன்றுமேயுண்டு என்பாரும், இறப்பு, எதிர்வு எனக் காலம் இரண்டே என்பாரும், மூன்று என்பாரும் எனப் பலதிறத்தினர் உளர். சொல்லிலக்கண வரையறைக்குக் காலம் மூன்று என்று கொள்வதே சிறந்தது ஆதலின் காலம் மூன்று என்பார் கொள்கையையே உடன்பட்டார் ஆசிரியர் என்னலாம்.

பலவகைப்படும் ஒன்றைப் பன்மைச் சொல் கொடுத்துக் கூறும் இயல்பு ஆசிரியர்க்கு உண்டு. 'எழுத்து எனப்படுப' (நூன்.1) 'வேற்றுமை தாமே' (வேற்.1) என்பன காண்க. காலம் என்பது வடிவ வேறுபாடுடையதன்று ஆதலின் 'காலந் தானே' என ஒருமையிற் கூறல்வேண்டும். அவ்வாறின்றிக் 'காலந் தாமே' எனப் பன்மையிற் கூறியதால் காலப் பாகுபாட்டை ஆசிரியர் உடன்பட்டார் என்பதும் புலப்படும்.

காலப்பெயர், முறை, தொகை

197. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா
வம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே (3)

(இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்நிலை உடைய தோன்றல் ஆறே)

ஆ.மொ: இல.

They are past, present and future,
These tenses may be denoted even by appellative verb
('Kuṛippu viṉai)
This is the true nature of the birth of verbs.

பி.இ.நூ:

நேமி. சொல். *38-1*
இறப்பு நிகழ்வு எதிர்வாம் காலங்கள்

நன்.*382.*
இறப்பு எதிர்வு நிகழ்வுஎனக் காலம்மூன்றே

இலக்கணவிளக்கம். 302.

வினைக்கிட நீரது காலம் அதுதான்
இறப்பு நிகழ்வு எதிர்பென்று ஒருமூவகைத்தே

முத்து.வி.2

இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று
சொல்லப்படும் மூன்று காலமும் குறிப்பு
வினையொடு பொருந்தும் மெய்ந்நிலை யுடைய
வினைமொழி பிறக்கும் விழுமிய நெறிக்கே.

இளம்.

உரை : இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் மூன்று காலமும் குறிப்பு வினையொடும் பொருந்தும் மெய்ந் நிலையுடைய, வினைச் சொல்லானவை தோன்று நெறிக்கண், எ-று.

எனவே, காலம் மூன்றாவன இறப்பு நிகழ்வு எதிர்வு என்ப தூஉம், வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்பு வினை என்ப தூஉம் பெற்றாம்.

வ -று : உண்டான், உண்ணா நின்றான், உண்பான் என வரும்.

இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை.

சேனா.

இ-ள் : இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் அம் மூன்று காலமும் குறிப்பு வினையொடும் பொருந்தும் மெய்ந் நிலைமையையுடைய, வினைச் சொல்லானவை தோன்று நெறிக் கண், எ-று.

எனவே, காலமூன்றாவன இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்பதூஉம, வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்பு வினை என்பதூஉம் பெற்றாம்.

உ-ம் : உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும்.

இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில்பிறவாமை,

தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியாகலின், அஃ தொரு கண நிற்பதல்லது இரண்டு கண நில்லாமையின், நிகழ்ச்சி யென்பதொன்று அதற்கில்லையாயினும், §உண்டல் தின்றல் எனப் பஃறொழில் தொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின் உண்ணாநின்றான் வாரா நின்றான் என நிகழ்ச்சியும் உடைத் தாயிற் றென்பது.

வினைக் குறிப்புக் காலமொடு தோன்றுங்கால், பண்டு கரி யன், இதுபொழுது கரியன் என இறந்த காலமும் நிகழ்காலமும் முறையானே பற்றி வருதலும், நாளைக் கரியனாம் என எதிர் காலத்து ஆக்கமொடு வருதலும் அறிக.

'மெய்ந்நிலையுடைய' என்றது விளங்கித் தோன்றாவாயி னும் காலம் வினைக் குறிப்பொடு கோடல் மெய்ம்மையென வலியுறுத்தவாறு.

தெய்.

காலத்திற்கு வகையும் அதற்குரியதோர் இலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற்சொல்லப்பட்ட காலத்தின் பாகுபாடாகிய இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என அம் முக்காலமும் குறிப்பொடும் கொள்ளும் பொருள் நிலைமையையுடைய தோன்று நெறிக்கண், எ-று.

உம்மை எச்சவும்மை. எனவே காலந் தோற்ற நில்லாது குறித்துக் கொள்ளப்படும் வினைச் சொல்லும் உள என்ற வாறாம்.

உ-ம் : உடையன் என்பது முன்பு உடையன், இப்போது உடையன், பின்பு உடையன் என மூன்று காலத்திற்கும் [1] வடிவு

---

§ சோறுண்ணல், கறிதின்றல், நீர் பருகுதல் முதலிய பல தொழில்களும் நடைபெறுவதை உண்டல் என ஒரு தொழிலாகக் கூறுகிறோம். அத்தொழில்கள் நிகழ்ந்து கொண்டிருத்தலைக் குறிக்கும்போது உண்ணாநின்றான் (உண்கிறான்) என்று கூறுதலின் நிகழ்காலமும் உண்டு.

1 வடிவு வேற்றுமை : உண்டான், உண்கின்றான், உண் பான் எனத் தெரிநிலைவினைக்கு உண் என்பது ட்+ஆன், கின் + ஆன், ப் + ஆன் என்பன கொண்டு மாறுபட்டு மூன்றுகாலமும் உணர்த்துவதுபோல இல்லாமல் உடையன் என்பதுவே (ஒரு வடிவமே) முக்காலமும் உணர்த்துதலின் காலம் குறித்துக்கொள்ளப் பட்டது.

வேற்றுமைப்பட நில்லாமையின், காலம் குறித்துக் கொள்ளப் பட்டது.

நச்.

இஃது அக்காலத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறி, அதுதான் குறிப்பிற்கும் உண்டு என்கின்றது.

இ-ள் : இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம் முக் காலமும் — இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் அம் மூன்று காலமும், குறிப்பொடும் கொள்ளும் மெய்ந்நிலை உடைய — வினைக்குறிப்போடு பொருந்தும் உண்மை நிலையை உடைய, தோன்றலாறே — வினைச்சொல்லான் அக்காலங்கள் தோன்றும் நெறிக்கண், எ-று.

உ-ம் : உண்டான், உண்ணா நின்றான், உண்பான் எனக் காலம் மூன்றும் தோன்றி நின்றவாறு காண்க.

கரியன் செய்யன் என்பன வினைக்குறிப்பு.

இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கி முற்றுப் பெறாமல் நடக்கின்ற நிலைமை; எதிர் வாவது தொழில் பிறவாமை.

தொழிலாவது பொருளினது புடை பெயர்ச்சி. இஃது இரண்டு கணங் காலத்தின்கண் நில்லாமையின் நிகழ்ச்சி என்பது ஒன்று இன்றாயினும், 'உண்ணா நின்றான்' எனப் பஃறொழிற் பகுதி பற்றி நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று. இதனானே நிகழ் காலம் இன்று என்பாரும், நிகழ்காலம் ஒன்றுமே உண்டு என்பாரும் எனப் பல பகுதியர் ஆசிரியர் என்பது கொள்க.

கல்.

என்-எனின், மேல் தொகை கூறப்பட்ட காலத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறி அதுதான் வினைக்குறிப் பிற்கும் வினைச் சொற்கும் உண்டு என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படு கின்ற அம்முக்காலமும் வினைக்குறிப்பொடும் கொள்ளப்படும் உண்மை நிலையினையுடைய அவை தோன்றுமிடத்து, எ-று.

இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன பெயர்; முறை கிடந்த முறையே.

உ-ம்: கரியன், செய்யன் என்பன. இவை ஆசிரியற்கே காலம் புலப்பட நின்றமையின் மேலைச் சூத்திரத்து அடங்காது என்று வேறு கூறப்பட்டது என்பது.

மெய்ந்நிலை என்பது வினைக்குறிப்புக் காலத்தைத் தெற்றென விளக்கிக் காட்டாமையான் வினையல்ல என்று கருதினும் கருதற்க; [1]இதுவும் வினையது இலக்கணம் மெய்ம்மையாக வுடையது என்றவாறு.

ஆதி.

அம்முக் காலமும் (குறிப்பு வினையோடும்) தாம் தோன்றும் முறையில் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனப் பொருள் குறித்து நிற்கும் நிலையின.

மெய்-பொருள் விளக்கம். ஆசிரியர் இச்சொல்லை வரம்பின்றிப் பயன் படுத்துகிறார்.

வந்தான்—இறந்தகாலம்
வருகிறான் — நிகழ்காலம்.
வருவான் — எதிர்காலம்.

(1) அவன் முன்னர் செல்வம் உடையான்.
(2) அவன் இப்போது செல்வம் உடையான்.

முன்னர், இப்போது என்ற சொற்களால் உடையவன் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் காட்டின.

இஃதே காலங் குறிப்பொடுந் தோன்றல்.

சுப்.

இச்சூத்திரத்திற் காலம் இறப்பு நிகழ்வு எதிர்வு என மூன்று வகைப்படும் என்றும், வினை தெரிநிலை குறிப்பு என இருவகைப் படும் என்றும் கூறப்படுவதால் [2]வாக்கியபேதம் என்ற குற்றம் வாராதோ எனின் காலம் இறப்பு நிகழ்வு எதிர்வு என்று மூவகைப்படும் என்பது இங்கு விதிக்கப்படவில்லை யென்க.

---

1. இதுவும் — காலத்தைத் தெற்றென விளக்காது குறிப்பாகக்காட்டுவதும்.
2. வாக்கியபேதம் என்பது, இரண்டு எழுவாய் இரண்டு பயனிலை (வினைமுற்று) அமையுமாறு சூத்திரம் செய்வதாம். இச்சூத்திரம் அவ்வாறு அமையாமையின் வாக்கியபேதம் ஆகாது.

இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறத்தியல் மருங்கிற் றெரிந்தன ருள்ளப்
பொருணிகழ் வுரைப்பது காலமாகும் (செய். 202).

என்னுமிடத்து இறப்பு நிகழ்வு எதிர்வு என இம்மூன்று வகைப் பட்டது காலம் என்று விதிப்பர். அம்மூவகையையும் இங்குப் புரோவதித்தார் என்று கொள்ளவேண்டும். அவ்வாறாயின் இச்சூத்திரம் தெரிநிலை குறிப்பு என இரண்டு வகைப்படும் என்று விதிக்கின்றதாம்.

பூவராகம்பிள்ளை

உண்டல்-ஒருமுறை சிறிது உணவை எடுத்து வாயிற் கொள்ளுதல்; அங்ஙனம் பன்முறையும் செய்வதை சேர்த்து 'உண்டல்' என்று கூறுகின்றோம். ஆதலால் உண்ணத்தொடங்கி முற்றுப்பெறாத நிலை நிகழ்கால வினை என்று வழங்கப்பட்டது எனக்கொள்க.

குறிப்புவினை சொல்வான் குறிப்பிற்கேற்பக் காலம்கொள்ளப் படும் வினைச்சொல். ஒருவன் பிறந்தபோதே அவனுக்குக் 'கரியன்' என்று பெயர் வைக்கப்பட்டிருந்தால் அச்சொல் குறிப்பு வினையாகாது. ஒருவன் செம்மை நிறம் உடையவனுக இருந்து, பின் ஏதோ காரணத்தால் கருநிறமுடையனானால், அப்போது அவன் கரியன் என்றழைக்கப்பட்டால், அச்சொல் குறிப்பு வினையாகும், அவன் கரியன் ஆகிவிட்டால் அச்சொல் இறந்தகாலம் உணர்த்தும் குறிப்புவினை. கரியனுகிக் கொண் டிருக்கும்போது கரியன் என்றால், நிகழ்காலம் உணர்த்தும் குறிப்புவினையாகும். கரியன் ஆதற்கு முன்னரே, அவன்நிலை யுணர்ந்த ஒருவன், 'அவன் கரியவனாவான்' என்ற கருத்தோடு 'கரியன்' என்றால் எதிர்காலம் உணர்த்தும் குறிப்பு வினை யாகும். இங்ஙனம் சொல்வான் குறிப்புணர்ந்து காலம் கொள்ளப் படுதலால் குறிப்புவினை யாயிற்று எனக்கொள்க. இதனை உலக வழக்கில் நன்கு காணலாம். வாணிகம் முதலியவற்றால் பொரு ளீட்டிக் கொண்டிருக்கிற ஒருவனையும் செல்வன் (பணக்காரன்) என்பர். ஓரளவு பொருளீட்டிவிட்ட ஒருவனையும் செல்வன் என்பர். இவற்றுள் முன்னது நிகழ்காலக் குறிப்புவினை; பின்னது இறந்த காலக் குறிப்புவினை. ஒருவன் பொருவீட்டத் தொடங்கு தற்கு முன்னரே, அவனுடைய ஊக்கம், முயற்சி முதலிய குறிப்பு களினாலாவது, சோதிடம் முதலியவற்றாலாவது அவனுடைய பிற்கால நிலையறிந்து அவனைச் 'செல்வன்' என்று ஒருவன் கூறினால் அச்சொல் எதிர்காலக் குறிப்பு வினையாகும்.

('பொன்னன்' என்று குறிப்பு வினைக்கு காட்டப்பட்ட உதாரணம் இங்குச் 'செல்வன்' என்று காட்டப்பட்டது) இவ்வாறே குறிப்புவினைகளை இடத்திற்கேற்பக் கொள்ளுதல் வேண்டும்.

எதிர்கால வினைக்கு ஆக்கம் சேர்த்துக் கூறல்வேண்டும் என்றார் சேனாவரையர். முக்காலக்குறிப்பு வினைகளுக்கும் ஆக்கம் சேர்த்தல் பொருத்தமாகும்.

இடையில் தோன்றும் காரணம்பற்றி வருதலேயன்றி' நெடியன், குறியன், கரியன், குண்டுகட்டு, குறுந்தாட்டு, நெடுஞ் செவித்து என்றாற்போல் இயல்பான தன்மைகளைக் குறித்தும் குறிப்பு வினைமுற்றுகள் வரும். இவற்றிற்கு ஆக்கம் வருவதில்லை. நன்னூல் விருத்தி உரைகாரர் இவ்வாறு வருவனவற்றை இயற்கை வினைக்குறிப்பு என்றும், இடையே ஒரு காரணத்தால் வருவனவற்றை ஆக்க வினைக்குறிப்பு என்றும் கூறுவர். வினையெல்லாம் செயற்கையே; அவற்றுள் இயற்கையில்லை. ஆயினும் ஆக்க வினைக்குறிப்பை நோக்கி, ஏனையவை இயற்கை வினைக்குறிப்பு எனப்படும் என்றும் அவ்வுரைகாரர் கூறுவர். எனவே, பிறக்கும்போது வைக்கப்படும் பெயர் பெரும்பாலும் காரணம் கருதி வைக்கப்படுவதில்லையாதலின், அவ்வகையை விலக்கி ஏனையவற்றை அவற்றின் தன்மை நோக்கிக் கூறுதல் வேண்டும் எனக் கொள்க.

அ. சண்முகதாஸ்

'அம்முக் காலமும் குறிப்பொடு கொள்ளும்' என அவர் (தொல்காப்பியர்) கூறியுள்ளார். எனவே குறிப்பு வினை, தெரி நிலைவினை என்னும் பாகுபாட்டுக்குத் தொல்காப்பியர் காலத்தையடிப்படையாகக் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

மூன்று காலமும் குறிப்பொடு கொள்ளும் எனத் தொல் காப்பியர் கூறுவதால் தெரிநிலைவினை தெளிவாகக் காலம் காட்டும்; குறிப்புவினை குறுப்பாகக் காலம் காட்டும் எனப் பிற் கால இலக்கணகாரரின் கோட்பாட்டினைத் தொல்காப்பியர் கொண்டிருக்கவில்லை. வெளிப்படக் காலம் விளக்குவனவற்றைத் தெரிநிலைவினையெனவும், வெளிப்படக் காலம் விளக்காதனவற்றைக் குறிப்பு வினையெனவும் கொள்ளும் மரபு தொல்காப்பியவுரைகாரர் எல்லோரிடமும் காணப்படுகிறது. தொல்காப்பியர் குறிப்புக்கும் வினைக்கும் உள்ள வேறு பாட்டினை ஏற்படுத்துவதற்குக் காலத்தைக் கொள்ளாது தொழில் நிகழ்ச்சியையே கொண்டுள்ளார். இக்கருத்தினையே நன்னூலாரும் பின்பற்றியுள்ளார்............

தெரிநிலை குறிப்பு என்னும் வேறுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றிவிட்டது. ஆனால் அது காலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை. அப்படியெனில் குறிப்புவினையென்றொரு பாகுபாடு எவ்வாறு தோன்றியிருக்கலாம்? பின்வரும் வாக்கியங்களை நோக்குக.

1. கண்ணன் †கதிரையில் இருக்கிறான்.
2. கண்ணன் வீட்டில் இருக்கிறான்

இவ்விரு வாக்கியங்களிலும் இருஎன்னும் வினையடியாகப் பிறந்த நிகழ்கால வினைமுற்றாகிய இருக்கிறான் என்பது உபயோகிக்கப் பட்டுள்ளது. முதலாவது வாக்கியத்திலே 'இருத்தல்' என்னும் தொழில் நடைபெறுகிறது. ஆனால் இரண்டாவது வாக்கியத்தில் இருத்தல் என்னும் பொருண்மை சுட்டப்படுகிறது.

இரண்டுமே காலம் உணர்த்திய போதும் ஒன்றிலே வினை நிலையுண்டு: மற்றையதிலே பொருண்மை சுட்டல் உண்டு. வினை நிலையுணர்த்தும் சொல்லைத் தெரிநிலை வினையாகவும், பொருண்மை சுட்டும் சொல்லைக் குறிப்பு வினையாகவும் கொள்ளலாம். தொல்காப்பியர் எழுவாய்ப் பெயர்க்குப் பயனிலையாக வரும் எனக் கூறும் பொருண்மை சுட்டல், வியங் கொளவருதல், வினைநிலையுரைத்தல், வினாவிற்கேற்றல், பண்பு கொளவருதல், பெயர் கொள வருதல் என்பனவெல்லாம் அவராலே வினைகளாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதனால் வினைநிலை யுரைக்குஞ் சொற்களை ஒரு பகுதியாகவும் ஏனையவற்றை வேறு ஒரு பகுதியாகவும் கொள்ளவேண்டியேற்பட்டிருக்கலாம். வினைநிலை யுரைக்குஞ் சொல் தவிர்ந்த ஏனையவை குறிப்புவினைகள் எனத் தொல்காப்பியராற் கருதப் பட்டிருக்க வேண்டும். (தமிழ்மொழி இலக்கண இயல்புகள். பக். 185-187. 1982)

சிவ.

வீட்டில் இருக்கிறான் என்பதில் இருக்கிறான் என்பது பொருண்மை சுட்டல் எனக் கொண்டு, குறிப்பு வினை என்றால் அதன் காலம் நிகழ்காலமாகாது; முக்காலமும் ஆம். 'மனையகத்தன்' என்பதில் உள்ள 'அகத்தன்' என்பதும் குறிப்பு வினை. இதன் காலமும் முக்காலத்துக்காகும். இவ்விரண்டற்கும் வேறுபாடு உண்டா இல்லையா? உண்டெனின் இருக்கிறான் என்பது

† கதிரை—கதிர்காமம் என்னும் ஊர்

நிகழ்காலக் குறிப்பு வினை என்றும் அகத்தன் என்பது பொதுக் குறிப்பு வினையென்றும் கூறநேரும். அப்படியானால் குறிப்பு எத்தனைவகை? கதிரையே ஒருவனுக்கு வாழும் ஊராயின் கதிரையில் இருக்கிறான் என்பதன் இருக்கிறான் என்பதும் பொருண்மை சுட்டலாகிவிடும். அதனால் சண்முகதாசு அவர் கள் கருத்து இன்னும் ஆய்வுக்குரியதாகும்.

வினைச்சொற் பாகுபாடு

198. **குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்**
காலமொடு வரூஉம் வினைச்சொ லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே (4)

(குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
அம் மூஉருபின தோன்றல் ஆறே)

ஆ: மொ: இல.

All the verbes which denote tenses plainly and by context appearing in the usual way are of three kinds of usage. They are those belonging to high class, those belonging to non-class and those belonging to both classes.

பி. இ. நூ:

நேமி. சொ. *38.*

முற்றெச்சம் என்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்து
நிற்கும் வினைச்சொற்கள் நேர்ந்து

நன். *322.*

அவைதாம்
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற்குரியவும் பொதுவு மாகும்

இல. *229* ,, ,, ,,

இலக்கணக் கொத்து. *96*

முதனிலை தொழிற்பெயர் முற்றீ ரெச்சம்என்று
ஐவகை யுள்ளே அடங்கும் வினையே

தொன்னூல் விளக்கம். 103

> வினைமுற் றொருமுன் றெச்சம் இரண்டு
> வினைக்குறிப் பெனஇவை வினையின் வகுப்பே

முத்து. வி. 3.

> குறிப்பினும் வினையினும் தோன்றிக் காலமொடு
> வரும்வினைச் சொல்லெல்லாம் உயர்திணைக் குரிமையும்
> அஃறிணைக் குரிமையும் ஆமிரு திணைக்கும்
> ஒப்பு உரிமையும் முக்கூற்றன.

இளம்.

உரை: குறிப்புப் பொருண்மைக்கண்ணும் [1]தொழிற் பொருண்மைக்கண்ணும் தோன்றிக் காலத்தொடு வரூஉம் எல்லாச்சொல்லும் உயர்திணைக் குரியனவும் அஃறிணைக் குரியனவும் இரண்டு திணைக்கும் ஒப்ப உரியனவும் என மூன்று கூற்றனவாம் தோன்று நெறிக்கண், எ-று.

சேனா.

பொதுவகையாற் கூறிய வினைச்சொல்லைச் சிறப்புவகை யான் உணர்த்திய எடுத்துக்கொண்டார்.

இ-ள்: குறிப்புப் பொருண்மைக்கண்ணும் தொழிற்பொருண் மைக்கண்ணும் தோன்றிக் காலத்தொடு வரும் எல்லா வினைச் சொல்லும் உயர்திணைக் குரியனவும் அஃறிணைக் குரியனவும் இரண்டு திணைக்கும் ஒப்ப உரியனவும் என மூன்று கூற்றனவாம் தோன்று நெறிக்கண், எ-று.

கரியன் செய்யன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலிற் 'குறிப்பு' என்றார்.

உ-ம்: உண்டான், கரியன்; சென்றது, செய்யது; வந்தனை, வெளியை என வரும்.

[2]'குறிப்பொடுங்கொள்ளும்' (வினை. 3) எனமேற்குறிப்புஇயைபு பட்டு நிற்றலின் 'குறிப்பினும் வினையினும்' என்றார். [3]முன் ஈறு

---

1. தொழிற் பொருண்மை — தெரிநிலை வினைப் பொருண்மை.
2. இத்தொடர், தெரிந்லை வினையை முற்கூறாது குறிப்பு வினையை முற்கூறியதற்கு அமைதியாகும்.
3. அடுத்துவரும் சூத்திரங்கள் ஈறுபற்றிக் கூறப்பட்டன;

பற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களை இஃது இறந்த காலத்திற்குரித்து, இது நிகழ்காலத்திற் குரித்து, இஃதெதிர் காலத்திற் குரித்து என வழக்கு நோக்கி உணர்ந்துகொள்க என்பது விளக்கிய 'காலமொடு வரூஉம்' என்றார். [1]வினைச்சொற் காலம் உணர்த்துங்காற் சிலநெறிப்பாடு உடைய என்பதுவிளக்கிய 'நெறிப்படத் தோன்றி' என்றார்.

நெறிப்பாடாவது அவ்வீற்று மிசை நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்ற உணர்த்தலாகா வாயினும் அவ்வீறுணர்த்தும் வழிச் சிறிய சொல்லுதும்.

தெய்.

மேற்கூறப்பட்ட வினையும் வினைக்குறிப்பும் தொகை நிலை வகையாற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: காலம் குறிக்கப்படும் பொருண்மையினும், தொழிற் பொருண்மையினும் நெறிப்படத் தோன்றிக் காலத்தோடு வரூஉம் வினைச்சொல்எல்லாம்உயர்திணைப்பொருட்குஉரிமைய வாகியும் அஃறிணைப் பொருட்கு உரிமையவாகியும் அவ்விரு திணைப் பொருட்கும் ஒத்த வுரிமையவாகியும் மூன்று வேறு பாட்டான் வரும் புலப்படும் இடத்து, எ-று.

[2]அவற்றுள் உயர்திணை வினை-தெரிநிலைவினை குறிப்பு வினை என இருவகைப்படும். அவற்றுள் தெரிநிலைவினை—தன்மைவினை, முன்னிலைவினை, படர்க்கை வினையென மூன்று வகைப்படும். அவற்றுள் தன்மைவினை—உளப்பாட்டுத் தன்மை, தனித் தன்மை என இருவகைப்படும். முன்னிலை

---

1. இத்தொடர்க் கருத்தை நச்சினார்க்கினியர் மறுப்பர்—பார்க்க.
2. உயர்திணை வினைவகை கூறியவர் அஃறிணை வினை வகை கூறவில்லை. தன்மை வினை உயர்திணைக்கே யுரியதாதலின் அஃதொழித்து மற்றவற்றை அமைத்துக் கொள்ளலாம். வருமாறு: அஃறிணை வினை தெரிநிலை வினை குறிப்புவினையென இருவகைப்படும். அவற்றுள் தெரிநிலைவினை முன்னிலைவினை படர்க்கை வினை என இரண்டு வகைப்படும். முன்னிலை வினை ஒருமை வினை பன்மைவினையென இருவகைப்படும். படர்க்கை வினை ஒன்றன் வினை பலவின் வினை என இருவகைப் படும். குறிப்பு வினையும் அவ்வாறே வரும்.

வினை—ஒருமை வினை பன்மை வினையென இருவகைப்படும். படர்க்கைவினை—ஆடூஉ வினை, மகடூஉ வினை, பன்மை வினை யென மூவகைப்படும். குறிப்பு வினையும் அவ்வாறே வரும். அவற்றுள் முன்னிலை வினை இருதிணைக்கும் பொதுவாகலின் அது [1]விரவு வினைக்கண் கூறப்படும். ஏனைய ஈண்டுக் கூறப்படு கின்றன. அஃதேல் இடம் மூன்று என்பது எற்றாற் பெறுதும் எனின், [2]எச்சவியலுட் பெறுதும்.

நச்.

இது வினைச் சொற்களது பாகுபாடு கூறுகின்றது.

இ—ள்: குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்—குறிப்புப் பொருண்மைக்கண்ணும் தொழிற் பொருண்மைக்கண்ணும் முறைமைப்படத்தோன்றிக் காலத்தோடு வரும் எல்லா வினைச் சொல்லும், உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமை யும் ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமையும்—உயர்திணைக்கு உரிமையுடைமையும் அஃறிணைக்கு உரிமையுடைமையும் அவ் விரண்டு திணைக்கும் ஒப்ப உரிமையுடைமையும் என, அம்மூவுரு பின தோன்றலாறே—அம்மூன்று கூற்றினையுடையவாந் தோன்று நெறிக்கண், எ—று.

உ-ம் : உண்டான், கரியன்; சென்றது, செய்யது; வந்தனை, வெளியை என வரும். ‘காலமொடு வரூஉம்’ எனப் [1]பின்னும் கூறினார் குறிப்பிற்கும் காலம் உண்டு என்பது வலியுறுத்தற்கு.

இம்முக்காலத்தும் வருதற்குரிய காலங்காட்டும் எழுத்துக் களை ஆசிரியர் எடுத்து ஓதாராயினார், [2]பின் உள்ளோர் காலங்கட்கு உரியவாக எடுத்தோதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின். ஆசிரியர் அங்ஙனம் மயங்குதல் பற்றி எடுத்தோதாமையின் உரையாசிரியரும் அவ்வெழுத்துக்களைச் சிறிதே காட்டினார்.

இனிப் பின்னுள்ளோர் கூறினார் என்பது பற்றியும் மாணாக்கர்க்கு உய்த்துணரும் உணர்வன்று என்பது பற்றியும்

---

1. வினையியல் 5இல் கூறப்பட்டுள்ளது.
2. எச்சவியல் 31

1. பின்னும்—முன்சூத்திரத்திற் கூறியதேயன்றி இச்சூத் திரத்தும்.
2. பின்னுள்ளோர்—நன்னூலார் முதலானோர்,

யாமும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் காட்டுதும். சேனாவரையர் அவ்வாறு பிரித்துக் காட்டுகின்றவர் 'நெறிப்படத் தோன்றி' என்பதனாற் பிரித்துக் காட்டுவர். அது பொருந்தாது. ஆசிரியர் எடுத்தோதாமல் 'மயங்கும்' என்று போதலின். இதனைச் 'செய்யுள் மருங்கினும்' (எச்ச. 66) என்னும் அதிகாரப் புறனடையிற் 'பிரித்தனர் காட்டல்' என்பதனாற் பிரித்துக் காட்டுதும். அது மேற்கண்டு கொள்க.

கல்.

என்—எனின், வினைச்சொற்களது பாகுபாடு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: குறிப்புவினைத் தன்மையானும் தெரிநிலை வினைத் தன்மையானும் முறைமைப்படத் தோன்றிக் காலத்தொடு வருகின்ற வினைச்சொற்கள் எல்லாம் உயர்திணைக் குரியனவும் அஃறிணைக்குரியனவும் அவ்விருதிணைக்கும் ஒன்று போன்ற உரிமையுடையனவும் என அம் மூன்று கூற்றை உடைய தோன்று நெறிக்கண். எ—று.

[1] மேல் 'குறிப்பொடுங் கொள்ளும்' (வினை. 3) எனக் குறிப்பு இயைபு பற்றி நிற்றலின் குறிப்பு முன் கூறப்பட்டது.

[2] வினைக் குறிப்பிற்கும் காலம் உண்டே என்பது வலியுறுத்தற்குப் பின்னும் காலமொடு தோன்றும் என உடன் கூறப்பட்டது.

தன்மைப்பன்மை வினைமுற்று.

199. ‡அவைதாம்
அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வருஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே (5)

(அவைதாம்
அம் ஆம் எம்ஏம்-என்னும் கிளவியும்
உம்மொடு வருஉம் கடதற என்னும்

1. இப்பகுதி சேனாவரையர் உரையைத் தழுவியது.
2. இப்பகுதி நச்சினார்க்கினியரைத் தழுவியது.
‡ அவைதாம் என்பது தெய்வச்சிலையார் பாடத்தில் இல்லை,

அந் நால் கிளவியொடு ஆ எண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே).

ஆ. மொ: இல.

Those are the words which end in 'am'
'ām', 'em' and 'ēm'
and the words which end in 'kum', 'dum',
'thum' and 'ṛum'.
Those eight words denote first person in plural.

பி. இ. நூ:

நேமி. சொ. 39.

"அம் ஆம் எம் ஏமும் கடதறமேல் ஆங்கணைந்த
உம்மும் உளப்பாட்டுத் தன்மையாம்"

நன். 332

அம்மாம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.

இல. 237.

அம்ஆம் ஈற்ற முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மையும்
பாற்பட உணர்த்தும்......

தொன். 105.

...எம்ஏம் ஓம் அம் ஆம் தன்மை

முத்து. வி. 4, 5, 6, 7

அம் ஆம் என்பன இறுதிக் கிளவியும்
கும்டும் தும்றும் இறுதிக் கிளவியும்
பன்மை யுணர்த்தும் தன்மைப் பெயரே.

அவற்றுள்
அம்ஆம் என்பன முன்னிலையொடும் வரும்
எம்ஏம் படர்க்கை யிடத்தையும் ஏற்கும்
கும்டும் தும்றும் ஆகிய நான்கும்
படர்க்கை முன்னிலையொடும் படரும் என்ப.

இளம்.

இக்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், [1]நிறுத்த முறை யானே உயர்திணை வினையுணர்த்துகின்றார்; அவைதாம் இரு வகைய, தன்மை வினையும் படர்க்கை வினையும் என. தன்மை வினையும் இருவகைத்து, பன்மைத்தன்மையும் ஒருமைத்தன்மை யும் என. இச்சூத்திரத்தாற் பன்மைத்தன்மையுணர்த்துகின்றார்.

உரை : மேல் மூன்றுவகை எனப்பட்ட வினைச்சொற்றாம் அம்ஆம் எம்ஏம் என்னும் ஈற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉம் க-ட-த-ற வாகிய கும்மும், டும்மும், தும்மும், றும்மும் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வெட்டும் பன்மை யுணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ-று.

[2]அம்ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும். தமராய வழிப்படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம்ஏம் என்பனபடர்க் கையாரை யுளப்படுக்கும் உம்மொடு வரூஉம் க-ட-த-ற அவ்விரு வரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய.

அம்ஆம் எம்ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும்.

உம்மொடு வரூஉம் க-ட-த-ற எதிர்காலம் பற்றி வரும். வரலாறு: அம்—உண்டனம், உண்ணாநின்றனம், உண்குவம் எனவும்,

ஆம்—உண்டாம், உண்ணா நின்றாம், உண்பாம் எனவும்,

எம் — உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்குவெம் எனவும்,

ஏம், உண்டேம், உண்ணாநின்றேம், உண்பேம் எனவும் வரும்.

உம்மொடு வரூஉங் க-ட-த-ற: உண்கும், உண்டும், வருதும், சேறும் எனவும்; உரிஞுதும், திருமுதும் என ஏற்றவழி உகரம் பெற்றும் வரும். இவை நான்கும் எதிர்காலம் பற்றிவரும்.

---

1. முன் சூத்திரத்தில் உயர்திணைக்குரிமை அஃறிணைக் குரிமை இரு திணைக்கும் உரிமை என வரிசைப்பட நிறுத்திய முறையானே.
2. இதுபற்றி சுப். குறிப்புப் பார்க்க. அவர் கூற்று மிகப் பொருந்தும்.

உம்மையடைந்து வந்த க-ட-த-றக்கள், 'உம்மொடு வரூஉம் க-ட-த-ற'வாயின. இக்காட்டிய எட்டு வினைச்சொல்லும் உயர் திணைப்பன்மை வினைச்சொல்லை யுணர்த்துஞ் தன்மைச்சொல் என்றவாறு.

இவை தன்னொடு முன்னின்றானையும் உளப்படுக்கும், படர்க்கையானையும் உளப்படுக்கும் அவ்விருவரையும் உளப் படுக்கும்என்பது, "அவற்றுள் பன்மையுரைக்கும்தன்மைக்கிளவி" (வினை.12) என்னுஞ்சூத்திரத்துட்சொல்லுதும்.

சேனா.

நிறுத்த முறையானே உயர்திணையாமாறுணர்த்துகின்றார். அவைதாம் இருவகைய, தன்மைவினையும் படர்க்கை வினையும் என. தன்மை வினையும் இருவகைத்து, பன்மைத் தன்மையும் ஒருமைத்தன்மையும் என; தனித்தன்மையும் உளப்பாட்டுத் தன்மையுமெனினும் அமையும். இச்சூத்திரத்தாற் பன்மைத் தன்மை யுணர்த்துகின்றார்.

இ-ள்: மேல் மூவகைய எனப்பட்ட வினைச் சொற்றாம் அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்றவாகிய வினைச் சொல்லும் உம் மொடு வரூஉம் கடதறவாகிய கும்மும் டும்மும் தும்மும் றும்மும் என்னுமீற்றவாகிய சொல்லும் என அவ்வெட்டும் பன்மை யுணர்த்துஞ் தன்மைச் சொல்லாம், எ-று.

தனக்கு ஒருமையல்லது இன்மையின் தன்மைப் பன்மை யாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம். அவ்வுளப் படுத்தல் மூவகைப்படும். முன்னின்றாரை யுளப்படுத்தலும், படர்க்கையாரை யுளப்படுத்தலும், அவ்விருவரையும் ஒருங்குளப் படுத்தலும் என.

அம் ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும்; தாமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம்ஏம் என்பன படர்க்கையாரை யுளப்படுக்கும். உம்மொடு வரூஉம் கடதற அவ் விருவரையும் ஒருங்குளப்படுத்தலும் தனித்தனி யுளப்படுத்தலும் உடைய.

ஈண்டும் 'அவைதாம்' என்பதற்கு முடிபு 'அவைதாம் இ உ ஐ வழி (விளி மரபு 3) என்புழி உரைத்தாங்கு உரைக்க.†

---

† உரைக்குமாறு: அவைதாம்எழுவாய். பன்மையுரைக்கும் தன்மைச் சொல்லாகிய ஆயெண்கிளவியும் பயனிலை. 'பன்மையுரைக்கும் தன்மைச் சொல்லாவன ஆயெண்

அம்ஆம் எம்ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும். உம்மொடு வருஉங் கடதற எதிர்காலம் பற்றி வரும். முன்னின்ற நான்கீறும் இறந்த காலம் பற்றி வருங்கால் அம்மும் எம்மும் கடதற வென்னும் நான்கன்முன் அன்பெற்று வரும். ஏம் அன்பெற்றும் பெறாதும் வரும். ஆம் அன்பெறாது வரும்.

உ-ம்: [1]நக்கனம், நக்கனெம்; உண்டனம் உண்டெனம்: உரைத்தனம், உரைத்தனெம்; தின்றனம், தின்றனெம் எனவும்; நக்கனேம், நக்கனேம், நக்கேம்; உண்டனேம், உண்டேம்; உரைத்தனேம, உரைத்தேம்: தின்றனேம், தின்றேம் எனவும்; நக்காம், உண்டாம், உரைத்தாம், தின்றாம் எனவும் வரும்.

அந்நான்கீறும் ஏனையெழுத்தின்முன் [2]ஙகாரமும் ழகாரமும் ஒழித்து இன் பெற்று வரும்.

உ-ம்: அஞ்சினம், அஞ்சினாம், அஞ்சினெம் அஞ்சினேம்; உரிஞினம், உரிஞினாம், உரிஞினெம், உரிஞினேம் எனவரும். பிறவெழுத்தொடும் ஒட்டிக் கொள்க. கலக்கினெம், தெருட்டினெம் என்னுந் தொடக்கத்தன குற்றுகர வீறாகலான் அதுவும் ஏனைய எழுத்தே யாம்.

இனி அவை நிகழ்காலம் பற்றி வருங்கால், நில் நின்று என்பனவற்றோடு வரும். நில்லென்பது லகாரம் னகாரமாய் றகாரம் பெற்று நிற்கும்.

உ-ம்: [1]உண்ணாநின்றனம், [2]உண்கின்றனம்; உண்ணாநின்றாம், உண்கின்றாம், உண்ணாநின்றனெம், உண்கின்றனெம், உண்ணா நின்றேம், உண்கின்றேம்; உண்ணாநின்றனேம் உண்கின்றனேம் எனவரும். ஈண்டு அன் பெற்ற விகற்பம் இறந்த காலத்திற் கூறியவாறே கொள்க.

[3]உண்ணாகிடந்தனம், [4]உண்ணாவிருந்தனம் எனக் கிட, இரு என்பனவும் சிறுபான்மை நிகழ்காலத்து வரும்.

கிளவி' என்னும் ஒரு தொடரில் தன்மைச்சொல் எழுவாய்; ஆயெண்கிளவி பயனிலை. இவ்விரண்டும் ஒரு தொடர்நிலைப்பட்டுஅவைதாம்என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின. அம்மாம் என்பது முதல் அந்நாற் கிளவியோடு என்பது வரையுள்ளன ஆயெண்கிளவியைச் சார்ந்த சொற்கள்.

1. நக்கனம்-இச்சொல் பற்றிப் பூவராகம்பிள்ளை குறிப்புப் பார்க்க.
2. ரகாரமும்—பாடம்

1, 2, 3, 4, 5 இவை பற்றி பூவ. குறிப்புப் பார்க்க.

நிகழ் காலத்துக்கு உரித்து என்ற நில் என்பது, உண்ணா நிற்கும், உண்ணாநிற்பல் என எதிர்காலத்தும் வந்ததால் எனின் அற்றன்று; ''பண்டொருநாள் இச்சோலைக்கண் விளையாடா நின்றேன்; அந்நேரத்தொரு தோன்றல் வந்தான்'' என்றவழி, அஃதிறந்த காலத்து நிகழ்வு பற்றி வந்தாற்போல ஆண்டு எதிர் காலத்து நிகழ்வு பற்றி வருதலான், ஆண்டும் அது நிகழ் காலத் திற்றீர்ந்தின் றென்க.

அவை எதிர்காலம் பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரம் ஏற்புழிக் குகரமும் வகரமும் அடுத்து நிற்கும்.

உ-ம்: உரைப்பம், செல்வம், உண்குவம், உரிஞுவம் என வரும். ஒழிந்த வீற்றோடும் ஒட்டிக் கொள்க. பாடுகம், செல்கம் என ஏற்புழிச் சிறுபான்மை ககர வொற்றுப் பெறுதலும் கொள்க.

உம்மொடு வரூஉம் கடதற—உண்கும், உண்டும், வருதும், சேறும் என வரும். உரிஞுதும், திருமுதும் என ஏற்புழி உகரம் பெற்று வரும்.

[5]கும்மீறு வினை கொண்டு முடிதலின், ஒழிந்த உம்மீற்றின் வேறெனவே படும். ட த ற என்பன எதிர்காலத்திற்குரிய எழுத்தன்மையால், பாலுணர்த்தும் இடைச்சொற்கு உறுப்பாய் வந்தன எனவே படும். படவே அவற்றை உறுப்பாகவுடைய ஈறு

---

5. உம் ஈறு என அடக்காமல் கும், டும், தும், றும் எனத் தனித்தனிக் கூறுவானேன் என்பதற்கு விளக்கம் இப் பகுதி. உண்டும், வருதும், சேறும் என்பன யாம் என்னும் பெயர் கொண்டு முடியும். கும் என்பது உண்கும் யாம் எனப் பெயர் கொள்வதோடு உண்கும் வந்தேம் என வினையையும் கொண்டு முடிதலின் டும், தும், றும் என்பனவற்றின் வேறானது. உண்டும், வருதும், சேறும் என்பனவற்றின் உம்மையைப் பிரித்தால் ட் த் ற் என நிற்பன எதிர் காலம் காட்டல் வேண்டும். அங்ஙனம் காட்டாமையால் உம் என்னும் பன்மைப் பால் உணர்த்தும் இடைச் சொற்கு அவை உறுப்பாக வந்தன வாகும். அதனால் உறுப்பு ட், த், ற் என மூன்றாக அமைதலின் அவற்றைப் பிரிக்காமல் உம்முடன் சேர்த்துத் தனித்தனியாக டும், தும், றும் எனக் கூற வேண்டுவ தாயிற்று. அதனால் உம்மீறு என ஒன்றாக அடக்காமல் நான்காகக் கூறினார்.

மூன்றாம். அதனான் உம் என ஓர் ஈறாக அடக்கலாகாமையின் 'அந்நாற் கிளவியொடு' என்றார்.

தெய்.

நிறுத்த முறையானே உயர்திணை வினை உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்; அவற்றுள் உளப்பாட்டுத் தன்மை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அம் முதலாக ஓதப்பட்ட எட்டீற்றினையும் உடைய சொல் உயர்திணைப் பொருட்கண் தன்னோடு கூடிய பன்மை வினையுரைக்கும் சொல்லாம், எ-று.

உயர்திணையென்பது 'முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே' (வினை. 11) என்பதினின்றும் தந்துரைக்கப்பட்டது. வினை என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் (வினை-4) தந்துரைக்கப்பட்டது. மேல் காலமொடு வரூஉம் வினைச்சொல் (வினை-4) என்றோதி ஈண்டுப் பால் உணர்த்தும் சொற்களை ஓதினமையான் வினைச்சொல் நிலைமை மூவகையாம் என்று கொள்ளப்படும், தொழில் உணர்த்துதலும், காலங் காட்டலும், பால் காட்டலும் என.

உ-ம்: உண்டனம், உண்கின்றனம், உண்பம் என்றவழி உண் என்பது தொழில் உணர்த்திற்று. [1]டு, கின்று, பு என்பன காலங் காட்டின. அன் சாரியை யாகின்றது. அம் பாலுணர்த்திற்று. பிறவும் இவ்வாறாம் என்பது அறிந்து கொள்க.

உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம் இவை இறந்த காலம் பற்றி வந்தன.

உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம் இவை நிகழ்காலம் பற்றி வந்தன.

உண்பம், உண்பாம், உண்பெம், உண்பேம் இவை எதிர் காலம் பற்றி வந்தன.

உண்கும், உண்டும், வருதும், சேறும் என்பன எதிர் காலம் குறித்துழி எதிர்காலத்திற்கு ஏற்கும். நிகழ்காலம் குறித்துழி

---

1. டு, பு என்பன ட், ப் ஆக இருத்தல் நன்று. கின்று என்பதற்கேற்ப அவையும் உகர வீறாக வேண்டும் என எழுதினாரோ ?

நிகழ்காலத்திற்கு ஏற்கும். அம் ஆம் என்பன ஈற்றெழுத்து ஓதினமையான் உடம்பாட்டில் வருதலேயன்றி மறையினும் வரப்பெறும் என்று கொள்க. உண்ணலம், உண்ணாம், உண்ண லெம், உண்ணேம் எனவரும். 'இவ்வுரை மேல்' வருவன்வற்றிற் கும் ஒக்கும்.

நச்.

இது முறையானே உயர்திணை முற்றுவினை கூறுகின்றது.

இ-ள்: அவைதாம்—மேல் பகுக்கப்பட்ட வினையின் முப் பால் பாகுபாடுமாகிய அவைதாம் ஆகுமாறு இனிச்சொல்லுவல், அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்—அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉம் கடதற என்னும் அந்நாற் கிளவியொடு—உம் என்னும் இறுதி இடைச் சொல்லின் உகரம் க ட த ற என்னும் ஒற்றின் மேல் ஏறிய கும் டும்மும் தும்மும் றும் மும் என்னும் ஈற்றவாகிய அந் நான்கு சொல்லும், ஆ எண் கிளவியும்—ஆகிய அவ்வெட்டுச் சொல்லும், பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே—சொல்லு வான் தன்னோடு பிறரையும் கூட்டிப் பன்மையினைச் சொல்லுந் தன்மைக்கு உரிய சொல்லாம், எ—று.

இச்சூத்திரம் முதலாக 'முன்னிலை வியங்கோள்' (வினை. 25) ஈறாக முற்று உணர்த்துகின்றார் வினையெச்சமும் பெயரெச்ச மும் ஒழித்து, இச்சூத்திரத்தாற் பன்மைத் தன்மையும் மேலைச் சூத்திரத்தான் ஒருமைத் தன்மையும் உணர்த்துகின்றார்.

முன்னர் நின்ற நான்கும் இறந்த காலம் பற்றி வருங்கால் அம் ஆம் என்பன தன்னோடு முன்னின்றாரையும் தமராய வழிப் படர்க்கை யாரையும் உளப்படுத்தி, கடதற என்னும் கால எழுத்தின்முன் அம், அன் பெற்றும், ஆம் அன் பெறாதும் வரும். எம் ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுத்தி அக்கால எழுத் தின் முன்னர் எம் அன்பெற்றும் ஏம் அன்பெறாதும் வரும்.

உ-ம்: நக்கனம், உண்டனம், உரைத்தனம், தின்றனம்: நக்கிலம், உண்டிலம், உரைத்திலம், தின்றிலம்; நக்கனமல்லம், உண்டனமல்லம், உரைத்தனமல்லம், தின்றனமல்லம் எனவும்; நக்காம், உண்டாம், உரைத்தாம், தின்றாம்; நக்கிலாம், உண்டி

1. இவ்வுரை என்றது, ''ஈற்றெழுத்து ஓதினமையான் உடம்பாட்டில் வருதலேயன்றி மறையினும் வரப் பெறும் என்று கொள்க'' என்றதை.

லாம், உரைந்திலாம், தின்றிலாம்; நக்கா மல்லாம், உண்டாமல் லாம், உரைத்தாமல்லாம், தின்றாமல்லாம் எனவும்; நக்கனெம், உண்டனெம், உரைத்தனெம், தின்றனெம்; நக்கிலெம், உண்டி லெம், உரைத்திலெம், தின்றிலெம்; நக்கனமல்லெம், உண்டன மல்லெம், உரைத்தனமல்லெம், தின்றனமல்லெம் எனவும்: நக்கனேம், நக்கேம், உண்டனேம் உண்டேம், உரைத்தனேம், உரைத்தேம், தின்றனேம், தின்றேம்: நக்கிலேம், உண்டிலேம், உரைத்திலேம், தின்றிலேம்: நக்கேமல்லேம், உண்டேமல்லேம், உரைத்தேமல்லேம், தின்றேமலலேம் எனவும் வரும்.

இனி அம், ஆம் என்பனவற்றிற்கு : உ—ம் : நீயும் யானும் உண்டனம், நீயும் யானும் உண்டாம்: நீயும் யானும் அவனும் உண்டனம், நீயும் யானும் அவனும் உண்டாம் என வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

எம் ஏம் என்பவற்றிற்கு : உம் : யானும் அவனும் உண்ட னெம், யானும் அவனும் உண்டனேம், யானும் அவனும் உண் டேம் எனவரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

அந்நான்கு ஈறும் ஏனை எழுத்தின்முன் ஙகாரமும் ழகாரமும் ஒழித்து 'இன்' பெற்று வரும்.

உ-ம் : அஞ்சினம், தப்பினம் எனவும்; உரிஞினம், எண் ணினம், பொருநினம், திருமினம், பன்னினம்எனவும்; போயினம் வாரினம், சொல்லினம், மேவினம், எள்ளினம் எனவும் வரும். ஒழிந்த மூவீற்றோடும் ஒட்டுக. கலக்கினம், தெருட்டினம், அருத்தினம், அரற்றினம் என்பன ககர வீறும் டகர வீறும் தகர வீறும் றகரவீறும் முதனிலைச் சொல்லாய் நின்று இன் பெற்றன.

இனி இவை காலம் பற்றி வருங்கால், நில், நின்று என்பன வற்றோடு வந்து, முற்கூறிய வாறே நிற்கும். 'நில்' என்பது லகரம் னகரமாய்த் தனக்கேற்ற றகரம் பெற்று நிற்கும்.

இனி நின் கின் என நிற்கும் என்றுமாம்.

உ-ம் : உண்ணாநின்றனம், உண்கின்றனம், உண்ணா நின்றிலம், உண்கின்றிலம் எனவும்; உண்ணாநின்றாம், உண் கின்றாம், உண்ணாநின்றிலாம், உண்கின்றிலாம் எனவும்; உண்ணாநின்றனெம், உண்கின்றனெம்; உண்ணாநின்றிலெம், உண்கின்றிலெம் எனவும்;உண்ணாநின்றனேம், உண்கின்றனேம், உண்ணாநின்றேம், உண்கின்றேம், உண்ணாநின்றிலேம், உண் கின்றிலேம் எனவும் வரும்.

உண்ணாகிடந்தாம், உண்ணாவிருந்தாம் எனக் 'கிட', 'இரு' என்பனவும் நிகழ் காலத்து வரும்.

உண்கிறேம் எனக் கிறு என்பது நிகழ்காலம் உணர்த்துதல் இக்கால வழக்கு.

இனி இவை எதிர்காலம் பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரம் ஏற்புழிக் குகரமும் உகரமும் அடுத்தும் வரும்.

உ-ம்: உண்பம் உண்குவம், உரிஞுவம், திருமுவம், உண்ணலம் எனவும்; உண்பாம், உண்குவாம், 'உண்ணாம் எனவும்; உண்பெம், உண்குவெம், உண்ணலெம், எனவும்; உண்பேம், உண்குவேம், உண்ணேம் எனவுங் வரும்.

இனி அம் ஈறு வருங்கால் ''அந்தணாளனை நகுகம்யாமே'' (அகம். 32) எனவும், 'பாடுகம் வம்மின் போதுகம்' (கலி 104) எனவும், 'பாடுகம் வாவாழி தோழி' (கலி. 41) எனவும் ககரம் எதிர்காலமும் உணர்த்தி வரும். கூறுவன், சொல்லுவன், போதுவன் எனவரும் வகரமும் எதிர்காலம் உணர்த்தும்.

இனி உம்மொடு வரூஉம் கடதற உண்கும், உண்டும், வருதும், சேறும் என வரும். யானும் நீயும் உண்கும், யானும் அவனும் நீயும் உண்கும் என எல்லாவற்றோடும் ஒட்டுக.

இக் கட த றக்கள் முதல் நிலையை அடுத்து வருங்கால் இறப்பும், ஈற்றினை யடுத்து வருங்கால் எதிர்வும் உணர்த்தும். இனி இவற்றுள் சிறுபான்மை நிகழ்காலம் உணர்த்துவனவும்உள. அது, 'சிறுகண் யானையொடு பொருந்தேர் எய்தி, யாமவணின்றும் வருதும்'' (சிறுபாண்.142) என வரும். இனி உரிஞுதும் திருமுதும் என ஏனை எழுத்தின் முன் உகரம் பெற்று வரும்.

கல்.

என்-எனின், மேல் நிறுத்த முறையானே உயர்திணை உணர்த்துதல் நுதலிற்று.

உயர்திணை வினைதாம் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் என இருவகைய; அவற்றுள் தெரிநிலை வினைமுன் உணர்த்திய எடுத்துக் கொண்டார். அதுதானும் தன்மை வினையும் படர்க்கை வினையும் என இருவகைத்து. அவற்றுள் தன்மை முன் உணர்த்திய தொடங்கினான். தன்மைதானும் உளப்பாட்டுத் தன்மை தனித்தன்மை என இருவகைத்து.

அவற்றுள் உளப்பாட்டுத் தன்மை முன் உணர்த்திய தொடங்கினான் என உணர்க.

இ-ள்: மேல் பகுக்கப்பட்ட வினையின் முப்பாகு பாடும் ஆகிய அவை ஆமாறு இனிச் சொல்லுவல் ; அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்றையுடைய நான்குவகைச்சொற்களும், உம்மொடு வருகின்ற கும் டும் தும் றும் எனப்படுகின்ற அந் நான்கு ஈற்றுச் சொல்லுமாகிய அவ்வெட்டுச் சொல்லும், அவன் தன்னோடு பிறனையும் கூட்டிப் பன்மையினைச் சொல்லும் தன்மைக்கு உரிய சொல்லாம், எ-று.

‡அம்—தாய் வருய்.

உ-ம் : அம்—உண்டனம், உண்டிலம், உண்ணாநின்றனம், உண்கின்றனம், உண்ணாநின்றிலம், உண்கின்றிலம், உண்பம், உண்குவம், உண்ணலம் என வரும்.

இவற்றுள் நிகழ்காலம் நிற்கின்.........னம் என்றாற் போல வரும் வாய்பாட்டு விகற்பமும் அறிக.

இனி, அம்மறை ஒரு வாய்பட்டதாய்ச் சொல் தன்னானே உண்டிலம் என்றாற் போல மறுத்து வருதலே அன்றி உண்டனம் அல்லம்[1].........வாய்பாட்டான் மறுத்து.........

ஆம் : உண்ணாநின்றாம், உண்டாம், உண்டிலாம், உண்கின்றாம், உண்ணாநின்றிலாம், உண்பாம், உண்குவாம், உண்ணாம் என வரும்.

எம் : உண்டெம், உண்டிலெம், உண்ணாநின்றெம், உண்கின்றெம், உண்ணாநின்றிலெம், உண்கின்றிலெம், உண்பெம், உண்குவெம், உண்ணெம் என வரும்.

ஏம் : உண்டனேம், உண்டிலேம், உண்ணாநின்றேம், உண்கின்றேம், உண்ணாநின்றிலேம், உண்கின்றிலேம், உண்பேம், உண்குவேம் உண்ணேம் என வரும்.

இவற்றிற்கும் உண்டாமல்லெம், உண்டாமல்லேம்[2]...... விகற்பமும் அறிக.

---

‡ இது சிதைவுற்றதாகும்.

1. உண்ணா நின்றனமல்லம், உண்கின்றனமல்லம், உண்பமல்லம் என்பனவற்றை இங்குக் கொள்க.
2. உண்ணா நின்றன மல்லெம் உண்பெமல்லெம், உண்பேமல்லேம், உண்குவே மல்லேம் என்பனவற்றை இங்குக் கொள்க.

இனி, உம்மொடு வரூஉங் க ட த றக்கள் உண்கும், உண்டும் வருதும், சேறும் என எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும் எனக் கொள்க.

இவற்றுள் மறைவாய்பா............ந் நாற்கிளவியும் என்பான் எண்ணும்மையினைத் தொகுத்து ஒடு விரித்தார் எனக் கொள்க.

சுப்.

'அவைதாம்' என்பதற்கு மூவகை வினைச்சொல் என்பது பொருளாதலின் அம் ஆம் முதலிய எட்டனையும் ஈற்றிற் கொண்ட வினைச்சொற்கள்போல வினையியல் 5, 7, 8, 19, 20 ஆவது சூத்திரங்களிற் கூறப்பட்ட விகுதிகளை ஈற்றிற்கொண்ட சொற்களும் அதனுள் அடங்கவேண்டும் ஆதலின் 5 முதலிய சூத்திரங்களில் 'அவைதாம்' என்பதை யொட்டிப் பொருள் கொள்ளல்வேண்டும். ஆகலான் 'அவைதாம்' என்பதைப் பிரித்து $அதிகாரச் சூத்திரம் என்னலாம்.

இளம்பூரணத்திற்கண்ட "அம் ஆம் என்பன முன்னின் றாரை யுளப்படுக்கும், தமராய வழிப் படர்க்கையாரை யுளப் படுக்கும்; உம்மொடு வரூஉங் கடதற அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய" என்ற சொற் றொடர், சேனாவரையத்தில் உள்ளவாறே இருத்தலின், சேனா வரையத்திலிருந்து இளம்பூரணவேட்டில் இங்குச் சேர்க்கப் பட்டிருத்தல் வேண்டும். ஏன்எனில், இச்சூத்திரவுரையின் இறுதி யில் உரையாசிரியரே, "இவை தன்னொடு முன்னின்றானையும் உளப்படுக்கும் படர்க்கையானையும் உளப்படுக்கும்; அவ்விரு வரையும் உளப்படுக்கும் என்பது, "அவற்றுள் பன்மையுரைக்கும் தன்மைக் கிளவி" (வினை. 12) என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும்" என்று கூறினர்.

பூவ.

(சேனாவரையம்—உரைக்குறிப்பு)

இச்சூத்திரம் முதலாகச் சில சூத்திரங்களிற் சேனாவரையர்

$ அதிகாரச் சூத்திரம் என்பது தான் ஒன்றனையும் விதிக் காது, பல சூத்திரங்களுக்கு முன்படிக்கப்பட்டு, அவற் றிற்குப் பொருள் கொள்ளும்போது தானும் அவற்றுடன் சேர்ந்துப் பொருள் கொள்ளப்படுவதாகும்—சுப்.

கூறும் கால எழுத்துக்களை (காலம் காட்டும் உறுப்புகளை)ப் பார்த்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இங்குக் கூறப்பட்டவற்றிற்சில நன்னூலினும் அதன் உரைகளிலும் கூறப்பட்டவை போல் அவ்வளவு தெளிவாக இல்லை. சேனாவரையர் இம் முயற்சியை முதலிற்றொடங்கியவராதலின் அங்ஙனம் உள்ளன போலும். உரையாசிரியர் எவ்வாறு கூறினர் என்றறிய அவர் உரை கிடைத்திலது. நச்சினார்க்கினியர் பெரும்பாலும் சேனாவரையர் கூறியவாறே கூறுகின்றனர்.

நக்கனம் என்பது ககர இடைநிலை பெற்றது என்றார். நகு பகுதியும் அம்விகுதியும் அன்சாரியையுமாகப் பிரித்தால் ககரம் இல்லை. பகுதி விகுதி சேரும்போது பகுதியின் இடையில் நகர ஒற்று தோன்றுகின்றது. காலவெழுத்து (இடை நிலை) அவ்வாறு வருவது பொருத்தமில்லை. நன்னூல் உரை நகு என்னும் குறிலிணைப் பகுதி ஒற்று இரட்டித்துத் தானே இறந்த காலம் காட்டிற்று என்று கூறுகின்றது. இடைநிலையேயன்றிச் சில விகுதிகள் காலங் காட்டுதல்போல இப்பகுதி காலங் காட்டிற்று என்று கோடல் பொருத்தமாக வுள்ளது.

நிகழ்காலத்துக்கு உண்ணா நின்றனம், உண்கின்றனம் என்றாற்போன்ற சொற்களைக் காட்டுதல் பொருத்தமில்லை. சங்க விலக்கியங்களில் இச்சொற்கள் பயிலவில்லை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. உண்ணாநின்றனம் என்பதில் ஆநின்று இடைநிலை எனக்கூறுதல் எளியவழி. நில் இடைநிலை; லகரம் னகரமாகத் திரிந்து மேலும் ஒரு றகரம் பெற்றது என்று கூறுவது அரிய வழியேயாகும். உண்ணாகிடந்தனம், உண்ணா விருந்தனம் என்பவற்றிலும் ஆகிடந்து, ஆவிருந்து இடைநிலை எனப்பிரித்தல் எளியவழி.

இவ்வாறெல்லாம் சேனாவரையர் பிரித்துக் கூறுவதனால் நன்னூல் இவர் காலத்திற்குப் பிற்பட்டது என்றோ அல்லது இவர் காலத்தில்வழக்குப்பயிற்சிப் பெறவில்லையென்றோகொள்ள இடமாகின்றது.

''நிகழ் காலத்திற்குரித் தென்ற நில் என்பது'' என்று தொடங்கும் பகுதியால்நிகழ்காலம் இறந்தகாலத்து நிகழ்காலம், எதிர்காலத்து நிகழ்காலம், இயல்பாக உள்ள நிகழ்காலம் என மூன்று வகையாக்கினர்.

இங்கு உண்ணாநிற்கும் என்றது போல, திருக்கோவையார் 180 ஆம் செய்யுளில் ''அளவில் ஒளிகள், அலராவிருக்கும் படை கொடுத்தோன்'' என்ற விடத்து, உரையில் ''அலராவிருக்கும்

என்பது ஒரு நிகழ்காலச் சொல்'' எனக் கூறப்பட்டிருத்தல் காண்க. இஃது இயல்பான நிகழ்காலச் சொல்லாயின் ஒரு நிகழ் காலச் சொல் என எடுத்துக் கூறவேண்டா. அங்ஙனம் அல்லா மையின் எடுத்துக் கூறினர் எனக் கொள்ளலாம்.

அ. சண்முகதாஸ்

உளப்பாட்டுத் தன்மைப் பெயர்கள் யாவை என்பதனை வெளிப்படையாக இலக்கணக்காரர் குறிப்பிடவில்லை. ஆனால் யாம், நாம் என்னும் இரு தன்மைப் பன்மைப் பெயர்களுள் 'நாம்' என்பதே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாக அமைந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. ''நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்'' (பெயரி. 9) என்னும் தொல்காப்பிய ருடைய ஒரு சூத்திர அடிக்குக் கணேசய்யர் கொடுக்கும் விளக்கத் தினை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமாகும்.

> ''நம்மூர்ந்து வரும் இகர ஐகாரம் என்றதனால் 'நம்' என்னும் அடியையே நம்பி, நங்கை என்னும் இரண்டும் கொள்ளும் என்பதும், அவை 'நமக்கு இன்னார்' என்னும் பொருள் படவரும் என்பதும் பெறப்படும்... என்தம்பி என்பதை நம்பி என்றும் என் தங்கை என் பதை நங்கை என்றும் சொல்லுதலின் உயர் சொல் என்றார்''

நம் என்னும் பெயரடியே உறவினரைத் தன்னோடு உளப்படுக் கும் பண்புடையதாக அமைந்துளது. இன்றும் 'நாம்' என்னும் சொல்லே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகச் சிற்சில இடங் களில் வழங்கப்பட்டு வருவதாலும், அச்சொல் வடிவமே பண் டைக் காலந்தொட்டு உளப்பாட்டுத் தன்மைப் பெயராகத் தமிழிலே பயிலப்பட்டு வந்திருக்க வேண்டும். தமர் என்ற பிணைப்பு, குடும்பம், குடி, குழு என்னும் கூட்டு மனப்பான்மை போன்ற சமூக உளவியற் காரணிகளே தமிழ் மொழியிலும் உளப்பாட்டுந் தன்மைப் பன்மைப் பெயர்களையும் வினைகளை யும் இனம் காணுதற்கு வழிவகுத்தன எனக் கூறலாம்.

(தமிழ்மொழி இலக்கண இயல்புகள். பக். 59-60)

சிவ.

''நாடகம் நாங்கள் உற்றது'' (சீவக. 582)''நாங்கள் செய்வ தென்'' (சீவக. 1762) என நாம் (+கள்) என்பதும், ''நீ போ யாங்களும் நீள்நெறி படர்குதும்'' (சிலப். 11:161), ''குரவையா

டுதும் யாம் என்றாள் (சிலப் 17;5 கருப்பம்) என யாம் (+கள்) என்பதும் காணப்படுதலின் நாம் யாம் இரண்டுமே உளப்பாட்டுப் பன்மைப் பெயர் என்னல் வேண்டும்.

தன்மை ஒருமை வினை முற்று.

200. **கடதற வென்னு**
மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொ
டென்னே னல்லென வரூஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே. (6)

(கட தற என்னும்
அந் நான்கு ஊர்ந்த குன்றியல் உகரமொடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல் லே.)

ஆ. மொ: இல.

The words which end in the consonants 'k', 't' (d) 'th', and 'ṛ' being followed by shortened 'u' and the words which end in 'en', 'ēn' and 'al'—are the seven belonging to first person in singular.

பி. இ: நூ.

நேமி. சொ. *39.*

............தம்மொடு
புல்லும் குடுதுறுவும் என்ஏனும் பொற்றொடியாய்
அல்லும் தனித்தன்மை யாம்.

நன். *331*

குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு
அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை.

இல. *237*

குடுதுறு என்னும் குன்றிய லுகரமொடு
அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மையும்
....
பாற்பட உணர்த்தும்.

தொல். 111

எதிர்கால விகுதியுள் ஒருமைத் தன்மை
குடுதுறு என்னும் குன்றிய லுகரமொடு
அல்அன் என்ஏன் ஆம்எண் ணீறே

முத்து. வி. 8

குடுதுறு என்னும் குன்றிய லுகர
இறுதியும் என்ஏன் அல்இறு கிளவியும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், மேல்உளப்பாட்டுத் தன்மை கூறினார்; இது தனித்தன்மை வினைச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

$ உரை: க ட த ற ஊர்ந்த குன்றியலுகரமாகி கு டு து று என்னும் நான்கு ஈற்றவாகிய சொல்லும், என் ஏன் அல் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும் ஒருமையுணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ—று.

க ட த ற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றியலுகரம் என்றான் அவையிற்றின் ஈறு பற்றி. அவை வருமாறு:— உண்கு, உண்டு, வருது, சேறு என வரும்.

என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும். அவை உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென் எனவும்; உண்டேன், உண்ணாநின்றேன், உண்குவேன் எனவும் வரும்.

அல்—உண்பல், தின்பல் என எதிர்காலம் பற்றி வரும். இப்பொழுது அதனை உண்டான், தின்பன் என அன் ஈறாக வழங்குப என்ப.

சேனா.

இ—ள்: கடதற என்னு நான்கு மெய்யை யூர்ந்து வருங் குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லும், என் ஏன் அல் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும், ஒருமை யுணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ—று.

$ ''இவ்வுரைப்பகுதி முன்னைய பதிப்புகளில் இல்லையேனும் இருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்று தெரிதலின் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டது'' என்பது கழகப்பதிப்பில் (1073) காணப்படுகின்றது.

குற்றுகர நான்கும் அல்லும் எதிர்காலம் பற்றி வரும். குற்றுகரம் காலவெழுத்துப் பெறுங்கால் உம்மீற்றோ டொக்கும். அல்லீறு பகரமும் வகரமும் பெற்று வரும். என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும்.

உ-ம் : உண்கு, உண்டு, வருது, சேறு எனவும்; உரினுகு, திருமுகு எனவும்; உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென எனவும்; உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன் எனவும்; உண்பல், வருவல் எனவும் வரும்.

காலவெழுத் தடுத்தற்கண் எம்மீற்றோடு என்ஈறும், ஏமீற்றோடு ஏன்ஈறும் ஒக்கும். ஆண்டுக் கூறிய விகற்பமெல்லாம் அறிந்தொட்டிக் கொள்க.

[1]குற்றியலுகரம் என ஒன்றாகாது நான்காதற்கு முன் (வினை. 5) உரைத்தாங்கு உரைக்க.

எதிர்காலம் பற்றி வழக்குப் பயிற்சியும் இல்லாக் குற்றுகரத்தை [2]அங்ஙனம் வரும் அல்லோடு பின்வையாது, மூன்றுகாலமும்பற்றிப் பயின்றுவரும் என்ஏன் என்பனவற்றின்முன் உம்மீற்றோடியைய வைத்தது, செய்கென்பதுபோலச் செய்கும் என்பதூஉம் 'காண்கும் வந்தேம்' என வினைகொண்டு முடியும் என்பது அறிவித்தற்கு எனக்கொள்க.

தெய்.

தனித் தன்மைவினை யுணர்த்துதல் நுதலிற்று.

---

1. கும், டும், தும், றும் என்பவற்றுக்கு உரைத்தவாறு உரைத்துக் கொள்ளுமாறு:- கு என்பது 'உண்குயான்' எனப் பெயரொடும் 'உண்கு வந்தேன்' என வினையொடும் முடியும். டு, து, று என்பன உண்டுயான், வருதுயான், சேறுயான் எனப் பெயரொடு மட்டும் முடியும். அதனால் கு தனித்ததாம். உண்டு, வருது, சேறுஎன்பன எதிர்காலத்துக்கு வரும். அப்படியாயின் ஈற்று உகரத்தைப் பிரித்தால் ட் த் ற் என்பன எதிர்காலம் காட்ட வேண்டும்; அவை எதிர்காலம் காட்டாமையால் உகர எழுத்துக்கு உறுப்பாக வந்தன எனக்கொள்ளல் வேண்டும். அவ்வுறுப்புகள் தனித்தனி எழுத்துக்களாக இருத்தலின் டு, து, று எனத் தனித்தனி யீறுகளாயின. எனவே குற்றியலுகர வீறு எனப் பொதுவில் அடக்காமல் கு, டு, து, று எனத் தனித்தனிக் கூறினார்.
2. எதிர்காலம் பற்றிவரும்.

இ-ள் : கடதற என்னும் அந்நான்கு எழுத்தினையும் ஊர்ந்த குற்றியலுகரத்தோடே கூட என் ஏன் அல் என வரூஉம் ஏழு ஈறும் தன் வினை உரைக்கும் தன்மைச் சொல்லாம், எ-று.

தன்வினை யுரைக்குஞ்சொல் என்னாது 'தன்மைச் சொல்' என்றது தன் வினையைத் தானே யுரைக்கும் சொல் என்று கொள்க.

உ-ம் : உண்கு, உண்டு, வருது, சென்று எனவும்; உண்டனென், உண்டாநின்றனென், உண்குவென்; உண்டேன் உண்கின்றேன், உண்பேன்: உண்பல் எனவும்: உண்ணலென், உண்ணேன் எனவும் வரும்.

நச்.

இது தனித்தன்மையாகிய முற்றுக் கூறுகின்றது.

இ-ள் : கடதற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றியலுகரமொடு—கடதற என்னும் அந்நான்கு மெய்யையும் ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தினை ஈறாகவுடைய அந்நான்கு சொல்லும், என் ஏன் அல் எனவரூஉம் ஏழும்—என் ஏன் அல் என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லுமாகிய அவ்வேழும், தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே—பிறரையுளப்படுத்தாது தன் வினையை யுணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ-று.

குற்றுகரம் நான்கும் பெரும்பான்மையும் எதிர்காலத்துஞ் சிறுபான்மை ஏனைக்காலத்தும் வரும்.

உ-ம் : உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு, திருமுகு என உம் ஈறுபோல எதிர்காலம் காட்டின. [1]''கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும், தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்!' (புறம் 203) என்புழிப் 'பொழிந்து' எனவும் 'விளைந்து' எனவும் இறந்த காலம் உணர்த்தின. நிகழ்காலம் வந்துழிக் காண்க. ''அழாஅற்கோ இனியேநோய் நொந்துறைவி'' (குறுந். 192) என்னுங் குறுந்தொகைப் பாட்டினுள் 'அழுது' என்னும் உடம்பாட்டிற்கு 'அழாஅற்கு' என எதிர்மறை வந்தது.

---

1. பொருள் : கழிந்த காலம் பெய்தேன் என்று மழை பெய்யாது மாறினும் முன்காலத்தில் விளைந்தேன் என நிலம் விளையாது ஒழியினும்
2. பொருள் : நோயால் நொந்து உறைபவளே! இனி அழாதேன் ஆலேன்

இனி ஓசை வேற்றுமையால் ககர உகரமும் றகர உகரமும் வியங்கோள் முற்றாயும் நிற்கும் [3]''நெடுந்தேர் தாங்கு மதி வலவ என்றிழிந்தனன் (அகம். 65) ''தாங்கு நின் அவலம் என்றீர்'' எனவும், [4]''நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி யார்மேல் விளியுமோ கூறு'' (கலி. 88) எனவும் வரும்.

என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் என் ஈறு எம் ஈற்றோடும், ஏன் ஈறு ஏம் ஈற்றோடும் ஒக்கும். உண்டனென், உண்டிலென், உண்டனெனல்லேன், உண்ணாநின்றனென், உண்கின்றனென், உண்ணாநின்றிலென், உண்கின்றிலென்; உண்பென், உண்குவென், உண்ணலென், எனவும்; உண்டனேன், உண்டேன், உண்டிலேன், உண்டேனல்லேன், உண்ணா நின்றனேன், உண்ணா நின்றேன், உண்கின்றனேன், உண்கின்றேன், உண்ணா நின்றிலேன், உண்கின்றிலேன்: உண்பேன், உண்குவேன், உண்ணேன் எனவும் வரும்.

இனிப் பகர வகரங்கள் நிகழ்காலத்தும் வரும். [5]''கூடநீர் நின்ற பெற்றி கண்டிப்பால் நோக்குவேற்கு'' (சீவக. 1751) என்புழிப் 'பார்க்கின்றேற்கு' எனப் பொருள் தந்தவாறு காண்க. பகரம் வந்துழிக் காண்க.

அல் ஈறு, பகர வகரம் பெற்று, எதிர்காலத்து வரும். உண்பல், வருவல் என வரும்; உண்ணாநிற்பல் எனச் சிறுபான்மை நிகழ்காலமும் பெறும். ஒழிவல், தவிர்வல் என வரும் மறை வாய்பாடும் அறிக.

வினைகொண்டு முடியும் செய்கு என்பதனை உம் ஈற்றோடு இயைய வைத்தமையான் செய்கும் என்பதூஉம் 'காண்கும் வந்தேம்' என வினைகொண்டு முடியும்.

கல்.

என்-எனின், தனித்தன்மை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

3. பொருள் : பாகனே நெடிய தேரைச் சிறிது நிறுத்துக என்று அதனின்றும் இறங்கினான்.
4. பொருள்: நீ சொன்ன பொய்ச்சூள் வருத்தத் தொடங்கினால் அது எங்கள் மேலன்றி யார்மேல் வரும்?
5. பொருள் ''நீர் சேர நின்ற தன்மை கண்டு தாதையார் கருத்தன்மையின் நும்மையேவாதே இப்பக்கத்தைப் பார்ப்பேன் பொருட்டு'' நச். உரை.

இ-ள் : கடதறஎன்று சொல்லப்பட்ட அந்நான்கு ஒற்றினையும் ஊர்ந்த குற்றியலுகர வீற்றுச் சொற்கள் நான்கும், என் ஏன் அல் என்னும் மூன்றீற்றுச் சொல்லும் எனச் சொல்ல வருகின்ற அவ்வேழு சொல்லும் தன்மைப் பன்மைச் சொல்போலச் சொல்லுவான் தன்னோடு பிறன் வினையையும் உணர்த்தாது தன் வினையையே உணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ.று,

ஒடு எண் ஒடு. இவற்றுள் முன்னைய நான்கும் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

உ-ம் : ‡உண்கு, உண்டு, வருது, சேறு, உரினுகு, திருமுகு எனவரும்.

இவற்றுள் தகர உகரம் ; ''கழிந்தது பொழிந்தென வான் கண் மாறினும், தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்'' (புறம் 203) என்னும் புறப்பாட்டினுள் பொழிந்து எனவும் விளைந்து எனவும் இறந்தகாலம் பற்றி வந்தன. சிறுபான்மை நிகழ்காலமும் உண்டேனும் அறிந்து கொள்க.

இனிக் ககர உகரத்திற்கு : ''அழாஅற்கோ இனியே நோய் நொந்துறைவி'' (குறுந். 192) என்னும் குறுந்தொகைப் பாட்டினுள் 'அழுது' என்னும் உடன்பாட்டிற்கு 'அழாஅற்கு' என எதிர்மறை வந்தது. ஒழிந்த எதிர்மறை வாய்பாடும் உள வேல் அறிக.

இனி என் ஏன் என்பன இரண்டு ஈறும் முக்காலத்தும் உடன் பாட்டினும் மறையினும் வரும் எனக் கண்டு கொள்க.

உ-ம் : உண்டனென், உண்டிலென்; உண்ணாநின்றனென் உண்கின்றனென்: உண்ணா நின்றிலென், உண்கின்றிலென்; உண்பென், உண்குவென், உண்ணலென் எனவரும் இவை என்.

இனி ஏன்: உண்டேன், உண்டிலேன்; உண்ணா நின்றேன், உண்கின்றேன், உண்ணா நின்றிலேன், உண்கின்றிலேன்; உண்பேன், உண்குவேன், உண்ணேன் எனவரும்.

*உண்டனன், உண்டேனல்லேன் எனவரும் மறைவிகற்பமும் அறிக.

---

‡ உண்கு...எனவரும்—பாடம். (தெ. பொ. மீ. பதிப்பு)

* ...உண்டேனல்லேன்—பாடம் (தெ. பொ. மீ. பதிப்பு) உண்டனன்என்பது 'உண்டனெனல்லேன்' என்றிருப்பின் சிறக்கும்.

இவ்விரண்டீறும் மூன்று காலத்தும் வருதலால் முன் வைக்கற்பாற்று எனின், முன்சூத்திரத்துக் க ட த றக்கள் கடைக் கண் நின்ற அதிகாரம்பற்றி அவற்றை முற்கூறினான் எனவு......

அல் ஈறு உண்பல், தின்பல். எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும். உண்ணா நிற்பல் எனச் சிறுபான்மை நிகழ்காலம்பற்றி யும் வரும். ஒழிவல், தவிர்வல் எனச் சில வினைக்கண் மறை வாய்பாடும் அறிக.

அல்லாதவற்றிற்கும் உண்ணாதொழிவல் என்றா...வாய் பாடு தானே மறையாய்ச் சொல்லுமாறு அறிக.

செய்கு முடிபு

201. அவற்றுட்
செய்கென் கிளவி வினையொடு முடியினு
மவ்விய றிரியா தென்மனார் புலவர் (7)

(அவற்றுள்
செய்கு என் கிளவி விளையொடு முடியினும்
அ இயல் திரியாது என்மனார் புலவர்)

ஆ. மொ. இல:

Of these the word 'Seyku' though completed by verb will not change in its nature as finite verb.

பி. இ. நூ:

நன். 33.

செய்கென் ஒருமையும் (செய்குமென் பன்மையும்)
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

இல. 237 ௸ ௸ ௸

முத்து. வி. 9

செய்கென் கிளவி வினையொடு முடியினும்
விளம்பிய முற்றாம் என்மனார் புலவர்

இளம்.

உரை: அவ்வேழனுட் 'செய்கு' என்னும் சொல் வினை கொண்டு முடியினும் அமையும், எ-று.

வ-று: உண்கு வந்தேன் என வரும்.

'செய்கென் கிளவி வினையொடு முடியினும் அமைக' எனவே 'செய்கும்' என்னும் கிளவியும் வினையொடு முடியினும் அமைக என்பது போந்ததாம்,

வ-று : உண்கும் வந்தேம் என வரும்.

இனி அவை முடியினும் அமையும் எனவே, பெயர் கொண்டு முடிதலே வலியுடைத்து என்பது போந்ததாம்.

அவை உண்குயான், உண்கும் யாம் என வரும்.
அவ்வியல் திரியா என்பது அவையும் முற்றுச் சொல் இயல்பிற் றிரியா என்றவாறு.

சேனா.

இ-ள்: மேற்கூறப்பட்ட ஒருமைத் தன்மை வினை ஏழனுள் 'செய்கு' என்னுஞ் சொல் வினையொடு முடியுமாயினும் முற்றுச் சொல் ஆதலிற்றிரியாது, எ-று.

உ-ம்: [1]காண்கு வந்தேன் எனவரும்.

[2]செய்கென்கிளவி அவ்வியல் திரியாது எனவே, ''பெயர்த் தனென் முயங்கயான்'' (குறுந் 84) எனவும், ''தங்கினை சென்மோ'' (புறம் 320) எனவும், ''மோயின ளுயிர்த்த காலை'' (அகம். 5) எனவும் ஏனை முற்றுச் சொல் வினை கொள்ளுங் கால் அவ்வியல் திரியும் என்பதாம். அவை திரிந்தவழி வினை யெச்சமாதல் ''வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'' (எச்ச. 61) என்புழிப் பெறப்படும்.

[3]இருசாரனவும் பெயர் கொள்ளாது வினை கொண்ட வழிச் செய் கென்கிளவி திரியாது என்றும் ஏனைய திரியும் என்றும் கூறிய கருத்து என்னையெனின், நன்று சொன்னாய்; காண்கு வந்தேன் என்றவழி 'செய்கு என் கிளவி வினையெச்சமாய்த் திரிந்ததாயின் [4]செய்து என் எச்சமாதற் கேலாமையின், செயவென் எச்சமாய்த் திரிந்தது எனல்வேண்டும். வேண்டவே

---

1. காண்குவந்தேன்—காண்பேன் வந்தேன்.
2. பெயர்த்தனென் — பெயர்த்து, தங்கினை — தங்கி, மோயினள்—மோந்து.
3. இருசாரன- செய்கு என்னும் முற்றும் ஏனைய முற்று களும்.
4. காண்கு என்பது காண்பேன் என எதிர்காலம் காட்டுவது, அது எச்சமாகத் திரியின் எதிர்கால எச்ச

செயவென் எச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அது கொள்வான் செல்லும்; வினைமுதல் வினையல்லது கொள்ளாமையிற் செயவென் எச்சமாய்த் திரிந்தது என்றல் பொருந்தாது. பிறிது ஆறு இன்மையின் முற்றுச்சொல்லாய் நின்றதெனவேபடும். அதனான் 'அவ்வியல் திரியாது' என்றார், என்பது. [5]அல்லதூஉம் செய்கு என் கிளவி சிறுபான்மையல்லது பெயர் கொள்ளாமையின் பெரும்பான்மையாகிய வினைகோடல் அதற்கு இயல்பேயாம்; ஆகவே அது திரிந்து வினைகொள்ளும் எனல் வேண்டாவாம்; அதனாலும் முற்றாய் நின்று வினை கொண்டது என்றலே முறைமையென்றுணர்க.

[1]''முற்றுச் சொற்கும் வினையொடு முடியினும்
முற்றுச் சொல் என்னும் முறைமையின் இறவா''

என்றார் பிறரும் எனக் கொள்க.

''பெயர்த்தனென் முயங்க'' (குறுந். 84) என்னுந் தொடக்கத்தன இறந்தகாலம் உணர்த்தலின் செய்தென் எச்சமாதற் கேற்புடைமையான் அவற்றைத் திரிபு என்றார்.

மாகவே திரிதல் வேண்டும். அதனால் செய்து என்னும் இறந்தகால வாய்பாட்டு எச்சமாக—அதாவது கண்டு என்பதாகத் திரியாது; அதனால் செய என்னும் எச்சமாக—அதாவது காண எனத் திரிதல் வேண்டும்.

5. செய்கு என்பது பெரும்பாலும் பெயர் கொள்ளும், சிறுபான்மை வினைகொள்ளும் என்பர் இளம்பூரணர்.

1. முற்றுச்சொற்கும்—முற்றுச் சொல் + கும் = முற்றுச் சொல்லாகிய கும் இறுதிச் சொல். முற்றுச் சொற்றாம் என்னும் பாடம் கழகப் பதிப்பிலும் (1970) சுந்தரமூர்த்தி பதிப்பிலும் (1966) காணப்படுகின்றது. முற்றுச் சொற்கும் என்பது கணேசய்யர் (1955) பதிப்பில் கண்டது. இதுவே பொருந்தும். முற்றுச் சொற்றாம் எனின் இச்சூத்திரம் எல்லா முற்றுக்கும் கூறியதாகும். 'முற்றுச் சொற்கும்' எனின் செய்கும் என்னும் வாய்பாட்டு முற்றுக்கே கூறியதாகும். இங்கு செய்கு என்பது பற்றிய பேச்சாக இருத்தலின் அதன் பன்மையாகிய 'செய்கும்' என்பது பற்றியதாகக் கொள்வதே நன்று.

முன்னர் ''எத்திறத்தானும் பெயர் முடிபினவே'' (எச்ச. 33) என்பதனாற் பெயரோடு முடிதல் எய்துவதனை விலக்கியவாறு.

தெய்.

மேற் சொல்லப்பட்டவற்றுள் செய்கு என்பதற்கு ஓர் வேறு பாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற்சொல்லப்பட்டவற்றுள் செய்கு என்னும் சொல் வினையோடு முடிந்துழியும் பாலுணர்த்தும் இயற்கையில் திரியாது, எ-று.

உ-ம் : காண்கு வந்தேன் என வரும். காண்கு யான் எனப் பெயரோடும் முடிதல் இலக்கணம் என்று கொள்க.

அஃதேல் முற்றுச் சொல் பெயர் கொண்டு முடிதல்யாண்டுப் பெற்றாம் எனின், முன் முற்றுச் சொல் இலக்கணம் கூறுகின்றுழி ''அவை தாம், தத்தம் கிளவி யடுக்குநவரினும், எத்திறத்தானும் பெயர் முடிபினவே'' (எச்ச. 33) என்னும் சூத்திரத்தாற் பெறுதும். ஈண்டு முடியினும் என்றதற்குப் பொருள் தொடர்பு படினும் என்றவாறாகக் கொள்க.

நச்.

இஃது அவற்றுள் ககர உகர ஈற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ—ள் : அவற்றுள்—முற்கூறிய ஒருமைத்தன்மை வினை ஏழனுள், செய்கு என் கிளவி வினையொடு முடியினும்—செய்கு என்னும் முற்றுச்சொல் பெயரொடு முடியாது வினையொடு முடியினும், அவ்வியல் திரியாது என்மனார் புலவர்—அம்முற்றுச் சொல்லாந் தன்மையின் திரியாது என்று கூறுவர் புலவர், எ—று.

உ—ம் : [1]''காண்கு வந்திசிற் பெரும'' எனவரும். (புறம். 17) 'நோகோயானே'' (ஐங்குறு. 205) எனப் பெயர் கோடல் சிறுபான்மை.

கல்.

என்—எனின், அவ்வேழனுள் ககர உகர ஈற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

---

1. காண்கு வந்திசின்—காண்பேன் வந்தேன். நோகோ யானே—யான் நோவேன்.

இ—ள் : மேற்சொல்லப்பட்ட ஏழனுள்ளும் செய்கு என்னும் சொல் பெயரோடு முடியாதே வினையொடுமுடியினும் பெயரொடு முடிந்தனபோல அம்முற்றுச் சொல்லாகல்இயல்பின் திரியாது, எ—று.

உ—ம்: உண்கு வந்தேன் என்பது.

இனி ஒன்றென முடித்தல் என்பதனான் உண்கும் என்பதும் இவ்வாறே வினையோடு முடியும்.

உ—ம்: உண்கும் வந்தேம் என்பது.

[2] வினையெச்சமுற்றாய் அமையாதோ எனின், முன் முற்றாய்ப் பெயர் கொண்டு நின்று, பின் வினையெச்ச முற்றாய் வந்தன அன்மையின் இவ்வாறு ஓதினார்.

உண்கோயான் என்னப் பெயரோடு முடிந்ததால் எனின், அவ்வாறு வருவன உளவேனும் சிறு பான்மை; வினைகோடலே பெரும்பான்மையென வுணர்க.

வெள்.

இது மேற் கூறியவற்றுள் குவ்வீற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ—ள் : முற்கூறிய ஒருமைத்தன்மை வினை ஏழனுள் செய்கு என்னும் வாய்பாட்டு முற்றுச்சொல் பெயரொடு முடிதலேயன்றி வினையொடு முடியினும் முற்றுச் சொல்லாம் அத்தன்மையில் திரியாது என்று கூறுவர் புலவர், எ–று.

செய்கு என்பது தன்வினை யல்லது பிறவினை கொள்ளாமை யின் தன்மையொருமை யுணர்த்தும் முற்றுச் சொல்லாம் தன்மையில் திரியாது நின்றது எனவே கொள்ளப்படும் என்பார் ‘அவ்வியல் திரியாது’ என்றார்.

உ—ம் : காண்குவந்தேன் எனவரும்.

---

2. முற்று எச்சமாதல் என்பது முதலில் முற்றாக இருந்து பின்னர்ப் பொருளியைபுக் கேற்ப எச்சமாக மாறுவதாம். வந்தேன் சென்றேன் என்றால் வந்தேன் என்பது முற்றாய் இருந்து சென்றேன் என்பதனோடு தொடர்வதற்காக வந்து என எச்சமாகத் திரியும். உண்கு வந்தேன் என்பதில் உண்கு என்பது முற்றாகவே இருந்து வந்தேன் என்பதுடன் தொடர்கிறது. அதனால் எச்சமாதல் இல்லை. வினையெச்சமுற்று—வினையெச்சப் பொருளில் வரும் முற்று.

ஆதி.

குடு து று என் ஏன் அல் முடிவு பெற்ற ஏழில், செய்கு என்னும் வாய்பாட்டுவினை வினைமுற்றைத் தழுவி முடியினும் தன் இயல்பில் திரியாது.

வினையொடு முடியினும் என்றமையால் பெயரொடு முடியும் என்பது பொருள்.

§ யான்காண்கு — பெயருக்குப் பின் பயனிலை (வினை)
காண்கு வந்தேன் — வினையோடு முடிந்தது (எச்சம்)

எச்சமாக நின்று வினைமுற்றைக் கொண்டு முடிந்தாலும் அது தன்மை ஒருமைக்கு உரியதே. ஒருமைக்கு உரியது என்பதை விளக்கவே 'அவ்வியல் திரியாது' என்றார். அவ்வியல் என்பது தன் வினை உரைக்கும் தன்மையாகும்.

சிவ.

செய்கு என் வினைமுற்று, ''பெயரொடு முடிவது பெரும்பான்மை; வினையொடு முடிவது சிறுபான்மை'' என்று இளம்பூரணரும் ''அது வினையொடு முடிவது பெரும்பான்மை: பெயரொடு முடிவது சிறுபான்மை என்று சேனாவரையர் முதலியோரும் மாறுபடக் கூறினர். 'வினையொடு முடியினும்' என்பதற்கு அவரவரும் கொண்ட பொருளே அம்மாறுபாட்டுக்குக் காரணமாம்.

இளம்பூரணர் வினையொடு முடியினும் என்பதில் உள்ள உம்மை எதிரதுதழுவியஇழிவு சிறப்பு உம்மையாகக்கொண்டார். வினை முற்றுகள் யாவும் பெயரையே கொண்டு முடியும் என்பது எச்சவியலுட் கூறப்பட்டது. 'எத்திறத்தானும் பெயர் முடிபினவே' என்பது காண்க. பின்னர் எச்சவியலுட் கூறப்படுமாறு பெயரொடு முடிதலேயன்றி, வினையொடு முடியினும் என்றதால் எதிரது தழீ இயதாகவும், பெயரொடு முடிதலே வலியுடைத்தாகவும், அதனால் வினையொடு முடிதல் வலியின்மையின் இழிந்ததாகவும் கொண்டார்.

சேனாவரையர் முதலியோர்,'முற்றுக்குரிய இலக்கணப்படிப் பெயரைக் கொண்டு முடிவதுண்டேனும், பெரும்பாலும் வினை

---

§ காண்குயான் என்றே உதாரணம் காட்டல் வேண்டும். இச்சூத்திரம் செய்கு என்பது பயனிலையாக வரும் என்பதில்லை.

யையே கொண்டு முடிவது செய்கு என்முற்று; அப்படி முற்றிலக் கணத்துக்கு மாறாக வினையைக் கொண்டு முடிந்தாலும் முற் றாகவே கொள்ளப்படும்' என்ற கருத்தினராயினர். ''சாந்தலிங்க அடிகளார் ஞானாம்பிகை என்னும் பெயருடைய மனைவியோ டிருந்தாராயினும் அவர் துறவியேயாவர்'' என்னும் வரலாற்று வழக்கைஇதற்கு உதாரணமாகக் கூறலாம். துறவிக்கு இலக்கணம் மனைவியைத் துறத்தல். சாந்தலிங்க அடிகளார் மனைவியை உடன் வைத்திருந்தார்; ஆயினும் அவர் துறவியே. சாந்தலிங்க அடிகள்—செய்கு என்கிளவி. மனைவியைத் துறத்தல்—பெயர் கொண்டு முடிதல். ஞானாம்பிகையுடனேயிருத்தல்—வினை யொடு முடிதல். அடிகளார் துறவியே—செய்கு என்பது முற்றே. துறவியாகிய அடிகளார் மனைவியுடனேயே பெரிதும் காலம் கழித்தார். செய்கு என்பது பெரிதும் (பெரும்பாலும்) வினை கொண்டு முடிவதே. அடிகளார் மனைவியோடிருந்தும் துறவி— செய்கு வினையொடு முடியினும் முற்றே. இப்படி ஒப்புமை காண்க.

இனி இளம்பூரணர், முற்று பெயரையே கொண்டு முடியும். ஆதலின் செய்கு என்னும் தன்மையொருமை வினைமுற்றும் பெயரையேகொண்டு முடியும், அதனால் இலக்கணப்படிமுடிவது பெரும்பான்மையாகவும், வினையைக் கொண்டு முடிவது முற்று இலக்கணத்துக்கு வேறுபாடு ஆதலின் அது சிறுபான்மையாகவும் கொண்டார்.

தன்மையொருமைப் பெயர்யான் என்பது ஒன்றே. எனவே செய்கு என்முற்றுயான் என்னும் ஒருபெயரை மட்டுமேகொண்டு 'உண்குயான்' என முடியும். ஆனால் அதுவே வினைகொள்ளும் போது, பல வினைகளைக் கொள்ளும் உண்குவந்தேன், உண்கு சென்றேன், உண்கு பார்ப்பேன்; உண்கு தேடினேன் எனக் காண லாம். ஒரே பெயரைக்கொண்டு முடிவதினும் பல வினைகளைக் கொண்டு முடிதல் வழக்குப்பயிற்சி மிகுதியைக் காட்டும். எனவே செய்கு என்பது பெயர்கொண்டு முடிதல் சிறுபான்மையென்றும் வினை கொண்டு முடிதல் பெரும்பான்மையென்றும் சேனா வரையர் முதலியோர் கொண்டனர்:

இவ்விருவகைக் கொள்கையினரும் தத்தம் கால வழக்குப் பயிற்சிக்கேற்ப முடிபு கொண்டனர். இக்காலத்தில் செய்கு என்னும் வாம்பாட்டு வினைமுற்று ஆட்சியில் செய்யுளகத்தும் காணப்படல் அரிது. சங்ககால இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் செய்கு என்னும் வாய்பாட்டின் ஆட்சி அருகியே காணப்படுகிறது. ஆதலின் நாம் செய்கு என் வினை

முற்றின் முடிபு பற்றிய பெரும்பான்மை சிறுபான்மை பற்றி வரையறை செய்ய இயலாது.

உண்குவந்தேன் என்பது உண்பேன் வந்தேன் எனப்பொருள் தருதலோடு, உண்பேனாக வந்தேன் என எச்சப் பொருளிலும் வருமோ எனின் வராது. ஒரு வினைமுற்று வினைகொண்டு முடியுமானால் அது தன் முற்றுத் தன்மையை விட்டு எச்சத் தன்மையெய்தும். ''பெயர்த்தனென் முயங்க'' (குறள் 84) என்பதில் 'பெயர்த்தனென்' என்னும் முற்று 'பெயர்த்தேனாய் முயங்க' என—அதாவது 'பெயர்த்து முயங்க' என எச்சத்தன்மை யடைந்தது காணலாம். அதுபோல 'உண்கு வந்தேன்' என்பதில், உண்கு என்பது தன் முற்றுத்தன்மையைவிட்டு 'உண் பேனாக வந்தேன்' என—அதாவது உண்ணவந்தேன் என எச்சத் தன்மையெய்தியது என்னலாம். எனினும் என்னாமைக்குச்சில காரணங்கள் உண்டு. சேனாவரையர் கூறும் காரணங்கள் பின் வருவனவாம்.

(1) செய்கு என் வாய்பாடு எதிர்காலத்துக்குரியது. ஆதலின் 'உண்கு வந்தேன்' என்பதில் உள்ள 'உண்கு' என்பதை உண்டு வந்தேன் என இறந்த கால எச்சமாகக் கொள்ளல் இயலாது. உண்கு வந்தேன் என்பதற்கு உண்ண வந்தேன் எனப் பொருள் கொள்ளல்வேண்டும். உண்ண என்பது செயஎன்னும் வாய் பாட்டு வினையெச்சம். யான் உண்ண வந்தேன் என்றால் உண்ணல் தொழிலும்வருதல் தொழிலும் ஒருவனுடையனவாம். எனவே உண்ண என்னும் செயவென் எச்சம் தன் (கருத்தா) வினையைக் கொண்டது ஆகும். யான் உண்ண அவன் வந்தான் என்றால் உண்ணல் தொழில் ஒருவனுடையது; வருதல் தொழில் வேறொருவனுடையது. எனவே இதில் உண்ண என்பது பிற (கருத்தா) வினைகொண்டதாம். எனவே செயவென் எச்சம் தன் வினையையும் பிறவினையையும் கொள்ளும் என்பது பெறப் படும். உண்கு என்பது உண்கு வந்தேன் எனத் தன் வினையைக் கொள்ளுமே தவிர உண்கு வந்தான் எனப் பிறவினையைக் கொள்ளாது. அதனால் செய்கு என வாய்பாடு முற்றாகவே நிற்குமன்றி எச்சமாகத் திரியாது.

(2) செய்கு என்முற்று பெயர்கொண்டு முடிவதினும் வினை கொண்டு முடிவது பெரும்பான்மையாதலின் அதுவே அதன் இலக்கணமாம். அதனால் எச்சமாகத் திரித்தல் வேண்டுவ தில்லை.

3. தன்மைப் பன்மைக்கண் வரும் 'செய்கும்' என்னும் முற்றானது வினைகொண்டு முடியினும் முற்றுச் சொல்லே என்று பிறரும் (?) கூறியுள்ளனர். அவர் கூற்று,

''முற்றுச் சொல்'கும்' வினையொடு முடியினும்

முற்றுச்சொல் என்னும் முறைமையின் இறவா" என்பதாகும்.

சேனாவரையர் கூறிய இக்காரணங்களுள் செய்கும் என் முற்று எச்சத்தன்மை எய்தாது என்பதற்குக் கூறிய காரணம் ஏற்புடையதாகும். ' ஆனால் வினை கொண்டு முடிதல் பெரும்பான்மை யென்பது ஏற்பதற்கில்லை. ஏன் எனின், தன்மை வினைமுற்று, ஒருமைக்கு யான் என்பதையும் பன்மைக்கு யாம் என்பதையும் தவிர வேறெவற்றையும் கொள்ளாது. தன்மைப் பெயர்கள் யான், யாம் என்பன தவிர வேறில்லை. வினைகள் பல. வினைகொண்டு முடியும்போது பலவினைகளையும் கொண்டு முடியும். அதனால் வினை கொள்வதே பெரும்பான்மை யென்பது முறையான காரணம் ஆகாது.

இனி மூன்றாவதான காரணம் (பிறர் கூற்று) சான்றாமே தவிர, காரணம் ஆகாது.

இனியான்காணும் சிறந்ததோர் காரணம் வருமாறு:— வினைமுற்றுகள் வினையாலணையும் பெயர்களாகவும் வரும். 'உண்பேன் வந்தேன்' என்றால் 'உண்பேனாகிய யான் வந்தேன்' எனப் பொருள்படும். அதனால் 'உண்பேன் வந்தேன்' என்பது எழுவாய்த் தொடர். 'உண்கு வந்தேன்' என்றால் 'உண்பேன் வந்தேன்' எனப் பொருள்படுமே தவிர உண்பேனாகியயான் வந்தேன்' எனப் பொருள்படாது. எனவே, எழுவாய்த் தொடராகாது; முற்றுத் தொடராகவே அமையும். மேலும் உண்பேனைக் கண்டான், உண்பேனால் முடியும் இக்காரியம் என்னுமிடங்களில் உள்ள வினை முற்றுகள் வினையாலணையும் பெயர்களாக அமைந்து ஐ ஆல் என்னும் வேற்றுமையுருபுகளை யேற்றவாறுபோல, உண்கு என்பது உருபுகள் ஏற்றல் இல்லை. அதாவது செய்குஎன் வாய்பாட்டு வினைமுற்று வின்னயாலணையும் பெயராதலும் வேற்றுமை உருபேற்றலும் இல்லை. எனவே, செய்கு என் வாய்பாட்டுத் தன்மையொருமை வினை முற்று வினைமுற்றுத் தொடராகுமே யன்றி எழுவாய்த் தொடராகவோ பிற வேற்றுமைத் தொடராகவோ ஆகாது. அதனால் தான் ஆசிரியர், 'செய்கு என்கிளவி வினையொடு முடியினும், அவ்வியல் திரியாது'எனத்தம் முன்னோர் முடிபையே கூறினார். (செய்கும் என்பதற்கும் இவ்வாறே கொள்க.)

உயர்திணைப் படர்க்கையொருமை வினைமுற்று

202. அன்னா னள்ளா ளென்னு நான்கு
மொருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே (8)

(அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல் லே)

ஆ.மொ: இல.

The four words which end in 'an', 'ān', 'aḷ' and 'āḷ' belong to the third person in singular.

பி. இ. நூ:

வீரசோழியம். *72*

தான் ஆனும் தாள் ஆளும்......
மேல்நாம் உரைத்த பிரத்தியமாகும்.

நேமி. சொ. *40*

......அன் ஆனும் அள் ஆளும்
......படர்க்கையாம்.

நன். *325, 326*

அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை
அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.

இல. *232.*

அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கையும்
அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கையும்

தொன். *105*

......அன் ஆன் அள் ஆள்......படர்க்கை
வினையின் விகுதி.

முத்து. வி. *10*

அன் ஆன் அள் ஆள் இறுதிக் கிளவி
உயர்திணை ஒருமைப் படர்க்கைச் சொல்லே.

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், உயர்திணைத் தன்மைச்சொல் உணர்த்தி அத்திணைப் படர்க்கை வினைச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : அன் என்பதனைத் தொடக்கமாகவுடைய நான்கு ஈற்றுச் சொல்லும் உயர்திணைக்கண் ஒருமைப் பாலை உணர்த்தும் படர்க்கை வினைச்சொல், எ-று.

அவை வருமாறு:

அன்—உண்டனன், உண்ணாநின்றனன், உண்குவன் என வரும்.

ஆன்—உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும்.

அள்—உண்டனள், உண்ணாநின்றனள், உண்குவள் என வரும்.

ஆள்—உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள் என வரும்.

சேனா.

தன்மைவினை யுணர்த்தி இனி உயர்திணைப் படர்க்கை வினை உணர்த்துகின்றார்.

இ-ள்: அன் ஆன் அள் ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும் உயர்திணை யொருமை யுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம், எ-று.

இவை நான்கீறும் மூன்று காலமும் பற்றி வரும்.

உ-ம்: உண்டனன், உண்ணா நின்றனன், உண்பன் எனவும்; உண்டான், உண்ணாநின்றான், உண்பான் எனவும்; உண்டனள், உண்ணா நின்றனள், உண்பள் எனவும்; உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள் எனவும் வரும்.

*காலத்துக்கேற்ற எழுத்துப் பெறுங்கால் அன்னும் அள்ளும் அம் ஈற்றோடும், ஆனும் ஆளும் ஆம் ஈற்றோடும் ஒக்கும். அவ் வேறுபாடெல்லாம் அறிந்து ஒட்டிக் கொள்க.

தெய்.

உயர்திணைப் படர்க்கை வினையுள் ஒருமை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அன்முதலாக ஓதப்பட்ட நான்கும் உயர்திணை ஒருமை உணரவரும் படர்க்கைச் சொல்லாம், எ-று.

---

* அவைதாம், அம் ஆம் (5) என்னும் சூத்திரவுரையிற் காண்க.

உ-ம்: உண்டனன், உண்கின்றனன், உண்பன்; உண்டான், உண்ணாநின்றான், உண்பான்; உண்ணான் இவை ஆண்பால் உணரவந்தன. உண்டனள், உண்கின்றனள், உண்பள்; உண்டாள், உண்கின்றாள், உண்பாள்; உண்ணாள் இவை பெண்பால் உணர நின்றன. பிறவும் அன்ன.

நச்.

இது படர்க்கை ஒருமை முற்று உணர்த்துகின்றது.

இ-ள்: அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்—அன் ஆன் அள் ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே—ஒருவன் ஒருத்தி என்னும் உயர்திணை ஒருமைப் பாலிடத்துப் படர்க்கையை யுணர்த்துஞ் சொல்லாம், எ-று.

இந்நான்கு ஈறும் மூன்று காலமும் பற்றி வருங்கால் அன்னும் அள்ளும் அம் ஈற்றோடும் ஆனும் ஆளும் ஆம் ஈற்றோடும் ஒக்கும்.

உ-ம்: உண்டனன், உண்டிலன்; உண்ணா நின்றனன், உண்கின்றனன், உண்ணாநின்றிலன், உண்கின்றிலன்; உண்பன், உண்குவன், உண்ணலன் எனவும்; உண்டான், உண்டிலான்; உண்ணா நின்றான், உண்கின்றான், உண்ணா நின்றிலான், உண்கின்றிலான்; உண்பான், உண்குவான், உண்ணான் எனவும்;

உண்டனள், உண்டிலள்; உண்ணாநின்றனள், உண்கின்றனள், உண்ணாநின்றிலள், உண்கின்றிலள்; உண்பள், உண்குவள், உண்ணலள் எனவும்; உண்டாள், உண்டிலாள்; உண்ணா நின்றாள், உண்கின்றாள், உண்ணா நின்றிலாள், உண்கின்றிலாள்; உண்பாள், உண்குவாள், உண்ணாள் எனவும் வரும்.

உண்டனனல்லன், உண்டானல்லன்; உண்டனளல்லள், உண்டாளல்லள் எனப் பிற வாய்பாட்டான் வரும் மறையும் அறிக.

கல்.

என்-எனின், உயர்திணைத் தன்மை வினையுணர்த்தி அத்திணைப் படர்க்கை வினையுணர்த்துவான் எடுத்துக் கொண்டார் என்பது. அப்படர்க்கை வினைதான் ஒருமை வினையும் பன்மை வினையும் என இருவகைத்து. அவற்றுள் ஒருமை வினைதான் ஆண்பால் ஒருமையும் பெண்பால் ஒருமையும் என இருவகைத்து. அவ்விருவகை ஒருமையும் இதனாற் கூறுகின்றது என உணர்க.

இ-ள்: அன் ஆன் அள் ஆள் என்று சொல்லப்பட்ட நான்கு ஈற்றுச் சொல்லும் ஒருவன் ஒருத்தி என்னும் ஒருமைப் பாலிடத்தில் படர்க்கையை யுணர்த்தும் சொல்லாம், எ-று.

முக்காலத்தும் உடன்பாடும் மறையும் என இருவகையாய் வரும்.

அவற்றுள் அன்: உண்டனன், உண்டிலன்: உண்ணா நின்றனன், உண்கின்றனன், உண்ணாநின்றிலன், உண்கின்றிலன்; உண்பன், உண்குவன், உண்ணலன் என வரும்.

இனி ஆன்: உண்டான், உண்டிலான்; உண்ணாநின்றான், உண்கின்றான், உண்ணாநின்றிலான், உண்கின்றிலான் ; உண் பான், உண்ணுவான், உண்ணான் என வரும்.

இவை ஆண்பால் ஒருமை.

இனி அள் : உண்டனள், உண்டிலள் ; உண்ணாநின்றனள், உண்கின்றனள், உண்ணா நின்றிலள், உண்கின்றிலள்; உண்பள், உண்குவள், உண்ணலள் என வரும்.

இனி ஆள் : உண்டாள், உண்டிலாள் ; உண்ணா நின்றாள், உண்கின்றாள், உண்ணா நின்றிலாள், உண்கின்றிலாள் ; உண் பாள், உண்குவாள், உண்ணாள் என வரும்.

இவை பெண்பால் ஒருமை.

இவற்றிற்கு உண்டனனல்லன், உண்டனனல்லான், உண்ட னளல்லள், உண்டனளல்லாள் எனப் பிற வாய்பாட்டால் வரும் மறையும் அறிக.

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று.

203. †**அர்ஆர் பவ்வென வருஉ மூன்றும்**
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே (9)

(அர் ஆர் ப என வருஉம் மூன்றும்
பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல் லே)

ஆ. மொ: இல.

The three words which end in 'ar' ār' and 'pa' belong to the third person in plural.

---

‡ 'அருவார்ப' எனப் பாடங் கொள்வர் தெய்வச் சிலையார். அவர் உரை பார்க்க.

பி.இ.நூ:

வீர. *73*

தார் ஆரும் தார்களொடு ஆர்கள் என்று
மேல்நாம் உரைத்த பிரத்திய மாகும்.

நேமி. சொ. *40*

.........அர் ஆர் ப...படர்க்கையாம்

நன். *327*

அர் ஆர் பவ்வூர் அகரம் மார்ஈற்ற
பல்லோர் படர்க்கை.

இல. *232*

அர் ஆர் பவ்வூர் அகரம் மார்ஈற்ற
பல்லோர் படர்க்கை.

தொன். *105*

அர்ஆர்...படர்க்கை.

முத்து. வி. *11*

அர் ஆர் பகர இறுதிக் கிளவி
அத்திணை மருங்கிற் பல்லோர் படர்க்கை

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை : அம் மூவகைச் சொல்லும் பலராய் [1]புறத்தாரை யுணர்த்துஞ் சொல், எ—று.

வ—று : அர் : உண்டனர், உண்ணாநின்றனர், உண்குவர் எனவரும். **ஆர்:** உண்டார், உண்ணாநின்றார், உண்பார் என வரும். ப :உண்ப, தின்ப என எதிர் காலங் கொண்டுவரும்.

சேனா.

இ—ள் : அர் ஆர் ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் பல்லோரை யுணர்த்தும் படர்க்கைச் சொல் லாம், எ-று.

---

1. புறத்தார்—படர்க்கையார்.

ரகாரவீறு இரண்டும் மூன்று காலமும் பற்றி வரும்; பகாரம் எதிர்காலம் பற்றி வரும்.

உ-ம் : உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர் எனவும்; உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும் வரும்.

அன் ஈற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும், ஆன் ஈற்றிற்குரிய கால வெழுத்து ஆர் ஈற்றிற்கும் உரிய. பகரம் உகரம் பெற்றும் பெறாதும் உரினுப, உண்ப என வரும். வருகுப எனச் சிறுபான்மைக் குகரமும் பெறும். இவ்வேறுபாடு ஏற்புழியறிந் தொட்டிக் கொள்க.

தெய்.

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : அர் ஆர் ப என வரும் மூன்று சொல்லும் உயர் திணைப் படர்க்கைப் பன்மைவினை உணரவருஞ் சொல்லாம், எ-று.

[2]அரு என்புழி வந்த உகரம் செய்யுள் விகாரம் என்பதும் ஒன்று. ஒற்றீராகி வரும் சொற்கள் உகரம் பெற்று வழங்கப் பெறும் என்பது அறிவித்தற்கு, உடம்பொடு புணர்த்துக் கூறினார் என்பது ஒன்று.

உ—ம்: உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர்; உண்டார், உண்ணா நின்றார், உண்பார், உண்ணார்; உண்ப என வரும்.

நச்.

இது படர்க்கைப் பன்மை முற்று உணர்த்துகின்றது.

இ-ள் : அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்—அர் ஆர் ப என்னும் ஈற்றெழுத்தினையுடையவாய் வரும்மூன்று சொல்லும், பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே—பல்லோரிடத்துப் படர்க்கைப் பன்மையை உணர்த்துஞ் சொல்லாம், எ-று.

2. இது 'அர் ஆர் ப' என்னாது 'அருவார் ப' எனப் பாடங் கொண்டு எழுதப்பட்டதாகும். இக்காலத்தும் பார் என்பதைப் பாரு என்றும், சொல் என்பதைச் சொல்லு என்றும் வழங்குதல் காண்க. உடம்படு புணர்தலாவது, ஒன்றை விதியாகச் சொல்லாமல் தன் ஆட்சியின்மூலம் அறிவித்தல்.

அர் ஆர் என்னும் இரண்டு ஈறும் மூன்று காலமும் பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் அன் ஈற்றோடு அர் ஈறும் ஆன் ஈற்றோடு ஆர் ஈறும் ஒக்கும்.

உ-ம் : உண்டனர், உண்டிலர் ; உண்ணா நின்றனர், உண்கின்றனர், உண்ணா நின்றிலர், உண்கின்றிலர்; உண்பர், உண்குவர், உண்ணலர் எனவும்,

உண்டார், உண்டிலார் ; உண்ணா நின்றார், உண்கின்றார், உண்ணா நின்றிலார், உண்கின்றிலார் ; உண்பார், உண்குவார், உண்ணார் எனவும் வரும்.

உண்டனரல்லர், உண்டாரல்லர் எனவரும் மறை விகற்பமும் அறிக.

பகரம் எதிர்காலம் பற்றி வருங்கால் உகரமும் குகரமும் அடுத்தும் அடாதும் நிற்கும்.

உ-ம் : உரிஞுப, வருகுப எனவும், உண்ப எனவும் வரும். [1]ஒழிப தவிர்ப என மறையும் வரும். உண்ணா தொழிப என்பது எல்லாவற்றிற்கும் பொது. இந்து உண்ணாநிற்ப என நிகழ் காலத்தும் வரும்.

கல்.

என்-எனின், உயர்திணைப் பன்மைப் படர்க்கை வினை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அர் ஆர் ப என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும் பல்லோரிடத்துப் படர்க்கை யுணர்த்தும் சொல்லாம், எ—று.

இவற்றுள் முன்னைய இரண்டும் மூன்று காலத்தும் வரும். உ-ம் : அர் : உண்டனர், உண்டிலர், உண்ணா நின்றனர், உண்கின்றனர், உண்ணாநின்றிலர், உண்கின்றிலர்; உண்பர், உண்குவர், உண்ணலர் என வரும்.

ஆர் : உண்டார், உண்டிலார் ; உண்ணா நின்றார், உண்கின்றார், உண்ணா நின்றிலார், உண்கின்றிலார் ; உண்பார், உண்குவார், உண்ணார் என வரும்.

---

1. ஒழிப தவிர்ப என்ற இரண்டிலும் ஒழி, தவிர் என்ற வினைப் பகுதிகள் எதிர்மறைப் பொருளைக் காட்டினும் ஒழிப, தவிர்ப என்பன விதியுருவமேயன்றிமறையாகா— சுப்,

இவற்றிற்கு உண்டனரல்லர், உண்டனரல்லார் என வரும் மறை விகற்பமும் அறிக.

இனிப் பகரம் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

உ-ம் : உண்ப, உண்குப என வரும்.

இஃது உண்ணாநிற்ப என நிகழ்காலத்தும் வரும்.

இதற்கு எதிர்மறை வாய்பாடும் உண்டேல் அறிக.

இனி ஒழிப, தவிர்ப எனச் சில வினைக்கண் மறை வாய்பாடும் உண்மையறிக. உண்ணாதொழிப என்னும் மறைதானே ஏனையவற்றிற்கு மறை ஆமாறும் அறிக.

மார் வினையொடு முடிதல்

204. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக்
காலக் கிளவியொடு முடியு மென்ப (10)

(மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக்
காலக் கிளவியொடு முடியும் என்ப)

ஆ. மொ: இல.

The word which has 'mār' as final part of it belongs to the third person plural completed by verb— so the scholars say.

பி. இ. நூ:

நன். 327.

மார் வினையொடு முடிமே

இல. 232.

மாரைக் கிளவி வினையொடு முடியினும்
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே.

முத்து. வி. 12.

மாரைக் கிளவியும் அவற்றோ ரற்றே.

இளம்.

உரை: மார் என்பதூஉம் உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைக்கு உரித்து; அது பின்னை முடியுங்காலை வினைச் சொல்லோடு முடிதல் உடைத்து, எ-று.

வ-று: ஆர்த்தர் கொண்மார் வந்தார் எனவரும்.

இது முற்றுச் சொல்லாகலான் வினைச்சொல்லொடு முடிதல் வேற்றுமைகண்டு அஃதுணர்த்தியவா றென்பது.

சேனா.

இ-ள் : முன்னையனவேயன்றி மார் ஈற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கையையுணர்த்தும்: அஃது அவைபோலப் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியும், எ-று.

[1]பகரத்திற்குரிய காலவெழுத்து மாரைக் கிளவிக்கும்ஒக்கும்.

உ-ம் : எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார் என வரும். குகரம் வந்தவழிக் கண்டு கொள்க.

[2]மாரைக்கிளவி வினையோ டல்லது பெயரோடு முடியாமையின் எச்சமாய்த் திரிந்து வினை கொண்டது எனப்படாமை யறிக.

[3]அஃதேல் "பீடின்று பெருகிய திருவிற்; பாடின் மன்னரைப் பாடன் மார் எமரே" (புறம். 375) எனவும், "காமம் படரட

---

1. மேற்சூத்திரத்தில் பகரவிகுதி தானே காலம் காட்டும் என்றும், உகரமும் குகரமும் சாரியைகள் என்றும் தெளியப்பட்டமையான், இங்கு 'பகரத்திற்குரிய கால வெழுத்து மாரைக்கிளவிக்கும் ஒக்கும்' என்ற பகுதி பிழைபட்டுள்ளது என்பது விளங்கும். 'பகரத்திற்குரிய எழுத்து மாரைக் கிளவிக்கும் ஒக்கும்' என்றிருக்கலாம். எழுத்து—சாரியை (பூவ.)
2. வினைமுற்று பெயரைக் கொண்டுமுடியும். அது வினையைக் கொண்டு முடியின் முற்றுத்தன்மையினின்றும் எச்சத்தன்மையாகத் திரியும். மாரைக்கிளவி பெயரைக் கொண்டு முடியாது. வினையையே கொண்டு முடியும். அதனால் முற்றுத்தன்மையினின்றும் எச்சத்தன்மை யாகத் திரிந்தது எனப்படாது. முற்றாகவே கருதப் படும்.
3. பாடன்மார், என்பது எமர் என்னும் பெயர் கொண்டது. பாடன்மார் என்பது, பாடு+அல்+ம்+ஆர் எனப் பிரிக்கப்படும். அல் எதிர்மறையுணர்த்தும். ம் எழுத்துப் பேறு. ஒருமொழிப் புணர்ச்சி—ஒரு மொழியின் பகுதி விகுதி இடைநிலைகளாகப் பிரித்துப் புணர்க்கும் புணர்ச்சி. பாடன்மார்-பாடுவாரல்லராகுக என எதிர் மறை யேவலாக வந்தது. இதன் உடன்பாட்டு ஏவல் பாடுவாராக என்பது. இதனை மார் ஈறாகக் கொண்

வருந்திய, நோய்மலி வருத்தங் காணன் மார் எமரே'' (நற். 64) எனவும் மார் ஈற்றுச் சொல் பெயர் கொண்டு வந்தனவால் எனின், அவை பாடுவார், காண்பார் என்னும் ஆர் ஈற்று முற்றுச் சொல்லின் எதிர் மறையாய் ஒரு மொழிப் புணர்ச்சியான் மகரம் பெற்று நின்றன. மார் ஈறாயின் அவை பாடாதொழிவார், காணாதொழிவார் என ஏவற் பொருண்மையுணர்த்துமாறில்லை யென்க.

தெய்.

மேலதற்கு ஓர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மார் ஈற்று வினைச் சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது பெயரோடு முடிதலே யன்றி வினையோடும் முடியும் என்று சொல்லுவர், எ-று.

உ-ம்: ஆ கொண்மார் வந்தார் இது வினையோடு முடிந்தது. ''பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே'' (புறம்- 375) இது பெயரோடு முடிந்தது.

இதனையும் செய்கு என்பதனையும் வினையெச்சம் என்ற தனாற் குற்றம் என்னையெனின், வினையெச்சம் பால்தோன் றாது, இவை பால்தோன்றலின் முற்று எனல் வேண்டும்.

நச்.

இதுவும் பன்மைக்கு உரிய ஈறும் அதன்முடிபு வேற்றுமையும் கூறுகின்றது.

இ-ள்: மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை—முன்னை யனவேயன்றி மார் ஈற்றுச் சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம், காலக் கிளவியொடு முடியும் என்ப—அஃது அவைபோலப் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும், எ-று.

[1]மார் உகரம் அடுத்தும் அடாதும் நிற்கும்

டால் மார் ஈறு உடன்பாட்டு ஏவலுக்கும் வருதல் வேண்டும். வாராமையின் பாடன்மார் என்பது ஆர் ஈறே; மார் ஈறன்று. மார் ஈறு உடன்பாட்டுக்கேவரும் ஏவலுக்குவாராது. வினையைமட்டும் கொண்டுமுடியும். (பாடா தொழிவார்—பாடாதொழிவாராக)

1. எள்ளுமார் என்பதில் உகரமுண்மையும், கொண்மார் என்பதில் உகரம் இன்மை காண்க.

[2] உ-ம்: ''எள்ளுமார் வந்தாரே யீங்கு'' (கலி. 81) ''ஆர்த்தார் கொண்மார் வந்தார்'' என வரும். இஃது எதிர்காலம். ''நிலவன்மாரே புலவர்'' (புறம். 375) ''பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே'' (புறம். 375) நோய்மலி வருத்தம் காணன் மார்எமரே (நற். 64) என்பன, நிலவுக, பாடுக, காண்க என்னும் வியங்கோட்கு எதிர்மறை என்றுணர்க.

இனி, நிலவுவார், பாடுவார், காண்பார் என்பன சில வியங்கோள்முற்று என்று கூறி, அதற்கு எதிர்மறையாய், நிலவா தொழிவார், பாடாதொழிவார், காணாதொழிவார் என ஏவற் பொருண்மையை உணர்த்தி நின்றன என்றலும் ஒன்று.

கல்.

என்-எனின், இதுவும் படர்க்கைக்கு உரியது ஓர் ஈறும் அதன் முடிபு வேற்றுமையும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மார் என்னுஞ் சொல்லை ஈறாகவுடைய சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது தான் பிற முற்றுச் சொற்போற் பெயரோடு முடியாது காலத்தை யுணர்த்தும் சொல்லாகிய வினைச் சொல்லோடு முடியும்; அவ்வாறு முடிந்ததாயினும் முற்றாம் இயல்பில் திரிபின்று என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

மார் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

உ-ம்: ''ஆர்த்தார் கொண்மார் வந்தார்'' என வரும். உண்மார் தின்மார் என நிகழ்காலம் உண்டேலும் அறிக.

இதுவும் வினையெச்ச முற்றாய் அடங்காதோ எனின் மேற் கூறியவாறே கூறுக.

[1] உண்ணன்மார் என எதிர்காலம் உண்டேலும் அறிக.

இனி ''நிலவன்மாரோ புரவலர்'' (புறம் 375) என்றும், ''பாடின்மன்னரைப் பாடன்மார் எமரே'' (புறம் 375) என்றும், ''நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே'' (நற். 64) என்றும்

---

2. சேனாவரையர் மறுப்பு நோக்கி இப்பகுதிக்கு விளக்கம் காண்க.
1. உண்மார் என்றிருத்தல் வேண்டும். இன்றேல் உண் + அன் + மார் எனப் பிரித்து அன்சாரியை என்னல் வேண்டும். உண்பார் என்பது பொருளாதலின். இது உடன்பாடு; எதிர்மறையன்று.

பெயர் கொண்டு முடிந்தனவால் எனின், அவை நிலவுக, பாடுக, காண்க என வரும் வியங்கோளிற்கு எதிர்மறை.

[2]இதன் மறை அல்ல என்று போகலும் ஒன்று. வினை கொள்ளும் என்பது பெரும்பான்மை. சிறுபான்மை பெயர் வரும் என்பதும் ஒன்று. [3]இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க.

இலக்கண விளக்கம் நூலார் கூறுவது

வினையொடு முடியும் என்ற மாரீற்றுச் சொல்லை "பீடின்று பெருகிய திருவிற், பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே'' (புறம். 375)'' படரட வருந்திய, நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே" (நற். 64) எனப் பெயரோடு முடிந்ததால் எனின், இவை பாடுக, காண்க என்னும் வியங்கோட்கு எதிர்மறையாய்ப் பாடாதொழிக, காணாதொழிக என ஏவற் பொருளவாய் நின்றன; மாரீறல்ல வென்க. அல்லதூஉம் பாடுவார், காண்பார் என்பன சில வியங்கோள் முற்றெனக் கொண்டு அவற்றிற்கு எதிர்மறையாய்ப் பாடா தொழிவார், காணாதொழிவார் என ஏவற்பொருளாய் நின்றன என்றலும் ஒன்று. அன்றி மார்ஈறாயின் ஏவற்பொருண்மையை உணர்த்து மாறில்லை யென்க. ஏவல் என்றது வியங்கோளை. (இலக்கண விளக்கம் 232 உரை)

சிவ.

மார் ஈற்றுச் சொல் உயர்திணைப்படர்க்கை வினைமுற்றில் வரும். அது வினையொடு முடியும். பெயரொடு முடியாது என்பது சேனாவரையர் போல்வார் கொள்கை.

நச்சினார்க்கினியர் கல்லாடனார் கொள்கை தெளிவுபட வில்லை.

தெய்வச்சிலையார் கொள்கை மார் ஈற்று வினைமுற்று பெயரை யும் வினையையும் கொண்டு முடியும் என்பது. ஆசிரியர் கூறிய,

> மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை
> காலக்கிளவியொடு முடியு மென்ப.

---

2. பாடன்மார் முதலியன பாடுக முதலியவற்றுக்கு மார் ஈற்று எதிர்மறை அல்ல என்று போகலும் ஒன்று. இதைச் சேனாவரையர் உரையிற் காண்க.
3. பெயர் கொள்ளுதலும் கொள்ளாமையுமாகிய இரண்டனுள்.

என்ற சூத்திர அமைப்பு அவ்விருசாரார்க்கும் ஏற்றதாக உள்ளது. காலக் கிளவியொடு முடியும் என்பதால் பெயர்க்கிளவியொடு முடியாது என்பது பெறப்பட்டது. அதனால் சேனாவரையர் பாடன்மார் எமர் என்பது மார்ஈற்றதன்று ஆர் ஈற்றது என்றார்.

கிளவியொடும் + முடியும் = கிளவியோடு முடியும் என மகரம் கெடுதல் உண்டு. அதனால் காலக்கிளவியொடும் முடியும் எனப் பாடங்கொண்டு தெய்வச்சிலையார் பெயரொடு முடிதல் முற்றுக் கிலக்கணமாதலின் மாரைக் கிளவியும் பெயரொடுமுடியும் எனக் கருதி,

"அது பெயரோடு முடிதலேயன்றி வினையொடும் முடியும்.

என்று சொல்லுவர்" என உரையெழுதி,

"ஆ கொண்மார் வந்தார்—இது வினையோடு முடிந்தது. பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே—இது பெயரொடு முடிந்தது" என உதாரணமும் காட்டினார்.

தெய்வச்சிலையார் கொள்கைப்படிக்கொண்டால் நச்சினார்க் கினியரும் கல்லாடனாரும் பாடன்மார் முதலியன பாடுக முதலிய வியங்கோட்கு எதிர்மறை என எழுதியது தெய்வச்சிலையார் போல்வார் கொள்கையை உடன்பட்டாகும் என்னலாம்.

தெய்வச் சிலையார் கொள்கையே எளிமையும் விளக்கமும் உடையதாகும்.

உயர்திணை வினைமுற்றின் தொகை

205. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் [1]கிளந்த வுயர்திணை யவ்வே (11)

(பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த
அ நால்ஐந்தும் மூன்று தலை இட்ட
முன் உறக்கிளந்த உயர்திணைய வே)

ஆ· மொ: இல.

These twenty-three which denote singular and plural belong to high class are already said.

1. கிளந்தன—கல். பாடம்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் மேல் விரித்தவற்றை யெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை : பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்ற நின்ற இருபத்து மூன்றுமே உயர்திணை மூன்று பாற்கும் உரிய என வரையறுத்தவாறு.

அது [2]'விரித்துத் தொகுத்தல்' என்னும் நூற்புணர்ப்புப்பட வைத்தவாறு.

சேனா.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பாலுணரவந்த இருபத்து மூன்றீற்று வினைச்சொல்லும் முன்னுறக் கிளக்கப்பட்ட உயர் திணையுடையன, எ-று.

[1]ஈண்டுக் கூறிய படர்க்கைவினையே கிளவியாக்கத்துட் கூறப் பட்டன, அவைவேறல்ல வென்பார் 'முன்னுறக் கிளந்த' வென் றார். அதனாற் பயன் அன் ஆன் அள் ஆள் என்பன ஆண்பால் பெண்பால் உணர்த்துதல் ஈண்டுப் பெறுதலும், னஃகான் ஒற்று முதலாயின படர்க்கை வினைக்கு ஈறாய் நின்று பால் உணர்த் துதல் ஆண்டுப் பெறுதலும் ஆம்.

[2]அஃதேல் முற்றுப் பெற ஓரிடத்துக் கூற அமையும்; ஈரிடத் துக் கூறிப் பயந்தது என்னை எனின், பாலுணர்த்தும் இடைச் சொற்பற்றி உயர்திணைப் படர்க்கைவினை யுணர்த்துதல் ஈண்டுக் கூறியதனாற்பயன்: ஆண்டுக் கூறியதனாற் பயன் வழுக் காத்தற்கு இவற்றைத் தொகுத்து இலக்கண வழக்கு உணர்த்துத லாம் என்க.

[3]பெயரியல் நோக்கிப் 'பெயரிற்றோன்றும் பாலறி கிளவியும்' என்றாற்போல, வினையியல் நோக்கி 'வினையிற்றோன்றும் பாலறிகிளவியும், மயங்கல் கூடா' என அமையும்; ஆண்டுக் கூறல் வேண்டா எனின், அற்றன்று; இருதிணை ஐம்பாற்சொல் உணர்த்தாக்கால், திணைபால் பற்றி வழுவற்க எனவும் வழீஇ யமைக எனவும் வழுக்காத்த சூத்திரங்கள் எல்லாவற்றானும்

2. விரித்தது: சூ. 5 10-இல். தொகுத்தது இச்சூத்திரத்தில் 1, 2, 3 இவை பற்றிய விளக்கம் சிவ. விளக்கத்திற் காண்க.

பொருள் இனிது விளங்காமையானும், வினையுள்ளுந்திரிபின்றிப் பால் விளக்குதற் சிறப்புடையன படர்க்கை வினையே ஆகலானும் அவற்றைப் பிரித்து ஆண்டுக் கூறினார் என்பது.

படர்க்கைப் பெயரீறும் திரிபின்றிப் பாலுணர்த்தாமையின் இலக்கணவெழுத்தோடு கூறாது, எதிரது நோக்கிக் கொள்ள வைத்தார் என்க. மூன்று தலையிட்ட அந்நாலைந்து மாவன இவையென இனிது விளங்கப் 'பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த' என்றார். இதனாற் பயன், உயர்திணை வினை மூன்று தலையிட்ட நாலைந்து என்னும் வரையறை.

தெய்.

[1]விரிந்தது தொகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று. மேல் உயர்திணை என்று ஓதாமையான், [2]எஞ்சியது உணர்த்திற்று என்றும் ஆம்.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால் உணர வரும் மூன்று தலையிட்ட இருபதும் முந்துற எடுத்து ஓதப்பட்ட உயர்திணையிடத்த, எ-று.

[3]பெயரெச்சம் மொழி மாறி நின்றது. இவ்வாறு மாறி வருவன உடம்பொடு புணர்த்ததனானும் கொள்க. மேல் ஓதப்பட்ட ஈறுகள் உயர்திணை என்பது இச்சூத்திரத்தாற்பெறப் பட்டது. அவை இருபத்து மூன்றுமாவன: அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும் குடுதுறு என் ஏன் அல் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப மார் என்பன.

---

1. சூ. 5 முதல் 10 வரையுள்ள இவற்றில் சொல்லப்பட்ட ஈறுகளை இச்சூத்திரத்தில் தொகுத்து உணர்த்தியதைக் குறிப்பிடுவது இது.
2. எஞ்சியது என்றது அன் ஆன் முதலியவற்றின் பாலுணர்த்தித் திணை உணர்த்தாது எஞ்சியதை.
3. மூன்று தலையிட்ட அந்நாலைந்துஎன்பது மாறி நின்றது. பெயரெச்சம் மாறி நிற்றல் இல்லை. வந்த சாத்தன் என வரலாமே தவிர சாத்தன் வந்த என வருதல் இல்லை. ஆனால் அந்நாலைந்து என்னும் பெயர் முன்னரும் மூன்று தலையிட்ட என்னும் பெயரெச்சம் பின்னருமாக வந்தன. இதுதவறு. என்றாலும் ஏற்கலாம் என ஆசிரியர் கொண்டமையால் விதி கூறாமல் தாமே ஆட்சியில் உடம்பொடு புணர்த்தலாற் கூறினர்.

நச்.

இது விரிந்தது தொகுத்துத் தெரிநிலைவினைகள் உயர் திணைக்கு உரிய என்கின்றது.

இ-ள்: பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த மூன்று தலை யிட்ட அந்நாலைந்தும்—பன்மையும் ஒருமையுமாகிய பால் அறிய வந்த இருபத்து மூன்று ஈற்று வினைச்சொல்லும், முன்னுறக் கிளந்த உயர்திணைய—கிளவி யாக்கத்துக் கூறப்பட்ட உயர் திணையை யுடையனவாம், எ-று.

[4] ஈண்டுக் கூறியதனாற் பயன் அன் ஆன் முதலிய இடைச் சொற்பற்றி உயர்திணைப்படர்க்கை வினைமுற்று உணர்த்துதல்; ஆண்டுக்கூறியதனாற் பயன் வழுக்காத்தற்கு அவற்றின் ஈறு களைத் தொகுத்து இலக்கண வழக்கு உணர்த்துதல் என்றுணர்க.

கல்.

என்-எனின் விரித்துத் தொகுத்தல் என்னும் இலக்கணத் தான் இவை உயர்திணைக்குஉரிய எனத் தெரிநிலை வினையைத் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த மூன்றனை முடியிலே உடைய இருபதும் மேற் கிளவியாக் கத்து முன்னுறச் சொல்லப்பட்ட உயர்திணையனவாம், எ-று.

மூன்று தலையிட்ட அந்நாலைந்து எனக் கொள்க. மூன்று தலையிட்டு என்றும் ஓர்...டு.

உதாரணம் மேற்காட்டினவே கொள்க.

அவ்விருபத்து மூன்றனுள் பன்மைக்கு உரிய ஈறு உளப் பாட்டுப் பன்மையீறு எட்டும், படர்க்கைப் பன்மையீறும் மாரும் உட்பட நான்கும் எனப் பன்னிரண்டாம்.

இவற்றுள் உளப்பாட்டுத் தன்மையீறு எட்டும் சொல்லு வான் பிற வினையும் உள்ளிட்ட மாத்திரமேயாய்த் தன் வினை கூறும் தன்மையன ஆகலிற் படர்க்கைப்பன்மை நான்கும் போலப் பன்மைச் சிறப்பின்மையறிக.

ஒருமையீறு:— தனித்தன்மையீறு ஏழும், படர்க்கை யொருமை ஈறு நான்கும் ஆகப் பதினொன்றாம். இப்பதி -னொன்றுள் அன் ஆன் என்னும் இரண்டும் ஆண்பாற்கேயுரிய

---

4. சேனாவரையர் விரிவாகக் கூறியவற்றின் சுருக்கம் இது.

ஒருமை. அள் ஆள் என்னும் இரண்டும் பெண்பாற்கே உரிய ஒருமை. தனித்தன்மை ஏழும் இருபாற்கும் உரிய ஒருமை. ஆகலின் முன்னையன போல ஒருமைச் சிறப்பில எனக் கொள்க.

மேற்கூறுகின்ற மார் என்பதனோடு கூட உயர்திணையீறு இருபத்து நான்காம் எனக்கொள்க.

இவ்வுயர்திணை ஈறு இருபத்து நான்கும் இவ்வீற்று வினைச் சொற்கட்கு முடிபாய் வரும்.

பெயர்க்கும் ஒன்றென முடித்தல் என்பதனால் ஈறாய் அவ் விடமும் பாலும் உணர்த்தும் என்பது கொள்ளப்படும்.

இவற்றைப் பெயர்ச் சொற்கும் ஈறாகப் பெயரியலுள் ஓதாது என்னையெனின், இவையே அன்றிப்[1] பிறவும் ஈறு உண்மையின் ஓதார் ஆயினார் போலும்.

அஃதேற் பிறவற்றையும் சுட்டி வரையறை செய்க எனின், அப்பிற ஈறுகள் 'நம்பி' என ஆண்பால் மேல் நின்ற இகர ஈறும், அவ்வாட்டி எனப் பெண்பால் மேல் நின்றும்; 'நங்கை' எனப் பெண்பால் மேல் நின்ற ஐகாரம் 'தந்தை' என ஆண்பால் மேல் நின்றும். 'ஆடூஉ' என ஆண்பால் மேல் நின்ற ஊகாரம் 'மகடூஉ' எனப் பெண்பால் மேல் நின்றும் : 'அவன்' என ஆண்பால் மேல் நின்ற னகரம் 'சாத்தன்' என விரவின் மேல் நின்றும், 'அவள்' எனப் பெண்பால் மேல் நின்ற ளகரம் 'மக்கள்' எனப் பன்மை மேல் நின்றும் அவ்வாறு மயங்கி வருதலின் வரையறுக் கப்படா என்றொழிந்தான் போலும்.

சுப்.

இச்சூத்திர வுரையில் சேனாவரையர் 'ஈண்டுக் கூறிய படர்க்கை வினையே கிளவியாக்கத்துட் கூறப்பட்டன ; அவை வேறல்ல வென்பார் முந்துறக் கிளந்த என்றார்' என்று கூறினர். கிளவியாக்கத்துள் 'னஃகானொற்று' முதலியன பெயர், வினை இரண்டினும் பால் விளக்கும் ஈறு என்பது சூத்திரப் போக்கை ஊன்றி நோக்குமிடத்து விளங்கும். தெய்வச்சிலையாரும் இவ்வாறே பொருள் கூறியுள்ளமை காண்க. ஈண்டோ அன் ஆன் படர்க்கை ஆண் பாலையும், அள் ஆள் படர்க்கைப் பெண் பாலையும், அர் ஆர் படர்க்கைப் பலர் பாலையும், "இர் ஈர் மின் என்ற சூத்திரத்தில் இர் ஈர் பல்லோர் முன்னிலையையும், பல

1. பிறவும் ஈறுகளாவன அடுத்து வரும் பகுதியில் உள்ள இகர ஈறு முதலியன.

வற்று முன்னிலையையும் உணர்த்தும் என்றதனால் அகரம் முதலியவற்றோடு சேர்ந்த னகர வொற்று முதலியன பாலோடு இடம் உணர்த்தலையும் கூறி விட்டு, 'ர்' பலர்பாலைக் குறிக்கின்றது என்பதைப் ''பாலறி மரபின் அம்மூவீற்றும்'' (வினை. 14) ''ரஃகானொற்றும்'' (கிளவி. 7) என்ற சூத்திரங்களால் ஆசிரியர் கூறியிருத்தலின் ‡அர், ஆர் இவற்றிலுள்ள அ, ஆ படர்க்கையையும், இர், ஈர் இவற்றிலுள்ள இ, ஈ முன்னிலையையும் குறிக்கும் என உய்த்துணர வைத்தார் என்னலாம். இக் கருத்துத் தோன்றவே ''னஃகானொற்றே ஆடூஉ வறிசொல்'' (கிளவி-5) ''ளஃகானொற்றே மகடூஉ வறிசொல்'' (கிளவி-6) என்ற கிளவியாக்கத்துச் சூத்திரங்களிலும், ''அன் ஆன் அள் ஆள் என்னு நான்கும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே'' (வினை. 8) என்ற வினையியற் சூத்திரத்திலும் ஆசிரியர் கூறியிருத்தல் காண்க. ''ஆடூஉ வறி சொல்'' என்று பாலைக் கூறினும், இடம் பெறப்படாது என்பது ''இர் ஈர் மின் என வருஉம் மூன்றும், பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும், சொல்லோரனைய வென்மனார் புலவர்'' (வினை. 27) என்றவிடத்து முன்னிலைப் பன்மைகள் பல்லோரையும் பலவற்றையும் காட்டும் என்று கூறுதலின் வலியுறுதல் காண்க.

சிவ. (சேனாவரையர் உரைவிளக்கம்)

1 'அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே' என ஆசிரியர் கூறியிருப்பதில் அன் முதலிய நான்கீற்றுச் சொற்களும் படர்க்கையிடத்துக்குரியன என்பது பெறப்பட்டதேயன்றி எவ்வெவ்வீற்றுச் சொற்கள் ஆண்பாலுக்குரியன எவ்வெவ்வீற்றுச்சொற்கள் பெண்பாலுக்குரியன என்பது பெறப்படவில்லை. அன் ஆன் அள் ஆள் நான்குமே ஆண்

---

‡ இக்கருத்தைக் கணேசய்யர் போல்வாரும் உடன்படுவர். ''அன் ஆன் இர் ஈர் முதலியவற்றில் முதலிலுள்ள அ ஆ இ ஈ முதலியன இடங் குறித்து வந்தன என்று ஒருவாறு கூறலாம் என்பது சிலர் கருத்து. இது பொருத்தமே என்பது எமக்கும் கருத்தேயாம்'' என்பது கணேசய்யர் கூற்று. (சேனாவரையம் கணேசய்யர் உரைக்குறிப்புகளுடன் (1955) பக். 246)

தன்மைக்கு அம் ஆம் அல் என்பன காணப்படுதலின் அ ஆ என்பன படர்க்கையை மட்டும் சுட்டுமாறு யாங்ஙனம் ?—சிவ.

பாலுக்கும் பெண்பாலுக்கும் உரியன என்று கூறியதாகவும் கொள்ளலாம். அன் ஆன் என்பன ஆண்பாலுக்கும் அள் ஆள் என்பன பெண்பாலுக்கும் உரியன எனப்பிரித்துக் காணுவதற்குக் கிளவியாக்கத்தில் கூறப்பட்ட "னஃகானொற்றே ஆடூஉ வறி சொல்", "ளஃகானொற்றே மகடூஉ வறிசொல்" என்னும் சூத்திரங்களே துணைபுரிவன. எனவே கிளவியாக்கச் சூத்திரங் களால் இங்கு அன் ஆன் ஆண்பாலுணர்த்தும் என்றும், அள் ஆள் பெண்பாலுணர்த்தும் என்றும் பெறலாம்.

கிளவியாக்கத்தில் னஃகான் ஒற்று ஆடூஉ வறிசொல், ளஃகா னொற்று மகடூஉ வறிசொல், ரஃகா னொற்று பல்லோரறியும் சொல் என்று கூறப்பட்டதேயன்றி அவை வினையொடு வருங் கால் எவ்விடத்து வினையொடு வரும் என்பது கூறப்படவில்லை. இவ்வியலில் படர்க்கைச் சொல்லில் வரும் எனக் கூறப்பட்டதால் கிளவியாக்கத்தில் கூறப்பட்டனவும் படர்க்கை வினையில் வரும் என்பது பெறப்படும்.

எனவே, கிளவியாக்கத்துப் பாலுணர்த்தியதும் இவ்வியலில் இடம் உணர்த்தியதும் கொண்டு அன் ஆன் அள் ஆள் என்பன வற்றின் பாலும் இடமும் அறியலாம்.

2 மேற்கூறியவற்றை இரண்டிடங்களில் கூறியதனாற்பயன்:— வினையியலில் வினைச் சொற்களின் பாகுபாடுகளையுணர்த்துதல் வேண்டும். அவை தன்மை முன்னிலை படர்க்கையெனப் பாகு படும் என்பதை யீண்டுக் கூறுவதற்காக அன் ஆன் முதலிய பாலுணர்த்தும் இடைச் சொற்களைப்புற்றிக் கூறினார். கிளவி யாக்கத்தில் வழுவற்க என்றும் வழுவமைகளென்றும் கூறுமிடத்தில் பாலுணர்த்தியன்றிக் கூற இயலாது ஆதலின் னஃகான் ஒற்று ஆடூஉ வறிசொல் முதலியவாகத் தொகுத்துக் கூறினார்.

3 கிளவியாக்கத்தில் பெயர் மூலம் ஆண்பால் பெண்பால் பலர்பால் அறிதற்குரிய ஈறுபற்றிக் கூறவில்லை. ஏன் எனின் பெயரியலில் ஈறுபற்றிப் பால் அறியுமாறு கூறுதலினால் என்க, ஆனால் வினையியலில் ஈறுபற்றிப் பால் திணை அறியுமாறு கூறி யிருப்பினும் கிளவியாக்கத்தும் னஃகானொற்று ஆடூஉ வறி சொல் முதலியவாக ஈறுபற்றிப் பால் அறியுமாறு கூறுவானேன்? என்பது வினா. விடை: வினையைக்கொண்டு இன்னபால் இன்ன திணை என்றறிந்தாலன்றிப் பால் திணை வழுக்களையறிய முடி யாது. கிளவியாக்கம்வழுவற்களன்பதும்வழுவமைதியும்கூறுவது. அதனால் வினையைக் கொண்டு பாலறியுமாற்றைக் கிளவி யாக்கத்திற் கூறினார். ஆனால் பெயரைக் கொண்டு பால்

அறிதல் என்பது அத்துணை எளிதன்று. ஆதலின் எளிதில் உணரும் வினை மட்டும் கூறினார்; பெயர்பற்றிக் கூறவில்லை. பெரியலில் பெயர் பற்றிப் பாலறியுமாறு கூறினார்.

உளப்பாட்டுத் தன்மை வினைமுற்று

206. ‡**அவற்றுட்**
பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே (12)

(அவற்றுள்
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி
எண்இயல் மருங்கில் திரிபவை உளவே)

ஆ. மொ: இல.

Of these the verbs which denote plural in the first person may include the words of neuter when counting.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அத்தொகுக்கப் பட்டனவற்றுள் ஒரு சாரனவற்றது வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : பன்மைத் தன்மைச் சொற்கள் ஆராயுமிடத்து அவை திரிபுடைய, எ-று.

யாதோ திரிபு எனின், அம் ஆம் என்னும் இரண்டும் தன்னொடு முன்னின்றானை உளப்படுக்கும். எம் ஏம் என்பன இரண்டும் தன்னொடு படர்க்கையானை உளப்படுக்கும். உம்மொடு வரூஉம் கடதறக்கள் முன்னின்றானையும் படர்க்கையானையும் உளப்படுக்கும் என்பது.

இவ்வுளப் படுத்தற்குத் திரியும் திரிபு அவையுடைய; வழூஉத் திரிபன்று ஈண்டுக் கருதியது என்பது.

சேனா.

இ-ள்: கூறப்பட்ட இருபத்து மூன்று சொற்களுள், பன்மை யுணர்த்துந் தன்மைச்சொல் எண்ணியலும் வழி அஃறிணையை யுளப்படுத்துத் திரிவனவுள, எ-று.

---

‡ அவற்றில் எனப்பாடங் கொண்டார் ஆதித்தர்.

உ-ம்: "யானும் என் எஃகமும் சாறும்" எனவரும்,

தன்மைப் பன்மை வினைச்சொல் உயர்திணை வினை யாகலின் உயர்திணையே உளப்படுத்தற்பாலன, அஃறிணையை யுளப்படுத்தல் வழுவாயினும் அமைக என்பார் 'திரி பவையுள' என்றார்; [1]அதனான் இச்சூத்திரத்தை 'முன்னுறக் கிளந்த உயர்திணையவ்வே' என்னுஞ் சூத்திரத்தின் பின் வைத்தார்.

'திரியும்' என்னாது 'திரிபவையுள' என்றதனான் எல்லாந் திரியா சிலவே திரிவன என்பதாம்.

தெய்.

உளப்பாட்டுத் தன்மைக்கண் வருவதோர் திரிபு உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்டவற்றுள் உளப்பாட்டுப் பன்மைச் சொல் எண் இயலும் வழித் திரிபவையுண்டு, எ-று.

உ-ம்: எண் என்பது இரண்டு மூன்று என்பன. 'யாம் இரு வேம்' எனற்பாலது 'யாம் இருவர்' எனவும் வரும். இன்னும் 'எண்ணியல் மருங்கின் என்பதற்கு 'எண்ணப்பட்டியன்ற மருங்கின்' எனப் பொருள் உரைக்க. உளப்பாட்டுத் தன்மைக்கு ஓதிய எட்டு ஈற்றினும், திரிபவையுள என்றுமாம். வருவோம், உண்போம் என ஒகாரம் பெற்றுவருவன ஏகாரத் திரிபு என்று கொள்க.

நச்.

இஃது உளப்பாட்டுத் தன்மைக்குத் திரிபு கூறுகின்றது.

இ-ள்: அவற்றுள் பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி—முற் கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுள் பன்மையையுணர்த்தும் தன்மைச்சொல், எண் இயல் மருங்கில் திரிபவைஉள-எண்ணுதல் நடக்கும் இடத்து அஃறிணையை உளப்படுத்தித் திரிவன உள, எ-று.

---

1. இச்சூத்திரம் உயர்திணையும் அஃறிணையும் விரவிவரு தலின் உயர்திணை பற்றியே வரும் சூத்திரங்களின்முடி வான சூத்திரமாகிய "பன்மையும் ஒருமையும்... முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே" என்பதன் பின் வைத்தார்.

உ-ம்: "யானும் என் எஃகமும் சாறும்" இஃது அஃறிணையை உளப்படுத்தல் "தன்மைச்சொல்" (கிளவி. 43) என்னும் சூத்திரத்தான் வந்தது.

கல்.

என்-எனின், உளப்பாட்டுத்தன்மைத் திரிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: முற் கூறியவற்றுள் உளப்பாட்டுத் தன்மைச்சொற்கள் எண்ணும்போது அஃறிணையையும் உளப்படுத்தித் திரிவன உள, எ-று.

[1]திரிபவை என்னுந் தொழிற்பெயர்...திரிபு என்னுந் தொழிலின்மேலது பொருணிலையாக்கித் திரிபுகள் உள என [2]எட்டன் மேலும் ஏற்றுக.

[3]இனித் திரிபவை என்னுஞ் சொல்லினைத் திரிபாகிய அவை என இரண்டாக்கி அவை என்பதுந் தங்கு...ளையாக்கியும் உரைக்க.

இனி அவை திரி...அம் ஆம் என்னும் இரண்டும் தன்னோடு முன்னின்றானை யுளப்படுக்கும். எம் ஏம் என்னும் இரண்டும் தன்னோடு படர்க்கையானை உளப்படுக்கும் உம்மொடு வரூஉம் கடதறக்கள் நான்கும் அவ்விருவரையும் உளப்படுக்கும் எனக் கொள்க.

இச்சூத்திரத்து, 'வேறுபாடுள' என்றது அல்லது இவ்வகை விளங்கக் கூறாமையின் இதனை உரையிற் கொள்ளப்படும்.

உ-ம்: யானும் நீயும் உண்டனம், யானும் நீயும் உண்டாம்; யானும் அவனும் உண்டனெம், யானும் அவனும் உண்டேம்; யானும் நீயும் உண்டும், உண்கும், வருதும்; சேறும்; யானும் அவனும் உண்கும், உண்டும், வருதும், சேறும் என ஒட்டிக் கொள்க.

வெள்.

(சேனாவரையர் உரையையே தழுவினார்)

---

1. திரிபவை—(தொழிற் பெயர்) வினையாலணையும் பெயர்.
2. எட்டு—அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும் என்பன.

1, 3 இவ்வை விளக்கமில்லை.

ஆதி.

இருபத்து மூன்றில் தன்மைப் பன்மை வினைமுற்று எண்ணுப் பொருள் பெயர்களில் உயர்திணையேயன்றி அஃறிணை கலந்தும் வருவதுண்டு.

உ-ம் : நாங்கள் போகிறோம்—தன்மைப்பன்மை

நாங்களும் அவர்களும் போகிறோம்—உயர்திணைப்பன்மை.

யானும் ஏர் மாடுகளும் முதலிற்போகிறோம்—உயர்திணை யோடு அஃறிணை கலந்தது.

இதனையே 'திரிபவையுள' என்றார். 'திரிபவையுள' என்ற தனால் பெரும்பாலும் அஃறிணை கலந்து திரியாது எனக் கருதல் வேண்டும்.

சுப்.

இச்சூத்திரத்தைத் ''தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி யென்று, எண்ணு வழி மருங்கின் விரவுதல் வரையார்'' (கிளவி. 43) என்னுஞ் சூத்திரத்தோடு சேர்த்து நோக்குமிடத்தும், முற் சூத்திரத்துள்ள 'உயர்திணை யவ்வே' என்ற சொல்லை நோக்கு மிடத்தும் சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவருங் கொண்ட பொருளே பொருந்தும் என்பது விளங்கும்.

சிவ.

இச்சூத்திரம் உளப்பாட்டுத் தன்மை பற்றியதாயினும் எண்ணியுளப்படுத்தும் பன்மையைப் பற்றியதாகும். ''அவை தாம், அம் ஆம் எம் ஏம்'' (வினை. 5) என்னும் சூத்திரம் பொதுவில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை பற்றியதாகும். அச் சூத்திரத்தில், 'உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம், உண்கும், வருதும், உண்டும், சென்றும்—யாம்' என்பன போலவே உதாரணம் காட்டப்படல் வேண்டும். இச்சூத்திரத்தில் உண்டனம் யானும் அவனும், உண்டனம் யானும் நீயும் என்பன போலக் காட்டப்படல் வேண்டும். இது எண்ணும் முறையாகும். இச்சூத்திரத்திலேயே உண்டனம் யானும் அதுவும், உண்டனம் யாமும் அவையும் என்பனவாகவும் காட்டலாம். ஏனெனின் ''தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி யென்று எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்'' (கிளவி 43) என்று அஃறிணை யையும் சேர்த்து எண்ணலாம் என்று கூறி விட்டார். அதனால் இச்சூத்திரத்தில் உயர்திணைத் தன்மையோடு அஃறிணையை

எண்ணுவது பற்றிக் கூறியதாகக் கோடல் சிறப்பின்று. எனவே சேனாவரையர் நச்சினார்க்கினியர் போல்வார் கொண்ட கருத்தினும் இளம்பூரணர் போல்வார் கொண்ட கருத்தே மிகப் பொருந்தும் என்னலாம். தெய்வச்சிலையார் யாம் இருவேம் என எண்ணிச் சொல்லுமிடத்து இருவேம் என்னும் ஓம் ஈற்றிற்குப் பதில் இருவர் என அர் ஈறும் (திரிபாக) வருவதுண்டு என்பதும், உண்டேம் என்பதற்குப் பதில்உண்டோம்எனஏம் ஈறு ஓம் ஈறாகத் திரிதல் உண்டு என்பதும் பொருந்துவனவே என்னலாம். இளம்பூரணரும் ஏம் ஈறு ஓம் ஈறாகத் திரியும் என்றார்.

யார்

207. யாஅ ரென்னும் வினாவின் கிளவி
யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே) (13)

(யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே)

ஆ. மொ: இல.

The interrogative word 'yār belongs to three genders of high class.

பி. இ. நூ:

நன். 349.
யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்

இல. 233 ,, ,, ,,

முத்து. வி. 13.
ஆண் பெண் பலரொடும் யாரெனும் மொழி வரும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உயர்திணை மூன்று பாற்கும் பொதுவாகியதோர் வினைக்குறிப்புச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: யார் என்னும் வினாவின்பாற்றாய் வருகின்ற சொல் உயர்திணை மூன்றுபாற்கும் உரித்து, எ-று.

வ-று: யார் அவன், யார் அவள், யார் அவர் என வரும். மற்றிது வினைக் குறிப்பே எனின், முன்னர்,

"அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும்" (வினை. 16) என்று உயர்திணைக் குறிப்பு ஓதும் வழியே வைக்க எனின், உயர்திணை முப்பாற்கும் தன் ஈறு திரியாது நிற்றற் சிறப்புநோக்கி ஈண்டு வைத்து உணர்த்தினார் என்பது.

சேனா.

இ-ள்: யார் என்னும் வினாப்பொருளை யுணர்த்துஞ் சொல் உயர்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்து, எ—று.

உ-ம் : அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும்.

[1]ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெங்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன்—போதெல்லாந்
தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு.

என்புழி, வண்டு தான் யார் என, யார் என்பது அஃறிணைக் கண்ணும் வந்ததால் எனின், அது திணை வழுவமைதி எனப்படும்.

இது வினைக்குறிப்பாயினும் பல்லோர் படர்க்கையுணர்த்தும் [2]ஆரீற்றின் மூன்றுபாலுணர்த்தும் வேறுபாடு உடைமையின், அவற்றோடு வையாது ஈண்டு வைத்தார்.

[3]செய்யுளின்பம் நோக்கி அளபெழுந்து நின்றது. [4]'வினாவின் கிளவி' யென அதன் பொருள் உணர்த்தியவாறு.

---

1. பொருள் : "பகற் போதெல்லாம் கச்சிவளநாடன் தாரின் தாதொடு தங்கியிருந்து அவன் சொல்லி யனுப்பும் தூதுரையொடு நம்மிடைவாராத வண்டு, ஊதைக்காற்று நம் உயிரை உண்ணுதற்குரிய பனி சொரியும் இவ் யாமத்தில் (நடுஇரவில்) வந்து நம்மிடை யுள்ள மாலையில் தேனை மிகுதியாக உண்ணுதற்குத் தான் யார் (என்ன உறவினது)
2. ஆர் ஈற்றின்—ஆர்ஈற்றைப் போல. இன்று இல் (வினை) முதலிய குறிப்பு வினைகள் பாலுணர்த்துவனவல்ல.
3. யார் என்பது யாஅர்என அளபெழுந்தது செய்யுளின்பம் நோக்கி.
4. அதன் பொருள்-யார் என்பதன் பொருள். வினாவின் கிளவி என்பதால் அது வினாப் பொருளது என்பது உணர்த்தியவாறு.

தெய்.

இது ரகர வீற்றுக்கண் வழுவமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : யார் என்னும் வினாப் பொருண்மை உணர்த்துஞ் சொல் அவ்வுயர்திணைக்கண் முப்பாற்கும் உரித்து, எ—று.

யார் என்பது காலம் காட்டாமையின் வினைச்சொல் ஆகாது எனின், வேற்றுமையேலாமையான் வினையெனப் படும். அதனானேயன்றே வினையெனப்படுவது காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளாது எனவும் ஓதல் வேண்டிற்றென்க. உ-ம்: அவன் யார், அவள் யார், அவர்யார் எனவரும்.

நச்.

இஃது உயர்திணை வினைக்குறிப்பினுள் ஒன்று கூறுகின்றது.

இ-ள்: யாஅர் என்னும்வினாவின்கிளவி அத்திணைமருங்கின் முப்பாற்கும் உரித்தே—யார் என்னும் வினாப்பொருளை யுணர்த்துஞ்சொல் உயர்திணை மருங்கின் மூன்றுபாற்கும் உரித்து, எ-று.

உ-ம்: அவன் யார், அவள் யார், அவர் யார். இது வினைக் குறிப்பாயினும், பல்லோர் படர்க்கையை உணர்த்தும் ஆர் ஈற்றால் மூன்று பாலையும் உணர்த்துதலின், அவற்றோடு வையாது ஈண்டு வைத்தார். 'உயர்திணைக்குரித்து' எனவே, அஃறிணைக்கு உரித்தன்றிச் சிறுபான்மை வருதல் கொள்க. அஃது,

உதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெங்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன்—போதெல்லாம்
தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு

என 'உண்ணிய வண்டு தான் யார்' என அஃறிணைக்கண் வந்தது.

இது திணை வழுவமைதி யென்றலும் ஒன்று.

கல்.

என்-எனின் உயர்திணைத் தெரிநிலைவினை உணர்த்தி அதன் வினைக் குறிப்பினுள் ஒன்றனை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: யார் என்று சொல்லப்படுகின்ற வினாப் பொருளை உணரநின்ற சொல் மேற்சொல்லப்பட்ட உயர்திணையிடத்து முப்பாற்கும் உரித்து, எ-று.

உ-ம்: யார் அவன், யார் அவள், யார் அவர் என வரும்.

மேல் வினைக்குறிப்புக் கூறுழிக் கூறுக எனின், ஆண்டுக் கூறுவனபோலாது இஃது ஈறு திரியாது தானொன்றே மூன்று பாற்கும் உரித்தாயினமையின் வேறுகூறினார் எனக்கொள்க.

ஆ ஓ ஆதல்

208. பாலறி மரபி னம்மூ வீற்று
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே (14)

(பால் அறி மரபின் அம்மூஈற்றும்
ஆஓ ஆகும் செய்யு ளுள்ளே)

ஆ. மொ: இல.

The 'ā' in three endings which denote genders will change into 'ō' in poetry

பி. இ. நூ:

அடுத்த சூத்திரத்திற் காண்க.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உயர்திணைப் பாற்குப் படுவதோர் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

உரை: பாலறி மரபின் அம்மூ வீற்றும் என்பன—மேல் உணர்த்திப் போந்த னஃகான் ஒற்றும் ளஃகான் ஒற்றும் ரஃகான் ஒற்றும் ஆயின அவை மூன்று ஈற்றுக்கண்ணும் நின்ற ஆகாரம் ஓகாரமாம் செய்யுளுள், எ-று.

வ-று: [1]வினவி நிற்றந்தான் என்பது வினவி நிற்றந்தோன் (அகம் 48) எனவும், ''நகூஉப் பெயர்ந்தாள்'' என்பது ''நகூஉப் பெயர்ந்தோள்'' (அகம். 248) எனவும், 'சென்றார் அன்பிலர்' என்பது ''சென்றோ ரன்பிலர்'' (அகம். 31) எனவும் வரும்.

செய்யுளுள் எங்கும் ஆ ஓவாகாது, ஆவாகக் கொள்ளாவிடத் தாயின் ஓவாகத் திரிவது, அல்லாக்கால் வேண்டா என்பது.

1. வினவி நிற்றந்தோன்—வினவி நின்றான், நகூஉப் பெயர்ந்தாள்—சிரித்துப் பெயர்ந்தாள்.

சேனா.

இ-ள் : பால் விளங்க வரும் இயல்பையுடைய அம்மூன் றீற்றின் கண்ணும் ஆகாரம் ஓகார மாகுஞ் செய்யுளிடத்து, எ-று.

'பாலறி மரபின்' என்றதனால், பாலுணர்த்துதற்கண் திரி புடைய ஆம் ஈறு விலக்குண்ணும். மார் சிறுவழக்கிற்று ஆக லானும், மகர ஆகாரம் ஓகாரம் ஆதற்கேலாமையானும் அம் மூவீறாவன ஆன் ஆள் ஆர் என்பனவே யாம்.

உ-ம்: "வினவி நிற்றந்தோனே" (அகம் 48) "நல்லைமன் என நகூஉப் பெயர்ந்தோளே" (அகம். 248) "பாசிலை, வாடா வள்ளியங் காடிறந்தோரே" (குறுந். 216) என ஆகாரம் ஓகார மாய்த் திரிந்தவாறு கண்டு கொள்க.

[1]வந்தோம், சென்றோம் என வழக்கினுள் வருவனவோ எனின், அவை ஏம் ஈற்றின் சிதைவென மறுக்க.

தெய்.

இது படர்க்கை வினைக்கண் வரும் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பால் விளங்குதலை மரபாகவுடைய னகாரம், ளகாரம், ரகாரம் ஆகிய மூவீற்றும் ஆகாரம் ஒகாரமாகித்திரியும் செய்யுளகத்து, எ-று.

உ-ம் : "வினவி நிற்றந்தோனே" (அகம் 48), "நல்லைமன் என நகூஉப் பெயர்ந்தோளே" (அகம். 248), [2]"சான்றோ ரல்லர் தோழி" என வரும். செய்யுளுள் ஆகாரமாகி வரப் பெறாதோ எனின், வழக்கிற்கு உரியன செய்யுட்கீாம் என்பது சொல்லாமற் பெறுதும் என்று கொள்க.

நச்.

இஃது அவ்விருபத்து மூன்று ஈற்றினுள் மூன்று ஈறு செய்யுளுள் திரியுமாறு கூறுகின்றது.

இ-ள்: பால் அறி மரபின் அம் மூவீற்றும்—பால் விளங்க வரும் இயல்பையுடைய ஆன் ஆள் ஆர் என்னும் மூன்று ஈற்றின் கண்ணும், ஆ ஓ ஆகும் செய்யுளுள்ளே—ஆகாரம் ஓகாரம் ஆகும் செய்யுளிடத்து, எ-று.

---

1. இதனை 12 ஆம் சூத்திரத்தில் திரிபவையுள என்பதில் கொள்வர் இளம்பூரணர்.
2. சென்றோ ரன்பிலர் தோழி — பாடம்.

உ-ம் : "வினவி நிற்றந் தோனே", (அகம் 48) "நல்லை மன்னென நகூஉப் பெயர்ந்தோளே" (அகம் 248), "வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந். 216) என வரும்.

வந்தோம், சென்றோம் என்னும் வழக்கு ஏம் ஈற்றின் சிதைவு என மறுக்க.

கல்.

என்-எனின், அவ்விருபத்து மூன்று ஈற்றுள்ளும் மூன்றற்குச் செய்யுளகத்துப் பிறப்பதோர் திரிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் : பால் அறியப்படும் மரபினையுடைய அம் மூன்று ஈற்றின் கண்ணும் ஆகாரம் ஓகாரமாம் செய்யுளிடத்து, எ-று.

அம்மூன்றாவன : மேல் ஆ ஓ வாகும் என்றமையால் ஆன் ஆள் ஆர் எனக் கொள்க.

உ-ம் : வினவி நிற்றந்தோனே" (அகம் 48) "நல்லைமன் என நகூஉப் பெயர்ந்தோளே" (அகம் 248) "சென்றோர் அன்பிலர் தோழி" (அகம். 31) என வரும்.

இம் மூன்றும் படுத்தல் ஓசையால் தொழிற்பெயராய வழி ஆ ஓ ஆதல் பெயரியலுட் கொள்ளப்படும். (பெய. 41).

ஆதி.

பாலை அறிவிக்கும் ஆன் ஆள் ஆர் என்னும் மூன்று விகுதிகளிலும் செய்யுளில் ஆ—ஓ எனத்திரியும்.

‡ நல்லான் — நல்லோன்
நல்லாள் — நல்லோள்
நல்லார் — நல்லோர்
யானை வளர்த்தானை — வளர்த்தோனை
யானை வளர்த்தாளை — வளர்த்தோளை
யானை வளர்த்தாரை — வளர்த்தோரை.

சுப்.

இச்சூத்திரத்தால் 'கொண்மார்' என்னுமிடத்து 'ஆ' 'ஓ' ஆக மாறாதோ எனின், ஆன் ஆள் ஆர் என்னுமிடத்து ன், ள், ர் முறையே ஆண்பாலையும், பெண்பாலையும் பலர்பாலையும்குறிக்

‡ செய்யுளிலிருந்து உதாரணம் தருதலே நன்று.

கின்றன என்பது, ''னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்(கிளவி. 5) ''ளஃகான் ஒற்றே மகடூஉ வறிசொல்'' (கிளவி. 6) ''ரஃகான் ஒற்றே...பலரறி சொல்லே'' (கிளவி. 7) என்ற சூத்திரங்களால் பெறப்படுதலின் பாலைக் குறிக்கும் எழுத்து ஆகாத ஆ ஓ ஆகின்றது. மார் என்பதிலுள்ள ரகர ஒற்றோ அவ்வாறு பாலைக் குறியாது, மார் என்பதே பலர் பாலைக் குறிக்கின்றது என்பது ஆங்கே ''மாரைக் கிளவியும்...பலரஅ சொல்'' என்பதனால் கூறப்பட்டமையின், அது மாறுவதின்று.

209. ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும் (15)

(ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்)

ஆ. மொ: இல.

The word which ends in 'āy' also may change as those (said above)

பி. இ. நூ:

(பெயர்) வினையிடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆஓவாகலும் செய்யுளுள் உரித்தே

இல. 376. ,, ,, ,,

முத்து, வி. 14, 15

ஆன் ஆள் ஆர் முதல் ஆஓவாகும்
ஆய்என் கிளவியும் அவற்றோரற்றே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் ஆஓவாகல் ஒப்புமை கண்டு †விரவு வினைச்சொல்ஈறு செய்யுளுள் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஆய் என்னும் சொல்லின் ஆகாரமும் ஓவாகும் செய்யுளுள், எ.று.

வ-று: ''வந்தாய் மன்ற தண்கடற் சேர்ப்ப'' என்பது ''வந்தோய் மன்ற தண்கடற்சேர்ப்ப'' (அகம். 80) எனவரும்.

சேனா.

இ-ள்: முன்னிலை யீற்றுள் ஆய் என்னும் ஈறு மேற்கூறப் பட்டனபோல ஆகாரம் ஓகாரமாம் செய்யுளுள், எ-று.

† விரவு வினைச்சொல் என்றது இருதிணைக்கும் உரிய முன்னிலை வினைச்சொல்லை.

உ-ம்: ''வந்தோய் மன்றதண்கடற் சேர்ப்ப'' (அகம். 80) எனவரும்.

கூறப்பட்ட நான்கிற்றுத் தொழிற் பெயரும் ஆகாரம் ஓகார மாதல் பெயரியலுட் (41) கொள்ளப்படும்.

ஆயென் கிளவி ஆவோவாவது பெரும்பான்மையும் உயர் திணைக்கண் வந்தவழி யென்பதறிவித்தற்கு, முன்னிலை யதிகாரத்துக் கூறாது ஈண்டுக் கூறினார். 'அவற்றொடு கொள் ளும்' என்றது அவற்றோ டொக்கும் என்றவாறு.

தெய்.

இது முன்னிலை வினைச்சொற்கு உரியதோர் திரிபு உணர்த் துதல் நுதலிற்று.

இ—ள்: ஆய் என்னும் முன்னிலை வினைச் சொல்லும் ஓகாரமாகத்திரியும், எ—று.

முன்னிலை வினை யீண்டுக் கூறிற்றிலராயினும் திரிபு ஒப்புமை நோக்கிப் பருந்து விழுக்காடு என்னும் சூத்திரக் கிடக் கையான் ஈண்டு ஓதப்பட்டது.

நச்.

இது விரவு வினையும் அம்முடிபு பெறும் என்கின்றது.

இ—ள்: ஆய் என்கிளவியும் அவற்றொடு கொள்ளும்—முன் னிலையீற்றுள் ஆய் என்னும் ஈறும் மேற்கூறப்பட்டன போல ஆகாரம் ஓகாரமாஞ் செய்யுளுள், எ—று.

உ-ம்: ''வந்தோய் மன்ற தண்கடற்சேர்ப்ப'' (அகம் 48) எனவரும்.

இவ்விரவு வினை உயர்திணைமேல் வந்தால் ஆ ஓ ஆம் என்றற்கும், ஆ ஓ ஆதல் அதிகாரப்படுதலானும் ஈண்டுக்கூறி னார். இவை தொழிற்பெயராயின் பெயரியலுள் அடங்கும். (பெய. 41)

கல்.

என்—எனின், இஃது மேலதன் முடிபு முடிதலுடையது பிறிதும் உண்டென்பதும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆய் என்னும் ஈற்றுச் சொல்லும் மேற்சொல்லப் பட்ட மூன்றீற்றினோடும் ஆகாரம் ஓகாரம் ஆதல் கொள்ளப் படும், எ-று.

உ-ம் : "வந்தோய் மன்றதெண்கடற் சேர்ப்ப" (அகம் 48) எனவரும்.

இது விரவு வினையுள் உள்ளதாகலான் ஈண்டுக் கூறியது என்னையெனின், விரவே எனினும் இவ்வாறு திரிவது உயர் திணையின்மேல் வந்ததாகலானும், ஆஓஆதல் அதிகாரப்பட்ட மையானும் எனக்கொள்க.

ஆதி.

ஆய் விகுதிச் சொற்களும் அவ்வாறே ஆ-ஓ ஆகத்திரியும். §என்முன் வந்தாய்—என்முன் வந்தோய்.

என் எதிர் நின்றாய்—என்எதிர் நின்றோய்.

குறிப்புவினை முற்று

210. அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானு
மொப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்று
மன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம் (16)

(அதுச் சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்என் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பினானும் என்று
அப்பால் காலம் குறிப்பொடு தோன்றும்;
அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடும் கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்)

ஆ. மொ: இல.

The case styled as 'athu', indicating the sense of possessions.

---

§ உதாரணம் செய்யுளிலிருந்து காட்டின் நன்றாம்.

† இதன் இறுதி மூன்று வரிகளையும் தனிச் சூத்திரமாகக் கொள்வர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர்.

The case styled an 'kaṇ' indicating the sense of place, and the words derived from the words of comparison and quality—all these—denote tense by context it. The verbs derived from 'an̲mai', 'in̲mai', 'uṇmai' 'van̲mai, and such others which are in the nature of denoting tense by context, denote tenses by context.

பி. இ. நா:

நன். 321

பொருள்முத லாறினும் தோற்றி முன்னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

முத்து.வி. 16

உண்மையின் இன்மையின் வன்மையின் அன்மையின்
வருவன காலம் குறிப்பாற் றோன்றும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறை யானே உயர்திணைக்குரிய வினைக்குறிப்புச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: அதுச்சொல் வேற்றுமை—ஆறாம் வேற்றுமை: அதன் பொருள்பல—அவற்றுள் அவ்வுடைமைப் பொருள்பற்றி உயர்திணை வினைக்குறிப்புச் சொல் பிறக்கும், எ-று.

இங்குக் கூறப்பட்ட எட்டுப் பொருண்மையும் பற்றித் தோன்றுங்கால் வினைக்குறிப்புச் சொல்லோடு தோன்றும் என்றவாறு.

வ-று: உடையன், உடையள், உடையர் எனவரும். கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் பற்றிப் பிறந்தன: நிலத்தன், நிலத்தள், நிலத்தர் என்பன.

உவமைப் பொருள் பற்றிப் பிறந்தன: பொன்னன்னன், பொன்னன்னள், பொன்னன்னர் என்பன.

பண்பு பற்றி வந்தன: கரியன், கரியள், கரியர் என்பன. அப்பாற்காலங் குறிப்பொடு தோன்றும் என்பது—அக்கூறப்பட்ட சொல் குறிப்பாய்த் தோன்றும் என்றவாறு.

அன்மை: அல்லன், அல்லள், அல்லர் என்பன.
இன்மை: இல்லன், இல்லள், இல்லர் என்பன.

உண்மை: உளன், உளள், உளர் என்பன.

வன்மை: வல்லன், வல்லள், வல்லர் என்பன.

இனிப் பிறவும் என்றதனான் நல்லன், நல்லள், நல்லர் எனவும்; தீயன், தீயள், தீயர் எனவும்; மூவாட்டையான், நாலாட்டையான், ஏழாட்டையான் என்பனவும்; பிறவும் இவ்வாறு வருவனவெல்லாம் கொள்க.

ஈண்டுக் காட்டினவெல்லாம் படர்க்கை வினைக் குறிப்புச் சொல். இனி ஈண்டு எடுத்தோத்தினானும் கூறிய பொருளைப் பற்றித் தன்மை வினைக் குறிப்புச்சொல் வருமாறு ஒட்டிக் கொள்க.

தன்மை வினைக்குறிப்புச்சொல் உடையெம், உடையேம், உடையாம் எனவரும். பிறவும் அன்ன.

சேனா.

("அதுச்சொல்...தோன்றும்")

இ-ள்: ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும், ஏழாம் வேற்றுமையது நிலப் பொருட்கண்ணும், ஒப்பின் கண்ணும், பண்பின் கண்ணும் என அப்பகுதிக் காலங் குறிப்பாற் றோன்றும், எ-று.

அப்பகுதிக் காலமாவது அப்பொருட் பகுதிபற்றி வருஞ் சொல்லகத்துக் காலமாம். அப்பகுதிக் காலம் குறிப்பாற் றோன்றும் எனவே [1]அப்பொருள்பற்றி வினைக்குறிப்பு வரும் என்றவாறாம்.

[2]உடையானது உடைமைத் தன்மையேயன்றி உடைப் பொருளும் உடைமையெனப்படுதலின், உடைமையானும் என்பதற்கு உடைப் பொருட்கண்ணும் எனவும் உரைக்க. உரைக்கவே

---

1. அப்பொருள்—உடைமை, நிலம், ஒப்பு, பண்பு என்னும் பொருள்.
2. 'சாத்தன் கச்சினன்' என்றால் சாத்தன் உடையனாய் இருக்கும் பொருள்—அதாவது உடைமைப் பொருள் கச்சு. அதனை உடையனாய் இருப்பது உடைமைத் தன்மை. அதனால் உடைமை என்பது பொருளையும், உடைமைத்தன்மையையும்குறிக்கும். இங்கு உடைமைப் பொருளைக் குறித்தது. அப்பொருட் சொல்லே முதனிலையாக இருந்து குறிப்பு வினை முற்று வடிவம்

உடைப் பொருட்கண் வருங்கால், உடைப்பொருட் சொல்லாகிய முதனிலைபற்றி வருதலும் பெறப்படும்.

[3]கருமையன் என்பது உடைமைப் பொருளாய் அடங்கலின், பண்பினானும் என்புழிக் கரியன் என இன்னன் என்பதுபட வருதலே கொள்க.

[4]வாளாது 'உடைமையானும்' என்றவழி 'அன்மையின்' என்பதுபோல அவ்வொரு வாய்பாடே பற்றி நிற்கும். 'இதனை இஃதுடைத்து' என்பதுபட வரும் எல்லாவாய்பாடுந் தழுவுதற்கு 'அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும்' என்றார். 'கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்' என்பதற்கும் ஈதொக்கும்.

[5]ஆயின் இஃது இரண்டாம் வேற்றுமைப்பொருளாம் எனின், ஆண்டு உடைமை உருபு நோக்கிய சொல்லாய் வருவதல்லது

கொள்ளும். கச்சு பொருள்; அதுவே கச்சினன் என விகுதியுடன் சேர்ந்து உருப்பெறும்.

3. கருமையன்—கருமையையுடையன் எனப் பொருள்படும். அப்போது கருமை ஒருவன் உடைமைப் பொருளாகிவிடும். கரியன் என்பது கருநிறத்தன் என 'அவன் இப்படிப் பட்டவன்' என்பதையுணர்த்தும். இங்கு கரியன் என்பதையே கொள்க.

4. உடைமையானும் என்றால் உடைமை என்னும் சொல்லானும் எனப் பொருள்பட்டு அச்சொல்லையே குறிக்கும். உடைமைப் பொருள் பலவாதலின் கச்சினன், கழலினன், பொன்னன் போலும் எல்லாச் சொற்களும் கொள்ள வேண்டி 'அதுச்சொல் வேற்றுமை' உடைமை என்றார். ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப் பொருள்கள் என்பது பொருள். அதுபோலவே நிலத்தினானும் என்றால் நிலம் என்னும் சொல்லாலும் எனப்படும். நிலப் பொருள் தரும் எல்லா இடச்சொற்களையும் தழுவுதற்கு 'கண் என் வேற்றுமை நிலத்தினானும்' என்றார்.

5. கச்சினன் என்பது கச்சையுடையவன் எனப் பொருள்படுதலின் ஐயுருபும் இருத்தலின் ஆறாவதன் உடைமை என்று மட்டும் கூறுதல் ஏன் என்பது வினா. கச்சை உடையன் என்றால் உடையன் என்பது ஐ உருபை நோக்கி நின்றது. ஆனால் ஐ உருபுக்குரிய செயப்படு பொருள் அங்கில்லை. அதனால் ஆறாவதன் உடை

இரண்டாம் வேற்றுமைப் பொருள் எனப்படாது. என்னை? அது செயப்படு பொருண்மைத்தாகலின். அதனான் உடைமை ஆறாவதன் பொருள் எனவே படும் என்பது.

உ-ம் : கச்சினன், கழலினன் எனவும்; இல்லத்தன், புறத்தன் எனவும்; பொன்னன்னன், புலிபோல்வன் எனவும்; கரியன், செய்யன் எனவும் வரும்.

[6]கச்சினன், இல்லத்தன் எனப் [7]பெயரும் குறிப்பாற் காலம் விளக்கலின்,அப்பாற்காலம் குறிப்பொடுதோன்றும் என்றதனான் வினைக்குறிப்பென்பது பெறுமாறு என்னையெனின், "தொழில் நிலையொட்டும் ஒன்றலங்கடை" (வேற். 9) எனத் தொழிற் பெயர் அல்லன காலந் தோன்றா என்றமையால், கச்சினான் இல்லத்தான் என்பன காலம் விளக்காமையின், குறிப்பாற் காலம் விளக்குவன வினைக்குறிப்பாதல் பெறுதும். அல்லதூஉம் வினைக் குறிப்பும் காலம் தோன்றுதலை இலக்கணமாகவுடைய வினைச் சொல்லேயாதலின், தெற்றென விளக்காவாயினும் காலம் உடைய எனவே படும். பெயர்க்கு அன்னதோர் இலக் கணம் இன்மையின், காலந் தெற்றென விளக்குவன வுளவேற் கொள்வதல்லது, காலம் விளக்காத பெயரும் காலம் உடைய என உய்த்துணருமாறில்லை. அதனானும் குறிப்பாற் காலம் உணர்த்துவன வினைக்குறிப்பே என்பது பெறப்படும் என்க.

மையே கொள்ளப்படும்—இக்கருத்தை நச்சினார்க் கினியர் மறுப்பர்-காண்க.

6. கச்சினன் என்பது வினையாலணையும் பெயராகவும் குறிப்பு வினை முற்றாகவும் வரும். இச்சூத்திரத்தில் குறிப்பு முற்றே காலம் குறிப்பாற் கொள்ளும் என்றது ஏன்? வினையாலணையும் பெயரைக் கூறாதது ஏன்? வினா. விடை:

வினை காலம் காட்டும் என்பது இலக்கணம்; அதனால் குறிப்பு வினை குறிப்பாற் காலம்காட்டும் எனப்பட்டது பெயர் காலம் காட்டாதுஎன்பது இலக்கணம்; அதனால் வினையாலணையும் பெயர் காலம் காட்டினும் அது பெயராதலின் நீக்கிக் குறிப்பு வினையே கொள்ளப் பட்டது.

7. பெயர்—வினையாலணையும் பெயர்.

தன்னின முடித்தல் என்பதனான் [4]ஐயாட்டையன், துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினை செய்யிடமும் பற்றி வருவனவும் கொள்க.

(''அன்மையின்..........குறிப்பே காலம்'')

இ-ள்: அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும், அவை போல்வன பிறவும், குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும் காலங் குறிப்பான் உணரப்படும், எ-று.

காலங்குறிப்பால் உணரப்படும் எனவே, இவையும் வினைக் குறிப்பாம் என்றவாறு.

உ-ம் : அல்லன், அல்லள், அல்லர் எனவும்; [1]இலன், இலள், இலர் எனவும்; உளன், உளள், உளர் எனவும்; வல்லன், வல்லள் வல்லர் எனவும் வரும்.

பொதுப்படக் கூறியவதனான் [2]பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையும் கொள்ளப்படும்.

இவை [3]ஒரு வாய்பாடே பற்றிப் பிறத்தலின் வேறு கூறினார்.

பண்போடு[4] இவற்றிடை வேற்றுமை யென்னை யெனின், இன்மை[5] பொருட்கு மறுதலையாகலின், பொருளின்கட்

4. ஐயாட்டை — ஐந்தாண்டு—காலம். துணங்கையன்— துணங்கையாடும் இடத்திலிருப்பவன்.
1. இலன் – இதில் இன்மை அன்விகுதியால்உணர்த்தப்படும் அவனையே குறிக்கும். இது உண்மைக்கு மறுதலை.
2. பொருளிலன்—இதில் இன்மை, ஒருவனைக் குறிக்காமல் பொருளைக் குறிக்கும். அதனால் இதில் உள்ள இன்மை உடைமைக்கு மறுதலை.
3. ஒருவாய்பாடே பற்றி—ஒரு சொல்லே பற்றி—அதாவது அன்மை முதலிய சொல்லே பற்றி.
4. இவற்றிடை—அன்மை இன்மை உண்மை வன்மை ஆகியவற்றிடை.
5. பொருட்கு மறுதலை — பொருட்கு மாறுபட்டது— அதாவது பொருளே இல்லாகும்போது அதில் பண்பும் இராது. எனவே இன்மை பண்பெனப் படாது.

கிடக்கும் பண்பெனப் படாது. [6]அன்மையும் உண்மையும் பண்பிற்கும் ஒத்தலிற் பண்பெனப்படா; என்னை? குணத்திற்குக் குணம் இன்மையின்.

[7]வன்மை ஆற்றல்; அதுவும் குணத்திற்கும் உண்டாகலின் குணம் எனப்படாது. [8]ஊறெனின் அது பண்பாய் அடங்கும். அதனாற் பொருட்கட் கிடந்து தனக்கோர் குணமின்றித் தொழிலின் வேறாய குணத்தின் அன்மை முதலாயின வேறெனப் படும். பண்பெனினும் குணமெனினும் ஒக்கும். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர் 'இன்மையும்'(எழுத். புண. 77) 'உண்மையும்' (எழு. குற்றி. 25)உணர்த்தும் சொற்களை [9]முடிப்பாராயிற் றென்பது.

'என்ன கிளவியும்' என்றது 'அன்னபிறவும்' எனப்பட்டவற்றையேயாகக் கொள்க. 'குறிப்பே காலம்' என்றவழிக் குறிப் பென்றது குறிக்கப்படுவதனை. 'அன்னபிறவும்' என்றதனான், நல்லன், நல்லள், நல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன்,

---

6. வெண்மையன்று, வெண்மையுண்டு என்றால் வெண்மை என்னும் பண்பு அன்மை உண்மைகளால் குறிக்கப்படுகிறது. எனவே வெண்மை எனும் பண்புக்கு மேலும் பண்பு கூறுவது தவறு. ஏன்எனின் பண்புக்குப் பண்பு இல்லையாதலின். எனவே அன்மைஉண்மைகள் குறிப்பு வினைகளாக வருமே தவிர பண்புகளாக வருதல் இல்லை.
7. 'சாத்தன் வலியன்' என்றால் வன்மை சாத்தற்குரிய தாகும். அதுபோலவே 'அறிவு வலியது' என்றால் அறிவு என்னும் பண்புக்கும் வன்மையுண்டு. பண்புக்குப் பண்பு இல்லையாதலின் வன்மை என்பதையும் குறிப்பு வினைக்கு வருவதாகக் கொள்ள வேண்டுமே தவிர இங்குப் பண்புக்கு வந்ததாகக் கொள்ளல் கூடாது.
8. ஊறு — தொடு உணர்ச்சி — பரிசம் (வடசொல்) நிலம் வலிது எனின் வன்மைநிலத்தின் குணம். அதனால் ஊறு என்பது பண்பாகும்.
9. முடிந்தவற்றை ''இல்லென் கிளவி'' (புள்ளி. 77) உண்டென் கிளவி'' (குற்றிய. 25) என்னும் எழுத்ததிகாரச் சூத்திரங்களில் காண்க. அங்கு இன்மை உண்மை எனப் பண்புச் சொற்களாக வைத்துக் கூறாமல் இல், உண்டு என வினைக் குறிப்புச் சொற்களாக் வைத்துக் கூறியதும் காண்க.

உடையள், உடையர் என இத்தொடக்கத்தன வெல்லாங் கொள்க.

தெய்.

("அதுச் சொல்...குறிப்பொடு தோன்றும்")

உயர்திணை வினைக்குறிப்பு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ஆறாம் வேற்றுமைக்கண் ஓதிய உடைமை என்னும் பொருண்மையானும், ஏழாம் வேற்றுமைக்கண் ஓதிய நிலப் பொருண்மையானும், ஒன்றோடொன்று உவமையாகி வரும் பொருண்மையானும், ஒன்றன் குணமாகிய பண்பினானும் மேற் பகுக்கப்பட்ட காலம் குறிப்பொடு தோன்றும், எ—று.

என்று என்பது எண்ணுக் குறித்து நின்றது. இதனாற் சொல்லியது இப்பொருண்மை காரணமாக வினைக் குறிப்புத் தோன்றும் என்றவாறு.

உடைமையாவது உடைமையானும் உடைப் பொருளும் தோன்றவரும். சாத்தனது உடைமை குழை என்பது. இதனுள் உடைப் பொருளை முந்துறக் கிளக்குங்கால் 'குழையையுடையன் சாத்தன்' என வரும். ஆண்டு உடையன் என்பது [1]பெயரும் இன்றி வினையுமின்றி நின்றதாயினும் உருபேலாது வினைச் சொற் போல நிற்றலின் வினைக்குறிப்பெனக் குறி பெற்றது.

[2]நிலத்தினான் வந்தது:- சாத்தன் மாடத்துக் கண் இருந் தான் என்னும் பொருட்கண் 'சாத்தன் மாடத்தன்' என வருவது. மாடத்தன் என்றவழி இடமும், உருபும், வினையும் ஒற்றுமைப் பட்டுச் சாத்தன் என்பதற்குப் பயனிலையாகி வினைச் சொல் நீர்மைப்பட்டு வருதலின் அதுவும் வினைக் குறிப்பாயிற்று.

---

1. உடையன் என்பதில் உடைமைத் தொழில் இருப்பதால் பெயர் அன்று; உடைமை ஆறாம் வேற்றுமைக்குரிய தாதலின் அது நோக்கப் பெயராதல் வேண்டும் ஆதலின் வினையும் அன்று.

2. மாடத்தன் என்பதில், மாடம் இடமும், மாடத்துக்கண் இருப்பவன் எனப் பொருள் படுதலின் கண் உருபும், இருத்தல் தொழிலும் ஆகிய மூன்றும் அடங்கிப் பிரிக்க இயலாது ஒன்றுபட்டமை காண்க.

[1]ஒப்பு என்பது இதனை ஒக்கும்இதுஎன்புழி, ஒத்தல் பெயருமன்றி வினையுமன்றி நின்றதாயினும், 'தந்தையை ஒப்பன்' என வினைச் சொற் போல நிற்றலின் அதுவும் வினைக் குறிப்பாயிற்று.

பண்பாவது 'இவற்கு நிறம் கரிது' என்புழி, கருமை என்பது அப்பொருட்குப் பண்பாதலின், அப் பண்பினை யுடையானைக் [2]கரியன் என்ப ஆகலான், அது பெயருமன்றி வினையுமன்றி வரினும், வினைச் சொற் போல நிற்றலின்,அதுவும் வினைக்குறிப் பாயிற்று. இவையெல்லாம் அவ்வப் பொருள் காரணமாக வந்த வினைச் சொல்லாயினவாறு கண்டு கொள்க.

இவற்றுள், காலம் குறிப்பொடு தோன்றலாவது, 'இவன் திருவுடையன்' என்ற வழிச் சொல்வான் குறிப்புத் தொன்று தொட்டுத் திருவுடையன் என்பதாயின் இறந்த காலம் காட்டும்; இப்பொழுது என்பதாயின் நிகழ்காலம் காட்டும்; இனி என்ப தாயின் எதிர் காலம் காட்டும். பிறவும் இவ்வாறு அறிந்து கொள்க.

(''அன்மையின்.........குறிப்பே காலம்'')

இதுவுமது.

இ-ள்: இப்பொருள் அல்ல என்னும் பொருண்மயானும், இப் பொருள் இல்லை என்னும் பொருண்மையானும், இப் பொருளுண்டு என்னும் பொருண்மையானும்,இது செய்ய வல்லன் என்னும் பொருண்மையானும் வரும் சொல்லும், அத்தன்மையன பிறவுமாகி வரும் சொல்லும் குறிப்பாற் கொள்ளப்படும் எல்லாச் சொல்லும் காலம் குறிப்பான் உணரப்படும், எ-று. இதனாற்

---

1 ஒப்பு என்பது தொழில் நிகழ்ச்சியில்லையாதலின் வினையன்று. ஒன்றன் பெயர் அன்றாதலின் பெயரன்று. ஆனால் வினை போல உம் ஈறு பெற்று வினைத் தன்மையடைந்து ஒக்கும் என வந்தது.

2. கரியன் என்பதில் கருமையை உடைத்தாயிருக்கும் தொழில் உண்மையின் வினையாகும். பெயரன்று. கருமையையுடையன் என உருபு விரிக்கும் நிலையில் இருப்பதால் பெயராகும்; வினையன்று. எனினும் வினைக்குரிய அன் ஈறு பெற்று குறிப்பாகத் திணைபால் உணர்த்தலின் வினையின் பாற்பட்டுக் குறிப்பு வினை யெனப்படும்.

சொல்லியது இவை காரணமாகப் பிறந்த சொல்லும் குறிப்பு வினையாம், எ-று.

உ-ம்: அல்லன், இல்லன், உளன், வல்லன் என வரும். அன்ன பிறவாற் கொள்ளப்படுவன இதன் எதிர்மறை வாய்பாட்டான் வரும். [3]அவன் வல்லான் எனக் கொள்க. பிறவும் அன்ன.

'குறிப்பொடு கொள்ளும் என்ன கிளவியும்' என்று ஓதிய வதனாற் காலம் குறித்தலே யன்றி ஈண்டு ஓதப்பட்ட பொருண்மை புலப்பட நில்லாது குறித்துக் கொள்ள நிற்கும் சொல்லும் வினைக் குறிப்பாம் என்றவாறு. சாத்தன் குழையை யுடையன் எனக் கூறற்பாலது 'சாத்தன் குழையன்' என்றவழிக் குழையாகிய பொருளும், உருபும், உடைமை என்னும் சொல்லும் ஒற்றுமைப்பட்டுக் குழையன் என ஒரு சொல்லாகி வருதலின், அதுவும் வினைக் குறிப்பாம் என்று கொள்க. குழலன், கோட்டன் என்பனவும் அவை.

அஃதேல் இவை வேற்றுமைத் தொகையாகாவோ வெனின், அது உருபு தொக வருதலும், பொருள் தொக வருதலும் என இருவகைத்து. அவற்றுள் உருபு தொகவரின் 'குழை உடையன்' எனல் வேண்டும். பொருள் தொக வரின், 'குழைச் சாத்தன்' எனல் வேண்டும். அவ்விருவாற்றானும் அன்றிக் 'குழையன்' என வினைச் சொல் நீர்மைப்பட்டு வருதலின் வினைக் குறிப்பாயிற்று.

இன்னும் 'குறிப்பொடு கொள்ளும் என்ன கிளவியும்' என்ற தனாற் பைங்கண்ணன், புன்மயிரன் எனப் பண்பினாகிய சினை முதற்கிளவி இரு திணைக்கும் பொதுவாகி வரும் வினைக் குறிப்பும் கொள்ளப்படும்.

நச்.

இது நிறுத்த முறையானே உயர்திணை வினைக் குறிப்பு உணர்த்துகின்றது.

இ-ள்: அதுச் சொல் வேற்றுமை உடைமையானும்—ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும், கண் என் வேற்றுமை நிலத்தினானும்—ஏழாம் வேற்றுமையது நிலப் பொருண்மைக் கண்ணும், ஒப்பினானும்—உவமத்தின் கண்ணும்,

3. அவன் வல்லான் — அவன் வன்மையாகச் செய்ய மாட்டான்.

பண்பினானும் — பண்பின் கண்ணும், என்று அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும் என அப் பொருட் பகுதி பற்றி வரும் சொல்லகத்துக் காலம் குறிப்பால் தோன்றும், எ-று.

உடைமை என்பது உடைமைத் தன்மையும் உடைமைப் பொருளும் என இருவகைப்படும். உடைமைத் தன்மையாவது, தன் செல்வத்தை நினைந்து இன்புறுவதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். அஃது ''ஆங்கவை ஒருபாலாக'' (மெய்ப். 12) என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்து 'உடைமை இன்புறல்' என்பதனான் உணர்க. உடைமைப் பொருளாவது ஒன்றற்கு ஒன்றை உரிமை செய்து நிற்பது. அஃது 'இப்பொருளினுடையது இப்பொருள்' என்றும், இப்பொருள் இப் பொருளினுடையதா யிருந்தது' என்றும், 'இப் பொருளையுடையதாயிருந்தது இப் பொருள்' என்றும் மூன்று வகைப்படும். அவை முறையே சாத்தனது ஆடை என ஆறன் உருபாயும், ''ஆடை சாத்தனது' எனவும் 'குழையன், கச்சினை எனவும் வினைக் குறிப்பாயும் நிற்கும். உருபு உணர்த்தும் வழி ஆடை முதலியன பின் நிற்கு மாறும், குறிப்பு உணர்த்தும் வழி ஆடை முதலியன முன் நிற்குமாறும் உணர்க. 'குழையன்' என்புழி, மேல் வந்து முடிக் கும் வினை முதற் பெயரைத் தோற்றுவித்து நிற்கும் 'அன்' என்னும் பால் காட்டும் ஈறு நின்று, உடைமைப் பொருளைத் தனக்கு உரிமை செய்யும் உடைமையை விரித்து நிற்கும் என்றுணர்க.

இனி, இல்லத்தன், புறத்தன் என்பனவும்; பொன்னன்னன், புலிபோல்வன் எனவும்; கரியன், செய்யன் எனவும் வரும். கரியன் என்பது 'இவ்வண்ணமாய் இருப்பான்' என்னும் பொருள் உணர்த்தி [1] முதனிலையாய் நிற்றலின் பண்பாம். 'கருமையன்' என்பது பண்புப்பெயர் உடைமைப் பொருளாய் நின்று 'கருமை யையுடையன்' என உருபேற்று நிற்றலின் உடைமைப் பொரு ளாம். இவ்வாறன் உடைமைப் பொருட்கு இரண்டாவது விரியு மாறு என்னையெனின், 'வனைந்தான்' என்னுந் தெரிநிலை முற்றுச்சொல் 'செய்தான்' என்னும் காரியத்தினை நிகழ்த்தும்

---

1. கரியன் என்பதில் கருமை என்பது முதனிலை—இது பண்பு. கருமையன் என்பதில் கருமை+அன் எனப் பிரிக்கப்பட்டுக் கருமையையுடையன் என விரிந்து, உடைமை என்றது எதனை என்பதற்குக் 'கருமை என்பது' என வருதலின் கருமை, உடைமைப் பொருளா யிற்று.

காரணங்கள் [2]எட்டினையும் உள்ளடக்கி வினை முதலோடு அமைந்து மாறி நின்று அவாய்நிலை தோன்றிய காலத்துச்செயப் படுபொருள் முதலிய ஏழினையும் விரித்து நிற்குமாறு போல, 'உடையன்' என்னும் வினைக்குறிப்பு முற்றுச் சொல்லும், 'உடை யனாய் இருந்தான்' எனவிரிந்துழி உரைப்படும் காரியத்தினை நிகழ்த்தும் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கி வினைமுத லோடும் அமைந்து மாறி நின்று அவாய் நிலை தோன்றிய காலத்துச் செயப்படு பொருள் முதலிய ஏழினையும் விரித்து நிற்கும் ஆகலான் 'உடையன்' என்பதனுள் அடங்கி நின்ற செயப் படு பொருள் 'குழையை' என உருபை விரித்தல் அதற்கு இயல்பு என்று உணர்க. இத்தெரிநிலையும் குறிப்பும் இங்ஙனம் உருபை விரித்து நிற்றலின் அன்றே ஆசிரியர்,

> ''ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
> அவ்விரு முதலிற் றோன்றும் அதுவே'' (வேற். 10)

என்றது.

தெரிநிலை வினைத் தொழிற்பெயர் காலந்தோன்றி நின் றாற் போலக் 'கச்சினான், இல்லத்தான்' என்றாற்போலும் குறிப்புப் பெயரும் காலம் தோன்றி நிற்கும் என்றுணர்க.

[1]'தன்னினம் முடித்தல்' என்பதனால், ஐயாட்டையான், துணங்கையான் எனச்சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும் பற்றி வருவனவும் கொள்க.

ஒப்பினானும் என்பதற்கு உதாரணமாகிய 'பொன்னன் னான்' என்பது, ஒப்புமைக் குணப் பண்பாதலின், வினைக்குறிப் பிற்கும் குணப்பண்பிற்கும் உரியவாக மேற்கூறுகின்ற 'வன்மை' முதலியவற்றோடு வைக்க எனின், இக்குணம் உவமைக்கும் உவ மிக்கும் பொருட்கும் ஒப்ப நிற்றலின் ஈண்டு வைத்தார், அவற் றின் வேறு என்று கருதி.

(''அன்மையின்......குறிப்பே காலம்'')
இதுவும் அது.

---

2. எட்டாவன: வினை, செய்வது, செயப்படு பொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு, இது பயன் என்பன. (வேற். மய. 29)
1. ஐயாண்டு காலத்தான், துணங்கையாடும் இடத்தான்

இ—ள் : அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்—அன்மை இன்மை உண்மை வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும், அன்னபிறவும் குறிப்பொடு கொள்ளும் என்ன கிளவியும்—அவைபோல்வன பிறவுமாய்க் குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும், காலம் குறிப்பு—காலங் குறிப்பான் உணரப்படும் சொல்லாம், எ-று.

பண்பாவது, ஒரு பொருள் தோன்றுங் காலத்து உடன் தோன்றி அது கெடுந்துணையும் நிற்பது. குறிப்பாவது பொருட்குப் பின் தோன்றிச் சிறிது பொழுது நிகழ்வது. அன்மையாவது 'எப்பொருளும் அல்லன் இறைவன்' என்றால் பண்பையுணர்த்தியும் 'அவைதாம் சிவன் அல்லன்' என்றால் குறிப்பையுணர்த்தியும் நிற்கும். இதற்கு உடன்பாடு ஆவன் என்பதாம்.

இனி, உண்மைக்கு இன்மை மறை என்று உணர்க. உண்மைதான் மூவகைய. அவை, 'ஆவுண்டு' என உண்மையை யுணர்த்தியும், 'எவ்வுயிர்க் கண்ணும் இறைவன் உளன்' எனப் பண்பையுணர்த்தியும், 'மாற்றருந்துப்பின் மாற்றோர் பாசறையுளன்' எனக்குறிப்பை யுணர்த்தியும் நிற்கும்.

இன்மையாவது 'பொய்யா நெஞ்சில் புனிதன் இலன்' எனப் பண்பையுணர்த்தியும், 'மாற்றோர்பாசறைஇலன்' எனக்குறிப்பையுணர்த்தியும் நிற்கும். இவ்வின்மைதான், 'குழையிலன்' கச்சு இலன்' என உடைமைக்கு மறையாயும் நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்கால் 'குழையையுடையன் அல்லன்' (குச்சையுடையன் அல்லன்) என அன்மை வருமாறும் உணர்க.

[1]வன்மை என்றது வலியும் ஒன்றனை வல்லுதலுமாம். அது 'மெய்வலியும்' எனப் பன்மையுணர்த்தியும், 'சொல்வல்லன்' எனக் குறிப்பையுணர்த்தியும் நிற்கும். இதற்கு மறை, 'வல்லள் அல்லன்' என்பதாம். அல்லள், அல்லர், இல்லள், இல்லர், உளள், உளர், வல்லள், வல்லர் என ஒட்டுக. இவ்வன்மை முதலிய நான்கினது பண்பையும் குறிப்பையும் ஈண்டும் கொள்க.

'அன்ன பிறவும்' என்றதனால் நல்லன், நல்லள், நல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன், உடையள், உடையர் என்னுந் தொடக்கத்தனவும் கொள்க.

---

1. வல்லுதல்—ஆற்றலுடைமையாதல்.

[2]இவ்விரண்டு சூத்திரத்தாற் கூறியவற்றை 'அம் ஆம்' என்பன முதலியவற்றுள் ஏற்பனவற்றோடு படுத்து ஒட்டிக் கொள்ளுமாறு மேற் கூறுப.

கல்.

என்-எனின், நிறுத்த முறையானே உயர்திணைத் தெரிநிலை வினை உணர்த்தி அதன் குறிப்புவினை உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது.

இ-ள்: **ஆ**றாம் வேற்றுமையது உடைமைப் பொருட் பெயர்க் கண்ணும், ஏழாம் வேற்றுமையது நிலப் பொருட் பெயர்க் கண்ணும், உவமைப் பொருட் பெயர்க்கண்ணும், கருமை முதலிய நிறப்பண்புப் பெயர்க்கண்ணும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு கூற்றுப் பெயர்க்கண்ணும் வருகின்ற வினைச்சொல் வினைக் குறிப்பாய்த் தோன்றும், அவையேயன்றி, அன்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், இன்மையென்னும் பண்புப் பெயரடியாக வருவதும் உண்மையென்னும் பண்புப் பெயரடி யாக வருவதும், வன்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், அத்தன்மையினையுடைய பிற பண்புப் பெயர்களும் பிற பெயர்களும் அடியாக வருவனவுமாய் உள்ளதைக் குறித்துக் கொள்ளப்படும் எல்லாச் சொல்லும் குறிப்பு வினைச்சொல்லாம், எ-று.

அப்பால் காலம் என்பது ஆகுபெயரால்காலமுடைய வினைச் சொல்லினைக் குறிப்பாய்த் தோற்றும் என்பான், 'குறிப்பொடு தோன்றும்' என்றாராகக் கொள்க.

இனி, அக்கூற்று காலங் குறித்துக் கொள்ளப்படும் எனக் காலந்தன்மேலதாயும்படும்.

'குறிப்பே காலம்' என்றது முன் குறிப்பொடு தோன்றும் என்ற காரணத்தால் அச்சொற்கட்குக் குறிப்புவினையெனப் பெயரிட்டவாறாகக் கொள்க.

ஈண்டுங் காலம் என்றது ஆகுபெயரான் வினை வினைக் குறிப்பு என்பதனோடும் குறிப்பு வினை என்பதனோடும் வேற்றுமையில்லை யெனவுண்ர்க.

---

2. உடையம், உடையாம், உடையெம், உடையேம், அல்லம், அல்லாம், அல்லெம், அல்லேம் முதலியவாக ஈறு (விகுதி) சேர்த்துக் கூறிக்கொள்ளல். மேல் என்றது அடுத்து வரும் சூத்திரத்தை.

இதனாற் சொல்லியது ஒரு பொருட்கு உடைமையாகிய உடைமைப்பெயரும், ஒரு பொருள் நிகழ்தற்கு இடமாகிய் இடப் பெயரும், ஒரு பொருளது குணமாகிய ஒப்புமைப் பண்பும் நிறப் பண்பும் குணப்பண்புமாகிய பண்புப் பெயரும், இன்னும் ஒரு பொருள் நிகழ்வதற்கு இடமாகிய காலப்பெயரும்,ஒரு பொருளது புடை பெயர்ச்சியாகிய தொழிற்பெயரும், ஒரு பொருளது உறுப் பாகிய சினைப் பெயரும் என இவ்வறுவகைப் பெயரும் அடியாக இவற்றொடு பாலும் காலமும் காலங்காட்டும் இடைச் சொற் களைக் கூட்டக் காலமும் குறித்துக் கொள்ளும் நீர்மையாய் வருவன எல்லாம் வினைக் குறிப்பு என்பான் பெரும்பான்மையன வற்றை எடுத்தோதி அல்லனவற்றை 'அன்ன பிறவும்' என்றத னாற் கொள்க என்றான் எனவுணர்க.

ஒப்புமைப் பண்பு குணப்பண்பினுள் அடங்காதோ எனின் அஃது ஒரு பொருட்கண்ணே கிடப்பதன்றி [1]அவ்விருபாற்பொருட் கண்ணும் கிடத்தலின் வேறு ஆயிற்றுப் போலும்.

பண்பு என ஒன்றாக ஓதியதனை ஒப்புமைப் பண்பு, நிறப் பண்பு, குணப் பண்பு எனப் பிரிக்கின்றது என்னை யெனின், நிறப்பண்பு கட்புலம், மற்றையன் [2]பிறபுலம் என்பது கருதிப் போலும்.

குணப்பண்பு என ஒன்றாக ஓதாது அன்மை இன்மை எனப் பிரித்தோதியது என்னையெனின், இவை ஒரு பொருட்குப் பெயர் ஆகி நின்றுழி, நன்மை தீமை என்பனவற்றோடு வேறு பாடுடைய என்றதனால் இவற்றின்மேல் வரவு பெரும் பான்மை என்றாதல் பிறவாதல் கருதிப் போலும்.

உடைமை என்றும் நலம் என்றும் ஓதாது வேற்றுமைப் பொருள்களை எடுத்து ஓதியது என்னையெனின், அப்பெயரடி யாக வினைக்குறிப்பு வந்தவழி அவ்வேற்றுமைப்பொருளுணர்ச்சி உண்டு என்பது கருதிப் போலும்.

...கலத்தோன் எனப் பொருள்பற்றி வந்த தெரிநிலை வினை, யுடையவன் என இரண்டாவதன் பொருண்மையன்றோ எனின், அன்று. சொல் முடிந்து நின்றவழி உணர்ச்சி அவ்வாறாயினும் உடைமைக்கு அடியாயுள்ளது ஆறாவது என்பதுகருதிப் போலும்.

---

1. இருபொருள் : உவமைப் பொருளும் பொருட் பொருளும்.
2. பிறபுலம் — செவிப்புலம், மனப்புலம் முதலியன.

அறுவகைப் பெயராவன பண்புப்பெயர், இடப்பெயர், காலப்பெயர், தொழிற்பெயர், சினைப்பெயர், உடைமைப்பெயர் என இவை.

இவற்றிற்கெல்லாம் உதாரணம் இதன் ஈறு கூறுகின்ற [3]மேலைச் சூத்திரத்துள் காட்டுதும்.

தே. ஆண்டியப்பன்

அதுச் சொல் வேற்றுமை யுடைமை

ஆறாம் வேற்றுமைக் கண் ஓதிய உடைமை என்னும் பொருளில் வரும் (உ-ம்) அவன் குழையன், குழையையுடையவன் என்னும் பொருளில் வந்த குறிப்பு வினைமுற்று என்பர். பெயரும் உடைப் பொருளில் உருவாகும்... இங்கு குழையன் என்பதைப் பெயர்ப் பயனிலையாக எண்ணலாமே என்ற வினா எழுகிறது. குழையையுடையவன் என்று பொருள் விரிக்கும் போது இரண்டாம் வேற்றுமையல்லவா உருவாகிறது. தெய்வச்சிலையார் ஆறாம் வேற்றுமைப் பொருள் 'மொழி மாற்றாகி (By transformation) வருவனவும் கொள்க' என்பதால் விடைகூறமுயல்கிறார். எனினும் அதுச் சொல் வேற்றுமையுடைமை யென்பதால் 'இது எனது', 'இது நமது' போன்ற வடிவங்களைக் கொள்ளலாம்.

கண்ணென் வேற்றுமை நிலம்.

ஏழாம் வேற்றுமைக்கண் ஓதிய நிலம் என்னும் பொருளில் வரும் (எ-டு) சாத்தன் மாடத்தன் சாத்தன் மாடத்தின்கண் இருந்தான் என்னும் பொருளில் குறிப்பு வினை முற்றாகும். இதனையும் நிலம் என்னும் அடிப்படையில் பிறந்த பெயராகக் கருதலாமே? அப்போது பெயர்ப்பயனிலையாகுமே? என்ற வினா மீண்டும் எழுகிறது. 'துஞ்சுங்கால் தோள் மேலராகி போன்ற வடிவங்களை நினைத்தும் பார்க்கலாம். 'காணார் கொல் இவ் வூரவர்' (காப்பியர் நெறி. சொல்லியல் பக். 84).

211. **பன்மையு மொருமையும் பாலறி வந்த**
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே (17)

(பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வருஉம்

---

3. அடுத்து வரும் சூத்திரத்துள்.

காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே)

ஆ.மொ:இல.

The appellative verbs, denoting singular and pularal in high class, are not different from the words adove cited

பி.இ.நூ:

நேமி. சொ. 46

நெடியன் உடையன் நிலத்தன் இளைஞன்
கடியன் மகத்தன் கரியன்—தொடியனென்
ஒண்ணுதலாய் மற்றையவும் எண்ணி உயர்திணையில்
நண்ணும் வினைக்குறிப்பு நாட்டு.

முத்து. வி. 17

பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
குறிப்புப் பொருண்மையைக் கொடுவரு வினைச்சொல்
மேல்வரும் உயர்திணை மருங்கிற் கூறிய
தெரிநிலை வினையொடு சிவணும் என்ப.

இளம்.

உரை : பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் ஆகிய பெண் ஆண் என்று வேறுபாடு தோன்றவந்த வினைக் குறிப்புச் சொற்கள் எல்லாம் மேற்சொல்லிப் போந்த *இருபத்து மூன்று வினைச் சொற்கு ஈறாய எழுத்துக்களிலுள்ளனவே தமக்கும் 'ஈறாவன, பிறிதில்லை, எ-று.

அன்ன மரபின் என்றதனான், ஈண்டு உயர்திணைக்கு ஓதிய பொருள்பற்றி அஃறிணை வினைக் குறிப்பும் தோன்றும் என்று கொள்க.

வ-று: [1] வடாது வேங்கடம் தெனாது குமரி' என்பழி வடாது தெனாது என்பன; இது வினைக்குறிப்புப் பெயர். பிறவும் அன்ன.

---

* இருபத்து மூன்று ஈறுகள் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப மார் அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும் கு டு து று என் ஏன் அல் என்பன.

1. வடாஅது—வடக்குப் பக்கத்தது—குறிப்பு வினையாலணையும் பெயர். வடாது ஆகிய வேங்கடம் என்க.

சேனா.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால்விளக்கிக் குறிப்புப் பொருண்மைவுடையவாய் வரும் வினைச்சொல், மேல்வரும் உயர்திணைக்கட் கூறிய தெரிநிலை வினையோடொக்கும், எ-று.

தெரிநிலைவினையோ டொத்தலாவது, உயர்திணைத் தெரிநிலை வினைக்கோதிய ஈற்றுள் தமக்கேற்பனவற்றோடு வினைக்குறிப்பு வந்தவழி அவ்வவ்வற்றான் அவ்வப்பாலும் இடமும் விளக்கலாம்.

மேல் (வினை. 16) வினைக்குறிப்பு [2]இன்ன பொருள் பற்றி வரும் என்றதல்லது இன்னவீற்றான் இன்னபால் விளக்கும் என்றிலர்; அதனான் அஃதீண்டுக் கூறினார்.

கூறப்பட்ட பொருட்கண் வந்தனவாயினும் இல்லை, இல் இன்றி என்பன பால்விளக்காமையின் அவற்றை நீக்குதற்குப் 'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த' என்றார். [3]ஒரு பொருட் கண் பலவாய்பாடும் ஒரு பொருட்கண் ஒரு வாய்பாடும் பற்றி வரும் இருதிறமும் எஞ்சாமல் தழுவுதற்கு 'அன்னமரபின்' என்றார்.

தன்மையும் படர்க்கையும் உணர்த்துந் தெரிநிலை வினை யீற்றுள் குறிப்புவினைக் கேற்பன அம் ஆம் எம் ஏம் என் ஏன் என்னுந் தன்மையீறு ஆறும், அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என் னும் படர்க்கையீறு ஆறும் எனப் பன்னிரண்டாம்.

உ—ம்: கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன் எனவும்; கரியன் கரியான் கரியள், கரியாள், கரியர், கரியார் எனவும் அவ்வவ்வீறு அவ்வவ்விடமும் பாலும் விளக்கிய வாறு கண்டு கொள்க. ஒழிந்த பொருட்கண்ணும் ஒட்டிக் கொள்க.

ஆன் ஆள் ஆர் என்பன நிலப் பொருண்மைக்கண் அல்லது பிற பொருட்கண் பயின்று வாரா.

---

2. அதுச்சொல் வேற்றுமையுடைமை முதலியவும் அன்மை முதலியவும் பற்றிவரும் என்றதல்லது.

3. ஒரு பொருட்கண் பல வாய்பாடு—அதுச்சொல் வேற்றுமையுடைமை முதலிய பற்றி வருவன. ஒரு பொருட்கண் ஒரு வாய்பாடு—அன்மை முதலிய சொற் பற்றி வருவன.

இன்னும் 'மேலைக்கிளவியொடுவேறுபாடில, என்றதனான், 'வந்தனன்' எனத் தெரிநிலை வினை தொழின்மை [1]மேற்படத் தொழிலுடைப் பொருள் கீழ்ப்படமுற்றாய் நின்றுணர்த்தியவாறு போல, உடையன் எனக் குறிப்பு வினையும் உடைமை மேற்பட உடையான் கீழ்ப்பட முற்றாய் நின்று உணர்த்துதலும் கொள்க. வந்தான், உடையான் எனப் பெயராய வழித் தொழிலுடைப் பொருளும் உடையானும் மேற்பட்டுத் தோன்றுமாறறிக. இஃது 'அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடிலவே'' (வினை. 24) என்பதற்கும் ஒக்கும்.

தெய்.

குறிப்பு வினைச் சொற்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பன்மையும் ஒருமையுமாகிப் பால் விளங்க வந்தன வாகிய மேற் சொல்லப்பட்ட மரபினவாகிக் குறிப்பொடு வரூஉம் காலத்தையுடைய சொல் உயர்திணை மருங்கின் மேற் சொல்லப்பட்ட சொல்லோடு வேறுபாடில, எ-று.

இவ்வாறு மாட்டெறிந்ததனான் ஆண்டு ஓதியஈறே வினைக் குறிப்பிற்கும் ஈறு என்றவாறாம். ஏற்புழிக் கோடல் என்பதனான் ஈண்டு ஏற்பன கொள்ளப்படும்.

உ-ம் : உடையம், உடையாம், உடையெம், உடையேம், இவை உளப்பாட்டுத்தன்மை. உடையன், உடையேன் இவை தனித்தன்மை. உடையன், உடையான், உடையள், உடையாள் உடையர், உடையார், உடையோன், உடையோள், உடையோர் இவை படர்க்கை. ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. பிறவற்றினும் ஏற்பன வந்தவழிக் கண்டு கொள்க.

நச்.

முற்கூறிய வினைக் குறிப்பிற்கு ஈறாமாறு கூறுகின்றது.

இ-ள் : பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த—பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த, அன்ன மரபிற் குறிப் பொடுவரூஉம் காலக்கிளவி-அத்தன்மைத்தாகியமுறைமையினை

---

1. மேற்படல்—பொருள் சிறத்தல். கீழ்ப்படல்—பொருள் சிறவாமை. வினை முற்றில் பகுதி சிறக்கும்; வினையாலணையும் பெயரில் விகுதி சிறக்கும்.

யுடைய காலங் குறித்துக் கோடலோடு வரூஉம் வினைச் சொற்கள், உயர்திணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இல—உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடின்றித் தமக்கு ஏற்பனவற்றைக் கொள்ளும், எ-று.

அவை ; அம் ஆம் எம் ஏம் என் ஏன் என்னுந் தன்மையீறு ஆறும், அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என்னும் படர்க்கையீறு ஆறுமாம்.

உ-ம் : கரியம், கரியாம், கரியெம், கரியேம்; கரியன், கரியேன் எனவும்; கரியன், கரியான்; கரியள், கரியாள், கரியர், கரியார் எனவும் வரும். உடையம், நிலத்தம், பொன்னன்னம், அல்லம் என ஒழிந்தவற்றோடும் ஒட்டுக.

கல்.

என்-எனின், மேற்கூறியவினை வினைகுறிப்பிற்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த அத்தன்மைத்தான மரபினையுடைய காலங் குறித்துக் கோடலோடு வரும் வினைச் சொற்கள் உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையீறுகளோடு ஈறு வேறுபாடு இல, எ-று.

என்றது இவற்றிற்கென ஈறு வேறில்லை; மேற்கூறிய இருபத்து மூன்று ஈறுமே இவற்றிற்கும் ஈறு ஆவது என்றவாறு.

இருபத்து மூன்று ஈறாதல் சென்றதேனும் இது பொழுது காண்கின்றது உளப்பாட்டுத் தன்மையுள் அம்முதலிய நான்கும், அத்தன்மையுள் என் ஏன் என்னும் இரண்டும், படர்க்கையுள் அன் முதலிய ஒருமை நான்கும், அர் ஆர் என்னும் பன்மையிரண்டும். அல்லனவும் உளவேற் கொள்க.

உ-ம் : உடையம், உடையாம்; உடையெம், உடையேம்; உடையென், உடையேன்; உடையன், உடையான்; உடையள், உடையாள்; உடையர், உடையார் என அதுச்சொல் வேற்றுமை உடைமை வந்தவாறு.

இவற்றுள் ரகாரம் முதலாகிய ஈறுகள் பெயர் நோக்கு ஒழிய வினை நோக்கு உள்வழிக் கொள்க.

இனிப் பொருளுடையன், பொருளுடையான், வில்லுடையன், வில்லுடையான் என்றாற்போல இரு சொல்லாய் வாராது,

பொருளன், வில்லன் என்றாற்போல ஒருசொல்லாய் வருதலும், அது, பல பொருளன், வல்வில்லன் என்றாற் போல்வன அடையடுத்து வருதலும் கொள்க.

நிலத்தம், நிலத்தாம்; நிலத்தெம், நிலத்தேம்; நிலத்தினென், நிலத்தினேன்; நிலத்தன், நிலத்தான், நிலத்தள், நிலத்தாள், நிலத்தர், நிலத்தார், எனக் கண் என்னும்வேற்றுமை வந்தவாறு. இவற்றின் விகற்பமும் அறிக.

பொன்னன்னம், பொன்னன்னாம், பொன்னன்னெம், பொன்னன்னேம், பொன்னன்னென், பொன்னன்னேன், பொன்னன்னன், பொன்னன்னான், பொன்னன்னள், பொன்னன்னாள், பொன்னன்னர், பொன்னன்னார் என இவை ஒப்பு வந்தவாறு. இவற்றின் விகற்பமும் அறிக.

கரியம், கரியாம்; கரியெம், கரியேம்; கரியென், கரியேன்; கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார் என இவை பண்பு வந்தவாறு. இவை ஒழியச் செம்மை முதலிய பண்பொடும் இவ்வாறு ஒட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

அல்லம், அல்லாம், அல்லெம், அல்லேம்; அல்லென், அல்லேன்; அல்லன், அல்லான், அல்லள், அல்லாள், அல்லர், அல்லார் என இவை அன்மை வந்தவாறு. இன்மை முதலியனவும் இவ்வா றொட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

வன்மை என்பதனை இரட்டுற மொழிதலாகக் கொண்டு [1]வன்மையும் வலிமையும் ஆக்கி வல்லம், வலியம் என இருவாற்றானும் ஒட்டுக. நல்லம், தீயம், சேயம், அணியம் எனப் பிறபண்பொடும் எல்லாவீற்றையும் ஒட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

ஓராட்டையம், ஒருதிங்களம், ஒருநாளம் என எல்லாக் காலத்தோடும் எல்லா ஈற்றோடும் ஒட்டுக.[2] ஊணம், தீனம், செலவினம், வரவினம் என எல்லாவற்றோடும் எல்லா ஈற்றோடும் ஒட்டுக. முடவன், குருடன், செவிடன் என எல்லாச் சினையோடும் எல்லாவீற்றோடும் ஒட்டுக. இவற்றின் வாய்பாட்டு விகற்பமும் அறிக.

---

1. வன்மை — ஆற்றல். வல்லம் — ஆற்றலுடையேம். வலியம்—வலிமையுடையம்.
2. ஊணம்—உண்ணுதலுடையம்; தீனம்—தின்னுதலுடையம்.

உடைமைப் பெயரும் பண்புப் பெயரும் காலப் பெயரும் தொழிற்பெயரும் சினைப் பெயரும் வந்தவாறு.

அஃறிணைப் பன்மை வினைமுற்று

212. அ ஆ வவென வருஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை (18)

(அ ஆ வ என வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை)

ஆ. மொ: இல.
The three words which end in 'a' 'ā' and 'Va' belong to neutral plural

பி. இ. நூ:

நேமி. சொ. 41
சொன்ன அஆ.........அஃறிணையின்
பன்மை...........படர்க்கையாம்

நன். 329
அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.

இல. 234
அ ஆ ஈற்ற பலவின் படர்க்கையும்

முத்து. வி. 18
அ ஆ வகர இறுதிக் கிளவி
அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சொல்லே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அஃறிணைப் பாற்கு உரிய வினைச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

அ—உண்டன, உண்ணா நின்றன, உண்பன என வரும்.

ஆ—உண்ணா, தின்னா என வரும்.

வ—உண்குவ, தின்குவ என வரும்.

வருஉம் இறுதி அப்பால் மூன்று என்பது—இறுதி இயை புடைய அப்பான் முன்று என்றவாறு.

இவை மூன்றுமே அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினைச் சொற்கு ஈறாம் எழுத்துகள், என்றவாறு.

சேனா.

உயர்திணை வினை யுணர்த்தி இனி அஃறிணை வினை உணர்த்துகின்றார்.

இ-ள் : அகரமும், ஆகாரமும் வகர உயிர் மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்றும் அஃறிணைப் பன்மைப் படர்க்கையாம், எ-று.

அகரம் மூன்று காலமும் பற்றி வரும். ஆகாரம் எதிர்மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும் எதிர்காலத்துப் பயின்று வரும். அகரம் இறந்த காலம் பற்றி வருங்கால், க ட த ற வென்னும் நான்கண்முன் அன் பெற்றும் பெறாதும் வரும். ஏனையெழுத்தின் முன் ஙகார ழகாரம் ஒழித்து இன் பெற்று வரும். யகாரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி அன் பெற்றும் பெறாதும் வரும். நிகழ்காலத்தின்கண் நில், கின்று என்பனவற்றோடு அன் பெற்றும் பெறாதும் வரும். எதிர் காலத்தின்கண் யகர வகரத்தோடு அன் பெற்றும் பெறாதும் வரும்.

உ-ம்: தொக்கன், தொக்க; உண்டன, உண்ட ; வந்தன, வந்த ; சென்றன, சென்ற எனவும்: அஞ்சின எனவும் : போயின போயன, போய எனவும் ; உண்ணா நின்றன, உண்ணா நின்ற, உண்கின்றன, உண்கின்ற எனவும் ; உண்பன; உண்ப, வருவன, வருவ எனவும் வரும். உரிஞுவன, உரிஞுவ என உகரத்தோடு ஏனை எழுத்துப் பேறும் ஏற்றவழிக் கொள்க.

[1]வருவ, செல்வ என்னுந் தொடக்கத்தன அகர வீறாதலும் வகர வீறாதலுமுடைய வென்பது கிளவியாக்கத்துள் (9) கூறினாம்.

ஆகாரம் காலவெழுத்துப் பெறாது உண்ணா, தின்னா என வரும். வகரம் உண்குவ, தின்குவ என எதிர்காலத்திற்கு உரித்தாய்க் குகரமடுத்தும், ஓடுவ பாடுவ எனக் குகரமடாதும் வரும். உரிஞுவ, திருமுவ என உகரம் பெறுதலும் ஏற்றவழிக் கொள்க. ஒழிந்த எழுத்தோடும் ஒட்டிக் கொள்க.

---

1 வருகுவ செல்குவ எனக் குகரச்சாரியை பெதுவன வருவ செல்வ என அச்சாரியை யின்றி வரின் வகர வீறாம். வருவன செல்வன என்பன அன்சாரியை பெற்று வரு தற்குப் பதில், அச்சாரியைப் பெறாது வருவ, செல்வ எனவரின் அகர வீறாம். இவ்விளக்கம் கிளவியாக்கத்து 9 ஆம் சூத்திரத்துக் கூறப்பட்டுள்ளது.

தெய்.

நிறுத்த முறையானே அஃறிணை வினை உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். அவற்றுள் தன்மைக்கண் கூற்று நிகழாமை யானும், முன்னிலை விரவுவினையாதலானும் அஃறிணைக்கே யுரித்தாகி வருவது படர்க்கையாதலான் அது தெரிநிலைவினை குறிப்புவினை என இருவகைப்படுதலின், அவற்றுள் தெரிநிலை வினையுணர்த்துவார் முதற்பட அதற்கண் பலவறிசொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அஃது அற்றாக; கிளியும் பூவையும் தன் வினையுரைக்கு மாதலின் அஃறிணைக்கண் தன்மைவினைஇன்று என்பது என்னை யெனின், கிளியும் பூவையும் ஆகிய சாதியெல்லாம் உரையாடும் என்னும் வழக்கின்மையானும், அவை உரைக்குங்கால் ஒருவர் உரைத்ததைக்கொண்டு உரைக்கும் ஆதலானும், ஒருவன் பாடின பாட்டை நரம்புக் கருவியின்கண் ஓசையும் பொருளும்பட இயக்கியவழிக் கருவியும் உரையாடிற்றாதல் வேண்டும் ஆதலா னும், அவ்வாறு வருவன மக்கள் வினையாதலால் தன்மை வினையன்றென்க. யான் என்னும் பெயரை விரவுப் பெயர்க்கண் ஓதாது உயர்திணைக்கண் ஓதினமையானும் அஃறிணைக்கண் தன்மை வினை இன்றென்க.

இ-ள்: அ ஆ வ என்னும் ஈற்றினையுடைய அக்கூற்று மூன்று சொல்லும் அஃறிணைப் படர்க்கைக்கண் பன்மையுணர்த்தும் சொல்லாம், எ-று.

அஃறிணை என்பது வருகின்ற சூத்திரத்தினின்றும் தந்து உரைக்கப்பட்டது.

உ-ம்: உண்டன, உண்கின்றன, உண்பன; உண்ணல, உண்ணா, உண்குவ எனவரும். பிறவும் அன்ன.

நச்.

இது முறையானே அஃறிணைத் தெரிநிலை வினை கூறு கின்றது.

இ-ள்: அ ஆ வ எனவரூஉம் இறுதி அப்பால் மூன்றே—அகர மும் ஆகாரமும் வகர உயிர் மெய்யுமாகிய ஈற்றையுடைய அக் கூற்று மூன்று சொல்லும், பலவற்றுப் படர்க்கை—அஃறிணைப் படர்க்கை வினையாம், எ-று.

அகரம் இறந்தகாலம் பற்றி வருங்கால் க ட த ற என்னும் அந்நான்கின்முன் அன்பெற்றும் பெறாதும், ஏனை எழுத்தின்முன்

ஙகார ழகாரம் ஒழித்து இன்பெற்றும், யகாரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி அன்பெற்றும் பெறாதும் வரும்.

உ-ம்: தொக்கன, தொக்க, தொக்கில; உண்டன, உண்ட, உண்டில; வந்தன, வந்த, வந்தில, சென்றன, சென்ற, சென்றில எனவும்; அஞ்சின, தப்பின எனவும்; உரிஞின, பொருநின, நண்ணின, செருமின, துன்னின எனவும்; போயின, சேரின; சொல்லின, மேவின, துள்ளின எனவும்; போயன, போய எனவும் வரும்.

இனி அகரம் நிகழ்காலம் பற்றி வருங்கால், நில், கின்று என்பனவற்றோடு அன் பெற்றும் பெறாதும் வரும். உண்ணா நின்றன, உண்ணாநின்ற, உண்ணா நின்றில, உண்கின்றன, உண்கின்ற, உண்கின்றில எனவரும்.

இனி அகரம் எதிர்காலம் பற்றி வருங்கால் பகரவகரத்தோடு அன்பெற்றும் பெறாதும் வரும்.

உ-ம்: உண்பன, உண்ப, உண்ணல; வருவன, வருவ என வரும். உரிஞுவன, 'உரிஞுவ என உகரம் பெற்று ஏனை எழுத்தின் கண் வருதலும் ஏற்புழிப கொள்க.

இனி ஆகாரம் கால எழுத்துப் பெறாது எதிர்காலத்துப் பயின்று மறையாய் வரும்.

உ-ம் : உண்ணா, தின்னா எனவரும்.

இனி வகரம் எதிர்காலத்திற்கு உரித்தாய்க் குகரம் பெற்றும் பெறாதும் ஏற்றவழி உகரம் பெற்றும் வரும்.

உ-ம்: உண்குவ, தின்குவ, உண்ணல எனவும்; ஓடுவ, தாவுவ எனவும்; உரிஞுவ, செருமுவ எனவும் வரும். உண்டனவல்ல, உண்டன வில்லை எனப் பிறவாய்பாட்டு மறையும் அறிக.

கல்.

என்—எனின் நிறுத்த முறையானே உயர்திணை வினையும் வினைக் குறிப்பும் உணர்த்தி அஃறிணை வினை உணர்த்துதல் நுதலிற்று.

அஃறிணை வினைதான் ஒருமைவினையும் பன்மைவினையும் என இருவகைத்து; அவற்றுள் பன்மைவினை உணர்த்திய தொடங்கினார் என்பது.

ஒருமையன்றோ முன்னையது எனின், யாண்டும் ஒருமையை முன்கூறின் அதற்கோர் சிறப்புண்டுகொல் என்பது படும் என்று

முந்து மொழிந்ததன் தலை தடுமாற்று என்பதோர் தந்திரவுத்தியும் உண்டாதலான் இவ்வாறு கூறினான் என்க.

இ-ள் : அ ஆ வ என்றுசொல்ல வருகின்ற ஈறுகளையுடைய அக்கூற்று மூன்று சொல்லும் பலவற்றை யுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம், எ-று.

உ-ம்: உண்டன, உண்டில, உண்ணா நின்றன, உண்ணா நின்றில, உண்கின்றன, உண்கின்றில, உண்பனஎன அகரம் வந்தவாறு.

இவ்வகரம் வருங்கால் உடன்பாட்டின்கண் னகர ஒற்றோடு கூடியும், மறைக்கண் லகர ஒற்றோடு கூடியும் அல்லது வாராது போலும்.

உண்ட, தின்ற, வந்த, போய என வருமால் எனின், அவை எல்லாக் காலங்களிலும் வராமையான் அந்நிகரனவற்றின் னகரம் செய்யுள் விகாரத்தால் குறைந்தது என்க. உண்ணா, தின்னா என ஆகாரம் வந்தவாறு. இதற்கு உடம்பாடு எக்காலத்தும் இல்லையெனக் கொள்க.

இதற்கு எதிர்காலமே உள்ளது. இதற்கு மறை உண்ணல என அகரத்தின் மறை எனக் கொள்க. உண்டன அல்ல, உண்டன இல்லை எனப் பிறவாய்பாட்டு மறையும் அறிக.

ஆதி.

அ ஆ வ என்னும் மூன்று விகுதிகளும் படர்க்கைப் பலவின் பாலுக்கு உரியன. அப்பால் மூன்று—இத்தொகுப்பு மூன்று.பலவற்று—பலவின் பால்,

ஓடுகின்றன—அ விகுதி. ஓடா—ஆ விகுதி.

ஓடுவ—வ விகுதி.

குறிப்பு : ஓடுவ—எதிர்காலம் பற்றியது. அது ஓடு+வ்+அ எனப் பிரிந்து நிற்கும். [1]ஆதலின் வ விகுதி என்பது முறைகேடு.

---

1. உண்குவ என்பது உண்+கு+வ்+அ எனப் பிரிக்கப்படுமாயின் கு என்பது சாரியை எனற்குத் தடைவரும். சாரியையானது நன்னூலார் கூற்றுப்படி இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் சார்ந்து வரும். உண்குவ என்பதில் இடைநிலைக்கும் பகுதிக்கும் இடையில் வந்ததாகக் கருதப்படும். ஆதலின் வகர விகுதி கொண்டால்

அவ்வாறாயின் பலவின்பால் விகுதி அ, ஆ இரண்டே. நன்னூலாரும் இதே கொள்கை யுடையவர்.

ஆய்வு : ''நாடகந்தில் திருடன் நன்றாய் நடித்தான், அரசன் நன்றாய் நடித்தான், பித்தன் நன்றாய் நடித்தான்'' என்று தோற்றத்தை வைத்துக் கூறுவதுபோலத் தொல்காப்பியர் 'றும் டும் வ' இவற்றைத் தோற்றத்தனவாகக் கூறுகிறார்.

நன்னூலார் வேடதாரியின் உண்மைப் பேர் கொண்டு 'சிவாஜி நன்கு நடித்தார்' என்பதுபோல் சொற்களைப் பகுதி விகுதியிடை நிலைகளாகப் பிரித்து மெய்ப் பொருள் கண்டு தும், அ எனக் கூறுகின்றார்.

ஒருமை வினை முற்று

213. ஒன்றன் படர்க்கை *தடற வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும் (19)

(ஒன்றன் படர்க்கை த ட ற ஊர்ந்த
குன்றியல் உகரத்து இறுதி ஆகும்)

ஆ.மொ:இல.

The verbs which denote third person singular in the neuter gender are those which end in 'th' 'r' and 't' (d) followed by shortened 'u'

பி. இ. நூ:

நேமி. சொ. 41

சொன்ன......துடுறுவும் அஃறிணையின்
.........ஒருமைப் படர்க்கையாம்

நன். 328

துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்கைகை டுக்குறிப்பி னாகும்.

அடைநிலையின்மையின் பகுதிக்கும் விகுதிக்கும் இடையே சாரியை வந்ததாகக் கொள்ளலாம். இதனால் வடிவம் நோக்கி ஆசிரியர் கூறியதும் பொருந்துவதேயாம்.

* 'த ற ட வூர்ந்த' எனப் பாடங் கொள்வர் இளம்பூரணரை ஒழிந்தோர். இளம்பூரணர்காட்டிய உதாரண முறை 'த ற ட வூர்ந்த' என்னும் பாடத்துக்கேற்பவே அமைந்தது.

இல. 234

துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கை

முத்து. வி. 19

துறுடுக் குற்றிய லுகர வீற்ற
அத்திணை ஒன்றன் படர்க்கைச் சொல்லே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அஃறிணை ஒருமைப்பாற்கு உரிய வினைச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஒன்றனை யறியும் படர்க்கை வினைச் சொல்லாவன த ட ற க்களை ஊர்ந்த குன்றியலுகர ஈற்றுச் சொல், எ-று.

வ-று: உண்டது, உண்ணாநின்றது; உண்பது எனவும்; கூயிற்று, தாயிற்று எனவும்; குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவும் வரும்.

இனிக் கிளவியாக்கத்துப் பாலுணர்த்தும் எழுத்துக்களைப் [1]படர்க்கை வினைச் சொல் ஈற்றவாகக் காட்டியது இவ்வோத்தினுட் கூறப்பட்ட இலக்கணம் வலித்தாயிற்று என்பது.

சேனா.

இ-ள்: ஒன்றனை யுணர்த்தும் படர்க்கை வினையாவது, த ற ட என்பனவற்றை ஊர்ந்துநின்ற குற்றியலுகரத்தை ஈறாக வுடைய சொல்லாம், எ-று.

தகர வுகரம் மூன்று காலத்திற்கும் உரித்து. றகரவுகரம் இறந்த காலத்திற்குரித்து. டகரவுகரம் மூன்று காலத்திற்கும் உரிய வினைக் குறிப்பிற் கல்லது வராது.

[2]அஃதேல், வினைக்குறிப்புக் கூறும் வழிக் கூறாது ஈண்டுக் கூறியது என்னை யெனின், 'அஃறிணை மருங்கின் மேலைக்

---

1. படர்க்கை வினைச் சொல் ஈற்றவாகக் காட்டியன: ன், ள், ர், ப, மார், து று டு அ ஆ வ என்பன. (கிளவியாக்கச் சூத்திரங்கள் 5-10) அவை படர்க்கையிடத்தவாகக் காட்டப்படினும் இவ்வியலில் தான் படர்க்கையிடத்தன என்பது கூறப்பட்டது.
2. இப்பகுதிக்கு விளக்கம் சிவ. குறிப்பிற் காண்க.

கிளவியொடு வேறு பாடிலவே' (வினை. 24) என வினைக் குறிப்புப் பால் உணர்த்துமாறு தெரிநிலை வினையோடு மாட்டெறியப் படுமாகலின், டகரம் ஊர்ந்த குற்றிய லுகரம் தெரிநிலை வினைக்கு ஈறாகாமையின், மாட்டேற்று வகையாற் பாலுணர்த்துதல் பெறப்படாதாம். அதனான் ஈண்டு வைத்தார் என்பது.

உ-ம் : தகர வுகரம் இறந்த காலத்து வருங்கால் புக்கது, உண்டது, வந்தது சென்றது, போயது, உரிஞியது எனக் கடத றவும் யகரமுமாகிய உயிர் மெய்ப்பின் வரும்.

போனது என னகர வுயிர்மெய்ப்பின் வருவதோ எனின், அது சான்றோர் செய்யுளுள் வாராமையின் அது சிதைவெனப் படும்.

நிகழ் காலத்தின்கண் நடவாநின்றது, நடக்கின்றது ; உண்ணா நின்றது, உண்கின்றது என நில், கின்று என்பனவற் றோடு அகரம் பெற்று வரும்.

எதிர் காலத்தின்கண் உண்பது, செல்வது எனப் பகர வுகரம் பெற்று வரும்.

றகரவுகரம் புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென்றன்று எனக் கடதற என்பனவற்றின்முன் அன் பெற்று வரும். கூயின்று, கூயிற்று; போயின்று. போயிற்று என ஏனை எழுத்தின் முன் இன்பெற்று வரும். ஆண்டு இன்னின் னகரம் திரிந்தும் திரியாதும் வருதல் கொள்க.

வந்தின்று என்பதோ எனின், அஃது எதிர் மறுதலை யுணர்த் துதற்கு வந்த இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை வினையென மறுக்க. அஃது எதிர்மறையாதல் வந்தில, வந்திலன் வந்திலன், வந்திலர் என வரும் ஏனைப்பாற் சொல்லான் அறிக.

டகர வுகரம் குண்டுகட்டு, குறுந்தாட்டு என வரும்.

தெய்.

அஃறிணைப் படர்க்கைக்கண் ஒருமை யுணர வரும் சொல் லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அஃறினையொன்றனை அறிய வரும் படர்க்கை வினைச் சொல் த ற டக்களை ஊர்ந்த குற்றியலுகரத்தினை ஈறாகவுடைய, எ-று.

உ-ம் : உண்டது, உண்ணா நின்றது, உண்பது, உண்ணாது; கூயிற்று ; உண்கு என வரும். உண்டு என்பது உண்டது என்னும் பொருட்டு. பிறவும் அன்ன.

நச்.

இஃது ஒருமை வினை கூறுகின்றது.

இ-ன்: ஒன்றன்படர்க்கை—ஒன்றனையுணர்த்தும் படர்க்கை வினையாவது, தடற ஊர்ந்த குள்றியலுகரத்து இறுதி ஆகும்—தறட என்னும் ஒற்றுக்களைஊர்ந்து நின்ற குன்றியலுகரத்தினை ஈறாகவுடைய சொல்லாம், எ-று.

தகர வுகரம் இறந்த காலத்து வருங்கால் கடதறக்கண் அகரம் பெற்றும், ஏனை எழுத்தின்முன் இகரமும் யகர உயிர் மெய்யும் பெற்றும், யகர உயிர்மெய்யே பெற்றும் வரும்.

உ-ம்: புக்கது, புக்கிலது; உண்டது, உண்டிலது; வந்தது, வந்திலது; சென்றது, சென்றிலது எனவும்; எஞ்சியது, தப்பியது, எனவும்; உரிஞியது, கண்ணியது, பொருநியது, பொருமியது. துன்னியது எனவும், போயது, கூரியது, சொல்லியது, மேவியது, துள்ளியது எனவும் வரும்.

இனி, நில், கின்று என்பனவற்றோடு நிகழ்காலத்தின்கண் அகரம் பெற்று வரும்.

உ-ம்: நடவாநின்றது, நடவாநின்றிலது; நடக்கின்றது, நடக்கின்றிலது; உண்ணா நின்றது, உண்ணா நின்றிலது; உண் கின்றிலது எனவரும்.

இனி எதிர்காலத்தின்கண் உயிர் மெய்யான பகர வகரம் பெற்று உண்பது, செல்வது எனவரும்.

றகர உகரம் கடதற என்பனவற்றின்முன் 'அன்'னும் 'இன்' னும் பெற்றும், அவ்வின்னின் லகரம் திரிந்தும் இறந்த காலம் பற்றி வரும்.

உ-ம்: புக்கன்று, புக்கின்று; உண்டன்று உண்டின்று; வந் தன்று, வந்தின்று; சென்றன்று; சென்றின்று என வரும்: கூயின்று, கூயிற்று; போயின்று; போயிற்று என ஏனை எழுத் தோடும் ஒட்டிக்கொள்க. வந்தின்று என்பது இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை வினையாதல், வந்தில, வந்திலன் வந்திலள், வந்திலர் என்னும் ஏனைப்பாற்சொல்லான் அறிக. இந்த றகர உகரம் ''தாலி களைந்தன்று மிலனே'' (புறம் 77) எனவும் ''வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே'' (புறம் 77) என வும் உயர்திணைக்கண்ணும் வந்ததால் எனின், அவை 'களைந் தான், வியந்தான், இழிந்தான்' என்பனவற்றிற்கு மறையாய்க் 'களைந்திலன், வியந்திலன், இழிந்திலன்' என நிற்கின்றவை களைந்தன்றுமிலன், வியந்தன்றுமிலன், இழிந்தன்றுமிலன்' என முற்று வினைத்திரிசொல்லாய் நின்றன.

இனி டகர உகரம் மூன்று காலத்திற்கும் உரிய வினைக் குறிப்பாய்க் குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவரும்.

[1]மேற்குறிப்பினைத் தெரிநிலை வினையோடு மாட்டெறியு மாகலின் இத்தெரிநிலை வினையுள் டகர உகரஈறு இல்லதுகண்டு ஆண்டு மாட்டேறு ஏலாது என ஈண்டுக்கூறினார் என உணர்க.

கிளவியாக்கத்துத் திணையும் பாலும் அறிவிப்பான் இவ்வீறு களை விதந்தோதினார், ஈண்டு இவை இன்ன இடம்பற்றி உணர்த்தும் என்றார்.

கல்.

என்-எனின், ஒருமைப் படர்க்கையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஒன்றனையுணர்த்தும் படர்க்கைச் சொல் தறடக் களை ஊர்ந்த குற்றியலுகரமாகிய ஈற்றெழுத்தினையுடைய சொற்களாம், எ-று.

உ-ம்; வந்தது, வந்திலது; வாரா நின்றது, வாரா நின்றிலது; வருகின்றது, வருகின்றிலது; வருவது, வாராது எனத் தகரம் வந்தவாறு.

கூறிற்று, தாயிற்று என றகரம் இறந்த காலம் பற்றி வந்த வாறு.

இது உண்டல் தின்றல் என்னும் எல்லாத் தொழிலோடும் ஓடாமையும் அறிக. தனக்கு என ஏற்ற மறையின்மையும் அறிக.

குண்டுகட்டு, கொடுந்தாட்டு என்பன டகரம். இது வினைக் குறிப்பின்கண் வருவதெனக் கொள்க.

மற்று இது வினைக் குறிப்பு ஓதும் வழி ஓதாதது என்னை யெனின், மேல் குறிப்புவினை தெரிநிலை வினையினோடு மாட் டெறியும் ஆகலான் இத் தெரிநிலையுள் அடங்கா. உகரம் இல்லது கண்டு, ஆண்டு மாட்டு ஏலாது என ஈண்டே கூறினார் என உணர்க.

இவ்வாறு பன்மையும் ஒருமையும் அறிவிக்கும் ஈறுகள் கிளவி யாக்கத்துள்ளே ஓதினார் அன்றோ எனின்; ஆண்டு இட வரை யறையின்மையின் ஈண்டு அவற்றிற்கு இடம் வரையறுத்த வாறாகக் கொள்க. இக்கடாவும் விடையும் உயர்திணைப் படர்க்கை வினைக்கும் ஒக்கும் எனக் கொள்க.

---

1. இப்பகுதிக்கு விளக்கம் சிவ. குறிப்பிற் காண்க.

அவற்றுள் பாலுணர்த்தும் என்ற னகர விறு தனித்தன்மைக் கல்ல என் என்புழி இருபாற்கும் பொதுவாய் நின்றதால் எனின், ஆண்டும் ஒருமையும் என்னுந்துணையும் உணர்த்தியது எனக் கொள்க. அக்குறைபாடுகளான் அன்றே அவ்வெழுத்துப் பதினொன்றற்கும் படர்க்கை வினையென இடம் வரையறுத்தது எனக் கொள்க.

ஆதி.

அஃறிணைப் படர்க்கை ஒருமைக்கு து று டு என்னும் குற்றிய லுகரங்களே விகுதியாகும்.

அது நின்றது— து விகுதி. அது ஓடிற்று—று விகுதி, அது குண்டு கட்டு, அது குறுந்தாட்டு— டு விகுதி.

ஓடினது = ஓடு + இன் + அ + து

ஓடிற்று = ஓடு + இன் + து

ன் முன் த றகரமாயிற்று.

பாடிற்று = பாடு + இன் + து—து விகுதி.

அவ்வாறே ண், ள் முன் தகரம் டகரம் ஆகிறது.

கண்ணது—கண் + அ + து.

கட்டு = கண் + து.

தாளது = தாள் + அ + து.

தாட்டு = தாள் + து.

ஆகவே ஒன்றன்பால் விகுதி து ஒன்றே.

குறிப்பு: நன்னூலாரும் இங்கு தவறி விட்டார்.

சிவ.

து று டு என்னும் மூன்றனுள் து, று என்பன அஃறிணை ஒன்றன்பால் தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்கும் உரியன; டு குறிப்பு வினைக்கே யுரியது. தெரிநிலை வினைகளை முன்னரும் குறிப்பு வினைகளைப் பின்னரும் கூறுவர் ஆசிரியர். அவ்வகையில் அஃறிணைத் தெரிநிலை வினைகளை இச்சூத்திரத் தும் அடுத்த சூத்திரத்தும் கூறி, ''இன்றிலவுடைய'' என்னும் சூத்திரத்தில் அஃறிணைக் குறிப்பு வினைகளைக் கூறினர். தெரிநிலை வினைகள் பால் உணர்த்துதலை வெளிபடையில் கூறிப் பின்னர்க் குறிப்புவினைகள் பாலுணர்த்துமாற்றைத் தெரிநிலைவினைகளோடு மாட்டேற்றிக் கூறுவர் ஆசிரியர். அந்நிலையில் இச்சூத்திரத்தால் அஃறிணை ஒன்றன்பாலுணர்த்தி அடுத்து வரும் 'அ ஆ வ' எனும் சூத்திரத்தால் அஃறிணைப்

பலவின்பால் உணர்த்திக் குறிப்பு வினைகளும் தெரிநிலைவினைகள் போலப் பால் உணர்த்தும் என்பதைப் ''பன்மையும் ஒருமையும் பாலறிவந்த'' என்னும் சூத்திரத்தில் அஃறிணைத் தெரிநிலைவினையோடு மாட்டெறிந்து சென்றார். இங்கு ஓர் ஐயம் எழுவது இயல்பு.

டுவ்விகுதி குறிப்புக்கே வருமாயின் குறிப்புவினைகள் பற்றிய '.இன்றிலவுடைய'' என்னும் சூத்திரத்தில் டுவ்விகுதியீற்றையும் கூறியிருக்கலாமே; இங்குக் கூறுவானேன் என்பது அவ்வையம். அதற்கு விடையாகச் சேனாவரையர் கூறுவதாவது:—

''இன்றிலவுடைய என்னுஞ் சூத்திரத்து அஃறிணைக் குறிப்பு வினைகள் ஒருவாறு தொகுத்துக் கூறப்பட்டன. அவை ஒன்றன்பால் பலவின்பால்களை உணர்த்துவது யாங்ஙனம் என்பது, அடுத்துவரும் ''பன்மையும் ஒருமையும் பாலறி வந்த'' என்னும் சூத்திரத்தில் அஃறிணைத் தெரிநிலைவினைகளோடு மாட்டெறிந்து கூறப்பட்டது. அப்படி மாட்டெறியின், டுவ்விகுதி, ''இன்றிலவுடைய'' என்னும் சூத்திரத்துக் கூறப்பட்டதாயின் அது, ஒருமைப்பால் உணர்த்துமா பன்மைப்பால் உனுர்த்துமா என்னும் ஐயத்துக்கு இடமாகிவிடும். அதற்கிடம் கொடாமல் ஒருமைப்பால் உணர்த்தும் இச்சூத்திரத்தில் கூறிவிட்டார்''—இவ்வாறு கருத்துரைத்தார் சேனாவரையர்.

இக்கருத்து அமைதியுடையதாகத் தோன்றவில்லை. 'இன்றிலவுடைய' என்னுஞ் சூத்திரத்தில் இன்று, அன்று, உடைத்து என்பனவற்றை ஒருமையிலும் இல, அல்ல, உடைய என்பனவற்றைப் பன்மையிலும் விளங்கக் கூறியவாறு போல, டுகரவீற்றைப் பன்மைக்கு வாராமையின் ஒருமை வாசகம்பட 'கட்டு' (கண்+டு) போலும் எடுத்துக்காட்டு மூலமாகவோ, டுவ்வீறு எனவாளாவோ கூறின் டுவ்வீறு ஒருமைக்குரியது என்பது தானே பெறப்படுமாகலின் டுவ்வீற்றை 'இன்றிலவுடைய' என்னுஞ் சூத்திரத்திலேயே கூறியிருக்கலாமே? இப்படி வினவுவார்க்கு விடையின்மையின் சேனாவரையர் கருத்தும் அமைதியுடையதாகத் தோன்றவில்லை.

இனி நச்சினார்க்கினியர் கூறும் அமைதி வருமாறு:

டுவ்வீற்றை 'இன்றிலவுடைய' என்பதில் கூறினால், அடுத்துக் குறிப்பு வினைகளைத் தெரிநிலைவினைகளோடு மாட்டெறியும் போது ஒரு குறை ஏற்படும். றுவ்வீறும் (இன்று) துவ்வீறும் (உடைத்து) மாட்டெறியும் போது ''ஒன்றன்

படர்க்கைத் தறட'' என்னும் சூத்திரத்தில் உள்ள து, று என்பன வற்றைச் சாரும். ஆனால் டுவ்வீறு மாட்டெறியும்போது 'ஒன்றன்படர்க்கை' என்னுஞ் சூந்திரத்து டுவ்வீறில்லாமல் போகும். அதனால் டுவ்வீற்றுக்கு மாட்டேறில்லையென்றாகும். எனவே இச்சூத்திரத்திலேயே (19) கூறினார்—இவ்வாறு நச்சினார்க்கினியர் அமைதி கூறினர். கல்லாடனாரும் இப்படியே கூறினர். இவர்தம் கூற்றும் அமைதி யாகப் படவில்லை.

'இன்றிலவுடைய' என்னுஞ் சூத்திரத்துக் கூறப்பட்ட குறிப்பு வினைகள் அடுத்த சூத்திரத்தால் தெரிநிலை வினை களோடு மாட்டெறியப்படும்போது, டுவ்வீறு 'இன்றிலவுடைய' என்பதில் இல்லாமையாலும், து, று என்பனவற்றோடு உடன் வைத்து டுவ்வீறு கூறப்பட்டமையாலும் டுவ்வீறு தெரிநிலைக்கே வரும் என்னும் கருத்துப் பெறப்படுதலின் அதற்கு அமைதியாது கூறுவது? அதனால் நச்சினார்க்கினியர் கருத்தும் அமைதிக்கு இடம் தரவில்லை.

இனியான் காணும் அமைதி வருமாறு:—

'ஒன்றன் படர்க்கை' என்னும் சூத்திரத்தும் 'அஆவ' என்னுஞ் சூத்திரத்தும் கூறப்பட்ட ஈறுகள் ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் வருவன என்பது கூறப்பட்டது: ஆனால் தெரிநிலை வினையிலா குறிப்பு வினையிலா என்பது கூறப்பட வில்லை. அவ்வீறுகள் தெந்நிலைக்கும் குறிப்புக்கும் வருவன. 'இன்றிலவுடைய' என்னும் சூத்திரம் ஈறுபற்றியதன்று. சொல் பற்றியதும் பொருள் பற்றியதுமாம். அதனால் சொல்பற்றியதும் பொருள் பற்றியதுமான சூத்திரத்தில் டுவ்வீறு பற்றி ஆசிரியர் கூறவில்லை.

அஃறிணை வினைமுற்றின் தொகை.

214. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே. (20)

(பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த
அ மூ இரண்டும் அஃறிணை யவ்வே).

ஆ. மொ: இல.

These six which denote plural and singular belong to non—class.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், விரிந்தது தொகுத்த வாறு நுதலிற்று.

உரை: பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் அறிய வந்த அவ்வாறு ஈற்றுச் சொற்களும் அஃறிணைக்கு உரியவினைச் சொல், எ—று.

சேனா.

இ—ள்: பன்மையும் ஒருமையுமாகிய பாலறிய வந்த அவ்வாறீற்றுச் சொல்லும் அஃறிணையன வாம், எ—று.

'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த' என்பதற்கு முன் (வினை—11) உரைத்தாங்கு உரைக்க.

இதனாற்பயன் அஃறிணைச் சொல் ஆறே [1]பிறிதில்லை என வரையறுத்தல் எனக் கொள்க.

தெய்.

விரிந்தது தொகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேல் பன்மையும் ஒருமையுமாகிய பால் உணர எடுத்து ஓதப்பட்ட ஆறு ஈற்று வினைச்சொல்லும் அஃறிணை யிடத்த, எ-று.

அவையாவன: அ, ஆ, வ, து, று, டு என்பன.

நச்.

இது விரிந்தது தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

இ-ள்: பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த—பன்மையும் ஒருமையுமாகிய பால்அறிய வந்த, அம்மூவிரண்டும் அஃறிணை யவ்வே—அவ்வாறு ஈற்றுச் சொல்லும் அஃறிணையுடையனவாம் எ-று.

கல்.

என்-எனின், மேல் விரிந்தனவற்றையெல்லாம் தொகுத்து இன்ன திணைக்குரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த அவ்வாறும் அஃறிணையுடையன, எ-று.

---

1. ஆறே—ஆறு ஈற்றனவே. அவை: து, று, டு, அ, ஆ, வ.

ஆறாவன: அகர ஆகார வகரங்களும், தகர றகர டகரங் களை யூர்ந்த குற்றியலுகர மூன்றும் எனக்கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனான் இவ்வீறு பெயர்க்கும் ஈறாதல் கொள்க.

ஆதி.

பன்மை ஒருமை என ஒன்றன்பால் பலவின்பாலைக் காட்டு கிற அ ஆ வ து று டு ஆறும் அஃறிணைக்குரிய.

ஆய்வு: யாம் முன் கூறிய முறையில், அஃறிணை விகுதிகள் அஆது மூன்றேயாகும். து ஒருமைக்கும் அ பன்மைக்கும் ஆ எதிர் மறைக்கும் உரியன.

அது நின்றது—து, அ (பல) நின்றன—அ, அவை நின்றவை —வை, அ (அவை) நில்லா—ஆ. பெயர் வினைகளின் ஈற்றெழுத்தை ஒப்பிட்டு மெய்ப் பொருள் காண்க.

எவன்

215. அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கு
மொக்கு மென்ப வெவனென் வினையே (21)

(அத் திணைமருங்கின் இருபால் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன்என் வினாவே)

ஆ. மொ: இல.

The interrogative word 'evan' belongs to the two genders of the same class

பி.இ.நூ:

நன். 350.

எவன்என் வினாவினைக் குறிப்பு இழி இருபால்

இல. 235. ,, ,, ,,

முத்து. வி. 20

எவனென் வினாவே இருபாற்கும் உரிய.

இனம்.

உரை : அஃறிணை இருபாற்கும் பொதுவாகி நிற்கும்; எவன் என்னும் வினா வினை யுணர நின்ற வினைக் குறிப்புச்சொல், எ-று.

வ—று: எவன் அது, எவன் அவை எனவரும். பெயருமாம் படுத்துச் சொல்லின்.

சேனா.

இ-ள்: எவன் என்னும் வினாச்சொல் மேற்கூறப்பட்ட அஃறிணை யிரண்டு பாற்கும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம் ; அஃதெவன்?, அவையெவன்? என வரும்.

[1]னகர வீறாய் இரண்டுபாற்கும் பொதுவாய் வருதலின் இதனை வேறு கூறினார்.

அஃதேல் 'நுமக்கிவன் எவனாம்' என உயர்திணைக் கண்ணும் வருமால் எனின், ஆண்டு அது முறைபற்றி நிற்றலின், அஃறிணைக்கண் வந்தது எனவே படும் என்பது. அஃதேல் 'நுமக் கிவன் என்ன முறையனாம்' என்பதல்லது 'என்ன முறையாம்' என்பது பொருந்தாதெனின், என்ன முறை என்பது ஆண்டு முறை மேல் நில்லாது ஒற்றுமை நயத்தான் முறையுடையான் மேல் நிற்றலின் அமையும் என்க.

எவன் என்பதோர் பெயரும் உண்டு. அஃதிக்காலத்து என் னென்றும் என்னையென்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்பு முற்று என்க.

தெய்.

அஃறிணைக்குரியதோர் வினாச்சொல் பாலுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அஃறிணையிடத்து இருபாற்கிளவிக்கும் எவன் என் வினா ஒக்கும் என்று சொல்லுவர், எ-று.

உ-ம்: இப்பண்டியுள்ளது எவன், இப்பண்டியுள்ளன எவன் என வரும்.

---

1. 'இன்றிலவுடைய' என்னும் சூத்திரம் ஒருமை தன்மை யில்வரும் ஈறுகொண்ட குறிப்புவினை பற்றியது ஆதலின், அதில் கூறாமல், ஈறு திரியாமல் ஒருமை பன்மைக்குப் பொதுவாய் நிற்பது நோக்கித் தனிச் சூத்திரத்தில் எவன் என்பதைக் கூறினார்,

நச்.

இஃது அஃறிணையிருபாற்கும் உரியதோர் வினைக்குறிப்புக் கூறுகின்றது.

இ-ள்: எவன் என் வினா—எவன் என்னும் வினாச்சொல், அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும் ஒக்கும் என்ப—அஃறிணை யிடத்து ஒருமை பன்மையாகிய இருபாற் பொருண்மைக்கும் மிகுதி குறைவு இன்றி ஒக்கும் என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: அஃது எவன், அவை எவன் எனவரும். னகர ஈறாய் இருபாற்கும் பொதுவாய் வருதலின் வேறே கூறினார். 'நுமக்கு இவன் எவனாம்' என்பது முறை பற்றி நிற்றலின் அஃறிணைக்கண் வந்ததாம்.

படுத்தல் ஓசையால் எவன் என்பது பெயருமாம். [1]அஃது இக்காலத்து என் என்றும், என்னை என்றும் மருவிற்று.

கல்.

என்—எனின், அஃறிணைத் தெரிநிலை வினை யுணர்த்தி அதன் வினைக் குறிப்புக் கூறுவான் இருபாற்கும் உரியதோர் குறிப்பு உணர்த்துகின்றார் என்பது.

இ—ள்: மேற்சொல்லப்பட்ட அஃறிணையிடத்து ஒருமை பன்மையாகிய இருபாற் பொருண்மைக்கு மிகுதி குறைவின்றி யொக்கும் என்று சொல்லுவர் ஆசிரியர்: அதுயாது எனில் எவன் என்று சொல்லப்படும் வினாப் பொருண்மையுடைய சொல்லினை, எ—று.

உ—ம்: எவன் அது, எவன் அவை.

இதனை மேற்கூறுகின்ற வினைக்குறிப்போடு கூறாதது என்னையெனின், இஃது ஈறு திரியாது இருபாற்கும் ஏற்பது ஒன்றாகலின் வேறு கூறினார் என்பது.

தெரிநிலை வினை ஈறுகளே குறிப்பிற்கும் ஈறாம் என்று மாட்டேற்றுதற்கு ஏலாதால் எனின், அவ்வாறு ஏலாமையா

---

1. ''கற்றதனா லாய பயனென்'' (குறள்.2) என்பதன் உரையில் பரிமேலழகர், 'எவன் என்னும் வினாப்பெயர் என் என்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது' என்றதும் காண்க.

னன்றே இது வேறு கூறியது என்க. இதனோடு அஃறிணையிறு ஏழ் என்பது பெறப்படும்.

இவ்வாறு னகரம் அஃறிணைப்பால் மேல் நிற்றலான் ''னஃகா னொற்றே ஆடூஉ வறிசொல்'' (கிளவி. 5) என்ற வழிப் படர்க்கையிடத்து முற்றுச் சொற்கு ஈறாயவழித் திரிபின்றி யுணர்த்தும் என்ற ரகாரம் யார் என்னும் வினாவின்கண் ஒருமைக்கும் உரித்தாய்நின்றதன்றோ வெனின், அவையாகின்ற வாறறிந்தது.

குறிப்பு வினைமுற்று

216. *இன்றில வுடைய வென்னுங் கிளவியு
மன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியு முளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியு
மொப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ
யப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்
பன்மையு மொருமையும் பாலறிவந்த
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி யஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (22)

(இன்றுஇல உடைய என்னும் கிளவியும்
அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வருஉம் கிளவியொடு தொகைஇ
அப்பால் பத்தும் குறிப்பொடு கொள்ளும்
பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வருஉம்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே)

ஆ. மொ: இல.

The words 'inṛu', 'ila', 'udaiya', 'anṛu'
'udaiththu', 'alla', 'uḷa' the words
denoting quality, limb and quality,
and comparison—these ten are appellative verbs.

---

* இச்சூத்திரத்தின் இறுதி நான்கு வரிகளையும் தனிச் சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணரை யொழிந்தோர்,

The appellative verbs, denoting plural and singular in such manner, are not different from those of neuter gender already mentioned.

பி. இ. நூ:

நேமி. சொ. *47*

கரிது அரிது தீது கடிது நெடிது
பெரிது உடைத்து வெய்து பிறிது—பரிதென்ப
ஆயிழாய் பன்மையினும் செல்ல அஃறிணையின்
மேய வினைக்குறிப்பாம் மிக்கு

நன். *339.*

வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன

இல. *240.* ,, ,, ,,.

இலக்கணக் கொத்து. *85*

வேறில்லை யுண்டு யார் வேண்டும் தகும் படும்
வினைபெய ரெச்சம் வியங்கோள் பத்தும்
திணைபா லிடமெலாம் செல்லு மென்ப.

தொன். *125. 125*

வினைக் குறிப்பு ஒன்றன்பால் விகுதி துவ்விஃதே
வலிமிகத் துறுடுவாம் ஐர யவ்வுமல்
இன்னு மளவு முறையீற்ற பெயர்க்கே
அவ்விறு மெல்லாம் பலவின் பாற்கே.
வினைக்குறிப் பெஞ்சி யீற்றகரம் பொதுவே.

முத்து. வி. *21*

இன்றில வுடைய அன்றுடைத் தல்ல
என்பவும் பிறவும் வினைக்குறிப் பாகும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அஃறிணைவினைக் குறிப்பு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: சொல்லப்பட்ட பத்துப் பொருண்மைக் கண்ணும் அஃறிணை வினைக் குறிப்புப் பிறக்கும், எ-று.

இன்று என்பது—கோடின்று, செவியின்று எனவரும்.
இல என்பது—கோடில, செவியில என வரும்.
உடைய என்பது—கோடுடைய, செவியுடைய என வரும்.
அன்று என்பது—நாயன்று, நரியன்று எனவரும்.

உடைத்து என்பது—கோடுடைத்து, செவியுடைத்து என வரும்.

அல்ல என்பது—உழுந்தல்ல, பயறல்ல எனவரும்.

பண்பு கொள் கிளவி—கரியது, கரிய என வரும்.

உளவென் கிளவி—உழுந்துள, பயறுள என வரும்.

பண்பினாகிய சினை முதற்கிளவி—குறுங்கோட்டது, குறுங் கோட்டன எனவரும்.

ஒப்பொடு வரூஉங்கிளவி—பொன்னன்னது, பொன்னன்னன எனவரும்.

இக் கூறப்பட்ட பத்துப் பொருண்மைக்கண்ணும் வினைக் குறிப்புச் சொற்கள் கொள்ளப்படும் என்றவாறு.

பன்மைப் பாலும் ஒருமைப் பாலும் தோன்றி நிற்கும் இலக்கணமுடைய வினைக் குறிப்புச் சொற்கள், மேற்கூறப்பட்ட அஃறிணை வினைச் சொற்கு ஈறாய் நின்று பால் உணர்த்தும் எழுத்துக்களின் உள்ளனவே தமக்கும் ஈறாவன; பிறிதில என்றவாறு.

சேனா.

("இன்றில...குறிப்பொடு கொள்ளும்")

இ-ள் : இன்று இல என்பன முதலாகிய பத்தும் வினைக் குறிப்புச் சொல்லாம், எ-று.

அவற்றுள் இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல உள என்பன தம்மையே யுணர்த்தி நின்றன. அல்லன பொரு ளுணர்த்தி நின்றன.

உ-ம் : இன்று, இல, கோடுடைத்து, கோடுடைய, அது வன்று, அவையல்ல, உள என வரும்.

[1]ஈண்டும் கோடின்று, கோடில என வுடைமைக்கு மறுதலை யாய் இன்மை பற்றி வருவனவும் கொள்க. [2]'உடைய' என்பது

---

1. ஈண்டும் என்பதன் உம்மை, வினையியல் 16ஆம் சூத்திரத்தின் உரையில், "பொதுப்படக் கூறியவதனான் பொருளிலன், பொருளிலள், பொருளில்ர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையும் கொள்ளப் படும்" என வந்ததைத் தழுவும்.
2. இன்று, அன்று உடைத்து என ஒருமைகளையும், இல, அல்ல, உடைய எனப் பன்மைகளையும் முறையாகக் கூறாமல் ஒருமை பன்மைச் சொற்களை மயங்கக்

முதலாயவற்றைச் செய்யுளின்ப நோக்கி மயங்கக் கூறினார். [3]அவ்வேழனையும் பொருள் பற்றியோதாராயினார் ; கிளந்து, ஓதிய வழியும் சூத்திரஞ் சுருங்கும் ஆகலான் என்பது. 'உளது' என்பது பெரு வழக்கிற் றன்மையின் 'உள' என்பதே கூறினார். [4]அது தன்னின முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும்.

பண்பு கொள் கிளவி—கரிது, கரிய ; செய்யது, செய்ய என வரும்.

பண்பினாகிய சினைமுதற் கிளவி: நெடுஞ்செவித்து, நெடுஞ் செவிய என வரும். பண்படுத்த சினை பற்றியல்லது அவ்வினைக் குறிப்பு நில்லாமையின் பண்பினாகியவெனப் பண்பை முதனிலை யாகக் கூறினார். பெருந்தோளன் என உயர்திணைக் கண்ணும் பண்படுத்து வருதல் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்க. வேற்றுமைப் பொருள் பற்றி வருங்கால் பிறிதின் கிழமையும் உறுப்பின் கிழமையல்லாத தற்கிழமையும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும் பற்றி அஃறிணை வினைக்குறிப்புப் பயின்று வாராமையின் சினைக் கிழமையே கூறினார். அப்பொருள் பற்றிப் பயிலாது வருவன உரையிற் கோடல் என்பதனாற் கொள்ளப்படும். 'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனாற் கொள்ளினும் அமையும்.

உ-ம் : ''அறிந்த மாக்கட் டாகுக தில்ல'' (அகம். 15) ''மெல் விரல் மந்தி குறை கூறும் செம்மற்றே'' (கலி. 40) எனவும், ''அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே'' (புறம் 173) எனவும் வரும். 'வடாது, தெனாது' (புறம். 6) என்பனவும் ஏழாம் வேற்றுமை பொருண்மைக்கண் வந்த வினைக்குறிப்பு ; பெயருமாம்.

ஒப்பொடு வரூஉம் கிளவி — பொன்னன்னது, பொன்னன்ன என வரும். ஒப்பொடு வருதலாவது பொருள் பற்றி வருதல்.

வழக்குப் பயிற்சி நோக்கிப் பத்தென வரையறுத்தவாறு.

கூறியது செய்யுளின்பம் கருதியென்க. உடைத்து, உடைய என முறையிற் கூறாது உடைய, உடைத்து எனக் கூறியதை மயங்கக் கூறியதாகக் கொள்வாரும் உளர். அதற்குக் காரணம் இன்று முதலியவற்றை என்னாது பின்னர் வந்த உடைய முதலியவற்றை எனக் கூறியதாகும்.

3. இதன் பின்னர் வருவனவற்றின் விளக்கம் உரையிறுதி யில் சுந்தரமூர்த்தியின் குறிப்பிற் காண்க.

4. அது—உளது என்பது.

(“பன்மையும் ஒருமையும்.........வேறுபாடிலவே”)

இ-ள் : பன்மையும் ஒருமையு மாகிய பால்விளக்கிக் குறிப்புப் பொருள் பற்றி வரும் வினைச் சொல் மேற்கூறப்பட்ட அஃறிணை வினையோ டொக்கும், எ-று.

வாய்பாடு பற்றியும் பொருள் பற்றியும் கூறிய இருவகையும் எஞ்சாமற் றழுவுதற்கு ‘அன்ன மரபின்’ என்றார்.

ஒத்தலாவது அஃறிணை வினைக்கோதிய ஈற்றுட் பொருந் துவன வினைக் குறிப்பின்கண் வருங்காலும் அவ்வவ் வீற்றான் அவ்வவ் விடமுங் காலமும் விளக்குதல்.

பொருந்துவனவாவன, ஆகாரமும் வகாரமும் ஒழித்துக் குற்றுகர மூன்றும் அகரமுமாம். அவற்றுட் டகரமூர்ந்த குற்றுகரம் ‘ஒன்றன் படர்க்கை’ (வினை. 20) என்புழிக் கூறு தலான், ஒழிந்த மூன்றும் ஈண்டுக் கொள்ளப்படும். அவை அப்பால் விளக்குதல் மேற் காட்டப்பட்டனவற்றுள் கண்டு கொள்க.

தெய்.

(“இன்றில.........குறிப்பொடு கொள்ளும்”)

அஃறிணை வினைக் குறிப்பாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : இன்று என்பது முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் காலம் குறிப்பொடு கொண்டு நிற்கும், எ—று.

உ-ம் : இன்று, இல என்பன ஒரு பொருளின் இன்மை உணர வருவன. கோடின்று, கோடில என வரும்.

உடைய, உடைத்து என்பன ஒரு பொருட்கு ஒரு பொருள் உண்டென்னும் பொருள்மேல் வரும். கோடுடைத்து, கோடுடைய என வரும்.

[1]அன்று அல்ல என்பன தாம் குறித்த பொருளை விளக்க வரும். அதுவன்று, அவையல்ல என வரும்.

பண்பு கொள் கிளவியாவது பண்பினைக் கொண்டு நிற்கும் சொல். இது கரிது, இது நெடிது என வருவன.

---

1. அதுவன்று என்பது நான் கூறிய பொருள் அதுவன்று வேறொன்றாம் என்ற பொருளைத் தருதலின், தான் குறித்த பொருளை விளக்க வரும் என்றார்.

உளவென் கிளவியாவது ஒரு பொருளின் உண்மையுணர நிற்பது. அவையுள என வரும். இதன் ஒருமையாகிய உண்டு என்னும் சொல் இருதிணைக்கும் உரித்தாகலின் ஈண்டு[1] ஓதாராயினர்.

பண்பினாகிய சினை முதற்கிளவியாவது, பண்பும் சினையும் அடுத்து முதலொடு முடிவது. [2]குறுந்தாட்டு, குறுந்தாள என வரும்.

ஒப்பொடு வரூஉம் கிளவியாவது, ஒன்றனோடு ஒன்று ஒக்கும் என்னும் பொருண்மை குறித்து வருவது. அன்னது, அனையது, அன்ன, அனைய என வரும்.

("பன்மையும் ஒருமையும்...வேறுபாடிலவே")

அஃறிணை வினைக் குறிப்பிற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேல் ஓதின வாய்பாட்டால் பால் விளங்க வந்தன வாய்ச் சொல்லப்பட்ட மரபினாற் குறிப்பொடு வரூஉம் வினைச் சொல் அஃறிணைத் தெரிநிலை வினையோடு வேறுபாடில, எ-று.

[3]அதற்கு ஓதிய ஈறே இதற்கும் ஈறு என்பது பெற்றாம்.

உ-ம் : உடைத்து, இன்று, குண்டுகட்டு, குறுந்தாள, பொல்லா எனவரும்.

'அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்' என்றதனான் உருபும் பொருளும் வினையும் ஒற்றுமைப்பட்டு வருவனவும், உயர்திணை வினைக்கண் ஓதிய இடமும் வன்மையும் பற்றி வருவனவும் கொள்க. முதற்று, முதல என்பன உருபும் பொருளும் வினையும் ஒற்றுமைப்பட்டன. மேற்று, மேல, மாடத்தது, மாடத்த என்பன இடம்பற்றி வந்தன. ஓடவற்று, ஓடவல்ல, [4]ஓடவல்லாது, ஓடவல்லா என்பன வன்மைபற்றி வந்தன. பிறவு மன்ன.

நச்.

("இன்றில...குறிப்பொடுங் கொள்ளும்")

1. ஈண்டு-அஃறிணை பற்றிய இச்சூத்திரத்தில்.
2. குறுந்தாட்டு - குறுகியதாளையுடையது; குறுந்தாள— குறுகிய தாளையுடையன.
3. அதற்கு—அஃறிணைத் தெரிநிலை வினைக்கு
4. ஓடவல்லாது—ஓட ஆற்றலில்லாதது, ஓடவல்லா—ஓட ஆற்றல் இல்லாதவை.

இஃது அஃறிணை வினைக் குறிப்புக் கூறுகின்றது.

இ-ள் : இன்று இல உடைய என்னும் கிளவியும்—இன்று இல உடைய என்னுஞ் சொற்களும், அன்று உடைத்து அல்ல என்னுங் கிளவியும்—அன்று உடைத்து அல்ல என்னுஞ் சொற்களும், பண்பு கொள்கிளவியும்—நிறப் பண்பைத் தனக்கு அடியாகக் கொண்ட சொல்லும், உள என் கிளவியும்—உள என்னுஞ் சொல்லும், பண்பின் ஆகிய சினை முதற்கிளவியும்—நிறப்பண்பாலும் குணப்பண்பாலும் உளதாகிய சினையோடு முதலையுணர்த்தும் சொல்லும், ஒப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ—உவமப் பொருள்பற்றி வருஞ்சொல்லோடே தொக்கு, அப்பால் பத்தும் குறிப்பொடு கொள்ளும்—அக்கூற்றுப் பத்துச் சொல்லும் காலங் குறித்துக் கோடலோடு வரும் வினைச் சொல்லாகக் கொள்ளப்படும், எ-று.

உ-ம் : இன்று. இல, உடைத்து, உடைய, அன்று, அல்ல, உள என்பன ஒருமையும் பன்மையுமாகிய வாசகத்தை உணர்த்தி நின்றன. அல்லன பொருள் உணர்த்தி நின்றன.

உண்டு என்னுஞ்சொல் உண்மையை யுணர்த்துங்கால் இன்று என்னுஞ் சொல்லும் அதற்கு மறையாய் 'முயற்குக் கோடு இன்று' எனப் பொய்ம்மையை யுணர்த்தியும், அவ்வுண்டு என்னுஞ் சொல் [2]பண்பை யுணர்த்துங்கால் அவ்வின்று என்னுஞ்சொல்லும் அதற்கு மறையாய் 'இக்குதிரைக்கு எக்காலமும் [3]நடையின்று' எனப் பண்பையுணர்த்தியும், அவ்வுண்டு என்னுஞ் சொல் குறிப்பையுணர்த்துங்கால் இன்று என்னுஞ் சொல்லும் அதற்கு மறையாய் 'இக்குதிரைக்கு ஈண்டு [4]நடையின்று' எனக் குறிப்பை யுணர்த்தியும் நிற்கும்.

[5]பொருண்மை சுட்டல் (வேற். 5) என்பதனால் உண்மை யுணர்த்தலும், ''உண்டென் கிளவி உண்மை செப்பின்'' (எழுத். குற்றி. 25) என்பதனான் வினைக் குறிப்பும் பண்பும் உணர்த்தினமையும் பெற்றாம்.

---

1. உண்மையை—இருத்தலை
2. பண்பை—உண்மைத் தன்மையை
3. நடையின்று—நடைக்குணம் இல்லை;
4. நடையின்று—நடத்தல் இல்லாதது.
5. இத்தொடரில், உணர்த்தலும் உணர்த்தினமையும் பெற்றாம் என்பதற்கு 'உண்டு' என்பது எழுவாயாகக் கொள்க.

இனி 'உள' என்னும் பன்மைக்கு இல என்னும் பன்மை மறையாம். இதற்கு 'உளது' என்னும் ஒருமை ஈறு சிறுபான்மை யாதலின் கூறிற்றிலர். [6]அதுதான் 'மா உள' எனப் பண்பு உணர்தியும், 'ஈண்டு நெல் உள' எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

[1]இனி, 'அறஞ் செய்வார்க்குத் துன்பங்கள் இல' எனப் பண்பு உணர்த்தியும், 'ஈண்டு உழுந்து இல' எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

[2]இனி உடைத்து, உடைய என்னும் ஒருமையும் பன்மையும் பெரும்பான்மை உறுப்பின் கிழமையும் பிறிதின் கிழமையும் பற்றி வரும். இவ்வெருது கோடு உடைத்து, இவ்வெருதுகள் கோடு உடைய எனப்பண்பு உணர்த்தியும், "குருதி படிந்துண்ட காகம் குக்கிற்புறம் உடைத்து, உடைய" (களவழி 5) எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

[3]இன்று, இல என்பன இவ்வுடைமைக்கு மறுதலையாய்க் கோடு இன்று, கோடு இல என நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்கால் 'கோடுஉடைத்து அன்று, கோடு உடைய அல்ல' என, அன்று, அல்ல என்னும் வாசகம் வருமாறு உணர்க.

---

6. மாவுள—விலங்குகளாக உள்ளன. நெல் உள-நெற்கள் இருக்கின்றன.
1. துன்பம் பண்பாதலின் இல என்பது பண்பையுணர்த்திய தாம். உழுந்து பொருளாதலின் இல என்பது அதன் இன்மையாகிய தொழிலை யுணர்த்தியது ஆதலின் வினைக்குறிப்பு உணர்த்தியதாம்.
3. எருதுகோடு உடைத்து என்பதில் கோடு உடைமை எருதின் பண்பாதலின் உடைத்து என்பது பண்புணர்த் தியது. குருதியில் தன் உடம்பு முழுவதும் தோய்ந்து அக்குருதியை உண்டதனால் காகம் (தன் முதுகுபுறம் செந்நிறமடைய அதனால்) குக்கிற் பறவையின் முதுகு புறத்தை உடைத்தாயிற்று என்னும்போது காகம் குக்கிற் புறத்தானது ஒரு தொழிலாதலின் 'குக்கிற்புறம் உடைத்து, என்பதில் உடைத்து என்பது குறிப்பு வினையை உணர்த்தியது.
3. குதிரை கோடின்று என்றால் குதிரைக்குக் கொம்பு இல்லை எனப் பொருள் கொள்ளாமல், குதிரை கோடு உடையதன்று எனப்பொருள் கொள்ளின் இன்று என்பது அன்று என்னும் வாசகமாக வருதலைக் காண்க.

[4]இனி அன்று, அல்ல, என்பன ஒருமையும் பன்மையும் உணர்த்தும். 'உழுந்து அன்று பயறு; உழுந்து அல்ல பயறு' எனப் பண்பு உணர்த்தியும், ''வேலன்று வென்றிதருவது'' (குறள். 456) எனவும், ''படையல்ல வென்றி தருவன'' எனவும் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

ஒன்றென முடித்தலான் நன்று, தீது, நல்ல, தீய என்பனவும் கொள்க.

பண்புகொள் கிளவி : கரிது, கரிய.

பண்பின் ஆகிய சினைமுதற் கிளவி : வெண் கோட்டது, வெண்கோட்டன; நெடுஞ் செவித்து, நெடுஞ் செவிய.

ஒப்பொடு வருஉங்கிளவி: பொன்னன்னது, பொன்னன்ன எனவரும்.

இனி ''அறிந்த மாக்கட் டாகுக தில்ல'' (அகம் 15), ''மெல் விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே'' (கலி. 40), மேற்று, வைகற்று, ''அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே'' (புறம். 173) என்பன பிறிதின் கிழமையாகிய உடைமைப் பொருள்பட நின்றன.

[1]வடாஅது, தெனா அது என்பன ஏழனுருபின் பொருள்பட வந்தன. மூவாட்டையது, செலவிற்று என்பன காலமுந் தொழி லும் பற்றி வந்தன. இவையெல்லாம் உரையிற்கோடலாம்.

(''பன்மையும் ஒருமையும்...வேறுபா டிலவே)

இஃது அவ்வினைக் குறிப்பிற்கு ஈறாமாறு கூறுகின்றது.

இ-ள்: பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த—பன்மையும் ஒருமையுமாகிய பால்களையறியவந்த, அன்ன மரபிற் குறிப்பொடு வருஉம் காலக்கிளவி—அத்தன்மைத்தாகிய முறைமையினை யுடைய காலங்குறித்துக் கோடலோடு வரும் வினைச்சொற்கள்,

---

4. உழுந்தன்று என்பதில் அன்று என்பது உழுந்தை உணர்த்தினாலும் தொழிலை உணர்த்தவில்லை. எனவே அன்மை எனும் பண்பையுணர்த்தியதாம். வேலன்று என்பதில் வெற்றி தருதலாகிய தொழிலை (அன்றுஎன) உணர்த்தலின் குறிப்பு வினையையுணர்த் தியதாம்.

1. வடாஅது—வடக்கின்கண்ணது, மூவாட்டையது—மூன் றாண்டு காலத்தது, செலவிற்று—செல்லுந் தொழிலு டையதாயிருந்தது.

அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே— அஃறிணையிடத்து மேற்கூறியதெரிநிலை வினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இல, எ-று.

அகரமுந் தகர றகர உகரமும் பெரும்பான்மை அவ்வீறு பற்றிப் பாலும் இடமும் உணர்த்துதல் முற்காட்டியவற்றுள் காண்க.

இனி ஆகாரம் 'இம்மணி நல்ல' என்னும் உடம்பாட்டுக் குறிப்பிற்கு 'இம்மணி பொல்லா' எனவரும்.

[2]இனி வகரம் ''கதவவாற் றக்கதோ காழ்கொண்ட இளமுலை'' (கலி. 57) என்புழிக் கதத்தினையுடைய எனவரும்.

இனித் தெரிநிலையுடன் கூடிய டகர உகரம் 'பூணை உடைத்து' என்னும் பொருண்மைக்கண் 'பூட்டு' எனவும், இடத்து என்னும் பொருண்மைக்கண் 'வகை தெரிவான் கட்டேயுலகு'' (குறள். 27) எனவும், 'எந்நாளது' என்னும் பொருண்மைக்கண் ''எந்நாட்டாகு நின்போரே'' எனவும்; 'விளைவினையுடைத்து' என்னும் பொருண்மைக்கண் ''வேலி ஆயிரம் விளையுட் டாக'' (பொருந. 246, 247) எனவும் 'குழிவினையுடைய கண்ணை யுடைத்து' என்னும் பொருண்மைக்கண் 'குண்டுகட்டு' எனவும் பொருள் இடம் காலம் தொழில் உறுப்பு என்னும் ஐவகைப் பெயரும் அடியாக வரும்.

ஓடவற்று, ஓடவல்ல, ஓடவல்லாது, ஓடவல்லா என்பனவும் கொள்க.

கல்.

என்-எனின், அஃறிணை வினைக் குறிப்புணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இன்று இல உடைய என்னுஞ் சொற்களும், அன்று உடைத்து, அல்ல என்னுஞ்சொற்களும், நிறப்பண்புப்பெயரினைத் தனக்கு அடியாகக் கொண்ட சொல்லும், உள என் சொல்லும், நிறப்பண்பும் குணப்பண்பும் எனப்பட்ட இருவகைப் பண்புப் பெயரும் காரணமாக உளதாகிய அப்பண்படைந்த சினையொடு முதலை உணர்த்துஞ் சொல்லும், உவமப் பெயரைத் தனக்கு அடியாகக்கொண்டுவரும்சொல்லொடுதொக்கஅக்கூற்றுப் பத்துச் சொல்லும் காலங்குறித்துக் கோடலோடு வரும் வினைச்சொல் லாகக் கொள்ளப்படும், எ-று.

உ-ம்: இன்று—இவ்வெருது கோடின்று.

இல- இவ்வெருது கோடில.

கோட்டினது இன்மை முதற்கு ஏற்றிக் கூறும் வழி இவ்வாறாய், இனி அக்கோடு தனக்கே இன்மை கூறும் வழி இவ்வெருதிற்குக் கோடின்று என ஒரு பொருள் முதற்கூறியானும் இவ்விடத்துக் கோடின்று என ஓரிடம் கூறியானும் இக்காலத்துக் கோடின்று என ஒரு காலங்கூறியானும் வரும்.

உடைய—இவ்வெருதுகள் கோடுடைய.
அன்று—நாய் அன்று நரி.
உடைத்து—இவ்வெருது கோடுடைத்து.
அல்ல—உழுந்தல்ல பயறு.

பண்புகொள் கிளவி—செய்யது, செய்ய, இது பொதுவாக ஓதினாராதலின் எல்லா நிறப்பண்பினோடும் ஒருமை பன்மைப் பட ஒட்டிக் கொள்க.

உள—உழுந்துள எனக் குறிப்புணர்த்தியும் வரும்.

பண்யினாகிய சினைமுதற்கிளவி—குறுங்கோட்டது, குறுங் கோட்டன, வெண்கோட்டது, வெண்கோட்டன என இருவகைப் பண்பும்பற்றி வரும்.

ஒப்பொடு வரூஉங்கிளவி—பொன்னன்னது, பொன்னன்ன எனவரும்.

(உடைமைப் பொருட்பெயர் முதலாய் அறுவகைப் பெயரினும் உடைமைப் பொருட்பெயர்......என்ற வாய்பாட்டால் கொள்ளப்பட்டது.)

அவ்வுடைமைதான் தற்கிழமையும் பிறிதின் கிழமையும் என்னும் இருவகையினும் வரும். ‘இப் பொழுது மணியுடைத்து’ எனப் பிறிதின் கிழமை வந்தவாறு.

இனி உண்டு உள என்றும், இன்று இல என்றும் ஒரு பொருள் தனது உண்மையும் இன்மையும் கூறும் வழியன்றி, அப் பொருளினைப் பிறிதொரு பொருட்கண் உண்மையும் இன்மையும் கூறிய வழி அது உடைமையாய் விடும் ஆகலால் இவற்றானும் உடைமைப் பொருள்பற்றி வருதல் கூறப்பட்டதாம்.

பண்புப் பெயருள் நிறப்பண்பு பற்றி வருதல் ‘பண்புகொள் கிளவியும்’ என்றதனாற் பெறப்பட்டது.

இனிக் குணப்பண்புப் பெயர் அன்று, அல்ல என்பவற்றானும் ஒரு பொருள் தனது உண்மையும் இன்மையும் உணர்த்திவரும்

உண்டு, உள, இன்று, இல என்பனவற்றானும் கொள்ளப் பட்டது.

உள என்று பன்மை வாய்பாடோதிய வதனால் அதன் ஒருமையாகிய உண்டு என்பதனையும் தன்னின முடித்தல் என்ப தனாற் கொள்க.

நன்று தீது சேய்த்து அணித்து என்னும் பிறபண்புகளை 'இன்றில' என்றோதிய வற்றானே 'ஒன்றென முடித்தல்' என்ப தனால் கொள்க. இவற்றுள் உண்டு உள என்பவற்றிற்கும், உடைத்து உடைய என்பவற்றிற்கும் இன்று இல என்பவற்றை எதிர்மறையாகக் கொள்க:

[1]இவை தம்மைச் சேர வைத்து ஓதானாயது செய்யுள் நோக்கிப் போலும்.

ஒப்புமைப் பண்புப் பெயர் 'ஒப்பினானும்' என்பதனால் கொள்ளப்பட்டது.

சினைப் பெயர் 'பண்பினாகிய சினை முதற் பெயரும்' என்பதனால் கொள்ளப்பட்டது.

இனியிவண் ஈண்டுக் கூறாதன இடப்பெயரும்காலப்பெயரும் தொழிற் பெயரும் என மூன்றுமே; அவற்றை உயர்திணை வினைக் குறிப்பு ஓதிய வழி 'அன்ன பிறவும்' என்று வைத்து, அதன் பின்னர்ச் சூத்திரத்தும் 'அன்ன மரபின்' என்றோதின தால் கொள்ளப்படும் என்றுணர்க. வடாது வேங்கடம், மூவாட்டையது, செலவிற்று என வரும் இவற்றின் உதாரண வாய்பபட்டு விகற்பங்களும் அறிந்து கொள்க.

இதன் பொருட் பெயர் முதல் அறுவகைப் பெயரினும் வரும் வரவினைத் தொகுத்தானும் விரித்தானும் ஓதாது, சிலவற்றை விரித்தும், சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றைக் கூறாதும் 'அப்பாற் பத்தும் குறிப்பு' என்று விட்ட கருத்து என்னை யெனின், இவை பெரும்பான்மையன என்றவாறு. பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்.

("பன்மையும் ஒருமையும்......வேறுபாடிலவே")

---

1. அன்று அல்ல எனவும் உடைத்து உடைய எனவும் சேர வைத்தோதானாயது=அல்லது இன்றுஅன்று உடைத்து என ஒருமைகளையும் இல அல்ல உடைய எனப் பன்மை களையும் சேர வைத்தோதானாயது.

என்எனின், மேற்கூறிய வினைக் குறிப்பிற்கு ஈறு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பன்மையும் ஒருமையுமான பால்களை அறிய வந்த அத்தன்மைத்தான மரபினையுடைய காலம் குறிப்பாய் வரும் வினைச் சொற்கள், அஃறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினை ஈறுகளோடு ஈறு வேறுபாடில, எ-று.

மேற்கூறிய அறுவகையீற்றுள் டகரவுகரம் ஈண்டு மாட்டேற்றிற் கேலமையின் [2]ஆண்டே கூறப்பட்டது. அஃது ஒழிந்த [3]ஐந்து ஈறும் மேல் எடுத்தோத்தானும் இலேசானும் வந்தவற்றிற்கு ஈறாயவாறு கண்டு கொள்க.

உடைத்து எனவும், சிறிது எனவும், கருங்கோட்டது எனவும் குறுங்கோட்டது எனவும், பொன்னன்னது எனவும், வடாது எனவும், மூவாட்டையது எனவும், உண்டிலது எனவும் தகர உகரம் வந்தது.

செம்மற்று எனவும், அன்று எனவும், குறுங்கோடிற்று எனவும், மேற்று எனவும், வைகற்று எனவும், செலவிற்று எனவும் றகரவுகரம் வந்தது.

பொருள எனவும், அல்ல எனவும், கரிய எனவும், கோட்ட எனவும், பொன்னன்ன எனவும், வடக்கண்ண எனவும், மூவாட்டைய எனவும், செலவின எனவும் அகரம் ஈறாய் வந்தது.

இனி ஆகாரம்: 'இம்மணி நல்ல' என்னும் உடம்பாட்டுக் குறிப்பிற்கு மறையாக 'இம்மணி பொல்லா' என வந்தவாறு கண்டு கொள்க.

"கதவவாற் றக்கதோ காழ் கொண்ட இளமுலை" என்புழிக் கதவ என்பது கதத்தினையுடைய என்னும் பொருண்மைக்கண் வகரம் ஈறாய் வந்தவாறு கண்டு கொள்க.

மேல் தெரிநிலை வினைக்கண் கூறிய டகரவுகரம் 'பூணையுடைத்து' என்னும் பொருண்மைக்கண் 'பூட்டு' எனவும், 'இடத்து' என்னும் பொருண்மைக்கண் 'வகை தெரிவான் கட்டேயுலகு" எனவும், எந்நாளிடத்து என்னும் பொருண்மைக்கண் "எந்நாட்டாகும் நும்போரே" எனவும், 'விளையுளை

---

2. ஆண்டே—'ஒன்றன் படர்க்கை என்னும் சூத்திரத்தே.
3. ஐந்து ஈறு — து, று, அ, ஆ, வ என்பன.

யுடைத்து' என்னும் பொருண்மைக் கண் 'வேலி யாயிரம் வினை யுட்டாக' எனவும், 'குழிந்த கண்ணை யுடைத்து' என்னும் பொருண்மைக்கண் 'குண்டு கட்டு' எனவும் பொருள் இடம் காலம் பண்பு தொழில் உறுப்பு என்னும் அறுவகைப் பெயரும் அடியாக வந்தவாறு கண்டு கொள்க.

கு. சுந்தரமூர்த்தி

இந்நூற்பாவில் இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள என்ற ஏழும் சொல்பற்றி ஓதப்பட்டன. ஏனைய மூன்றும்பொருள்பற்றி ஓதப்பட்டன. அவ்வேழனையும் பொருள் பற்றி ஓதாமைக்குக் காரணம், சொல்பற்றி ஓதினும் சுருங்கியே வருதலான் எனக் கூறினர். எனவே சொல்பற்றி ஓதின் விரியு மேல் அதனைப் பொருள்பற்றி ஓதுதலும், சொல்பற்றி ஓதின் சுருங்குமேல், அதனைச் சொல்பற்றியே ஓதுதலும் மரபு என்பது பெறப்படும். உயர்திணை வினைக் குறிப்புக் கூறுங்கால் பொருள் பற்றிவரும் வினைக்குறிப்பு முற்றைத் தனித்தும் (213) சொல் பற்றி வருவனவற்றைத் தனித்தும் (23) கூறினர் ஆசிரியர்.

உயர்திணை வினைக் குறிப்பு 'அதுச் சொல் வேற்றுமை யுடைமையானும், கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்' எனக் கூறியுள்ளார் ஆசிரியர். எனவே உயர்திணை வினைக் குறிப்பு 6, 7 ஆம் வேற்றுமைக்குரிய கிழமைப் பொருள் (தற்கிழமை, பிறிதின் கிழமை), இடப்பொருள்பற்றி வரும் என்பது தெரிகிறது. இதைப் போன்றே அஃறிணை வினைக் குறிப்பும் வரும். எனினும் ஆசிரியர் அவ்விரு வேற்றுமைப் பொருளிலும் வரும் என்னாது, 'பண்பினாகிய சினை முதற் கிளவிபற்றி வரும் என்றனர். நெடுஞ் செவித்து என்பது பண்பி னாகிய சினை முதற்கிளவியாம். நெடிய காதினையுடையது என்னும் இப்பொருண்மை ஆறாம் வேற்றுமையில் உறுப்பின் கிழமையின் பாற்படும். இங்ஙனய கூறவே ஆறாம் வேற்றுமை யில் உறுப்புத்தற்கிழமையில் மட்டும் அஃறிணை வினைக்குறிப்பு வரும் எனத் தெரிகிறது. இங்ஙனம் ஆசிரியர் ஓதினாரேனும் ஏனைய நான்கு தற்கிழமைப் பொருளிலும், பிறிதின் கிழமைப் பொருளிலும் அஃறிணை வினைக் குறிப்பு வரும் எனச் சேனா வரையர் கூறுகின்றார். எ-டு அறிந்த மாக்கட்டு ஆகுக—பிறிதின் கிழமை. குறை கூறும் செம்மற்று-பண்புத் தற்கிழமை. அணித்து, சேய்த்து—ஏழாம் வேற்றுமை இடப் பொருள். வடாஅது, தெனாஅது—ஏழாம் வேற்றுமைத் திசைப் பொருள்.

தே. ஆண்டியப்பன்

உள என்பது பன்மை. அதன் ஒருமை உண்டு என்பது. இரு திணைக்கும் அது உரியதாதலின் இங்கு எடுத்துரைக்க வில்லையென்பார் தெய்வச்சிலையார். உளது என்பதே ஒருமை. அது அருகி வருவதால் ஆசிரியர் கூறவில்லை என்பது இனியர் கருத்து.

பெரியது→பெரிது, உடையது→உடைத்து, நல்லது→நன்று, அன்னது→அற்று, செவியது→செவித்து என்பன மாற்று வடிவங்கள். உண்டு→உளது அஃறிணையில் விரவும். உயர்திணையில் உண்டு மாத்திரமே வரும். 'இன் சொலினது அறம்' என்றால் 'இன்சொல்லின்கண்' என்ற இடப்பொருண்மை புலப்படும். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதில் 'முதற்று' குறிப்பு வினையே. இனியர் அணித்து, சேய்த்து, வடாஅது, தெனாஅது போன்ற வடிவங்களைநினைவுபடுத்துகிறார். செலவிற்று,மூவாட்டையது உயர்திணைய போன்ற வடிவங்களையும் ஆய்வாளர் சிந்திக்கலாம்.

பயனிலையாக வரும் பெயர்களே குறிப்பு வினை என்ற கருத்துடையோர் பலர். பாதர்பெஸ்கி, டாக்டர் வரதராசனார், சுப்பிரமணிய நாவலர், டாக்டர் எஸ். சுப்பிரமணியன் போன்றோர் முக்கியமானவர்கள். அவன் அறிஞன், அவன் மரம் என்னும் தொடர்களில் அறிஞன், மரம் என்னும் பெயர்கள் குறிப்பு வினையே என்பர். சொல்லளவில் பெயரின் இயல்பு உருபேற்றலும் காலந்தோன்றாமையும் ஆகும். வினையோ சொல்லளவில் உருபு ஏலாது காலம் காட்டி நிற்கும். சொற்றொடர் அளவில் பெயர் எப்போதும் எழுவாய் அல்லது செயப்படுபொருளாகவேவரும். வினையோ பயனிலையாகவே நிற்கும். இங்ஙனம் வரையறுத்த பின்னர் சில எல்லைப் பிரச்சினைகள் எழுகின்றன. 'நெறி நின்றார் 'நீடு வாழ்வார்' என்னும் குறள்வரியில் நின்றார் எனும் வினை, பெயரின் தன்மையைப் பெற்றது. காலமும் காட்டி நிற்கிறது. எனவே வினையொடு அணையும் பெயர் என்ற முறையில் வினையாலணையும் பெயர் என்றனர். அவன் மரம் என்பதில் வினையின் தொழிலை மரம் குறிப்பாக நிறைவேற்றுவதால் தொடர்நிலையில் குறிப்புவினை என்றனர்.

(காப்பியர் நெறி. சொல்லியல், பக். 89, 90)

விரவுவினை பெயர், முறை, தொகை

217. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
யின்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னு
மம்முறை நின்ற வாயெண் கிளவியும்
[1]பிரிவுவேறு படூஉஞ் செய்திய வாகி
யிருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமைய (23)

(முன்னிலை வியம்கோள் வினைஎஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறுஎன் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அமுறை நின்ற அஎண் கிளவியும்
பிரிவுவேறு படூஉம் செய்திய ஆகி
இருதிணைச் சொற்கும் ஓர் அன்ன உரிமைய)

ஆ. மொ: இல.

The verbs belonging to second person, obtative mood, adverbial participle, the verbs indigating negaion, the word 'vēṛu', the type of words such as 'seymmana', 'seyyum' and 'seythu'—these eight words belonging to both classes differing in their meanings when used in either.

பி. இ. நூ:

நன். 330

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டு ஈ ரெச்சம் இருதிணைப் பொதுவினை

இல. 236.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறுண்டு
இன்மை செய்யும் இவற்றொடு ஈரெச்சமும்
பிரிவு வேறுபடூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன வுரிமைய

முத்து. வி. 22.

வியங்கோள் முன்னிலை வினையெஞ்சு கிளவி
செய்ம்மன வேறு செய்த செய்யும்
ஒருகால் உயர்திணை யுணர்த்தி ஒருகால்
அஃறிணை யுணர்த்தியும் ஆயிரு திணைக்கும்
ஒத்த உரிமைய ஆகும் என்ப.

---

1. திரிபு வேறுபடூஉஞ்—சேனா. கல். பாடம்
பிரிபு—நச். தெய். பாடம்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இருதிணைக்கும் உரிய வினைச்சொற்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : முன்னிலை என்பது—முன்னின்றான் தொழின்மை கூறுவது, வியங்கோள் என்பது—ஏவ நிற்பது; வினையெஞ்சு கிளவி என்பது—வினைச் சொல்லை ஒழிபாகி நிற்பது; இன்மை செப்பல் என்பது இல்லையென்பது; ஒழிந்தன அவ்வாய்பாடே.

அவற்றுள் செய்ம்மன என்பது இப்பொழுது வழக்கரிது.

பிரிவு வேறுபடூஉம் செய்தியவாய் என்பது—உயர்திணைக் கண்வரின் உயர்திணைக்கே யுரிய என்றும், அஃறிணைக்கண் வரின் அஃறிணைக்கேயுரிய என்றும் பிரித்துச் செய்யப்படுங் என்றவாறு.

சேனா.

இ-ள்: முன்னிலை முதலாகச் செய்த என்பது ஈறாகக் கூறிய முறையான் நின்ற எட்டுச் சொல்லும், பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையுணர்த்தியும், ஒருகால் அஃறிணையுணர்த்தியும் வேறுபடுந் தொழிலையுடையவாய் இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்த வுரிமைய, எ-று.

முன்னிலை வினைச் சொல்லாவது எதிர்முகமாய் நின்றான் தொழில் உணர்த்துவது.

[1]வியங்கோள்—ஏவற் பொருட்டாய் வருவது. [2]வாழ்த்துதல் முதலாகிய பிற பொருளும் உடைத்தாகலின் இக்குறி மிகுதி நோக்கிச் சென்ற குறியெனவுணர்க.

வினையெஞ்சு கிளவி — வினையை யொழிபாகவுடைய வினை.

இன்மை செப்பல்—இல்லை, இல் என்பன.

---

1. வியம்—ஏவல். வியங்கோள்—ஏவற் பொருளைக் கொண்டது.
2. ஆவாழ்க—வாழ்த்துதல், அருளுக—வேண்டிக்கோடல், ஒழிக—வைதல் – இப்படிப் பல பொருள் வியங்கோளுக்கு உண்டு. செல்க—ஏவல். இதுபோல் ஏவலில் வருவதே மிகுதி.

வேறென் கிளவி — தன்னையுணர்த்தி நின்றது.

செய்ம்மன வென்பது மனவீற்று முற்றாய் எதிர்காலம் உணர்த்தும்.

செய்யும் என்பது முற்றும் எச்சமுமாகிய இரு நிலைமையும் உடைத்தாய் உம்மீற்றான் நிகழ்காலம் உணர்த்தும்.

செய்த என்பது — அகர வீற்றெச்சமாய் இறந்த காலம் உணர்த்தும்.

செய்ம்மன முதலாகிய மூன்று வாய்பாட்டானும், அவ்வீற்ற வாய்க் காலம் உணர்த்தும் உண்டன, உண்ணும், உண்ட என்னும் தொடக்கத்தன வெல்லாந் தழுவப்பட்டன. [1]அவற்றான் அவை தழுவப்பட்ட வாறென்னை யெனின், எல்லாத் தொழிலும் செய்தல் வேறுபாடாதலின் பொதுவாகிய செய்தல் எல்லாத் தொழிலையும் அகப்படுத்து நிற்கும்; அதனான் அவற்றான் அவை தழுவப்படும் என்க. [2]அவை பொதுவுஞ் சிறப்பும் அல்லவேல்'என் செய்யா நின்றான்' என்று வினாய வழி, 'உண்ணா நின்றான்' எனச் செப்புதல் இயையாதாம் என்க. இது செய்து செய்பு என்பனவற்றிற்கும் ஒக்கும்.

அஃதேல் சிலவற்றை ஈற்றான் உணர்த்திச் சிலவற்றை வாய் பாட்டானுணர்த்திய தென்னை யெனின், [3]அம்மீறும் அன்னீறும் ஐயீறும் முதலாகிய சொற்கள் காலப் பன்மையான் வரும் வாய்

---

1. அவற்றான் — செய்ம்மன, செய்யும், செய்த என்பன வற்றால். அவை — உண்மன முதலியன.
2. உண்ணல், தின்னல், வருதல் முதலியசொற்கள் அவ்வத் தொழில்களுக்குரிய சிறப்புச் சொற்கள். அவற்றை உணர்த்தும் பொதுச் சொல் செய்தல் என்பது. சிறப்பு வினையைப் பொதுச் சொல் கொண்டும் உணர்த்த லாம். உண்ணுதல் செய்தான் என்னலாம். பொதுச் சொல் சிறப்புச் சொற்கும் ஏற்கும். 'என்செய்யா நின்றான்' எனப் பொதுவில் வினாவினால் 'உண்ணா நின்றான்' எனச் சிறப்புத் தொழிற்சொல் விடையாக வருதலைக் காணலாம். வினா பொதுச் சொல்லது. விடை சிறப்புச் சொல்லது.
3. அம்ஈறு — செய்தனம், செய்கின்றனம், செய்வம் எனக் காலத்துக்கேற்ப வாய்பாடுகள் வந்தவாறு. பிறஈறுகளும் அன்ன.

பாட்டுப் பன்மையாற் சூத்திரம் பெருகும் என்றஞ்சி அவற்றை ஈற்றானுணர்த்திக் காலவேறுபாடு இலேசாற் கொள்ள வைத்தார். காலப் பன்மையில்லனவற்றை வாய்பாட்டானும் உணர்த்துப; ஈற்றானும் உணர்த்துப.

முற்றாதலும் பலவாய்பாட்டாற் பயின்று வருதலும் உடைமையான் முன்னிலை வினையை முன் வைத்தார். ஏவற் பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையின் பொருள் இயைபு உடைத்தாகலானும், இடங்குறித்து முற்றாய் வருதல் ஒப்புமையானும் அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன்பின் முற்றாதல் ஒப்புமையான் இன்மை செப்பல் வேறென் கிளவி செய்ம்மன என்பனவற்றை வைத்தல் முறைமையாயினும் முற்றின்கண் வினையெச்சம் உண்மையானும், [1]ஈற்றுப் பன்மையொடு பயின்று வருதலானும் வினையெச்சம் வைத்தார். [2]இன்மை பற்றி வரும்வினையெச்சமும் உண்மையான்அதனோடியைய இன்மை செப்பல் வைத்தார். [3]வினைக் குறிப்பாதல் ஒப்புமையானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானும் அதன்பின் வேறன்கிளவி வைத்தார். முற்றாதல் ஒப்புமையான் அதன்பின் செய்ம்மன வைத்தார். [4]முற்றாம் நிலைமையும் உடைத்தாகலின் அதன்பின் செய்யும் என்பது வைத்தார். பெயரெச்சமாதல் ஒப்புமையான் அதன்பின் செய்த என்பது வைத்தார். இவ்வாறியைபு பற்றி வைத்தமையான் 'அம்முறை நின்ற' என்றார்.

திரிபு வேறு படூஉஞ் செய்தியவாகி' யெனவே வேறுவேறு உணர்த்தினல்லது ஒருசொற் சொல்லுதற்கண் இருதிணையும் உணர்த்தாமை பெறுதும்

---

4. முற்றின்கண் வினையெச்சம் உண்மையாவது வினைமுற்று வினையெச்சமாவது.

1. உகர அகர முதலிய ஈற்றுச் செய்து செய முதலிய வாய்பாட்டுப் பன்ம்ம, ஈற்றுப்பன்மையாம்.

2. இன்மைபற்றிவரும் விளையெச்சம் இன்றி.

3. வினைக் குறிப்பாதல் ஒப்புமை—இன்றி என்பது குறிப்பு வினையெச்சம்; வேறு என்பது குறிப்பு முற்று; எனவே குறிப்பு என்பதில் ஒப்பாதல் காண்க.

4. செய்யும் என்பது 'அவன் செய்யும்' என முற்றாகவும் காண்க. அதுவே 'செய்யும் அவன்' எனப் பெயரெச்சமாகவும் வரும்.

தெய்.

நிறுத்த முறையானே இருதிணைக்கும் உரிய வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்டனவற்றுள் முன்னிலைவினை முதலாக எடுத்து ஓதப்பட்ட எண்வகைச் சொல்லும் பிரிந்து வேறுபடூஉம் செய்கையவாகிய இருதிணைச் சொற்கும் ஒத்த உரிமையை உடைய. எ-று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

நச்.

இது நிறுத்த முறையானே விரவு வினை உணர்த்துகின்றவற்றின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இ-ள்: முன்னிலை—எதிர்முகமாக நின்ற பொருளினது தொழில் உணர்த்தும் முற்றுச் சொல்லும், வியங்கோள்—படர்க்கைப் பொருள் மேல் ஏவற்பொருண்மையைக் கொண்டு வரும் முற்றுச் சொல்லும், வினையெஞ்சு கிளவி—முடிக்கும் வினையை ஒழிபாகவுடைய வினைச் சொல்லும், இன்மைசெப்பல்—இன்மை என்னும் பண்பினையுணர்த்தும் இல்லை என்னும் வினைக்குறிப்பு முற்றுச் சொல்லும், வேறு என் கிளவி—வேறு என்னும் வேறுபாடு தன்னை உணர்த்தி நிற்கும் வினைக் குறிப்பு முற்றுச் சொல்லும், செய்ம்மன—மன ஈற்று எச்சமாய் எதிர்காலம் உணர்த்தும் செய்ம்மன என்னுஞ் சொல்லும், செய்யும்—முற்றும் எச்சமுமாய் உம் ஈற்றால் நிகழ்காலம் உணர்த்தும் செய்யும் என்னும் சொல்லும், செய்த—அசுர வீற்று எச்சமாய் இறந்தகாலம் உணர்த்தும் செய்த என்னும்சொல்லும், என்னும் அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்—என்று செகல்லப் படுகின்ற அவ்வடைவின்கண் நின்ற அவ்வெட்டுச் சொல்லும், பிரிபு வேறுபடூஉம் செய்திய ஆகி—பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையையும் ஒருகால் அஃறிணையையும் உணர்த்தி வேறுபடும் தொழிலையுடையவாய், இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய—இருதிணையை யுணர்த்துஞ் சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாம், எ-று.

என் செய்யா நின்றான் என்று வினாயவழி, உண்ணா நின்றான் எனச் செப்புதலின், செய் என்னும் வாசகம் எல்லாத் தொழிலினையும் அகப்படுத்தி நிற்றல்பெற்றாம். இருதிணைக்கும் பொதுவாயதோர் பொருள் இன்மையான், அதனால் நிகழும் விரவுத் தொழில் என்பது ஒன்று இன்றால் எனின், அவ்விரவுத் தொழிலைக் கூறுகின்றவன் அதனை நிகழ்த்திய வினைமுதல்

உயர்திணை அஃறிணையென்பது உணர்ந்தே கூறுமாயினும், பால் காட்டும் ஈறு இன்மை காரணத்தால் கேட்டோர் உணர்வு இருதிணை வினைமுதல் மேலும் ஒருங்கு சேரலான், அவ்வினை முதற் பொதுமையால் நிகழும் விரவுத் தொழிலும் உளவாயின.

கல்.

என்-எனின், மேல் நிறுத்த முறையானே விரவுவினை உணர்த்துவான் தொடங்கி அவற்றது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: முன்னிலையிடத்தினைத் தனக்குப் பொருண்மையாக வுணர்த்தும் சொல்லும், ஏவலைத் தனக்குப் பொருண்மையாகக் கொண்ட சொல்லும், வினைச்சொல்லை ஒழிபாகவுடைய சொல்லும், இன்மை என்னும் பண்பினை உணர்த்துதலுடைய சொல்லும், வேறு என்னும் சொல்லும், செய்யும் என்னும் சொல்லும், செய்த என்னும் சொல்லும் என்று சொல்லம்படு கின்ற அவ்வடைவின்கண் நின்ற அவ்வெட்டுச்சொல்லும் ஒருகால் உயர்திணைக் கண்ணும், ஒருகால் அஃறிணைக் கண்ணும் பொது மையிற் றிரிந்து வேறுபட்டு நிற்கும் தொழிலினையுடையவாகிய இருதிணையாகிய பொருட்கும் ஒன்று போன்ற உரிமையுடைய எ—று.

[1]முன்னிலை என்பது முன் உயர்திணைக்கண்ணும் அஃறிணைக் கண்ணும் தன்மையும் படர்க்கையும் கூறிய இடங் களுள் கூறாது நின்றது ஆகலானும், தான் பல ஈற்றால் பயின்று வருவதாகிய வழக்குப் பயிற்சி யுடைமையானும், முற்றுச் சொல் லாதலானும் முன்வைக்கப்பட்டது.

இனி அதன் பின்னர் வியங்கோள், முற்றுச் சொல்லுமாய்ப் பெரும்பான்மை வரவு படர்க்கையென ஓரிடமாய்ப் பல வழக் கிற்று ஆகவான் வைக்கப்பட்டது.

இவையிரண்டும் அவற்றுப் பொருண்மையால் பலவற்றை யொன்றாக அடக்கப்பட்டன.

அவற்றின் பின்னர் அவை போல வழக்குப் பயிற்சியுடைமை யால் வினையெச்சம் வைக்கப்பட்டது. இஃது அச்சொல்லும் முடிபிலக்கணத்தான் ஒன்றாக அடக்கி ஓதப்பட்டது.

இன்மை செப்பலும் வேறென் கிளவியும், முன்னிலையும் வியங்கோளும் போல முற்றே யெனினும் வினையெல்லாம்

1. இப்பகுதியில் உள்ள முதற்காரணம் பிறர்கூறாதது.

போலாது சிறுவரவின ஆகலானும், வினைக் குறிப்பின் பன்மை யானும் வினையெச்சத்தின் பின் வைக்கப்பட்டன.

அவற்றின் பின்னர்ச் செய்ம்மன என்பது தெரிநிலை முற்றே எனினும் பல வாய்பாட்டதாயினும் வழங்குவாரின்மையின் பின் வைக்கப்பட்டது.

அதன் பின்னர்ச் செய்யும் என்பதுஒருவழிமுற்றாம் நிலைமை யும் உடைத்தாகலின் அதன் பின் வைக்கப்பட்டது.

அதன் பின்னர் அதனோடு ஒத்த பெயரெச்சம் ஆகலின் செய்த என்பது வைக்கப்பட்டது.

இன்மை செப்பல் முதல் ஐந்தும் அச்சொற்கள் தம்மையே ஓதின எனினும் வேறு என்ப தொன்றும் ஒழிய மற்றையன எல்லாம் பல வாய்ப்பட்டன என்று கொள்க.

அஃதென்னை யாமாறெனின், இல்லை என்னாது இன்மை செப்பல் என்றதனால் இல்லை என்பதும் இல் என்பதும் என இரண்டாயிற்று.

செய்ம்மன செய்யும் செய்த என்பன உண்மன, தின்மன எனவும்; உண்ணும், தின்னும் எனவும்; தின்ற எனவும் பல வாய் பாட்டவாயின.

செய்ம்மன என்றால் உண்மன தின்மனபெறுமாறு என்னை எனின், அச்சொற்களின் பொருண்மையும் ஒருவழிச் செய்ம்மன என்பதனால் சொல்லப்படுதலின், இஃது அவற்றிற்கெல்லாம் பொதுவாய்பாட்டது என்பது.

அஃதேல் அவ்வாறாவது பொருளுணர நின்ற வழியன்றே இஃது அச்சொல் தன்னை உணர நின்ற இடமால் எனின், அஃதொக்கும்; பொருண்மையால் பொதுமையுடைய சொல் லினைக் கூறவே அதனுள் வகையாகிய சொற்களும் தன்னின முடித்தல் என்னும் தந்திரவுத்தியான் அடங்கும் என்பது போலும் கருத்து.

கணேசய்யர்

திரிபு வேறுபடூஉம் என்பது, பிரிபு வேறுபடூஉம் என்றும் உள்ளது: ஆசிரியர் பெயரியலில் 18ஆம் சூத்திரத்திலும் வேறு சூத்திரங்களிலும் திரிபுவேறுபடூஉம் என்றும்,திரிந்துவேறுபடினும் என்றும் பிரயோகித்தலின், ஈண்டும் அவ்வாறே கொண்டாம். திரிதல் என்பதற்குப் பொதுமையிற் பிரிந்து திணையிரண்டன் கண்ணும் சேறல் என்பதே பொருள். திரிதல் என்பதன் கருத்தறி

யாது பிரிந்து என்று திருத்தப்பட்டது. இச்சூத்திரவுரையுள் பின் வரும் வாக்கியத்துள் திரிந்து வேறுபடூஉம்என்றே உரையாசிரியர் சூத்திரச் சொற்களை எடுத்தாளுதலானும் திரிந்து வேறுபடூஉம் என்பதே சூத்திரத்தின் பாடமாதல் துணியப்படும்.

முன்னிலை ஒருமை வினைமுற்று

218. அவற்றுள்
முன்னிலைக் கிளவி
யிய்யை யாயென வரூஉ மூன்று
மொப்பத் தோன்று ‡மொருவர்க்கு மொன்றற்கும்'' (24)

(அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்)

ஆ. மொ: இல.

Of them the verbs of second person which end in 'i' 'ai' and 'āy' — are three which belong equally to singular of both high class and non-class.

பி. இ. நூ:

நேமி. சொ. 42.

ஒருமைக்கண் முன்னிலையாம் இ ஐ ஆய்

நன். 338

ஐ ஆய் இகர வீற்ற மூன்றும்
(ஏவலின் வரூஉம் எல்லா வீற்றவும்)
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே

இல. 238

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
....
முப்பால் ஒருமை முன்னிலை வினை

முத்து. வி. 23, 24

ஐ ஆய் இறுதி முன்னிலைக் கிளவி
ஒருவன் ஒருத்தி ஒன்றற்கும் உரிய
இகர இறுதியும் அவற்றோ ரற்றே.

---

‡ ஒருவற்கும்—பாடம்-இது தவறு.

இளம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், முன்னிலை யொருமைச் சொற்கள் இருதிணைக்கும் உரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : முன்னிலைக் கிளவிகளில் இ ஐ ஆய் என்னும் மூன்று திறத்தனவும் இரண்டு திணை யொருமைப் பால் மூன்றற்கும் ஒப்ப உரியவாம், எ-று.

உயர்திணை யாண்பாற்கும் பெண்பாற்கும் அஃறிணை யொருமைப் பாற்கும் என்பது.

வ-று : உண்டி, தின்றி என இறந்த காலத்திற்கே பொருத்த முடைத்தாய் இகரம் வரும்.

இனி ஐ வருமாறு ; உண்டனை, உண்ணா நின்றனை, உண்குவை என மூன்று காலமும் வரும்.

ஆய் : உண்டாய், உண்ணா நின்றாய், உண்பாய் என மூன்று காலமும் வரும்.

இனி ஒரு காலத்திற்கே யேற்கும் இகரம் முற்கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தனவும் கொள்க.

சேனா.

இ-ள் : கூறப்பட்ட விரவு வினைகளுள் முன்னிலைச் சொல் இகர வீறும் ஐகார வீறும் ஆய் ஈறுமாகிய மூன்றும் ஒருவற்கும் ஒருத்திக்கும் ஒன்றற்கும் ஒப்பச் செல்லும், எ-று.

‡முன்னிலைக் கிளவி என்பதற்கு முடிபு "அவைதாம், அம் ஆம் எம் ஏம்" (வினை 5) என்புழி 'அவைதாம்' என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க.

---

‡ 'ஒருவர்க்கும் ஒன்றற்கும் ஒப்பத் தோன்றும் இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்' ஒரு தொடராய், 'முன்னிலைக் கிளவி' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின. 'இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்' என்னும் எழுவாய்க்கு 'ஒருவர்க்கும் ஒன்றற்கும் ஒப்பத் தோன்றும்' என்பது பயனிலை. இவை மாறி நின்று ஒரு தொடராகிப் பயனிலையாயின.

இகரம் தடற ஊர்ந்து எதிர்காலம் பற்றிவரும். ஐகாரம் அம் ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், ஆய் ஈறு ஆம் ஈற்றிற்குரிய எழுத்துப்பெற்றும் மூன்று காலமும் பற்றிவரும்.

உ—ம்: உரைத்தி, உண்டி, தின்றி எனவும்; உண்டனை உண்ணாநின்றனை, உண்பை எனவும்; உண்டாய், உண்ணா நின்றாய், உண்பாய் எனவும் வரும். ஒழிந்த எழுத்தோடும் ஒட்டிக் கொள்க. ''ஐய சிறிது என்னை ஊக்கி'' (குறிஞ்சிக்கலி. 1) என இகரம் சிறுபான்மை ககரம் பெற்றுவரும்.

உண், தின், நட, கிட, என்னுந் தொடக்கத்து முன்னிலை யொருமை பெறுமாறு என்னையெனின், [1]அவை ஆய் ஈறாதல் எச்சவியலுட் (54) பெறப்படும் என்க.

தெய்.

முன்னிலை வினைச் சொல்லுள் ஒருமை யுணர்த்தும் ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற்சொல்லப்பட்டவற்றுள் முன்னிலைக் கிளவிக் கண் இ, ஐ, ஆய் என்று வரூம் ஈற்றினையுடைய மூன்று சொல் லும் உயர்திணை ஆண்பாற்கும் பெண்பாற்கும் அஃறிணை ஒன்றன்பாற்கும் ஒத்த இயல்பினவாகித் தோன்றும், எ—று.

முன்னிலை வினையென்னாது முன்னிலையெனப் பொதுப் பட ஓதினவதனால் அச்சொல் இருவகைப்படும்; முனனின்றான் தொழில் உணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்தற்கு ஏவல் குறித்து வருவனவும் என.

உ—ம்: உண்டி, உண்கிற்றி, உண்டனை, உண்ணாநின் றனை, உண்குவை, உண்பை, உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய், உண்ணாய்; கருத்தி, கரியை, கரியாய் என்பன முன் னின்றான் தொழில் உணர்த்தின. இவற்றுள் [2]ஆய் என்பது

---

1. உண்ணாய், தின்னாய் என்பன ஆய்விகுதி குன்றி உண் தின் என நின்றன; ஆதலின் முன்னிலை ஒருமையா யின. ஆய்விகுதி குன்றியதாகக் கொள்ளாக்கால் உண் மின் தின்மின் என்னும் பன்மைக்கும் உண்ணாய் தின்னாய் என்னும் ஒருமைக்கும் முதல்நிலை மாத்திரை யாக நிற்கும் என்க.
2. உண்டாய்—தொழில், உண்ணாய் — (உண்ணுவாயாக) ஏவல். உண்ணாய்—(உண்ண மாட்டாய், உண்ணாதே) மறை.

மறையினும், ஏவலினும், தொழிலினும் வரும். உண்டி என்பது தொழிலினும் ஏவலினும் வரும். பிறவும் அன்ன.

அஃதேல் நட, வா, அறி, ஈ, கொடு, தூ, ஏ, வை, போ, கௌ எனவும்; செல், கொள், உண், தின், கூட்டு எனவும் உயிரீறும் ஒற்றீறும் ஆகிப் பலவகையான் வருவன எல்லாம் ஓதாது முன்னிலைச் சொல் மூன்று என்றது என்னையெனின், அவையெல்லாம் ஆய் என்னும் சொல் குறைந்து நின்றன. அன்னவாதல் ''செய்யாய் என்னும் முன்னிலை வினைச் சொல், செய்யென் கிளவி ஆகிட னுடைத்தே'' (எச்ச. 54) என்பதனுட் கண்டு கொள்க.

நச்.

இது முறையானே முன்னிலை ஒருமை வினை கூறுகின்றது.

இ—ள் : அவற்றுள் முன்னிலைக் கிளவி—அவ்வெட்டனுள் முன்னிலைச் சொல் ஆமாறு சொல்லுவல், இஐஆய் என வருஉம் மூன்றும்—இஐஆய் என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும், ஒருவர்க்கும் ஒன்றற்கும் ஒப்பத் தோன்றும்—உயர் திணை ஆண்பாலும் பெண்பாலுமாகிய ஒருமைப்பாற்கும் அஃறிணை யொருமைப்பாற்கும் மிகுதி குறைவின்றி ஒப்பத் தோன்றும், எ—று.

இகரம் ட, த, ற ஊர்ந்து எதிர்காலம் பற்றிவரும்.

உ-ம் : உண்டி, உரைத்தி, தின்றி—இவற்றை உண்பை, உரைப்பை, தின்பை என விரிக்க. இனி,

[1]உரைக்கிற்றி, ''நன்றுமன் என்னிது நாடாய் கூறி'' என நிகழ்வுபற்றியும் வரும். [2]இவைதாம் எடுத்தல் ஓசையாற் கூறும் வழி உண்பாய், உரைப்பாய், தின்பாய் என ஏவற் பொருண்மையும் உணர்த்தும்.

இனி, ''ஐய சிறிது என்னை [3]ஊக்கி'' (கலி.37) எனவும், ''ஈதன் மாட் [4]டொத்தி பெரும'' (கலி-86) எனவும் ககரமும் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும். [5]இதற்குப் ''பிரிந்துறை சூழாதி'' (கலி-18) என்பது மறை.

---

1. உறைக்கிற்றி — உரைக்கின்றாய். கூறி—கூறுகின்றாய்.
2. இவைதாம் என்றது உண்டி, உரைத்தி, தின்றி என்பனவற்றை.
3. ஊக்கி — ஊக்குவாய்—ககரம் எதிர்காலம் காட்டியது.
4. ஒத்தி — ஒப்பாய் — தகரம் எதிர்காலம் காட்டியது.
5. இதற்கு—இகர வீற்றுக்கு, சூழாதி—சூழாதே.

இனி ஐகாரம் அம்ஈற்றுக்கு உரிய எழுத்துப் பெற்றும், ஆய் ஈறு ஆம் ஈற்றுக்குரிய எழுத்துப் பெற்றும் மூன்று காலத்தும் வரும்.

உ-ம்: உண்டனை, உண்ணாநின்றனை, உண்பை, உண்குவை, கரியை எனவும்; உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய், கரியாய் எனவும் வரும். உரிஞினை, உரிஞினாய் என ஏனை எழுத்தோடும் ஒட்டுக. உரை என்றால் ஏவல் கண்ணு மாறும் உணர்க. உண்ணா நிற்றி என்பது, எதிர்காலத்துப் பிறந்த நிகழ்காலம். இனி உண்டிலை, உண்ணா நின்றிலை, உண்ணலை எனவும், உண்டிலாய், உண்ணா நின்றிலாய், உண்ணாய் எனவும் மறைவரும்.

கல்.

என்-எனின், மேல் நிறுத்தமுறையானே முன்னிலை வினை உணர்த்துவான், அவற்றுள் ஒருமையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். இஐ ஆய் என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும் உயர்திணை ஆண்பாலும்பெண்பாலுமாகிய ஒருமைப் பாற்கும் அஃறிணை ஒருமைப்பாற்கும் மிகுதி குறைவு இன்றி ஒப்பத் தோன்றும், எ-று.

[1]ஒன்று என்றாரே யெனினும் உயிருடைய ஒன்றன் மேலது பெரும்பான்மையென வுணர்க.

உ-ம்: உண்டி என இகரவீறு எதிர்காலமே பற்றி வரும். உண்ணா நிற்றி எனச் சிறுபான்மை நிகழ்கால வரவு உண்டே னுங் கொள்க. இவ்வீற்று வினைக்குறிப்பு உண்டேனும் அறிக.

ஐ—உண்டனை, உண்ணா நின்றனை, உண்குவை, உண்பை, கரியை எனவரும்.

ஆய்—உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய் எனவும்; கரியாய், செய்யாய், பொல்லாய் எனவும்வரும்.

உண்ணாதி எனவும்; உண்டிலை, உண்ணாநின்றிலை, உண்ணலை எனவும்; உண்டிலாய், உண்ணாநின்றிலாய், உண்ண ல்ாய் எனவும் வரும் மறைவாய்பாடும் அறிக.

---

1. ஒன்றற்கு என்றது உயிர்ப்பொருளையும் உயிரில் பொருளையும் குறிக்குமாயினும் உயிருடைய ஒன்ற னையே குறிக்கும் என்பது.

வெள்.

....

''இனி ஒரு காலத்திற்கே யேற்கும் இகரம் முற்கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தன கொள்க'' என்றார் இளம்பூரணர். இவ்வுரைக் குறிப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் நட, வா, போ என வரும் வினைப்பகுதி களே இ ஐ ஆய் முதலிய விகுதி வேண்டாது முன்னிலை ஒரு மையை யுணர்த்தி நிற்கும் என்பது இளம்பூரணர் கருத்தெனக் கொள்ளவேண்டியுளது. உண்ணாய், தின்னாய், நடவாய் கிடவாய் என ஆய் என்னும் ஒருமை விகுதியோடு புணர்ந்து நின்று ஒருமையுணர்த்தியனவே ஆய் விகுதி கெட உண், தின், நட, கிட என நின்றன என்பது,

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே. (எச்ச. 54)

எனவரும் எச்ச வியற் சூத்திரத்தாற் பெறப்படும் என்பது சேனாவரையர் கருத்தாகும். இவ்விருவேறு கருத்துக்களுள் இளம்பூரணர் கருத்தைத் தழுவியமைந்தது,

ஐ ஆய் இகர வீற்ற மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா வீற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே (நன். 334)

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்............

இதன்கண் ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும் என்றது நட என்பது முதல் அஃகு என்பது வரை இருபத்து மூன்று ஈற்றன வாக முன் (நன். 136) விரித்துரைக்கப்பட்ட செய் என்னும் வாய்பாட்டு ஏவல்வினைப் பகுதிகளை. இந்நுட்பம்,

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகு என்று
எய்திய இருபால் மூன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே. (நன். 136)

எனவரும் நன்னூற் சூத்திரத்தால் நன்குபுலனாதல் காணலாம். இவ்விரு சூத்திரங்களையும் ஒருங்கு வைத்துணருங்கால் நட, வா, உண், தின் என்றற் றொடக்கத்து முதனிலைகளே ஆய் முதலிய விகுதியோடு புணராது தனித்து நின்று ஓசை வேறுபாட்டால் முன்னிலையேவல் ஒருமை எதிர்கால வினைமுற்றுப் பொருண்மை

யுணர்த்துவன என்பது பவணந்தியார் கொள்கையாதல் நன்கு விளங்கும். "இம்மூன்று விகுதியீற்றனவான முற்றும், ஏவலின் வரும் இருபத்து மூன்று ஈற்றனவான மொழிகளும் ஒருமை முப்பாலையும் உணர்த்தும் முன்னிலை வினைக்குறிப்பு முற்றுக் களாம்" எனவரும் மயிலைநாதர் உரையினால் நன்னூலார் கொள்கை தெற்றெனப் புலனாதல் காணலாம்.

முன்னிலைப் பன்மை வினைமுற்று

219. இர்ரீர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினுஞ்
சொல்லோ ரனைய வென்மனார் புலவர் **(25)**

(இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லூர் அனைய என்மனார் புலவர்)

ஆ. மொ: இல.

The three verbs which end in 'ir' 'īr' and 'min' belong to the plural of both high class and non-class—the scholars say.

பி. இ. நூ:

நன். *337, 338*

இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை (மின்அவற்று ஏவல்)
முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை

இல. *238*

இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின்னும் ஈற்ற
அன்னவற் றேவலும் ஆமென மொழிப.

முத்து. வி. *25*

இர்ஈர்மின் ஈறாம் பெயர்க் கிளவி
பல்லோர் மருங்கினும் பலவோடுஞ் சிவணும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், முன்னிலைப் பன்மை வினைச்சொல் இவையென்று உணர்த்துதல் நுதலிற்று.

உரை: இக்கூறப்பட்ட மூன்றும் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் ஒப்பவுரியவாகுஞ் சொல், எ—று.

இர்—உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர் எனவும்;

ஈர்—உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர் எனவும் வரும். இவை மூன்று காலமும் பற்றி வரும்.

மின்—உண்மின், தின்மின் என எதிர்காலம் பற்றி வரும்.

சேனா.

இ-ள்: இர் ஈர் மின் என்னும் ஈற்றையுடைய மூன்று சொல்லும், பல்லோர்க் கண்ணும் பலவற்றின் கண்ணும்சொல்லு தற்கண் ஒத்தவுரிமைய, எ—று.

இர்ஈறு அர்ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், ஈர் ஈறு ஆர் ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்றும் மூன்று காலமும் பற்றி வரும். மின்ஈறு பிற எழுத்துப் பெறாது ஏற்றவழி உகரம் பெற்று, எதிர் காலம் பற்றி வரும்.

உ-ம்: உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர் எனவும்; உண்டீர், உண்ணாநின்றீர், உண்குவீர் எனவும்; உண்மின், தின்மின், உரினுமின் எனவும் வரும். ஒழிந்த எழுத்தோடும் ஒட்டிக் கொள்க.

முன்னிலை வினைக்குறிப்பு உயர்திணை வினைக் குறிப்பிற் கோதிய பொருள்பற்றி ஐகாரமும்ஆயும் இருவும் ஈரும் என்னும் நான்கீற்றவாய், கழலினை, நாட்டை, பொன்னன்னை, கரியை எனவும்; கழலினாய், நாட்டாய், பொன்னன்னாய், கரியாய் எனவும்; கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர். கரியிர் எனவும்; கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர் என வும் வரும். ஒழிந்த பொருளோடும் ஒட்டிக் கொள்க.

போறி என இகரவீற்று வினைக் குறிப்பும் உண்டால் எனின், போன்றனன், போன்றான் என்பன போல வந்து தெரிநிலை வினையாய் நின்றது என மறுக்க.

அஃறிணை வினைக் குறிப்பும் உயர்திணை வினைக்குறிப்பிற் கோதிய பொருள் பற்றி வருதலின், அவற்றையெடுத்தோதிற் றென்னையெனின், [1]இன்று முதலாயின சொல் பற்றி வந்தன

1. 'அன்மை முதலாயின பொருள் பற்றி வந்தனவெனக் கிளந்தோதலாஞ் சுருக்கத்தன வன்மையானும்'

கிளந்தோதலாஞ் சுருக்கத்தனவாகையானும், சினைமுதற்கிளவி பண்பும் அடுத்து வருதல் உயர்திணையதிகாரத்துப் பெறப்படாமையானும் [2]அவற்றையோதுவார் ஏனைப்பொருளும் உடன் ஓதினார்.

முன்னிலை வினைக்குறிப்புப் பலவாதலானும், எடுத்தோதா வழிப் படுவதோர் குறையா டின்மையானும் [1]இவற்றை யுய்த்துணர வைத்தார் என்பது. அல்லது எடுத்தோத்தில் வழி உய்த்துணர்வது எனினும் அமையும்.

முன்னிலை வினையீற்றான் எதிர்காலம் பற்றிவரும் இகரத்தையும் மின்னையும் முதலும் இறுதியும்வைத்து, மூன்றுகாலமும் பற்றி வரும் நான்கீற்றையும் தம்முள் இயைய இடை வைத்தார். அல்லது [2]பொருண்மை கருதாது சூத்திர யாப்பிற்கேற்ப வைத்தார் எனினும் அமையும்.

தெய்.

முன்னிலை வினைச் சொல்லுள் பன்மையுணர்த்தும் ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இர், ஈர், மின் என்று சொல்லப்பட்ட மூன்றீற்று வினைச் சொல்லும் உயர்திணைப்பன்மைக்கண்ணும்அஃறிணைப் பன்மைக் கண்ணும் சொல் நோக்கு ஒக்கும், எ—று.

உ-ம் : உண்டனிர், உண்ணா நின்றனிர், உண்பிர்; உண்டீர், உண்ணா நின்றீர், உண்பீர்; உண்மின், உண்ணலிர், உண்ணீர், உண்ணன்மின் எனவரும்.

இவை உணர்த்துமாறு என்னைஎனின், இவ்வினைக்குப் பெயராகிய நீ, நீயிர் என்பவற்றிற்கு, ''இன்ன பெயரே இவை யெனல் வேண்டின், முன்னஞ்சேர்த்தி முறையின் உணர்தல்'' (பெய. 37) என விதித்தாராகலான் ஆண்டை விதியே ஈண்டுங் கொண்டு சொல்லுவான் குறிப்பினானும் தொடர்புபட்ட பெய

என்பது பூவராகம்பிள்ளை, பாடம். இதில் என என்பது தள்ளி விடலாம் என்றும் அன்மைக்குப் பதில் இன்று இருக்கலாம் என்றும் கூறுவர் அவர். 'அன்மை......... சுருக்கத்தனவாகையானும்' கணேசய்யர் பாடம். உரை யிறுதியில் இவர் குறிப்புரைகள் பார்க்க.

2. அவற்றை—அஃறிணை வினைக்குறிப்புகளை
1. இவற்றை—முன்னிலை வினைமுற்றுகளை
2. பொருண்மை—காலப் பொருண்மை.

ரினானும் உணர்ந்து கொள்க. உண்டாயோ மகனே, உண்டாயோ மகளே என்றவழி உயர்திணை யுணரப்பட்டது. உண்டாயோ குயிலே என்றவழி அஃறிணை யுணரப்பட்டது. உண்டீரோ மக்காள் என்ற வழி உயர்திணை உணரப்பட்டது. உண்டீரோகிளிகாள் என்றவழி அஃறிணையுணரப் பட்டது. உண்டீரோ மக்காள் என்ற வழி ஆண்பன்மை பெண்பன்மை விளங்கல் வேண்டின் அதனோடு தொடர்ந்த சொல்லான் உணர்க.

நச்.

இது முன்னிலைப் பன்மை கூறுகின்றது.

இ—ள்: இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும்—இர் ஈர் மின் என்று சொல்லவருகின்ற மூன்று ஈற்றுச்சொல்லும், பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்—உயர்திணைக்கண் பல்லோரிடத்தினும் அஃறிணைக்கண் பலவற்றிடத்தினும், சொல் ஓர் அனைய என்மனார் புலவர்—சொல்லுதலை ஒருதன்மையாகவுடைய என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

இர் ஈறு அர் ஈற்றுக்குரியஎழுத்தும் ஈர் ஈறு ஆர் ஈற்றுக்குரிய எழுத்தும் பெற்று மூன்று காலத்தும் வரும்.

உ-ம்: உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்பிர், உண்குவிர் எனவும்; உண்டீர், உண்ணா நின்றீர், உண்பீர், உண்குவீர் எனவும் வரும். மின் பிற எழுத்துப் பெறாது ஏற்றுழி உகரம் பெற்று எதிர்காலத்து வரும்.

உ-ம்: உண்மின்கள்ளே, அடுமின்சோறே, உரிஞுமின் எனவரும். இதற்கு உண்பீர், அடுவீர், உரிஞுவீர் என விரிக்க. ''கானம் கடத்திர் எனக் கேட்பின்'' (கலி. 7) என்புழிக் கடவாநின்றீர் என நிகழ்காலத்துத் தகரம்வந்தது. இஃது எதிர்காலத்தும் வரும்.

இனி, முன்னிலை வினைக்குறிப்பு உயர்திணை வினைக்குறிப்பிற்கு ஓதிய பொருள்பற்றி ஐயும் ஆயும் இருவும் ஈரும் என நான்கு ஈற்றவாய், கழலினை, நாட்டை, பொன்னன்னை, கரியை; கழலினாய், நாட்டாய், பொன்னன்னாய், கரியாய்; கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர், கரியிர்; கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர் எனவரும்.

போறி என்பது போன்றனன், போன்றாள் என்பதுபோல வந்த தெரிநிலை வினை.

இனி உண்டிலிர், உண்ணாநின்றிலிர், உண்ணலிர்; உண்டிலீர், உண்ணா நின்றிலீர், உண்ணலீர்; உண்ணன்மின் என மறைவரும்.

மேல் எச்சஇயலுள் ''முன்னிலை முன்னர்'' (55) என்னுஞ் சூத்திரத்தாற் பெற்ற முன்னிலைகளுள் மொழிக்கு ஈறாம் எனப் பட்ட நட, வா, விரி, ஈ, கொடு, கூ, மே, கை, நொ, போ, வெள என்னும் உயிர் ஈறு பதினொன்றும் உரிஞ், மண், பொருந், திரும், தின், தேய், பார், செல், தெவ், தாழ், கொள் என்னும் புள்ளியீறு பதினொன்றும், போக்கு, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, தீற்று, வெஃகு என எழுவகையாகிய குற்றியலுகர ஈறு ஒன்றுமாக எழுத்து வகை இருபத்து மூன்றும்,எடுத்தல் ஓசையான்முன்னிலை யேவல் ஒருமை முற்றாய் நிற்கும். இவைதாமே படுத்தல் ஓசையால் அச்செய்கைமேல் பெயர்த்தன்மைபட முதல் நிலையாயும் நிற்கும். அங்ஙனம் முதல் நிலையாய் நிற்குங்கால் நடந்தான், வந்தான், விரிந்தான், ஈந்தான், கொடுத்தான், கூவினான், மேவினான், கைத்தான், நொந்தான், போயினான், வெளவினான் என உயிரீறு பதினொன்றும், உரிஞினான், மண்ணினான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், தெவ்வினான், தாழ்ந்தான், கொண்டான் எனப் புள்ளியீறு பதினொன்றும், போக்கினான், பாய்ச்சினான், ஊட்டினான், நடத்தினான், எழுப்பினான், தீற்றினான், வெஃகினான் எனக் குற்றியலுகர ஈறு ஒன்றுமாக முற்றுச் சொல் விரிந்து நின்றவாறு காண்க.

நடந்து வந்தான், வந்து போனான், விரிந்து கிடந்தான், ஈத்து உவந்தான் எனவும்; நடந்த சாத்தன், வந்த சாத்தன், விரிந்த சாத்தன், ஈத்த சாத்தன் எனவும்; உரிஞி வந்தான், பொருநி வந்தான் எனவும், உரிஞின சாத்தன் பொருநின சாத்தன் எனவும் வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் இவ்வாறே ஒழிந்த முதல் நிலைகளையும் விரித்துக் கொள்க.

முற்காட்டிய முன்னிலையேவல் ஒருமை முற்றுக்கள் ஒருவனை நோக்கி, ஒன்றனை ஒரு தொழிலைச் செய்வி என்னும் பொருண்மைக்கண் நடத்துவி, நடப்பி, வருவி, விரிவி, விரிப்பி, ஈப்பி, கொடுப்பி, கூவுவி, மேவுவி, கைப்பி, நொவ்வுவி, போக்குவி, வெளவுவி, உரிஞுவி, மண்ணுவி, பொருநுவி,திருமுவி, தின்பி, தேய்ப்பி, பார்ப்பி, செலுத்துவி, தெவ்வுவி, தாழ்த்துவி, கொள்ளுவி, வெஃகுவி என எதிர்காலத்திற்கு உரிய வகரமும் பகரமும் முன்னிலைக்கு உரிய இகரம் ஏறி இடை நிலைக்கு உரிய

எழுத்துக்களும் பெற்று எடுத்தலோசையான் நிற்கும் என்று உணர்க.

இன்னும் அவைதாம் படர்க்கையிடத்துப் பால்காட்டும் முற்றாய், நடத்துவித்தான், நடப்பித்தான், வருவித்தான், விரிவித்தான், விரிப்பித்தான், ஈப்பித்தான், கொடுப்பித்தான், கூவுவித்தான், மேவுவித்தான், கைப்பித்தான்,நொவ்வுவித்தான், போக்குவித்தான், வெளவு வித்தான், உரிஞு வித்தான், மண்ணு வித்தான், பொருநுவித்தான், திருமுவித்தான், தின்பித்தான், தேய்ப்பித்தான், பார்ப்பித்தான், செலுத்துவித்தான், தெவ்வு வித்தான், தாழ்த்துவித்தான், கொள்வித்தான், வெஃகுவித்தான் என வருங்கால் இடைநிலையாகிய எழுத்துகளும் பெற்று முன்னர் எடுத்தலோசையாய் இடை நின்ற ஈறாகிய இகரம் படுத்தலோசைப்பட்டு இடைநிலையாய் நிற்கும் என்றுணர்க.

இனி, நடத்துவிப்பி, வருவிப்பி, நடப்பிப்பி எனவும் வரும் என்று கூறி, இவற்றை இருமடி ஏவல் என்பாரும் உளர். இவற்றை இருகால் ஏவுதல், கூறியது கூறலாம் ஆதலின், இவை இழிவழக்கு என மறுக்க.

இனி, உண்ணும், தின்னும் எனப் பன்மைக்கண் வரும் உம் ஈறும், உண்ணல் என வரும் அல் ஈற்று மறையும், மறால் என வரும் ஆல் ஈறும், 'அகையேல் அமர்தோழி அழேல்'' (சீவக. 1524) என வரும் ஏல் ஈறும், உண்டு காண், சொல்லிக்காண் என வரும் காண் ஈறும் ஆகிய சொல்வகை ஐந்தும், முன்னிற் சூத்திரத்து எதிர்காலம் ஒன்றினும் வரும் இகரம் முற்கூறிய முறையன்றிக் கூற்றினாற் கொள்க.

முற்கூறிய எழுத்துவகை இருபத்து மூன்றும் சொல்வகை ஐந்துமாகிய இருபத்தெட்டும் முன்னிலையேவல் ஒருமை முற்று என்று உணர்க.

நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய் என்னுஞ் சொற்கள் ஆய் ஈறு கெட்டு நட, வா, உண், தின் என நிற்கும் என்று சேனாவரையர் கூறினாரால் எனின், அது பொருந்தாமை எச்சவியலுள் ''செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்'' என்னும் சூத்திரத்துள் (எச்ச. 54) கூறுதும்.

கல்.

என்—எனின், முன்னிலைப் பன்மை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இர் ஈர் மின் என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும் உயர்திணைக்கண் பல்லோரிடத்தும் அஃறிணைக்கண் பலவற்றிடத்தும் சொல்லுதலை ஒரு தன்மையாகவுடைய என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: இர்: உண்டிர், உண்ணா நின்றிர், உண்பிர் எனவும்; கரியிர் எனவும் வரும்.

ஈர்: உண்டீர், உண்ணா நின்றீர், உண்பீர் எனவும்; கரியீர் எனவும் வரும்.

மின்: உண்மின், தின்மின் என எதிர்காலமே பற்றி வரும். உண்ணா நின்மின் என நிகழ்கால வரவு உண்டேனும் கொள்க.

உண்டிலிர், உண்ணா நின்றிலிர், உண்ணலிர் எனவும்; உண்டிலீர், உண்ணா நின்றிலீர், உண்ணீர் எனவும்; உண்ணன் மின் எனவும் வரும் மறையும் அறிக.

மேலைச் சூத்திரத்து எதிர்காலம் ஒன்றினும் வரும் இகரம் முற்கூறினமையான் ஒழிந்த முன்னிலையீறும் கொள்ளப்படும். அவையாவன: மொழிக்கீறாம் எனப்பட்ட இருபத்து நான்கீற் றுள்ளும் எடுத்தோதியவை ஒழித்து ஒழிந்தன எனக் கொள்க.

உ-ம்: நட, வா, விரி, ஈ, கொடு, கூ, மே, கை, நொ, போ, வெள என இவை உயிரீறுள் எடுத்தோதாதன. இவை முன்னிலை ஏவல் ஒருமை.

எடுத்தோதின இகர ஐகார ஈற்றுள்ளும் 'அறி' எனவும், 'உரை' எனவும் ஏவற்கண் வருவனவும் அறிந்து கொள்க.

உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், தெவ், தாழ், கொள் என இவை புள்ளியீறு பதினொன்றும் வந்த வாறு.

ஊட்டு என்பது குற்றியலுகர வீறு. இதுவும் ஏவல் ஒருமை.

ஆய் எனவும், இர், ஈர் எனவும், மின் எனவும் ஓதினமையின் யகர னகரங்களில் ஐகாரங் கொள்ளவேண்......னின், அவை அவ்வெழுத்தீறன்றிச் சொல் வாய்பாடாய் வேறு வருதலின் இவை வேறாகக் கொள்ளப்பட்டன எனக் கொள்க.

உண்ணும் தின்னும் எனப் பன்மைக்கண் உம்மீறு மகர வீற்றின் வேறுபாடாகக் கொள்க.

லகர வீறு மறைக்கண் உண்ணல் எனவரும். அல்லீறும் ஆலீறும், அழேல் என வரும் ஏல் ஈறும் கொள்க.

ணகரவீற்றுள் உண்டுகாண், சொல்லிக்காண், வருங்காண் என்னும் காணீறும் கொள்க.

'உண்டுபார்' என்பதோ எனின், அஃது ஒரு சொல்லாதலன்றி 'அத்தொழிலைச் செய்து அதன் விளைவை மேற்பார்' என்னும் ஒருமை தோன்ற நிற்றலின் வேறுசொல் என்க. 'உண்டு காண்' என்பதும் இவ்வாற்றான் வேறன்றோ எனின் அது சொல்லுவான் கருத்தன்று என்க.

'அவன் வருவன்காண்' என்பதோ எனின், ஆண்டு காண்டற்றொழில் கருத்தன்மையின் அசைநிலையாம் தத்தம் குறிப்பானே வேறொரு பொருள் உடைத்தாகலான் எனக் கொள்க.

உண்கிடு, உண்கிடா என்பனவோ எனின், அவை சான்றோர் செய்யுட்கண் இன்மையின் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' (எச்ச. 56) என்பதனாற் கொள்ளப்படும். அது முன்னிலையாயவாறு என்னை யெனின், இவற்றுள் 'உண்கிடுநீ' எனப் பிற முன்னிலை போல் முற்றாய் முன்னிலைப் பெயர் கொள்வதன்றி 'அவன் உண்கிடு' என்றானும், 'யான் உண்கிடு' என்றானும் பிற பெயர் வந்த பிற தொழிலினை 'நீஉடம்படு' என்று முன்னிலை நீர்மை தோன்ற நிற்றலின் முன்னிலையாயிற்றுப் போலும்.

இவற்றுள் 'உண்கிட' என்பதொருவழி 'நீயுண்கிடா' என முன்னிலைப் பெயர் கொண்டு நிற்றலும் உண்டு.

இனி உண்ணுங்கோள் என்பதோ எனின், அது உண்ணுங்கள் எனக் கள்ளொடு, உண்ணும் என்பது அசைநிலை யடுத்து உம் ஈறு மரீஇயவாறு எனக் கொள்க.

முன்னிலை யீற்றுவகை யெல்லாம் தொகுத்து நோக்க எழுத்துவகையான் இருபத்து நான்கு ஈறும், சொல் வகையால் யகரவீற்றுள் ஆய் என்பதும், ரகரவீற்றுள் இர் ஈர் என்பனவும், னகரவீற்றுள்மின் என்பதும், ணகர வீற்றுள் காண்என்பதும், மகர வீற்றுள் உம் என்பதும், லகரவீற்றுள் அல் ஆல்ஏல் என்பனவும் ஆக முப்பத்து மூன்றாயின. பிறவாறு உளவேனும் அறிக.

ஆதி.

இர்ஈர்மின் என வரூஉம் மூன்று விகுதிகளும் பலர்பாலோடும் பலவின் பாலோடும் வருவனவாம்.

மக்காள் நீவிர் உண்டனிர், உண்டீர், உண்மின்.
மயில்காள்நீவிர் பருகினிர், பருகினீர், பருகுமின்.

குறிப்பு: ஆசிரியர் அஃறிணைப் பொருளை உயர்திணை யாகப் பாவித்துக் கூறுவது உபசார வழக்கேயாகும். நாடக வழக்கு பிள்ளைமை வழக்கில் இம்முறைகாணலாம். அறிவுலகுக்கு ஏற்புடைத்தன்று. கிளவியாக்கம் ''ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி, இலக்கண மருங்கில் சொல்லறல்ல'' (கிளவி. 27) என்றது போல இஃது உபசார வழக்கே. உண்மையன்று.

என்மனார் புலவர்—இசைநிறை.

சுப்.

இச்சூத்திர வுரையில் நச்சினார்க்கினியத்தில் ''நடத்துவிப்பி, வருவிப்பி, நடப்பிப்பி எனவும் வரும்'' என்று கூறி, ''இவற்றை யிருமடியேவல் என்பாரும் உளர்; இவற்றை இருகால் ஏவுதல் கூறியது கூறலாமாதலின் இவை இழி வழக்கென மறுக்க'' என்ற சொற்றொடர் உளது. இங்கு நச்சினார்க்கினியர் [1]நன்னூலார் மதத்தைக் குறித்து மறுக்கின்றார் என்பது தோன்றுகின்றது. ஆனால் அவர் வருவிப்பி, நடப்பிப்பி என்பனவற்றை ஈரேவலாகக்கொண்டாரல்லது நடத்துவிப்பி என்பதையும் ஈரேவலாகக் கொண்டதாகத் தெரியவில்லை. நடத்துவிப்பி என்பதை [2]வீரசோழிய ஆசிரியர் கூறுமாறு காரிதக்காரிதக்காரிதத்தாதுஎன்றேனும், முவ்வேவல் என்றேனும் கூறல் வேண்டும். 'இவற்றை இருகால் ஏவுதல் கூறியதுகூறல்' என்று நச்சினார்க்கினியர் கூறுவது எவ்வாறு பொருந்தும்? அரசன் அமைச்சனை நோக்கி'பணியாளனால் சிற்பியை வருவிப்பி' என்றால் அஃது இழிவழக்காகுமா? செய்யுள் வழக்கில் பெரும்பான்மை இவ்வாறு காணப்படாதது நச்சினார்க்கினியர் இங்ஙனம் கூறுதற்குக் காரணமாகலாம்.

கு. சுந்தரமூர்த்தி (சேனாவரையர் உரைக் குறிப்பு)

முன்னிலைத் தெரிநிலை வினைக்குரிய ஈறுகளை இந்நூற்பாவிலும், இதற்கு முன்னிலைநூற்பாவிலும்ஆசிரியர் கூறுகின்றார்.

---

1. செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் ஏவல் இணையின் ஈரேவல் (நன். 138)
என்னும் சூத்திரத்தைக் காண்க.

2. ஆட்டாற்று தீற்றாதி தாதுக் களைடற் காரிதம் என்று
ஒட்டா வாறிக வுரையுன்படி யொப்பில் விப்பி பின்பு
மூட்டா வறிகா ரிதர்கா ரிதமுன்பிற் றாதுவின்கட்
காட்டா வறியவை காரிதக் காரிதக் காரிதமே.
(வீர.தாது.6)

ஆனால் முன்னிலை வினைக்குறிப்பிற்குரிய ஈறுகளை ஆசிரியர் கூறவில்லை. அங்ஙனம் கூறாமைக்குக் காரணம் என்ன? என் மாணாக்கன் கேட்க, முன்னிலைத் தெரிநிலைவினைக்குரிய ஈறுகளே (ஐ, ஆய், இர், ஈர்) முன்னிலை வினைக் குறிப்பிற்கும் வருதலின் ஆசிரியர் கூறாராயினர் என விடையிறுத்தனர் சேனாவரையர்.

மீண்டும் அம்மாணாக்கன் ஒன்றற்குரிய ஈறுகளே பிறிது ஒன்றற்கும் வருதலின் ஆசிரியர் கூறாராயின், உயர்திணை வினைக்குறிப்பிற்கோதிய ஈறுகளே அஃறிணை வினைக்குறிப்பிற்கும் வருதலின் அஃறிணை வினைக்குறிப்பையும் ஆசிரியர் கூறாராதல் வேண்டும். ஆனால் ஆசிரியரோ உயர்திணை வினைக் குறிப்பிற்குரிய முற்றுக்களை வினையியல் 15, 17, 18ஆம் நூற்பாக்களிலும், அஃறிணை வினைக் குறிப்பிற்குரிய முற்றுக்களை 23, 24ஆம் நூற்பாக்களிலும் கூறியுள்ளார். அங்ஙனமாக முன்னிலை வினைக்குறிப்பிற்குரிய ஈறுகளை மட்டும் கூறாதது ஏன்? என்று கேட்டான். இவ்வினாவிற்கு விடையாகவே இந் நூற்பாவின் இறுதிப் பகுதி விளங்குகின்றது. இச்சூழ்நிலையை மனத்திற் கொண்டாலன்றி அப்பகுதி விளங்குமாறில்லை. அன்றியும் அஃறிணை வினைக்குறிப்பு உயர்திணை வினைக்குறிப்பில் எவ்வெவ்வாற்றான் அடங்கும் என்பதையும் முதற்கண் தெரிந்து கொள்ளல்வேண்டும்; அஃறிணை வினைக்குறிப்பு 23ஆம் நூற்பாவில் கூறப்படுகின்றது. அவையாவன: இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, பண்பு கொள்கிளவி, உள்வென்கிளவி, பண்பினாகிய சினைமுதற்கிளவி, ஒப்பொடு வரூஉங் கிளவி யென்பன. இவை உயர்திணை வினைக்குறிப்பிற் கூறப்பட்ட 16. 17 ஆம் நூற்பாக்களில் அடங்குமாறு:—

இன்று இல என்பன இன்மையின் அடங்கும். அன்று, அல்ல என்பன அன்மையில் அடங்கும். உடைய உடைத்து என்பன அதுச்சொல் வேற்றுமையுடைமையானும்என்பதனுள் அடங்கும். உளவென்கிளவி உண்மையில் அடங்கும். பண்புகொள் கிளவி பண்பினானும் என்பதனுள் அடங்கும் ஒப்பொடு வரூஉங்கிளவி என்பது ஒப்பினானும் என்பதன்கண் அடங்கும். இங்ஙனமாகவே அஃறிணை வினைச்குறிப்பில் கூறப்பட்ட பண்பினாகிய சினை முதற்கிளவி என்பது மட்டும் உயர்திணை வினைக்குறிப்பில் அடங்காமை அறியப்படுகின்றது. இதை வைத்துக்கொண்டே சேனாவரையர் விடையிறுக்க முற்படுகின்றார். (1) அஃறிணை வினைக்குறிப்பாகிய இன்று முதலாயினவெல்லாம் எடுத்தோதிய வழியும் சுருக்கமாகவே இருக்கின்றன. (2) அஃறிணை வினைக்

குறிப்பிற்குரிய பத்தனுள் ஒன்பது முற்றுக்கள் உயர்திணை வினைக்குறிப்பில் அடங்கினும் பண்பினாகிய சினை முதற்கிளவி மட்டும் உயர்திணைக்குரிய வினைக் குறிப்பில் அடக்க இயலாமற் போகின்றது. எனவே உயர்திணையில் அடக்க இயலாத பண்பினாகிய சினைமுதற்கிளவியைக் கூறுவார் ஏனையஒன்பதை யும் உடன் கூறினார் என்பது.

ஆனால் ஈண்டோ முன்னிலைத் தெரிநிலை வினைக்குரிய ஈறுகள் காலப்பன்மையால் பல சொற்களாய் வருதல்போலவே, முன்னிலை வினைக்குறிப்பிற்குரிய ஈறுகளும் காலப்பன்மையால் பல்வேறு சொற்களாய் வருதலின் ஆசிரியர் அதனை விதந்து கூறாராயினார் என்பது. இந்நுண்மைபிறர்உரையிற் காணாதது.

இங்ஙனமே ஆசிரியர் தொல்காப்பியர் தன்மையிடத்திற் குரிய தெரிநிலை வினையீறுகளைக் கூறினரேயன்றி குறிப்பு வினைக்குரிய ஈறுகளைக் கூறாது விடுத்தனர். ஆனால் சேனா வரையர் அவ்விடத்து இதுபற்றி யாதும் கூறிற்றிலர். அவ்விடத் திற்குரிய குறிப்புவினைமுற்று ஈறுகள் அம் ஆம் எம் ஏம் முதலியனவாம்.

கணேசய்யர் (பாடவேறு பாட்டுக் குறிப்பு)

''அஃறிணை வினைக் குறிப்பும்......ஏனைப் பொருளும் உடன் ஓதினார்''—சேனாவரையர்.

பொருள்பற்றியோதல் வேறு; கிளந்தோதல் வேறு. ஆதலால் இவ்வாக்கியம் ''அன்மை முதலாயின பொருள் பற்றி வந்தன கிளந்தோதலாஞ் சுருக்கத்தன வாகையானும்'' என் றிருத்தல் வேண்டும். 'முதலாயினபொருள்பற்றி வந்தன'என்பது 'முதலாய பொருள்பற்றி வந்தன' எனப் பொருள் கொள்ளப் படும். இங்ஙனம் பொருள்பட எழுதுவது சேனாவரையர் வழக்காதலை ''இயற்சொல் திரிசொல் முதலாயின செய்யுளதி காரத்து'' (எச்ச. 57) என்னும் வாக்கியத்தானும் அறிக. எனவே, இவ்வாக்கியப் போக்கு அறியாமையால் 'என' என்பது பின் சேர்க்கப்பட்டது. 'சுருக்கத்தன வன்மையானும்' என்ற பாடம் பொருத்தமில்லை. என் எனின், அது சுருக்கம் பற்றிச் சூத்திரம் செய்தார் என்பதற்குக் காரணம் ஆகாமையின். 'சுருக்கத்தனவாகையானும்'' என்ற பாடமே பொருத்தம் என்பதை வினை 23 ஆம் சூத்திரவுரையுள் வரும் ''அவ்வேழனை யும் பொருள் பற்றியோ தாராயினார், கிளந்தோதிய வழியும் சூத்திரம் சுருங்குமாகலான்'' என்பதனானும் அறிக.

ஏனை வினைகள்

220. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
ஐம்பாற்கு முரிய தோன்ற லாறே (26)

(எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்றல் ஆறே)

ஆ.மொ: இல.

The remaining words belong to three persons and five genders when appearing in usage.

பி. இ. நூ:

முத்து. வி. 26

முன்னிலை யொழிய மற்றேனைய வெல்லாம்
ஐம்பான் மூவிடத்தொடு நிலை பெறுமே.

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், ஒழிந்து நின்ற வற்றைத் தொகுத்து உரியவாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: அவற்றுள் முன்னிலைக்கு உரியவாகக் கூறப்பட்ட வற்றை ஒழித்து [1]ஒழிந்தவெல்லாம் மூன்றிடத்தும் நின்று ஐம்பாற்கும் உரிய எ—று.

[2]அவை வருமாறு:

இன்மை செப்பல்: யானில்லை, நீயில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை என வரும்.

வேறுஎன்கிளவி: யான் வேறு, நீ வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என வரும்.

செய்ம்மன: யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன, அவள் செய்ம்மன, அவர் செய்ம்மன, அது செய்ம்மன, அவை செய்ம்மன என வரும்.

---

1. ஒழிந்தன: வியங்கோள், வினையெச்சம், இல்லை, வேறு, செய்ம்மன, செய்யும், செய்த என்பனவாம்.
2. வியங்கோள், வினையெச்சம், செய்யும், செய்த என்பன வற்றுக்குத் தத்தம் சிறப்புச் சூத்திரங்களில் உதாரணம் காட்டப்பட்டுள்ளன.

சேனா.

இ-ள்: முன்னிலை வினை யொழித்து ஒழிந்த ஏழு வினைச் சொல்லும் மூன்றிடத்திற்கும் ஐம்பாற்கும் உரிய, தத்தம் பொருட்கண் தோன்றுமிடத்து, எ-று.

இவ்வாறு பொதுவகையான் எல்லாவிடத்தோடும் எல்லாப் பாற்கும் உரியவாதல் எய்தின எனினும், [1]முன்னர் விலக்கப் படுவன ஒழித்து ஒழிந்த இடமும் பாலும் பற்றி வருமாறு ஈண்டுக் காட்டப்படும்.

உ-ம்: அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க எனவும்; உழுது வந்தேன், உழுது வந்தேம், உழுது வந்தாய், உழுது வந்தீர், உழுது வந்தான், உழுது வந்தாள், உழுது வந்தார், உழுது வந்தது, உழுது வந்தன எனவும்; யானில்லை, யாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை. அவரில்லை, அது இல்லை, அவை யில்லை எனவும்; யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீயிர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு எனவும்; யானுண்மன, யாமுண்மன, நீயுண்மன, நீயிர் உண்மன, அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன, அது உண்மன, அவை உண்மன எனவும்; யானுண் ணும் ஊண், யாமுண்ணுமூண், நீயுண்ணுமூன், நீயிருண்ணுமூண், அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணுமூண், அது உண்ணுமூண், அவையுண்ணுமூண் எனவும்; அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எனவும்; யான் உண்டவூண், யாமுண்டவூண், நீயுண்டவூண், நீயிர் உண்டவூண், அவனுண்ட வூண், அவளுண்டவூண், அவருண்டவூண், அதுவுண்டவூண், அவையுண்டவூண் எனவும் வரும்.

தெய்.

முன்னிலை யொழிந்த சொற்கள் பால் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட முன்னிலையொழிந்த சொற்கள் மூன்றிடத்தோடும் கூடி ஐந்துபாற்கும் உரிய, தோன்று நெறிக் கண், எ-று.

---

1. முன்னர் விலக்கப்படுவன: வியங்கோள் தன்மை முன்னிலைகளில் வாராது. (வினை. 28) செய்யும் என் முற்று பலர்பாற் படர்க்கை, முன்னிலை, தன்மையிடங் களில் வாராது. (வினை. 29)

அவற்றுள் சிறப்புடைய வியங்கோட்கும், வினையெச்சத்திற்கும் செய்யும், செய்த என்னும் சொற்கும் உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும்.

உ-ம்: இன்மை செப்பல் என்பது இல்லை என்னுஞ்சொல். அது யானில்லை, யாமில்லை, நீயில்லை, நீரில்லை, அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை என வரும்.

வேறென்கிளவியாவது வேறு என்னும் சொல். அது, யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீயிர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என வரும்.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், [1]கூட்டு என்பதூஉம், ஆம் என்பதூஉம் கொள்க. யான் கூட்டு, நீ கூட்டு; யான் ஆம், நீ யாம்; அவர் கூட்டு, அவர் ஆம் என மூன்றிடத்துக் கண்ணும் ஒட்டுக.

செய்ம்மன என்பது, யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன என எல்லாப் பாலோடும் ஒட்டுக. இது இக் காலத்துச் செய்வது, செய்வன, செய்பவை, செய்யுமவை என வழங்கும் போலும்.

நச்.

இது முன்னிலை ஒழிந்தவற்றின் இலக்கணங் கூறுகின்றது.

இ-ள்: எஞ்சிய கிளவி—முன்னிலை வினையொழித்து ஒழிந்த ஏழு வினைச் சொல்லும், இடத்தொடு சிவணி ஐம்பாற்கும் உரிய—மூன்று இடத்தோடும் பொருந்தி ஐந்து பாற்கும் உரியவாம், தோன்றலாறே—இவை தத்தம் பொருட்கண் தோன்றும் இடத்து, எ—று.

---

1. கூட்டு—கூட்டாக (சேர்ந்து) இருத்தல். யான் கூட்டு—யான் கூட்டாக உள்ளேன். நீ கூட்டு—நீ கூட்டாக உள்ளாய், அவர் கூட்டு—அவர் கூட்டாக உள்ளார். இப்படியே ஆம் என்பதற்கு யான் ஆவேன், நீ ஆவாய், அவர் ஆவார் எனக் கொள்க. இந்த ஆம் என்பது 'ஆகும்' என்பதன் திரிபன்று. திரிபாயின் அவர் ஆம் எனப் பலர்பாற் படர்க்கைக்கு வாராது. இது பிற்கால வழக்கு—சிவ.

[1]மேல் லிலக்குவன ஒழிந்தன ஈண்டுக் காட்டுதும்,

உ-ம்: அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க எனவும்;

உழுது வந்தேன், உழுது வந்தேம், உழுது வந்தாய், உழுது வந்தீர், உண்டு வந்தான், உண்டு வந்தாள், உண்டு வந்தார், உழுது வந்தது, உழுது வந்தன எனவும்;

யான் இல்லை, யானும் நீயும் இல்லை, யானும் அவனும் இல்லை, யானும் நீயும் அவனும் இல்லை, நாம் இல்லை, யாம் இல்லை, நீயில்லை, நீயிர் இல்லை, அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை எனவும்;

யான்வேறு, யானும் நீயும் வேறு, யானும் அவனும் வேறு, யானும் நீயும் அவனும் வேறு, நாம் வேறு, யாம்வேறு, நீ வேறு, நீயிர் வேறு, அவன் வேறு, அவள் வேறு,அவர் வேறு, அது வேறு, அவை வேறு எனவும்;

யான் உண்மன, யானும் நீயும் உண்மன, யானும் அவனும் உண்மன, யானும் நீயும் அவனும் உண்மன, நாம் உண்மன, யாம் உண்மன, நீ உண்மன, நீயிர் உண்மன, அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன, அது உண்மன, அவை உண்மன எனவும்;

யான் உண்ணும் ஊண், யானும் நீயும் உண்ணும் ஊண், யானும் அவனும் உண்ணும் ஊண், யானும் நீயும் அவனும் உண்ணும் ஊண், நாம் உண்ணும் ஊண், யாம் உண்ணும் ஊண், நீ உண்ணும் ஊண், நீயிர் உண்ணும் ஊண், அவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அவர் உண்ணும் ஊண், அது உண்ணும் ஊண் அவை உண்ணும் ஊண் எனவும்;

அவன் வரும், அவள் வரும்,அது வரும், அவைவரும் எனவும்;

யான் உண்டவூண், யானும் நீயும் உண்டவூண், யானும் அவனும் உண்டவூண், யானும் நீயும் அவனும் உண்டவூண், நாம் உண்டவூண், யாம் உண்டவூண், நீயுண்டவூண், நீயிர் உண்டவூண், அவன் உண்டவூண், அவள் உண்டவூண், அவருண்டவூண், அது வுண்டவூண், அவையுண்டவூண் எனவும் வரும்.

வியங்கோளும், மனஈறும் எதிர்காலம் உணர்த்தும். இன்மை செப்பலும், வேறு என்பதும் மூன்றுகாலமும் உணர்த்தும். உண்

1. மேல்—வினையியல் 28, 29 ஆம் சூத்திரங்களில்.

மன என்பது யான் உண்ணும், நீயுண்ணும், அவன் உண்ணும் என்னும் பொருண்மை யுணர்த்தி எச்ச நீர்மைத்தாய், இறந்த வழக்கிற்றாய் வரும். இச் செய்யும் என்னும் வாசகத்துக்கு அக் காலத்து 'மன' என்னும் வாசகத்தாலும் வழங்குதலின், ஆசிரியர் மன என்பதனை யீண்டு வேறாக ஓதி எழுத்தோத்தினுள்ளும்,

''செய்ம்மன என்னும் தொழிலிறு சொல்லும்'' (உயிர்.ம.8)

என்றார். யாம் நாம் என்பதனை இன்மை செப்பல் முதலியவற்றோடும் ஒட்டுக.

கல்.

என்—எனின், விரவுவினை எட்டனுள்ளும் முன்னிலைவினையொழித்து ஒழிந்தனவற்றிற்கு எய்தியதோர்இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : முன்னிலை யொழித்து எஞ்சிய சொற்கள் ஏழும் மூன்றிடத்தும் பொருந்தி ஐந்து பாற்கும் உரியவாம், அவை தோன்றும் நெறிக்கண், எ-று.

அவ்வேழனுள்ளும் மேற்சிறப்பு விதியுடைய வியங்கோளும், வினையெச்சமும், செய்யும் செய்த என்பனவும் ஒழித்து, ஒழிந்தன இன்மை செப்பலும் வேறென் கிளவியும், செய்ம்மனவும் என்னும் மூன்றற்கும் ஈண்டு உதாரணம் காட்டுதும்.

உ-ம் : யானில்லை, யானும் நீயும் இல்லை, யானும் அவனும் இல்லை, யானும் நீயும் அவனும் இல்லை, யாம் இல்லை, நாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை என இன்மை செப்பல் வந்தவாறு.

யான்வேறு, யானுநீயும் வேறு, யாவனுமவனும் வேறு, யானும் நீயும் அவனும் வேறு, நாம் வேறு, யாம் வேறு, நீவேறு, நீயிர்வேறு, அவன்வேறு, அவள்வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வேறு என் கிளவி வந்தவாறு.

யான் செய்ம்மன, யானுநீயும் செய்ம்மன, யானும் அவனும் செய்ம்மன, யானும் நீயும் அவனும் செய்ம்மன, நாம்செய்ம்மன, யாம் செய்ம்மன, நீசெய்ம்மன, நீயிர் செய்ம்மன, அவன் செய்ம்மன, அவள் செய்ம்மன, அவர் செய்ம்மன, அது செய்ம்மன, அவை செய்ம்மன எனச் செய்ம்மன வந்தவாறு.

செய்ம்மன என அகரவீற்றதே எனினும், யான் செய்ம்மன என்புழி யான் செய்வேன் என்றும், நீ செய்ம்மன என்புழி நீ செய்வை என்றும், அவன் செய்ம்மன என்புழி அவன் செய்வன

என்றும் முற்றுச்சொல் நீர்மைத்தாய்ப் பால்காட்டும் என்பது. இஃது இக்காலத்து இறந்த வழக்கிற்று.

இடத்தொடு என வாளா ஓதினமையின் மூன்று இடமும் கொள்ளப்பட்டது.

வெள்.

தொல்காப்பியனார் குறித்த விரவுக் குறிப்பாகிய வேறு, இல்லை என்பவற்றுடன் உண்டு என்னும் வினைக்குறிப்பினை யும் சேர்த்து,

வேறுஇல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன (நன். 338)

என இவை மூன்றும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியனவாகச் சூத்திரஞ் செய்தார் நன்னூலார். இவற்றுள் உண்டு என்பது அஃறிணை யொருமைக்கேயுரிய தாயினும் தம்காலத்தில் பொது வினையாக வழங்குதல் கண்ட பவணந்தி முனிவர் அதனை யீண்டுப் புதியன புகுதலாகக்கொண் டுரைத்தார்.

தே. ஆண்டியப்பன்

வேறு என்னும் சொல்லாட்சி பற்றிப் பெயர் நிலையிலும் வினை நிலையிலும் ஆண்டியப்பன் தொகுத்துக் கூறியது வரு மாறு:—

1. வேறு என்னும் சொல் தன்னையே உணர்த்திற்று. வாய்பாடாக நின்று பிறவற்றை உணர்த்தவில்லை. (இச்சூத்திரத்தில்)
2. யான் வேறு, நீ வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என்றெல்லாம் மூன்றிடத்திலும் ஐந்து பாலோடும் வரும்.
3. குறிப்புப் பெயரெச்சமாக நிற்பதும் உண்டு. வேறு ஒரு, வேறு சொல்.
4. திருவேறு, தெள்ளியராதலும் வேறு என்னும் போது வினை முற்றாகும்;
5. தொல்காப்பியர், 'வேறு பெயர்க்கிளவி', 'வேறுவினைப் பொதுச்சொல்', 'வேறுபிற தோன்றினும்', 'இசைத் தலும் உரிய வேடத்தான' என்று பல்வேறு இடங் களில் அடைமொழியாகப் பயன்படுத்துகிறார்.
6. படு என்னும் துணை வினை சேர்ந்து வினையாகவும் எச்சமாகவும் அவர் பயன்படுத்தும் இடங்களும் மிகுதி. (எ-டு) வினைவேறு படூஉம் பலபொருள் ஒரு சொல்,

திரிந்து வேறுபடூஉம் பிற, திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும், பொருள் வேறுபடாது ஒன்றாகும்மே.

7. பல்வேறு செய்தி, வேறு பல்செய்தி என இடம் மாறி நின்று அடையாகலாம்.

8. படு என்னும் துணை வினையால் வேறுபாடு, வேறுபடுதல் போன்ற பெயராக்கங்களும் உருவாகின்றன.

9. 'பிறவும் உள' என்பதுபோல், 'வேறும் உள' என்று வரலாம். அந்நிலையில் அது எழுவாய் ஆகலாம். 'வேறு பொருளும் உள' என்பதன் சுருங்கிய வடிவே 'வேறும் உள' எனறும் விளக்கலாம்.

10. 'பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல' என்று பிறப்பியலில் (1) ஆசிரியர் அடுக்கிச் சொல்வதைப் பார்க்கிறோம்,

11, கலித்தொகையில் 'வெறி நிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி' என்றும் 'வேறாகி வீழ்வர்' என்றும் வருவதைப் பார்க்கிறோம். இல்லை, வேறு என்பன ஒரு நிலையைக் குறிக்கும்; ஆனால் 'ஆகு' என்னும் துணை வினையோடு இயைந்து இயக்கத்தை அல்லது புடைபெயர்ச்சியை உணர்த்தும் என்னலாம்.

எ-டு: பொருள் இல்லை—பொருள் இல்லாகின்று.
பொருள் வேறு—பொருள் வேறாகின்று
(காப்பியர் நெறி-சொல்லியல், பக். 95, 96)

வியங்கோள்

221. அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி (27)

(அவற்றுள்
முன்னிலை தன்மை அ ஈர் இடத்தொடும்
மன்னாது ஆகும் வியங்கோள் கிளவி)

ஆ. மொ: இல.

Of them
the verb denoting optative mood, may not belong to the second person and the first person.

பி. இ. நூ:

நன். 328

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப.

இல. 239

கயவொடு ரவ்வொற்று...ஈற்ற வியங்கோள் முற்றவை
எய்தும் இடம்பால் எங்கும் என்ப.

தொன். 116

வியங்கோள் இயலும் விகுதிக்கு அ இய
யவ்வொடு ரவ்வொற்று இவை எங்கும் ஏற்பன.

முத்து. வி. 27

அவற்றுள்
தன்னிமை முன்னிலையொடு சாரா வியங்கோள்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தியதுவிலக்குதல் நுதலிற்று.

§உரை: முன்னிலை தன்மை யிரண்டிடத்தும் செல்வன வாகிய வியங்கோள் வினைச்சொல் சிறு வரவின, எ-று.

வ-று: நீர் செல்க, நீ செல்க யான் செல்க எனவரும்.

---

§ மன்னுதல்—நிலைத்தல்; மன்னாமை — நிலையாமை. 'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை' எனவும், 'மன்னாவுலகத்து மன்னுதல் குறித்தோர்' எனவும், 'மன்னாப் பொருளும் அன்ன இயற்றே' எனவும், பிறாண்டும் எல்லாம் இப்பொருளிலேயே இச்சொல் வழங்குதல் காணலாம். எனவே, இந்நூற்பாவிற்கும், ''தன்மை முன்னிலையாகிய ஈரிடத்தும் வியங்கோள் நிலைபெறுதல் இல்லை'' என்று பிறர் உரை செய்த வாறு செய்தலே நன்றாம். இவ்வீரிடத்தும் நிலை பெறுதல் இல்லையெனவே சிறுபான்மை இவ்வீரிடத்தும் ஒரோவழிவருதல் உள எனக்கொண்டு உரைப்பதே சூத்திரப் போக்கிற்குப் பொருந்துவதாகும். இளம் பூரணர் உரை இந்நூற்பாவிற்குப் போந்த கருத்தாக வுள்ளது—கு. சுந்தர மூர்த்தி.

இனி அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க என்பன பெருவரவினவாம்.

சேனா.

இ—ள்: மேல் 'எஞ்சிய கிளவி' (வினை. 28) எனப்பட்ட ஏழனுள், வியங்கோட்கிளவி முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத்தோடு நிலைபெறாதாம், எ-று.

[1]'ஆயீரிடத்தொடு கொள்ளாது' என்னாது 'மன்னாதாகும்' என்றதனான், அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. மன்னுதல்—பெரும்பான்மையும் நிகழ்தல். சிறுபான்மை வருவன நீ வாழ்க என்னும் வாழ்த்துதற் பொருண்மைக்கண்ணும், 'யானும் நின்னொடு உடன் உறைக' என்னும் வேண்டிக் கோடற் பொருண்மைக்கண்ணும் வருவனவாம். "கடாவுக பாக நின் கால்வல் நெடுந்தேர்" என்பதும் வேண்டிக் கொடற் பொருண்மைக்கண் வந்ததாம்.

[2]தன்மைக்கண் ஏவல் இல்லை. முன்னிலைக்கண் ஏவல் வருவ துண்டேற் கண்டு கொள்க.

[3]அஃதேல் வியங்கோள் ஈறு கூறாராயிற்று என்னையெனின், எழுத்தோத்தினுள் "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்" (எழுத். 210) என அகர வீற்றுள் எடுத்தலாற் பொருந்திய [4]மெய்யூர்ந்து அகர வீறாய் வருதலும், "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" (கிளவி. 13) எனவும், "சொல் வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்" (எச்ச.67)எனவும் 'மறைக் குங்காலை மரீஇய தொராஅல்' (எச்ச.47) எனவும் உடம்பொடு புணர்த்தலான் அல்ஈறாய் வருதலும் ஆல் ஈறாய் வருதலும் பெறுதலின் வியங்கோளீறும் கூறினார் எனவே படும். பிறவும் உளவேற் கொள்க.

---

1. இப்பகுதிக் கருத்தைத் தெய்வச்சிலையார் மறுப்பர். காண்க.
2. தன்னைத்தானே ஏவிக்கொள்வது இல்லை. அதனால் ஏவற்பொருளில் வரும் வியங்கோ தள்ன்மைக்கு இல்லை.
3. இப்பகுதியால் சேனாவரையர்க்கு வியங்கோள் ஈறு களாக வருவன க, ய, அல் என்பனவாம் என்னும் கருத் தாகும் என்பது புலப்படும்.
4. மெய்யூர்ந்து அகர வீறாய் வருதல் க, ய என வருதல்.

தெய்.

எய்தியது ஒருமருங்கு விலக்குதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்டவற்றுள் வியங்கோட் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய இடத்து நிலை பெறா, எ-று.

எனவே, படர்க்கை ஐந்து பாற்கண்ணும் வரும் என்றவாறாம். வியங்கோள் என்பது யாதோ எனின், செய்க என்னும் பொருட் கண்ணும், தவிர்க என்னும் பொருட்கண்ணும், வேண்டிக் கோடற் பொருட் கண்ணும் வருவது. அஃதாவது வாழ், உண், தவிர் என்னும் ஏவல் குறித்த சொற்கள், தன்மைப் பெயர்க் கண்ணும் படர்க்கைப் பெயர்க்கண்ணும் ஏலாது முன்னிலை ஒருமைப் பெயர்க்கண் நீவாழ், நீயுண், நீதவிர் என ஏற்றலின் ஆண்டுப் பாலுணர்த்துஞ் சொல்லோடு ஒரு நிகரனவாகி முன்னிலை வினையுள் அடங்கின. அப்பொருட்கண் தன்மை கூறும் வழி, யான் வாழ்வல், உண்பல், தவிர்வல் எனக் கூற வேண்டலின் அவை தன்மை வினையுள் அடங்கின. இனிப் படர்க்கைக்கண் வருங்கால், அவன் வாழ்க, உண்க, தவிர்க எனக் [1]ககரங் கடையாத்துக் கூற வேண்டுதலின், அவ்வாறு வருஞ் சொல் பாலுணர்த்தாமையின் வியங்கோள் என வேறுகுறி பெற்றது. அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க என ஐந்து பாற்கும் உரித்தாகி வந்தவாறு கண்டு கொள்க.

[2]நீ வாழ்க, உண்க எனவும் வருமால் எனின், அவை அக்ககரம் பெறாக்காலும் பொருள் இனிது விளங்குதலின் அவ்வாறு வருவன மரூஉ வழக்கென்று கொள்க. ''கடாவுக பாகநின் கால்வல் நெடுந்தேர்'' எனச் செய்யுளகத்தும் வந்ததால் எனின், 'நீகடாவுக' என வாராது, 'பாககடாவுக' என வருதலின், அது படர்க்கைப் பெயர் விளியேற்ற வழிவந்த தென்க. ''என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்'' (சிலப். வழக்குரை. 77) எனத் தன்மைக்கண் வந்ததால் எனின் ஆண்டுக் 'கெடுக' எனப்

---

1. ககரம் கடையாத்துக் கூற வேண்டுதலின் என்பதால் ககரம் ஒன்றே வியங்கோளீறாக வருவது என்பதும், அடுத்து ''நீ வாழ்க'' என்பது முதலாகத் தொடங்கி முடிய எழுதியவற்றால் ககர எழுத்தின் திரிபுகளாக இ, ய, அர், அல் என்பன வியங்கோளீறாக ஆளப்படும் என்பதும் தெய்வச்சிலையார் கருத்து என்னலாம்.
2. இப்பகுதி சேனாவரையர்க்கு மறுப்பு.

பட்டது ஆயுளாதலின் அதன்மேல் வந்ததென்க.இனி, அவ்வியங்கோட் கிளவி ஈறு திரிந்து வந்து அப்பொருள் படுதலும் கொள்க. ''வாழிய வென்னுஞ் செய்யென் கிளவி, யிறுதியகரங் கெடுதலும் உரித்தே'' (உயிர்ம. 9) என்றமையான் 'வாழ்க' என்பது 'வாழி, வாழிய, வாழியர்' எனவும், ''செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்'' (கிளவி. 13) என்றமையான் 'ஓம்புக' என்பது 'அல்' ஈறாகி வருதலும் கொள்க. ''மகனெனல் மக்கட்பதடி யெனல்'' (குறள் 996) என்றமையான் உடம்பாட்டினும் மறையினும் அல்லீறு வருதலும் கொள்க.

''ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை, ஆஅதும் என்னு மவர்'' (குறள். 653) என்பது பல்லோர் படர்க்கையாதலின் 'வேண்டும்' என்னும் முற்றுச்சொற் கொண்டு முடியாமையின், ஆக்கங் கருதுவார் இவ்வாறு செய்தல் வேண்டும் என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் வந்தது.

திசைதிசை தேனார்க்கும் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந் துலகேத்த வேதி னாட் டுறைபவர் (கலி.26)

என்றவழி, 'ஏதில் நாட்டுறைபவர் அருளுவாராக' என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் ஈறுதிரிந்தது. பிறவுமன்ன.

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ-ள்: அவற்றுள்—மேல் எஞ்சிய கிளவி எனப்பட்ட ஏழனுள், வியங்கோட் கிளவி—ஏவற் பொருண்மையை முற்ற முடித்தலையுணர்த்துஞ் சொல், முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடும் மன்னா தாகும்—முன்னிலையும் தன்மையுமாகிய அவ்விரண்டிடத்துப் பொருளொடும் அஃறிணைக்கண் பெரும்பான்மையும் நிலை பெறாது, உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலை பெறும், எ—று.

எனவே, படர்க்கைப் பொருட்கண் ''இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய'' ஆம். இதற்கு உதாரணம் முன்னர்க் காட்டினாம். (வினை. 26)

'நோயும் இன்பமும்' (பொருளியல் 2) என்னும் பொருளியற் சூத்திரத்தில் ''சொல்லா மரபினவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற்றொழிற்படுத் தடக்கியும்'' என்றும், ''ஞாயிறு திங்கள்''

(செய். 21) என்னும் செய்யுளியற் சூத்திரத்துச் ''சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்'' என்றும் அஃறிணை யேவற் பொருண்மையை முற்ற முடியாமையைக் கூறுகின்ற ஆசிரியர், அவற்றிற்கு ஏற்ப ஈண்டும் முன்னிலைக்கண் வரும் அஃறிணை யேவற் பொருண்மையை முற்ற முடியாது என்பது உணர்த்து தற்கு 'மன்னாதாகும்' என்றார். எனவே, அஃறிணைக்கண் வரும் முன்னிலை வியங்கோட்கு ஓரன்ன வுரிமையின்று என்றாரா யிற்று. தன்மை அஃறிணைக்கு இன்மை கூறல் வேண்டாவா யினும் உயர்திணைக்கண் சிறுபான்மை வழங்குதல் பற்றி உடன் ஓதினார்.

முற்கூறிய நட, வா முதலிய இருபத்து மூன்று ஈற்று முன்னிலை யேவல் ஒருமையும் அஃறிணைக்கண் வருங்கால் ஏவல் வினையை யுணர்ந்து அவை முற்ற முடியா என்பதனை உணர்த் தும். அதனை ஏவுதல் மரபன்று என்று கருதி ஆசிரியர் இங்ஙனம் ஓதினார்.

அவைதாம், கூறுகின்றவர் கருத்தான் ஏவல் கண்ணியே வரும். உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல் ஏவல் கண்ணியது. [1]இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்ய வேண்டும் என வேண்டிக் கோடலும் ஏவல் கண்ணிற்று.

இனி உயர்திணைப் பொருளாகிய முன்னிலைக்கண் வாழ்க, வாழிய என வாழ்த்துப் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று.

'கடாவுகபாக நின் கால் வல் நெடுந்தேர்' என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று.

இனி உயர்திணைத் தன்மைக்கண் 'யானும் நின்னோ டுடனுறைக' என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று. இது சிறுபான்மை என்பது உணர்த் துதற்கு முன்னிலையை முற்கூறினார்.

[2]இனி எழுத்தோத்தினுள் ''ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்'' (உயிர் ம. 8) என அகரவீற்றுள் எடுத்து ஓதின

---

1. இதனை ஏவல் கண்ணாதது என்பர் கல்லாடனார்.
2. இப்பகுதியில் கூறப்பட்டன கொண்டு நச்சினர்க் கினியர்க்கு வியங்கோள் ஈறுகளாக, க ய அல் ஆல் அர் மார் உம் ஐ ஆகிய எட்டும் வரும் என்பது கருத்தாகக் கொள்க. கல்லாடனாரும் இக்கருத்தினரே.

மையாற் பொருந்திய மெய்யை யூர்ந்து அகர ஈறாய் வருதலும்; உடம்பொடு புணர்த்தல் என்பதனால் 'வழாஅல் ஓம்பல்' (கிளவி 6) எனவும், 'இற்றெனக் கிளத்தல்' (கிளவி 19) எனவும், 'ஆக்கமொடு கூறல்' (கிளவி. 20) எனவும் வந்த அல்ஈறும், 'மரீஇய தொராஅல்' (எச்ச. 47) என வரும் ஆல் ஈறுமாய் வருதலும்; ஒன்றென முடித்தல் என்பதனால் வாழியர் என அர் ஈறும், மறைக்கண் 'காணன்மார் எமர்' (நற் 64) என்னும் மார் ஈறும் 'வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்' (புறம். 267) என உம்மீறும், ''அஞ்சாமை அஞ்சுவதொன்றில்'' என ஐகார ஈறும் ஆய் வருதலும் கொள்க.

இன்னும் இதனானே 'மகனெனல், மக்கட் பதடியெனல்' (குறள் 196) என உடம்பாடும் மறையுமாய் வருதலும் கொள்க.

இன்னும் இதனானே 'நாடா கொன்றோ, காடா கொன்றோ' (புறம் 187) என்பனவற்றையும் 'நாடேயாக, காடேயாக' என இதன் பாற்படுத்துக. இவற்றுள் ஏவல் கண்ணாதது இது என வுணர்க.

கல்.

என்-எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: முன்னிலை தன்மை என்று சொல்லப்பட்ட அவ்விரண்டிடத்தோடு நிலைபெறாதாகும் ஏவற் பொருண்மையை உணர்த்துஞ் சொல், எ-று.

உ-ம்: அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க எனவரும்.

தன்மை முன்னிலை என்னாது முன்னிலைத் தன்மை என்றதனாற் சிறுபான்மை முன்னிலைத் தன்மைக்கண்ணும் வருமெனக் கொள்க.

உ-ம்: ''கடாவுக பாக நின் கால்வல் நெடுந்தேர்'' 'யான் செல்க காட்டிற்கு' எனவரும்.

மற்று, இவ்வியங்கோள் ஏவல் கண்ணியதும் ஏவல் கண்ணாததும் என இருவகைத்து. ஏவல் கண்ணியதாவது உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல். ஏவல் கண்ணாததாவது இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்யப் பெற வேண்டிக்கோடல்,

மற்று அது பெரும்பான்மையும் 'உணர்க' என்றாற்போலக் ககரங்கிடைத்து வருமேயெனினும், 'வாழியர்' என அர் ஈறாயும், 'வாழிய' என யகரவீறாயும், ''இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தல்'' (கிளவி. 19) என அல் ஈறாயும், ''மறைக்குங் காலை மரீஇயது ஒராஅல் என அல் ஈறாயும், ''காணன்மார் எமர்'' என மார்ஈறாயும், ''[1]அஞ்சாமை யஞ்சுவ தொன்றின்'' என ஐகார வீறாயும் வரும்.

[2]இவற்றுள் அஞ்சாமை என்பது தொழிற் பெயர். மறை யன்றோ எனின், தொழிற்பெயர் மறையும் உண்டெனினும் அஞ்சுவென்...தொழிற்பெயர் வாய்பாடும் ஒருவழி வியங்கோளா மாகலின் மறையும் அந்நிகர்த்ததாம் என்பது.

மற்று உண்ணற்க, உண்ணேற்க, உண்ணாற்க என்பவோ எனின், அவை [3]அப் பத்திடை வேறுபாடல்லது முன்கூறிய ககர வீற்றவாகல் ஒக்கும்.

வெள்.

தன்மை முன்னிலை யிடங்களில் சிறுவரவின எனக் குறித்த வியங்கோள் வினை, தம் காலத்துப் பெருவரவினவாய் வழங் குதல் கண்ட பவணந்தி முனிவர்,

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. (நன். 337)

எனச் சூத்திரம் செய்தார்.

---

1. அஞ்சாமை—அஞ்சற்க. வியங்கோள்.
2. அஞ்சுதல் என்னும் தொழிற்பெயர்க்கு அஞ்சாமை என்பது தொழிற்பெயர் மறையாகும். ஆதலின் வியங் கோள் என்பது எப்படிப் பொருந்தும் என்பது வினா. விடை: உணல் என்பது உண்ணுதல் என்னும் தொழிற் பெயர். அதுவே உண்ணுக என ஏவலில் வரும். அப் போது வியங்கோள். எனவே தொழிற்பெயர் வாய்பாடு வியங்கோள் வாய்பாடாகும். அதுபோலவே தொழிற் பெயர் மறையும் வியங்கோள் மறையாகும். அதனால் அஞ்சாமை என்பது தொழிற் பெயர் மறையாயினும் வியங்கோள் மறையாகவும் கொள்ளலாம்.
3. அப்பத்திடை—விளங்கவில்லை.

ஆதி:

இவைகளில் வியங்கோள் வினை தன்மை முன்னிலை ஆகிய ஈரிடத்தும் நிலை கொள்ளாது, ஒட்டாது.

வியங்கோள்—ஏவல்.

ஒருவிளக்கம் : வியங்கோள்—பெருநெறி பற்றிய ஏவல் என்பதே எம் ஆசிரியர் கருத்து.

ஏவல் கண்ணிய வியங்கோள் என்றார் ஆசிரியர்.

அரசே வாழ்க, எம்மான் வாழ்க, தொண்டரொடு கூட்டு, எங்கள் அப்பத்தை எங்கட்குத் தாரும் -இவ்வாறு மேலிடத்தை வேண்டுதல் வியங்கோள் (விய—பெரிய)

ஆய்வு ; ஆசிரியர் வியங்கோள் வினை முன்னிலை தன்மைகளில் வருவதில்லை என்று கூறுகிறார்.

முன்னிலை—நீ வாழ்க எம்மான், நீவிர் நீடூழி வாழ்க.
தன்மை : யான் இன்னும் பல்லாண்டு வாழ்வேனாக
நாங்கள் வெற்றி பெறுவோமாக.

இவற்றின் தன்மை முன்னிலை வியங்கோள் பெறவில்லையா? பெறுகின்றனவே. இது ஆய்வுக்குரிய ஒன்று.

(இங்கு உரையாசிரியர்கள் கூறிய கறைபட்ட முறைகளை அன்பர்கள் படித்துத் துய்த்தல் வேண்டும்·)

'தன்மை முன்னிலையில் மன்னாது' எனவே படர்க்கையின் தான் மன்னும் என்பது பொருள். அது எவ்வாறு பொருந்தும்?

யான் வாழ்வேனாக	விருப்பத்தை அறிவிப்பது
யான் வெற்றி பெறுவேனாக	,,
யான் ஆசை மறக்கவே வேண்டும்	,,
யான் உத்தமர் உறவு கொள்ள வேண்டும்	,,

தன்மையிடம் பற்றிவருவன ஏவலும் அன்று;வேண்டலும்அன்று. தன்மை யொருமை யல்லது தன்மைப் பன்மை வினை முற்றே ஆதலின் தன்மையில் மன்னாது என்பர்.

முன்னிலை பற்றிக் காண்போம்.

காந்தி வாழ்க
காமராஜ் வாழ்க

நல்லோர் வாழ்க
தமிழ் வாழ்க

அரசே வாழ்க — தமிழகம் வாழ்க
அண்ணலே வாழ்க — தாய்நாடு வாழ்க
நேரு வாழ்க — பாரதம் வாழ்க

இஃதே வாழ்த்தும் முறை: இஃதன்றி நீர் வாழ்க, நீவிர் வாழ்க, நீங்கள் வாழ்க என்று முன்னிலைப் பெயர் கொண்டு வாழ்த்தல் — வியங்கோடல் ஆசிரியர் கருத்துப்படி முறையன்று, மரபும் அன்று.

'நீங்கள் தழைக்க' என்பதையும் முன்னிலை மறையைத் 'தாங்கள் தழைக்க' என்று இடத்தை மாற்றிப் பொருள் கோடலே மரபாயிருத்தலின் 'முன்னிலையில் மன்னாது' என்றார் போலும்.

ஆயினும் விலக்கு உண்டு. பெரும்பான்மையின்றிச் சிறு பான்மை வரும் என்று சுட்டவே 'மன்னாது' என்றார். தன்மை முன்னிலையில் வியங்கோள் நிலைக்காது; வந்து போகும் என்பது பொருள். முன்னிலை—படர்க்கை உருவமாகிறது. இடவழுவமைதி.

வாழ்க நீ எம்மான் — எம்மான் படர்க்கையை வேண்டுதல்
ஆண்டவரே நீர் அப்பத்தைத் தாரும் ,,
பரம்பொருளே நீ தொண்டரெடுாகூட்டு ,,

மறுப்பு: இவ்வாறு தொல்காப்பியரின் விதிக்கு ஏற்றவாறு பொருளைத் திரித்துக் கூறலாம். எனினும் உண்மை வேறு. வியங்கோள் முன்னிலையில் வரும் என்றே கூற வேண்டும்.

முழங்காலிட்டு வணங்குவோமாக (தன்மை)
தெய்வமே துணை செய் (நீ)
முருகா முத்தந் தருக
நீயே காத்தருள்

என்ற இடத்துத் தெய்வம், முருகன் படர்க்கைப் பெயர்களாயினும் தெய்வமே நீ துணை செய், முருகா நீ முத்தந்தருக என்று முன்னிலையாகவே கருதப்படுகின்றன.

மேலும் விளித்து நாம் வியங்கோள் கூறுகின்றோம். அண்மை விளி படர்க்கையை முன்னிலைப்படுத்திக் கூறுவதே.

நன்னூலாரும் விளி என்பது படர்க்கையோரைத் தன் முகமாகத் தான் அழைப்பதுவே' என்றார். தன் எதிரில் நிற்பதாகத்தான் விளித்தல் என்பது பொருள். ஆகவே எதிரில் நிற்பது முன்னிலையிடம் ஆகிறது. பெயரால்

படர்க்கையாயினும் பொருளால் முன்னிலை. ஆகலின் முன்னிலை வியங்கோள் ஏற்கும் என்பதே சால்புடைத்து. நன்னூலார் இதனை நன்கு தெளிந்து உணர்ந்து 'வியங்கோள் இயலும் இடம்பால் எங்கும்' (337) என்று விதித்துள்ளார். ஆகலின் வியங்கோள் ஐம்பால் மூவிடத்துக்கும் உரியதாம்.

வே. வேங்கடராசுலு ரெட்டியார்.

''ஆசிரியர் தொல்காப்பியனார் வியங்கோட்கிளவி என்று கூறுவது யாது என்று நோக்குவோம். அவர், உயிர் மயங்கியலில் அகரவீற்றுப் புணர்ச்சிக்கண் வியங்கோட்கிளவியைச் சேர்த்துக் கூறியிருத்தலின், வியங்கோட்கிளவி அகர வீற்றது என்பது அறியலாகும். ஆகலின் அவர் கருத்தின்படி வாழ்க, செய்க என்பன போன்ற கவ்வீற்றுச் சொல்லே வியங்கோட் சொல் எனப்படும் என்பது தேற்றம். ''வியங்கோள் படர்க்கைப் பொருள்மேல் ஏவற்பொருண்மையைக் கொண்டுவரும் முற்றுச்சொல்'' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது இதற்கே பொருந்தும். இது படர்க்கைக்கண் திணைவேறுபாடும் எண் வேறுபாடும் இன்றி ஐம்பாற்கண்ணும் வழங்கும். கன்னடத்தில் கெ, கே (ge) இவ்வீற்றுச் சொற்கள் வியங்கோட் பொருளில் படர்க்கை ஐம்பாற்கும் வருதல் ஈண்டைக்கு அறிதற்பாலது. தமிழிலில் கவ்வீற்றது கன்னடத்தில் கெவ்வீற்றதாய்த் திரிந்துள்ள இத்தனையே வேறுபாடு.

இனி வியங்கோட்கிளவி முன்னிலை தன்மைகளில் நிலை பெறாது என்று ஆசிரியர் தொல்காப்பியனார் விலக்கியதன் காரணத்தை நோக்குவாம். வியங்கோட் பொருளில் முன்னிலை தன்மைகளில் வரும் வினைச்சொல்லை முறையே முன்னிலை வினையிலும் தன்மை வினையிலும் ஆசிரியர் அடக்கினராகலின், அவ்வினைச் சொல் அவ்விடங்களில் ஒருமைபன்மை வினைகட்குக் கூறிய விகுதிகளுள் ஏற்றன பெற்றுவரும். ஆகலின் எண்வேறுபாடின்றிப் படர்க்கைக்கண் வரும் கவ்வீற்று வியங்கோட்சொல் எனையிடங்களில் வாராது என்று விலக்கப்பட்டது (நுண்பொருள் விளக்கம், வியங்கோள் பக் 50, 51)

சிவ.

முன்னிலையில் வரும் ஆய் ஈறு, செய்தாய், செய்கின்றாய், செய்வாய் என உடன்பாட்டுப் பொருளிலும், செய்யாய் (=செய்ய மாட்டாய்) என எதிர்மறைப் பொருளிலும், செய்யாய் (=செய்வாயாக) என ஏவற் பொருளிலும் வரும்.

ஆசிரியர் "செய்யாய் என்னும் முன்னிலை வினைச் சொல்" என்றாரேயன்றி முன்னிலை யேவல் வினைச்சொல் என்றார் அல்லர். இந்த ஏவல் கட்டளை ஏவலாகும்.

வியங்கோள் என்பதன் பொருள் ஏவற்பொருளைத் தன் கண் கொண்டது என்பதாம். (வியம்—ஏவற்பொருள், கோள்—கொண்டது) சொல்லில் ஏவற்பொருள் இருக்குமே தவிர அதன் படி நடந்தாக வேண்டும் என்னும் கட்டளையிராது. 'உண்பாய் நீ' என்றால் 'நீ உண்பாயாக' எனக் கட்டளையிடுவது புலப் படும். 'உண்க சாத்தன்' என்றால் ஏவல் போல் தோன்றினும் கட்டளையிடும் அமைப்பு இல்லை. எனவே முன்னிலை யேவலுக் கும் ஏவல் பொருளில் வரும் வியங்கோள் ஏவலுக்கும் வேறு பாடுண்டு.

'உண்ணாய் நீ' என்றால் கட்டளை புலப்படுவது போல 'உண்க சாத்தன்' என்பதில் கட்டளை புலப்படுவதில்லை. 'சாத்தன் என்பவன் உண்பானாக' என்னும் போது சாத்தனை ஏவியதாக ஆகாது. 'உண்க சாத்தா' எனின ஏவியதாக ஆகும். ஆனாலும் அவ்வேவலை அவன் கேட்டாக வேண்டும் என்ப தில்லை. அதனால் 'உண்பாய் நீ' என முன்னிலை யேவல் வினை முற்று முன்னிலைப் பெயரைக் கொண்டு முடிதல் போல, வியங் கோள் வினைமுற்று 'உண்க நீ' என முன்னிலைப் பெயரைக் கொண்டு முடியாது.

தன்மைக்கு ஏவல் இல்லையாதலின் ஏவற்பொருண்மை கொள்ளும் வியங்கோளும் இல்லை.

இந்நிலைமை தொல்காப்பியர் காலத்தியது. அதனால் தான் ஆசிரியர் இச்சூத்திரத்தை யமைத்தார். பிற்காலத்தில் சேனாவரையர், நன்னூலார், நச்சினார்க்கினியர் கால முதல் இன்றளவும் வியங்கோள் இடம்பால் எங்கும் இயலுவதாயிற்று. அதனால் ஆசிரியர் சூத்திரத்திற்குப் பொருள் கண்ட உரையாளர் 'மன்னாதாகும்' என்பதால் சிறுபான்மை தன்மை முன்னிலை களுக்கும் வியங்கோள் வரும் என்றனர்.

இனி ஏவல்கேடபதும் அதன்படி நடப்பதும் அஃறிணைக் கின்மையின் இச்சூத்திரம், 'அஃறிணையிடத்து வியங்கோள் ஆட்சி தன்மையிலும் முன்னிலையிலும் இல்லை என்கின்றதாகக் கொண்டு பொருளுரைத்தார் நச்சினார்க்கினியர் அதற்கு ஏற்ப, "நோயும் இன்பமும் என்னும்...மன்னாதாகும் என்றார்" என்றெழுதினார்.

'நோயும் இன்பமும்' என்னும் பொருளியற் சூத்திரத்தில், பேசாத விலங்கு பறவைகளிடமாகச் செயல் செய்தல் போலச் சொல்லுதல் கூறப்பட்டது; அதில் ஏவுதலும் கேட்டு நடத்தலும் விலங்கு பறவைகளுக்கில்லையாயினும் உள்ளனபோலக் கூறுதல் உண்டு என்பது கூறப்பட்டது. இதனால் அஃறிணைப் பொருள்களுக்கு ஏவலை முற்ற முடித்தல் இல்லை என்பது பெறப்படும். செய்யுளில் வந்த 'ஞாயிறு திங்கள்' (198) என்னுஞ் சூத்திரத்தில் ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், விலங்கு, மரம் முதலியன சொல்வன போலவும், கேட்பன போலவும் சொல்லப்படும் என்று கூறப்பட்டது. இதனாலும் அஃறிணைப் பொருள்கள்ஏவல் கேட்டு முற்ற முடிப்பனவல்ல என்பது பெறப்படும். இவ்விரண்டு சூத்திரங்களிலும் படர்க்கையில் அஃறிணைப் பொருள்கள் ஏவல் கேளா என்பது கூறப்பட்டது. அதுபோலவே இச்சூத்திரத்தில் அஃறிணைப் பொருள்கள் முன்னிலை நிலையில் இருந்து ஏவல் கேட்டல் இல்லை. எனவே வியங்கோட்கிளவி அஃறிணையில் தன்மை முன்னிலைகளுக்கு வாராது.

நச்சினார்க்கினியர் இவ்வாறு கூறுவது வலிந்து கூறுவதே யாம் ஆசிரியர் அஃறிணையில் மன்னாதாகும் என்று கூற வில்லை. அதனால் பிற உரையாளர் கூறியதே பொருந்தும்.

செய்யுமென்னுமுற்று

222. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா

(பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்று நிகழும் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா)

ஆ. மொ: இல.

The third person in epicene plural, the second and the first persons – these three have not 'Seyyum', denoting present tense.

பி. இ. நூ:

நன். 348

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே

இல. 241 ,, ,, ,,

தொன். 107

செய்யுமென் முற்றே சேரும் பலர்ஒழி
மற்றைப் படர்க்கையும்

முத்து. வி. 28

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் இதுவும் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

உரை : செய்யும் என்னுஞ் சொல் உயர்திணைப் பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையும் கொண்டு முடிதல் இல்லை, எ-று.

எனவே, ஒருவன் படர்க்கை, ஒருத்திப் படர்க்கை, ஒன்றன் படர்க்கை, பலவற்றுப் படர்க்கை என நான்குமே அஃது உரித்தாவது என்றவாறு.

வ-று : அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

இவ்வாறு விலக்கப்பட்ட வியங்கோட் சொல்லும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லும் ஒழித்து ஒழிந்தன எல்லாம் இரு திணை ஐம்பாற்கும் முன்றிடத்திற்கும் உரிய; அன்னதாதல் வழக்கினத்துக் கண்டு கொள்க.

சேனா.

இ-ள் : பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையு மாகிய அவ்வயின் மூன்றும், நிகழ்காலத்து வருஞ் செய்யு மென்னுஞ் சொல்லோடு பொருந்தா, எ-று.

[1]'அவ்வயின்' என்றது, இடமும் பாலுமாகியஎஞ்சிய கிளவிக் குரிய பொருட்கண் என்றவாறு. [2]நிகழுங்காலத்துச் செய்யு

1. அவ்வயின்—ஐம்பால் மூவிடங்களாகிய அப்பொருட் கண் எனப் பொருள் காண்க என்றவாறு.
2. செய்யும் என்பது நிகழுங் காலத்துக்குரியதாகக் கூறப் படினும் எதிர்காலமும் கொள்வது நன்று. ஏன் எனின் பெயரெச்ச வாய்பர்டுகளாகச் செய்த செய்யும் என்

மென்னும் கிளவியொடு' என அதனாற் தோன்றும் காலம் உணர்த்தியவாறு.

இவை இரண்டு சூத்திரமும் பொது வகையான் எய்தியன வற்றை (வினை. 28) விலக்கி நின்றன.

தெய்.

இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பலரையுணர்த்தும் படர்க்கையும் முன்னிலையும் தன்மையுமாகிய மூன்றிடமும் நிகழ்காலங் குறித்த செய்யும் என்னும் கிளவியொடு பொருந்தா, எ-று.

ஈண்டும் இவ்வாறோதி முன்னும் "அவ்விரு பொருட்கும் ஒரன்ன உரிமைய செய்யும் செய்த என்னுஞ் சொல்லே" (வினை. 37) எனவும் ஓதினமையாற் செய்யும் என்பது முற்றும் பெயரெச்சமும் என இருவகைப்படும் என்று கொள்க. அது முற்றாயுழித் தன்மையினும் முன்னிலையினும் உயர்திணைப் படர்க்கைப் பன்மையினும் வாராது; ஏனைப் பாலின்கண்ணே வரும் என்றவாறாம்.

அவனுண்ணும், அவளுண்ணும், அதுவுண்ணும், அவை யுண்ணும் எனவரும்.

ஈண்டு நிகழ்காலம் குறித்தது என்னை? எதிர்காலம் குறித்து வாராதோ எனின், எதிர்காலத்துக்கண் வருவது [1]கால மயக்க மாகக் கொள்க. முற்றுச் சொல் சேரக்கூறுகின்றாராகலின் இச் சூத்திரம் ஈண்டோதப்பட்டது.

நச்.

இதுவும் அது.

இரண்டே கூறப்பட்டன. செய்யும் என்பது நிகழ்கால மாயின் எதிர்கால வாய்பாடு யாது? அதனால் இரண்டு காலமும் கொள்க. செய்யும் என்றாலே அமையும். 'நிகழுங்காலத்துச் செய்யும் என்பானேன்? என்னும் வினாவுக்கு விடையிது எனக் கொள்க.

1. கால மயக்கம்—செய்யும் என்னும் நிகழ்காலத்துக் குரியது எதிர்காலத்துக்கு வருவது மயக்கம் என்றார். அப்படியாயின் எதிர்காலத்துக்குரிய வாய்பாடு யாது?

இ-ள்: பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை அவ்வயின் மூன்றும்—பல்லோரது படர்க்கையும் முன்னிலையும் தன்மையு மாகிய அவ்வெஞ்சிய கிளவிக்கண் வரும் மூன்றும், நிகழும் காலத்துச் செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா =நிகழுங் காலத்து வரும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லொடு பொருந்தா, எ-று.

உ-ம்: ''ஓஒதல் வேண்டும்ஒளிமாழ்கும் செய்வினை, ஆஅதும் என்னுமவர்'' (குறள். 653) ''என்குறை சொல்லல் வேண்டும் ஆர்வல'', ''யான் பொருதல்வேண்டும்''என வருவனவற்றிற்குத் ''தவிர் வாராக எனவும் 'சொல்வாயாக' எனவும், 'பொருவே னாக' எனவும் பொருள் உரைக்க.

கல்.

என்-எனின், இதற்கும் அக்கருத்தொக்கும்.

இ-ள்: பலரது படர்க்கையும் முன்னிலையும் தன்மையும் ஆகிய அவ்வயின் என்று சொல்லப்பட்ட மூன்றும் நிகழ்காலத் தைத் தமக்குக் காலமாகவுடைய செய்யும் என்னும் சொல்லோடு வருவனவாகக் கொள்ளப்படா, எ-று. எனவே படர்க்கையிற் பல்லோர் படர்க்கை ஒழித்து ஒழிந்த நான்கு படர்க்கைக் கண்ணும் வரும் என்பதாம்.

உ-ம்: அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும்.

அஃதேல்,

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர் (குறள் 653)

எனவும்,

''என் குறை சொல்ல வேண்டுமால் அலவ''

எனவும்,

''யான் போகல் வேண்டும்''

எனவும் ஒழிந்த இடத்தும் வந்ததால் எனின், வாராது; அவற்றிற்கெல்லாம் [1]சொல்நிலை வேறாகப் பொருள் உரைக்கப் படும் என்பது.

1. சொல்நிலை வேறாகப் பொருள் உரைத்தல்=செய்யும் என்னும் முற்றுச்சொல் நிலையை வியங்கோட் பொருள தாக வுரைத்தல். ஓஒதல் வேண்டும்—ஓவுக (நீக்க) சொல்ல வேண்டும்—சொல்லுக. போகல் வேண்டும்—போவேனாக.

நிகழுங்காலம் என்றது என்னை? அவன் உண்ணும் என எதிர்காலத்தும் வருமால் எனின், அது கால மயக்கம் எனக் கொள்க.

நிகழ்கால வரவு இக்காலத்து இல்லையால் எனின், உண்டு; 'அவன் என் செய்யும்' என்றார்க்கு [2]'அவன் இப்பொழுது ஓதும்' என்றாற் போல்வன நிகழ்காலத்தது எனக் கொள்க.

செய்யும் என்னும் சொல்தான் முற்றும் எச்சமும் என இரு வகைத்து. அவற்றுள் முற்று விலக்கியது ஈண்டை விலக்கு எனக் கொள்க. முற்றிற்கு உம் என்பதோர் ஈறாகக் கொள்க.

இதனோடு முன்கூறிய முற்று ஈறு எல்லாம் தொகுத்து நோக்க, உயர்திணையீறு இருபத்து நான்கும், அஃறிணையீறு ஏழும். இனி விரவு, வினையெச்சமும் பெயரெச்சமும் முற்றும் என மூவகைத்து.

அவற்றுள் மூன்று ஈறாகிய முன்னிலையும், வியங்கோளும், இன்மை செப்பலும், வேறென் கிளவியும், செய்ம்மனவும் ஆகிய ஐந்தனுள்ளும் முன்னிலையீறு முப்பத்து மூன்றும், வியங்கோள் ஈறு ஏழும், இன்மை செப்பல்ஈறு இரண்டும், வேறு என் கிளவியது ஈறு ஒன்றும், செய்ம்மன என்பதன் ஈறு ஒன்றும் ஆக நாற்பத்து நாலாம், பிறவுமாம். மேலும் அறிக.

சிவ.

செய்யும் என்னும் நிகழ்கால முற்றுச்சொல் பலர்பால்படர்க்கையிலும் தன்மையிலும் முன்னிலையிலும் வாராது என்பது இச்சூத்திரப்பொருள். இதற்கு உரையாசிரியர்கள் காட்டிய உதாரணங்கள் அமையும். ஆனால் நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்குப் பிறர்போல் உரைகூறாது, வேறுவகையில் கூறினார். ''செய்யும் என்னும் முற்று, பல்லோர்படர்க்கை, தன்மை முன்னிலைகளில் வாராது. ஒருகால் வந்ததாயின்அதைப் பொருளால் திருத்திக் கொள்ளல்வேண்டும்'' என்னும் கருத்தில் உரையும் உதாரணமும் எழுதினார். அவர் காட்டிய மூன்று உதாரணங்களிலும், வேண்டும் என்பது காணப்படுகின்றது. அதைச் செய்யும் என்னும் முற்றாகக் கொண்டார். ஒருவர் ஓதல் வேண்டும் எனப் பலர்பாலில் வந்ததாகக் கொண்டு ஒருவர் தவிர்வாராக (ஓவுதல் – தவிர்தல்) எனவும், 'என்குறை சொல்லல்

2. அவன் இப்பொழுது ஓதிக் கொண்டிருக்கும் என்பது பொருள்.

வேண்டும் ஆர்வல' என்பதில், 'சொல்லல் வேண்டும்' என்பதற்கு 'நீ சொல்வாயாக' எனவும், 'யான் பொருதல் வேண்டும்' என்பதற்குப் 'பொருவேனாக' எனவும் வியங்கோளாகப் பொருள் திரித்துக்கொள்ளல்வேண்டும். நச்சினார்க்கினியரின் இக்கருத்து அத்துணைச் சிறப்பில்லை. "வஞ்சரையஞ்சப்படும்" "அஞ்சத் தகும்" என்னுமிடங்களில் படும், தகும் என்பன தாம்சார்ந்தசொற்களோடியைந்து அஞ்சுக எனவியங்கோட் பொருளில் வந்தவாறு. 'ஓஒதல் வேண்டும்' என்பதில் 'வேண்டும்' என்பது 'ஓஒதல்' என்பதுடன் சேர்ந்து ஓவுக (தவிர்க) என்னும் பொருளில் வந்தது எனக் கொள்வதே நன்று.

வினையெச்ச வாய்பாடுகள்

223. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
வவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி. (29)

(செய்து செய்யூ செய்பு செய்தென
செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என
அ வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி)

ஆ. மொ: இல.

The adverbial participles are nine which are 'seythu', 'seyyū', 'seybu', 'seythena', 'seyyiyar', 'seyyiya' 'seyin', 'seya and 'seyaṛku'.

பி. இ. நூ.

அடுத்த சூத்திரத்துக் காண்க.

‡இளம்.

……………

சேனா.

[1]பொது வகையான் எய்தியவற்றுள் வியங்கோட் கிளவிக்கும் செய்யுமென்னுங் கிளவிக்கும் எய்தாதன [2]விலக்கி, இனி நிறுத்த

---

‡ இளம்பூரணர் உரையினை அடுத்த சூத்திரத்தில் காண்க.

1 பொதுவகையான் எய்தியமை 25ஆம் சூத்திரத்தில் பார்க்க.

2, விலக்கியவாற்றை 27, 28ஆம் சூத்திரங்களில் பார்க்க.

முறையானே வினையெச்சத்ினது பாகுபாடு உணர்த்து கின்றார்.

இ-ள் : செய்து என்பது முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் வினையெச்சமாம், எ-று.

'அவ்வகை யொன்பதும்' என்றது [3]இறுதி நின்ற இடைச் சொல்லான் வேறுபட்ட ஒன்பதும் என்றவாறு. அவ்விடைச் சொல்லாவன : உகரமும், ஊகாரமும், எனவும், இயரும், இயவும், இன்னும், அகரமும், குகரமுமாம்.

'செய்கென் கிளவி வினையொடு முடியினும் (வினை. 7) எனவும், 'செய்யாய் என்னும் முன்னிலை வினைச் சொல்' (வினை 54) எனவும், இறுதியிடைச் சொல் லேற்றவாற்றாற் பிரித்துணர வாய்பாடோதினாற் போல, ஏற்றவாற்றான் இறுதி யிடைச்சொற் பிரித்துணர்ந்து கொள்ள ஈண்டும் வாய்பாடுபற்றி யோதினார்.

உகரம் கடதற வூர்ந்து இயல்பாயும், [1]ஏனையெழுத்து ஊர்ந்து இகரமாய்த் திரிந்தும், நெடிலீற்று முதனிலை முன்னர் யகரம்வரத்தான் கெட்டும், இறந்தகாலம் பற்றிவரும். இவ்வுகர வீறுஇகரமாதலும், யகரம் வரக்கெடுதலும் 'வினையெஞ்சு கிளவி யும் வேறுபல் குறிய' (எச்ச. 61) என்பதனாற் பெறப்படும்.

உ-ம் : நக்கு, உண்டு, வந்து, சென்று எனவும்; எஞ்சி உரிஞி, ஓடி எனவும்; ஆய், போய் எனவும் வரும்.

[2]சினைஇ, உரைஇ, இரீஇ, உடீஇ, பராஅய், தூஉய், தாஅய் என்பனவோ வெனின், அவை செய்யுண் முடிவு என்க.

---

3. இறுதி நின்ற இடைச் சொல் என்பது விகுதியாகிய இடைச்சொல் என்பது.

1. எஞ்சு, உரிஞ், ஓடு என்பனவற்றுள் உரிஞ் என்பதில் ஞகரமெய் பற்றியும் மற்றவற்றுள் குற்றியலுகரம் பற்றி யும் உகரம் வந்து இகரமாகத் திரிந்தது. எஞ்சு+உ, உரிஞ்+உ, ஓடு+உ எனப்பிரித்து உகரத்தை இகர மாகத் திரிக்க. ஆ+உ, போ+உ என்பனவற்றில் இடையே யகரஒற்றுவர உகரம் கெட்டது. ஆ+ய், போ+ய்=ஆய், போய்.

2. சினந்து உராய்ந்து, இருந்து, உடுத்து, பரவி, தூவி, என்பன சினைஇ முதலியவாகச்செய்யுள்முடிபு எய்தின.

[3]ஆகி, போகி, ஓடி, மலர்த்தி, ஆற்றி என்புழி முதல்நிலை குற்றுகர வீறாதலின், ஏனை எழுத்தாதல் அறிக.

[4]கடதற என்பன குற்றுகரத்தோடு வருமிடமும் தனி மெய்யாய் வருமிடமும் தெரிந்துணர்க.

[5]அஃதேல் ஆய் என்பதனை யகரவீறு என்றும், ஓடி என்பதனை இகரஈறு என்றும் கொள்ளாது, உகரஈறு என்றதென்னையெனின், நன்று சொன்னாய்; இகரஇறுதி இடைச்சொல்லாயின், இறுதியிடைச் சொல் எல்லாத் தொழிலும் பற்றி வருதலிற் செலவு வரவு என்பனவற்றோடும் வரல்வேண்டும். இனிச் செய்து என் எச்சத்து உகரமும் இறுதி இடைச்சொல் ஆதலின் ஆகுதல் ஓடுதல் என்னுந் தொழில்பற்றியும் வரல் வேண்டும். செலவு வரவு பற்றி இகரம் வாராமையானும், ஆகுதல் ஓடுதல் பற்றி உகரம் வாராமையானும் இறுதியிடைச் சொல் இகரமேயாக உகரமேயாக ஒன்றாவதல்லது இரண்டெனப்படாதாம். உகரம் ஒன்றாய் நின்று கடதற ஊர்ந்த விதிவினைக்கட் பயின்று வருதலானும், எதிர்மறையெச்சம் எல்லாம் பெரும்பான்மையும் உகரவீறாயல்லது வாராமையானும், உகரம் இயல்பாக இகரம் அதன் திரிபு என்றலே முறைமையென்க. யகரவீற்றிற்கும் இஃதொக்கும்.

[1]ஊகாரம், உண்ணூ வந்தான், தின்னூ வந்தான் எனப் பின் வருந்தொழிற்கு இடையின்று முன்வருந்தொழின் மேல் இறந்த காலம் பற்றி வரும். அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்.

---

3. ஆகு + இ = ஆகி. இதில் இகரம் குற்றியலுகரத்தை யூர்ந்து வந்தது. அதனால் கடதற அல்லாத குற்றியலுகரம் ஏனை எழுத்தெனப்பட்டது.

4. உண்டு என்பதில் ட் இறந்தகாலம் காட்டித் தனிமெய்யாய் வந்தது. ஓடு என்பதில் குற்றியலுகரத்துடன் சேர்ந்து டு என வந்தது.

5. சிவ—உரையிறுதியில் சுந்தரமூர்த்தி விளக்கம்பார்க்க.

1. உண்ணூஉவந்தான் என்றால் உண்டு (உடன்) வந்தான் என்பதாகும். அதனால் வருதல் தொழிலுக்கும் உண்ணுதல் தொழிலுக்கும் இடைப்பட்ட காலம் நீளல் இல்லை. உண்டு வந்தான் என்றால், உண்டு இளைப்பாறி வந்தான் என உண்டல் தொழிலுக்கும் வருதல் தொழிலுக்கும் இடைப்பட்ட காலம் நீளல் உண்டு. எனவே உண்டு என்பதை அடுத்த தொழிலுக்கு

பகர வுகரம் 'நகுபு வந்தான்' என நிகழ்காலம் பற்றி வரும். நகாநின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலம் என்றது முடிக்குஞ்சொல்லா னுணரப்படும் தொழிலோடுஉடன் நிகழ்தல். உரிஞுபு என உகரமும், கற்குபு எனக் குகரமும் ஏற்றவழிப் பெறுதல் கொள்க.

என என்பது கடதற வூர்ந்து இறந்தகாலம் பற்றி முடிக்குஞ் சொல்லான் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத் தொழில் காரணம் என்பது படவரும். உ-ம்: சோலைபுக்கென வெப்பம் நீங்கிற்று, உண்டெனப் பசி கெட்டது, உரைத்தென வுணர்ந்தான், மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று என வரும். எஞ்சியெனவும், உரிஞியெனவும், ஏனையெழுத்தோடும் வருமா றறிந்து ஒட்டிக் கொள்க.

இயர், இய என்பன எதிர்காலம் பற்றி உண்ணியர் தின்னியர், உண்ணிய, தின்னிய என வரும். போகியர், போகிய என ஏற்றவழிக் ககரம் பெற்று வருதலும் கொள்க.

இன் எதிர்காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வரும். உ-ம்: மழை பெய்யிற் குளம் நிறையும், மெய்யுணரின் வீடு எளிதாம் என வரும். நடப்பின், உரைப்பின் என ஏற்றவழிப் பகரம் பெற்று வருதலும் கொள்க.

அகரம், மழைபெய்யக் குளம் நிறைந்தது, ஞாயிறு படவந் தான், உண்ணவந்தான் என மூன்று காலமும் பற்றி வரும். உரைப்ப, உரைக்க என ஏற்றவழிப் பகரமும் ககரமும் பெறுதல் கொள்க.

குகரம் உணற்கு வந்தான், தினற்குவந்தான் என எதிர்காலம் பற்றி வரும்.

[1]புகரமும் குகரமும் உகரத்தின்கண்ணும், எனவும் இயவும் அகரத்தின்கண்ணும் அடங்கும் எனின், ஆர் ஈற்றின் மார் அடங் காமைக்கு உரைத்தாங்கு (கிளவி. 7) உரைக்க.

இடைவெளியிட்டுக் கூறலாம். உண்ணூஉ என்பதை அவ்வாறின்றி உடனே அடுத்து அது முடியும் வினையைக் கூறுதல் வேண்டும்.

1. உரையிறுதியில் சுந்தரமூர்த்தி விளக்கம் பார்க்க.

[2]செயற்கு என்னும் வினையெச்சம் நான்கன் உருபு ஏற்று நின்ற தொழிற் பெயரின் வேறாதல் கிளவியாக்கத்துட் (கிளவி 40) கூறினாம்.

திரியாது நிற்கும் ஊகாரமும், புகரமும், எனவும், இயரும், இயவும் என்னும் ஐந்தீற்று வினை யெச்சமும் வழக்கினுள் இக் காலத்து வாராவாயினும், சான்றோர் செய்யுளுள் அவற்றது வாய்பாட்டு வேற்றுமை யெல்லாங் கண்டுகொள்க.

தெய்.

வினையெச்சம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: செய்து என்பது முதலாகச் செயற்கு என்பதீறாக ஓதப் பட்ட ஒன்பது வாய்பாடும் வினையெச்சச் சொல்லாம், எ—று.

வினையெச்சமாவது மற்றொரு வினைச் சொல்லோடல்லது முற்றுப்பெறாது நிற்கும். வினைச்சொல்லாவது பாலுணர்த்தாது காலங் காட்டி நிற்கும்.

செய்து என்பது இறந்தகாலம் காட்டும்.
செய்யூ என்பது இறந்தகாலமும் நிகழ்காலமும் காட்டும்.

''செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்'' என எழுத்ததி காரத்து (உயிர்ம. 20) ஓதுதலின் அவ்வாய்பாடும் இப்பொருட் டாகி வருதலின் அதுவும் கொள்க.

---

2. செயற்குஎன்பது செய் + அன் + க் + உ எனப்பிரிக்கப்படின் வினையெச்சம். செயல் + கு எனப்பிரிக்கப்படின்நான்கன் உருபேற்ற தொழிற்பெயர். வினையெச்சமாகவரின் ஓசை பிளவுபடாமல் வரும். தொழிற்பெயராகவரின் ஓசை பிளவுபட்டு வரும். (ஒலிக்கும்போது செயற்கு என வும் செயற் கு எனவும் ஒலித்துக் காண்க) இச்செய்தி கிளவியாக்கத்தில் ''சுட்டு முதலாகிய காரணக்கிளவி, சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்'' (40) என்னும் சூத்திரத்தில் அதனால் என்பதற்கு உதாரண மாகக் காட்டப்பட்டது. அதனால் என்பது, அது + அன் + ஆல் எனப் பிரிக்கப் படின் சுட்டுப்பெயர் அன்சாரியை யுடன் ஆல் என்னும் மூன்றாம் உருபேற்றதாகும். பிரிக்கப்படாமல் ஒரே சொல்லாக ஒலிக்கப்படின் காரணக்கிளவியாகும். இக்கருத்தை விளக்கவே அங்கு செயற்கு என்பது காட்டப்பட்டது.

செய்பு என்பது மூன்று காலமும் காட்டும்.

செய்தென என்பது இறந்தகாலப் பொருட்டாயினும் விரைவு குறித்தலானும், திரிந்து முடிதலானும் பொருள் வேறுபாடு உடைத்து ஆதலான் வேறு ஓதப்பட்டது.

செய்யியர் என்பது எதிர்காலம் காட்டும்.

செய்யிய என்பது வாய்பாடு வேற்றுமையுடைத்து ஆதலான் பொருள் நோக்காது சொல் நோக்கிக் கூறப்பட்டது.

செயின் என்பது எதிர்காலம் பற்றி வரினும் பொருள் வேறு பாடு உடைத்தாதலான் வேறோதப்பட்டது.

செய என்பது மூன்று காலத்திற்கும் பொதுவாகிப் பொருள் வேறுபாடுடைத்து.

செயற்கு என்பது எதிர்கால வாய்பாட்டு வேற்றுமைகுறித்து ஓதப்பட்டது.

உதாரணம் வருகின்ற சூத்திரங்களுட் காட்டுதும்.

நச்.

இது முறையானே வினையெச்சம் உணர்த்துகின்றவற்றுள் சிறந்தன தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: செய்து செய்யூ செய்பு செய்தென செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி—செய்து என்பது முதலாகச் சொல்லப்பட்ட அக்கூற்று ஒன்பது வாய்பாடும் முற்கூறிய வினையெச்சமாம், எ-று.

இது 'தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்' (மரபியல் 110).

செய் என்னும் வாய்பாட்டினை உகரமும், ஊகாரமும், புகரமும், எனவும், இயரும், இயவும், இன்னும், அகரமும், குகரமும் என்னும் இறுதி இடைச் சொல்லான் வேறுபடுத்தினார்.

செய்து என்பது இறந்தகாலம் பற்றி வருங்கால் குற்றுகரத் தான் ஊரப்பட்ட க, ட, த, ற என்னும் நான்கும், இகர ஈறும், யகர ஈறும் என அறுவகைத்து ஆமேனும், இகர வீறும் செய்து என்னும் வாசகத்தைத் தந்தே நிற்றலின், பொருண்மையால் ஒன்றாக அடக்கப்பட்டன.

உ-ம்: நக்கு, உண்டு, வந்து, சென்று, எஞ்சி, உரிஞி, ஓடி, ஆய், போய் என வரும்.

இவற்றுள் உகரம் இகரமாய்த் திரிந்தது எனின், உரிஞி என்பதனை 'ஞகாரை ஒற்றிய' (எழுபுள்ளி. 1) என்னுஞ்

சூத்திரத்தான் உரிஞ் என நிறுத்தி, நிலைமொழித் தொழிலாகிய உகரம் பெறும் என விதித்தலின் உரிஞு என்னும் முற்றுகரந் திரிந்து உரிஞி என நின்றது என்றல் பொருந்தாமை உணர்க.

இனி, ஆகு போகு எனக் குற்றுகர ஈற்றான் முதல்நிலை ஆயிற்றெனில், ஆகினான் போகினான் என முற்றும் அதன் கண்ணே தோன்றுதல் வேண்டும். அங்ஙனம் வழங்காமையின் ஆ, போ என்பன முதல்நிலையாய் காலங் காட்டும் யகர ஒற்றுப் பெற்று ஆயினான், போயினான் என முற்றும் அதன் கண்ணே தோன்றுதலின், ஆகு, போகு எனக்குற்றுகர ஈற்று முதல் நிலை இன்றாம் என்று உணர்க. இதனானே வினையெச்சம் முற்றாய்த் திரியும் என்பதும் உணர்க. அவை தூயினான், தாயினான், போயினான், ஏயினான், சினைஇயினான், முனைஇயினான், உரைஇயினான், மரீஇயினான், உடீஇயினான் கடைஇயினான், தழீஇயினான், குழீஇயினான், பராயினான், விராயினான், நிலாயினான், கலாயினான் என வரும். இவை இங்ஙனம் முற்றாய்த் திரிதலின் பெயர் கொண்டு முடிவன ஆயின. ஆய் போய் என்பன ''வினை யெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய'' என்பதனால் திரிந்து நிற்கும் என்பது கோடலின் திரிந்து நின்றன. அச்சூத்திரத்து வினையெச்சம் முற்றுவினை கொள்ளுமாறும் காட்டுதும். முன்னர்க் காட்டிய உதாரணங்களுள் உகரம் இகரமாய்த் திரியாமையும் இவ்வாறே பிரித்து உணர்ந்து கொள்க. ''விருந்தின்றி உண்ட பகலும்'' (திரிகடு. 44) எனவும், ''நாளன்று போகி'' (புறம் 124) எனவும் வருவன செய்தென் எச்சக் குறிப்பு. செய்து என்பதற்கு, ஓடா நின்று போயினான் எனவும் ''அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான்றெழுதரு'' (பெரும்பாண் 1,2) எனவும், ''தலைப் பெயற் கரும் என்று முளிதற் பொதுளிய முட்புறப் பிடவமும்'' (கலி. 101) எனவும் நிகழ்கால வாய்ப்பாடும் சிறுபான்மையுளது என்றுணர்க.

நக்கு என்பது நகு என்னும் முதல்நிலைக்கண் விரிந்த நகுதல் என்னும் வினைப்பெயரடியாகச் செய்து என்னும் வினையெச்சந் தோன்றி, நகுதலைச் செய்து என்னும் பொருள் தந்துநின்றது.

இனி, ஊகாரம், உண்ணூஉவந்தான் எனவும், ''படுமகன் கிடக்கை காணூஉ'' (புறம். 278) எனவும், ''நிலம் புடையூஉ எழுதரு வலம்படு குஞ்சரம்'' (பதிற். ''இலங்குதொழ'') எனவும் பின்வரும் தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி முன்வரும் தொழில்மேல் இறந்த காலம் பற்றி வரும். உண்ணா எனவும்,

''கல்லாக் கழிப்பர்'' (நாலடி. 366) எனவும், ''நிலங்கினையா நாணிநின்றோள்'' (அகம்.16) எனவும் ஆகாரம் வினையெச்ச மாய் வருதல் ''செய்யா யென்னும் வினையெஞ்சு கிளவியும், அவ்வியல் நிலையா தென்மனார் புலவர்'' (எழு. உயிர். 20) என்பதனால் பெறப்படும்.

இனிப் பகர உகரம் 'பல்கால், வாக்குபு தரத்தர வருத்தம் வீட, ஆர வுண்டு (பொருந 86-88) எனவும், ''புலராப் பச்சிலை இடையுடுபு தொடுத்த'' (புறம் 33) எனவும் பெரும்பான்மை இறந்த காலத்துவரும்அப் புகரம், நகுபு வந்தான்' என்புழி, 'நகாநின்று வந்தான்' என்று முடிக்குஞ் சொல்லால் உணரப் படும் தொழிலோடு உடன் நிகழ்ந்தது, நிகழ்காலத்தும் வரும். அது ''வாடுபு வனப்போடி'' (கலி. 16) எனவரும். உரிஞுபு என உகரமும், 'கற்குபு' எனக் குகரமும் ஏற்புழிவரும்.

இனி என என்பது க ட த ற ஊர்ந்து, இறந்தகாலம் பற்றி முடிக்குஞ் சொல்லால் உணரப்படும் தொழிற்குத் தன் முதனிலை தொழில் காரணமாய விரைவுப் பொருள் உணர்த்தும்.

உ-ம்: சோலை புக்கென வெப்பு நீங்கிற்று, உண்டெனப் பசி கெட்டது, உரைத்தென வுணர்ந்தான், மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று என வரும். 'எஞ்சியென' எனவும், 'உரிஞியென' எனவும் ஏனையெழுத்தோடும் ஒட்டுக.

இனி, இயர், இய என்பன உண்ணியர், தின்னியர் எனவும், உண்ணிய, தின்னிய எனவும் எதிர்காலம் பற்றி வரும். போகியர், போகிய என ஏற்புழிக் குகரமும் பெறும்.

இனி, இன் எதிர்காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வரும்.

உ-ம்: மழை பெய்யின் குளம் நிறையும், மெய்யுணரின் வீடு எளிதாம் என வரும். நடப்பின், உரைப்பின் என ஏற்புழிப் பகர மும் பெறும். இது ''நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே'' (கலி. 39) என 'உம்' ஈறு ஆதலும் ''அற்றால் அளவறிந்து உண்க'' (குறள் 943) என ஆல் ஈறு ஆதலும் ''வினையெஞ்சு கிளவியும் வேறுபல்குறிய'' (எச்ச. 61) என்பதனால் பெறப் படும். ''அவா வுண்டேல் உண்டாம்'' (குறள். 1075) என்னும் ஏலும், ''அவனெள்ளுமேனும் வரும்'' என்னும் ஏனும் இதன் குறிப்பு. ''ஒன்றானும் தீச்சொல்'' (குறள். 128) என்புழி, 'ஆயினும்' என்பது 'ஆனும்' எனக் குறைந்து நின்றது;

''துணங்கிய கேள்வியர் அல்லால்'' (குறள். 419) என்பது, 'அன்றி' என்னும் செய்தென் எச்சக் குறிப்பு உணர்த்துவதோர் வாய்பாடு 'அல்லவாயின்' என்று பொருளாயின் இதன் குறிப்பாம்.

இனி அகரம் இறந்த காலத்துக்கண், மழை பெய்யக் குளம் நிறைந்தது எனக் காரணம் பொருளாயும், குளம் நிறைய மழை பெய்தது எனக் காரியப் பொருளாயும் வரும். இனி நிகழ்காலத்துக்கண் 'நாயிறு படவந்தான்' என்பது 'நிகழா நிற்க வந்தான்' என்னும் பொருட்டாய் வரும். ''வாழச் செய்த நல்வினையுலகம்'' என்பதும் அது. இனி எதிர்காலத்துக்கண் 'உண்ண வந்தான்' என அதற் பொருட்டாய் வரும். உரைப்ப, உரைக்க என ஏற்புழிப் பகரமும் ககரமும் வரும். இனி ''துன்னிப் பெரிய ஓதினும் சிறியவுணரா'' (புறம். 375) என அகரம் வினைக் குறிப்புப் பற்றி வருவனவும், 'செவ்வன் தெரிகிற்பான்' எனவும், ''புதுவதின் இயன்ற அணியன்'' எனவும், ''புதுவது புனைந்த வெண்கை யாப்பு'' (மலைபடு. 28) எனவும், ''பொய்கைப்பூப் புதிதீன'' (கலி. 31) எனவும், ''பெருங்கை யற்ற வென்புலம்பு'' எனவும், ''சிறுநனி நீ துஞ்சியேற்பினும்'' (கலி. 12) எனவும், 'ஒல்லைக் கொண்டான்' எனவும், அகர ஈறு அன்றிப் பிற ஈறுகளான் முடிக்குஞ் சொல்லை விசேடித்து வருவனவும் ''வினையெஞ்சு கிளவியும் வேறுபல்குறிய'' (எச்ச. 61) என்பதனான் பெறப்படும். இது மறைக்கண் ''கூறாமற் குறித்த தன்மேற் செல்லுங் கடுங்கூளி'' (கலி. 1) என 'மல்' ஈறாயும், ''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்'' (குறள். 701) என மகர ஐகார ஈறாயும் வரும்.

இனிக் குகரம், உணற்கு வந்தான் என எதிர்காலத்து வரும். உண்டான், உண்டவன் என்னும் தொழிற்பெயர்கள், உண்டாற்கு, உண்டவற்கு என நான்கன் உருபை ஏற்றுழிச் செயற்கு எனும் எச்சப் பொருள் தரும் மயக்கம் இன்மையும், உணல் என்னும் வினைப்பெயர் குகரம் அடுத்துழி 'உண்டலைச் செயற்கு' என்னும் பொருள் தந்து எச்சப் பொருட்டாயே நிற்றலின், வினைப்பெயர் நான்கனுருபு பெற்று நின்றது என்னும் மயக்கம் இதற்கு இன்மையும் உணர்க. 'எற்றுக்கு வந்தான்' என்பது 'எக்காரியம் செய்தற்கு வந்தான்' என்னும் பொருட்டாய் இவ்வெச்சக் குறிப்பாய் நிற்கும். எவற்றுக்கு என்பதும் அது.

இவ்வினையெச்சங்கட்கு எஞ்சி நிற்கும் வினைகளும் அறுவகைப்படும். அவை தெரிநிலை முற்றும், குறிப்பு முற்றும், பெய

ரெச்சமும், பெயரெச்சக் குறிப்பும், வினையெச்சமும், வினையெச்சக் குறிப்பும் ஆம். ஓதி வந்தான்—இது தெரிநிலை வினைமுற்று. ஓதிநல்லன்—இது குறிப்பு முற்று. ஓதிப்பெற்ற பொருள்—இது பெயரெச்சம். ஓதி நல்ல சாத்தன்—இது பெயரெச்சக் குறிப்பு: உழுது பயன் கொண்டு—இது வினையெச்சம். உழுது அன்றி உண்ணான்—இது வினையெச்சக் குறிப்பு.

கல்.

என்—எனின், இதுவும் மேல் எஞ்சிய கிளவி என்று ஓதிய பொது விதியுட்பட்ட வினையெச்சம் என்பதற்கு வாய்பாட்டு வேற்றுமையும் முடிபு வேற்றுமையும் கூறுவான் தொடங்கி அவ் வினையெச்சங்களுள் சிறப்புடைய வாய்பாடுகளைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: செய்து என்பது முதலாகச் செயற்கு என்பதீறாக ஓதப்பட்ட அக்கூற்று ஒன்பது வாய்பாட்டதாம் முன் வினையெஞ்சு கிளவி என்றோதப்பட்டது, எ-று.

அவற்றுள் செய்து என்பது முதலாகச்செய்தென என்பதீறாக அந்நான்கும் இறந்த காலத்த வாகலான் முன்னே உடன்வைக்கப் பட்டன. அவற்றுள் செய்து என்பது பெருவழக்கிற்றாகலின் அவற்றுள்ளும் முன்வைக்கப்பட்டது. அவற்றுள் செய்தென என்பது அவற்றிற்கெல்லாம் சிறு வழக்கிற்றாதலானும், பிற வினையும் கோடலானும் பின்வைக்கப்பட்டது.

இனிச் செய்யியர் என்பது முதலாகச் செயற்கு என்பது ஈறாக ஐந்தும் எதிர்காலத்த வாகலானும், பிறவினையும்கோடல் உண்மையானும் பிற வினையும் கோடலுமுடைய செய்தென வினையின் பின்னர் உடன்வைக்கப்பட்டன. அவ்வைந்தும் எதிர்காலத்தவேனும் செய்யியர் செய்யிய என்னும் இரண்டும் வாய்பாட்டு வேற்றுமையல்லது பொருள் வேற்றுயின்மையின் உடன்வைக்கப்பட்டன. செயின் என்பது வாய்பாட்டு வேற்றுமையோடு பொருள் வேற்றுமையும் உடைமையின் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டது. செய என்பது எதிர்காலத்தேயன்றிப் பிறகாலத்தும் சிறுபான்மை வருதலான் அதன்பின் வைக்கப்பட்டது. செயற்கு என்பது அவை போல வழக்குப் பயிற்சியின்மையின் எல்லாவற்றினும் பின் வைக்கப்பட்டது.

இதன்முன் செய்து என்றோதிய வாய்பாடு குற்றியலுகரத்தால் ஆராயப்பட்ட கடதற என்னும் நான்கீறும், இகரவீறும் யகரவீறும் என அறுவகைப்பட்டது. அவ்வறுவகையும் செய்தெனப் பொருண்மையால் ஒன்றாக வைக்கப்பட்டது.

அஃதேல் செய்யூ, செப்பு, செய்தென என்பனவும் இதனுள் அடங்காவோ எனின், அவ்வாறு அடங்குமேனும் இவற்றிற்கு வேறுபாடு உண்டென்று அறிவித்தற்கு வேறு ஓதினார் என்பது. யாதோ வேற்றுமையெனின், செய்தென்றதன் ஈறு செய்தல் என்னும் தொழிற்கண்ணே செய்து எனத் தகர உகர ஈறாயும், உண்டல் என்னும் தொழிற்கண்ணே உண்டு என டகர உகர ஈறாயும், தின்றல் என்னும் தொழிற்கண்ணே தின்று என றகர வுகர ஈறாயும், புகுதல் என்னுந் தொழிற் கண்ணே புக்கு எனக் ககரவுகர ஈறாயும், ஓடல் என்னுந் தொழிற்கண்ணே ஓடி என இகர ஈறாயும், தூவுதல் என்னுந் தொழிற்கண்ணே தூய் என யகர வீறாயும் ஒரு தொழிற்கண்ணே வேறுபட* வந்தவாறு.

ஒரு தொழிற்கண்ணே வேறுபட வாராமையையுடைய அத் தொழில் எல்லாவற்றிலும் உழூஉ எனவும், உழுபு எனவும், உழுதென எனவும், உண்ணூஉ எனவும், உண்குபு எனவும், உண்டென எனவும், தின்னூஉ எனவும், திண்குபு எனவும், தின்றென எனவும்; புகூஉ, புகுபு, புக்கென எனவும்; ஓடூஉ, ஓடுபு, ஓட்டென எனவும்; தூஉ, தூபு, தூய் எனவும் வேறு படாது வருதலுடைமையின் வேறு கூறினார் என்பது.

செய்யூ என்பதற்குச் செய்யா என்பதும் ஓர் வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும். இதனை இறந்த கால விரவுப் பொருட்டு என்பாரும் உளர்.

செய்து என்பதற்குச் செய்யா நின்று என்பதூஉம் ஓர் நிகழ் கால வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனால் கொள்ளப்படும்.

இனிச் செய்யியர் என்பது மழை பெய்யியர் எழுந்தது என்பது.

செய்யிய என்பது மழை பெய்யிய எழுந்தது என்பது.

செயின் என்பது மழை பெய்யிற் குளம் நிறையும் என்பது. இது நிகழின் அதுநிகழும் என்னும் காரணப் பொருள் பற்றி வரும். இதற்கு மழை பெய்தால் குளம் நிறையும் என ஆல் என்பதும் ஓர் வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்க.

''நனவிற் புணர்ச்சி நடக்கலும்'' (கலி. 39) என உம் ஈறாதலும் கொள்க. இதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்க.

மழைபெய்தக்கால் என்பதோ எனின் அதுபின் (31) ஓது கின்ற கால் என்னும் வாய்பாடெனக் கொள்க. மழை பெய்யு

மேலும், மழைபெய்யுமேனும் எனவரும் ஏல் ஏன் என்பனவோ எனின், அவற்றையும் இதன் குறிப்பு என்று கோடலும் ஒன்று. அன்றியும் இவ்வெச்சப் பொருள்படுவன சில இடைச்சொல் என்று கோடலும் ஒன்று.

''ஒன்றானுந் தீச்சொல்'' (குறள். 258) என்புழி ஆனோ எனின், அதுவும் அப்பால் ஓரிடைச்சொல் என்றலும் ஒன்று. 'ஆயினும்' என்னும் சொல் ஆனும் என இடைக்குறைந்து நின்றது என்றலும் ஒன்று.

நுணங்கிய கேள்வியரல்லால்' (குறள். 419) என்புழி, அல்லால் என்பதோ எனின், அன்றி என்னும் செய்தென் எச்சக் குறிப்பிற்கு அதுவும் ஓர் வாய்பாடென்பது. 'அல்ல வாயின்' என்பது பொருளாக்கி இதன் குறிப்பு என்பாரும் உளர்.

இனிச் செய என்பது மழைபெய எழுந்தது என்பது. மழை பெய்யக் குளம் நிறைந்தது என இறந்த காலத்துக் கண்ணும் வரும். மழை பெய்யக் குளம் நிறையும் என நிகழ்காலத்தும் சிறுபான்மை வரும்.

இவ்வெச்சத்தான் ஒருவழி மழைபெய்யக் குளம் நிறைந்தது எனக் காரணப் பொருளாயும், குளம் நிறைய மழை பெய்தது எனக் காரியப் பொருளாயும், மழைபெய்ய எழுந்தது என 'அதற் பொருட்டு' என்னும் பொருட்டாயும், மழைபெய்யச் சாத்தன் வந்தான் என உடன் நிகழ்ச்சியாய் நிகழ்த்தற்கண் இடப் பொருட்டாயும் பிறவாற்றாயும் வரும் என்பது.

இனி, 'துன்னிப்பெரிய ஓதினும் சிறிய வுணரா'' (புறம் 373) என்புழிப் பெரிய சிறிய என்பன பெருமை சிறுமைப் பண்படியாக வந்தமையின் இவ்வெச்சத்தின் குறிப்பு என்றலும் ஒன்று. இவ் வெச்சப் பொருள் உரிச்சொல் என்றலும் ஒன்று.

இனிச் 'செவ்வன் தெரிகிற்பான்' எனவும், 'புதுவதின் இயன்ற அணியன்' எனவும், 'புதுவது புனைந்த வெண்கையாப்பு' எனவும், 'பொய்கைப் பூம்புதிதீன' எனவும், 'பெருங்கையற்ற வென்புலம்பு' எனவும், 'சிறுநனிநீ துஞ்சி யேற்பினும்' எனவும், ஒல்லைக் கொண் டான் எனவும், பிறவும் அகரவீறன்றிப் பிறவீறாய் வருவனவும் அவ்வாறே உரைக்கப்படும்.

இனிச் செயற்கு என்பது உணற்கு வந்தான் என்பது. இந்து அதற்பொருட்டென்னும் பொருள்பற்றி வரும். இது உணல் என்னும் தொழிற்பெயர் நான்காம் உருபு ஏற்றவாறன்றோ எனின், அதுவும் ஓர் வழக்குண்டு. பெயர்ப் பொருண்மை நோக் கியவழி அதுவாகவும், காலம் நோக்கியவழி வினையெச்சமாகவும்

கொள்க. எற்றுக்கு என்பது இதன் குறிப்பு வாய்பாடாகக் கொள்க.

கு. சுந்தரமூர்த்தி (சேனாவரைய விளக்கம்)

ஓடி எஞ்சி என்பனவும், ஆய் போய் என்பனவும் உகர வீற்றின் திரிபு என்பர் சேனாவரையர். ஆனால் அவை இகரவீறாகவும், யகரவொற்றாகவும் இருக்கின்றன. இவற்றை உகரவீற்றின் திரிபு என்றல் எங்ஙனம்?—என்பதைச் சேனாவரையர் மிக நுண்மையாக விளக்குகின்றார்.

(1) விகுதிகள் எல்லாம் எல்லா முதல்நிலைகளோடும் வருதல் மரபு. அந்நிலையில் ஆய், ஓடி என்பனவற்றில் விகுதியாக வருவன யகரஒற்றும் டகரஇகரமுமேயாகும். இவை இயற்கைச் சொல்லாயின், இவ்விகுதிகள் எல்லாமுதல்நிலைகளோடும்வருதல் வேண்டும். ஆனால் இவ்விகுதிகளோ செலவு, வரவு முதலிய முதல்நிலைகளோடு வாரா. இங்ஙனமே உகரமும் விகுதியாக வருமாயின் ஆகு, ஓடு என்பன போன்ற முதல்நிலைகளோடும் வருதல் வேண்டும். ஆகு ஓடு என்பனவோ ஏற்கனவேயே உகர இறுதியாய்ப் பகுதிகளாக நிற்கின்றன. ஆதலின் அவற்றில் மீண்டும் உகரம் வருதல் இல்லை. இங்ஙனமாக உகர இறுதியாக வைத்துக் கொள்ளினும் சிலசொற்களுக்கு வாராமையின் அதனையே அனைத்திற்கும்உரியவிகுதியாகக்கொள்ளுதல் பொருத்தமில்லா திருக்கின்றது. ஏனைய இகர யகர விகுதிகளையே வைத்துக் கொள்ளினும் அவையும் சில சொற்களுக்கு வாராமையின் அவற்றையே அனைத்துச் சொற்களுக்கும் உரிய விகுதியாகக் கொள்ளுதல் பொருத்தமில்லா திருக்கின்றது. இவ்வெல்லா விகுதிகளையுமே கொள்ளலாம் என்றாலோ, அதுவும் அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. எனவே ஆய், ஓடி என்பனவற்றிலுள்ள ஈறுகளை யகர இகர ஈறுகளாகக் கொள்வதா? அல்லது உகரவீற்றின் திரிபாகக் கொள்வதா என்ற முன்னைய கேள்வியே மீண்டும் வருகின்றது.

(2) உகரம் கடதற என்ற நான்கு மெய்யின்மீதும் இவர்ந்து விதிவினைக்கண் பயின்று வரும் சிறப்பினதாய் உள்ளது. எதிர்மறை எச்சமாய் வருவனவும் (உண்ணாது, வாராது, தின்னாது எனப்)பெரும்பாலும் உகர வீறாகவே வருகின்றன. ஆகவே இச்சிறப்பு நோக்கி உகர விகுதியே விகுதியாகக் கொண்டு அது யகரவொற்றாகவும் இகர இறுதியாகவும் திரிந்து வந்தது எனக் கொள்ளுதல் முறையாம்.

செய்து என்பதை உகர வீறாகவும், செய என்பதை அகர வீறாகவும் கொள்வர் சேனாவரையர். அங்ஙனமாக, செய்பு, செயற்கு என்பனவற்றையும் செய்து என் எச்சத்துள் அடக்கி உகர வீறாகவும், செய்யிய, செய்தென என்பனவற்றையும் செய வென் எச்சத்துள் அடக்கி அகர வீறாகவும் கொள்ளலாமே அங்ஙனம் கொள்ளாதது ஏன்?—என்ற வினாவிற்கு, ஆர் ஈற்றில் மார் ஈறு அடங்காமைக்கு உரைத்தாங்கு உரைக்க என விடையிறுத்தனர் சேனாவரையர். இங்ஙனம் பொதுவாகச் சேனாவரையர் கூறினும், ஆரீற்றுள் மார் ஈறு அடங்காமைக்கு உரைத்த இரு காரணங்களுள் முன்னையதே ஈண்டுக் கொள்ளல் வேண்டும்.

செய்பு, செயற்கு, செய்தென, செய்யிய என்பனவற்றுக்கு இறுதி உகரமாகவும் அகரமாகவும் கொள்ளின் அவ்வுயிரேறிய ப் க் ன் ய் என்பன காலங் காட்ட வேண்டும். ஆனால் இவையோ காலங் காட்டுவன அல்ல. ஆதலின் இவற்றை அம்மெய் ஏறிய உயிரோடு சேர்த்துச் செய்பு, செயற்கு, செய்தென, செய்யிய என்ற வாய்பாடுகளாகக் கொள்ள வேண்டுமேயன்றி உகர வீறாகவும் அகர வீறாகவும் கொள்ளலாகாதென்பதாம்.

சிவ.

உகர விறுதியில் அடங்குவனவற்றைச் செய்து, செய்பு, செயற்கு என மூன்றாகவும், அகரவீற்றுள் அடங்குவனவற்றைச் செய்தென, செய்யிய, செய என மூன்றாகவும் தனித்தனி வாய்பாடுகள் கூறிய ஆசிரியர், ஓடி, போய் என வரும் இகர ஈற்றுக்கும் யகரவொற்றீற்கும் வாய்பாடுகள் கூறாதது ஏன்? இகர யகர வீறுகள் உகர வீற்றின் திரிபுகள் என்றார் சேனாவரையர். இகர யகரம் இறுதி விரவும் என்றார் ஆசிரியர். அது ஐகாரத்துக்குக் கூறியது என்பது என் கருத்து. பிறர் நாய்—நாஇ என வருவனவற்றுக்கும் கணி—கணிய் என வருவனவற்றுக்கும் பொருந்தும் என்பர். நாய்—நாஇ என்பனவற்றுக்குப் பொருந்தும் எனக் கொண்டால் போய்—போஇ என வரும் எனக் கொள்ளலாம். அப்படியாயின் வினையெச்ச ஈறுகள் இகரமும் யகரமும் ஆக இருப்பினும் யகரத்தை இகரத்தில் அடக்கி, இகரவீறு ஒன்று கொள்ளலாம். கொண்டால் செய்தி என்னும் வாய்பாடும் ஒன்று கொள்ளலாம். ஆசிரியர் கூறவில்லையே யெனின் கூற வாய்ப்பில்லை யென்பதே விடையாம். 'அவ்வகை ஒன்பதும்' என வினையெச்ச வாய்பாடுகள் ஒன்பதே என்ற ஆசிரியர், செய்யா என்னும் வினையெச்ச வாய்பாடும் ஒன்றுண்டு என்பார், "செய்யா என்னும்

வினையெஞ்சு கிளவியும்'' (உயிர்ம. 26) என்று உடம்பொடு புணர்த்துக் கூறினார். அவ்வகை ஒன்பதும் என்பதின் உம்மையை எச்ச உம்மையாக்கிச் செய்யா என்னும் வாய்பாடும் உண்டு என்று கொள்ளலாம். அதனால் ஆசிரியர் கூறவில்லை யாயினும் வழக்கு நோக்கி 'செய்தி' என்னும் வாய்பாடும் உண்டு எனக் கொள்ளலாம். 'செய்தி' என்பது செய்தாய் என முன்னிலைக்கும் வருமாதலின் அதனை வினையெச்ச வாய் பாடாகக் கூற இயலாது எனின் 'செய்து' என்பது 'செய்தேன்' எனத் தன்மையொருமை வினைமுற்றுக்கும்வருதலின், அதனைக் கூறாதிருத்தல் வேண்டும். 'செய்து' என்பதனைக் கூறியதால் 'செய்தி' என்பதையும் கூறலாம்.

ச. வே. சுப்பிரமணியன்

காலம்

இரு காலங்களில் தான் வினையெச்சங்கள் அமைவதைப் பார்க்கிறோம். அக்காலங்களை இறந்தகாலம் (Past) இறவாக் காலம் (Non-past) என்ற நிலையில் அமைப்பது பொருந்தும். இறவாக்காலம்தான் பின்பு நிகழ்காலம் எதிர்காலம் என்ற நிலை யில் தெளிவான காலஇடைநிலைகளோடு அமைந்தன. நிகழ் கால இடைநிலையோடோ எதிர்கால இடைநிலையோடோ வினையெச்சம் வருவதாகத் தோன்றவில்லை.

''பகரவுகரம் 'நகுபு வந்தான்' என நிகழ்காலம் பற்றி வரும். நகாநின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலம் என்றது முடிக்குஞ் சொல்லால் உணரப்படும் தொழிலொடு உடன் நிகழ்தல்'' எனச் சேனாவரையர் 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பற்றிக் கூறும்போது உரைக்கின்றார். ஆயின் 'செய்பு' என்னும் எச்சம் பழங்காலத் தமிழில் இறந்தகால நிலை யிலும், பின்பு இறந்த காலம் இறவாக்காலம் என்ற இரண்டு நிலையிலும் வருவதைக் காண்கிறோமேயொழிய நிகழ்காலம் பற்றி வருவதாகத் தோன்றவில்லை. எடுத்துக்காட்டு:—

கதறுபு—கதறி (அகம் 337-17)
கரிபு—கரிந்து (அகம் 51-6)
ஏர்பு—எழுந்து (அகம் 43-1)
ஏர்பு—எழ (சிலம்பு 14-104)
வருந்துபு—வருந்தி (சிலம்பு 6-171)

''அகரம்......மூன்று காலமும் பற்றி வரும்' எனவும் அவர் உரைக்கின்றார். நன்னூலும் அதை ஏற்றுக்கொள்கிறது. ஆயின்

'செய' என் எச்சம் பொருளடிப்படையில் 'மழை பெய்யக் குளம் நிறைந்தது', 'மழை பெய்யக் குளம் நிறையும்' என இறந்தகாலம் இறவாக்காலம் என்ற நிலைகளில் வரும் என்று கூறினாலும், நிகழ்கால நிலையில் பயன்பட்டதாகத் தோன்ற வில்லை. இலக்கிய நிலையில் பெரும்பான்மையும் இறவாக் காலத்தில் மட்டுமே பயன்படுவதைப் பார்க்கிறோம். இதனால் வினையெச்சங்கள் நிகழ்காலத்தோடு வருவதில்லை என்பது தெளிவு.

இரு சொற்கள்

செய்தென, செயற்கு என்ற எச்சங்களும், பின், முன், கால் கடை...போன்ற வினையெச்ச நிலைகளும் இருசொல் நீர்மைய என்பது கண்கூடு. செய்தான், என என்பனவே செய்தென என அமைந்துள்ளன. வினையெச்ச வடிவங்கள் வினைமுற்றாக அமைவதோடன்றி வினையாலணையும் பெயராகவும் பயன்படு வதை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டு;—

வாய்த்தென—கைகூடிற்றாக (அகம். 70-1)
வார்ந்தென்ன—ஒழுகியது போலும் (அகம். 41-1)
இருந்தாங்கு—இருந்ததைப்போல (அகம் 238-10)

தொல்காப்பியர் கூறுகின்ற பின், முன், கால், கடைபோன்ற பொருளுடை யிடைச் சொற்கள் போன்று, பின்பு தோன்றிய வான், பான், பாக்குப்போன்றவை அமையவில்லை. இவை தமக் கென ஒரு பொருளின்றிச் 'செய' என் எச்சத்து வாய்பாட்டு நிலையிலேயே பயன்படுகின்றன.

வகை

வினையெச்சங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(1) இறந்தகால வினையெச்சங்கள்

(அ) அடிச்சொல் + கால இடைநிலை + விகுதி
செய் + த் + உ = செய்து

(ஆ) அடிச்சொல் + காலஇடைநிலை + (விகுதி)
ஆடு + இ + ஆடி

(இ) அடிச்சொல் (கால இடைநிலை) + விகுதி
போ + ய் = போய்

என்ற மூன்று நிலைகளில் அமையலாம்.

(2) இறவாக்கால வினையெச்சங்கள்
அடிச்சொல் + விகுதி

செய் + அ = செய
செய் + இயர் = செய்யியர்

(3) கட்டளை வினையெச்சங்கள்
அடிச்சொல் + விகுதி
செய் + இன் = செயின்

(4) எதிர்மறை வினையெச்சங்கள்
அடிச்சொல் + எதிர்மறை + விகுதி
செய் + ஆ + து = செய்யாது

....

உரையாசிரியர்கள் ஆடி ஓடி போன்றவற்றைச் 'செய்து' என்னும் வாய்பாட்டில் அடக்கிக் கூறுகின்றனர். ஆயின் தொல்காப்பியம் வாய்பாட்டில் கூறாது இகரவீற்று வினையெச்சம்எனக் கூறுவதானும், அமைப்பு முறையில் செய்தும் ஆடியும் வேறுபடுவதானும் அவ்வாறு அடக்குதல் பொருந்தும் எனத் தோன்றவில்லை.

'ய்'கரவீறும் இந்நிலையில் அமையும் என்றே கூறுகின்றனர். ஆயின் இறந்தகாலத்தைக் குறித்து 'ய்'கரமே விகுதியாக அமைவதால் அவ்வாறு அடக்குதல் முறை எனத் தோன்றவில்லை.

அளபெடையேற்றுவரும் வினையெச்சங்களையும் ஆடி ஓடி போன்றவற்றோடு அடக்குவது பொருந்தும் எனத் தோன்றுகின்றது.

எழுதி (அகம் 67-9), நீவி (அகம் 300. 7), வாங்கி (அகம் 164. 1) உடைஇ (அகம் 181-5) சினைஇ (396-15) தழீஇ (அகம் 95. 12) ஆய் (நற். 56. 5) தூஉய் (நற் 658. 6) பாஅய் (நற் 112-7)

செய்யூ

இறந்த கால வினையெச்சமாக அமைகிறது. இரட்டித்தலை இறந்த காலமாகவும், ஊகாரத்தை விகுதியாகவும் கொள்ளலாம். அல்லது அடிச் சொல் + (கால இடைநிலை) + விகுதி என்றும் கொள்ளலாம்.

செய்பு

காலம் பற்றிக் கூறும்போது உரைக்கப்பட்டது.

செய்யியர்

செய்யியர், இயர் எனவும் சுட்டப்படுகிறது. இறவாக் கால வினையெச்சமாக அமைகிறது.

அடிச்சொல் + விகுதி
உணீஇயர் (அகம் 59.7)
செலீஇயர் (அகம். 300-5)

செலீஇயர் என்னும் இவ்வாய்பாட்டு வினையெச்சம் தொழிற் பெயராகவும், இயர் என்னும் வியங்கோளாகவும் பயன்படுகிறது.

செலீஇயர் — செல்லுதல் (அகம் 326-8)
செலீஇயர் — செல்வதாக (அகம் 113-27)

செய்யிய

இறவாக்கால வினையெச்சம். காணிய (அகம் 176 26)

செய்யின்

கட்டளை வினையெச்சம். முன்பு இறவாக் கால நிலையில் பயன்பட்டது. பின்பு இறந்த கால இடைநிலையோடும் வருகின்றது.

அறியின் (அகம் 49-13)
ஏகின் (அகம் 311-13)
புணர்ந்தால் (சிலம்பு 7.22)
மறைத்தால் (சிலம்பு 737-4)

செய்தால் என அமையும் 'ஆல்' என்பதும் கட்டளை வினையெச்சமாக அமையலாம். இங்கு 'ஆல்' என்பது 'ஆனால்' என்பதன் சுருங்கிய வடிவமாகக் கொள்ளலாம். 'ஆ' அடிச்சொல்லாகவும் 'ல்' வினையெச்ச விகுதியாகவும் கொள்ளலாம். 'ஏல்' என்பதும் இதனைப் போன்றே அமைகின்றது.

உண்டேல் (குறள் 368)
உண்டேல் (சிலம்பு 14-57)

இது பெயரோடும் வருவதால் 'ஏல்' என்பதை 'ஏ' அடிச்சொல்லாகவும் 'ல்' வினையெச்ச விகுதியாகவும் கொள்வது பொருந்தும்.

நீயேல் (சிலம்பு 7. 48. 3)

செய

இறவாக்கால வினையெச்சம்
அறிய (அகம் 95-3)

செய்யா

தொல்காப்பியம் வாய்பாட்டில் வினையெச்சம் இல்லை. ஆயின் எழுத்ததிகார நூற்பாவில் இவ்வினையெச்சம் குறிப் பிடப்பட்டுள்ளது. ''செய்யா என்னும் வினையெஞ்சு கிளவி யும், அவ்வியல் திரியா தென்மனார் புலவர்'' (எழுத்து. 223) இவ்வினையெச்சம் இறந்த கால வினையெச்சமாகவும், எதிர் மறை வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் பயன்படு கின்றது. மிகுதியாகச் 'செய்து' என்னும் பொருளில் பயன்படு வதையே காண்கிறோம்.

செய்பான் — இறவாக்கால வினையெச்சம். அலைப்பான் (நான்மணிக் 28.)

செய்பாக்கு — இறவாக்கால வினையெச்சம். தருபாக்கு (கார்நாற்பது 11-1)

செய்வான் — இறவாக் கால வினையெச்சம். மாய்வான் (சிலம்பு) 7-8-11)

மல் — ஆமல். எதிர்மறை வினையெச்சம். கரையாமல் (சிலம்பு 18-26)

ஆது — எதிர்மறை வினையெச்சம். துஞ்சாது. (அகம். 298-23)

மை — எதிர்மறை வினையெச்சம். வாழாமை (சிலம்பு. 3-160)

மார்—இறவாக்கால வினையெச்சம். களைமார் (அகம். 107-3)

இவ்வாறு மரபிலக்கணத்திலும் இலக்கியங்களிலும் வினை யெச்சங்கள் அமைகின்றன. (மொழிக் கட்டுரைகளை, பக். 22-31 1974)

224. பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மரபிற் காலங் கண்ணிய
வென்ன கிளவியு மவற்றியல் பினவே (30)

(பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலம் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றுஇயல் பினவே)

ஆ.மொ:இல.

'Pin', 'Mun', 'Kāl', 'Kadai', 'vali' and 'idaththu' and such others indigating time are of the same nature.

பி. இ. நூ:

நேமி. சொ. 43

செய்து செயச் செய்யாச் செய்யிய செய்தெனச்
செய்பு செயின்செயற்கு என்பனவும்—மொய்குழலாய்
பின்முன்பான் பாக்கும் பிறவும் வினையெச்சச்
சொல்முன் வகுத்தார் துணிவு.

நன். 343

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச்சம்பிற
ஐந்தொன்றாறு முக்காலமும் முறைதரும்.

இல. 245 ,, ,, ,,

தொன். 119, 120

வினையெச் சங்கொள் விகுதி இஉ
உவ்வோடு எனவும் ஊ பு ஆ இறப்பே
அ இரு கருத்தா அணையின் நிகழ்வே
ஒருகருத் தாவும் ஓரிடத் திரண்டும்
இயை அ அன்றி இல் இன் இய இயர்
வான் பார் பாக்கு வரும்பொழு தாம்பிற
எனஒழி ஒழிந்த இறப்பெச் சத்தும்
வானபான் பாக்கென வருமுன் றற்கும்
ஏற்கும் ஒருகருத்தா இரண்டும் பிறவே.

முத்து. வி. 29, 30

செய்து செய்யூ செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி
பின்முன் கால்கடையொடு வான் பானிடம்
அன்ன கிளவியும் அவற்றியல் பினவே

இளம்.

[1]இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் வினையெச்சங்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று. இவ்விரண்டு சூத்திரமும் உடன் எழுதப்பட்டது உரையியைபு நோக்கி.

உரை: செய்து செய்யூ என்பன முதலாக ஒன்பதும், பின் முன் என்னுந் தொடக்கத்தன ஆறும் ஆக இவை பதினைந்தும் வினையெச்ச வினைச்சொல், எ-று.

வினையை [2]ஒழிபாக நிற்றலின் வினையெச்சம் எனப்பட்டது.

இனி என்ன கிளவியும் என்றதனான் உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான் எனப் பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

[3]செய்தென் எச்சம் மூன்வைத்தார் இறந்தகாலத்த தாகலானும் பலவீற்ற தாதலானும் என்பது.

சேனா.

இ-ள்: பின்னும் முன்னும் காலும் கடையும் வழியும் இடத்தும் என்னும் ஈற்றவாய் வருவனவும், அவைபோலக் காலங் கண்ணி வருவன பிறவும் வினையெச்சமாம், எ-று.

உ-ம்: 'நீயிர் பொய்கூறியபின் மெய்கூறுவார் யார்' எனவும் 'நீ இவ்வாறு கூறுகின்றபின் உரைப்பதுண்டோ' எனவும் பின் இறப்பும் நிகழ்வும் பற்றியும்; 'மருந்து தின்னா முன் நோய் தீர்ந்தது' என முன் இறந்த காலம் யற்றியும் "வலனாக வினையென்று வணங்கி நாம் விடுத்தக்கால் (கலி. 35) எனவும், ''அகன்றவர் திறத்தினி நாடுங்கால்'' (கலி. 16) எனவும் கால் ஈறு மூன்று காலமும் பற்றியும், ''தொடர் கூரத் துவ்வாமை வந்தக் கடை'' (கலி. 22) எனக் கடை ஈறு இறந்தகாலம் பற்றி

---

1. இரண்டு சூத்திரங்களுக்கும் சேர்த்து உரை எழுதுதலின் ''இச்சூத்திரங்கள் என்னுதலியவோ எனின்'' என்றிருப்பின் சிறக்கும். இன்றேல் ''இவ்விரண்டு சூத்திரமும்... உரையியைபு நோக்கி'' என்னுந்தொடர் இடைச்செருகலாகலாம்—சிவ.
2. ஒழிபாக—எச்சமாக.
3. முறைவைப்புபற்றிப் பிற உரையாளர் உரைபார்க்க.

யும், உரைத்தவழி உரைக்கும்வழி உரைத்தவிடத்து உரைக்கு மிடத்து எனவழியென்னும் ஈறும், இடத்தென்னும் ஈறும், மூன்று காலமும் பற்றியும் வரும். கால், வழி, இடத்து என்பனவற்றின் நிகழ்காலத்து வாய்பாடு எதிர்காலத்திற்கும் ஏற்றல் அறிக.

[1]குதிர்போனபின் வந்தான் எனவும், நின்றவிடத்து நின்றான் எனவும் பின் முதலாயின பெயரெச்சத்தோடும் வந்த வழி, இறப்பு முதலாகிய காலம் கண்ணாமையின், அவற்றை நீக்கு தற்குக் 'காலம் கண்ணிய' என்றார்.

[2]காலவேறுபாட்டான்- வரும் வாய்பாட்டுப் பன்மையெல் லாம் ஒருவாய்பாட்டாற் றழுவலாகாமையின் இவற்றை யீறு பற்றியோதினார்.

'அன்னமரபிற் காலங்கண்ணிய என்ன கிளவியும்' என்றத னான், உண்பாக்கு, வேபாக்கு எனவரும் பாக்குஈறும், உண்பான், வருவான் என்னும் ஆன் ஈறும், 'நனவிற்புணர்ச்சி நடக்கலு மாங்கே (கலி. 39) என்னும் உம் ஈறும், 'அற்றாலளவறிந்துண்க'

---

1. குதிர்போனபின் வந்தான் என்பதில் போன என்னும் பெயரெச்சத்துக்குப் பின் என்பது பெயர்ச்சொல்லாய் முடிபாயிற்று. (பின் –பிற்காலம் என்னும் பொருள் தந்தது) 'நீயிர் பொய் கூறியபின் மெய் கூறுவார் யார்' என்பதில் கூறிய என்பது பெயரெச்சமாகாது; ஏன் எனில், கூறிய பிற்காலத்தில் எனப் பொருள்படாது. அதனால் 'கூறியபின் என' ஒரு சொல்லாய் நின்று, 'கூறுகின்றபோது' என நிகழ்காலத்தை உணர்த்தியது. எனவே போனபின் என்பதில் பின் பெயர்ச்சொல் என் றும், கூறியபின் என்பதில் பின் வினையுடன் சேர்ந்த இறுதியிடைச்சொல் என்றும் கொள்க. எனவே இடைச் சொல் நிலையில் இருந்து காலம்உணர்த்துவது பற்றியே இச்சூத்திரம் கூறுவது. முன் முதலியவற்றுக்கும் இப்படியே கொள்க.
2. உகரவீறு இறந்தகாலம் ஒன்று பற்றி வருதலின் செய்து என்னும் வாய்பாடு பற்றிக் கூறினார். பின் என்பது இறப்பு நிகழ்வுகளுக்கு வருதலின் ஒரு வாய்பாட்டில் கூறாமல் செய்தபின் செய்கின்றபின் என இருவாய்பாடு களால் கூறவேண்டும். இப்படியே முன் முதலியவற்றுக் கும். அதனால் வாய்பாடுகள் பல்கும். அதனால் பின் முன் என ஈறுபற்றிக் கூறினார்.

(குறள். 943) என்னும் ஆல் ஈறும், எதிர்மறை பற்றிக் ''கூறாமற் குறித்ததன் மேற் செல்லும்'' (கலி. 1) எனவரும் மல்ஈறும், ''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்'' (குறள் 701) என்னும் மகர வைகாரவீறும் கொள்க.

என்ன கிளவியும் என்றதனான் இன்றி, அன்றி, அல்லது, அல்லால் எனவரும் குறிப்பு வினையெச்சமும் கொள்க. பிறவு மன்ன.

தெய்.

இதுவும் வினையெச்ச வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : பின் முதலாக ஓதப்பட்டனவும், அத்தன்மையவாகிய மரபினாற் காலங்குறித்து வரும் எல்லாச் சொல்லும் வினை யெச்ச இயல்பின, எ-று.

எனவே மேற்சொல்லப்பட்டவற்றோடு ஒரு நீர்மைய அல்ல என்பது பெறப்பட்டது. அன்ன மரபினாற் கொள்ளப்படுவன உம், [1]மற், மை, கிற், இன்றி, அன்று, இனிக் கொண்டான், நனி வந்தான் என வருவனவும் பிறவும். இவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

நச்.

இதுவும் ஒருசார் வினையெச்சம் உணர்த்துகின்றது.

இ-ள் : பின் முன் கால் கடை வழி இடத்து ஏன்னும் கிளவியும் — பின்னும் முன்னும் காலும் கடையும் வழியும் இடத்தும் என்னும் ஈற்றவாகிய சொற்களும், அன்ன மரபிற் காலம் கண்ணிய என்ன கிளவியும்—அம்முறைமை போலக் காலத்தைக் குறித்த எல்லாச் சொற்களும், அவற்று இயல்பின —முற்கூறிய ஒன்பதும் போல வினையெச்சத்திற்கு வாய்பாடாம் இயல்பை யுடைய, எ-று.

உ-ம் : பின் : நீயிர் பொய் கூறியபின் மெய் கூறுவார் யார்? ''இன்மையும் தருவதோ இறந்த பின்னே' (கலி. 15) என

---

1. மற், கிற் எனக் காட்டியது சிறப்பின்று. மல், கின் அல்லது கில் எனக் காட்டுவதே சிறப்பு. ஏன்எனின் றகர வொற்று இறுதியில் வாராது. இக்கால மொழியியலார் காட்டுவது அன்று தெய்வச்சிலையார் காட்டியதை ஒட்டிப் போலும்.

இறப்பும், நீ இவ்வாறு கூறுகின்றபின் உரைப்பது உண்டோ என நிகழ்வும் பற்றி வரும்.

முன் : "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை" (குறள் 435) என இறப்பு பற்றி வரும்.

இவை பின்னர், பின்னை, முன்னர், முன்னை எனத் திரிந்து வரும்.

கால் : "வலனாக வினை யென்று வணங்கி நாம் விடுத்தக் கால்" (கலி. 35) என இறப்பும், "அகன்றவர்திறத்தினி நாடுங் கால்" (கலி. 16) என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

கடை: "தொடர்கூரத் துவ்வாமை வந்தக்கடை" (கலி. 22) என இறப்புப் பற்றி வரும்.

வழி : "விடுவழி விடுவழிச் சென்றாங்கவர், தொடுவழித் தொடுவழி நீங்கின்றால் பசப்பே" (கலி. 130) என இறப்பும், "அவன் ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே" (அகம். 49) என நிகழ்வும், உரைக்கும் வழி என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

இடத்து : "களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து" (குறள். 879) என இறப்பும், உரைக்குமிடத்து என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

அன்ன மரபின் என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு என்பனவும் கொள்க.

உ-ம் : "அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்" (நான்மணி. 28) "திருவிற்றான் மாரி கற்பான் துவலை நாட் செய்வதே போல்" (சீவக. 2070), "புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்" (கார். 11) "கொள்வான் கொடித் தானை கொண்டெழுந்தான்" (பு- வெ. மா. 99) கொள் வாக்கு வந்தான் என வரும். அல்லது, அல்லால் என வரும் குறிப்பெச்சமும் கொள்க. இவை பெயர்த்தன்மையும் உடைய வாய் நின்று, முன்வந்த வினையின் காலத்தை உணர்த்தி நிற்றலின் வேறு ஓதினார். "வேபாக்கு அறிந்து" (குறள் 1128) என்பது வேதலையறிந்து என்னும் பொருள் தருதலின் எச்சம் அன்று. இவற்றைக் காலங் கண்ணிய என்றது, கூதிர் போய பின் வந்தான் எனவும், நின்றவிடத்து நின்றான் எனவும் பின் முதலியன பெயரெச்சத்தோடு வந்துழி இறப்பு முதலியன கண்ணாமையின்.

கல்.

என்-எனின், இதுவும் ஒரு வினையெச்ச மாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பின் என்பது முதலாக இடத்து என்பது ஈறாக ஓதப்பட்ட அத்தன்மைத்தான வாய்பாட்டு முறைமையினையுடைய காலத்தைக் குறித்த எல்லாச்சொல்லும் மேற்சொல்லிய ஒன்பதும் போல வினையெச்சத்துக்கு வாய்பாடாம் இயல்பினையுடைய, எ-று.

உ-ம்; பின்: "இளமையும் தருவதோ இறந்தபின்னே" (கலி. 15) எனவரும்.

முன்: "வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை" (குறள் 435) எனவரும்.

பின்என்பது பின்னர் என்றும், பின்னை என்றும் வரும். முன் என்பது முன்னர் என்றும் முன்னை என்றும் வரும். இனிப்பின் என்பதும் முன் என்பதும் ஒரு வினையிடத்து வாராது, பிற்கொண்டான், முற்கொண்டான் எனத்தாமேயும் வரும்.

கால்: "வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்" (கலி 35) எனவரும்.

கடை: "தொடர்கூரத் துவ்வாமை வந்தக்கடை" (கலி. 22) எனவரும்.

வழி: படுசுடர் மாலையொடு பைதல்நோய் உழப்பாளைக்
குடிபுறங் காத்தோம்பும் செங்கோலான் வியன்தானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே

(கலி. 30) எனவரும்.

இடத்து "களையுநர் கைகொல்லும் கழைத்த விடத்து" (குறள் 879) எனவரும்.

இவை காலம் விளக்கி நில்லாது குறிப்பாதலிற் போலும் 'காலங்கண்ணிய' என்றது. இவையிற் குறிப்புப் போலாது ஒரோர் காலங்களைக் குறித்துக் கொள்ள நிற்கும் என்பது. விடுத்தக்கால் என்பது விடுத்து என இறந்தகாலக் குறிப்பாயிற்று. "வாரி வளங்குன்றிக்கால்" (குறள் 14) என்பது குன்றின் என எதிர்காலக் குறிப்பாயிற்று.

முன், செய்து, செய்யூ என்ற வாய்பாடு தம்மையே ஓதின வாறு போலன்றி ஈண்டு அன் ஆள் அர் ஆர் என்றாற்போல அவற்றை யீறுபற்றியோதினார் எனக் கொள்க.

மற்று இக்காட்டிய உதாரணங்கள் எல்லாம் பெயரெச்சமும் பெயருமாகற்பால எனின், அவற்றின் பொருள் நோக்கும் சொல் நிலையும் சந்தி நிலைமையும் அன்ன வன்மையின் இவ்வாறு வரு வனவற்றை வினையெச்சம் என்கின்றார் போலும். ஆயினும் இவை செய்த, செய்யாநின்ற, செய்யும் என்னும் பெயரெச்சங் களும் இவற்றின் மறைகளும் இவற்றின் தொகையாகிய வாய் பாடும் போலும் வாய்பாடுகளையடைந்தல்லது வாராவென்பது.

'என்ன கிளவியும்' என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு எனவும், பிறவாறும் வருவன கொள்க.

உ-ம்: உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான், கொள் வான் வந்தான், கொள்வாக்கு வந்தான் எனவரும். பிறவும் அன்ன.

ஆக வினையெச்ச வாய்பாடு எடுத்தோத்து வகையான் பதினைந்தும், தந்திரவுத்தி வகையானும் இலேசானும் நோக்கப் பலவகையாயும் முடிந்தது. இலேசு என்பது...யந்து கூறல். குறிப் பான் வெளிப்படுப்பது.

கி. கருணாகரன்

பின்முதலிய ஆறும் வினையெச்ச வாய்பாடுகளாகக்குறிக்கப் பெறினும், அவை காலம், இடம் ஆகிய பொருள்களைத் தரும் தனிச் சொல்லியன்கள் அல்லது பெயர்களாகத் தோன்றுகின்றன. பெயரெச்சத்தை யடுத்துவரும் தன்மையும் நம் ஐயத்தை வலி யுறுத்துகின்றது. பெயர் எச்சப் பெயர்த் தொடர்களாயிருந்து காலப்போக்கில் அவற்றின் பொருண்மை காரணமாக வினை யெச்சமாகத் தொழிற்பட்டிருக்கக் கூடும்.

பெயரெச்சம் + } பெயர்ச்சொல் / தனிச்சொல்லியன்கள்

1. வந்த + பின்
2. வரும் + முன்
3. கற்ற + கால
4. தானுற்ற + இடத்து
5. உற்ற + வழி
6. உற்ற + கடை

மலும் இவை ஏழாம் வேற்றுமையிடப் பொருளுணர்த்தும் உருபுகளாகக் கூறப்பட்டிருப்பதும் இங்குக் கருத்தில் கொள்ளப் படவேண்டியதாகும். (வினையெச்சம், இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் 1 பக். 104 105)

வினைமுதல் வினை கொள்வன

225. **அவற்றுண்**
முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின (31)

(அவற்றுள்
முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின)

ஆ. மொ: இல.

Of them
The three standing first in order may end in the verbs of the subject

பி. இ. நூ:

நன். 344

அவற்றுள்
முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் (பிறவும் ஏற்கும்பிற)

இல. 247 ,, ,, ,,

முத்து. வி. 31

செய்து செய்யூ செய்பு வினைமுதல்
முடிபின வாகும் மொழியுங் காலே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், முதற்கண் நின்ற மூன்றெச்சத்திற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

உரை: அம்முதற்கண் நின்ற மூன்றும் [1]அவ்வினையாக்கியம் முதல் கொண்டு முடியும், எ—று.

---

1. 'அவ்வினையாக்கிய முதல் கொண்டு முடியும்' என்றிருத்தல் சிறப்பு. அவ்வினையாக்கியம் என்பதில் மகர ஒற்று ஏடெழுதினோர் பிழையாகலாம். உழுது வந்தான் என்பதில் அவ்வினை என்பது உழுதல் வினை; அதனையாக்கிய முதல் கொண்டு முடிதலாவது உழுதலைச் செய்தவன் வினையாகிய வருதல் (வந்தான்) என்பதனைக் கொண்டு முடிதல்.

வ-று: உழுது வந்தான், உண்ணூவந்தான், நகுபு வந்தான் எனத் தத்தம் வினை முதல் கொண்டு முடிந்தவாறு.

உண்ணூவந்தான் என்பது இப்பொழுது வழக்கினுள் உண்ணா வந்தான் என நடக்கும்.

சேனா.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள் முதற்கண் நின்ற செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும், தம் வினைமுதல் வினையான் முடியும், எ-று.

உ-ம்: உண்டு வந்தான், உண்ணூ வந்தான், உண்குபு வந்தான் எனவும்; கற்று வல்லனாயினான், கல்லூவல்லனாயினான், கற்குபு வல்லனாயினான் எனவும் வரும்.

[1]உரற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய, யாஅவிரி நிழற் றுஞ்சும்'' (குறு. 231) எனச் செய்தென் எச்சம் வினை முதல் வினை யல்லா வினையான் முடிந்ததால் எனின், அது வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய (எச்ச. 61) என்புழிப் பெறப் படும்.

[2]இது முன்னர் ''வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும், நினையத் தோன்றிய முடிபா கும்மே'' (எச்ச. 36) எனப் பொது வகையான் முடிவனவற்றை எதிரது நோக்கி இவை மூன்றும் வினை முதல் முடிபின என நியமித்தவாறு. அஃதேல், இதனையும் ஆண்டே கூறுக எனின், ஆண்டுச் செய்து செய்யூ செய்பு என்னும் மூன்றும் எனக் கிளந்தோதுவதல்லது, முதல் நிலை மூன்றும் எனத் தொகுத்தோதலாகாமையானும் ஈண்டு இயைபுடைத்தாகலானும் ஆண்டுக் கூறாது ஈண்டுக் கூறினார் என்பது.

---

1. ஒடித்தல் வினை யானையது. எஞ்சுதல் வினை யா மரத்தது. எனவே ஒடித்து என்னும் செய்தென் வாய்பாட்டுச் சொல் எஞ்சிய என்னும் பிற (மரத்தின்) வினை கொண்டது. இம்மாறுபாடு எச்சவியலில் (61) அமைக்கப்படும்.
2. எச்சவியலில் வினையெச்சம் வினைகொண்டு முடியும் (36)எனக் கூறினார். இன்ன வாய்பாட்டு எச்சம் இன்ன வினைகொள்ளும் என்பது ஈண்டுக் கூறினார். இது எதிரது நோக்கல் என்னும் உத்தி.

தெய்.

நிறுத்த முறையானே முந்துற்ற மூன்றிற்கும் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்டவற்றுள் முந்துற்ற மூன்று சொல்லும் அவ்வினைக்கு கருத்தாவாகிய பொருளின் வினையை முடிபாகவுடைய, எ-று.

உ-ம்: உண்டு வந்தான்—இது செய்தென் எச்சம். ''படுமகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே'' (புறம் 278)—இஃது இறந்தகாலம் குறித்த செய்யூ என்னும் வினையெச்சம். ''நிலம் புடையூஉ எழுதரும் வலம்படுகுஞ்சரம்—இது நிகழ்காலம் குறித்த செய்யூ என்னும் வினையெச்சம். ''வானிடு வில்லின் வரவறியா வாய்மையால் (நாலடி. கடவுள்) இது செய்யா என்னும் வினையெச்சம். ''புலராப் பச்சிலையிடையிடுபுதொடுத்த'' (புறம் 33) என்பதுஇறந்தகாலம்குறித்தசெய்பு என்னும் வினையெச்சம். ''வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூஉ'' (கலி.16)-என்பது நிகழ்காலங் குறித்த செய்பு என்னும் வினையெச்சம். உண்பு வந்தான்-இது எதிர்காலம் குறித்த செய்பு என்னும் வினையெச்சம். மூன்றிடத்து ஐந்து பாலோடும் ஒட்டிக் கொள்க.

நச்.

இது முதல் நின்ற மூன்றற்கும் முடிபு கூறுகின்றது.

இ-ள் : அவற்றுள் முதல் நிலை மூன்றும்,— முற்கூறிய பதினைந்தனுள் முதற்கண் நின்ற செய்து செய்யூ செய்பு என்னும் மூன்றும், வினைமுதல் முடிபின—அவ்வெச்ச வினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையினை உணர்த்தும் சொல்லினையே முடிபாகக் கொண்டு முடிதலையுடைய, எ-று.

உ-ம் : உண்டுவந்தான், உண்ணூவந்தான், உண்குபுவந்தான் எனவும்; கற்று வல்லன் ஆயினான், கல்லூ வல்லன் ஆயினான், கற்குபு வல்லன் ஆயினான் எனவும் வரும். ஒன்றென முடித்தல் என்பதனால், செய்யா என்பதற்கும் உண்ணாவந்தான் என இம்முடிபு கொள்க.

இனி, செய்தென் எச்சக்குறிப்பாகிய இன்றி, அன்றி என்பனவும், ''தம்மின் றமையா நந்நயந் தருளி'' (நற். 1), ''தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்'' (கலி. 29) என வினை முதல் வினையால் முடியும்.

கல்.

என்-எனின், அக்கூறப்பட்ட எச்சங்களுள் முதற்கண் நின்ற மூன்றற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மேற் கூறப்பட்ட வினையெச்ச வாய்பாடுகளுள்முதற் கண் எடுத்தோதப்பட்ட செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் அவ்வெச்ச வினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையை யுணர்த்தும் சொல்லினையே பின்பு முடிபாகக் கொண்டு முடியும், எ-று.

உ-ம்: உண்டு வந்தான், உண்ணூஉ வந்தான், உண்குபு வந்தான் என வரும்.

செய்தென் எச்சத்தின் குறிப்பாகிய இன்றி, அன்றி என்பனவும், ''தம்மின் றமையா நந்நயந் தருளி'' (நற். 1), எனவும், ''தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதனின்'' (கலி. 19) எனவும் வினை முதல் வினையாய் முடிந்தவாறு கண்டு கொள்க.

வேறு முடிபு

226. அம்முக் கிளவியுஞ் சினைவினை [1]தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர் (22)

(அம்முக்கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினை ஓர் அனைய என்மனார் புலவர்)

ஆ. மொ: இல.

The secholars say that when these three words with out modifying the verbs of the limb intervened, may modify the whole, the verbs are of the same nature

பி. இ. நூ:

நன். 345

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்

1. தோன்றிச்—தெய்வச்சிலையார் பாடம்,

இல. 248.

சினைவினை முதலொடும் பிறவினை பிறவினை
முதலொடு முடிதலும் முன்னினர் கொளலே

முத்து. வி. 32

அம்முப் பெயரும் சினைவினை நின்று
சினைவினை யொடுமுடி யாது முதலொடு
முடியினும் வினையான் ஒருதன் மையவே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அம்மூன்றன் றிறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: அவை மூன்றும் ஏற்ற வினைமுதலானே முடியும் எனப்பட்டன; சினைப்பொருளது வினையெச்சமாய்க் காலச் சினைச்சொற் பொருள்நிற்ப, அச்சினைப் பொருளது முதல் கொண்டு முடியினும் அமையும், எ—று.

வ-று: [1]கையிற்று வீழ்ந்தான், கையிறூவீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் என வரும்.

'முதலொடு முடியினும்' என்ற உம்மை சிறப்பும்மை; அதனால் சினையொடு முடிதலே வலியுடைத்தென்பதூஉம் ஆம். அது கையிற்று வீழ்ந்தது, கையிறூ வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தது என வரும்.

சேனா.

இ-ள்: வினை முதல் முடிபினவாகிய அம்மூன்று சொல்லும், சினைவினை நின்று சினைவினையோடு முடியாது முதல்வினை யோடு முடியினும் வினையான் ஒரு தன்மைய, எ—று.

வினையான் ஒரு தன்மைய என்றது முதல்வினையோடு முடியினும் முதலொடு சினைக்கு ஒற்றுமையுண்மையாற் பிறவினை கொண்டனவாகா, வினைமுதல் வினை கொண்டனவேயாம், என்றவாறு.

---

1. இறுதல் கையின் வினை; வீழ்தல் ஒருவன் வினை. எனவே இற்று என்னும் செய்தென் எச்சம் தன்வினை கொள்ளாமல் பிறவினை கொண்டதாம். சினையோடு முதற்கு ஒற்றுமையுண்மையின் தன்வினை கொண்டதாகும்.

உ-ம்: கையிற்று வீழ்ந்தான், கையிறூ வீழ்ந்தான், கையிறுபு விழ்ந்தான் என வரும்.

"உரற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய" [2]என்புழிப் போலக் 'கையிற்று' என்னும் செய்தென் எச்சம் 'கையிற' எனச் செயவென் எச்சப் பொருட்டாய் நின்றது என அமையும், இச் சூத்திரம் வேண்டாஎனின், அற்றன்று. வினைமுதல் வினை கொள்ளாத வழியன்றே [3]அது [4]பிறபொருட்டாயது; வினை முதல் வினை கொண்டு தன் பொருளேயுணர்த்துவதனைப் பிற பொருள் மேல் நின்றது என்றல் பொருந்தாமையின்அதுகடாவன் றென்க.

தெய்.

எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட மூன்று சொல்லும் சினை வினையாகித் தோன்றி, அச்சினை வினையோடு முடியாது, முதல்வினையோடு முடியினும், அச்சினை வினையான் முடிந் ததனோடு ஒக்கும், எ-று.

உ-ம்: கையிற்று வீழ்ந்தது, கையிறூஉ வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தது எனற்பாலன, கையிற்று வீழ்ந்தான், கையிறூஉ வீழ்ந் தான், கையிறுபு வீழ்ந்தான் என வீழப்பட்டது கையாயினும் அதனொடு முடியாது அதன் முதல் வினையோடு முடியினும் குற்றம் இல என்றவாறு.

உய்த்துணரவைத்தல் என்னும் தந்திரவுத்தியால் வினை யெச்சத்திற்கு முடிபாகி வரும்சினை வினை,முதலொடுமுடிதலே

---

2. என்புழிப்போல—என்புழி உண்டு என்பது உண்ண எனச் செயவென் எச்சப் பொருட்டாய் நின்றது போல. இவ் வுவமை பிறர் கூற்றாகக் கொண்டு இங்குக் காட்டினார் சேனாவரையர். உண்டு என்னும் செய்தென் எச்சம் எஞ்சிய என்னும் பிறவினையையே கொண்டது என்பது அவர் கொள்கை. அதனை எச்சவியலில் "வினை யெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" (61) என்னும் சூத்திரத்தில் காண்க.
3. அது—இற்று என்பது.
4. பிறவினை கொள்ளும் பொருளுடையது.

யன்றித் தனிவரும் சினை வினையும் [1]முதலோடும் முடியும் என்று கொள்க. கையிற்றான், கண் கெட்டான் என வரும்.

நச்.

இதுவும் அம்மூன்றற்கும் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ-ள்: அம்முக்கிளவியும் — 'வினைமுதல் முடிபின' என்ற அம்மூன்று சொல்லும், சினை வினை தோன்றின் சினையொடு முடியா — சினைப் பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் தமக்குரிய சினை வினை கொண்டு முடியா முதல் வினை கொண்டே முடியும், வினை முதலெரிடு முடியினும் — அவ்வெச்சங்கள் தாம் [2]தத்தமக்குரிய வினை முதலான் அன்றிப் [3]பிறவினை முதலான் முடியினும் பிறவாற்றான் முடியினும், ஓரனைய என்மனார் புலவர் — தத்தமக்குரிய வினை முதல் கொண்ட தன்மையோடு ஒரு தன்மையை உடைய என்று கூறுவர் புலவர், எ-று.

சினையொடு முடியா எனவே முதலொடு முடிதல் பெற்றாம். உம்மை எதிர்மறை.

உ-ம்: [1]கண் நொந்து கிடந்தான், வயிறு நொந்து கிடந்தான் எனவும், கண் வலியூக்கிடந்தான் எனவும், வயிறு குத்துபு கிடந்

---

1. முதல் வினையோடு முடிதலாவது, முதல்வினைக்குரிய ஈற்றான் முடிதல். கையிற்றான் என்பதில் இற்றான் என்பதின் இற்று என்பது சினை வினை ஆன் என்பது முதல் வினையின் விகுதி. இதில் சினை வினை முதல் வினைவிகுதியுடன் முடிந்தது காண்க. இதனைக் கல்லாடனார் மறுப்பர், காண்க.
2. தத்தமக்குரிய வினை முதல் — சினையாகிய வினை முதல்.
3. பிறவினைமுதல்— தம்மை அகஉறுப்பாகவுடைய முதல் வனாகிய வினை முதல்.
1. நொந்துகிடந்தான்—நொந்ததால்கிடந்தான். வலியூஉ— வலித்ததால். குத்துபு—குத்தியதால். துயின்றுபோகா— துயின்றதால் போகாத. ஒற்றி வீழ்ந்தார்—ஒற்றியதால் வீழ்ந்தார்—இவை காரண காரிய மாயவாறு காண்க. அமர்ந்து ஓம்புவான், சிவந்து புலர்ந்தாள் என்பன வற்றில் செய்தென் எச்சம் முதல் வினையொடு முடியினும் காரணகாரியத் தொடர்பின்மை காண்க. இவ்

தான் எனவும், ''கண்துயின்று முன்றிற்போகா முதிர்வினள் யாயும்'' (புறம் 159), ''தாளொற்றித் தப்பி வீழ்ந்தார் தறி வலை மானிற்பட்டார்'' (சீவக 2768) எனவும் சினைப் பொருட் கண் வந்த வினையெச்சம் காரண காரியப் பொருட்டாய் வினை முதலோடு முடிந்தன. ''அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து, நல்விருந்தோம்புவான் இல்'' (குறள் 84), ''காமன் கணையொடு கண்சிவந்து புலந்தாள்'' என்பன காரண காரிய மின்றி அங்ஙனம் வந்தன.

[2]இனி, 'தலைவன் பிரிந்து வருந்தினாள்' எனவும், ''மாஅல் யானையொடு மறவர் மயங்கித் தூறு அதர்ப்பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்'' (கலி 6) எனவும், ''உடம்புயங்கு யானை, கடுந் தாம் பதிபாங்குக் கைதெறப்பட்டு வெறிநிரை வேறாகச் சார்ச் சாரலோடி நெறிமயக்குற்ற' (கலி. 12) எனவுங் காரண காரியப் பொருட்டாய்த் தமக்கு உரிய வினைமுதலானன்றிப் பிறவினை முதலான் முடிந்தன.

[3]ஞாயிறு பட்டு வந்தான், ஞாயிறு படூஉ வந்தான், ஞாயிறு படுபு வந்தான் என்பன காரணகாரியமின்றி அங்ஙனம் வந்தன. ''உரற்கால் யானைஒடித்துண் டெஞ்சிய'' என்பதும் அது.

இனி[1] 'ஆ கிடந்து செறு விளைந்தது' என்றது இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றிச் செறுவின் வினை

விருவகையிலும் சினைவினை முதல் வினையொடு முடிந்தது காண்க.

2. பிரிந்து வருந்தினாள் — பிரிந்ததால் வருந்தினாள், மயங்கிஅதர்ப்பட்டன = மயங்கியதால்அதர்ப்பட்ட. ஓடி நெறிமயக்குற்ற—ஓடியதால் வழிமயக்குற்ற—இவற்றில் செய்து என் எச்சங்கள் பிறவினை கொண்டவாறும் காரணகாரியத் தொடர்பு உள்ளவாறும் காண்க.

3. படுதல் வினை ஞாயிற்றினுடையது. வந்தவினை ஒரு வனுடையது. இவற்றில் செய்து என் எச்சம் தன்வினை கொள்ளாமல் பிறவினைமுதல் வினைகொண்டவாறும் காரணகாரியத் தொடர்பில்லாதவாறும் காண்க. வரு தற்கு ஞாயிறு படுதல் காரணமில்லை. 'உண்டு எஞ்சிய' என்பதிலும் எஞ்சுதற்கு உண்டமை காரணமாகாது.

1. ஆ என்பது ஆவின் சாணத்தைக் குறிக்கும். இடத்து நிகழ்பொருள்—செறுவில் (வயலில்) உள்ள பயிர். அதன் தொழில் விளைந்தது. இடத்துக்கேற்றப் பட்டது—செறுவுக்கு ஏற்றிச் சொல்லப்பட்டது. பயிர் விளைந்தது

யொடு முடிந்தது. இதற்கு வினை முதல் தானே செயப்படு பொருளாயிற்று. ''பூணணிந்து விளங்கிய புகழ்சால் மார்ப'' (பதிற். 65) என அணிந்து என்னும் முதல் வினை, சினைவினை கொண்டது. 'உண்டு பசி கெட்டதும் அது. இவை காரண காரியப் பொருட்டாய்ப் பிறவாற்றான் முடிந்தன.

ஏனை வினையெச்சங்கட்கு வினை முதல் வினையும் பிற வினையும் ஒப்ப உரியவாய் வருதலின் ஒரு சூத்திரத்தாற் கூறினார். இம்மூவகை யெச்சமும் வினை முதல் கொள்ளுங் காற் காரண காரியப் பொருட்டாகாது வருதலின், அதனையும் வேறு கூறி, சினைவினை, முதல்வினையோடு முடியுங்கால் பெரும்பான்மை காரண காரியப் பொருட்டாயே வருதலானும், முதல் வினை தான் பிற வினைமுதலான் முடியும் வழிப் பெரும்பான்மை காரண காரியப் பொருட்டாயே வருதலானும் இரண்டு சூத்திரத்தாற் கூறினார். [2]''வினை யெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'' (எச்ச. 61) என்ற சூத்தி ரத்தான் வினையெச்சங்கள் எல்லாம் பெயர் வேறுபட்டும் ஈறு வேறுபட்டும் சிறுபான்மை வரும் என்று பொதுவாகக் கூறினார் ஆதலின், அதன்கண்ணே பிற வினை முதல் கொண்டனவற்றை யும் அடக்குதல் பொருந்தாது. என்னை? அவை வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் பெரும்பான்மை வருதலானும், 'வினைமுதல் முடிபின' என்ற விதி பிற வினைமுதல் கொள்ளாமையை வலியுறுத்து நிற்றலின் சூத்திர விதி வேண்டுமாதலானும் என்பது

என்பதற்குப் பதில் செறு விளைந்தது எனப்பட்டது. ஆ கிடந்த காரணத்தால் செறு விளைந்தது. ஆ (சாணம்) கிடக்கப்பட்டுச் செறு விளைந்தது எனவும் கூறலாமாதலின் கிடந்து என்பதற்கு வினைமுதலாகிய ஆ கிடக்கப்பட்டு எனவும் படுதலின், வினை முதல் செயப்படு பொருளாயிற்று என்க. அணிந்து என்பது ஒருவன் வினை. விளங்கிய என்பது மார்பின் வினை. 'அணிந்து விளங்கிய' என வருவது முதல் வினை சினை வினை கொண்டதாகும். 'உண்டு பசி கெட்டது'— இதில் உண்ணுதல் வினை ஒருவனது ; கெடுதல் வினை பசியது. இவை யாவும் முதல் சினை என்னும் உறவில் லாமல் பிற வினை கொண்டவாறு காண்க. ஆனால் காரண காரியத் தொடர்புடையனவாம்.

2. ''வினையெஞ்சுக்கிளவியும் .... வேண்டுமாதலான் என்பது''—இப்பகுதி சேனாவரையர்க்கு மறுப்பு.

கல்.

என்-எனின், இதுவும் அம்மூன்றன் திருத்துப் படுவதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அம்மூன்று சொல்லும் சினைப் பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் முன்கூறின விதிக்கு ஏற்பச்சினைவினையான் முடியாது, அச்சினையையுடைய முதல் வினையோடு ஒன்றாய் முடியினும், பிறவாற்றான் முடியினும் முன்கூறிய வினையோடு ஒன்றாதற்றன்மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: கையிற்று வீழ்ந்தான், கையிறூஉ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் என வரும்.

மற்றிது கையிற வீழ்ந்தான் எனச் செயவென் எச்சத் திரிபாகற் பாற்றெனின், அவ்வாறாவது இறுதற்றொழில் கையதும் வீழ்தற்றொழில் முதலதுமாயின் அன்றே? இறுதலும் வீழ்தலும் கையதாகக் கூறுகின்றதாயின் அதனுள் அடங்காது என்பது· அதன் பொருள் கையிற்று வீழ்ந்தவாறாகக் கொள்க. காலமுகி வீழ்ந்தான் என்பதும் அது.

கையிற்றான், காலமுகினான் என்பன ஈண்டைக்கு உதாரணம் ஆமோ எனின், அவை வினையெச்சம் அன்மையின் ''கண்ணுந்தோளும் முலையும் பிறவும்'' (கிளவி 62) என்று ஆண்டைக்கே உதாரணமாம் எனக்கொள்க. மற்று, கையிற்று வீழ்ந்தான், காலமுகி வீழ்ந்தான் என்பனவும் ஆண்டைத் திணை வழுவமைதிக்கு உதாரணமாதலின் ஈண்டைக் கூறவேண்டா எனின் திணைவழுவுக்கன்று ஈண்டுக் கூறுகின்றது. அதற்கு விதி ''கண்ணுந்தோளும்'' (கிளவி. 62) என்பதே. ஈண்டுமேல் தன் வினையான் முடியும் என்று கூறியன ஒருவழித் தன்னோடு தொடர்ந்த பிறவினையானும் முடியும் என்பதாயிற்று.

''சினையொடு முடியா முதலொடு முடியினும் வினையோரனைய'' என்பதனால் இதுவும் ஓர் மரபு வழுவமைதி எனக் கொள்க. 'குரங்கு கையிற்று வீழ்ந்தது' என இம்முடிபு அஃறிணை வினைக்குங் கொள்க.

ஈண்டுச் சினைவினை முதல்வினையொடு முடியும் என்பதே சொல்லியதெனின், 'சாத்தனது கையிற்று வீழ்ந்தது' என வினை முடிபுள்ள வழியும், சாத்தனது கையிற்று வீழ்ந்தான்' எனவுமாம்பிற எனின், ஆகாது: அம்முதல் தானும் எழுவாயாகிய வழியது இம்முடிபு எனக் கொள்க.

வெள்.

இ-ள்: வினை முதல் முடிபின எனக் கூறப்பட்ட அம்மூன்று வாய்பாடும், சினைவினையாக நின்று சினைவினையோடு முடியாது முதல்வினையோடு முடியினும் வினையால் ஒருதன்மைய என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

வினையால் ஒருதன்மைய என்றது முதல் வினையோடு முடியினும் முதலொடு சினைக்கு ஒற்றுமை யுண்மையால் பிற கருத்தாவின் வினையைக் கொண்டனவாகா; தன் கருத்தாவின் வினையைக் கொண்டனவேயாம் என்றவாறு.

உ-ம்: கையிற்று வீழ்ந்தான், கையிறா வீழ்ந்தான் கையிறுபு வீழ்ந்தான் எனவரும். ஈண்டு இறுதல் கையதாகிய சினையின் தொழில்; வீழ்தல் கையினையுடையனாகிய முதலின் தொழிலாம்.

சிவ.

இச்சூத்திரத்துக்கு உரையாளர்கள் கூறிய பொருள்களை நோக்குமிடத்துப் பின்வரும் கருத்துகள் நமக்குப் புலப்படுகின்றன.

(1) செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் சினைவினையாகவரின் அது கொள்ளும் சொல்லும் தன் சினை வினையாகவே இருத்தல் வேண்டும்என்பது முறையாயினும், தனக்குரிய முதல் வினையினையும் கொண்டு முடியலாம்; தவறில்லை. ஏன் எனின் சினைக்கும் முதலுக்கும் ஒற்றுமையுண்டு ஆதலின்.

உ-ம்: கையிற்று வீழ்ந்தான்.
இது இளம்பூரணர் கருத்து.

(2) செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் தன் வினைமுதன் வினையையே கொண்டு முடிதல் வேண்டும் என்பது முறையாயினும் பிறவினைமுதல் வினையையும் கொண்டு முடியலாம்.

உ-ம்: யானை ஒடித்து உண்டு எஞ்சிய யாமரம். இவையிரண்டும் சேனாவரையர் தெய்வச்சிலையார், கல்லாடனார் கோட்பாடுகள்:

(3) செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் தன் வினை முதல் வினையோடு முடிதலே முறை. மாறிப் பிற வினை

முதல் வினையுடன் முடியின் அதைச் செய என்னும் வாய்பா டாகத்திரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

உ-ம் : ஒடித்துண்டு எஞ்சிய. உண்டு என்பதை உண்ண எனத்திரித்தல் வேண்டும்.

செய என் வாய்பாடு திரிந்து செய்து என் வாய் பாடாயிற்று என்பாரும் உளர்.

இம்மூன்றாவது கருத்து சேனாவரையர் காலத்து இருந்துள தாகும். இது சேனாவரையரால் மறுக்கப்பட்டது.

(4) இனி நச்சினார்க்கினியர் கருத்துவருமாறு : அது இருவகைப்பட்டது. (அ) செய்து என்னும் வினையெச்சம் பிறவினையையும் கொண்டு முடியும் என்பது ஒன்று. இக்கருத்து சேனாவரையர் முதலியோர் கொண்ட கருத்தே.

(ஆ) செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் சினை வினையாகவரின் அது தன் முதல் வினையோடுதான் வரும். அப்போது காரண காரியத் தொடர்பு இருக்கும். இல்லாமலும் இருக்கும்.

உ-ம் : கண் நொந்து கிடந்தான் (கிடத்தலாகிய காரி யத்துக்குக் காரணம் கண் நொந்தமை).

'முகனமர்ந்து நல் விருந்து ஓம்புவான்' என்பதில் அமர்ந்து (மலர்ந்து) என்பது முகத்தின் வினை; ஓம்புதல் முகத் தனாகிய ஒருவன் வினை. ஓம்புதலுக்கு அமர்தல் காரணமாகா மை காண்க.

மேற்கூறிய நால்வகைக் கருத்துகளுள் இச்சூத்திரத்திற் கூறப் பட்டது சினைவினை முதல்வினையொடு முடியினும் தன்வினை கொண்டதாகவே கொள்ளவேண்டும் என்னும் ஒருகருத்தேயாம். இவ்வாறு கொண்டோர் நச்சினார்க்கினியரை யொழிந்தோர். (பிறவினையொடு முடிவதைத் தழுவிக்கொண்டனர் கல்லாட னார்.)

நச்சினார்க்கினியர், 'சினையிடத்துச் செய்து என்னும் வாய் பாட்டு எச்சம்வரின் அது மீண்டும் ஒருசினை வினையைக் கொண்டுமுடியாது, முதல்வினையொடுதான் முடியும்' என்னும் கருத்தையும், செய்து, செய்பு, செய்யூ என்பன பிறவினை முதல் வினையான் முடிதலும் உண்டு என்னும் கருத்தையும் வெளிப் படையாகச் சூத்திரமே கொண்டிருப்பதாகக் கருதிப் பொருள்

எழுதினார். (அவ்வாய்பாடுகள் பிறவாறு முடிவதைத் தழுவிக் கொண்டார்) அவர் கருத்துப்படிச் சூத்திர அமைப்பு,

> ''அம்முக்கிளவியும்சினைவினை தோன்றின்சினையொடு
> முடியா; வினைமுதலொடு முடியினும் ஓரனைய என்
> மனார் புலவர்''

என்பதாகும்.

இனி, நச்சினார்க்கினியர் சினைவினை மீண்டும் தன்வினை யோடு முடியாது என்றது பொருத்தம் இல்லை. 'கையிற்று வீழ்ந்தது என்று கூறுவதில் தவறில்லை. கையிற்று வீழ்வதும் கையிற்றவன் வீழாது நிற்பதும் உண்டு. கண் நொந்துகிடந்தான் என உதாரணம் காட்டினர் அவர். கையிறுதல் சினைக்கும் முதலுக்கும் பிரிவைக் காட்டும்; கண் நோதல் பிரிவைக் காட்டாது ஆதலின் பிரிவைக் குறியாத சினைவினையே இச்சூத் திரத்துக் கூறப்பட்டது எனக் கொண்டாரோ அவர் என நினைக் கலாம் அவ்வாறாயின் விளக்கமாக எழுதியிருப்பர். 'கையிற்று வீழ்ந்தான்' என்பதுபோல்வனவற்றை அவர் காட்டிவிளக்காமை குற்றமாகும். எனவே சினைவினை சினைவினையைக்கொண்டு முடியாது; முதல் வினையைத்தான் கொண்டு முடிதல்வேண்டும் என்னும் அவர் கருத்து ஏற்புடைத்தன்று.

'ஒடித்துண்டெஞ்சிய என்பது வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய (எச்ச. 61) என்னும் சூத்திரத்து விளக்கப்படும்.

217. ஏனை யெச்சம் வினைமுத லானு
மான்வந் தியையும் வினைநிலை யானுந்
தாமியன் மருங்கின் முடியு மென்ப (33)

(ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந்து இயையும் வினைநிலை யானும்
தாம் இயல் மருங்கின் முடியும் என்ப)

ஆ. மொ: இல.

The other adverbial participles may end either in verbs of the subject or in other verbs.

பி. இ. நூ:

நன். 344

(முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும்) பிறவும் ஏற்கும்பிற

இல. 247 ,, ,, ,,

முத்து. வி. 33

செய்தெனச் செய்யியர் செய்யிய செயின்செயச்
செயற்குப் பிறவினை முதலொடு சிவணும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், ஒழிந்து நின்ற வினையெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : அக்கூறப்பட்ட மூன்றுமன்றி, ஒழிந்துநின்ற வினையெச்சமாயின வெல்லாம், அம்மூன்று போலத் தம்தம் வினைமுதல் கொண்டுமுடிதலும் அவ்விடத்தின் வந்து பொருந்திய பிறவினையான் முடிதலும் உடைய, எ-று.

[1]இனி அவை வினை முதலானே முடியுமாறு: மழை பெய்தென வளம் பெற்றது, மழை பெய்யப் பயிர்எழுந்தது எனவரும். பிறவும் அன்ன.

இனி ஆன்வந்தியையும் வினைநிலையான் முடிவன வருமாறு: மழைபெய்தென வுலகமார்ந்தது. மரங்குழைத்தது எனவரும். பிறவும் அன்ன.

[2]இனித் 'தாமியல் மருங்கின்' என்றதனால், உழுது வருதல், உழுது வந்தேன் என வினையெச்சம் தொழிற்பெயரோடு முடிதலும் முடிக என்று கொள்க.

---

1. வினைமுதலால் முடிதலாவது—தனக்குரிய வினைமுதலால் முடிதல். காட்டப்பட்ட உதாரணங்கள் பொருத்தமில்லை. பிறவினை கொண்டதற்கே பொருந்தும். மழை பெய்தெனப் புகழ்பெற்றது, மழை பெய்ய எழுந்தது எனக்காட்டின் உதாரணம் பொருந்தும். வளம் என்பதற்குப் புகழ் எனின் பொருந்தும்.
2. தொழிற்பெயர் என்றது தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும். வருதல் தொழிற்பெயர். வந்தேன் (வந்தேனாகிய யான) வினையாலணையும் பெயர். உழுது எனச் செய்து என் வாய்பாட்டுக்குக் காட்டினும் உழ எனச் செயவென் வாய்பாட்டுக்கும் கொள்க.

[3]மற்று ஏனையெச்சங்கொடாதே ஈண்டு இலேசு காட்டுவது எனின், 'தானியன் மருங்கின்' என்னாது, 'தாமியன் மருங்கின்' என்றதனான், அது முதனிலை மூன்றெச்சங்களும் தொழிற் பெயரோடு முடிதலும் முடிக என்றற்குச் சொல்லப்பட்டது.

சேனா.

இ-ள் : முதனிலை மூன்றுமல்லாத பிறவினையெச்சம் வினை முதல் வினையானும் ஆண்டுவந்து பொருந்தும் பிறவினை யானும் வரையறையின்றித் தாம் இயலுமாற்றான் முடியும், எ-று.

உ-ம் : மழை பெய்தெனப் புகழ் பெற்றது, மழை பெய் தென மரங்குழைத்தது எனவும்; மழை பெய்யியர் எழுந்தது, மழை பெய்யியர் பலி கொடுத்தார் எனவும்; மழை பெய்யிய முழங்கும், மழை பெய்யிய வான் பழிச்சுதும் எனவும்; மழை பெய்யிற் புகழ் பெறும், மழை பெய்யிற் குளம் நிறையும் எனவும்; மழை பெய்யப் புகழ்பெற்றது, மழை பெய்ய மரங்குழைத்தது எனவும்; மழை பெயதற்கு முழங்கும், மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்துதும் எனவும்; இறந்தபின் இளமை வாராது, கணவன் இனிது உண்ட பின் காதலி முகம் மலர்ந்தது எனவும் அவை வினை முதல் வினையும் பிறவினையும் கொண்டவாறு கண்டு கொள்க. அல்லனவும் இருவகை வினையும் கோடல் வழக்கினுட் கண்டு கொள்க,

வரையறையின்றி இருவகை வினையும் கோடலின் 'வினையும் குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும்மே' (எச்ச. 36) என்னும் பொது விதியான் முடிவனவற்றை மீண்டுக் கூறல் வேண்டா எனின், வினை யெச்சங்களுள் ஒரு சாரன வினை முதல் வினை கொள்ளும் என்றதனான், ஏனையெச்சம் பிறவினையே கொள்ளுமோ இருவகை வினையும் கொள்ளுமோ என்றையமாம்; அதனான் ஐய நீங்க இவ்வாறு கூறல் வேண்டும் என்பது.

---

3. 'தாமியல் மருங்கின்' என்ற இலேசினால் உழுது வருதல் எனச் (செய்பு, செய்யூ என்பனவற்றுக்கு காட்டாதே) செய்து என் எச்சம் ஒன்றற்கே காட்டியது ஏன் எனின், ஒன்றற்கே காட்டினாலும் 'தானியல் மருங்கின்' என ஒருமையிற் கூறாது 'தாமியல் மருங்கின்' எனப்பன்மை யிற் கூறியதனால் செய்து, செய்பு, செய்யூ என்னும் மூன்றற்குமே கொள்க என்பது இப்பகுதிக் கருத்தாகும்.

[1]அஃதேல் வினையொடு முடிதல் ஈண்டுக் கூறப்பட்டமையின் எச்ச வியலுள் 'குறிப்பு முடிபாகும் (எச்ச. 36) என அமையும்; 'வினையும்' எனல் வேண்டா எனின், குறிப்பும் என்னும் உம்மை யால் தழுவப்படுவது சேய்த்தாகலிற் றெற்றென விளக்காமை யானும், வினைமுதல் என்பது பெயர்க்கும் வினைக்கும் பொதுவாகலானும் 'வினையும்' எனல் வேண்டும் என்பது

தெய்.

ஏனையெச்சங்கட்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : வினையெச்சங்களுள் முந்துற்ற மூன்றும் அல்லாதன வினைமுதல் வினையானும், அவ்விடத்துப் பொருந்தும் பிற வினையானும் தாம் நடக்கும் மருங்கினான் முடியும், எ-று.

உ-ம் : மழை பெய்தெனப் புகழ் பெற்றது, மழை பெய்யியர் எழுந்தது, மழை பெய்யிய எழுந்தது, மழை பெய்யிற் புகழ் பெறும், மழை பெய்யப் புகழ் பெற்றது—இவை இறந்த காலம். வாழச் செய்த நல்வினையல்லாது, ஆழுங் காலைப் புணை பிறி திலலை — இது வாழா நிற்க என நிகழ் காலம் குறித்தது. மழை பெய்ய எழுந்தது—இது எதிர் காலம். மழை பெயற்கு எழுந்தது. இவை வினை முதல் வினையான்முடிந்தன.

---

1. எச்சவியலுள் 'வினையும் குறிப்பும் முடிபாகும்' எனக் கூறாமல் 'குறிப்பும் முடிபாகும்' என்று மட்டும் கூறினால், குறிப்பும் என்பதில் உள்ள உம்மை, இவ் வியலிற் கூறப்பட்ட தன்வினை பிறவினைகளைக் கொண்டு முடியும் தெரிநிலை வினையின் முடிபைத் தழுவும். ஆதலின், அவ்வாறே 'குறிப்பும்' என்று மட்டும் அங்குக் கூறலாம். தழுவுதல் என்பது அண்மையில் இருப்பதற்கே ஏற்கும். இருநூறு சூத்திரங்களுக்கு அப்பால் (சேய்மையில்) இருப்பதைத் தழுவுதல் சிறவாது. அதனால் ஆண்டு தெரிநிலை வினையும் உடன் கூறினார். அன்றியும் வினை முதல் என இங்குக் கூறியது வினைமுதற்பெயர் வினைமுதல் வினை இரண் டையும் குறிக்குமாதலின் வினைமுதல் வினையையே கொள்ளல் வேண்டும் என்பது, ஆங்கு வினையெச்சம் தெரிநிலைவினையும் குறிப்பும் கொள்ளும் என்று கூறிய தால் பெறப்படும். இதனானும் ஆங்கு வினையும் உடன் கூறப்பட்டது. — சிவ.

மழை பெய்தென மரங் குழைத்தது, மழை பெய்யியர் மாதவர் அருளினர், மழை பெய்யிய மாதவர் அருளினர், மழை பெய்யிற் குளம் நிறையும், மழை பெய்யக் குளம் நிறைந்தது—இவை இறந்த காலம். மழை பெய்ய வந்தான், இது நிகழுங் காலம். மழை பெய்யப் பலி கொடுத்தும்—இது எதிர்காலம். மழை பெயற்கு அறஞ் செய்தும்—இவை பிறவினையான் முடிந்தன.

தான் உண்டபின் வந்தான், தான் உண்ணாமுன் வந்தான், தான் உண்டக்கால் வரும், தான் உண்டக் கடை வரும்—இஃது இறுதி என்னும் காலம் குறித்து நின்றது. தான் உண்டவழி வரும்—இதுவும் அது. தான்உண்ட விடத்து வரும் — இஃது உண்டக்கால் என்பது குறித்தது—இவை தன் வினை.

பிறன் உண்டபின் வரும், பிறன் உண்ணாமுன் வரும், பிறன் உண்டக்கால் வரும், பிறன் உண்டக்கடை வரும், பிறன் உண்ட வழி வரும், பிறன் உண்ட விடத்து வரும்—இவை பிற வினை.

இவை பெயராதற்கும் ஏற்று நிற்றலின், அந்நிலையின்றித் தொழில் நிகழும் காலத்தைக் குறித்து வரின் வினையெச்சமாம் என்பதனாற் 'காலங் கண்ணிய' என்று ஓதினார்.

[1]அன்ன மரபினாற் கொள்ளப்படுவன : ''அற்றா லளவறிந் துண்க.'' (குறள். 643) அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்'' (நான்மணி. 26) ''நனலிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே (கலி. குறி. 3) கூறாமற் குறித்ததன்மேற் செல்லும்'' (கலி. 1), கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்'' (குறள். 701), ''செவ்வன் தெரிகிற்பான்'', ''விருந்தின்றி யுண்ட பகலும்'' (திரிக. 44)'', ''நாளன்று போகிப் புள்ளிடை தட்ப'' (புறம். 124) இனிக் கொண்டான், அணி வந்தான், நனி வந்தான் பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

நச்.

இஃது ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஏனை எச்சம்—முதல்நிலை மூன்றும் அல்லாத பிற வினையெச்சம், வினைமுதலானும்—வினைமுதல் வினையானும்,

1. அற்றால்—ஆல், அலைப்பான்—பான், நடக்கலும்—அல், கூறாமல்—மல், கூறாமை-மை, செவ்வன்—அன், இன்றி, அன்று, இனி, அணி, நனி. இவைகளும் வினையெச்ச விறுகளாகவும், சொற்களாகவும் வருதல் காண்க.

ஆன்வந்து இயையும் வினைநிலையானும்—ஆண்டு வந்து பொருந்தும் பிறவினையானும், தாம் இயல் மருங்கின் முடியும் என்ப—வரையறையின்றித் தாம் இயலுமாற்றான் முடியும் என்று சொல்லுவர் ஆசிரியர், எ—று.

உ-ம்: மழை பெய்தெனப் புகழ் பெற்றது, மழை பெய்தென மரம் குழைத்தது எனவும்; மழை பெய்யியர் எழுந்தது, மழை பெய்யியர் பலி கொடுத்தனர் எனவும்; மழை பெய்யிய முழங்கும், மழை பெய்யிய வான் பழிச்சுதும் எனவும்; மழை பெய்யின் புகழ் பெறும், மழை பெய்யின் குளம் நிறையும் எனவும்; மழை பெய்யப் புகழ் பெற்றது, மழை பெய்ய மரங்குழைத்தது எனவும்; மழை பெய்தற்கு முழங்கும், மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்துதும் எனவும்; இறந்தபின் இளமை வாராது, கணவன் இனிது உண்டபின் காதலி முகம் மலர்ந்தது எனவும்; கடுத்தின்னாமுன் துவர்த்தது, மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது எனவும்; உரைத்தக்கால் உரை பல்கும், "வலனாக வினையென்று வணங்கி நாம் விடுத்தக்கால், சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை" (கலி. 35) எனவும்; நல்வினைதான் உற்றக்கடை உதவும், நல்வினை தான் உற்றக்கடை தீவினை வாராது எனவும்; நல்வினை தான் உற்றவழி உதவும், நல்வினைதான் உற்ற வழித் தீவினை வாரா எனவும்; நல்வினைதான் உற்றவிடத்து உதவும், நல்வினைதான் உற்றவிடத்துத் தீவினை வாரா எனவும் வரும். கற்பான் நூல் செய்தான், செல்வம் தருபாக்கு யாம் விரும்புதும், நமது நலன் நுகர்வான் யாம் விரும்புதும்—இவை பிறவினை கொண்டன. இவை வினை முதல் வினை கொண்ட வாறு முன்னர்க் காட்டினாம்.

கல்.

என்-எனின், ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: முதனிலை மூன்றும் ஒழித்து ஒழிந்த வினையெச்சங்கள் எல்லாம் அவ்வினைமுதல் வினையானும் அவ்விடத்து வந்து பொருந்தும் பிறவினையானும் தாம் நடக்குமிடத்து முடிபு பெறும் என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: மழைபெய்தென வளம் பெற்றது. மழை பெய்தென உலகமார்ந்தது.

மழை பெய்யிய எழுந்தது, மழை பெய்யிய மாதவர் அருளினார்.

மழை பெய்யியர் எழுந்தது, மழை பெய்யியர் மாதவரருளி னார்.

மழை பெய்யின் அறம்பெருகும், மழைபெய்யின் குளம் நிறையும்.

மழைபெய்ய எழுந்தது, மழை பெய்யக் குளம் நிறைந்தது.

மழை பெயற்கு எழுந்தது, மழை பெயற்கு மாதவர் அருளினார்.

சாத்தன் தான் உண்ட பின் வந்தான், சாத்தன் உண்டபின் கொற்றன் வந்தான்.

சாத்தன் தான் உண்ணாமுன் வந்தான், சாத்தன் உண்ணா முன் கொற்றன் வந்தான்.

சாத்தன்தான் உண்டக்கால் வரும், சாத்தன் உண்டக்கால் கொற்றன் வரும்.

சாத்தன் தான் உண்டக்கடை வரும், சாத்தன் உண்டக்கடை வரும் கொற்றன்.

சாத்தன் தான் உண்டவழி வரும், சாத்தன், உண்டவழிக் கொற்றன் வரும்.

சாத்தன் தான் உண்டவிடத்துவரும், சாத்தன்தான் உண்ட விடத்துக்கொற்றன் வரும்.

என இருவழியும் ஒட்டுக.

எடுத்தோதாத பிறவாய்பாட்டிற்கும் உண்பான் வந்தான், சாத்தன் உண்பான் கொற்றன் வந்தான் என்றாற் போல்வன ஒட்டுக.

இவ்வெச்சங்களுள் குறிப்புள்ளவற்றிற்கும் இவ்வாறு கொள்க.

அடுக்கி முடியுமாறு.

228. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முவற முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே. (34)

(பல் முறை யானும் வினை எஞ்சு கிளவி
சொல்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே).

ஆ. மொ: இல.

The adverbial participles of different types if used in one sentence, succeeding one another without completion may have the senses completed if the last one is completed.

பி. இ. நூ:

நேமி. சொ. 45.

சாற்றும் (பெயர்) வினை எச்சங்கள் தாம் அடுக்கித்
தோற்றல்......நெறி.

நன். 355.

(உருபு பல அடுக்கினும்) வினைவே றடுக்கினும்
ஒரு தம் எச்சம் ஈறுற முடியும்.

பிரயோக விவேகம். 39.

வினை......பல அடுக்கும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இன்னும் அவ்வெச்சங்கள் திறத்தே படுவதொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

உரை: பல எச்சம் உடன் அடுக்கி வந்து பின் இறுதிக்கண் ஒன்றற்கேற்ற முடிபு ஏற்றக்கால் அதனால் அவ்வெச்சமெல்லாம் முடிந்த பொருளனவாகி முடிபு கொள்ளும், எ-று.

வ-று: உழுது உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான் என வரும். இஃது ஓர் இனத்து எச்சம் பல அடுக்கி வந்தது. அவற்றுள், பாடி என்பது வந்தான் என்னும் முடிபு கொண்டு முடிந்தது: அம்முடிபே அவ்வடுக்கி நின்ற பிற எச்சங்கட்கும் முடிபாயிற்று என்றவாறு.

எனவே, [1]அது முடியாக்கால் ஒழிந்த எச்சங்கள் முடியா வென்பதாம்.

இனிப் பல இனத்து எச்சம் அடுக்கிவருமாறு வழக்கினகத்துக் கண்டு கொள்க.

சேனா.

இ-ள்: ஒரு வாய் பட்டாலும் மற்றப் பல வாய்பாட்டானும் வினையெஞ்சு கிளவி அச்சொற்கண் முறையான் முடியாது

---

1. அது—பாடி என்பது. ஒழிந்த எச்சங்கள்—உழுது உண்டு முதலியன.

அடுக்கி வரினும் முன்னின்ற வெச்சம் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாம், எ-று.

உ-ம் : உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான் எனவும், உண்டு பருகூஉத் தின்குபு வந்தான் எனவும் வரும்.

'முன்னது முடிய முடியும்' என்றாராயினும், உண்டு, தின்று மழை பெய்யக் குளம் நிறையும் என்ற வழி, முன்னதன் தொழி லான் ஏனைய முடியாமையின் பன் முறையான் அடுக்குங்கால் முன்னதன் தொழிலான் முடிதற்கு ஏற்பனவே கொள்க.

'சொன் முறை முடியாமை' யாவது தம்மொடு தாமும் பிற சொல்லும் முடியாமை.

உண்டு வந்தான், தின்று வந்தான் எனச் சொற்றோறும் வினை யியைதல் மரபு. அங்ஙனம் நில்லாது தம் முன் இயை பில்லன அடுக்கி வந்து இறுதி வினையெச்சத்திற்கு முடிபாகிய சொல்லான் எல்லாம் முடியினும் இழுக்காதென அமைத்தவாறு.

வினையெச்சம் பன்முறையானும் அடுக்கி ஒரு சொல்லான் முடியும் எனவே பெயரெச்சம் ஒரு முறையான் அடுக்கி ஒரு சொல்லான் முடியும் என்பதாம்.

நெல்லரியும் இருந்தொழுவர் (புறம். 24) என்னும் புறத் தொகைப் பாட்டினுள் 'தெண்கடற்றிரை மிசைப் பாயுந்து' எனவும், 'தண் குரவைச்சீர் தூங்குந்து' எனவும், 'எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து' எனவும், 'முந்நீர்ப்பாயும்' எனவும் செய்யும் என்னும் பெயரெச்சம் அடுக்கி 'ஓம்பாவீகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலை' என்னும் ஒரு பொருள் கொண்டு முடிந்தவாறு கண்டு கொள்க. ஆங்குத் 'தாங்கா வுறையுள் நல்லூர் கெழிஇய' என்னும் பெயரெச்சம் இடை நிலையாய் வந்தது. பிறவும் அன்ன.

தெய்.

வினையெச்சம் அடுக்கி வருவழி வருவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வினையெச்சச் சொற்றாம் சொற்கள் தோறும் முற்றுப் பெறாது பலவாற்றானும் அடுக்கி வரினும் இறுதி நின்றது முடிய ஏனையவும் பொருள் முடிவு பெற்றனவாம், எ-று.

உ-ம்: [1]உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான், உண்டு பருகிக் கூத்திற்புக்கு வந்தான் என வரும். பிறவுமன்ன.

நச்.

இஃதுஅவ்வெச்சங்கள் அடுக்கியவழிப் படுவதோர் முறைமை கூறுகின்றது.

இ-ள்: வினையெஞ்சு கிளவி சொல்முறை முடியாது—வினை யெச்சமாகிய சொற்கள் ஒன்றற்கொன்று முடிக்கும் வினை வந்து முடியாது, பன்முறையானும் அடுக்குந வரினும்—ஒருவாய் பாட்டானன்றிப் பலவாய்பாட்டானும் அடுக்கிவரினும், முன்னது முடிய முடியும் மன் பொருளே—முன்னின்ற எச்சம் முடிய ஏனை யவும் பொருள் முடிந்தனவாம், எ-று.

உ-ம்: உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான், உண்டு பருகூஉத் தின்குபு வந்தான், உழுது உண்பானொடு விரைஇ வந்தான் என வரும்.

பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக ஏற்றி மோர் இன்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோளும்

எனச் செய்தென் எச்சத்திடையே அவ்வினையெச்சமுற்றும் அதன் குறிப்பெச்சமும் உடன் அடுக்கி முடிந்தனவும் பிறவும் 'பன்முறையானும்' என்றதனாற் கொள்க.

வினையெச்சம் பன்முறையானடுக்கி ஒரு சொல்லான் முடியும். எனவே, பெயரெச்சம் ஒரு முறையானடுக்கி ஒருசொல்லான் முடியும் என்பதாம். 'நெல் அரியும் இருந்தொழுவர்' (புறம் 159) என்னும் புறப்பாட்டினுள், பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து, பாயும் என்னும் பெயரெச்சம் அடுக்கி 'மிழலை' என்னும் ஒரு

---

1. ஒரே வாய்பாட்டுக்குக் காட்டப்பட்ட உதாரணம். 'கூத்தில்' என்பது இடைப்பிறவரலுடன் வந்ததற்கு உதாரணம் இரண்டாவது. வாய்பாடுகள் கலந்து முடியாது ஒரு வாய்பாட்டானே அடுக்கி வரும் என்பது இவர் கருத்து போலும்.

பெயர் கொண்டு முடிந்தன. ஆண்டு 'நல்லூர் கெழீஇய' என்னும் பெயரெச்சம் இடைநிலையாய் வந்தது.

கல்.

என்-எனின், இவ்வெச்சங்களுள் எடுத்தடுக்கிய வழிப்படுவதோர் முறைமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பலவாற்றானும் வினையெச்சமாகிய சொற்கள் ஒரு சொல்லொடு ஒரு சொல்லாய் முறை முடியாதே பலவாய் அடுக்கி வரினும், முன்னின்ற எச்சம் முடியவே அல்லாதனவும் பொருள் முடிந்தனவாம், எ-று.

உ-ம்: உழுது உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான் என வரும். உண்ணூஉ தின்னூஉ ஓடூஉப் பாடூஉ வந்தான் எனப் [1]பிற எச்சங்களும் அடுக்கி வருவன கொள்க:

'பன்முறையானும்' என்றதனான் ஓரினத்து எச்சமேயன்றிப் பலவினத்து எச்சங்களும் மயங்கி அடுக்குதலும் கொள்க,

உ-ம்: உருதுகிழுதுண்பான், ஓடூஉபாடூஉ வந்தான் என்பன.

இனிச்'சொன்முறை முடியாது அடுக்கிவரினும்' என்று சொற்கண் முறை முடித் தடுக்கலும் உண்டு என்பது போதரக் கூறிய அதனான், சொற்கண் முறைமுடித் தடுக்கி வரினும் முன்னது முடியவே முடியும்; முடியாக்கால் முடிந்தனவும் முடிந்திலவாம் என்பது கொள்க.

உ-ம்: உழுது வந்தான், கிழுது வந்தான், ஓடி வந்தான், பாடி வந்தான் என நின்றவழி முடியாதவாறு அறிந்து கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனால் பெயரெச்சம் அடுக்கிய வழியும் முன்னது முடிய முடியும் என்பது கொள்க.

உ-ம்; 'நெல்லரியும் இருந்தொழுவர்' (புறம் 24) என்னும் புறப்பாட்டினுள் பாயுந்து எனவும், தூங்குந்து எனவும், தரூஉந்து எனவும், பாயும் எனவும், கெழீஇய எனவும் அடுக்கி நின்ற பெயரெச்சம் எல்லாம் 'மிழலை' என்னும் பெயர் கொண்டு முடிந்ததாம் என்று உணர்க.

---

1. பிறஎச்சம் என்றது செய்து என்பதையொழிந்த பிற எச்சங்களை.

பெயரெச்சம் முடியுமாறு

229. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
வவ்வறு பொருட்கு மோரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே. (35)

(நிலனும் பொருளும காலமும் கருவியும்
வினைமுதல் கிளவியும் வினையும் உளப்பட
அ அறு பொருட்கும் ஓர் அன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல் லே)

ஆ. மொ: இல்.

The adjectival participles 'seyyum' and 'seytha' belong to the words denoting land, object, time, instrument, agent and action.

பி. இ. நூ.

நேமி. சொ. 44

ஆறன்மேற் செலும் பெயரெச்சம்.

நன். 340

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

இல. 243

அவற்றுட்
செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
செய்வ தாதி அறுபொருட் பெயரொடு
முடியும் முறையது பெயரெச் சம்மே.

முத்து. வி. 34, 35

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே

காலம் பொருள்நிலம் கருவி வினைமுதல்
வினையோர் அறுவகைப் பொருட்கும் உரிய

இளம்

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், செய்யும் செய்த எனப்பட்ட இரண்டு பெயரெச்சத்திற்கும் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: சொல்லப்பட்ட ஆறு சொல்லொடு முடியும் அவ் விரண்டெச்சம், எ-று.

அவற்றுள் செய்யும் என்பது பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையொழித்து ஒழிந்த நான்குபாற்கண் வருமாறு ஈண்டுக் காட்டுதும். ஒழிந்தனவும் மேல்வருகின்ற சூத்திரத்தாற்பெறுதும்.

நிலன்: அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் என வரும்.

பொருள்: அவன் செய்யும் பொருள், அவள் செய்யும் பொருள், அது செய்யும் பொருள், அவை செய்யும் பொருள் என வரும்.

காலம்: அவன் ஓதுங்காலை, அவள் ஓதுங்காலை, அது ஓதுங் காலை, அவை ஓதுங்காலை எனவரும்.

கருவி: அவன் எறியும் கல், அவள் எறியும் கல், அது எறியும் கல், அவைஎறியும் கல் எனவரும்.

வினைமுதற் கிளவி: உண்ணும் அவன், உண்ணும் அவள், உண்ணும் அது, உண்ணும் அவை எனவரும்.

வினை: அவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண் என்வரும்.

இனிச் செய்த என்பது மூன்றிடத்தொடும் சிவணி ஐந்து பாற்கும் உரித்து, அது வருமாறு:

அவன் உண்ட இல்லம், அவள் உண்ட இல்லம், அவர் உண்ட இல்லம், அது உண்ட இல்லம், அவை உண்ட இல்லம் எனவரும். ஒழிநீத பொருளும் காலமும் கருவியும் வினைமுதற் கிளவியும் வினையும் இவ்வாறு ஒட்டிக்கொள்க.

மற்றுமேற் செய்த என்பது முடிபுகூறப்படாமையின் அதற்கே கூறுக; செய்யும் என்பதற்கு முடிபு ஈண்டுக் கூறியது என்னை யெனின், செய்யும் என்பது [1]மேல் முற்றுச்சொல்லாய் நின்ற

1. மேல்—பல்லோர் படர்க்கை என்னும் சூத்திரத்தில் (வினை. 30).

நிலைமை நோக்கிக் கூறினார், ஈண்டு எச்சமாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறுகின்றார் என்பது.

மற்று, முற்றுச்சொல்லாய் நின்ற நிலைமையும் எச்சமாய் நின்ற நிலைமையும் தம்முள் வேற்றுமை யறியுமாறென்னை? இரு நிலைமைக்கண்ணும் பெயர்கொண்டு முடிதல் ஒக்கும் பிற எனின், செய்யும் என்பது முற்றாய நிலைமைக்கண், பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை ஒழித்து ஒழிந்த நான்கு பாலையும் தன் ஈற்றகத்துக்கண் ஒருவாற்றாற் கொண்ட அப்பெயரானே யமைந்து [1]முடியுமாறும், அஃது எச்சமாய நிலைமைக்கண் முடிபாய் வரும் பெயர்க்கு அடையாய் நிற்கும். எனவே, எச்சமான நிலைமைக்கண் முடிபாக வரும் பெயர் பயனிலை செப்பலும் உருபேற்றலும் உடையவாயிற்று.

சேனா.

வினையெச்சம் உணர்த்தி இனிப் பெயரெச்சம் உணர்த்துகின்றார்.

இ-ள்: செய்யும் செய்த என்னும் சொற்கள், தொழில் முதல் நிலை எட்டனுள் இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டொழித்து ஏனையாறு பொருட்கும் ஒத்த உரிமைய; எ-று.

இவற்றிற்கு ஒத்த உரிமைய எனவே, [2]ஒழிந்த இரண்டிற்கும் இவற்றோடு ஒப்பஉரியவாகா, சிறுபான்மை யுரிய என்றவாறாம்

உ-ம் : வாழுமில், கற்குநூல், துயிலுங்காலம், வனையும் கோல், ஓதும் பார்ப்பான், உண்ணும் ஊண் எனச் செய்யும் என்னும் பெயரெச்சம் உம்மீறு காலவெழுத்துப் பெறாது ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தவாறு.

புக்கவில், உண்டசோறு, வந்தநாள், வென்றவேல் ஆடிய கூத்தன், போயின போக்கு எனச் செய்த என்னும் பெயரெச்சத் திறுதி அகரம் க ட த றவும் யகர னகரமும் ஊர்ந்து அப்பொருட் குரித்தாய் வந்தவாறு.

நோய்திரு மருந்து, நோய்தீர்ந்த மருந்து என்னும் ஏதுப் பொருண்மை கருவிக்கண் அடங்கும்.

---

1. முடியுமாறும் என்பது முடியும் என்றிருத்தல் வேண்டும். இன்றேல் தொடர்ப்பிழை வரும்.
2. ஒழிந்த இரண்டு : இன்னதற்கு, இது பயன் என்பன,

[1]அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான், ஆ கொடுத்த பார்ப்பான் எனவும்; ஆடையொலிக்கும் கூலி, ஆடையொலித்த கூலி எனவும் ஏனை யிரண்டற்குஞ் சிறுபான்மை யுரியவாய் வந்தவாறு.

[2]நீங்கற் பொருள் பஃறொழில் பற்றி வரும் சிறப்பின் றாகலிற் றொழில் முதலொடு கூறாது, 'இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்' (வேற்றுமை. 17). என்னும் பொருண்மையாற் றழீஇக் கொண்டாராகலின், பழம் உதிருங்கோடு, பழம் உதிர்த்த கோடு எனச் சிறுபான்மை நீங்கற் பொருட்கு உரியவாதலும் கொள்க.

[3]''நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்'' (கலி. குறி. 24) என்புழிக் காட்சியை மருந்து என்றான் ஆதலின், காணும் மருந்து என்பது வினைப் பெயர் கொண்டதாம். ''பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்'' (குறள் 537) என்புழிந் பொச்சாவாக் கருவி என்பதும் அது. 'ஆறு சென்ற வியர்' என்பழி வியர் ஆறு சேறலான் வந்த காரியமாகலின் செயப்படு பொருட்கண் அடங்கும். நூற்ற நூலான் இயன்ற கலிங்கமும் ஒற்றுமை நயத்தால் 'நூற்ற கலிங்கம்' எனப்படும். ''நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ'' (பதிற்று. 13) எனப் பெயரெச்சத்தின் எதிர்மறை பொருட் பெயர் கொண்டு நின்ற தாம். பிறவும் கூறப்பட்ட பொருட் கண் அடங்குமாறு அறிந்து அடக்கிக் கொள்க.

உண்டான் சாத்தன், மெழுகிற்றுத் திண்ணை என்புழி உண்டான், மெழுகிற்று என்னும் முற்றுச்சொல் வினைமுதலும், செயப்படு பொருளுமாகிய பொருட்குரியவாமாறுபோல, இவ் விருவகைப் பெயரெச்சமும் நிலமுதலாகிய பொருட்குரியவாம்

---

1. அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான் — இன்னதற்கு என்பது. ஆடையொலித்த கூலி—இது பயன் என்பது.
2. எல்லைப் பொருள் எல்லைப் பொருட்கு — கணேசய்யர் பாடம். பழத்துக்கு எல்லை கோடு ஆதலின் எல்லைப் பொருட்கு என்றார் என்னலாம். நீங்கற் பொருள் என்பதே நன்று.
3. காணும் மருந்து — காணும் காட்சியாகிய மருந்து காணுதலே மருந்து ஆதலின் மருந்து என்பதற்குக் காட்சி என்பதாயிற்று. அதனால் காணும் என்னும் பெயரெச்சம் மருந்து (காட்சி) என்னும் தொழிற்பெயர் கொண்டதாம். பொச்சாவாக்கருவி—பொச்சாவாமை

என அவற்றது [1]அறுபொருட்கும் உரிமை உணர்த்தியவாறு. முடிபு எச்சவியலுட் (எச்ச. 37) பெறப்படும்.

பொருளைக் 'கிளவி' என்றார். [2]நில முதலாயினவற்றைப் பெயரெச்சப் பொருள் என்னாது முடிக்குஞ் சொல் எனின், 'அவ்வறு பொருட்கும்' என்னாது 'அவ்வறு பெயர்க்கும்' என்று ஓதுவார். ஓதவே, 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' (எச்ச. 37) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம்; அதனான் இவை பொருள் என்றலே உரை.

அம் ஆம் என்பன முதலாக அகரம் ஈறாகக் கிடந்த இறுதி இடைச் சொற்குக் கூறப்பட்ட காலவெழுத்துச் சிறிய சிதைந்து வரினும், சிறுபான்மை பிறவெழுத்துப் பெறினும் நுண்ணுணர்வுடையோர் வழக்கு நோக்கியுணர்ந்து கொள்க.

தெய்.

செய்யும் செய்த என்னும் சொற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : நிலப்பெயரும் பொருட் பெயரும் காலப் பெயரும் கருவிப் பெயரும்வினைமுதற் பெயரும் வினைப் பெயரும் ஆகிய அவ்வாறு பெயர்க்கும் ஒத்த உரிமைய செய்யும், செய்த என்னும் சொற்கள் எ-று.

யாகிய கருவி. பொச்சாவாமையே கருவி எனப் படுதலின், பொச்சாவாமையாகிய பொச்சாவாமை எனப்படும். பொச்சாவாமை தொழிற்பெயர். பொச்சாவா என்னும் பெயரெச்சம் கருவி (பொச்சாவாமை) என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் கொண்டதாம்.
ஆறு சென்றவியர் — வழிக்கண் சென்றதால் வரப்பட்ட வியர் எனப் பொருள் படுதலின் செயப்படுபொருள் கொண்டதாம்.
நூலான் இயன்ற கலிங்கம் — நூலே கலிங்கம் (ஆடை) ஆதலின் ஒற்றுமை, மண்ணான் இயன்ற குடம் என்பது போலக் கொள்க. இயன்ற கலிங்கம் இயற்றப்பட்ட கலிங்கம் எனப்படுதலிள் செயப்படுபொருள் கொண்டது என்னலாம்.

1. அறுபொருள் : நிலம், பொருள். காலம், கருவி, வினை முதல், வினை என்பன.

2. நில முதலியன பொருள்கள் : அப்பொருள்களில் செய்யும் செய்த என்பன வரும் என்பது இச்சூத்திரப்

இவற்றோடு முடியும் எனவே, பெயரை எச்சமாகவுடைய வாதலாற் பெயரெச்சம் எனக் குறியும் பெறும். [1]இவையும் பால் காட்டா என்றுணர்க.

இவை 'எஞ்சிய கிளவி' யிடத்தொடு சிவணி' (வினை. 28) என்பதின் அடங்காவோ எனின், ஆண்டு வினை முதல்தானே மூன்றிடத்து ஐந்து பாலுமாகி வரும். இவை அவ்வாறு அன்றிச் செயப்படு பொருளோடும், செயலோடும், கருவியோடும், இடத்தோடும், காலத்தோடும், வினை முதலோடும் ஒத்த இயைபினவாகி முற்றுப் பெறுதலின் அடங்கா என்க. உதாரணம் வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும்.

நச்.

இது செய்யும் செய்த என்னும் பெயரெச்சத்திற்குப் பொருள் முடிபு கூறுகின்றது.

இ-ள்: செய்யும் செய்த என்னும் சொல்லே—செய்யும் செய்த என்னும் சொற்கள் இன்னதற்கு இது பயன் என்னும் இரண்டு ஒழித்து, நிலனும் பொருளும் காலமும் கருவியும் வினை முதற்கிளவியும் வினையும் உளப்பட அவ் அறுபொருட்கும் ஓரன்ன உரிமைய—நிலப் பொருளும் செயப்படு பொருளும்காலப் பொருளும் கருவிப் பொருளும் வினைமுதற் பொருளும் என்ற என்ற ஐந்துடனே வினைப் பொருளும் கூடச் சொல்லப்பட்ட அவ்வறு வகைப் பொருட்கும் ஒத்த உரிமையினையுடையவாம், எ-று.

உ-ம்: வாழும்இல், கற்கும்நூல், துயிலும் காலம், வினையும் கோல், ஓதும் பார்ப்பான், உண்ணும் ஊண் என உம்ஈறு கால எழுத்துப் பெறாது ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

புக்கஇல், உண்டசோறு, வந்தநாள், வென்றவேல், ஆடிய கூத்தன், போயின போக்கு என அகர ஈறு க ட த றவும், யகர னகரமும் ஊர்ந்து ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

பொருள். செய்யும் செய்த என்பன கொண்டு முடியும் சொற்களாக நில முதலியவற்றைக் கொள்ளலாகாது. ஏன்எனின் பெயரெச்சம் பெயரொடு முடியும் என எச்சவியலில் கூறுதலால் என்க. இங்கும் கூறி அங்கும் கூறின் கூறியது கூறலாகும்.

1. வினையெச்ச வாய்பாடுகள் பால் காட்டாவாதலோடு இப்பெயரெச்ச வாய்பாடுகளும் பால் காட்டா என்க.

இவற்றுள் வினைமுதற்கிளவி ஒழிந்தனவற்றிற்கு வினைமுதற் பொருள் முன்வந்தே பின்வரும் வினையோடு முடிந்து பொருள் தருதலும், வினைமுதற் கிளவியாயின் பின்வரும்வினையோடு முடிந்து பொருள் தருதலும் கொள்க. இவற்றிற்குச் செய்யாநிற்கும் எனவும் செய்யாநின்ற எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமை 'ஒன்றென முடித்த'லாற் கொள்க.

''மற்றிந்நோய்தீரும் மருந்தருளர்ய் ஒண்டொடீ, நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்'' (கலி. 60) என்புழி 'நோய் தீர்தற்குக் காரணமாகிய மருந்து' என வருங்காரணத்தைக் கருவிக்கண்ணும், ''நின் முகத்தைக் காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த அருளை மருந்தாதல் தன்மையாகவுடையன்' என வருங்காரியத்தை ஒன்றென முடித்தற்கண்ணும் அமைத்துக்கொள்க.

'தேரோடும் புறங்காணே னாயினேன்' என்பதூஉம், 'நிலம் பூத்த மரமாயின்' என்பதூஉம், காரணத்தின்கண்ணும்; ஆறு சென்றவியர்' என்றதனை 'ஆறு சேறலான் வந்தவியர' எனக் காரியத்தின் கண்ணும் அடக்குக. ஆர்களிறு மிதித்தநீர், எள் ஆட்டின எண்ணெய், உண்ட எச்சில் என்பனவும் காரியத்தின் கண் அடக்குக.

''குண்டுசுனை பூத்த வண்டு படுகண்ணி'' (முருகு. 169) ''நூலாக்கலிங்கம் வாலரைக் கொளீஇ'' (பதிற்று. 12) என்பன பூத்த பூவான் இயன்ற கண்ணி, நூலாத நூலான் இயன்ற கலிங்கம் என ஒற்றுமை நயம் பற்றிச் செயப்படுபொருள்மேல் நின்றன.

''பொச்சாவாக் கருவியால் போற்றிச்செயின்''(குறள். 537) என்பது கருவிக்கண் அடங்கும்.

அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான், அரசன் ஆ கொடுத்த பார்ப்பான் எனவும்; ஆடையொலிக்கும் கூலி, ஆடையொலித்த கூலி எனவும் ஒத்த வுரிமைய அன்றிச் சிறுபான்மை இன்னதற்கு, இது பயன் என்பனவற்றின் கண்ணும் வரும்.

இன்னும் பழம் உதிரும்கோடு, பழம் உதிர்த்தகோடு எனச் சிறுபான்மை தீர்தற் பொருண்மை பற்றி வருதலும் கொள்க.

இனிச் செய்த என்பதன் குறிப்பாய், இன்ன, அன்ன, என்ன எனவும்; கரிய, செய்ய எனவும் வருவனவும் கொள்க. அவை 'இன்ன தன்மையின் அருமையின்' (சீவக. 2754)'அன்ன தன்மை

யும் அறிந்தியர்' (புறம். 136) எனவும், 'என்னகிளவியும் பண்பின் தொகையே' (எச்ச. 20) எனவும், 'கரிய மலர் நெடுங்கண்' என வும், 'செய்யகோல்' எனவும் வந்தவாறு காண்க.

கல்.

என்-எனின், எஞ்சிய கிளவி என்று எடுத்தவற்றுள் வினை யெச்சம் உணர்த்திப் பெயரெச்சமாகிய செய்யும் செய்த என்பன வற்றிற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: நிலப்பொருட்பெயரும், செயப்படு பொருட்பெயரும், காலப் பொருட் பெயரும், கருவிப்பொருட் பெயரும், வினை முதற் பொருட் பெயரும், வினைப் பொருட் பெயரும் ஆகச் சொல்லப்பட்ட அவ்வறுவகைப் பொருட்பெயர்க்கு ஒரு தன்மை யான உரிமையினையுடைய செய்யும் செய்த என்னும் இரு வகைப் பட்ட சொல்லும், எ-று.

உ-ம்: நிலம்: அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் என வரும்.

பொருள்: அவன் உண்ணும் சோறு, அவள் உண்ணும் சோறு, அவருண்ணும் சோறு, அதுவுண்ணும் சோறு, அவையுண் ணும் சோறு என வரும்.

காலம்: அவனுண்ணுங்காலை, அவளுண்ணுங்காலை, அவருண்ணுங்காலை, அதுவுண்ணுங்காலை, அவையுண்ணுங் காலை யென வரும்.

கருவி: அவன் எறியுங்கல், அவள் எறியுங்கல், அவர் எறியுங் கல், அது எறியுங்கல், அவையெறியுங்கல் என வரும்.

வினைமுதல்: உண்ணுமவன், உண்ணுமவள், உண்ணுமவர், உண்ணுமது, உண்ணுமவை என வரும்.

வினை: அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணு மூண், அதுவுண்ணுமூண், அவையுண்ணுமூண் என வரும்.

இனிச் செய்த என்பதற்கும் இவ்வாறே, யான் உண்ட இல்லம், நீயுண்ட இல்லம், அவன் உண்ட இல்லம் என்றாற்போல மூன்று இடத்திற்கும் இவ்விடத்து வாய்பாட்டு விகற்பங்களும் அறிந்து ஒட்டிக் கொள்க.

ஈண்டுச் செய்யும் என்பது முற்றும் எச்சமும் என இரு வீற்ற தாகும் சிறப்புடைமையிற் முற்கூறப்பட்டது. மற்றுச் செய்யும்

என்பது 'பல்லோர் படர்க்கை' என்புழிக் (வினை 30) கூறிற் றாகலின் ஈண்டுக் கூறவேண்டாவெனின், ஆண்டு முற்றாய நிலைமைக்குக் கூறியது; ஈண்டு அஃது எச்சமாகிய நிலைமைக் குக் கூறியது எனக் கொள்க. மற்று அதுஅவ்விரு நிலைமை யும் பெயரொடு முடிய மேல், அவ்வேறுபாடு அறியுமாறு என்னை யெனின், முற்றாய்ப் பெயர் கொண்ட வழிமற்றோர் சொல் நோக்காது செப்பு மூயக்காற் போல அமைந்து மாறும். எச்சமாய்ப் பெயர் கொண்டக்கால் அமையாது மற்றுமோர் சொல் நோக்கிற்றுப் போல நிற்கும் என்பது.

இனி முற்றாய வழி உண்ணும் என ஊன்றினாற்போல நலிந்து சொல்லப்படும் என்றும், எச்சமாய வழி ஊன்றாது நெகிழ முடிபு சொல்லப்படும் என்றும் கொள்க.

அஃதேல் 'பல்லோர் படர்க்கை' (வினை. 30) என்புழிக் கூறியது முற்றிற்கு என்றும் ஈண்டுக் கூறியது எச்சத்திற்கு என்றும் பெறுமாறு என்னை யெனின், ஈண்டுச் செய்த என்பத னோடு படுத்து முடிபு கூறினமையானும், ஆண்டு முற்றாயவழிக் கொள்ளாதன பற்றி விலக்கினமையானும் பெறுதும் என்பது.

மற்று, இம்முற்று நிலைமையையும் எச்ச நிலைமையையும் இரண்டிரண்டாகப் பகுத்து ஓதாதது என்னையெனின், பொருள் வேற்றுமை யல்லது வாய்பாட்டு வேற்றுமை யின்மையின் கூறா ராயினார் என்பது.

இவ்வறுவகைப் பெயருள்ளும் வினை முதற் பெயர் ஒழித்து ஒழிந்தவற்றிற்கெல்லாம் வினை முதற்பெயர் முன்வந்தல்லது பொருள் முற்றாது என்பதூஉம், வினைமுதற் பெயர் வருவழிப் பின்னின்ற எச்சத்தோடு எழுவாயாய் இயைகின்றதோ, பிற வேற்றுமையாய் இயைகின்றதோ என்னும் விகற்பமும், ஈண்டு வினைமுதற் பெயரே யன்றிப் பிற பெயரோடு முடிபாதற்குக் காரணம் 'வினையே செய்வது' என வினை யிலக்கணங் கூறிய வழி வினைச் சொற் குறிப்பாய்ப் பிறபெயரும் புக்கமையாது என்பதூஉம், அவ்வெட்டனுள் கடைக்கண் இரண்டும் ஒழிய மற்றை ஆறும் ஈண்டோதப் பட்டன என்பதூஉம் அறிந்து கொள்க.

யான் ஆடை யொலிக்கும் இல்லம், ஆடையொலித்த கூலி என்றாற் போல்வன முடியுமாறு என்னையெனின், அவ்வினை யிலக்கணத்துள் இன்னதற்கு இது பயன் என்னும் அவ்விரண் டெனப் பெயர் வகையாகலின் தன்னின முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும் என்பது.

''மற்றிந்நோய் தீரும் மருந்தருளாய் ஒண்டொடீ'' எனவும், ''நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்'' (கலித். 60) எனவும் வருவனவாமாறு என்னை யெனின், 'தீரும் மருந்து' என்பது 'தீர்தற்குக் காரணமாகிய மருந்து' என்றவாறு. 'காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த மருந்தாதற் றன்மைய' என்றவாறு. இவ்வாறு காரணப் பெயரும் காரியப் பெயருமாய் வருவன அவ்விலக்கணம் எட்டனுள்ளும் அடங்காமையின் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும்.

யான் செல்லும் ஊர், யான் போந்த ஊர் என்பன நிலப் பெயருள் அடங்கும்.

'ஊர் களிறு மிதித்த நீர்' எனவும், 'நூலாக் கலிங்கம்' எனவும், 'எள்ளாட்டின எண்ணெய்' எனவும், 'உண்ட எச்சில்' எனவும் வருவன செயப்படு பொருளின் விகற்பமாக்கி அதனுள் அடக்கிக் கொள்க. இவ்வாறு வரும் பிற பெயர் விகற்பங்களும் அறிந்து அடக்கிக் கொள்க. அவையாவன: தேரோடும் புறம், 'குண்டுசுனை பூத்த வண்டு படு கண்ணி' (முருகு 199) என்றாற் போல்வன.

இனிச் செய்யும் என்பது செய்யா நிற்கும் எனவும், செய்த என்பது செய்யா நின்ற எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமையும் தன்னின முடித்தல் என்பதனாற் கொள்க.

இனிச் செய்த என்பதன் குறிப்பாய் இன்ன, அன்ன, என்ன எனவும்; கரிய, செய்ய எனவும் வரும் இவையும் அதனாற் கொள்க.

ஆதி.

உ-ம் :	நிலம்:	படிக்கும் பள்ளி	படித்த பள்ளி
	பொருள்:	படிக்கும் புத்தகம்	படித்த புத்தகம்
	காலம்:	விழிக்கும் நேரத்தில்	விழித்த நேரத்தில்
	கருவி:	அறுக்கும் கத்தி	அறுத்த கத்தி
	வினைமுதல்:	பாடும் புலவர்	பாடிய புலவர்
	வினை:	அடிக்கும் அடி	அடித்த அடி.

சுப்.

சேனா வரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் இம் மூவர் மதமும் ஒன்று. உரையாசிரியர் (இளம்.) மதம் வேறு. உரையாசிரியர் மதத்தைச் சேனா வரையர், 'நிலம் முதலாயினவற்றைப் பெயரெச்சப் பொருள் என்னாது முடிக்குஞ்

சொல் எனின், அவ்வறு பொருட்கும் என்னாது அவ்வறு பெயர்க்கும் என்றோதுவார், ஓதவே, ''பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே'' (எச்ச. 37) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம் என்று மறுத்தார்.

இம்மறுப்பிற் கூறியவாறு அவ்வறு பெயர்க்கும்'' என்று ஆசிரியர் சூத்திரித்திருப்பின், நிலன், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை இச்சொற்களுக்கு மாத்திரம் செய்யும் செய்த இவ்விரண்டும் ஒத்த வுரிமைய என்றாகுமேயன்றி அப் பொருளைக் கொண்ட சொற்களுக்கும் அவை ஒத்த உரிமைய என்றாகா. 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' என்ற சூத்திரத்தால் பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடியும் என்று கூறப்பட்டமையாலும், அப்பெயர் நிலன் முதலாயினவற்றுள் ஒன்றாகவே இருக்க நிகழாமதலானும் இச்சூத்திரம் எற்றுக்கு எனின், வினையெச்சத்துள் சில தன் வினை முதலின் வினை கொண்டும், சில தன் வினைமுதலின் வினையானும் பிற வினை முதலின் வினையானும் முடியுமாறு போலப் பெயரெச்சம் தன் வினை முதலையே கொண்டு முடியுமோ என்ற ஐயம் நிகழ், அவ்வாறன்றி வினை முதல் போல, செயப்படு பொருள் முதலாயின வற்றொடும் முடிவு பெறலாம் என்று இச்சூத்திரம் உணர்த்துகின்றது என்னலாம்.

இச்சூத்திரத்தில் பொருள், வினை இவற்றிற்கு முறையே செயப்படுபொருள், செயல் என்பன பொருளாகும்.

பொன்-கோதண்டராமன்

முற்றுவினைக்கு முன்நின்று அவ்வினையைத் தழுவுகிற நிலன், செயப்படுபொருள், காலம், கருவி, எழுவாய், வினை ஆகிய உறுப்புகள் அம்முற்று வினையிலிருந்து பிறந்த பெயரெச்சத்திற்கு முடிப்புச் சொல்லாக வரும். முற்றுவினைக்கு முன் வரும் எட்டு உறுப்புகளும் பெயரெச்சத்தின் முடிப்புச் சொல்லாக வருவதில்லை போலும். அவர் காலத்துப் பயின்று வந்த முடிப்புச் சொற்களை மட்டும் குறித்துச் செல்கிறார் தொல்காப்பியர். இன்னதற்கு, இது பயன் என்னும் இரண்டும் முடிப்புச் சொல்லாக அவர் காலத்துப் பயின்று வாராமையான் அவ்விரண்டையும் விடுத்து, ஏனைய ஆறு உறுப்புகளை மட்டும் பெயரெச்ச முடிப்புச் சொற்கள் என்று குறித்துள்ளார் தொல்காப்பியர். கீழ்க்காணும் காட்டுகள் இந்த செய்தியை நன்கு விளக்கும்.

1. சாத்தன் பாட்டுப் பாடினான்
சாத்தன் பாடிய பாட்டு
2. யானை புலியைக் கொன்றது
புலியைக் கொன்ற யானை
3. புலி யானையைக் கொன்றது
புலி கொன்ற யானை
4. சிங்கம் குகையில் இருந்தது
சிங்கம் இருந்த குகை
5. அவன் ஒருநாள் வந்தான்
அவன் வந்த நாள்
6. அவன் புலியை வேலால் தாக்கினான்
அவன் புலியைத் தாக்கின வேல்
7. அரசர் புலவருக்குப் பரிசு கொடுத்தார்
அரசர் பரிசு கொடுத்த புலவர்
8. அவன் கூலிக்கு வேலை செய்தான்
அவன் வேலை செய்த கூலி

இறுதி இரண்டு தொடர்கட்கும் தொல்காப்பியம் விதி இடம் அளிக்கவில்லை. அரசர் பரிசு கொடுத்த புலவர், அவன் வேலை செய்த கூலி என்பன போன்ற தொடர்கள் தொல்காப்பியர் காலத்தில் வழுவாகவோ அல்லது அருகிய வழக்காகவோ இருந்திருக்கலாம். இப்போதும் அவை ஏனைய ஆறுபெயர்த் தொடர்களைப்போல அவ்வளவு வழக்கு வலிமையும் இலக்கண அமைவும் உடையதாகத் தோன்றவில்லை. ஆனால் சேனாவரையரும் வேறு சில உரையாசிரியர்களும் 'ஆடைகொடுத்த பார்ப்பான்,' 'ஆடையொலித்த கூலி' ஆகிய எடுத்துக்காட்டுகளைக்கொடுத்து இவையும் கொள்க என்று கூறிச் செல்கின்றனர். பெயரெச்சத் தொடரில் 'இன்னதற்கு' என்னும் வாய்பாட்டுக் கிளவியும் 'இது பயன்' என்பதும் முடிப்புச் சொல்லாக வரலாம் என்ற கருத்தில் சேனாவரையர் முதலிய உரையாசிரியர்கள் அக்காட்டுகளைத் தந்துள்ளனர்.

இவையன்றியும் இலையுதிர்ந்த மரம், நீர்வழியுங்கண் என்பனபோன்ற பெயரெச்சத் தொடர்களையும் நாம் காண்கிறோம். இங்கு 'இன்னதின்' (இன்னதினின்று) என்னும் வாய்பாட்டுக்கிளவி பெயரெச்சத்தின் முடிப்புச் சொல்லாக வந்துள்ளது.

மரத்தினின்று இலை யுதிர்ந்தது
இலையுதிர்ந்த மரம்
கண்ணினின்று நீர் வழியும்
நீர் வழியும் கண்

இவற்றைத் தொல்காப்பியனார் 'பெயரெச்சம்—இடம்' என்ற உறவு நிலையிலேயே அடக்கிக் கொண்டார் போலும். சேனாவரையர் இதில் விழிப்பாக இருந்து 'பழமுதிர்ந்தகோடு' 'பழமுதிருங்கோடு' என்ற காட்டுகளைக் காட்டிச் செல்கிறார். கல்லாடனார் 'மற்றிந்நோய் தீரு மருந்தருளாய்' என்ற ஒரு எடுத்துக்காட்டினைத் தருகிறார். இதில் 'இதனால்' என்னும் வாய்பாட்டுக் காரணக்கிளவி பெயரெச்சத்தின் முடிப்புச்சொல்லாக வந்துள்ளது.

இம்மருந்தினால் இந்நோய் தீரும்
இந்நோய் தீரும் மருந்து

'பெயரெச்சம்—காரணம்' எனவரும் இந்த உறவு நிலையைத் தொல்காப்பியர் 'பெயரெச்சம்—கருவி' என்ற உறவு நிலையில் அடக்கிக் கொண்டார் போலும். சேனாவரையர் 'நின்முகம் காணும் மருந்து' என்றொரு எடுத்துக் காட்டினைத் தருகிறார். சேனாவரையர் இதனைப் 'பெயரெச்சம்—வினை' என்ற உறவு நிலையில் அடக்க முயல்கிறார். அது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. 'காணும் மருந்து' என்ற தொடரில் உள்ள எச்சத்திற்கும் பெயருக்கும் உள்ள உறவு நிலையை இப்போது என்னவென்று கூற வியலவில்லை.

'வினையே செய்வது' என்ற நூற்பாவில் தொல்காப்பியர் முற்றுவினைக்கும் அதற்கு முன்நிற்கும் பெயர்களுக்கும் உள்ள உறவு நிலைகளைப் பற்றித்தான் பேசுகிறாரே தவிர வினை நிகழ்ச்சிக்குள்ள காரணங்களைப் பற்றிப் பேசவில்லை. உலகில் நிகழும் வினைநிகழ்ச்சிகட்குரிய காரணங்களைக் கண்டுபிடித்துச் சொல்வது ஒருஇலக்கணப்புலவனுடைய கடமையல்ல. அன்றியும் வினை, செய்வது முதலாய எட்டும் வினைக்குக் காரணம் என்று கொண்டால் வினையே அந்த வினைக்குக் காரணம் என்பது பொருட் சிறப்பில்லாத கூற்றாக முடியும். இலக்கணப் புலவன் ஒரு முற்றுத்தொடரில் உள்ள வினைக்கும் பெயர்கட்கும் உள்ள தொடரியல் உறவுகளை எடுத்து விளக்கவேண்டியது அவனுக்குக் கடமையாகும். தொல்காப்பியப் பெருந்தகையார் இந்த கடமையைத்தான் 'வினையே செய்வது' என்ற நூற்பாவில் மிகச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார். இங்குக் காணும் எட்டு உறுப்பு

களில் முற்றுத் தொடரின் முற்றுவினை பெயரெச்சமாக மாறும் போது முதல் ஆறு உறுப்புகள் மட்டுமே பெயரெச்சத்தின் முடிப்புச்சொல்லாக வரலாம் என்பது தொல்காப்பியர் கருத்து. இந்தச் செய்தியைத்தான் 'நிலனும் பொருளும்' என்ற நூற்பா நமக்குத் தெரிவிக்கிறது (இலக்கண உலகில் புதிய பார்வை—தெரிநிலை பெயரெச்சம் பக். 81—85 (1973)

செய்யும்—முடிபுவேறுபாடு

230. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி*
முதற்கண் வரைந்த மூவிற்று முரித்தே (36)

(அவற்றொடு வருவழிச் செய்யும் என்கிளவி
முதற்கண் வரைந்த மூஈற்றும் உரித்துஏ)

ஆ. மொ: இல.

When the word 'seyynm' qualifies those (six) it belongs to those three (third person in epiecene pulural. second person and first person—which are not allowed before to be qualified by it)

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், செய்யும் என நின்ற தற்கு வேறோர் முடிபு தெரிந்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை: செய்யும் என்னும் சொல் மேற் சொல்லப்பட்ட நிலம் தொடக்கத்து ஆறனொடு வருவழி மேல் வரைந்தோதப் பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மைகளையும் கொண்டு முடியும், எ-று.

மேல் (வினை.28) முற்றாய் நின்றநிலை விலக்கினார் ஆண்டு: ஈண்டு எச்சமாய் நின்றநிலைமைக்கண் ணாயின் அவ் விடங்கட்கு உரித்தென்றே யெய்துவித்தார் என்பது.

வ-று: நிலம்: யான் உண்ணும் இல்லம், யாம் உண்ணும் இல்லம், நீயுண்ணும் இல்லம், நீயிர் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் இல்லம் எனவரும். ஒழிந்த பொருள் முதலாயின ஐந்தையுங் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

* செய்யும் கிளவி—தெய். பாடம்.

சேனா.

இ-ள் : நிலம் முதலாகிய பொருளோடு வருங்கால் செய்யும் என்னும் சொல், விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையென்னும் மூவகைக்கும் உரித்தாம், எ-று.

உரித்தாய் வருமாறு 'எஞ்சிய கிளவி' (வினை.28) என்னும் சூத்திரத்திற் காட்டினாம்.

அவற்றொடு வருவழி யெனவே, செய்யும் என்னும் சொல் அப்பொருண்மைக் குரித்தாயும் உரித்தன்றியும் வரும் இருநிலைமையுய் உடைத்து என்பது பெறுதும். அவற்றோடு வருநிலைமை பெயரெஞ்சு கிளவியாம்; அவற்றொடு வாரா நிலைமை முற்றுச் சொல்லாம்.

அஃதேல், அது முற்றுச் சொல்லாதற்கண்ணும் பெயரெஞ்சு கிளவியாதற்கண்ணும் வேற்றுமை யென்னையெனின், ஏனை முற்றிற்கும் ஏனையெச்சத்திற்கும் வேற்றுமையாவதே யீண்டும் வேற்றுமையாம் என்க. முற்றுச் சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்றுமையாதெனின், பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொடராதற்கேற்கும் வினைச்சொல் முற்றாம்; பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்; இது தம்முள் வேற்றுமை யென்க. அஃதேல், [1]உண்டான் என்பது சாத்தன் என்னும் பெயரவாவியன்றே நிற்பது; தாமே தொடராம் என்றது என்னையெனின், அற்றன்று; உண்டான் சாத்தன் என்றவழி, எத்தை என்னும் அவாய் நிலைக்கண் சோற்றை என்பது வந்தியைந்தாற்போல, உண்டான் என்றவழி யார் என்னும் அவாய்நிலைக்கண் சாத்தன் என்பது வந்தியை

1. உண்டான் என்பதில், உண் என்னும் பகுதியால் தொழிலும் ஆன் என்னும் ஈற்றான் திணையும்பாலும் அறியப் படுதலின்' தொழிலும் அதனையியற்றும் கருத்தாவும் சேர்ந்திருத்தலின் எழுவாய் பயனிலை சேர்ந்த ஒரு தொடர்போல் முடிந்துள்ளமை காணலாம். செய்த என்னும் எச்சத்தில் செய்என்பதால் வினை தெரிந்ததே தவிரச் செய்தவன் (வினைமுதல்) தெரியவில்லை. அதனால் அது செய்தவனை எஞ்சியிருக்கிறது. இதுவே முற்றுக்கும் எச்சத்திற்கும் வேறுபாடு. இக்கருத்தை நச்சினார்க்கினியர் மறுக்கு மாற்றை அவர் உரையிற் காண்க.

வதல்லது, அப்பெயர் பற்றியல்லது நிற்றலாற்றா நிலைமைத் தன்று அச்சொல் என்பது. இவ்வேற்றுமை விளங்க ஆசிரியர் முற்றுச்சொல் என்றும், எச்சம் என்றும் அவற்றிற்குப் பெயர் கொடுத்தார்.

தெய்.

எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : செய்யும் என்னும் சொல் நிலம் முதலாகிய பொருளொடு வருவழி, முற்பட வரையப்பட்ட பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையும் ஆகிய மூன்று வேறுபாட்டினும் உரித்து, எ-று.

உ-ம் : நிலம்—உண்ணும் இல், உண்ட இல். பொருள்—உண்ணுஞ் சோறு, உண்டசோறு. காலம்—உண்ணும் காலம், உண்ட காலம். கருவி—உண்ணும் கலம், உண்டகலம். வினை—உண்ணும் ஊண், உண்ட ஊண். வினைமுதல்மூன்றிடத்து ஐந்துபாலுமாகி ஒன்பது வகைப்படும். உண்ணும்யான், யாம்; நீ, நீயிர்; அவன், அவள், அவர், அது, அவை எனவரும். செய்த என்பதும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. கருவி என்பதனால் மூன்றாவதற்கு ஓதிய காரணமும், ஏதுவும் கொள்க.

வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், 'நிலம் பூத்தமரமிசை நிமிர்பாலும்' என்றவழி 'நிலம் பொலிவு பெற்ற மலர்' என்று பொலிதற்கு ஏது வினைகண் வந்தது. 'யானோ கொடுக்கும் பார்ப்பான்' எனவும் 'ஒலிக்கக் கூலி' எனவும் நான்காவதற்கோதிய கொள்வதனோடும் பயனோடும் வருமால் எனின், கொடுக்கும் பார்ப்பான் என்றவழிக் கொடைத்தொழில் பார்ப்பான் மேல் ஏறுதலின், யானோ கொடுப்பக் கொள்ளும் பார்ப்பான் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் அதுவினை முதலாம். ஒலிக்கக் கூலி என்றவழி, கூலியாவது பயனாதலின் அதற்குப் பொருள் உரைக்குங்காலை ஒலித்தற்குக் கூலி என உரைக்க வேண்டுதலின், ஆண்டு அதற்கு என்பது புலப்படாது நின்றதல்லது கூலி என்பதனோடு பொருத்தம் இன்று என்க. இவையிற்றை மரூஉ என்று கொள்ளப்படும்,

அஃதற்றாக, வினையெச்சம் பெயரெச்சம் என்பன தனி மொழியாதலின்றி, வினையோடும் பெயரோடும் முடிதலான்,

அவற்றைத் [1]தொடர்மொழி கூறுகின்ற வழிக்கூறல் வேண்டும் எனின், ஈண்டுச் செய்து செய்யூ எனவும், செய்யும் செய்த எனவும் தனிமொழியிலக்கணமே கூறிற்று என்க. அன்றியும் முடிக்குஞ் சொல்லும் ஈண்டு ஓதப்பட்டதாயினும், உண்டு வந்தான் என்ற வழிச் சாத்தன் என்று ஒரு பெயரோடல்லது முற்றுப் பெறாமையானும் உண்ட சாத்தன் என்ற வழி வந்தான் என ஒரு வினையோடல்லது முற்றுப் பெறாமையானும் இவையும் தனிமொழிப்பகுதி எனின் அல்லது, வாக்கியமாகி முற்றி நிற்கும் தொடர்மொழியாகாவென்க.

நச்.

இது, செய்யும் என்பதற்கு ஓர் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ-ள்: அவற்றொடு வருவழி—அந்நிலம் முதலிய பொருள்களோடு வருங்கால், செய்யும் என்கிளவி—செய்யும் என்னுஞ் சொல், முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்து—மேல் விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை என்னும் மூவகைக்கும் உரித்து, எ—று.

'அவை எஞ்சியகிளவி' (வினை. 28) என்பதனுள் காட்டினாம்.

ஈண்டுக் கூறிய விதி எச்சத்திற்கும் ஆண்டு விலக்கியது முற்றிற்கும் என்று உணர்க. இனி அவற்றிற்கு வேறுபாடு கூறுதும்.

இருதிணைக்கும் பொதுவாகிய செய்யும் என்னும் சொல், உண்ணும் என நின்றுழித் தானே தன் தொடர்ப்பொருள் உணர்த்தல் ஆற்றாது நின்று, தன்னை, அவன் அது என்னும் வினை முதல் வந்து திணையும் பாலும் விளக்கத் தன் தொடர்ப் பொருள் உணர்த்தி, எடுத்தல் ஓசையான் மற்றோர் சொல் நோக்காது, செப்புமூயினாற் போல அமைந்து மாறி நிற்றல் முற்றிற்கு இலக்கணம். அச்செய்யும் என்னும் சொல் வாழும் இல் எனப்படுத்தல் ஓசையால் கூறிய வழி, அம்முடிக்குஞ் சொல்லான் அமையாது, நன்று என மற்றும் ஓர் சொல் நோக்கி நிற்றல் எச்சத்திற்கு இலக்கணம்.

---

1. வினையெச்சத்தொடர் பெயரெச்சத் தொடர் கூறும் எச்சவியலில் கூறுக எனின்

இனி அம் ஈறு முதலிய முற்றுச் சொற்கள் எங்ஙனம் முற்றி நிற்கும் எனின், 'எத்திறத்தானும் பெயர் முடிபினவே' (எச்ச. 33) என்பதனான் வினை முதலோடு முடிந்து ஈண்டுக் கூறிய வாறே முற்றி நிற்கும் என்க. பெயர் பற்றி நில்லாது தாமேயும் தொடர்ப்பொருள் உணர்த்தி முற்றி நிற்கும் எனச் சேனா வரையர் கூறினாரால் எனின், 'சாத்தற்குச் சோறிடுக' என ஒருவன் ஏவியவழி அவ்வேவப்பட்டான் அவற்கு அதனை ஈத்து வந்து உண்டான் என்றவழி, யான் கூறிய சாத்தன் உண்டான் என வினை முதல் தொடர்ப்பொருள் அவன் மனத்தின்கண் உணர்த்தி நிற்பதல்லது நன்மக்கள் குழீஇய வழி, ஒருவன் வந்து நின்று 'உண்டான்' என்றவழி, அவ்வினை முதல் தொடர்ப் பொருள் உணர்த்தாது பால்மாத்திரம் உணர்த்தி நிற்கும் என்பது கருதி 'எத்திறத்தானும் பெயர் முடிபினவே' (எச்ச. 33) என்றார் ஆகலின் அது பொருத்தம் இன்று என்க.

கல்.

என்-எனின், செய்யும் என்பதற்கு இன்னும் முடிபுவேற்றுமை கூறுதல் நுதலிற்று,

இ-ள்: மேற்கூறிய அறுவகைப் பெயரோடு முடிந்து வரு மிடத்துச் செய்யும் என்னும் சொல் ''பல்லோர் படர்க்கை'' (வினை. 28) என்றதன்கண் வரையப்பட்ட மூன்று கூற்றின் கண்ணும் உரிமையுடைத்து, எ—று.

மூன்று கூறாவன பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையும்.

அவையாவன : அவர் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் சோறு, அவர் ஓதும் காலை, அவர் எறியும் கல், உண்ணுமவர் வந்தார், அவருண்ணும் ஊண்-இவை பல்லோர் படர்க்கை.

நீயுண்ணும் இல்லம், நீயிருண்ணும் இல்லம்; நீயுண்ணும் சோறு, நீயிர் உண்ணும் சோறு; நீஓதுங்காலை, நீயிர் ஓதுங் காலை; நீ எறியும் கல், நீயிர் எறியும் கல்; உண்ணும் நீ வந்தாய், உண்ணும் நீயிர் வந்தீர்; நீ உண்ணும் ஊண், நீயிர் உண்ணும் ஊண் — இவை முன்னிலை.

யான் உண்ணும் இல்லம், யாம் உண்ணும் இல்லம், நாம் உண்ணும் இல்லம்: யான் உண்ணும் சோறு, யாம் உண்ணும் சோறு, நாம் உண்ணும் சோறு; யான் உண்ணுங்காலை, யாம் உண்ணுங்காலை, நாம் உண்ணுங்காலை: யான்எறியுங்கல்,

யாமெறியுங்கல், நாம் எறியுங்கல்; உண்ணும்யான் வந்தேன், உண்ணும்யாம் வந்தேம், உண்ணும் நாம் வந்தேம்; யான் உண்ணும் ஊண், யாம் உண்ணும் ஊண், நாம் உண்ணும் ஊண் —இவை தன்மை.

யானும் நீயும் உண்ணும் இல்லம், யானும் அவனும் உண்ணும் இல்லம், யானும் நீயும் அவனும் உண்ணும் இல்லம் என்றாற் போல வரும் வாய்பாடும் ஒட்டிக் கொள்க.

இதனாற் சொல்லியது செய்யும் என்பதற்கு முற்றாயவழி விலக்கிய இடங்கள் எசசமாய வழி வரும் என இறந்தது காத்த தாயிற்று.

வென்.

இது செய்யும் என்பதற்ரு ஓர் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ-ள் : செய்யும் என்னும் சொல் நில முதலாகிய அறு வகைப் பொருளோடும் கூடி வருங்கால், முன்னர் விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை மூவகைக்கும் உரிய தாய் வரும், எ-று.

உ-ம்: உண்ணும் அவர், உண்ணும் நீ, உண்ணும் யான் என மூவகைக்கும் உரியதாய் வந்தவாறு காண்க.

ஆதி.

முன் கூறிய ஆறு வகைப் பெயரோடும் வரும் செய்யும் என்னும் எச்சம் முன்னர் தழுவாததாக நீக்கப்பட்ட மூன்று வகைக்கும் உரியதாம்.

விளக்கம். செய்யும் வினைமுற்று பலர்பாலுக்கும் தன்மை முன்னிலைக்கும் சேராது என்று முன்னர்க் கூறப்பட்டது; ஆயின் அது பெயரெச்சமாக வரும் போது அவற்றுடனும் சேரும்.

படிக்கும் மாணவர் — பலர்பாலுடன்
எழுதும் யான் சோர்வடையேன் — தன்மையுடன்
ஆடும் நீ அமைதி கொள் — முன்னிலையுடன்
வீற்று — பிரிவு, வகை.

சுப்.

இச்சூத்திரவுரையில் முற்றுச் சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்றுமை கூறுமிடத்துச் சேனாவரையர் "பிறிதோர் சொல் லோடு இயையாது தாமே தொடராதற் கேற்கும் வினைச்சொல்

முற்றாம்'' என்றார். இதனை நச்சினார்க்கினியர் பின்வரும் சொற்றொடரால் மறுத்தனர் :- ''பெயர்பற்றி நில்லாது தாமேயும் தொடர்ப் பொருளுணர்த்தி முற்றி நிற்கும் எனச் சேனாவரையர் கூறினாரால் எனின், சாத்தற்குச் சோறிடுக என ஒருவன் ஏவியவழி, அவ்வேவப்பட்டான், அவற்கு அதனை ஈத்து வந்து 'உண்டான்' என்ற வழி, யான் கூறிய சாத்தன் உண்டான் என வினை முதற் றொடர்ப் பொருள் அவன் மனத்தின் கண் உணர்த்தி நிற்ப தல்லது, நன் மக்கள் குழீஇய வழி ஒருவன் வந்து நின்று, உண்டான் என்ற வழி, அவ் வினை முதற்றொடர்ப் பொருளுணர்த்தாது பால் மாத்திரம் உணர்த்தி நிற்கும் என்பது கருதி 'எத்திறத்தானும் பெயர் முடிபினவே' என்றாராகலின் அது பொருத்தமின் றென்க''.

சேனாவரையர் பிறிதோர் சொல்லோ டியையாது என்றா ரல்லது பெயர்பற்றி நில்லாது என்று கூற வில்லை. மேலும் வழங்கியன் மருங்கின் குன்றுவ குன்றும் என்னும் சூத்திர வுரையில் 'குன்றத் தகுவனவாவன செய்யப்படு பொருளும் ஏற்பதும் பயனுமாம்' என்று அவரே கூறினமையின் வினை முதலோடு தான் வினைமுற்று தொடராதற்கேற்கும் என்பதே அவரது கொள்கை என்பதில் ஐயமில்லை.

தே. ஆண்டியப்பன்.

நிலம் முதலாகிய பொருளொடு செய்யும் என்னும் சொல் வரும் போது, விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை என்னும் மூவகைக்கும் உரியதாகும். (எ-டு) படிக்கும் நான், ஓடும் நீ, இசைக்கும் அவர்கள். செய்யும் என்னும் வினை முற்று பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மையில் வருவ தில்லை யென்று முன்னர்க் கூறினார். இப்போது பெயரெச்சம் என்னும் நிலையில் அவ்விடங்களுக்கும் உரியதாகும் என்கிறார்

அடிப்படைத் தொடரில் இருந்து பெயரெச்சத் தொடரை வருவித்துக் காட்டுவர் மாற்றிலக்கணத்தார். அடிப்படைத் தொடரில் செய்யும் என்பது அமையாதபோது பெயரெச்சத் தொடரில் எவ்வாறு வரும் என்று வினா எழலாம். 'நீஓடும்' என்பதிலிருந்து 'ஓடும் நீ' என்று உருவாக இயலாது. எனவே 'நீஓடுதி' என்ற தொடரே அடிப்படை யாதல் இயல்பு. 'ஓடுதி' என்பது 'ஓடும்' என்று மாறுவது எவ்வாறு? அதற்கேற்ற உத்திகள் என்ன? நீக்கம் (delition) ஆக்கம் (addition) இட மாற்றம் (replacement) என்னும் முறைகள் எவ்வகையில் இங்கு உதவும் என்று ஆராய்வது நல்லது.

(காப்பியர் நெறி — சொல்லியல், பக். 97).

சிறப்பு விதி.

231. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு
மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா (37)

(பெயர் எஞ்சு கிளவியும் வினைஎஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரிரியா).

ஆ. மொ: இல.

The adjectival participle and the adverbial participle though used in the negative sense, do not lose the function of participle.

பி. இ. நூ:

நேமி. சொன். 45

சாற்றும் பெயர்வினை எச்சங்கள்...
எதிர்மறுத்துச் சொன்னாலும்...மெய்ந்நூல் நெறி.

முத்து. வி. 37

பெயரும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்
பொருள்நிலை திரியாது எச்சக் கிளவி.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தியதன் மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

உரை: பெயரெச்சம் வினையெச்சம் என்று கூறப்பட்ட இருதிறத்தவும் எதிர்மறுத்துச் சொல்லினும் [1]தன் பொருள் நிலைமையிற் றிரியா, எ—று.

வ—று: உண்ணுஞ் சாத்தன் என்பது; உண்ணாசாத்தன் என்பதற்கும் அதுவே; பிறிதில்லை.

இனி வினையெச்சம்: உண்டுவந்தான் என்பது, உண்ணாது வந்தான் எனவரும். பிறவும் இவ்வாறே எதிர் மறுப்பன ஒட்டிக் கொள்க.

மற்று, முற்றுச்சொல், உண்பன் சாத்தன் என்புழி, உண்ணான் சாத்தன் என எதிர் மறுப்பினும் முற்றுச்சொல் இயல்பிற் றிரியாதாகலின், அதற்குக் கூறுக எனின், அற்றன்று,

---

1. தன்பொருண்மையிற் றிரியாமையைச் சேனாவரையர் கூறுமாற்றான் அறிக.

முற்றுச்சொற்களை யெல்லாம் ஈறுபற்றியோதினா ராகலின் எதிர்மறையும் ஆண்டே யடங்கும்.

பெயரெச்ச வினையெச்சங்களையாயின் செய்து செய்யூ எனவும், செய்யும் செய்த எனவும் அவை தம்மை எடுத்தோதி னார்; அவற்று மறை பிறவா கொல்லோ என்று கருதினும் கருதற்க என்றற்கு இது கூறப்பட்டது என்பது.

சேனா.

இ—ள்: பெயரெச்சமும் வினையெச்சமும் செய்தற் பொருளவன்றி அச்செய்தற் பொருண்மை எதிர் மறுத்துச் சொல்லினும் அவ்வெச்சப் பொருண்மையிற் றிரியா, எ—று.

பொருணிலையாவது தம் எச்சமாகிய பெயரையும் வினை னையும் கொண்டல்லது அமையாத நிலைமை.

என்சொல்லியவாறோ எனின், செய்யும் செய்த எனவும், செய்து செய்யூ செய்பு எனவும் பெயரெச்சமும் வினையெச்சமும் விதி வாய்பாட்டான் ஓதப்பட்டமையான், ஆண்டுச் செய்யா, செய்யாது என்னும் எதிர்மறை வாய்பாடு அடங்காமையின் அவை எச்சமாதல் பெறப்பட்டின்று. அதனால் அவையும் அவ்வெச்சப் பொருண்மையிற் றிரியாது பெயரும் வினையும் கொள்ளும் என எய்தாதது எய்துவித்த வாறு.

உ-ம்: உண்ணாவில்லம், உண்ணாச்சோறு, உண்ணாக் காலம், வனையாக்கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணாவூண் எனவும்; உண்ணாது வந்தான், உண்ணாமைக்குப் போயினான் எனவும் வரும்.

உண்ணா என்பது உண்ணும் உண்ட என்னும் இரண்டற்கும் எதிர்மறையாம். உண்ணாத என்பதும் அது. உண்ணாது என்பது உண்டு, உண்ணூ, உண்குபு என்பனவற்றிற்கு எதிர் மறை.

உண்ணாமைக்கு என்பது, உண்ணியர், உண்ணிய, உணற்கு என்பனவற்றிற்கும், உண்ண எனச் செயற்கு என்பதுபட வரும் செயவென் எச்சத்திற்கும் எதிர்மறையாம். உண்ணாமை, உண்ணாமல் என்பனவுந்தாம் அதற்கு எதிர்மறையாம். பிறவும் எதிர்மறை வாய்பாடு உளவேற் கொள்க.

உண்டிலன், உண்ணாநின்றிலன், உண்ணலன், உண்ணான் என முற்றுச் சொல்லும் எதிர்மறுத்து நிற்குமாகலின், பொருணிலை திரியாதென அதற்கோதாராயிற் றென்னை

யெனின், விதிவினைக்கும் எதிர்மறை வினைக்கும் பொதுவாக ஈறுபற்றி ஓதியதல்லது விதிப்பொருளவாகிய வாய்பாடுபற்றி ஓதாமையின் ஆண்டுக் கட்டுரையில்லை யென்க.

தெய்.

இருவகையெச்சத்திற்கும் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பெயரெச்சவினைச் சொல்லும், வினையெச்ச வினைச்சொல்லும் எதிர் மறுத்து மொழியினும் தத்தம் பொருள் நிலைமையிற் றிரியா, எ—று.

உ-: உண்ணாச்சாத்தன், உண்ணாத சாத்தன், எறியாவேல் என்பன செய்யும் செய்த என்னும் இரண்டினும் வரும் மறை. பிறவுமன்ன. உண்ணாது வந்தான். மழை பொய்யாமையின் மரம் வறந்தன—இவை வினையெச்சமறை. பிறவுமன்ன.

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும் எதிர் மறுத்து வரும் என்றோதி, முற்றுச்சொல் எதிர்மறுத்துவரும் என ஓதாதது என்னையெனின், பெயரெச்சமும் வினையெச்சமும் ஓதுகின்றுழி உட்பட்ட சொல்லான் ஓதுதலின், எதிர்மறை ஓதல் வேண்டிற்று. முற்றுச்சொற்கு ஈற்றெழுத்தோதினாமையான் அவைதாமே மறுத்த வாய்பாட்டிற்கும் ஈறாதலின் ஓதல் வேண்டாவாயின. அஃதற்றாதல் அ ஆ வ என்னும் சூத்திரத்தானும் (வினை, 19) அறிக.

நச்.

இஃது இருவகை எச்சத்திற்கும் எதிர்மறை வினையும் முடிவாம் என்கின்றது.

இ-ள்: பெயர் எஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்—பெயரெச்சமாகிய சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், எதிர்மறுத்து மொழியினும்—செய்தல் தொழிலினை எதிர் மறுத்துச் சொல்லினும், பொருள்நிலை திரியா—தத்தம் எச்சமாகிய பெயரையும் வினையையுங் கொண்டு அல்லது அமையாத நிலைமையின் வேறுபடா, எ-று.

உ-ம்: உண்ணா இல்லம், உண்ணாச்சோறு, உண்ணாக் காலம், வளையாக்கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணாவூண் என வரும்.

உண்ணா என்பது, உண்ணும், உண்டஎன்னும் இரண்டற்கும் மறை. உண்ணாத என்பது உண்ட என்பதற்கு மறை.

உண்ணாது என்பது உண்டு, உண்ணூ, உண்ணா உண்குபு என்பனவற்றிற்கு மறை. [1]இதனானே செய்பு என்பது இறந்த காலம் உணர்த்துதல் பெற்றாம்.

இனி, செய்தென என்பது வினைமுதலோடு வருவழி 'மழை பெய்யாது அறம் பெறாதாயிற்று' எனச் செய்து என்பதன் மறையே வருதலும், அது பிறவினையோடு வருவழி 'மழை பெய்யாமல் மரம் குழையாதாயிற்று' என இறந்தகாலம் உணர்த்தும் செய்து என் எச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய் வருதலும் கொள்க. இவ்விரண்டு எச்சத்திற்கும் செய்யாமை என்பதூஉம் மறை.

இனி, உண்ணாமைக்கு என்பது, உண்ணியர், உண்ணிய, உண்ணற்கு என்பனவற்றிற்கும், உண்ண என எதிர்காலம் உணர்த்தும் செய என் எச்சத்திற்கும் மறையாம். இனி, செயின் என்பதற்கு 'மழை பெய்யாவிடின் அறம் பெறாது, 'மழை பெய்யாவிடின் மரம் குழையாது' எனப் பிற சொல்லால் மறை வரும். இனி, உண்ணாதபின், உண்ணாதமுன் உண்ணாக்கால், உண்ணாக்கடை, உண்ணாவழி, உண்ணாவிடத்து எனவும்வரும்.

இனி, கொள்ளாது ஒழிவான் என [2]ஏனையவற்றுற்கும் வரும். இனி, கரியசாத்தற்குச் செய்ய சாத்தன் எனவும், நல்ல சாத்தற்குப் பொல்லாச் சாத்தன் எனவும் வரும் பெயரெச்சக் குறிப்புமறை விகற்பமும் அறிக. இனி, சோறு உண்டாயிருந்தது, சோறு ஆவதாயிருந்தது என்பனவற்றிற்குச் சோறு இன்றி, சோறு அன்றி என வினையெச்சக் குறிப்புமறை ஆதலும்கொள்க. "எதிர் மறுத்து மொழியினும் தத்த மரபிற், பொருள் நிலை

---

1. செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சத்துக்கு மறையாக வரும் உண்ணா என்பது, செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துக்கும் மறையாக வருதலின் செய்பு என்பது இறந்தகாலம் உணர்த்தும் என்பது கொள்க.
2. ஏனைய- வான், பான், பாக்கு ஈறுகள். இம்மூன்றும் எதிர்காலம் உணர்த்துவன ஆதலின செய என்னும் வாய்பாட்டின் மறையாகிய 'செய்யாமைக்கு' என்பதையே இவற்றின் மறையாகக் கொள்ளலாம். அம்மூன்றும் உண்ணா தொழிவான் வந்தான், உண்ணாதொழிபான் வந்தான், உண்ணா தொழிபாக்கு வந்தான் எனப் பிற சொல்லடுத்து வருதலும் உண்டு.

திரியா வேற்றுமைச் சொல்லே'' (வேற். ம. சூ. 24) என்று வேற்றுமை எதிர்மறுத்து வரும். எனவே அவ்வேற்றுமை ஏற்ற சொல் முற்றுச் சொல்லே ஆதலின் முற்றுச் சொற்கும் மறை வரும் என்பது கூறினாராயிற்று. இனி, செய்யும் என்னும் முற்றிற் கும் உண்ணான் அவன், உண்ணாது அது என வரும் மறை ஒன்றென முடித்தலால் கொள்க.

கல்.

என்-எனின், பெயரெச்சமும் வினையெச்சமும் தனித்தனி முடியுமாறு கூறிவிட்டு இனி, அவ்விரண்டற்கும் உடன் எய்துவது ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பெயரெச்சமாகிய சொல்லும், வினையெச்சமாகிய சொல்லும் தொழிலினை எதிர்மறுத்துச் சொன்னவிடத்தும் அவ்வச் சொல்லாதற் பொருண்மை நிலையில் வேறுபடா, எ.று.

உ-ம்: உண்ணும் சாத்தன் என்பது, உண்ணாச்சாத்தன் என வரும். செய்த என்பதற்கு இதுவே மறை. கரிய சாத்தற்குச் செய்ய சாத்தன் எனவும், நல்ல சாத்தற்குப் பொல்லாச் சாத்தன் எனவும் தீய சாத்தன் எனவும் வரும் பெயரெச்சக் குறிப்பு மறை விகற்பமும் அறிக. இம்மறைக்கண் உண்ணாச் சாத்தன் என ஆகார வீறாயே நிற்கும். இவை பெயரெச்சம்.

இனி, வினையெச்சம் உண்டு வந்தான் என்பது, உண்ணாது வந்தான் என வரும். இவ்வெச்சம் சோறு உண்டாயிருந்தது என வும், சோறு ஆவதாயிருந்தது எனவும் ஓர் சொல்லடுத்த போது சோறின்றி எனவும் சோறன்றி எனவும் வேறு குறிப்பு வாய் பாட்டதாம் எனக் கொள்க. செய்யூ செய்பு என்பனவற்றிற்கும் இதுவே மறை.

இனிச் செய்தென என்பது முதல்வினையோடு முடிந்தவழி இம்மறையானே வரும். மழை பெய்தென மரங்குழைத்தது எனப் பிறவினையாய வழிச் செய்தென் எச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய், மழை பெய்யாமல் மரம் குழையாதாயிற்று என வரும்.

இனிச் செய்யியர் செய்யிய என்பன இரண்டற்கு மறைபடு வழித் தன்வினை பிறவினை என்னும் இருவழியும் செயவென் எச்சத்தின் மறையானே முடியும். மழை பெய்யாமல் எழுந்தது, மழை பெய்யாமல் மரம் குழையாதாயிற்று. இனிச் செய்யிய என் பதற்கும் இவ்வாறே கொள்க.

செயின் என்பதற்குச் சொல்தன்னான் மறையின்றி மழை பெய்யாவிடின் அறம் பெறாது, மழை பெய்யாவிடின் மரம் குழை யாது எனப் பிறசொல்லானே மறையாய் வரும்போலும்.

உண்ண என்பதற்கு உண்ணாமல் எனவும், உண்ணாமை எனவும், அல்லும் ஐயும் என இரு ஈற்றதாம். உண்ணாமே என்பதோ எனின், அதுவும் மரூஉ என்க. இனிப் பெரிய ஓதினும் என்பதற்குச் சிறிய ஓதினும் எனவரும், குறிப்புமறை விகற்பமும் அறிக. செயற்கு என்பதற்கு உணற்கு வந்தான், உண்ணாமல் வந்தான் என இதன் மறையே மறையெனக் கொள்க. உண்ணா தொழிவான் எனப் பிறவாய்பாடாயும் வரும்.

இனிப் பின் என்பது உண்ணாதபின் எனவரும். முன் என்பது உண்ணாதமுன் என வரும்:

கால் என்பது உண்ணாக்கால் எனவரும்.

கடை என்பது உண்ணாக்கடை எனவும், வழி என்பது உண்ணாதவழி எனவும், இடத்து என்பதுஉண்ணாதவிடத்து என வும் வரும்.

பான் பாக்கு என்றாற்போல்வன உண்ணாதொழிவான் என்றாற்போல வேறுவாய்பாட்டாய் வரும். மற்று மறை விகற்பம் உள்ளனவும் அறிந்து கொள்க.

இதனால் சொல்லியது இவ்வாறு பெயரெச்சமும் வினை யெச்சமும் எதிர்மறுத்து வரும் என்பது போதரக் கூறினமையின் அதனுள் அடங்கிற் றென்பது......வழியும் பெயரெச்சம் எனப்படு தலும் பெயரோடு முடிதலுடைய என்றாயிற்று.

அஃதேல் முற்றுச் சொல் மறுத்த வழியும் முற்றென்பது எற்றாற் பெறுதும் எனின், வேற்றுமை யிலக்கணத்துள் 'எதிர்மறுத்து மொழியினும்' என்பதனுள் அவ்வேற்றுமை யினை எதிர்மறுத்து வரும் என்பது போதரக் கூறினமையின் அடங்கிற் றென்பது. மற்று இவ்வெச்சமும் அதன் பால் அடங்கா தோ எனின், எடுத்தோத்தில் வழியது இலேசும் உத்தியும் என்க.

அஃறிணை வினையுள் 'அஆ' என்று ஆகார வீற்னை யோதினமையானும் மறையுமாம் என்பது பெறுதும்.

முற்றுச் சொல் எதிர்மறுத்த வழி உண்டான் என்பதற்கு உண்ணான் என ஈறு வேறு படாது வருதலானும் உண்ணுமுன் என்பதற்கு உண்ணாதமுன் என்றும், உண்ண என்பதற்கு உண்ணாமல் என்றும் எச்சங்கள் ஈறு வேறுபட்டு வருதலானும் அவை இயல்பு என்று, விகாரமுடைமையின் இவ்வெச்சங்களை

எடுத்தோதினார் என்றலும் ஒன்று. முற்றுச்சொல் மறை விகற்பமெல்லாம் அவ்வீற்றுள்ளே காட்டியவாறு கண்டு கொள்க.

இனிச் செய்யும் என்பது முற்றாயவழி அதன் எதிர்மறை ஆண்டுக் கூறும் உயர்திணை அஃறிணைப் பன்மை மேல் வினையாய் 'உண்ணும் அவன்' என்பதற்கு 'உண்ணாவவன்' எனவும், 'உண்ணும் அது' என்பதற்கு உண்ணாதது எனவும் வரும் என்று அறிக.

மற்று இவ் விரவுவினை வினைமுற்றாய் அவற்றில் தனக்கேற்ற வினையில்லன, ஆண்டுணர்த்தும் உயர்திணைஅஃறிணை வினையான் மறைபடுமா றறிந்து கொள்க.

இடைப்பிறவரல்.

232. தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொ லாயினு மிடைநிலை வரையார் (38)

(தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச் சொல் ஆயினும் இடைநிலை வரையார்).

ஆ. மொ: இல.

No word is forbidden from standing between the participles and the words following them if the context is suitable.

பி. இ. நூ:

நேமி. சொ. 45.

சாற்றும் பெயர்வினை எச்சங்கள்—ஏற்ற பொருள்
குன்றாச் சில சொல் இடை வந்து கூடியுடன்
நின்றாதல் மெய்ந்நூல் நெறி.

நன். 356.

(உருபு முற்று) ஈரெச்சம் கொள்ளும்
பெயர் வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன.

இல. 329. ,, ,, ,,

முத்து. வி. 36.

தத்தம் குறைவாம் இருவகைப் பெயருடன்
இயையும் குறிப்பிடை எச்சொல் ஆயினும்
இடைநிலை வரையார் என்மனார் புலவர்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இன்னும் அவ்வெச்சங்கட்கு முடிபு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : இவ்விருவகை யெச்சத்திடையும் பிற சொற்களும் புகுதப் பெறும், அவ்வெச்சத்திற்குப் பொருத்தமுடையன தாம், எ-று.

வ—று: ''உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே'' (புறம்) என்புழி, இன்றி என்னும் வினையெச்சத்திற்கு முடிபு 'உண்க' என்னும் வியங்கோட்சொல்; இனிப் 'புற்கை' என்பது இடைநிலை.

இனிப் பெயரெச்சத்திற்குதாரணம்: அடுஞ்செந்நெற்சோறு, அட்ட செந்நெற்சோறு என்புழி 'செந்நெல்' என்பது இடைநிலை. பிறவும் அன்ன.

[1]'சிவணுங் குறிப்பின் எச்சொல்லாயினும் இடைநிலை வரையார்' எனவே, சிவணாக் குறிப்பின் வரையப்படும் என்பதாம்.

சேனா.

இ—ள்: தத்தம் எச்சமாகிய வினையோடும் பெயரோடும் இயையும் குறிப்பையுடைய எச்சொல்லாயினும், அவ்வெச்சங்கட்கும் அவற்றான் முடிவனவாகிய தமக்கும் இடைநிற்றல் வரையார், எ—று.

உ—ம்: உழுது சாத்தன் வந்தான், உழுது ஏரொடு வந்தான் எனவும்; கொல்லும் காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை எனவும் வரும்.

'சிவணுங்குறிப்பின் வரையார்' எனவே, சிவணாக் குறிப்பின் வரைப என்பதாம். சிவணாக்குறிப்பினவாவன, ஒருதலையாக எச்சத்தோடியைந்து நில்லாது,நின்ற சொல்லொடுந்தாமேயியைந்து [2]கவர்பொருட் படுவன. உண்டு விருந்தொடு வந்தான், 'வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி' என்றவழி, விருந்தொடு உண்டு என வினையெச்சந்தோடும் இயைதலிற் பொருள் கவர்க்கும்;

---

1. சேனாவரையர் விளக்கம் பார்க்க.
2. கவர் பொருள் படுவன—இதுவோ அதுவோ என ஐயம் கொள்ளுமாறு (கவர்த்த) இரட்டித்த பொருள்படுவன.

வல்லம் எறிதல் நல்லிளங்கோசர்க்கும் ஏற்குமாகலின் ஆண்டும் பொருள் கவர்க்கும்; அன்ன சிவணாக் குறிப்பினவாம்.

'எச்சொல்லாயினும்' என்றதனான் 'உழுதோடி வந்தான்' ''கவளங் கொள்ளாக் களித்த யானை'' என எச்சமும் இடைநிலையாதல் கொள்க.

சாத்தன் உண்டு வந்தான், அறத்தை யரசன் விரும்பினான், உண்டான் வந்த சாத்தன் என ஏனைத் தொடர்க்கண்ணும் பிற சொல் இடைநிற்றல் ஒக்குமாயினும், எச்சத் தொடர்க்கு இடை நிற்பனவற்றின்கண் ஆராய்ச்சியுடைமையாற் கூறினார்.

தெய்.

இதுவும் இருவகையெச்சத்திற்கும் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பெயரெச்சமும் வினையெச்சமும் தம்மை முடிக்கும் சொல்லோடு சிவணும் குறிப்பினையுடைய யாதானும் ஒரு சொல்லாயினும் இடைநிற்றலை நீக்கார் ஆசிரியர், எ-று.

உ-ம்: கொல்லும் காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை—இவை பெயரெச்ச இடைக்கிடப்பு. அவற்றுள் இடைக் கிடந்த சொல் யானை என்பதனோடு சிவணுதலின் அமைக்கப் பட்டது. பிறவுமன்ன,

உழுது ஏரொடு வந்தான், உழ ஏரொடு வந்தான்—இவை வினையெச்ச இடைக்கிடப்பு. இவற்றுள் இடைக்கிடந்த சொல் முடிக்குஞ் சொல்லோடு சிவணுதல் அமைதியாயிற்று. பிறவு மன்ன.

இனிச் சிவணாதன: 'உண்டசாத்தன் தந்தை' என்பது உண்ட என்பதற்குச் சாத்தன் தந்தையை முடிபாகக் குறித்தானாயின் சிவணாதாயிற்று [1]வினையெச்சத்துட் சிவணாதன வந்தவழிக் கண்டு கொள்க.

நச்.

இஃது அவ்வெச்சங்களின் இடைநிகழும் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

---

1. உண்டு விருந்தொடு வந்தான் என்பர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும். 'உப்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே' என்பதைக்காட்டுவர் கல்லாடனார். இ.நு வினையெச்சக் குறிப்பு.

இ-ள்: தத்தம் எச்சமொடு சிவணுங்குறிப்பின் எச்சொல் லாயினும்—தத்தம் எச்சமாகிய வினையொடும் பெயரொடும் பொருள் இயையும் கருத்தினையுடைய எவ்வகைச் சொல்லா யினும், இடைநிலை வரையார்—அவ்வெச்சத்திற்கும் அவற்றாள முடிவனவாகிய தமக்கும் இடைநிற்றலை நீக்கார் கொள்வர் ஆசிரியர், எ-று.

உ-ம்: உழுது சாத்தன் வந்தான், உழுது ஏரொடு சாத்தன் வற்தான்; கொல்லும் காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை எனவரும்.

ஒரு தலையாக எச்சத்தோடு இயையாது, முடிக்கப்படும் சொல்லோடு இயைந்து கவர் பொருள்படுவன சிவணாக் குறிப் பினவாம். அவை 'உண்டு விருந்தொடு வந்தான்', 'வல்லம் எறிந்த நல்லிளங் கோசர் தந்தை, மல்லல் யானைப்பெருவழுதி' என்புழி, 'விருந்தொடு உண்டு' எனவும், 'வல்லம் எறிந்தகோசர்' எனவும் கவர் பொருள்பட்டு வரும்

'எச்சொல்லாயினும்' என்றதனால் 'உழுது ஓடி வந்தான்', 'கவளம் கொள்ளாக் களித்த யானை' என எச்சமும் இடைநிலை யாதல் கொள்க.

'அறத்தை அரசன் விரும்பினான்', 'உண்டான் பசித்த சாத்தன்' என ஏனைத் தொடர்க்கண்ணும் பிறசொல் இடை நிற்றல்,ஒன்றென முடித்தலாற் கொள்க.

கல்.

என்-எனின், இதுவும் அல்வெச்சங்களிடை நிகழும் முடிபு வேற்றுமையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: முன்கூறிய பெயரெச்சமும் வினையெச்சமும் தத்தம் எச்சமாகிய பெயரொடும் வினையொடும் பொருள் இயையும் கருத்தினையுடைய பெயர் முதலிய எவ்வகைச் சொல்லாயினும் அம்முடிதற்கு இடைநிற்றலை நீக்கார் ஆசிரியர்; எனவே கொள்வர், எ-று.

வரையார் என்றமையின் இதுவும் ஓர் மரபு வழுவமைதி நீர்மைத்து என்பது போந்தது.

சிவணுங்குறிப்பு என்றமையின் சிவணாக்குறிப்பின வரையப் படும் என்பது.

உ-ம்: அடுஞ்செந்நெற் சோறு, அட்ட செந்நெற்சோறு என வரும். இவை பெயரெச்சம். 'உப்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே' என்பது வினையெச்சம்.

சிவணாக் குறிப்பினது, 'வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் தந்தை, மல்லல் யானைப் பெருவழுதி'' என்பது.

இனி ஒன்றென முடித்தல் என்பதனான் 'உண்டான் பசித்த சாத்தன்' என்றாற் போலவரும் முற்று இடைக்கிடப்பும் கொள்க.

செய்யும் — ஈறுகெடுதல்

233. அவற்றுட்
செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர
மவ்விட னறித லென்மனார் புலவர். (39)

(அவற்றுள்
செய்யும் என்னும் பெயர்எஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அ இடன் அறிதல் என்மனார் புலவர்.)

ஆ. மெ: இல.

Of them
the word 'seyyum' — the adjectival participle drop the final 'u' with its consonant. The scholars say that such places (where the 'u' drops out) can be found out.

பி. இ. நூ:

நன். 341.
செய்யுமென் எச்ச ஈற்றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம் உந்தாகலும் முற்றேல்
உயிரும் உயிர் மெய்யும் ஏகலும் உளவே.

இல. 244.
செய்யுமென் எச்ச ஈற்றுயிர்மெய் சேறலும்
செம்யுளுள் உம் உந்து ஆகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலு மாம்பிற

தொன். 118.
உம்மீற்ற எச்சத் தீறும் ஈற்றயல்
உயிரும் உயிர்மெய்யும் ஒழிதலாம் செய்யுட்கு
உம் உந் தாதலும் ஒக்கும் என்ப.

முத்து. வி. 38.
நன். 341-ஆம் சூத்திரமே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அவ்வெச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்குப் படுவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும் இடம் அறிக வழக்கினகத்து, எ—று.

வ-று: 'வாவும் புரவி' என்பது, 'வாம்புரவி' என்றாயிற்று.

'அவ்விடனறிதல்' என்றதனான் '':அம்பலூரு மவனொடு மொழிமே'' (குறுந். 57) என்புழி 'மொழியும்' என்பது'மொழிம்' என்றாயிற்று. மெய்யொழிந்து கெடுதலும் உடைத்து. அது' 'சாரனாடவென் றோழியுங் கலுழ்மே'' என்புழிக் 'கலுழும்' என்பது 'கலுழ்ம்' என்றாயிற்று. பிறவும்அன்ன.

சேனா.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட எச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரந் தன்னானூரப்பட்ட மெய்யொடுங் கெடுமிடம் அறிக, எ—று.

'கெடுமிடமறிக' என்றது, அவ்வீற்றுமிசை உகரம் யாண்டுங் கெடாது வரையறுக்கவும் படாது சான்றோர் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வந்தவழிக் கண்டு கொள்க என்றவாறு.

உ-ம்: வாவும் புரவி, போகும்புழை என்பன ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங்கெட, வாம்புரவி, போம்புழை என நின்றன. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

'செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும்' எனவே, செய்யும் என்னும் முற்றுச் சொற்கு ஈற்றுமிசைஉகரம் மெய்யொடும் கெடும், மெய்யொழித் துங்கெடும் என்பதாம்.

உ-ம்: அம்பலூரு மவனொடு மொழிமே''(குறுந். 51) ''சார னாடவென் றோழியுங் கலுழ்மே'' எனவரும். பிறவுமன்ன.

தெய்.

செய்யும் என்னும் சொல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்டவற்றுள் செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கும், உம்மையாற் செய்யும் என்னும் முற்றுச்

சொற்கும் ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெடும், அது கெடூஉம் இடம் அறிந்து கொள்க, எ-று.

'வாம் புரவி வழுதி' என வரும். ‡இது பெயரெச்சம். "அம்பலூரு மவனொடு மொழிமே". (குறுந். 51) — இது முற்றுச்சொல். 'மெய்யொடும் கெடும்' என்ற உம்மையால் மெய் யொழியவும் கெடும் என்று கொள்க. "சாரனாடவென் றோழியுங் கலுழ்மே" என வரும். பிறவு மன்ன.

நச்.

இது செய்யும் என்பதற்கு ஈறு கெடுமாறு கூறுகின்றது.

இ-ள் : அவற்றுள் — முற்கூறிய இருவகை யெச்சங்களுள், செய்யும் என்னும் பெயர் எஞ்சு கிளவிக்கு — செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு, ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும்— ஈற்றெழுத்தின் மேல் நின்ற உகரம் தன்னான் ஊரப்பட்ட மெய் யொடும் கெடும், அவ்விடன் அறிதல் என்மனார் புலவர் — அக் கெடும் இடம் அறிக என்று கூறுவர் புலவர், எ-று.

உ-ம் : "வாவும் புரவி வழுதியோ டெம்மிடை" (யா. வி. சூ மாலை மாற்றே-உரை) யான் போகும் புழை என்பன, 'வாம்புரவி', 'போம்புழை' என நின்றன,

'செய்யும் என்னும்பெயரெஞ்சுகிளவிக்கு, ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும்' எனவே, செய்யும் என்னும் முற்றுச் சொற்கு ஈற்று மிசை உகரம் மெய்யொடும் கெடும், மெய் யொழித்தும் கெடும் என்பது பெறுதும்.

உ-ம்: "அம்பலூரு மவனொடு மொழிமே." சாரல் நாட என் தோழியும் கலுழ்மே". எனவரும்.

கல்.

என்-எனின், இவ்வெச்சங்களுள் செய்யும் என்னும் பெய ரெச்சத்திற்கு ஈறு வேறுபட்டுக் கெடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்கூறிய எச்சங்களுள் செய்யும் என்னும் பெய ரெச்சத்திற்கு ஈன்றின்மேல் நின்ற உகரம் தன்னால் பற்றப்பட்ட

---

* இங்குச் சில சொற்கள் பொருள் தொடர்பின்றிக்காணப் பட்டன எனக் கரந்தைத் தமிழ்ச் சங்கப்பதிப்பு (1929) குறுப்பிடுகின்றது. அச்சொற்கள் யாவை என்பது குறிப் பிடப்படவில்லை.

மெய்யொடும் கெட்டு முடியும். அவ்வாறு கெடும் இடங்களை அறிக என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்: வாவும் புரவி வழுதி, யான்போகும் புழை என்பன வாம்புரவி, போம்புழை எனவரும்.

இனி உருவு திரை என்றாற் போல ஈறுதான் கெடுவனவும் உளவால் எனின் அது வினைத்தொகையென மறுக்க.

'சாரல் நாட என்தோழியும் கலுழ்மே' என அவ்வுகரந்தான் ஏறிய மெய்யொழியக் கெட்ட இடம் உளவால் எனின், 'அவ் விடன் அறிதல்' என்ற மிகை வாய்பாட்டான் ஒரோவழி மெய் யொழியக் கெடுதலும் உண்டு என்பது கொள்ளப்படும்.

இனிச் 'செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு' என்றா ரன்றே? மற்று அது, 'அம்பலூரும் அவனொடு மொழிமே' (குறுந். 51) எனமுற்றாய வழியும் வந்ததால் எனின், அதனையும் இவ்விலேசினாற் கோடலும் ஒன்று. இதனையும் உதாரணமாகக் கூறியது உரையிற் கோடலால் என்றலும் ஒன்று.

இனி 'வாவும்புரவி' என உகரம் கெடாது வருதற்கு விதி யாது எனின், 'மெய்யொடுங் கெடுமே' என்ற உம்மை எதிர் மறையாகலான் மெய்யொடுங்கெடாது நிற்றல் பெரும்பான்மை யென்பதூஉம் பெறப்படும். ஏற்புழிக்கோடல் என்பதனான் 'ஆடு நாகம்' என்றாற் போல்வழிக் கெடாமையும் கொள்க.

செய்தென் எச்சம்

234. **செய்தெ னெச்சத் திறந்த கால**
மெய்திட னுடைத்தே வாராக் காலம் (40)

(செய்துஎன் எச்சத்து இறந்த காலம்
உய்துஇடன் உடைத்தே வாராக் காலம்)

ஆ. மொ: இல.

The past tense of the adverbial participle 'seythu' may have the chance of being completed in future tense

பி. இ. நூ:

முத்து. வி. 39

செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்தவும் பெறூஉம் எதிர்பொழு தென்ப.

இளம்.

இசசூத்திரம் என்னுதலிற்றோவெனின், காலவழுக்காத்தல் நுதலிற்று.

உரை: இறந்த காலத்துச் செய்தென் எச்சம் [1]ஒழிந்த நிகழ் காலமும் எதிர்காலமும் கொள்வழியுடைத்து, எ—று.

வ-று: செய்தென் எச்சம் நிகழ்காலத்திற்கு ஏற்றது, 'கொடி யாடித் தோன்றும்' என்பது. என்னை? தோற்றமும் ஆட்டமும் உடன் நிகழுமாகலின் என்பது.

இனி உழுதுவருஞ் சாத்தன், உண்டுவருஞ்சாத்தன் என்புழிச் செய்தென் எச்சம் எதிர்காலத்திற்கு ஏற்றது. பிறவுமன்ன.

சேனா.

இ-ள்: செய்து என்னும் வினையெச்சத்தினது இறந்தகாலம் வாராக் காலத்தை எய்துமிட முடைத்து, எ—று.

ஈண்டுச் 'செய்தென் எச்சத்து இறந்தகாலம்' என்றது முடிபாய் வரும் வினைச்சொல்லால் உணர்த்தப்படும் தொழிற்கு அவ்வெச்சத்தால் உணர்த்தப்படுந் தொழில் முன் நிகழ்தலை. அது வாராக்காலம் எய்துதலாவது, அம்முன்னிகழ்வு சிதையாமல் அவ்வெச்சம் எதிர்காலத்து வருதல்.

உ-ம்: நீயுண்டு வருவாய், உழுது வருவாய் எனச் செய்தென் எச்சம் பொருள் சிதையாமல் எதிர்காலத்து வந்தவாறு கண்டு கொள்க.

'எய்திடனுடைத்தே வாராக் காலம்' என்றதனான், உண்டு வந்தான், உழுது வந்தான் என அவ்வெச்சம் இறந்த காலத்து வருதல் இலக்கணம் என்பதாம்.

இறந்த காலத்துச் சொல் எதிர்காலத்து வந்ததாயினும் அமைக எனக் காலவழு அமைத்தவாறு.

---

1. வாராக்காலம் என்பதற்கு நிகழ்காலமும் எதிர்காலமும் எனக் கொண்டனர் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோர். சூத்திரத்தில் இறந்தகாலம் எனச் சொல்வந்தமையின் வாராக்காலம் என்பதற்கு (நிகழ்வு எதிர்வு எனச் சொல்வாராத) எதிர்காலத் தைக் கொண்டனர்.
சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் எதிர்காலமே கொண்டனர்.

தெய்.

ஒரு சார் வினையெச்சத்திற்கு வரும் காலமரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: செய்து என் எச்சத்துக்கண் வரும் இறந்த காலம் எதிர்காலத்தைப் பொருந்தும் இடனுடைத்து, எ—று.

என்றது, இறந்த காலத்தாற் கூறப்படும் வினையது நிகழ்ந் துழிக் கூறுதலன்றி, நிகழாத முன்னும் அவ்வாய்பாட்டான் வரப் பெறும் என்றவாறாம். நாளை உழுது வருவன், இனித் தவம் செய்து சுவர்க்கம் புகும் எனவரும்.

நச்.

இஃது இறந்தகாலச் சொல் ஏனைக்காலச் சொல்லோடு இயையும் என்கின்றது.

இ—ள்: செய்து என் எச்சத்து இறந்த காலம்—செய்து என்னும் வினையெச்சத்தினது இறந்த காலம் தன் இறந்த காலத்தினை நீங்காது நின்று, வாராக் காலம் எய்து இடம் உடைத்து—முடிக்குஞ் சொல்லின் எதிர்காலத்தைப் பொருந்தும் இடம் உடைத்து, எ—று.

உ—ம்: நீ உண்டு வருவாய் என்பது நாளை உண்டு வருவாய் என்னும் பொருள் உணர்த்தவும், வருதல் தொழிலுக்கு உண்டல் தொழில் முன் நிகழ்ந்து, ஆண்டும் தன் இறந்த காலமே உணர்த் திற்றாம்.

கொடி ஆடித் தோன்றும் என்புழித் தோற்றமும் ஆட்டமும் உடன் நிகழ்தலின் செய்து என்பது நிகழ் காலத்திற்கும் உரித்து ஆதல் வாராக்காலம் எனவே அடங்கும். 'வறனீந்தி நீ செல்லும் நீளிடை நினைப்பவும்' (கலி. 3) என்பதும் அது.

ஒன்றென முடித்தலால் செய்யூ செய்பு என்பனவற்றிற்கும் ஒழிந்த எச்சங்கட்கும் இம்மயக்கம் கொள்க.

கல்.

எ—எனின், செய்து என்னும் வினையெச்சத்துக் கால மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று,

இ—ள்: இறந்த காலத்தையுடைய செய்து என்னுய் வினை யெச்சம் தன் இறந்த காலத்தினை நோக்க வாராதவாகிய இயல் பினையுடைய எதிர்காலத்தினையும் நிகழ்காலத்தினையும் பொருந்தும் கூற்றினை யுடையது, எ—று.

'இறந்த காலத்துச் செய்தென் எச்சம்' என மொழிமாற்றிக் கொள்க. கிடந்தவாறும் வாராக்காலம் என நிகழ்காலமும் அடங்கிற்று.

உ—ம்: உழுது வருவான் சாத்தன் என்பது. இது வருவான் என்னும் எதிர்கால வினை கொண்டமையான், முன் உழுது என நின்ற இறந்தகாலம் உழுவது மேல் என எதிர் காலத்தாயிற்று.

கொடியாடித் தோன்றும் என்பது அத்தோற்றமும் ஆட்டமும் உடன்நிகழ்தலான் நிகழ்காலம் ஆயிற்று.

ஒன்றென முடித்தல் என்பதனான் செய்யூ, செய்பு என்பன வற்றிற்கும் இவ்வாறே மயக்கம் கொள்க. மற்றும் அவ்வினை யெச்ச வாய்பாடுள்ளும் காலம் மயங்குவன உளவேல் அவையும் இவ்வாற்றானே கொள்க.

இச்சூத்திரம் கால வழுவமைதி. இது ஒரு சொல் மயக்கம்.

செய்யுமென் எச்சம்.

235. **முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை**
யெம் முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும் (41)

(முந் நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம் முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய் நிலைப் பொதுச் சொல் கிளத்தல் வேண்டும்.)

ஆ. மொ: இல.

All the words which denote objects existing for all time-past, present and future-must have the verbs of present tense which has the capacity of being common to all tenses.

பி. இ. நூ:

நன். *383.*

முக்காலத் தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே.

இல. *303.* ,, ,, ,,

முத்து. வி. *40.* ,, ,, ,,

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், ஒரு சார் வினைச் சொற்கெல்லாம் பொதுவாயதோர் கால முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: மூன்று காலமும் [1]புலப்படச் சொல்லாப் பாட்டியல் பினவாகிய எவ்வகைப் பொருள்களையும் நிகழுங்காலத்துப் பயின்று மூன்று காலத்திற்கும் பொதுவாகிய செய்யும் என்னும் சொல்லாற் சொல்லுக, எ-று.

வ-று : மலைநிற்கும், யாறொழுகும் என வரும்.

சேனா.

இ-ள்: மூன்று காலத்தும் உள்தாம் இயல்பையுடைய எல்லாப் பொருளையும் நிகழ்காலத்துப் பொருள் நிலைமையுடைய செய்யும் என்னும் சொல்லாற் கிளக்க, எ—று.

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை யெம்முறைப் பொருளுமாவன: மலையது நிலையும், ஞாயிறு திங்களது இயக்கமும் முதலாயின. அவற்றை இறந்தகாலச்சொல்லானும், எதிர்காலச் சொல்லானும் ஏனை நிகழ்காலச் சொல்லானும் சொல்லாது, இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்து மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யும் என்னும் சொல்லாற் சொல்லுக என்றவாறு.

[2]'பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்' எனவே முற்றானும் பெயரெச்சத்தானும் கிளக்க என்பதாம்.

உ-ம்: மலை நிற்கும், ஞாயிறு இயங்கும், திங்கள் இயங்கும் எனவும்; "வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதரும், தண்கடல் வையத்து" (பெரும்பாண். 17) எனவும் வரும்.

நிகழ்காலச் சொல்லாயினும் [3]ஒருகாற் பொதுவாதலுடைமையாற் 'பொதுச் சொல்' என்றார்.

---

1. புலப்படுமாறு சொல்லமாட்டாத வாய்பாட்டியல் பினவாகிய என்க. எந்த வாய்பாடும் மூன்று காலத்துக்கும் பொதுவாகப் புலப்படுத்தும் வாய்பாடாக இல்லை. அதனால் ஏதேனும் ஒரு வாய்பாடே கொள்ள வேண்டுதலின் நிகழ்கால வாய்பாடாகிய செய்யும் என்பது கொள்ளப்பட்டது என்க.
2. செய்யும் என்முற்று என்றோ செய்யுமென் எச்சம் என்றோ சொல்லாமல் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும் எனப் பொதுப்படக் கூறியவதனால் முற்றேனும் எச்சமேனும் கொள்க.
3. ஒருகால்—முக்காலத்தும் ஒத்து நடக்கும் பொருளைச் சொல்லுங்கால்.

நிகழ்காலச் சொல், இறந்த காலமும் எதிர்காலமும் உணர்த்துதல் வழுவாயினும் அமைக என அமைத்தவாறு.

தெய்.

இதுவும் அது.

இ-ள்: [3]யாதானும் ஒரு முறைமையினையுடைய வினைச் சொல்லும் மூன்று காலமுந் தோன்றும் இயற்கைக்கண், நிகழுங் காலத்துப் பொதுவினைப் பொதுச் சொல்லாற் கிளத்தல் வேண்டும், எ—று.

வினைச்சொல் எல்லாம் காலம் காட்டுதலின், காலங்காட்டாத பொதுப்பட்ட வினையை நிகழ்காலத்துக்கண் எல்லாப் பாற்கும் பொதுவாகி வரும் செய்யும் என்னும் சொல்லாற் சொல்லுக என்றவாறாயிற்று. ஒருவன் உண்பானாக, அகம் புக்கான், அவனது வாயிற்கண் நின்றானை, யாது செய்கிறான் என வினாயவழி, அவன் செய்கின்ற உண்டற்காலம் உணராமையின் உண்டான் எனவுமாகாது, உண்பான் எனவுமாகாது, ஆயிடை 'உண்ணும்' என்க.

நச்.

இது நிகழ்காலச் சொல் ஏனைக் காலங்களையும் உணர்த்தும் என்கின்றது.

இ-ள்: முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எம்முறைச் சொல்லும்—மூன்று வகைப்பட்ட நிலைமையினையுடைய காலத்தும் உளதாம் இயல்பையுடைய எவ்வகைப்பட்ட பொருளையும், நிகழுங்காலத்து மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்—நிகழ்காலத்துக்கு உரித்தாய் நின்றும் ஏனைக் காலங்களையும் உள்ளடக்கி நிற்கும் பொருள் நிலைமையினையுடைய செய்யும் என்னும் சொல்லால் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன், எ—று.

முக்காலத்திற்கும் பொதுவாய் முற்றும் எச்சமுமாய் நிற்றலை நோக்கிப் 'பொதுச் சொல்' என்றார்.

உ-ம்: மலை நிற்கும், தீச்சுடும், ஞாயிறு இயங்கும், திங்கள் இயங்கும் எனவும்; ''வெங்கதிர்க் கனலியொடு மதிவலம் திரிதரும், தண்கடல் வரைப்பு'' (கலி 3) எனவும் வரும். தீச்சுடும் என்றால் பண்டும் இன்றும் மேலும் சுடும் என்பதனை ஒப்ப

3. இவ்வுரை மற்றையோர் உரையினும் மாறுபட்டது.

விளக்கியவாறுகாண்க. 'மெய்ந்நிலை' என்றது, ஏனை நிகழ்காலச் சொல்லோடு ஒவ்வாமையை உணர்த்துதற்கு.

கல்.

என்-எனின், எல்லாவினைச் சொற்களும் பொருளது உண்மையியற்கை கூறும்வழிச் செய்யும் என்னும் வினைச் சொல் லோடு காலம் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மூன்று வகைப்பட்ட நிலைமையினையுடைய காலத் தும் தோன்றும் இயல்பினையுடைய எவ்வகைப்பட்ட பொருளை யும் நிகழ் காலத்தினைத் தனக்குக் காலமாகவுடைய பிற காலத் தினையும் பொதியும் பொருள் நிலைமையினையுடைய செய்யும் என்னும் சொல்லினால் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன், எ-று.

உ-ம்: மலை நிற்கும், யாறு ஒழுகும், தீச்சுடும் என்னும் இவை.

தீ எத்தன்மைத் தென்றால் அதன் தன்மை எக்காலத்தும் உளவாதலிற் பண்டு சுட்டது; இன்றுஞ் சுடுகின்றது; மேலும் சுடுவது என மூன்று காலத்தாலும் கூற வேண்டுவதனை நிகழ் காலத்தால் சொல்ல அவையெல்லாம் கூறியவாறாயிற்றெனக் கொள்க.

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கையெம் முறைச் சொல்' என்றவையான் ஒருபொருள் ஒருகாலத் தொழிதலன்றி எக்காலத்தும் நிகழும் தொழிலியல்பு கூறும்வழியது இம்மயக்கம் எனக்கொள்க.

சொல் என்றதற்குப் பெயர்ப் பொருளை என்க. இனிச்சொல் லெனினும் படும். மெய்ந்நிலை என்றதனாற் பின் நிகழ்காலச் சொல்லோடு ஒவ்வாது மூன்று காலத்தையும் பொதியும் நிலைமையது இச்செய்யும் என்னும் சொல் என்பது பெறப் பட்டது. இதுவும் காலமயக்க அமைதி.

[1]ஈண்டு மயங்கியது எச்சொல்லோ எனின், நெருப்புச்சுடும் என்றவழி சுட்டது சுடா நின்றது சுடுவது என்று மூன்று காலச் சொல்லும் செய்யும் என்பதனால் சொல்லப்படுதலின் அவை மயங்கின எனப்படும். இச்சுடும் என்ற சொற்றானும் தன் நிகழ்

---

1. செய்யும் என்னும் நிகழ்காலச் சொல்லில் இறப்பும் எதிர்வும் மயங்கின என்றும், நிகழ்காலச்சொல் மற்றைக் காலங்களுடன் மயங்கின என்றும் கொள்ளலாம்.

காலத்ததாய் நிற்றலை விட்டு ஒரு சொல்லுதற்கண்ணே மூன்று காலமும்பட நிற்றலின் அதுவும் மயங்கிற்று எனப்படும். இதுவும் ஒரு சொல்மயக்கம்.

காலமயக்கம் விரைவுப் பொருளில்

236. வாராக் காலத்து நிகழுங் கரலத்து
மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர் (42)

(வாரார்ச் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓர்ஆங்கு வரூஉம் வினைச்சொல் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்)

ஆ. மொ: இல.

The scholars say that the use of past tense in the plase of future and present tenses will indicate the hastiness of action

பி. இ. நூ:

நன். 384.

விரைவினும்...பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி

இல. 304.

விரைவினும்...முக்காலமும் ஏற்புழி மயங்கும்

முத்து. வி. 41.

நிகழ்வினும் எதிர்வினும் வரும்வினைக்கிளவி
இறப்பினும் உரைப்பர் விரைவிற் பொருள

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் வினை யெச்சத்திற்குப் பொதுவாதியதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

உரை; எதிர்காலத்துப் பொருளையும் நிகழ்காலத்துப் பொருளையும் இறந்த காலத்துப் பொருளாகச் சொல்லுக விரைவு நிலைமைக்கண், எ-று.

வ—று: சோறு வேவவிருந்து பாணியாநின்றுழிப் புறத்தான் ஒருவன் போகவேண்டுங் குனறப்பொருட்டாக, 'இன்னும் உண்டிலையோ, போதாயோ?' என்றக்கால், 'உண்டேன், [1]போந்தேன்' என்னும் உண்ணாதிருந்தானே யெனினும்; உண்டேன், போந்தேன் என்னும் உண்ணாநின்றானே யெனினும். பிறவும் அன்ன.

சேனா.

இ—ள்: எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வரும் வினைச்சொற்பொருண்மை இறந்தகாலத்தாற் சொல்லுதல் விரைவுப் பொருளையுடைய, எ—று.

உ—ம்: [2]சோறு பாணித்தவழி உண்ணாதிருந்தானனப் போகல் வேண்டும் குறையுடையான ஒருவன், 'இன்னும் உண்டிலையோ' என்றவழி, 'உண்டேன், போந்தேன் என்னும்; உண்ணாநின்றாலும் 'உண்டேன், போந்தேன்' என்னும்; ஆண்டு எதிர் காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் உரியபொருளை விரைவுபற்றி இறந்த காலத்தால் கூறியவாறு கண்டு கொள்க.

தொழில் இறந்தன வல்லவேனும் சொல்லுவான் கருத்து வகையான் இறந்தனவாகச் சொல்லப்படுதலின், 'குறிப்பொடு கிளத்தல்' என்றார். எதிர் காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும் நிகழ்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும் என இரண்டாகலான் [3]'விரைந்த பொருள' என்றார். இதுவும் கால வழுவமைதி.

தெய்.

இதுவுமது.

இ—ள்: வருங்காலத்தும் நிகழ்காலத்தும் வரும் வினைச் சொல்லாகிய சொல், இறந்த காலத்துக் குறிப்பொடு தோன்றல் விரைந்த பொருள என்மனார் புலவர், எ—று.

ஒருவனை 'உண்டாயோ, போதாயோ' என்றவழி, உண்ணாதவனும் 'உண்டேன், போந்தேன்' என்னும்; உண்கின்

---

1. போந்தேன்—வந்தேன்.
2. சோறுபாணித்தவழி—சோறிடக்காலம் தாழ்த்தவழி
3. விரைந்த பொருள என்றார்—விரைந்த பொருள எனப் பன்மையாற் கூறினார். பொருள—பொருளையுடையன.

றானும் அவ்வாறு சொல்லும். இவ்வாறு விரைவு குறித்து நின்ற வாறு கண்டு கொள்க. ஒரும், ஆங்கு அசைகள்.

நச்.

இது விரைவின்கண் எதிர்வும் நிகழ்வும் இறப்பொடு மயங்கும் என்கின்றது.

இ—ள்: வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரும் வினைச் சொற்கிளவி—எதிர்காலத்தும் நிகழ் காலத்தும் ஒருபடியாக வருகின்ற வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையை, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்—தொழில் இறந்தின்றேனும் சொல்லுவான் கருத்து வகையால் தொழில் இறந்தனவாகக் கருதிக் கூறல், விரைந்த பொருள என்மனார் புலவர்—விரைவுப்பொருண்மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர், எ—று.

உ—ம்: சோறு பாணித்தவழி உண்ணாதிருந்தானைப் போதல் வேண்டும் குறையுடையான் ஒருவன் 'இன்னும் உண்டி லையோ' என்றவழி, 'உண்டேன், போந்தேன்' என்னும். உண்ணாநின்றானும் 'உண்டேன், போந்தேன்' என்னும்.

கல்.

என்—எனின், வினைச்சொல் எல்லாவற்றானும் விரைவுப் பொருட்கண் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலத்தொடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வரு கின்ற வினைச் சொல்லாகிய சொல்லின் பொருண்மையை இறந்த காலமாகக் கருதிக் கூறுதல் விரைவுப் பொருண்மை யுடைய என்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்: ஒருவனை ஒருவன் [1]ஓர் குறைப் பொருட்டால் 'இன்னும் உண்டிலையோ, போதாயோ' என்புழி, 'உண்பேன், போதுவேன்' எனற் பாலதனை, 'உண்டேன், போந்தேன்' என்னும். இனி உண்கின்றானைக் கேட்பினும் 'உண்ணா நின்றேன், போதுவல்' என்னாது 'உண்டேன், போந்தேன்' என்னும்.

இவை அமைதற்குக் காரணம் செய்யாததனைச் செய்ததாக் கித் தன் விரைவு தோன்றக் கூறும் கருத்தினன் ஆதலின் என்பது.

1. ஓர் குறை—செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியம்.

இதுவும் சொல்லோடு சொல் மயக்கம். இஃது எல்லாச் சொன் மேலும் கொள்க.

ஆதி.

எதிர்காலம் நிகழ்காலங்கட்கும் ஒரே தன்மையாக வரும் வினைச் சொற்களை இறந்த காலத்திற் கூறும் காரணம் விரைவு பற்றியாம்.

ஒருவன் உணவு அருந்துகிறான். நண்பன் ஒருவன் வெளியிலிருந்து அவனைக் கூப்பிடுகிறான். உணவு அருந்துவோன் 'இதோ வந்து விட்டேன்' என்று கூறுகிறான். அவன் கூற வேண்டிய முறை 'இதோ வந்து விடுகிறேன்' 'அல்லது, 'வந்து, இதோ வருவேன்' என்பது. அவன் அவ்வாறு கூறாமல் 'வந்து விட்டேன்' என இறந்த காலத்திற் கூறக் காரணம் விரைவே யாகும். விரைந்து உண்டு உடன் வருவதாக நினைந்து அவ்வாறு கூறுகிறான். இது கால வழுவமைதி எனக் கூறப்படும்.

"பள்ளிக்குப் போகாமல் இரு ; காலை ஒடித்து விட்டேன்" என்று எச்சரிப்பர். விரைவு, துணிவு, செற்றம் பற்றி இவ்வாறு காலம் மாறி வரும். என்மனார் புலவர்—கவிமரபு இசைநிறை

கால மயக்கம்—மிக்கதனிடமாக

237. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே (43)

(மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி
அப் பண்பு குறித்த வினைமுதல் கிளவி
செய்வது இல்வழி நிகழும் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டு ஆகும் மே)

ஆ. மொ: இல.

When denoting the result of an action being excessive without referring to any paiticular person or thing it will have true effectiveness if expressed in present tense.

பி. இ. நூ:

நன். 384

.........மிகவினும்.........பிற மூவும் பெறூஉம் முக்காலமும்

மூத்து. வி. 42

குறித்துப் போதரும் வினைமுத லில்லாக்
காலை வினைமுதல் நிகழ்வினிற் செல்லும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் கால வழூஉக் காத்தல் நுதலிற்று.

உரை : மிக்கதன் மருங்கின் என்பது உலகத்தாராற் சிறந்த தென்று மதிக்கப்பட்டதன்கண் என்றவாறு; வினைச் சொற் சுட்டி என்பது வினையாகிய சொல்லைச் சுட்டி என்றவாறு; அப்பண்பு குறித்த என்பது ஆண்டை வினையது பயனாகிய குணத்தைக்குறித்த என்றவாறு; வினைமுதற்கிளவி என்பது அச் செய்கை செய்தானை நுதலின சொல் என்றவாறு; செய் வதில்வழி என்பது செய்கை முடியாத நிலைமைக்கண் என்ற வாறு; நிகழுங்காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே என்பது அது நிகழுங்காலத்துச் சொல்லுஞ் சொற் பிழை யாது என்றவாறு.

வ—று : அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான்நிரயம் புகும் எனவரும். அறம் என்பது மிக்க தொன்று; அதனை ஆக்கினான் அவ்வழிச் சேறல் ஒரு தலையாக லாற் புகுகின்றாரைக் கண்டான் போலப் 'புகும்' என்று நிகழுங் காலத்தாற் சொல்ல அமையும் என்பது.

சேனா.

இ—ள் : மிக்கதன்கண் நிகழும் வினைச் சொல்லை நோக் கித் திரிபின்றிப் பயக்கும் அம்மிக்கதனது பண்பைக் குறித்துவரும் வினைமுதற் சொல், சுட்டிச் சொல்லப்படுவதோர் வினை முதல் இல்லாதவிடத்து, நிகழ்காலத்தான் யாப்புறுத்த பொருளை யுடைத்தாம், எ-று.

முயற்சியும் [1]தெய்வமுமாகிய காரணங்களுள் தெய்வம் சிறந்தமையான் அதனை மிக்கது என்றார். தெய்வமாய இரு வினையாகிய மிக்கதன்கண் வினைச்சொல்லாவன, தவம் செய் தான், தாயைக் கொன்றான் என்னுந் தொடக்கத்தன. அப் பண்பு குறித்த வினைமுதற் கிளவியாவன சுவர்க்கம்புகும்,நிரயம் புகும் என்பன:

---

1. தெய்வம்—ஊழ். (குறள். 629 பார்க்க)

[2] உ—ம்: யாவன் தவஞ் செய்தான் அவன் சுவர்க்கம் புகும், யாவன் தாயைக் கொன்றான் அவன் நிரயம் புகும் எனவும்; ஒருவன் தவம் செய்யிற் சுவர்க்கம்புகும், தாயைக் கொல்லின் நிரயம்புகும் எனவும் மிக்கதன் வினைச்சொல் நோக்கி அம்மிக்க தன் திரிபில் பண்புகுறித்த வினைமுதற்கிளவி நிகழ்காலத்தான் வந்தவாறு கண்டு கொள்க.

'அப்பண்பு குறுத்த' என்பதற்கு, 'மிக்கதாகிய இருவினைப் பயனுறுதல் அவ்வினைமுதற்கு இயல்பு என்பது குறித்த' வென்று உரைப்பினும் அமையும்.

பொதுவகையாகக் கூறாது ஒருவற் சுட்டிய வழி, அவன் தவம் செய்து சுவர்க்கம் புக்கான், புகுவன் என ஏனைக் காலத் தாற் சொல்லப்படுதலின், அவ்வாறு ஒருவற் சுட்டுதலை நீக்கு தற்கு, வினைமுதற் கிளவியாயினும் 'செய்வதில் வழி' யென் றார். [1]செய்வதென்றது செய்கையை என்பாருமுளர்.

[2]வினைச்சொல் என்றாரேனும், தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான் நிரயம்புகும் என வினைப்பெயராய் வருதலும் கொள்க.

தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப்படுவதனை நிகழ்காலத்தாற் சொல்லுதல் வழுவாயி னும் அமைக என வழுவமைத்தவாறு.

அஃதேல் ''இயற்கையுந் தெளிவும் கிளக்குங்காலை'' (வினை 48) என்புழி இது தெளிவாய் அடங்கும் எனின், அற்றன்று; இயற்கையுந் தெளிவும் சிறந்த காரணமாகிய தெய்வத்தானாக,

---

2. மிக்கது தவம்; அதன்மருங்கின் வினைச்சொல் தவம் செய்தான், அப்பண்பு அதன் பயன். அதாவது சுவர்க் கம்புகல்; அப்பண்பு குறித்த வினைமுதற்கிளவி—புக் கான். செய்வது இல்வழி-செய்யும் வினைமுதல் இல் லாதபோது; அதனால் உதாரணத்தில் யாவன் என்பது கூறப்பபட்டது. பிறவும் இவ்வாறே காண்க.
1. செய்வது என்றது வினைமுதலை; அதைவிட்டுச் செய்கை என்பாரும் உளர்.
2. 'யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும்' என் னும்போது 'செய்தான்' என்பது வினைமுற்று. யாவன் அவன் என்பன இன்றித் தவஞ் செய்தான் சுவர்க்கம் புகும் என்றால் செய்தான் என்பது செய்தவனாகிய ஒருவன் எனப்பொருள் தருதலின் வினையாலணையும் பெயர்.

பிறிதொன்றானாகத் திரிதலுடைய. இது திரிபின்றாகலானும் இறந்த காலத்தாற் சொல்லப்படாமையானும் ஆண்டடங்காது என்பது. இதனது திரிபின்மையும் அவற்றது திரிபுடைமையும் விளக்குதற்கன்றே ஆசிரியர் 'மிக்கதன் மருங்கின்' என்றும், 'இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை' எனறும் ஓதுவாராயிற் றென்பது.

தெய்.

[3]ஒருசார் வினைச் சொற்கு உரியதோர் [4]இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மிக்கது என்பது ஒன்றின் ஒன்றுமிக்கது என்னும் பொருண்மை : அதன் மருங்கின் வினைச் சொல் சுட்டலாவது அது பெயராகி நிற்கும் நிலைமையைச் சுட்டாது வினையாகி நிற்கும் நிலைமையைச் சுட்டி நிற்றல் : அப்பண்பு குறித்த வினை முதற்கிளவியாவது அப்பொருட்கண் மிகுதலாகிய தொழிலைக் குறியாது அதன் இயல்பாகிய மிகுதியைக் குறித்த பாலுணர வருஞ்சொல்: செய்வதில் வழி என்பது அப்பாலுணர வருஞ் சொல்லின்கண் கருத்தாவையுணர்த்தும் ஈற்றெழுத் தில்வழி என்றவாறு. நிகழுங்காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட் டாகும் என்பது நிகழுங் காலத்து உருபு பெறப் புலப்படும் பொருளை யுடைத்து என்றவாறு.

ஒரு பொருளின் ஒரு பொருள் மிக்கது என்னும் பொருட்கண் வரும் மிக்கது என்னும் வினைச் சொல்லைக் குறித்து, மிகுந்த பண்புணர வரும் பாலுணர்த்தாத சொல், செய்யும் என்னும் சொல்லினால் வரின், அஃது பொருளை இனிது விளக்கும் என்ற வாறு. மிக்கது என்பது ஒரு காலங் குறித்துவரின் தொழில் குறித்ததாம். இயல்பு குறித்ததாயின் பண்பு குறித்ததாம். ஆற்றில் நீர்மிக்கது என்றவழி மிகுதல் இயல்பன்மையில் தொழில் குறித்ததாம். சுவர்க்கம் மிக்கது என்றவழி எக்காலத்தும் ஒக்கு மாதலின் பண்பு குறித்ததாம். [1]பூமியிற் சுவர்க்கம் மிகும் எனவும்

---

3. மற்றையோர் காலவழுவமைப்பது இச்சூத்திரம் என் பர்.
4. இலக்கணமாவது, ஒருசார் வினைச்சொற்கள் தொழி லுக்கும் பண்புக்கும் பொதுவாகி நிற்கும் என்பது.

1 பூமியிற் சுவர்க்கம் மிக்கது என இறந்த காலத்தாற் கூற வேண்டுவது பூமியிற் சுவர்க்கம் மிகும் என நிகழ்காலப் பொருண்மையில் கூறப்படுவதும் ஆம் என்பது இத் தொடர்ப் பொருள். சிவ. விளக்கம் உரையிறுதியிற் காண்க.

ஆம். யாற்றுநீர் மிக்கது என்னும் பொருட்கண் மிகும் என்ற தனாற் குற்றம் என்னை யெனின், அவ்வாறு கூறின் இறந்த காலம் தோன்றாதாம். வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் உயர்வு தாழ்வு குறைவு என்பனவும் இந்நிலைமைய என்று கொள்க. இச்சூத்திரத்தாற் பயன், ஒருசார் வினைச் சொற்கள் தொழிலுக்கும் பண்பிற்கும் பொதுவாகி நிற்கும் என்பது அறிவித்தல்.

நச்.

இது மிக்கது ஒன்றன்கண்ணே இறப்பும்எதிர்வும் நிகழ்வோடு மயங்கும் என்கிறது.

இ-ள்: மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி—இருவினை கள் பலவற்றுள்ளும்சிறந்த இருவினைக்கண்ணே நிகழும் வினைச் சொல்லை நோக்கி, அப்பண்பு குறித்த வினைமுதற்கிளவி—திரி வின்றிப் பயக்கும் அம்மிக்கதனது பண்பைக் குறித்துவரும் வினைமுதற்சொல், செய்வது இல்வழி—சுட்டிச் சொல்லப்படுவ தோர் வினைமுதல் இல்லாத இடத்து, நிகழும் காலத்து மெய் பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே—நிகழ் காலத்தான் யாப்புறத் தோன்றும் பொருளை யுடைத்தாம், எ-று.

உ-ம்: தவம் செய்தான், செய்வான்; தாயைக் கொன்றான், கொல்வான் என்பன முதலியன மிக்க வினைச்சொல். சுவர்க்கம் புகாநிற்பன், நிரயம்புகா நிற்பன் என்பன அவ்வப் பண்பு குறித்த வினைமுதற்கிளவி. இவை சுட்டி ஒருவர்ப்பெயர் கொள்ளாமல், யாவன் தவஞ்செய்தான் அவன் நிரயம் புகும் எனவும், ஒருவன் தவம் செய்யின் துறக்கம் புகும்; ஒருவன் தாயைக் கொல்லின் நிரயம் புகும் எனவும் வரும்.

இங்ஙனம் பொதுவகையாற் கூறாது, சாத்தன் தவம் செய்து துறக்கம் புக்கான், சாத்தன் தவம் செய்யின் துறக்கம் புகுவான் எனச்சுட்டி ஒருவர்ப் பெயர்கொண்டவழி ஏனைக்காலங்களால் கூறப்படுதலின், 'செய்வதில் வழி' என்றார். வினைச்சொல் என்றாரேனும், தவஞ்செய்தான், தாயைக்கொன்றான் என வினைப்பெயராய் வருதலும் கொள்க.

கல்.

என்-எனின், வினைச்சொல் எல்லாவற்றினும் நன்மை யானும் தீமையானும் மிக்கதோர் பொருட்கண் ஒருவன் செய்தி கூறுமிடத்து எதிர்காலம் இறந்த காலத்தொடும் நிகழ்காலத் தொடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உலகத்து ஒருவழி நன்மையானும் ஒருவழித் தீமையானும் தவஞ்செய்தல், தாய்க்கொலை என்பன, மிக்க தொழிலிடத்து வரும் தவம் செய்வான், தாயைக்கொல்வான் என்னும் வினைப்பெயர்ச் சொல்லால்,ஒருவன் தன்னை வேறு கூறுதலைக் குறித்த வினைப்பெயர்க்கு முடிபாக,அம்மிக்க வினைப்பயனாகிய சுவர்க்கம் புகுதலும், நிரயம் புகுதலும் என்னும் பண்பினை மேல் வரும் சுவர்க்கம் புகுவன், நிரயம் புகுவன் என்னும் சொற்களால் தன்னைச் சொல்லுதலையும் குறித்த அவ்வினை முதலாகிய பொருள் தான், மிக அத்தொழிலினைச் செய்யாதிருந்த நிலைமைக்கண்ணே அத்தொழிலைச் செய்யத் தன் பயனை உறுகின்றானைக் கண்டான்போல 'ஒருவன் தவம் செய்தான் சுவர்க்கம் புகும்','தாயைக் கொன்றான்நிரயம்புகும்' எனச் சொல்ல, நிகழ்காலத்தின் கண்ணே உண்மை பெறத் தோன்றும் பொருண்மையினையுடைத்தாம், எ-று.

உ-ம்: தவம் செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான் நிரயம் புகும் என முன் [1]கண்ணழிவுள் வந்தனவே எனக் கொள்க.

இதனாற் சொல்லியது, 'இவ்வினை செய்வான் மேல் இவ் வினையெய்தும்' என்னும் பொருண்மை, இவ்வினை செய்து பின்னை இவ்வினை செய்கின்றான் எனக் காலம் மயங்கவரும் என்பது கூறக் கருதினான் கூறியவாறாக்கி இதற்கேற்பச் சொன்னிலையறிந்து பகுத்துக் கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனால் 'அறம் செய்தான் சுவர்க்கம் புக்கான்' என இரண்டு வினையும் இறந்தகாலத்தாற் கூறுதலும், 'அறஞ்செய்யாநிற்கும் அவன் சுவர்க்கம் புகுவன்' என நிகழ்காலம் ஒன்றனையும் மயங்கக் கூறுதலும் மற்றுள்ளதுங் கொள்க.

நிகழுங் காலத்து மெய்பெறத் தோன்றும் என்றதனால் 'சுவர்க்கம் புகுவான்' என்னாது 'சுவர்க்கம் புகும்' என்பதன்றி 'அறஞ்செய்வான்' என்பதனை 'அறஞ் செய்தான்' எனக் கூறுதல் சூத்திரத்துப் பெற்றிலமால் எனின், அது முன்னின்ற சூத்திரத்துள் அப்பொருளினைக் கூறும் இலக்கண வாய்பாடு இது என நிறுத்தின அதிகாரவாற்றலாற் பெறவைத்தார் போலும்.

மற்றும் முன் இவ்வினை செய்வான் இவ்வினை செய்யும் என்பதுபடச் செய்ததில்லாமை தோன்றக்கூறிவைத்துப் பின்னை

1. கண்ணழிவு—உரை

யும் 'செய்வதில்வழி' என்றது என்னை யெனின், அங்ஙனம் செய் வானாய் முன்னின்றவன் பின்னையதனைச் செய்தவழிக் கூறு தலும் ஒன்றுண்டாதலின் அது நீக்கிய கூறினார் போலும். அதுவும் சொல்லொடு சொல் மயக்கம்.

வெள்.

மிக்கதன் மருங்கில் வினைச் சொல் என்றது, நன்மையும் தீமையும் ஆகிய பயன் விளைப்பதில் மிக்குத் தோன்றும் நன்றுந் தீதுமாகிய செயலினைக் குறித்த வினைச் சொல்லை. உலகிற் பெரும்பாலோரால் உடன்பட்டுரைக்கும் மிகுதியுடைமை பற்றி 'மிக்கது' எனப்பட்டது. அஃது அறம், பாவம் என்னும் வினைப் பாகுபாடு. அப்பண்பு குறித்த வினை முதற்கிளவி என்றது, மிக்க தாகிய அத்தொழிற் பயனுறுதல் அவ்வினை முதலுக்கு இயல்பா தலைக் குறித்த சொல். அவை யாவன துறக்கம் புகுதல், நிரயம் புகுதல் முதலாயின. இத்தொழிற்கு வினைமுதல் இன்னார் என ஒருவரைக் குறித்துச் சுட்டப்படாத பொதுநிலையில் என்பார் 'செய்வது இல்வழி' என்றார். செய்வது—வினைமுதல். தவஞ் செய்யிற் சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப் படுவதனை நிகழ்காலத்தாற் சொல்லுதல் வழுவாயினும்அமைக என வழுவமைத்தவாறு.

ஆதி.

சிறப்புடையதாக வினைகள் நாட்டி, அந்நிலைக்கு உரிய கருத்தா அச்செயல்முறை இல்லாத (இழந்த) நிலையில், நிகழ் கால வினை விளக்கம் தோன்றுவதற்கு உரித்தாகும்.

கருத்து : வாழ்ந்த காலத்தைக் கூறும்போது பிந்தியதை நிகழ் காலத்திற் கூற வேண்டும்.

அரண்மனை, கார், வண்டி, வேலையாட்கள் கொண்டு வாழ்ந்தான்; இன்று பிண்டத்துக்குத் திண்டாடி [1]அலைகிறான். வாழ்வில் இறந்த காலம், தாழ்வில் நிகழ் காலம்.

''வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவன் ஒப்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் தந்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு ஏகுகின்றான்''

வெறுங்கையோடு ஏகுகின்றான் என நிகழ்காலத்திற் கூறினே

1. அலையும் எனச் செய்யும் என் வாய்பாட்டிலேயே உதாரணம் இருப்பது நன்று; ஆசிரியர் காலத்துக்கேற் புடையது அதுவே.

அவன் முந்திய வாழ்வும் பிந்திய வீழ்ச்சியும் நன்கு வீறு கொண்டு நிற்கின்றன.

"வான் நகும்—

நான்நகும் பகைவர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணான்
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்பு கின்றான்"

இங்கு சாம்பு கின்றான் நிகழ்கால வினை சுவை தருவது கவனிக்கத் தக்கது.

மிக்கதன்வழி — மேம்பாட்டில்
வினைமுதற்கிளவி — கருத்தா
செய்வதில்வழி — செயலற்று இழிந்த நிலையில்
மெய்பெற — இயைபு விளங்க

குறுப்பு: ஆசிரியர் வினையின் காலம் மாறிவருதல் பற்றி (வினையியல் 42, 43, 44) மூன்றிலும் கூறியுள்ளார்.

இளவழகனார் (குறிப்புரை)

மிக்கதன் மருங்கின்—உயர்வின்கண் வருகின்ற. சுட்டி—நோக்கி. அப்பண்பு—அவ்வுயர்வாகியபண்பு. செய்வது இல்வழி—பெயர் சுட்டிச் சொல்லப்படுவதொரு வினைமுதல் வாரா விடத்து நிகழ்காலத்துப் பொருட்டாகும் என்க. மெய்பெறத் தோன்றும் என்றது, அப்பொருள் யாப்புறத் தோன்றும் என்றற்கு.

தவம் செய்தல் என்பது உயர்வின்கண் வரும்வினைச்சொல். அவ்வினைச்சொல்லை நோக்கி வருதற்குரிய அதற்கேற்ற உயர்வுப் பண்பு குறித்த வினை முதல் 'சான்றோன்' என்பது. இந்நூற்பா இயைபுடைய இருவினைக்கண் சிறப்பு நிகழ்ச்சிகூறுவது. அதனால் இயையுடையஇருவினைகள் தொடரச் சிறப்பின் கண், 'சான்றோன் தவஞ்செய்யின் துறக்கம் புகும்' என்பது இதற்குக்காட்டு. பெயர் சுட்டிய வினைமுதல் வருவதாயின், 'சாத்தன் தவஞ்செய்யின் துறக்கம் புகுவான்' என எதிர்காலச் சொல்லாதல், 'சாத்தன் தவஞ்செய்து துறக்கம் புக்கான்' என இறந்தகாலச்சொல்லாதல் இட்டு முடிக்கபடுமல்லது, 'சாத்தன் தவஞ்செய்யின் துறக்கம் புகும்' எனப் 'புகும்' என்னும் நிகழ் காலப் பொதுச்சொல்லான் முடிக்கப்படுதல் இல்லையாதலின் என்பது (தொல்காப்பியம் மூலம் கழகப் பதிப்பு. 1967)

சிவ.

† (1) தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும்—இத்தொடரில் தவம் என்பது உலகில் மிக்கதாகிய பண்புடையதாம். செய்தான் என்பது அத்தவத்தின் மேல் குறித்துச் சொல்லப்பட்ட வினைச் சொல். சுவர்க்கம்புகல் என்பது அதன்பயன்—அதாவது தவம் செய்த வினையால் வரும் பண்பு. அதனைக் குறித்து வர வேண்டிய வினைமுதற்கிளவி புக்கான் என்பது. ஆனால் இன்னான் என்று சுட்டிச்சொல்லப்படும் வினைமுதல் (செய்வது) அத்தொடரில் இல்லை. செய்தவன் இல்லாதபோது புக்கான் என்று கூறுதற்கில்லை. அதனால் நிகழ்காலப் பொருட்டாகிய (செய்யும் என்னும் வாய்பாட்டால்) புகும் எனக் கூறப்பட்டது. இத்தொடரின் பொருள் 'தவஞ் செய்தான் யாவன் அவன் சுவர்க்கம் புகும்' என்பதாம்.

இக்கருத்துடையோர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், வெள்ளைவாரணனார் ஆகியோர்.

(2) மிகுதி என்னும் பண்புப் பொருளில் மிக்கது என்னும் சொல்லைச் சொல்ல எண்ணி, அம்மிகுதிப் பண்பையுணர்த்தும் அவ்வினைச் சொல்லில் அம்மிகுதியைச் செய்யும் வினைமுதலையுணர்த்தக்கூடிய விகுதி (து) இல்லையென்றால் அவ்வினைச் சொல் நிகழ்காலப் பொருண்மையுடையதாக (ச் செய்யும் என்னும் வாய்பாட்டில்) சொல்லப்படும்—இது சூத்திரப் பொருள். இதனை உதாரணம் கொண்டு காணலாம்.

பூமியிற் சுவர்க்கம்மிகும் — இத்தொடர் பூமியிற் சுவர்க்கம் மிக்கது என இருக்க வேண்டுவது. சுவர்க்கம் மிக்கது என்றால் சுவர்க்கம் பூமியை விட மிகுதிப்பாட்டுத் தன்மையது என்பது பொருள். இதில் மிக்கது என்பது பண்பு குறித்தது. இச்சொல் இறந்தகாலம் காட்டுவது. மிக்கது என்பதற்கு எழுவாய் (செய்வது) சுவர்க்கம். அதனால் மிக்கது என்பதில் உள்ள துவ்விகுதி வினை முதலையுணர்த்தும். வினைமுதலையுணர்த்தும் துவ்விகுதி யில்லையென்றால் மிக்கது என்பது எவ்வாறு முடிக்கப்படும் எனின், செய்யும் என்னும் நிகழ்கால வாய்பாட்டால் முடிக்கப்பட வேண்டும். அதாவது மிகும் என்ன

† இங்கே கூறப்பட்ட விளக்கங்கள் உரைக்குறிப்புகளிலும் ஆங்காங்குக் கூறப்பட்டன என்றாலும் கருத்துத்தொடர்பு விளங்க இங்கும் கூறப்பட்டன.

வேண்டும். அவ்வாறு முடிக்கப்பட்டதே 'பூமியிற் சுவர்க்கம் மிகும்' என்பது. இவ்வாறு சூத்திரக் கருத்தும் உதாரணமும் கூறியவர் தெய்வச்சிலையார்.

(3) ''அரண்மனை கார் வண்டி வேலையாட்கள் கொண்டு வாழ்ந்தான், இன்று பிண்டத்துக்குத் திண்டாடி அலைகிறான்''- இத்தொடரில் வாழ்வில் இறந்த காலமும் தாழ்வில் நிகழ்காலமும் அமைந்துள்ளன. இவ்வுதாரணம் காட்டி மிக்கது என்பதற்கு மேம்பாட்டுக்காலம் என்றும், செய்வதில்வழி என்றதற்குத் தாழ் நிலை எய்திய காலம் என்றும் கொண்டு, மேம்பட வாழ்ந்த காலத்து வினையை யிறந்தகாலத்தும், தாழ்நிலையெய்தி வாழும் காலத்தை நிகழ்காலத்தும் கூறல் வேண்டும் என்பன இச்சூத்திரப் பொருளாக வுரைத்தார் ஆதித்தர்.

வாழ்ந்த காலத்தைச் சுட்டின் இறந்தகாலச் சொல்லாலும், வாழுங்காலத்தைச் சுட்டின் நிகழ்காலச் சொல்லாலும் குறித்தல் வழுவன்று ஆதலினால் இவர் கருத்து ஏற்பதற்கில்லை. அன்றியும் இச்சூத்திரத்துக்கு இவர் றெளிவான பொருளும் எழுதவில்லை. கருத்துரை எழுதுவதுபோல் எழுதிச் சென்றார்.

(4) சான்றோன் தவஞ்செய்யின் சுவர்க்கம் புகும்—இத் தொடர் இளம்பூரணர் முறலியோர் கருத்துடன் ஒத்த தொட ராகவுள்ளது. இதைக் கூறியவர் இளவழகனார். மிக்க பண்பு குறித்த சொல் 'சான்றோன்' என்றார் அவர். 'சாத்தன் தவஞ் செய்யின் சுவர்க்கம் புகும்' என்று முடிக்கப்படுதல் இல்லையென் றார். அவ்வாறு கூறுதலையும் நச்சினார்க்கினியர் ஏற்றுக்கொண் டார். மிக்கது குறித்த சொல் சான்றோன் எனின் அது பெயர்ச் சொல்லாகும். அதுவே சுட்டிச் சொல்லப்படும் வினைமுதலும்— அதரீவது செய்வதும் ஆகும். செய்வது இல்வழி என்றதற்கு மாறாகும். அதனால் இளவழகனார் உதாரணமும் கருத்தும் பொருத்தம் இல்லை.

இனி முதல் இரண்டு கருத்துகளுள் ஏற்புடையது எதுவாகும் என்பதைக் காணலாம்.

தெய்வச்சிலையார் 'செய்வது இல்வழி' என்பதற்கு வினை முதலை யுணர்த்தும் விகுதியில்லாதவழி என்றார். வினை முதலை யுணர்த்தும் விகுதியில்லாத போது, செய்யும் என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலப் பொருளுணர்த்தும் தன்மையதாகும் வினைமுற்றுச்சொல் என்றார் அவர். வினைமுதலை யுணர்த்தும் விகுதியின்றி எச்சொல்லும் வராது; வரின் அது எச்சமாகவே முடியும். மிக்கது என்னும் சொல் வினை முதலையு

ணர்த்தும் துவ்விகுதியின்றிவரின் மிகு என்ற அளவிலேயே அமையும். அப்படியாயின் அது வினை முதற்கிளவி யாகாது. வினைமுதற்கிளவி என்பது வினைமுதலை யுணர்த்தும் விகுதியுடன் கூடியதாம். மேலும் "செய்தென் எச்சத்து" என்னும் சூத்திர முதலாகப் பொருள்பற்றிய நிலையிலேயே கூறி வருகின்றாராதலின் இச்சூத்திரத்தும் 'மிச்கது' என்றது மிகுதிப் பொருள் குறிக்குமேயன்றி, மிக்கது என்னும் சொல்லைக் குறிக்காது. சொல்லைக் குறிப்பதாயின் "இது செயல் வேண்டும் என்னும் கிளவி" (46) என்றாற்போல "மிக்கதென் கிளவி மருங்கின்" என்று கூறியிருப்பார் ஆசிரியர். அவ்வாறு கூறாமை யானும் தெய்வச்சிலையார் கருத்தும் ஏற்பதற்கில்லை.

எனவே முதற்கருத்தே ஏற்புடையது என்னலாம். இச் சூத்திரம் அறம், தவம், கொலை முதலிய நல்வினை தீவினை களின் மிகுதிப்பாட்டுப் பயன்களைக் குறித்தே வந்தது என்பதை இச்சூத்திரற் தொடராட்சி வலியுறுத்தும். சூத்திரத் தொடராட்சி கொண்டு ஒரு சொல்லை வெளிப்படுத்துவது ஆசிரியர்க்கு இயல்பு. உதாரணம்.

தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் றாதலும் உரித்தே (உயிர்ம.12)

இச்சூத்திரம் பல, சில என்பனவற்றுக்குரியது இச் சூத்திரத்தில் அவை கூறப்படவில்லை. ஆனால் தொடராட்சி கொண்டு உணர வைத்தார். உயிர் மயங்கியலில் அகரவீறு வருமொழி வல்லெழுத்துடன் புணருமாறு கூறி வருமிடத்தில் இச்சூத்திரம் அமைந்துள்ளது. தொடரல் இறுதி என்பதால் மூவெழுத்து மொழியன்று என்பதும், லகரம் றகர ஒற்றாகும் என்பதால் ஓரெழுத்து மொழியில் லகரம் வாராதாதலின் ஓரெழுத்து மொழியன்று என்பதும், லகரம் றகரவொற்றாகும் என்பதால் அம்மொழி லகர உயிர்மெய் ஈற்றது என்பதும், தம் மொடு தாம்வரின் என்றதால் தம்மொடு தாம் வரும்போது வரு மொழி முதல் வல்லெழுத்தாக அமையவேண்டுமாதலின் பல, சில என்பன தவிர அவ்வாறு அமையும் சொற்கள் இல்லாமை யால் பல சில என்பனவற்றையே குறிக்கும் என்பதும் பெறப்படு மாகலின், இச்சூத்திரம் தொடராட்சியினால் பல சில என்பன வற்றுக்கே யுரியது என்பது புலப்படும்.

அவ்வாறே 'மிக்கதன் மருங்கின்' என்னும் இச்சூத்திரம் தவம், அறம், கொலைபோல்வனவற்றைக் கருதியேகாலமயக்கம் உணர்த்துவது எனக் கொள்ளல்வேண்டும்.

மிக்கதன் மருங்கின் என்பதால் மிகுதிப்பண்பு குறித்தசொல் (தவம்) என்பதும், மிகுதல் என்பது தொழிலாதலின் நல்வினை தீவினைத்தொழில்களின்மிகுதி என்பதும்; அதனிடமாக 'வினைச் சொல் சுட்டி' என்பதால் அம்மிக்கது (தவம்) பற்றிய தொழிலை முதலில் குறித்தல் என்பதும் (தவம் செய்தான்), 'அப்பண்பு குறித்த' என்பதால் அம்மிக்கதன் செயலால் 'விளையும் பயன் குறித்த என்பதும் (சுவர்க்கம் புகல்), அப்பண்பு குறித்த வினை முதற்கிளவி' என்பதால் புக்கான், புகுகின்றான், புகுவான் என்பன வரும் என்பதும், ஆனால் 'செய்வது இல் வழி' என்ப தால் வினைமுதல் இல்லை என்பதும், வினைமுதல் இல்லாத போது புகுந்தான், புகுகின்றான், புகுவான் என வினைமுதலை யுணர்த்தும் விகுதிகளுடன் கூடிய வினைச்சொற்களைக் கூற லாகாது என்பதும், 'நிகழும் காலத்துப் பொருட்டாகும்' என்ப தால் 'நிகழ்கால வாய்பாடாகிய செய்யும் என்னும் வாய்பாட் டால் கூறல் வேண்டும் என்பதும் (சுவர்க்கம் புகும்) பெறப்படு தலின், இச்சூத்திரம் தொடராட்சியினால், தவம் அறம் கொலை போலும் மிக்கதன் மருங்கு பற்றியதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

இது செயல் வேண்டும்

238. **இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி**
யிருவயி னிலையும் பொருட் டாகும்மே
தன்பா லானும் பிறனபா லானும் (44)

(இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டு ஆகும் மே
தன்பாலானும் பிறன்பா லானும்)

ஆ. மொ: இல.

The verb denoting the action of command or wish, 'do this' many indicate the two the doer of the action and the person who commands or wishes the action

பி. இ. நூ:

முத்து. வி. 48.

இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மூற்றுச்சொற் பொருள்படும் முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை: இது செயல் என்னும் வாய்பாட்டுச்சொல், சொல்ல படும் ஒருவன்மேல் நிற்கற்பாலது; அது பிறவயின் நோக்கியும் நிற்கும், எ-று.

வ-று; சாத்தன் ஓதல்வேண்டும் என்றச்கால், ஓதற் றொழிதல் வேண்டுவான் சாத்தனீ என்றுமன் ஆகற்பாலது? அவ்வாறன்றிச் சாத்தன் ஓதல்வேண்டும்; யார்? தந்தை தாய் எனவும் நிற்கும் என்பது.

சேனா.

இ-ள்: இது செயல் வேண்டும் என்பதுபட வருஞ்சொல் தன் பாலானும் பிறன் பாலினும் என ஈரிடத்தும் நிலைபெறும் பொருண்மையை யுடைத்தாம், எ—று.

தன் என்றது செயலது வினைமுதலை.

உ-ம்: ஓதல் வேண்டும் என்ற வழி வேண்டும் என்பது ஓதற்கு வினைமுதலாயினாற்கும், அவன் ஓதலை விரும்புந் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டு கொள்க.

இதனான் ஒருசார் வினைச்சொற் பொருள்படும் வேறுபாடு உணர்த்தினார்; உணர்த்தாக்கால் தெற்றென விளங்காமையின் என்பது.

தெய்.

இது ஒருவினை இருபொருட்படுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இதனைச் செயல் வேண்டும் என்னும் வினைச்சொல் இரண்டிடத்தும் நிலைபெற்ற பொருளையுடைத்து சொல்லுவான் கண்ணும் பிறன்கண்ணும், எ—று.

உ-ம்: நீ உண்ணல் வேண்டும் என்றவழி, நீ உண்பாயாகல் வேண்டும் எனத் தான் வேண்டிக்கோடற் பொருண்மை [1]சொல்லுவான்கண் நிலைபெற்றது. [2]சாத்தன் உண்ணல் வேண்

---

1. சொல்லுவான் என்றது சொல்லப்படுபவனாகிய முன்னின்றானைக் குறித்தது. யான் நீ உண்ணல் வேண்டும் என்றால் சொல்லுவான் யான் ஆகும். சிவ. பிற் குறிப்புப் பார்க்க.
2. சாத்தனானவன் நீ யுண்ணலை விரும்பும் என்பது பொருள்.

டும் என்றவழி, உண்டலைப் பிறன் விருப்பம் எனப் பிறன்கண் நிலைபெற்றது.

நச்.

இது முற்றுசசொல் பொருள்தரும் வேறுபாடு கூறுகின்றது.

இ-ள்: இது செயல் வேண்டும் என்னும் கிளவி—இக்காரியத் தினைச் செயல் வேண்டும் என்று சொல்லப்படும் முற்றுச்சொல், தன்பாலானும் பிறன்பாலானும் இருவயின் நிலையும் பொருட்டு ஆகும்மே—அக்காரியத்தினைச் செய்வான் தன்னிடத்தும் அவன் செயலை வேண்டியிருப்பான் பிறன் ஒருவனிடத்தும் என்ற இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மையுடையதாம், எ—று.

உ-ம்: சாத்தன் ஓதல் வேண்டும் என்புழி, வேண்டும் என்னும் முற்றுச்சொல் ஒருவழிச் சாத்தன் என்பது எழுவாயாய் வேண் டும் என்னும் பயனிலையோடு முடிந்துழி அவ்வேண்டுதல் சாத் தனதாயும், சாத்தன் என்னும் எழுவாய் ஓதுதல் என்னும் வினைப்பெயர் கொண்டவழி இவ்வேண்டுதல் தந்தை தாய் மேலும் நின்றவாறு காண்க.

கல்.

என்-எனின், இது வினைமுற்றுச் சொல்லது பொருள்படு நிலைமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இக்காரியத்தினைச் செய்தல் வேண்டும் என்று சொல லப்படும், முற்றுச்சொல் இரண்டடித்து நிலைபெறும் பொருண்மையுடைத்தாகும்; அவை இரண்டிடமும் யாவை யெனின் அக்காரியத்தைச் செய்வான் தன்னிடத்தும் அவன் செய்தலை வேண்டியிருப்பான் பிறன் ஒருவனிடத்தும், எ—று.

உ-ம்: சாத்தன் ஓதல் வேண்டும் என்பது.

இதனுள் 'வேண்டும்' என்னும் முற்றுச்சொல், ஒருவழிச் சாத்தன் என்பது எழுவாயாய், வேண்டும் என்னும் பயனிலை யோடு முடிந்தவழி அது வேண்டுதல் சாத்தனதாயும், சாத்தன் என்னும் எழுவாய் ஓதல் என்னும் சொல்லோடு முடிந்தவழி இவன் ஓதவேண்டியிருக்குமானால் தந்தையெனப் பிறர் மேலதா யும் நின்றவாறு அறிந்து கொள்க.

இதனாற் சொல்லியது சொற்பொருள் உணர்த்தும்வழி இயல்பால்தான்உணர்த்துவதனையொழியஅடைச் சொற்களாற்

பிறவழியும் நோக்கும் எனக் காலவழுவமைதிக்கிடையே இதுவும் ஓர் மரபு வழுவமைதி என்பது கூறியவாறாயிற்று.

ஆதி.

இது செயல் வேண்டும் என்னும் சொற்றொடர் தன்மை யிடத்தோடும் பிற இடங்களோடும் ஆக இருவகைகளிலும் பொருந்துவதாகும்.

போதல் வேண்டும் என்று கூறும்போது நான் இப்போது போதல் வேண்டும் என்று தன்மையிடத்தோடு சேர்கிறது. நீ இப்போது போதல் வேண்டும்- முன்னிலையுடன் சேர்ந்து நிற் கிறது. அவன் போதல் வேண்டும் எனப் படர்க்கையுடன் சேர் கிறது. இவ்வாறாக 'வேண்டும்' என்னும் வினைமுற்று தன்மை முன்னிலை படர்க்கை மூவிடங்களுக்கும் உரியதாகிறது.

சிவ.

'இது செயல் வேண்டும்' என்னும் கிளவி தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடங்களிலும் வரும் என்பது இச்சூத்திரப் பொருளாகக் கொண்டார் ஆதித்தர். அது கருத்தாயின் ஆசிரியர் இச்சூத்திரத்தைப் பொதுவினைகள் கூறிய ''முன்னிலை வியங் கோள்'' (வினை. 25) என்னும் சூத்திரத்தையடுத்துக் கூறியிருப் பர். அங்ஙனம் கூறாமையாலும், முன்னிலை படர்க்கை நோக்கிப் 'பிறர்பாலானும்' எனப் பன்மையிற் கூறாது 'பிறன்பாலானும்' என ஒருமையிற் கூறியதாலும் ஆசிரியர் கருத்து அதுவன்று. முன்னை உரையாளர் கூறியதேயாகும். அன்றியும் 'இருவயின் நிலையும் பொருட்டாகும்' எனப் பொருளடிப்படையில் கூறிய தையும் நோக்குக.

இனித் தெய்வச்சிலையார் கூறிய கருத்தும் பொருந்தாது. அவர் காட்டிய உதாரணம் நீ உண்ணல் வேண்டும் என்பது. இதில் நீ வேண்டும் என முடிப்பது தவறு. 'யான் நீ உண்ணல் வேண்டும்' என்றாலும் யான் வேண்டும் என்பது தவறு. ஏன் எனின் செய்யும் என்முற்று தன்மை முன்னிலைகளுக்கு வாராது.

ச. அகத்தியலிங்கம்

தொல்காப்பியத்திலும் பிறநூல்களிலும் வேண்டும் என்ற வினை முதல்வினையாகவும், துணை வினையாகவும் வந் துள்ளமை காணலாம்.

உம்மை வேண்டும்
இன்மை வேண்டும்

நீட்டம் வேண்டும்
பெருக்கத்து வேண்டும் பணிதல்

போன்ற இடங்களில் வேண்டும் என்பது முதல்நிலை வினையாகவும்,

மிகுதல் வேண்டும்
நிற்றல் வேண்டும்

போன்ற இடங்களில் துணை வினையாகவும் வந்துள்ளது.

இந்நிலையில் தொல்காப்பியர் மேலே காட்டிய நூற்பாவில் முதல்வினையாக வரும் வேண்டும் என்பது பற்றிக் கூறினாரா, துணைவினையாக வரும் வேண்டும் என்பது பற்றிக் கூறினாரா? என்ற ஐயம் எழுவது இயற்கையே. முதல்வினை பற்றிக் குறிப்பிடுகிறார் என்றால் இப்பொதுப் பண்பினைக் கொண்டு விளங்கும் பிற வினைகளும் (உவக்கும்—சாத்தன் ஓதல் உவக்கும், நினைக்கும்—சாத்தன் ஓதல் நினைக்கும்) இருக்கும் போது இத்தன்வினை (வேண்டும்) பற்றிமட்டும் குறிப்பிடுவானேன்? என்ற எண்ணம் எழுவது இயற்கையே. இந்நிலையில் தொல்காப்பியர் துணை வினையாக வரும் வேண்டும் என்பது பற்றியே குறிப்பிடுகிறார் என எண்ணுவதே பொருத்தம். அவ்வாறாயின் விதந்து கூறுவதன் நோக்கம் பற்றியும் ஆராய்தல் வேண்டும்.

....

'நான்போதல் வேண்டும்' என்னும் வாக்கியத்தில் 'வேண்டும்' என்பது துணைவினையாக வந்துள்ளமையும், முதல்வினையை

பணம் எனக்கு வேண்டும்
பணம் வேண்டும் எனக்கு

என மாற்றுவது போன்று எனக்குப் போதல் வேண்டும் என்பபதை

வேண்டும் போதல் எனக்கு
எனக்கு வேண்டும் போதல்

என மாற்ற முடியாமையும் கவனித்தற் பாலன. மேலும் துணை வினையாய் வரும்போது Must என்ற பொருளில் (இன்றியமையாமை என்ற பொருளில்) வருவதும் உணரத்தக்கது. பேச்சு வழக்கில் போகணும் (போகல் + வேண்டும் = போகணும்) வரணும் (வரல் + வேண்டும்) என முதல் வினையுடன் ஒன்றி ஒருசொல்

ஓர்மைத்தாய் நிற்பதும், முதல் வினையாக வரும் வேண்டும் என்பது எப்போதும் பிரிந்தே நிற்பதும் போன்ற இன்னோரன்ன பல பண்புகள் இவற்றிடையேயுள்ள வேறுபாட்டினைக் காட்டும்.

....

தொல்காப்பியர் காலத்தும், அதையடுத்த சங்ககாலத்தும் துணைவினை அத்துணையளவு வளர்ச்சி பெறவில்லையென்றாலும் அதனுடைய விதை தொல்காப்பியர் காலத்திலேயே காணப்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். 'படு' என்னுந் துணைவினை பற்றித் தொல்காப்பியர் பரக்கப் பேசாவிடினும், தொல்காப்பிய நூற்பாக்களில் இத்துணைவினை வருதல் கண்கூடு.

இதுபோன்றே தொல்காப்பிய நூற்பாக்களில் 'செய்தல் வேண்டும்' போன்ற தொடர்கள் வரக் காண்கிறோம். அவர் இதனைத் துணைவினை எனக் கருதவில்லையாயினும் பிற எந்த வினைகளிலும் காணாத சில பண்புகளை இதில் கண்டிருத்தல் வேண்டும். இவை ஒருசொல் நீர்மைத்தாய் வருவதை உணர்ந்த நிலையில்தான் இவற்றைப் பிரிக்காது 'இது செயல் வேண்டும்' என வாய்பாடாகஓதினார் எனக்கருதலாம். எனவே இச்சூத்திரம் முதல்வினை பற்றிக் கூறவில்லையெனவும், துணைவினை பற்றியே கூறுகிறது எனவும் எண்ணுதல் பொருந்தும். (இது செயல் வேண்டும் — இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் 1. பக். 237-254

வினா எதிர்மறைப்பொருள் தரல்

239. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொ
லெதிர்மறுத் துணர்த்தற் குரிமையு முடைத்தே (45)

(வன்புஉற வரூஉம் வினாஉடை வினைச்சொல்
எதிர்மறுத்து உணர்த்தற்கு உரிமையும் உடைத்தே)

ஆ. மொ: இல.

The interrogative verb which has the function of denoting certainty may have the capacity of denoting nagative sense also.

பி. இ. நூ:

முத்து. வி. 44

வன்மைப் பொருள்வயின் வரும்வினா வினையை
எதிர்மறுத் துரைப்பினும் இழுக்கா வாகும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் வினைச் சொற்படும் பகுதி வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

உரை: வன்புற வரூஉம் என்பது திட்பம் செய்தற்கு வரூஉம் என்றவாறு. வினாவுடை வினைச்சொல் என்பது ஆ ஏ ஓ என்னும் வினாவினையுடைத்தாய் வருஞ்செய்கைச் சொல் என்றவாறு: எதிர்மறுத்து உணர்த்தற்கு உரிமையும் உடைத்தே என்பது மறுதலைப்பட உணர்த்துதற்கு உரிமையும் உடைத்து, எ—று.

வ-று: ஒருவனை ஒருவன் 'வைதேனோ' என்று வையாமையை வலியுறுத்தற்கு வினாயக்கால், அது, வைதேன் என்று [1]நேர்வுபடும் என்றவாறு. உம்மை எதிர்மறையாகலான் வைதிலேன் என்றும் [2]நேர்வுபடும் சிறுபான்மை.

சேனா.

இ—ள்: துணிந்து திட்பம் எய்துதற்கு வரும் வினாவையுடைய வினைச்சொல் வினைநிகழ்வுணர்த்தாது எதிர் மறுத்துணர்த்துதற்கு உரித்தாதலும் உடைத்து, எ—று.

வினாவாவன ஆ ஏ ஓ என்பன.

உ—ம்: கதத்தானாகக் களியானாக ஒருவன் தெருளாது ஒருவனை வைதான். அவன், தெருண்டக்கால், வையப்பட்டான் 'நீ யென்னை வைதாய்' என்ற வழித் தான் வைதவை யுணராமையான் 'வைதேனே" என்னும்; ஆண்டவ்வினாவோடு வந்த வினைச்சொல் 'வைதிலேன்' என்னும் எதிர்மறைப் பொருள்பட வந்தவாறு கண்டு கொள்க.

வினாவொடு வந்தவழி எதிர்மறைப்பொருள் படுமாறு என்னை யெனின், சொல்லுவான் குறிப்பு வகையான் எதிர்மறைப்பொருள் உணர்த்திற்றென்க. எதிர்மறைப் பொருள் உணர்த்திற்று ஆண்டேகாரமாதலின், வினைச்சொல் எதிர் மறுத்துணர்த்துதற்கு உரிமையும் உடைத்தென்றல் நிரம்பா

1, 2 நோவுபடும் என உரையில் ஈரிடத்தும் காணப்படுகின்றது. அவை நேர்வுபடும் என்றிருக்கலாம் எனத் தெரிகின்றது. அங்ஙனமாயின் முதற்கண் வருமிடத்து உடம்படவும் பெறும் என்றும், அடுத்து வருதற்கண் சொல்லப்படும் என்றும் பொருள் கொள்ள வேண்டும்—சுந்தரமூர்த்தி.

தெனின், 'எதிர் மறையாயின பயன் தருவது 'வினாவுடை வினைச்சொல்' என்றாராகலின்அஃதெதிர்மறுத்தல் யாண்டையது தென மறுக்க.

வினை நிகழ்வுணர்த்தற் பாலது வினையது நிகழாமை யுணர்த்துதல் வழுவாயினும் அமைக என வினைச் சொற்பற்றி மரபு வழுவமைத்தவாறு.

தெய்.

இதுவுமது.

இ—ள்: வற்புறுத்தற் பொருண்மைக்கண் வரூஉம் வினாவுடை வினைச்சொல் எதிர் மறுத்துப் பொருள் உணர்த்துதற்கு உரிமையாகலும் உடைத்து, எ—று.

உ—ம்: யான் வைதேனா, யான் வைதேனோ என்பன வினாப்பொருண்மைப் படுதலன்றி வைதிலேன் என எதிர் மறைப் பொருளும் பட்டவாறு கண்டு கொள்க.

நச்.

இதுவும் வினைச்சொல் பொருள்படு வேறுபாடு கூறுகின்றது.

இ—ள்: வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்— ஒருவன் இன்னாங்கு உரைத்தான் என்று ஒருவன் மனங் கொண்டிருந்தவழித் தான் அவ்வின்னாங்கு உரையாமையை அவன் மனத்து வலியுறுத்துதற்கு வரும் வினாவினையுடைய வினைச் சொல், எதிர் மறுத்து உணர்த்தற்கு உரிமையும் உடைத்து— அவ்வுரையாமையை உணர்த்துகின்ற நிலைமையை மறுத்துத் தான் உரைத்தானாக உடம்பட்டமையை அவற்கு உணர்த்து தற்கு உரிமையினையும் உடைத்து, எ—று.

உம்மை எதிர்மறையாகலான், மறுத்தல் பெரும்பான்மை. நேர்தல் சிறுபான்மை.

ஆ ஏ ஓ என்பன வினா. ஒருவன் கதத்தானாகக் களியானாக மயங்கி இன்னாங்கு உரைத்துப் பின் தெருண்டவழி, அவ்வின்

---

1. எதிர் மறையாய பயன் தருவது 'வினாச்சொல்' என்னாமல் 'வினாவுடை வினைச்சொல்'என்றமையால் வினைச்சொல்லே எதிர்மறையுணர்த்துவது என்றும், வினாச்சொல் வினாப்பொருளை மட்டுமே தருதலின் அவ்வினா எதிர் மறுத்தல் எங்குளது என்றும் இத் தொடர்க்கு விளக்கம் காண்க.

னாங்கு உரைக்கப்பட்டான், 'நீ என்னைவைதாய்' என்றக்கால், 'நான் வைதேனோ' எனத் தான் வையாமையை வலியுறுத் தற்குக் கூறியது, தானே, அப்பொழுது வைதேன்; நோகாதே என நேர்ந்தமைபடவும்; இனி, தான் வைதமையைவலியுறுத்து தற்கு வரும் 'வைதேனே' என்னுஞ் சொல் 'வைதிலேன்' என் னும் எதிர்மறையை உணர்த்தி நிற்கும் என்றலுமாம்.

கல்.

என்—எனின், இதுவும் வினைச்சொல்லது பொருள்படும் வேற்றுமையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருவன் ஒரு தொழிலினைச் செய்தானாகத் தன்னை ஒருவன் மனங்கொண்டிருந்தவழி, தான் அது செய்யாமை அவன் மனத்து வலியுற வேண்டி அது செய்திலேன் என எதிர்மறைப் பொருட்கண் வருகின்ற வினா வினையுடைய வினைச்சொல், அவ்வாறு தான் அது செய்யாமை உணர்த்து தற்கு நின்ற நிலைமை எதிர் மறுத்துத் தான் அது செய்தா னாக உடன்பட்டமை அவற்கு உணர்த்துதற்கு உரிமையினை யும் உடைத்து, எ—று.

உ-ம்: கதத்தானாதல் களியானாதல் மயங்கி இன்னாங் குரைத்துப் பின் தெருண்டவழி, அவ்வின்னாங்கு உரைக்கப் பட்டான் 'நீ என்னை வைதாய்' என்றக்கால், 'யான் வைதேனோ' எனத் தான் வையாமையை வலியுறுத்தற்குக் கூறி, அது தானே 'அப்பொழுது வைதேன்; நோகாதே' என்று நேர்ந்தமை பட நிற்கும் என்பது.

உம்மை எதிர்மறையாகலான் மறுத்தல் பெரும்பான்மை: நேர்தல் சிறுபான்மையெனக் கொள்க.

இவ்வாறு பொருளுணர்த்துகின்ற தொடர்க்கண் வினா விடைச் சொல்லாகலான் அஃதாண்டைக் காராய்ச்சி யன்றோ எனின், அச்சொல்லெடுப்பானே 'வைதேன்' என்னும் உடன் பாட்டு வினைச்சொல் 'வைதேனோ' என ஒருவழி 'வைதிலேன்' என்னும் எதிர்மறைப் பொருள் பெரும்பான்மையாயும், ஒருவழி அம்மறை நிலையை விட்டுத் தன் உடம்பாட்டுப் பொருண்மை சிறுபான்மையாயும் நின்றமையான் ஈண்டைக்கும் ஒரு வழு வமைதி ஆராய்ச்சித்தாயிற் றென்பது.

ஆதி.

கடிந்து வரும் வினாவடிவத்து வினைச்சொற்கள் எதிராக மறுத்துப் பொருள் உணர்த்துதற்கும் உரிய.

உனக்குப் படிப்பு வருமா?—வருமா வினைவினா. அது வாராது எனக் குறிப்பால் பொருள் தருகிறது! (வினாவாக அன்று)

நான் அடித்தால் நீ தூங்குவாயா?—தூங்கமாட்டாய் எனப் பொருள் தருகிறது. தூங்க முடியுமா என வினாவாக அன்று. வினை, வினாஉருவில் நின்று எதிர்மறைப் பொருள் தரும் என்று குறிப்பிடுகின்றார்.

வன்பு—வலிமை, கடிதல்

வினா—வினாப் பொருளாகவும் நிற்கும் என்று சுட்டவே 'உரிமையும் உடைத்து' என்றார். உரிமையின்றேல் வினா ஆகும்.

சிவ.

(1) வைதேனே?—இது ஏகாரவினாவையுடைய வினைச் சொல். இதன்பொருள் வையவில்லை என்பது. அதனால் இச் சொல் வையவில்லை என்பதை வற்புறுத்த வந்த (வன்புறவந்த) வினாவுடைவினைச் சொல்லாம். இது 'ஆம்; வைதேன்' என்னும் பொருளிலும் வருவதுண்டு. அதாவது வையவில்லை என்பதை எதிநிமறுத்து வைதேன் என்னும் பொருளில் வருவதுண்டு. இக்கருத்துக்கேற்பச் சூத்திரப் பொருள் வருமாறு:

> வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் = இல்லையென வற்புறுத்த வருகின்ற வினாவிடைச்சொற் கொண்ட வினைச்சொல், எதிர்மறுத்துணர்த்தற்கு உரிமையும் உடைத்து = இல்லையென்பதை எதிர்த்து மறுத்தற்கு (உண்டு என்பதற்கு) உரிமையும் உடைத்து என்றவாறு.

இக்கருத்தினைக் கொண்டோர் இளம்பூரணர், நச்சினார்க் கினியர், கல்லாடனார்.

(2) வைதேனே?—இது ஏகார வினாவையுடைய வினைச் சொல். இதன் பொருள் 'ஆம்; வைத்தேன்' என்பது. அதனால் இச்சொல் 'வைதேன்' என்பதை வற்புறுத்த வந்த வினாவுடை வினைச்சொல்லாம். இச்சொல்'வையவில்லை' என்னும் பொருளி லும் வருவதுண்டு. அதாவது வைதேன் என்பதை மறுத்து வைய வில்லை என்னும் பொருளில் வருவதுண்டு. இக்கருத்துக்கேற்பச் சூத்திரப் பொருள் வருமாறு:

வன்புற் வரூஉம் வினாவுடை வினைச்சொல் = தான் செய்த செயலை ஆம் உண்டுஎன வற்புறுத்தவரும் வினாவிடைச் சொல் லோடு கூடிய வினைச்சொல், எதிர்மறுத்துணர்த்தற்கு உரிமை யும் உடைத்து. = ஆம் உண்டு என்பதை எதிர்மறுத்தற்கு(இல்லை என்பதற்கு) உரிமையும் உடைத்து என்றவாறு.

இக்கருத்தினைக் கொண்டோர் சேனாவரையர், தெய்வச் சிலையார்.

(3) ஆதித்தர் பொருள் கொள்ளுமாறு:

'வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்—கடிந்து பேச வருகின்றவினாவினைவுடைய வினைச்சொல், எதிர்மறுத்துணர்த் தற்கு உரிமையும் உடைத்து—வினையைமறுத்து உணர்த்தற்கு உரிமையும் உடைத்து என்றவாறு. 'யான் அடித்தால் நீ தூங்கு வாயா?' என்பது தூங்கமாட்டாய் என்னும் பொருளில் வந்தது.

ஆதித்தர் கருத்து, ஓகாரவிடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வரும் என ஆசிரியர் கூறியதில் (இடையியல்) அடங்கும். ஆதலின் ஈண்டுக் கூறவேண்டுவதில்லை.

''வினாவும் செப்பே வினா எதிர்வரினே'' என்று கிளவியாக் கத்திற் கூறப்பட்டது. சாத்தா உண்டாயோ என்ற வினா வுக்கு உண்ணேனோஎன எதிர்வினாவிடுதல் அதற்கு உதாரணம். எதிர் வினாவின் பொருள் உண்பேன் அல்லது உண்டேன் என்பதை வற்புறுத்தலாகும். அவ்வெதிர் வினாவே வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் எனப்படும். இது உடன் பாட்டுப் பொருளில் வருவது. இனி மற்றொரு வகை வருமாறு: உண்டாயோ சாத்தா என்றால் உண்டேனோ என்பதும் ஒரு வகை; உண்ணவில்லை என்பதை வலியுறுத்துவது பொருள். இது வும் வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்லே. இது எதிர் மறைப் பொருளில் வருவது.

எனவே இச்சூத்திரத்துக்கு வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் என்பதற்கு உடன்பாட்டுப் பொருளில் வருவதைக் கொண்டால் எதிர் மறுத்தலை எதிர்மறைப் பொருளுக்குக் கொள்க. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் என்ப தற்கு எதிர்மறைப் பொருளில் வருவதைக் கொண்டால் எதிர் மறுத்தலை உடன் பாட்டுப் பொருளுக்குக் கொள்க.

எனவே உரையாளர் இருவகையினரின் கருத்துகளும் ஏற்புடையனவே.

காலமயக்கம்-இயற்கையும் தெளிவும் பற்றி

240. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினும் நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை (46)

(வாராக் காலத்து வினைச்சொல் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
(இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை)

ஆ. மொ: இல.

The past and present tenses may be used in the place of future tense when denoting an action which is quite natural and very certain to occur.

பி. இ. நூ:

நன். 384

......இயல்பினும் தெளிவினும்
பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.

இல. 304

......இயல்பினும் தெளிவினும்
முக்காலமும் ஏற்புழி மயங்கும்

முத்து. வி. 45

எதிர்விற் குரிய வினைச்சொற் கிளவி
தெளிவும் இயற்கையும் செப்புங் காலை
இறம்பினும் நிகழ்வினும் இயம்பப் படுமே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் கால வழூஉக் காத்தல் நுதலிற்று;

உரை: எதிர்காலத்துச் செயற்கைச்சொல் இறந்த காலத்தை யும் நிகழ்காலத்தையும் கொள்ளும், இயற்கைக் கண்ணும் தெளி வின் கண்ணும் சொல்லுமிடத்து, எ-று.

1. செயற்கைச் சொல்=செயலை உணர்த்தும் சொல்—வினைச்சொல்,

இயற்கையென்பது அதன்மேற்றீமை. தெளிவு என்பது ஒரு நூல் முடிபானும் பிறிதானும் கண்டு தெளிதல்.

வ—று : இக்காடு போகிற் கூறைகோட்பட்டான், கூறை கோட்படும். இஃது இயற்கை.

இனித்தெளிவு: எறும்பு முட்டைகொண்டு [1]தெற்றியேறின் மழை பெய்தது, மழை பெய்யும் என்பது.

சிறப்பத் தோன்றும் என்பது அவ்விரு காலத்தானும் சொல லப் பிழையாது [2]யாப்புற்றுப் புலப்படும் எனறவாறு.

சேனா.

இ-ள் : எதிர்காலத்துக்குரிய வினைச்சொற் பொருண்மை இயற்கையாதலும் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து, இறந்த காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும், எ—று.

இயற்கையென்பது பெற்றி முதலாயினவற்றால் உணரப்படு வது. தெளிவு என்பது நூல்தெளிவான் வருவது.

உ-ம்: ஒரு காட்டின்கட் போவார் கூறைகோட்படுதல் ஒரு தலையாகக் கண்டு இஃதியற்கையென்று துணிந்தான், கூறை கோட்படா முன்னும், இக்காட்டுட் போகிற் கூறைகோட்பட் டான், கூறைகோட்படும் என்னும்.

எறும்பு முட்டைகொண்டு தெற்றியேறின் மழை பெய்தல் நூலாற் றெளிந்தான், அவைமுட்டைகொண்டு தெற்றியேறிய வழி, மழை பெய்யாமுன்னும் மழைபெய்தது, மழை பெய்யும் என்னும். ஆண்டு எதிர்காலத்திற்குரிய பொருள் இறந்த காலத் தானும் நிகழ்காலத்தானும் தோன்றியவாறு கண்டு கொள்க.

இது கால வழுவமைத்தவாறு.

தெய்.

கால வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எதிர்காலத்து நிகழும் வினைச் சொல் இறந்த காலத்தானும் நிகழ்காலத்தானும் பொருள்விளங்கத்தோன்றும்;

1. தெற்றி—திட்டை, மேட்டுப்பகுதி.
2. யாப்புற்று—பொருத்தமுற்று.

ஓர் இயற்கையும், ஒரு பொருளினது தெளிவையும் கிளக்கும் காலத்து, எ-று.

உ—ம்: ஆறலை கள்வர் இயங்குவதோர் காட்டிடைப் போகலுற்றானை, அவ்விடத்துப் போகுவையாயின் கூறைகோட் படுவை எனற்பாலான், பட்டாய் எனவும், படாநின்றாய் எனவும் கூறும். இது இயற்கை. [1]"சென்றது சென்றது வாழ்நாள், வந்தது வந்தது கூற்று (நாலடி.4) வாழ்நாள் சொல்லா நின்றது எனற்பாலது சென்றது எனவும், கூற்றுவரும் எனற்பாலது வந்தது எனவும் நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தான் வந்தன. வாழ்நாள் செல்லுதலும் கூற்று வருதலும் ஒருதலை யாகலின் இவை தெளிவுபற்றி வந்தன. [2]நிகழ்காலத்தான் வருவன வந்தவழிக் கண்டு கொள்க.

நச்.

இஃது எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும் மயங்கும் என்கின்றது.

இ—ள்: வாராக் காலத்து வினைச் சொற்கிளவி—எதிர் காலத்திற்குரிய வினைச் சொல்லாகிய சொல்லின் பொருண்மை, இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத்தோன்றும் இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை—வழங்கலாற்றான் இஃது இப்பெற்றித்து எனப் பெற்றியான் அறிந்திருந்த இயல்பாகலும் இதுநிகழின் அது நிகழும் என நூல்நெறியால் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து இறந்தகாலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும், எ-று.

உ-ம்: இக்காட்டுள் போகின் கூறைகோட்படுவன் எனற் பாலது, கூறைகோட்பட்டான், கூறைகோட்படுகின்றான் எனக் கூறுதல் இயற்கை. எறும்பு முட்டைகொண்டு தெற்றி ஏறியது கண்டுழி மழை பெய்வதாம் என்னாது மழை பெய்தது, மழை பெய்கின்றது எனக் கூறுதல் தெளிவு.

---

1. நிகழ்காலம் இறந்த காலத்தாற் சொல்லப்படுதல் சூத்திரத்தில் கூறப்படவில்லை. தெய்வச்சிலையார் வருவித்துக்கொண்டார். அதற்கு இலேசும் கூறவில்லை.
2. நிகழ்காலத்தான் வருவனவற்றுக்குப் பிறர் எறும்பு முட்டைகொண்டு தெற்றியேறின் மழை பெய்கின்றது என்பதைக் காட்ட, இவர் விட்டார். காரணம் இவ்வுதாரணத்தை இயற்கையாகக் கருதுவர் போலும் என்பர், சுந்தரமூர்த்தி.

கல்.

என்-எனின், இயற்கை தெளிவு என்னும் பொருட்கண் எதிர்காலம், இறந்தகாலத்தொடும் நிகழ்காலத்தொடும் மயங்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வ்ாராக்காலமாகிய எதிர்காலத்தும் பிறக்கும் வினைச் சொல்லாகிய சொல்லின் பொருண்மை இறப்புக்காலச் சொல் லானும் நிகழ்காலச் சொல்லானும் மிகத் தோன்றும்; யாண் டெனின், ஒன்றனது இயற்கையினையும் ஒன்றனது தெளிவினை யும் ஒருவன் சொல்லுங்காலத்து, எ—று.

இயற்கையென்பது வழங்குங்கால் தான் ஒன்றனை இஃது இப்பெற்றியதாகும் என்றறிந்திருந்த இயல்பு என்றவாறு.

தெளிவு என்பது ஒரு நூல் நெறியான் இது நிகழும் எனக் கண்டு வைத்துத் துணிதல் என்றவாறு.

உ-ம்: இக்காட்டுள் போகின் கூறைகோட் படுவன் என்னாது இக்காட்டில் புகின் கூறைகோட்பட்டான் எனவும், கூறைகோட் படுகின்றான் எனவும் கூறுதல்; இஃது இயற்கை.

எறும்பு முட்டை கொண்டு தெற்றி ஏறுவது கண்டுழி மழை பெய்வதாம் என்னாது பெய்தது எனவும், பெய்கின்றது எனவும் கூறுதல். இஃது தெளிவு.

இதுவும் சொல்லொடு சொல் மயக்கம்.

ஆதி.

எதிர்காலத்துக்குரிய வினைமுற்று இயற்கை, தெளிவு காரணங்கள் பற்றி இறந்த காலம் நிகழ்காலமாக விளக்கமுறத் தோன்றும்.

எதிர்காலம், இறந்தகால நிகழ்காலங்களாக மாறி வரும் எனக் குறிப்பிடுகின்றார்.

முதலையை அணுகுவானைப் பார்த்து 'அதன் அருகில் போனாய், செத்தாய்' என எச்சரிப்பர். அருகில் போவாய் எனின் சாவாய் என எதிர்காலத்தில் வரவேண்டியது தெளிவு (உறுதி) பற்றி இறந்த காலத்தில் வந்தது.

என் பெண்ணைத் தொட்டாய், தலை உடைந்தது
என் பெண்ணைத் தொடுவாயாயின், தலை உடைபடும்

என்ற எதிர்காலம் இறந்தகாலமானது.

பாலுக்குப் பணம் கொடுத்தாயிற்றா—வினா.

நாளைக்குக் கொடுக்கிறது, என்ன கெட்டுப் போயிற்று—பதில்.

கொடுப்பின் என்னும் எதிர்காலம் கொடுக்கிறது என நிகழ் காலமாக நின்றது.

இன்று படிக்கவில்லையே, நாளைக்குப் படித்து வருகிறாயா? நாளைக்குப் படித்து வருவாயா என்னும் எதிர்காலம் நிகழ்கால மாக நிற்கிறது—காலவழுவமைதி. (சூ. 43 எதிர்காலம் நிகழ் காலம் இரண்கக்கும் ஒத்தமுறை கூறினார். இங்கு எதிர்காலம் ஏனைய இரண்டாகவும் மாறுவது கூறினார்)

செயப்படுபொருள் செய்பொருளாதல்

241. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே (47)

(செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழில்படக் கிளத்தலும் வழக்குஇயல் மரபே)

ஆ. மொ: இல.

It is an accepted usage to use object as subject.

பி. இ. நூ:

நேமி. சொ. 65

செயப்படு பொருளைச் செய்ததெனச் சொல்லுதலும்
எய்தப்படும் வழக்கிற்கு ஈங்கு

நன். 400

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே

இல. 357.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே

முத்து. வி. 49.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தல் தொல்லியல் மரபே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் ஒருவகை வழூஉச்சொல் அமைந்தமை நுதலிற்று.

உரை : [1]வினைக்கட் செய்கையீறாச் செய்யப்பட்ட பொருளைத் தான் செய்ததுபோல அதற்குத் தொழிற் கூறலும் உண்டு, வழக்கப்பட்ட மரபிலக்கணம், எ-று.

வ-று : இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது எனவரும்.

சேனா.

இ-ள் : செயப்படு பொருளைச் செய்த வினை முதல் போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலு மரபு, எ-று.

வழக்கியல் மரபு எனவே இலக்கணம் அன்று என்றவாறாம்.

உ-ம் : திண்ணை மெழுகிற்று, கலங்கழீஇயிற்று என வரும்.

திண்ணை மெழுகப்பட்டது, கலங்கழுவப்பட்டது என்றுமன் ஆகற்பாலது, அவ்வாய்பாடன்றி வினைமுதல் வாய்பாட்டான் வருதலும் வழக்கின் உண்மையான் அமைக என வினைச்சொற் பற்றி மரபு வழுவமைத்தவாறு.

செயப்படு பொருளை வினைமுதல் வாய்பாட்டாற் கிளத்த லேயன்றி எளிதின் அடப்படுதல் நோக்கி அரிசிதானே யட்டது எனச் செயப்படு பொருளை வினை முதலின் தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபு என்றற்குத் தொழிற்படக் கிளத் தலும்' என்றர். இதைக் கரும கருத்தன் என்ப.

தெய்.

இது வினைச் சொற்கள் தம்முள் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : செயப்படு பொருளைச் செய்யப்பட்டது எனக் கூறாது கருத்தாவைக் கூறுமாறுபோலத் தொழிற்படச் சொல்லு தலும் வழக்கியல் மரபு, எ-று. மரூஉ வழக்கு என்றவாறு.

உ-ம்: சோறடப்பட்டது, திண்ணை மெழுகப்பட்டது எனற் பாலன சோறட்டது, திண்ணை மெழுகிற்று என வரும். உம்மையாற் கருவியைக் கருத்தாவாகக் கூறலும் கொள்க. வாள் வெட்டிற்று, சுரிகை குத்திற்று என வரும்.

---

1. "செய்யப்பட்ட பொருளைத் தான் செய்ததுபோலே வினைக்கண் செய்கையீறாக அதற்குத் தொழிற் கூறலும் உண்டு, வழக்கப்பட்ட மரபிலக்கணம்" என இவ்வுரைக்குக் கொண்டு கூட்டுக. செய்கையீறாக— செயல் ஈறாக — அதாவது வினைமுதல் ஈறாக,

நச்.

இது வினைச் சொற்கண் மரபுவழுவமைதி கூறுகின்றது.

இ-ள் : செயப்படு பொருளை — ஒரு வினை முதல் ஒரு தொழில் செய்வதனை உறுவதாகிய பொருளை, செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் — தான் அத்தொழிலினைச் செய்த வினைமுதல் போல அத்தொழில் அதன் மேற்படக் கூறுதலும், வழக்கியல் மரபே — வழக்கின் கண்ணே நடக்கும் முறைமை எ—று.

எனவே, இலக்கணம் அன்றாயிற்று.

உ-ம் : இல்லம் மெழுகப்பட்டது என்னாது, இல்லம் மெழுகிற்று என்றலும் இங்ஙனம் வினை முதல் வாய்பாட்டாற் கிளத்தலே யன்றி, எளிதின் அடப்படுவதனை நோக்கி அரிசி தானே யட்டது எனச் செயப்படு பொருளை வினைமுதலாகக் கூறலும் அடங்குதற்குத் 'தொழிற்படக் கிளத்தலும்' என்றார்.

இனி ஒன்றென முடித்தலான் இவ்வாள் எறியும் எனக் கருவியைத் தானே செய்வதாகக் கூறும் கருவிக் கருத்தாவும், அரசன் எடுத்த ஆலயம் என ஏவினானைக் கருத்தாவாகக் கூறும் ஏதுக் கருத்தாகவும் கொள்க.

கல்.

என்-எனின், இதுவும் வினைச் சொற்கண் நிகழும் மரபு வழுஉவமைதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் : பிறிதொன்றனான் ஒரு தொழில் செய்யப்படுவதாகிய பொருளினைத் தான் அத்தொழிலினைச் செய்தது போல அத்தொழில் அதன் மேற்படக் கூறுதலும் வழக்கின் கண்ணே நடக்கும் முறைமையுடையதாம், எ-று.

உ-ம் : இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது என வரும்.

இனி ஒன்றென முடித்தல் என்பதனால் இவ்வாள் எறியும் இச் சுரிகை குத்தும் எனச் செய்தற்கு உடனாய கருவியைத் தான் செய்ததாகச் சொல்லுதலும், அரசன் எடுத்த ஆலயம் என்றாற்போல ஏவினானைக் கருத்தாவாகச் சொல்லுதலும் அமைத்துக் கொள்ளப்படும். எனவே, கருத்தாக் கருத்தாவும் ஏதுக்கருத்தாவுந், கருவிக் கருத்தாவும், கரும கருத்தாவும் என நான்கு வகைப்படுஉம் என்பதும், அவற்றுள் இது கரும கருத்தா என்பதும் பெறப்பட்டது.

இன்னும் இதனானே உண்டல், தின்றல் என்னும் தொழில் தன்னையும், உண்டது தின்றது என்று கருத்தா வினைப்போலக் கூறும் வாய்பாடும் கொள்க.

ஆதி.

செயப்படு பொருளை அஃதே அக்காரியத்தைச் செய்தது போல் வினைசேர்த்துச் சொல்வதும் உலக வழக்கில் உண்டு.

கம்பர் இராமாயணத்தை எழுதினார். உலக வழக்கில் [1]இராமாயணம் எழுதியது கம்பர் எனக்கூறுவர். செயப்படு பொருளாகிய இராமாயணம் வினைசெய்ததாகச் சொல்லப் படுகிறது.

இந்த வீடு கட்டியது சுந்தரனார், வீட்டைக் கட்டியவர் என்று வரவேண்டியது 'வீடு கட்டியது' எனச் செயப்படு பொருள் செய்தது போலக்கூறப்பட்டது.

மு. வரதராசனார்

மனிதர் தக்க சொற்களுக்குக் காத்திராமல், கிடைத்தசொற் களைக்கொண்டு விரைவில் அந்த கருத்துக்களை உணர்த்துதல் உண்டு.

''இந்த கடையில் நெய் விற்கப்படுகிறது'' என்று சொல்வது பொருந்தும். 'விற்கப்படுகிறது' என்ற செயப்பாட்டுவினை வழங்கிப் பழகாத காரணத்தால், 'இந்த கடையில் நெய்விற் கிறது' என்ற சொற்களைக்கொண்டே அந்த கருத்தை உணர்த்தி விடுகிறோம். தமிழ்மொழியில்இந்தவழக்கு வேரூன்றிவிட்டதைக் கண்ட தொல்காப்பியர்'செயப்படு பொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத்தலும் வழக்கியல் மரபே'' என்று அதற்கு விதி வகுத்திட நேர்ந்தது. காது தோண்டும் கருவி கிடைத்திடாத

1. திண்ணை மெழுகிற்று என்னும் வழக்குப்போல இராமா யணம் எழுதியது என்னும் வழக்கில்லை. இராமாயணம் எழுதியவர் கம்பர் என்பது இராமாயணம் எழுதியது கம்பர் என்னும் வழக்குண்டு. இது உயர்திணை வாய்பாட்டை அஃறிணை வாய்பாடாகச் சொல்வது. இராமாயணம் முடிககப்பட்டது என்பது இராமாயணம் முடிந்தது என்னும் வழக்குண்மையின் இவ்வுதாரணம் அமையும்—சிவ.

வேளையில் நெருப்புக்குச்சியை எடுத்துப் பயன்படுத்தும் மனிதனுடைய இயல்பை இங்குக் காண்கிறோம்'' (காலம் உணர்த்தாத இடைநிலை, புதுமைப்பரிசு (பக் 93, 94)‡

''இங்கே நெய் விற்கப்படும்' என்னும் செயப்பாட்டு வினைப் பொருளில் கூறும்போது இங்கே நெய்விற்கும் என்பர். 'அது என்னால் உடைக்கப்பட்டது' என்று வழங்கும் ஐரோப்பிய மொழிமரபு இங்கு இல்லை. 'அது என்னால் உடைந்தது' என்பதே தமிழ் வழக்கு. செய்வினைப் பொருளில் வரும் எழுவாயை மட்டும் மாற்றுவதால் செயப்பாட்டு வினைப் பொருள் பயககும்...வினைச்சொல் மாறாமல் நிற்றலால்செய்யப் பட்டது. செய்தது என்ற வேறுபாடு தெளிவாகாமல் கியப்பினும் ஓர் இடர்ப்பாடும் இன்றிப் பொருள் விளங்குகின்றது. இது மொழியின் ஆற்றலாகும்'' (மொழி நூல் பக். 235 236)

தே. ஆண்டியப்பன்

செயப்படு பொருளை வினைமுதல்போல அமைத்துத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கில் உண்டு. 'புத்தகம் விற்கப் படுகிறது' என்று கூறாமல் புத்தகம் நன்றாக விற்கிறது என்போம். தன்வினை பிறபுனை என்றுகூறும் வினை நிலையானது எழுவாயை மாற்றியமைக்கும்.

புத்தகம் விற்கப்படுகிறது (Agent oreented)
புத்தகம் ளிற்கிறது (Process oriented)

இவை புறநிலையில் வேறுபடினும் பொருள் நிலையில் ஒத்த வடிவங்களே (Cognilively synonymous) என்பர். புறநிலையில் ஏற்பட்ட மாறுபாட்டிற்கு அகநிலை வேறுபாடுகள் காரணமாக லாம் என்று கருதுவோரும் உண்டு. செய்ததுபோலக் கூறும் மரபு எழுவாயை எடுத்துக்கூறாதபோது அமையும் என்பர். ஆனால் புத்தகம் விற்கப்படுகிறது என்று கூறினாலும் எழுவாய்புலப்படுவ தில்லை. பெரும்பாலும் செயப்படுபொருளுடைய வினைகளே இதுபோன்ற மாற்றத்தைத் தரும் எனலாம். எ-று: அழித்தான், ஆக்கினான்.

அனுமன் அசோகவனத்தை அழித்தான்
அசோகவனம் அழிக்கப்பட்டது

அசோகவனம் அழிந்தது (காப்பியர் நெறி—சொல்லியல்) பக். 106.)

‡ பதிப்பு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை 1961. விற்பனையுரிமை, எம். ஆர். அப்பாதுரை 12, முத்தியாலு செட்டித்தெரு, சென்னை-7)

காலமயக்கம்—இறப்பும்எதிர்வும்

242. இறப்பே யெதிர்வே யாயிரு கா லமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி (48)
(இறப்பே எதிர்வே அ இரு காலமும்
சிறப்புத் தோன்றும் மயங்கும் மொழிக் கிளவி)

ஆ. மொ: இல.

The past and future—these two tenses—may appear well when used in the place of one another.

பி. இ. நூ:

முத்து. வி. 47.

இறப்பும் எதிர்வும் மயங்கியும் இயலும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் காலவழுக் காத்தல் நுதலிற்று.

உரை: இறந்த காலமும் எதிர்காலமும் தம்முள் மயங்கி வரப்பெறும், எ—று.

வ—று: யாம்பண்டு விளையாடுவது இக்கா; பண்டு என்பது இறந்த காலம், விளையாடுவது என்பது எதிர் காலம். விளையாடிற்று என்றுமன் ஆகற்பாலது, அஃது எதிர் காலமும் கொண்டது விளையாடுவது என்று. முன்னும் இறந்த காலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் எல்லாம் மயங்குமாறு சொல்லி வைத்தார், இனி [1]உடன் தொகையாக வுணர்த்தியவாறு. [2]சிறப்பத் தோன்றும் என்பது சாலவுள்ள வழக்கென்பது.

சேனா.

இ-ள்; இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்கு மொழிப் பொருளாய் விளங்கத் தோன்றும், எ—று.

---

1. உடன் தொகையாக—ஒரு தொடரில் இரண்டு கால மும் உடன் சேர்ந்ததாக. 'பண்டுவிள்ளையாடுவது' என்பதில் 'பண்டு இறந்த காலச்சொல்லும் 'விளையாடுவது' எதிர்காலச்சொல்லும் சேர்ந்துள்ளன.
2. சிறப்ப—மிகுதியாக.

உ-ம்: இவர் பண்டு இப்பொழிலகந்து விளையாடுவர், நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தால் நீ என் செய்குவை என வரும்.

அவ்விரண்டு காலமும் மயங்கு மொழிப் பொருளாய்த் தோன்றும் எனவே, அவற்றை யுணர்த்துஞ்சொல் மயங்கும் என்றவாறாம். [1]அவை பெயரும் வினையுமாய் மயங்குதலின் 'மயங்கு வினைச் சொற்கிளவி' என்னாது பொதுப்பட 'மயங்கு மொழிக்கிளவி' என்றார். தோன்றும் என்பது பெயரெச்சம் எனினும் இழுக்காது.

பண்டு விளையாடினார் என்றும், நாளை வருவன் என்று மன்றே கூறற்பாலது; அவ்வாறன்றித் தம்முள் மயங்கக் கூறினும் அமைக என காலவழுவமைத்தவாறு.

தெய்.

காலமயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மயங்குதற்குரிய மொழிக்கண் இறந்த காலமும் எதிர் காலமும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு காலமும் ஒப்பத் தோன்றும், எ—று.

உ-ம்: உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே என்ற வழி, என்றார் எனற்பாலது [2]என்மனார் என வந்தது. பிறவும்அன்ன.

நச்.

இஃது ஒரு பொருண்மை குறியாது சிறப்பும் எதிர்வும் மயங்கும் என்கின்றது.

இ-ள்: இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்—இறப்பும் எதிர்வு மாகிய அவ்விரண்டு காலமும், மயங்கு மொழிக்கிளவி சிறப்பத் தோன்றும்—தம்முள் மயங்கும் மொழிப்பொருளாய் விளங்கித் தோன்றும், எ—று.

---

1. பண்டு, நாளை என்பன பெயர்; விளையாடுவர், வந்தால் என்பன வினை.

2. என்மனார்—என்பார். என்மனார் என்பதற்கு என்றார் என்றும் என்பார் என்றும் பொருள் கூறுதல் உண்டு. அப்படியாயின் தெய்வச்சிலையார் என்பார் என்று கூறு தலையே வேண்டினார் என்னலாம்.

உ-ம்: இவர் பண்டு இப்பொழிலிடத்து விளையாடுவர், நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தால் பின் நீ என் செய்குவை? எனவரும். அவை வினைப்பெயரும் வினையுமாய் மயங்குதலின் 'மயங்கும் வினைச்சொற்கிளவி' என்னாது பொதுப்பட 'மயங்கு மொழிக்கிளவி' என்றார்.

கல்.

என்-எனின், மேற்கூறிய காலமயக்கம் போல ஒரு பொருண்மையைக் குறியாது பல பொருட்கண்ணும் மயங்குவனவற்றுள், இறந்தகாலம் எதிர்காலத்தோடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இறப்பும் எதிர்வும் என்று சொல்லப்பட்ட அவ்விரு காலமும் மயங்கும் சொல்லாகிய சொற்களிடத்து மயக்கமாய்த் தோன்றும், எ—று.

உ-ம்: யாம் பண்டு விளையாடுவது இக்கா; யாம் பண்டு சூதுபொருவது இக்கழகம் என வரும்.

ஆதி.

இறந்த காலம் எதிர்காலம் இரண்டும் சொல்வழக்காற்றில் பெரிதும் மாறி வருவனவாம்.

நாங்கள் முன்னர் இந்த இடத்தில் விளையாடுவோம்; இங்கு அமர்ந்து உண்போம்—இது விளையாடினோம், உண்டோம் என்று இறந்த காலத்தில் வரல் வேண்டும்.

அவன் உன்னையடித்தான்; நீ என் செய்வாய்?—இது 'அவன் உன்னையடிப்பின்' என எதிர்காலத்தில் வரல்வேண்டும்.

கால மயக்கம்—இறப்பும் நிகழ்வும்

243. ஏனைக் காலமு மயங்குதல் வரையார் (49)

(ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்)

ஆ. மொ: இல.

The scholars will not forbid the other tense (preseut) also in this use of one for another.

பி. இ. நூ:

முத்து. வி. 48.

நிகழ்வும் அவற்றொடு நிலவுதல் வரையார்.

நேமி. சொ. 69

முந்துரைத்த காலங்கள் மூன்றும் மயங்கிடினும்
(வந்தொருமை பன்மை மயங்கினும்) —பைந்தொடியாய்
சான்றோர் வழக்கினையும் செய்யுளையும் சார்ந்தியலின்
ஆன்ற மரபாம் அது.

இளம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் இனி ஒழிந்த காலமும் இறப்பினொடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : ஏனைக் காலமும் என்பது ஒழிந்த காலமும் என்றவாறு. மயங்குதல் வரையார் என்பது மயங்கிவரு மரபினை வரையார் இவ்விறப்புக் காலத்தொடு, எ-று

வ—று : யாம் பண்டு விளையாடுங்கா; பண்டு என்பது இறந்தகாலம், விளையாடும் என்பது செய்யும் என்னும் நிகழ் காலச்சொல். இது[1] இறப்பில் வந்து முடிந்தது.

[1]'வரையார்' என்பது 'மற்றாசிரியர்' என்றவாறு. மூன்று காலமும் தம்முள் மயங்கும் என்பது நேர்ந்தானாம் [2]ஆசிரியன். [3]அஃதேயெனின், மூன்று காலமும் அல்லது காலம் இல்லை; அவை மூன்றும் தம்முள் மயங்கும் என்றக்கால், வழூஉ வென்றதில்லையாம் பிறவெனின், அற்றன்று; எவ்வாற்றானும் மயங்கா மூன்று காலமும், மேற்காட்டின உதாரண முடிபு போல்வன படுவழி வழக்கிற்கு ஏற்றவாறு மயங்கும், அன்னவழக்கு உள்வழி என்பது.

ஆறாவது வினையியல் முற்றிற்று.

சேனா.

இ-ள்: இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவற்றெர்டு மயங்கும், எ—று.

---

1 இறப்பில் வந்து முடிந்தது—விளையாடியகா என இறந்த காலத்தில் வந்து முடிந்தது.

1. வரையார் ஆசிரியர் என்றவாறு என்பது பொருள். மற்றாசிரியர்—பிற ஆசிரியர்.

2. ஆசிரியன் என்றது தொல்காப்பியரை

3. காலம் மூன்று ஆயினும் காலம் என்பதில் அடங்குதலின் தம்முள் மயங்குதல் வழுவில்லை என்ற கருத்தில் எழுந்த வினா இது. எனினும் சிறந்த வினா அன்று.

உ-ம்: இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும், நாளை வரும் எனவும் வரும்.

'சிறப்பத் தோன்றும்' (வினை 48) எனவும், 'மயங்குதல் வரையார்' (வினை 49) எனவும் கூறினார்; இறப்பும் எதிர்வும் மயங்குதல் பயின்று வருதலானும், அத்துணை நிகழ்கால மயக்கம் பயின்று வாராமையானும் என்க.

மூன்று காலமும் தம்முள் மயங்கும் என்றாரேனும், ஏற்புழி யல்லது மயங்காமை கொள்க. ஏற்புழிக் கொள்ளவே, வந்தானை வரும் என்றலும், வருவானை வந்தான் என்றலும் என இவை முதலாயினவெல்லாம் வழுவென்பதாம். பிறவுமன்ன.

வினையியல் முற்றிற்று

தெய்.

இதுவுமது,

இ—ள்: இறப்பும் எதிர்வும் தம்முள் மயங்குதலன்றி அவற்றோடு நிகழ்காலமும் மயங்கப்பெறும், எ—று.

உ—ம்: யாம் விளையாடுங்கா என்றவழி முன்பு விளையாடுங்கா, இன்று விளையாடுங்கா, நாளைவிளையாடுங்கா என மூன்றுகாலத்துக் கண்ணும் வந்தவாறு கண்டுகொள்க.

அஃதேல், வினைச்சொற்கள் முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுள் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மைய என்று எடுத்தோதி, முற்றுச் சொல்லாவது இத்தன்மையது என்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்ற தென்னை எனின், அஃது எமக்குப் புலனாயிற்றன்று. அஃதேல் வினையிலக்கணம் அறிந்தேனாகுங்கால் முற்றிலக்கணமும்அறிதல் வேண்டுமன்றே? அதனை ஆண்டுக் கூறியவாறு ஈண்டுரைத்தல் வேண்டும், எனின், உரைக்குமாறு:-

(1) *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்

---

* இச்சூத்திரமும் உரையும் அடுத்து வரும் இரண்டு சூத்திரமும் பிற உரையாசிரியர் யாவரும் எச்சவியலில் ''கேட்டையென்றா'' (எச்ச 30) என்னும் சூத்திரத்

தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
மூவிடத்தான வினையினும் குறிப்பினும்
மெய்ம்மை யானும் ஈரிரண்டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே

முற்றுச்சொற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என வினைச் சொற்குச் சிறப்புடைத்தாகிய மூன்று காலத்தானும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூன்றிடத்தானும் தொழிலானும் குறிப்பானும் பொருளானும் முற்று இயலும் மொழிவகை நிலைமையான் இருபத்துநான்கு, எ-று.

காலம் என்பதன்கண் உருபு தொக்கு நின்றது. இடம் என்பதன்கண் உம் எஞ்சி நின்றது. அவையாவன —தன்மைக் கண் எட்டும் முன்னிலைக்கண் எட்டும் படர்க்கைக்கண் எட்டுமாம். ஒருமையும் பன்மையும் எனத் தமிழ்நடை யிருவகைப் படுதலின் தன்மைக்கண் வரும் எட்டும் ஒருமையுணர்த்துவன நான்கும் பன்மையுணர்த்துவன நான்கும் என இருவகைப்படும்.

உ—ம் : உண்டேன், உண்ணா நின்றேன், உண்பேன், கரி யேன் இவை மூன்று காலமும் வினைக்குப்பும் பற்றி ஒருமைக்கண் வந்தன. உண்டனம், உண்ணாநின்றனம், உண்குவம், கரியம் என்பன அவ்வாறு பன்மைப் பொருண்மைக்கண் வந்தன.

முன்னிலைக்கண் எட்டும் இருவகைப்படும். உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை, கரியை—இவை ஒருமை பற்றி வந்தன. உண்டனிர், உண்ணாநின்றனிர், உன்குவீர், கரியீர்— இவைநான்கும் பன்மைபற்றி வந்தன.

படர்க்கைக்கண் எட்டும் இருவகைப்படும். அவற்றுள் ஒருவனை யுணர்த்துவதும், ஒருத்தியை யுணர்த்துவதும், ஒன்றனை யுணர்த்துவதும் ஒருமையென அடங்கும். பலரை யுணர்த்துவதும் பலவற்றை புணர்த்துவதும் பன்மையென அடங்கும். உண்டனன், உண்ணா நின்றனன், உண்பன், கரியன் எனவும்; உண்டனள் உண்ணா நின்றனள், உண்பள்,

---

தையடுத்து வைத்தனர்: தெய்வச்சிலையார் தாம் கொண்டகடா விடைகளுக்கேற்ப இங்கு வைத்தார். இவற்றின் விளக்கம் எச்சவியல் உரைவளத்தில் கூறப் படும், பிற உரைகளோடு ஒப்புநோக்கிக் கூறவேண்டு தலின்,

கரியள் எனவும்; உண்டது, உண்ணா நின்றது, உண்பது, கரியது எனவும் இவை பொருண் முகத்தான் ஒருமையாதலின் மூன்று காலமும் வினைக் குறிப்பும் பற்றி நான்காய் அடங்கின. உண்டனர், உண்ணா நின்றனர், உண்குவர், கரியர் எனவும்; உண்டன, உண்ணாநின்றன, உண்குவ, கரிய எனவும் இவை பொருள் முகத்தாற் பன்மையாதலின் மூன்று காலமும் வினைக்குறிப்புமாகி நான்காய் அடங்கின.

வினையெச்சமும் பெயரெச்சமும் தொழிலும் காலமும் உணர்த்தினல்லது, இடமும் பாலும் உணர்த்தா என்பதூஉம், முற்றுச்சொல் தொழிலும் காலமும் இடமும் பாலும் உணர்த்தும் என்பதூஉம் கண்டு கொள்க.

(2) எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும்

மேலதற்கு ஓர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: தொழிலும் காலமும் இடமும் பாலும் உணரவரும் வினைச்சொல் அன்றி, மூன்றிடத்திற்கும் பொதுவாகி வரும் வினைச்சொல்லும் முற்றாம் நிலைமையைப் பெறும், எ-று.

அவையாவன: வியங்கோள், இன்மைசெப்பல், வேறு என் கிளவி, செய்ம்மன, பெயரெச்சமல்லாத செய்யும் என்னுஞ்சொல்.

(3) அவைதாம்

தத்தம் கிளவி யடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே

முற்றுச்சொல் தொடர்ந்தியலுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட முற்றுச்சொற்களுள் தத்தமக்கு ஏற்ற வினைச்சொல் அடுக்கிவரினும் உம்மையான் அடுக்காது வரினும் எவ்வழியானும் பெயர் முடிபினையுடையஎ-று. என்பது முற்றுச்சொல் பெயரோடல்லது தொடரவும்படாது என்றவாறா யிற்று.

உ-ம்: உண்டான் சாத்தன், நல்லன் அரசன்—இவை தனி வந்தன. உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்; நல்லன், அறிவுடையன், செவ்வியன் சான்றோா மகன்—இவை வினையும் வினைக்குறிப்பும் அடுக்கி வந்தன.

'தத்தங்கிளவி' என்றதனான் ஒருகாலத்திற்கேற்ற வினையே அடுக்குவது என்று கொள்க.

'எத்திறத்தானும்' என்றமையால் சாத்தன் உண்டான், அரசன் நல்லன் எனவும்; சாத்தன் உண்டான் தின்றான் ஓடினான், அரசன் வென்றியுடையன் செவ்வியன் எனவும் வரும்.

இவை எழுவாயும் பயனிலையும் ஆகாவோ எனின், எழுவாயத் தொடரோடு முற்றுத் தொடரிடை வேறுபாடின்மை வேற்றுமையோத்தினுட் கூறப்பட்டது. அன்றியும், பெயர் முந்துற்றதனை எழுவாய்த் தொடர் என்றும், வினை முந்துற்றதனை முற்றுத் தொடர் என்றும் வழங்கினும் அமையும்.

இவை மூன்று சூத்திரமும் ஈண்டைத் தொடர்பு பட்டுக் கிடந்த இதனை, உரையெழுதுவோர் 'பிரிநிலை வினை' என்னும் சூத்திரத்துட் சொல்லப்பட்ட பெயரெச்ச வினையெச்சம் என்பவற்றை ஈண்டு ஓதப்பட்ட பெயரெச்ச வினையெச்சமாகக் கருதி, ஆண்டுச்சேர வைத்தார் என்பாரும் உளர்.

அஃது அற்றாக வினைச்சொல், பெயரெச்சம்வினையெச்சம் முற்று என மூவகைப்பட்டதாயின் வினையெச்சமும் முற்றும் அடுக்கி வருமாறு கூறிப் பெயரெச்சம் அடுக்கி வருமாறு கூறாதது என்னையெனின், பெயரெச்ச அடுக்கு வினையெச்ச அடுக்குப் போல முன்னது முடிய முடியாமையின் கூறாராயினர். சிறுபான்மை வருவன ''செய்யுள் மருங்கினும்'' (எச்ச. 67) என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்ளபபடும்.

நச்.

இது நிகழ்வு ஏனையவற்றோடு மயங்கும் என்கின்றது.

இ—ள்: ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்—நிகழ் காலமும் இறப்போடும் எதிர்வோடும் மயங்குதலை நீக்கார் கொள்வர் ஆசிரியர், எ-று.

உ-ம்: இவள் பண்டு இப்பொழிலிடத்து விளையாடும், இவள் நாளை வரும் எனவரும்.

மூன்று காலமும் வினைப்பெயரோடு மயங்கும் என்றாரேனும் ஏற்றனவே கொள்க.

வினையியல் முற்றும்

கல்.

என்—எனின், இதுவும் அப்பொருட்கண் இறந்ததனோடு நிகழ்வது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒழிந்த நிகழ்காலம் இறந்தனோடு மயங்குதலை நீக்கார் ஆசிரியர்; எ—று,

உ—ம் : யாம் பண்டு விளையாடுங்கா என வரும்.

இனி ஒன்றென முடித்தல் என்பதனால் இறந்ததனோடு எதிர்வதும் நிகழ்வதும் மயங்கியவாறு போல நிகழ்வதனோடு இறந்ததுவும் எதிர்வும், எதிரதனோடு இறந்ததுவும் நிகழ்வதும் மயங்குமாறு கொள்க

யாம் இன்று விளையாடா நின்றது இக்கா என்புழி, விளை யாடிற்று எனவும் விளையாடுவது எனவும் கூறுதல் நிகழ்கால மயக்கம். யாம் நாளை விளையாடுவது இக்கா என்புழி விளை யாடிற்று எனவும் விளையாடா நின்றது எனவும் கூறுதல் எதிர் கால மயக்கம்.

இவை இதுபொழுதை வழக்கினுள் ஏலா எனினும், இவ் வாறு மயங்குதற்கு இலக்கணம் உண்மையானும், கசதப முதலிய என்புழிச் சொல்லுமுறை என்பதனைச் சொல்லிய முறையே என்றமையானும் அமையும் எனக்கொள்க,

ஆறாவது வினையியல் முற்றும்

வெள்

இது நிகழ்காலம் ஏனையவற்றோடு மயங்கும் என்கின்றது.

இ-ள்; இறந்தகாலமும் எதிர்காலமுமேயன்றி ஏனை நிகழ் காலமும் அவற்றோடு மயங்குதலை நீக்கார் ஆசிரியர், எ-று.

உ-ம்: இவள் பண்டு இப்பொழிலகத்துவிளையாடும் எனவும், நாளை வரும் எனவும் வரும்.

இறந்தகாலமும் எதிர்காலமும் மயங்கும் மயக்கம் வழக்கிற் பயின்று வருதலானும் நிகழ்கால மயக்கம் அத்துணைப் பயின்று வாராமையானும் இவற்றை இரண்டு சூத்திரங்களாற் பிரித்துக் கூறினார் தொல்காப்பியர்.

''மூன்று காலமும் தம்முள் மயங்கும் என்றாரேனும், ஏற்புழி யல்லது மயங்காமை கொள்க. ஏற்புழிக் கொள்ளவே வந்தானை வரும் என்றலும், வருவானை வந்தான் என்றலும் இவை முதலா யினவெல்லாம் வழுவென்பதாம்'' எனச் சேனாவரையர் கூறும் விளக்கம் உளங்கொளத் தகுவதாகும்.

தொல்காப்பியர் குறித்த காலமயக்கங்கள் எல்லாவற்றையும் ''பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி'' (நன். 383) என்ற தொடரால் தழுவிக்கொண்டார் பவணந்தி முனிவர்.

ஆதி.

எதிர்காலம் இறந்தகாலம்போல அடுத்த நிகழ்காலமும் மாறுபடுவதற்குரியது, அது கடியத்தக்கதன்று.

நான் அடிக்கிறதுபோல அடிக்கிறேன். நீஅழுவதுபோல அழு— இங்கு 'அழுகிறதுபோல' என்ற நிகழ்காலம் எதிர்காலத்துக்காக நின்றது.

இப்படிப் பொய் சொல்வார் என்று யான் எப்படி உணர முடியும்?—இங்கு 'பொய் சொல்கிறவர்' என்ற நிகழ்காலம் எதிர் காலமாக நின்றது.

முற்றியது

பயன் படுத்தப் பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — இளம்பூரணம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை (1973).

2. தொல் — சொல் — சேனாவரையம்
ரு. சுந்தரமூர்த்தி (பதி)
தெற்குவீதி, திருப்பனந்தாள் (1966).

3. தொல்—சொல்—தெய்வச்சிலையார்
சை. சி. நூ. கழகம், சென்னை (1979).

4. தொல்—சொல்—நச்சினார்க்கினியம்
சை. சி. நூ. கழகம், சென்னை (1974).

5. தொல்—சொல்— கல்லாடம்
சை. சி. நூ. கழகம், சென்னை (1964)

6. தொல்—சொல்—கல்லாட னார்விருத்தி
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பதிப்பு
வெளியீடு: தமிழ்நாடு அரசினர் கீழ்த்திசைச்
சுவடி நூலகம், சென்னை (1971).

7. தொல்—சொல்—சேனாவரையம்
சி. கணேசய்யர் உரைவிளக்கக் குறிப்புகளுடன்
வடஇலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்
சுன்னாகம், இலங்கை (1955).

8. தொல்—சொல்—சேனாவரையம்
பூவரர்கம் பிள்ளை விளக்கத்துடன்
சை. சி. நூ. சுழகம், சென்னை (1970).

9. தொல்—சொல்—குறிப்பு
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்
38, பாண்டியன் சந்து
தெப்பகுளம், திருச்சி (1930)

10. தொல்—நன்னூல்—சொல்லதிகாரம்
க. வெள்ளை வாரணனார்
142, கனகசபை நகர், சிதம்பரம் (1971).

11. தொல்—சொல்—ஆதித்யம்
C. L. S. கிறித்தவ இலக்கிய சங்கம்
பூங்கா நகர், சென்னை (1971).

12. இலக்கணத் தொகை—சொல்
ச. வே. சுப்பிரமணியன்
விற்பனை உரிமை : ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்
கோர்ட்டு ரோடு, நாகர்கோயில்-1 (1971).

13. காப்பியர் நெறி—சொல்லியல்
தே. ஆண்டியப்பன்
முத்துப் பதிப்பகம், மதுரை (1977).

14. Tolkappiyam with critical studies
Prof : S, Ilakkuvanar
Kural Neri Publishing house
Madurai, 6. (1963).

15. மொழிக் கட்டுரைகள்
ச. வே. சுப்பிரமணியன்.

16. மொழி நூல். மு. வரதார்சனார்,
சை. சி. நூ. கழகம், சென்னை.

17. இலக்கணவுலகில் புதிய பார்வை
பொன். கோதண்டார்மன் (1973).

18. இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்
ச. அகத்தியலிங்கம் பதிப்பு
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு
அண்ணாமலை நகர்.

19. புதுமைப் பரிசு
மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை பதிப்பு
எம். ஆர். அப்பாதுரை
12, முத்தியாலு செட்டித் தெரு, சென்னை-7 (1961).

சொல், தொடர் அகராதி

(எண்—பக்க எண்)

அகத்தியலிங்கம் 288
அஞ்சாமை 172
அஞ்சினழ் 26 30
அட்ட செஞ்சோறு 258
அடிச்சொல் 197
அடுஞ்செஞ்சோறு 258
அடுமின் சோறே 151
அடுவீர் 151
அணித்து 131
அதுவரும் 162
அதுவன்று 124
அதுவுண்டவூண் 160 162
அதுவுண்மன 162
அரசன் ஆகொடுக்கும் பார்ப்பான் 234, 237
அரற்றினம் 30
அருத்தினெம் 30
அல்லர் 83 87 94
அல்லன் 83 87 94 102
அல்லான் 102
அல்லெம் 102
அல்லேம் 102
அவர் கூட்டு 161
அவர் செல்க 160
அவர் யார் 75 76
அவர் வரும் 160
அவர் வேறு 160
அவரில்லை 160
அவருண்டவூண் 162
அவருண்மன 160 162
அவள் செல்க 160
அவள் யார் 75 76
அவள் வரும் 160 162
அவள் வேறு 160
அவளில்லை 160
அவளுண்டவூண் 162
அவளுண்ணும்ஊண் 160
அவளுண்மன 160
அவன் செல்க 160
அவன் யார் 75 76
அவன் வரும் 100 162
அவன் வேறு 161
அவனில்லை 160
அவனுண்டவூண் 160 162
அவனுண்மன 160
அவனுண்ணுமூண் 160
அவையத்தார் 59-61
அவையல்ல 124
அவையெவன் 118 119
அவைவரும் 162
அறஞ் செய்தான் சுவர்க்கம் புக்கான் 275 278 279
அறஞ்செய்யா நிற்பவன் சுவர்க்கம் புகுவன் 279
அறத்தை அரசன் விரும்பினான் 260
ஆகிடந்தசெறு 215
ஆகிடந்து 34
ஆகுபெயர் 95

ஆகொண்மாக் வந்தார் 60 63
ஆடூஉ வினை 21
ஆடையொலிக்கும் கூலி 234 236 237 239
ஆடையொலிக்குழில்லம் 239
ஆடையொலித்த கூலி 239
ஆண்டவரே...தாரும் 174
ஆண்டியப்பன் 134 164 250
ஆவிருந்து 34
ஆவுண்டு 94
ஆனும் 193
இசைநிறை 7
இருந்தாங்கு 197
இருமடியேவல் 153
இருவேம் 74
இல்லத்தன் 86 92
இல்லர் 83 94
இல்லள் 83 94
இல்லன் 83 94
இலர் 87
இலள் 87
இலன் 87
இலையுதிர்ந்த மரம் 243
இவ்வெருது கோடின்று 129
இவற்குநிறம் கரிது 90
இவன்திருவுடையான் 90
இளவழகனார் 281
இறவாக்காலம் 196
இறவாக்கால வினையெச்சம் 197 199 200
இன்மைவேண்டும் 288
இனிக்கொண்டான் 204
ஈந்தான் 152
ஈப்பி 152
ஈப்பித்தான் 153
உடம்பொடு புணர்த்தல் 65 168
உடம்பொடு புணர்த்துக் கூறினார் 56
உடையம் 100 101
உடையர் 83 94 100
உடையள் 83 94 100
உடையன் 12 83 94 99 100
உடையாம் 100 101
உடையார் 100
உடையாள் 100 101
உடையெம் 100
உடையேம் 100
உடையேன் 100
உண்கிட 155
உண்கிடு 155
உண்கிற்றி 144
உண்கின்றனன் 104
உண்கின்றனர் 34
உண்கின்றனம் 26 30 34
உண்கின்றனேம் 26 30
உண்கின்றாம் 30
உண்கின்றிலான் 54
உண்கின்றிலம் 30 32
உண்கின்றிலாம் 30
உண்கின்றீர் 26
உண் 4 8
உண்கின்றிலெம் 30
உண்கின்றிலெம் 30
உண்கின்றேம் 30
உண்கு 38 39 110
உண்குப 58
உண்குபு வந்தான் 209 210 211
உண்கும் 27 28 33
உண்கு வந்தேம் 46
உண்குவ 103 104 105
உண்குவந்தேன் 46 47 49
உண்குவம் 24 27 33
உண்குவர் 55
உண்குவன் 52

உண்குவாம் 32 31
உண்குவரர் 57
உண்குவாள் 53
உண்குவிர் 149 150
உண்குவீர் 149
உண்குவன் 37
உண்குவென் 38 39
உண்குவேம் 32
உண்குவேன் 37
உண்குவை 146
உண்ட 107
உண்ட எச்சில் 240
உண்டசோறு 236
உண்டது 109
உண்டல் 4
உண்டன 103 104
உண்டனம் 26 29 32
உண்டனமல்லம் 29
உண்டனமல்லேம் 30
உண்டனர் 55
உண்டனரில்லர் 57 58
உண்டனள் 53
உண்டனளல்லள் 54
உண்டன்று 110
உண்டனன் 52 54 146
உண்டனனல்லன் 54
உண்டனனல்லான் 54
உண்டனை 144
உண்டனர் 149 150 151
உண்டனீர் 154
உண்டனெம் 24 26 28
உண்டனென் 37
உண்டனேம் 26 30
உண்டாம் 24 28 32
உண்டாமல்லாம் 30
உண்டாமல்லேம் 32
உண்டார் 57
உண்டாரல்லர் 57
உண்டான் 2 4 7 8 10 12 13 14 19 23 52 53
உண்டான் பசித்த சாத்தன் 260
உண்டி 143 144 145 146
உண்டில 107
உண்டிலம் 29
உண்டிலர் 57
உண்டிலள் 53
உண்டிலன் 53 54 252
உண்டிலாம் 29 32 53
உண்டிலான் 54
உண்டிலெம் 32
உண்டிலேம் 30 32
உண்டிலை 146
உண்டீர் 149 150 151 154
உண்டு 37 38 39
உண்டும் 27 28 33
உண்டுவந்தான் 162
உண்டேம் 24 26 28 32
உண்டேமல்லேம் 30
உண்டேன் 37 272
உண்ணல் 137
உண்ணலம் 31
உண்ணலிர் 150 151
உண்ணலெம் 31
உண்ணன்மார் 71
உண்ணா 103 107
உண்ணா 106
உண்ணாதி 14 16
உண்ணா இல்லம் 252 253
உண்ணாக் காலம் 252 256
உண்ணா கிடந்தனம் 26 34
உண்ணாச் சாத்தன் 251-255
உண்ணாச்சோறு 252
உண்ணாத சாத்தன் 253
உண்ணாநிற்ப 57
உண்ணாநின்ற 104
உண்ணாநின்றது 109
உண்ணா நின்றனம் 30 34
உண்ணா நின்றனர் 55

உண்ணா நின்றனன் 53 52
54 144 146-151
உண்ணா நின்றன 103 104
உண்ணா நின்றனெம் 24
26 28 30 32
உண்ணா நின்றனென் 37
உண்ணா நின்றனேம் 26 30
உண்ணா நின்றாம் 24 30 32
உண்ணா நின்றார் 55 56
உண்ணா நின்றான் 11 12
52 53 139
உண்ணா நின்றில 107
உண்ணா நின்றில்ம் 30
உண்ணா நின்றிலள் 53
உண்ணா நின்றிலர் 57
உண்ணா நின்றிலாம் 30
உண்ணா நின்றிலான் 54
உண்ணா நின்றிலீர் 154
உண்ணா நின்றிலெம் 30
உண்ணா நின்றீர் 149 151
154
உண்ணா நின்றேம் 24 28 30
உண்ணா நின்றேன் 37
உண்ணாம் 32
உண்ணாய் 147 153 176
உண்ணார் 57
உண்ணாள் 53
உண்ணா விருந்தனம் 26 34
உண்ணீர் 154
உண்ணும் அவன் 232
உண்ணும் இல்லம் 232 238
244 246 248
உண்ணும் ஊண் 232 236
உண்ணுஞ் சாத்தன் 251
உண்ணுஞ்சோறு 238
உண்ணூஉவந்தான் 209-311
உண்ப 55 56 57
உண்பம் 28 32 37
உண்பன் 52 53
உண்பாம் 24 28 31
உண்பார் 55 56
உண்பான் 11 12
உண்பிற் 150
உண்பெம் 24 31 32
உண்பேன் 38 39
உண்பேன் வந்தேன் 49
உண்மின் 149
உண்மின்களே 151
உம்மை வேண்டும் 288
உரற்கால் யானை 209
உரிஞின சாத்தன் 152
உரிஞினம் 30
உரிஞினாய் 146
உரிஞினை 146
உரிஞினான் 152
உரிஞிவந்தான் 152
உரிஞினெம் 26
உரிஞினேம் 26
உரிஞுவம் 24
உரிஞுப 56 57
உரிஞுதும் 27
உரிஞுமின் 149 150 154
உரிஞுவ 104 106
உரிஞுவம் 27 31
உரிஞுவன் 104 106
உரிஞிவி 152
உரைத்தனம் 26 29
உரைத்தனமல்லேம் 30
உரைத்தனெம் 26
உரைத்தனேம் 26
உரைத்தாம் 26 29
உரைத்தாமல்லாம் 30
உரைத்தி 144 145
உரைத்திலேம் 30
உரைத்தேமல்லேம் 30
உரைப்பம் 27
உழுது...வந்தான் 227-230
உழுது ஏரொடு வந்தான்
258-260
உழுது சாத்தன் வந்தான் 258

உழுது வந்தது 162
உழுது வந்தன 160
உழுது வந்தாய் 162
உழுது வந்தாள் 160
உழுது வந்தான் 160
உழுது வந்தேம் 162
உழுது வந்தேன் 160 162
உழுது வந்தீர் 160
உழுது வருவாய் 265 266
உழுது வருவான் 267
உழுந்தல்ல 122
உழுந்தல்லபயறு 130
உழுந்துள 122 130
உளர் 84 94
உளள் 84 91 94
உளன் 84 91 94
உறைகிற்றி 145
ஊர்களிறு மிதித்த நீர் 240
ஊறெனின் அது பண்பு 80
ஊனம் 102
எந்நாட்டாகும் நும்போர் 132
எவ்வுயிர்க்கண்ணும் இறைவன் உளன் 94
எவன் அது 119
எவன் அவை 119
எழும்பினான் 152
எள்ளினம் 30
எள்ளுமார் 59
எறியுங்கல் 238
என்எதிர் நின்றாய் 82
என்செய்யாநின்றான் 139
ஏகின 199
ஏர்பு 196
ஏழாட்டையான் 84
ஐயசிறிதென்னையூக்கி 145
ஐயாட்டையான் 93
ஒருதிங்களம் 102
ஒருநாளம் 102
ஒல்லைக் கொண்டான் 193
ஒருவன்...சுவர்க்கம் புகும் 276 278
ஒருவன்தாயை...நிரயம் புகும் 276 278
ஒழிப 57
ஒன்றென முடித்தல் 67 279
ஓடவல்ல 129
ஓடவற்று 129
ஓடுவ 104 107
ஓதாப் பார்ப்பான் 252 253
ஓதுங்கால் 232
ஓராட்டையம் 102
கச்சினன் 86
கடர்வுகபாக 168 170 171
கண்ணன்கதிரையில் இருந்தான் 17
கண் நொந்து கிடந்தான் 214 219
கணேசய்யர் 35 68 141 158
கதவவால் 132
கதறுபு 196
கதிரை-கதிர்காமம் 17
கரிது 123 128 129
கரிபு 196
கரிய 123 128
கரியம் 99 101
கரியர் 83 99 101
கரியன் 2 7 13 19 21 83 85 92 99 101
கரியாய் 144
கரியார் 99 101 102
கரியாள் 99 101
கரியெம் 99 101 102
கரியென் 99
கரியோம் 101
கரியேன் 99
கரியை 144 146 151
கருங்கோட்டது 132
கருணாகரன் 207
கருத்தி 144

கருமையன் 85
கலக்கினெம் 26
கலக்கினேம் 26
கழலினன் 86
கழலினர் 151
கழலினை 151
கற்குறுநூல் 233
காடிறந்தோரே 79
காண்குயான் 45
காண்குவஞ்சிசின் 45
காண்குவந்தேம் 46
காண்குவந்தேன் 45 46
காணன்மார் எமர் 60 62
காந்தி வாழ்க 173
காலமுழுகினான் 217
கானங்கடத்திர் 151
கிடவாய் 147
குண்டுகட்டு 110 111 125
குணத்திற்குக் குணம் இன்மை 88
குதிரை கோடின்று 128
குருடன் 102
குழலன் 91
குழையன் 92
குளம் நிறைய மழை பெய்தது 193
குறுங்கோடிற்று 132
குறுந்தாட்டு 110 111
குறுந்தாள் 125
கூயிற்று 110
கூவினான் 152
கைப்பி 152
கைப்பித்தான் 153
கையிற்றான் 217
கையிற்று வீழ்ந்தான் 212 213 217 218
கையிறூஉவீழ்ந்தது 213
கையிறூஉவீழ்ந்தான் 212 213 217 218
கொடியாடித் தோன்றும் 265-269
கொடுப்பி 152
கொண்மார் வந்தார் 59 61
கொல்லுங்காட்டுள் யானை 256-60
கொள்வித்தான் 153
கொள்ளீர தொழிவான் 254
கொள்ளுவி 152
கொன்ற காட்டுள் யானை 258 259
கோட்டன் 91
கோடில 121 122
கோடின்று 121 122 127
கோடுடைத்து 122
கோடுடைய 121 122 127
கோதண்டராபன்-பொன் 241
சண்முகதாஸ், அ. 16 18 35
சாத்தன் 67
சாத்தன் உண்டக்கால் வரும் 226
சாத்தன் ஒஏதல் வேண்டும் 286 287
சாத்தன் குழையினன் 91
சாத்தன் பாடிய பாட்டு 242
சாத்தன் பாட்டுப் பாடினான் 242
சாத்தன் வலியன் 88
சாத்தனதாடை 92
சாத்தனதுடைமை 89
சாந்தலிங்க அடிகளார் 48
சிவன் 94
சிவாஜி நன்கு நடித்தார் 108
சினைஇ 198
சுந்தரமூர்த்தி 133 156 193
சுப்பிரமணியன், ச. வே. 196
சூத்திரத் தொடர்ச்சி 284
செம்மை 4

செய்ய 123
செய்யது 19 124
செய்யன் 13 19 92
செய்யும் பொருள் 232
செய்யுளின்பம் 75
செல்வம் 27
செலீயர் 199
செவிடன் 102
செவிப்புலம் 96
செவியில 121
செவியின்று 121
செவியுடைய 121
சென்றது 19
சென்றன 104
சென்றார் அன்பிலர் 77 78
சேறு 37-39
சேறும் 27 28 33
சேய்த்து 131
சொல்லினம் 30
சொல்வல்லன் 94
சோறு பாணித் தவழி 272
273
ஞானாம்பிகை 48
ஞாயிறு இயங்கும் 268 279
ஞாயிறு படவந்தான் 215
ஞாயிறுபடுபு வந்தான் 215
ஞாயிறுபடூஉ வந்தான் 215
தந்தை 87
தந்தையையொப்பன் 90
தப்பினம் 30
தமிழ்மொழியிலக்கண வியல்பு
17 35
தமிழ் வாழ்க 173
தவிர்ப 58
தழீஇ 198
தன்னினமுடித்தல் 87 93
தாயைக்கொன்றான் நிரயம்
புகும் 275 279
திங்கள் இயங்கும் 268 269
திருமினம் 30
திருமினான் 152
திருமுதும் 24 27
திருமுவ 104
திருமுவம் 31
திருமுவித்தான் 153
தின் 4 8
தின்குவ 103 104
தின்குவீர் 149
தின்ப 55 56
தின்பல் 37
தின்பித்தான் 153
தின்மின் 149
தின்ற 107
தின்றல் 4
தின்றனம் 26 29
தின்றனெம் 26
தின்றனேம் 26 30
தின்றாம் 26 29
தின்றாமல்லம் 30
தின்றான் 8
தின்றேம் 26 30
தின்றேமல்லேம் 30
தின்றி 143 144 145
தின்றிலம் 29
தின்றிலேம் 30
தின்னா 106 107
தின்னாய் 147 153
தீச்சுடும் 269
தீயர் 84
தீயள் 84
தீயன் 84
தீற்றினான் 152
தீனம் 102
துஞ்சாது 200
துயிலுங்காலம் 233 234
தூஉய் 198
தெய்வமே துணைசெய் 174
தெருட்டினம் 30
தெருட்டினெம் 26
தெவ்வுவி 152

தெவ்வுவித்தான் 153
தெனாது 128
தெனாது குமரி 98
தேய்த்தான் 152
தொக்கன 104
நக்கனும் 26 29 34
நக்கன்மல்லம் 29
நக்கனெம் 26
நக்கனேம் 26 30
நக்காம் 26 29
நக்காமல்லம் 30
நக்கிலம் 29
நக்கிலாம் 29
நக்கிலேம் 30 26
நக்கேம் 30
நக்கேமல்லேம் 30
நகூஉப் பெயர்ந்தாள் 77 78
நங்கை 35
நடத்துவி 152
நடத்துவிப்பி 153
நடப்பித்தான் 153
நடப்பிப்பி 153
நடப்பி 152
நடவாய் 153
நடவாநின்றது 111
நடையின்று 126
நம்பி 35 67
நல்லர் 94
நல்லள் 94
நல்லன் 94
நல்லோர் வாழ்க 173
நல்விருந்தோம்புவான் 219
நன்னூல் விருத்தி 16
நன்னூலார் 21
நாட்டினீர் 151
நாட்டை 151
நாடன் 111
நாம் உண்மன 162
நாம் செய்ம்மன 163
நாயன்று நரி 121 130
நாலாட்டையான் 84
நிலத்தம் 102
நிலத்தர் 83 102
நிலத்தள் 83
நிலத்தன் 83
நிலத்தாம் 102
நிலத்தான் 102
நிலத்தினெம் 102
நிலத்தெம் 102
நிலவன்மாரோ புலவர் 61
நிலவுவார் 61
நீ உடம்படு 155
நீ உண்ணல்வேண்டும் 286
நீகூட்டு 161
நீசெல்க 166
நீயாம் 161
நீயிர் இல்லை 160
நீயிர் உண்டஊண் 160
நீயிர் உண்மன 160
நீயில்லை 160
நீயுண்டவூண் 162
நீயுண்டுவருவாய் 265 266
நீயுண்ணுமூண் 160
நீயும்யானும் அவனும்
உண்டாம் 30
நீயும் யானும் உண்டனம் 30
நீர் செல்க 166
நீ வாழ்க 163 168 173
நுணங்கிய கேள்வியர் 193
நூலாக்கலிங்கம் 240
நெடிது 124
நொவ்வுவி 152
நோகோயானே 45
நோய்திரு மருந்து 233
படிக்கும் பள்ளி 240
பயறல்ல 122
பயறுள 122
பன்னினம் 30
பாட்டன்மார்எமர் 59 61
பாடும் புலவர் 240

பாய்ச்சினான் 152
பார்ப்பித்தூன் 153
பிரிந்துறைசூழாதி 145
பிறபுலம் 96
புக்கஇல்லம் 236
புக்கன்று 110
புக்கிலது 111
புதுவதின் இயன்ற அணியன் 193
புலியைக் கொன்ற யானை 242
புறத்தன் 86 92
புன்மயிரன் 91
பூட்டு 132
பூமியிற் சுவர்க்கம் மிகும் 277 282
பூவராகம் பிள்ளை 15 65
பெயர்த்தனன் முயங்க 44
பைங்கண்ணன் 91
பொச்சாவாக்கருவி 237
பொருநி வந்தான் 152
பொருநின சாத்தன் 152
பொருநினம் 30
பொருநினான் 152
பொருநுவித்தான் 153
பொருளிலர் 87
பொருளிலள் 87
பொருளிலன் 87
பொருளுடையன் 101
பொல்லா 125
பொன்னன்னது 128 130
பொன்னன்னம் 102
பொன்னன்னர் 83
பொன்னன்னள் 83
பொன்னன்னன் 102
பொன்னன்னாய் 151
பொன்னன்னாள் 92
பொன்னன்னேம் 102
பொன்னன்னை 83 151
போக்கினான் 152
போகும்புழை 262
போயினம் 30
போறி 151
மகடூஉவினை 21
மண்ணுவித்தான் 153
மதிவலந்திரிதரும் 268 269
மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது 202
மலை நிற்கும் 268-270
மழைபெய்தெனப் புகழ் பெற்றது 222 223
மழைபெய்தென மரங்குழைத்தது 222
மழைபெய்யக் குளம் நிறைந்தது 193
மழை பெய்யிய அறம் பெருகும் 226
மழை பெய்யிய எழுந்தது 225
மழை பெய்யியர் எழுந்தது 222 223 226
மழை பெய்யியர் பலி கொடுத்தார் 222
மனப்புலம் 96
மாஅயோய் 40
மாடத்தன் 89
மாற்றோர் பாசறையிலன் 94

முருகா முத்தந்தருக 174
முதனிலை விகுதி 4
மூவாட்டையது 132
மூவாட்டையது 132
மூவாட்டையான் 84
மெழுகிற்றுத்திண்ணை 234
யாம்உண்மன 160
யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும் 276 278
யாவன் தாயைக் கொன்றான் அவன் நிரயம் புகும் 276 278
யார் அவர் 74 77
யார் அவள் 74 77
யார் அவன் 74 77
யாறொழுகும் 268 269 270
யான்ஆம் 161
யான்உண்மன 162
யான் உண்கிடு 155
யான் உண்ட ஊண் 160 162
யான்காண்கு 47
யான்கூட்டு 161
யான்செய்ம்மன 163
யானில்லை 162 163
யானும் அவனுமில்லை 162 163
யானும் நீயும் செய்ம்மன 163
யான்வாழ்வேனாக 173
யான்வேறு 162 163
யானும் என்எஃகமும் சாறும் 71 72
யானை புலியைக் கொன்றது 242
வடக்கண்ண 132
வடாது 128 132
வடாது வேங்கடம் 98
வந்தது கொண்டு வாராதது முடித்தல் 161 246
வந்தனை 19
வந்தாய்மன்ற 80
வந்தான் 152
வந்தோய்மன்ற 80 81
வயிறுகுத்துபு கிடந்தான் 214
வயிறு நொந்து கிடந்தான் 214
வருகுப 57
வருது 37 38 39
வருதும் 27 28 33
வருவன 104 106
வருவி 152
வருவித்தான் 153
வருவிப்பி 153
வல்லர் 84
வல்லள் 84
வல்லன் 84 91 94
வல்லா 84
வளையாக் கோல் 252
வளையுங்கோல் 233 236
வாக்கியபேதம் 14
வாய்த்தென 197

வாயிலான் 69-71
வார்ந்தென 197
வாராநின்றான் 12
வாரினம் 30
வாவும் புரவி 262-264
வாழ்க நீ யெம்மான் 174
வாழிய 172
வாழியர் 172
வாழும் இல் 233
விரித்துத் தொகுத்தல் 64
விரிந்தான் 152
விரிப்பி 152
விரிப்பித்தான் 153
விரிவி 152
விரிவித்தான் 153
வில்லுடையான் 101
வினவி நிற்றந்தான் 77 78
வினையென்றது முதனி
லையை 4
வெஃகினான் 152
வெஃகுவி 152
வெஃகுவித்தான் 153
வெளியை 19
வென்றவேல் 236
வேங்கடராசுலு ரெட்டியார்
175

சூத்திர முதற் குறிப்பகராதி

(எண்—பக்கஎண்)

அ ஆவ என 103
அத்திணைமருங் 117
அதுச்சொல் 82
அர் ஆர்ப 54
அன் ஆன் 51
அம்முக்கிளவியு 211
அவற்றுள், செய்கென் 42
அவற்றுள், செய்யும் 261
அவற்றுள், பன்மை 70
அவற்றுள், முதனிலை 208
அவற்றுள், முன்னிலைக் கிளவி 142
அவற்றுள், முன்னிலைதன்மை 165
அவற்றொடு வருவழிச் 244
அவைதாம், அம்ஆம் 22
ஆயென்கிளவி 80
இது செயல் வேண்டும் 285
இர்ஈர்மின் 148
இறப்பின் நிகழ்வின் 10
இறப்பே எதிர்வே 305
இன்றிலவுடைய 120
எஞ்சியகிளவி 159
ஏனைக்காலமு 307
ஏனையெச்சம் 220
ஒன்றன் படர்க்கை 108
கடதறவென்னும் 36
காலந்தாமே 8
குறிப்பினும் வினை 18
செய்து செய்யூ 182
செய்தென் எச்சத் 264
செயப்படுபொருளை 300
தத்தமெச்சமொடு 257
நிலனும் பொருளும் 231
பல்லோர் படர்க்கை 177
பலமுறையானும் 226
பன்மையும்...அஃறிணை யவ்வே 115
பன்மையும்...உயர்திணை யவ்வே 63
பன்மையும்...வேறுபாடிலவே 97
பாலறிமரபின் 77
பின்முன்கால் 200
பெயரெஞ்சுகிளவியு 251
மாரைக்கிளவியு 58
மிக்கதன் மருங்கின் 274
முந்நிலைக்காலமு 267
முன்னிலை வியங்கோள் 134
யாஅர் என்னும் 74
வன்புறவரூஉம் 290
வாராக் காலத்து நிகழுங் 271
வாராக்காலத்து வினைச் 296
வினையெனப் 1

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1.	தமிழர் தோற்கருவிகள்	... ரூ. 10-00
2.	தமிழும் தமிழரும்	... ரூ. 5-00
3.	தமிழர் எண்ணங்கள்	... ரூ. 16-00
4.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	... ரூ. 6-00
5.	தமிழ் இலக்கியக் கொள்கை-8	... ரூ. 20-00
6.	எண்பத்தொன்றில் தமிழ்	... ரூ. 65-00
7.	பாரதியார் வாழ்க்கை கொள்கைகள்	... ரூ. 8-00
8.	ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு	... ரூ. 20-00
9.	தொல்காப்பியம் புணரியல்	... ரூ. 10-00
10.	தொல்காப்பியம் - தொகை மரபு	... ரூ. 8-00
11.	தொல்காப்பியம் - புள்ளிமயங்கியல்	... ரூ. 15-00
12.	தொல்காப்பியம் - குற்றியலுகரப்புணரியல்	... ரூ. 11-00
13.	தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல்	... ரூ. 12-00
14.	தொல்காப்பியம் - விளிமரபு	... ரூ. 6-00
15.	தொல்காப்பியம் - பெயரியல்	... ரூ. 12-00
16.	தந்திவனப்புராணம்	... ரூ. 15-00
17.	திருமயிலை உலா	... ரூ. 7-00
18.	ஊஞ்சல் இலக்கியம்	... ரூ. 10-00
19.	மீனாட்சியம்மன் திருப்புகழ்	... ரூ. 10-00
20.	வெள்ளைக்காரன் கதை	... ரூ. 7-00
21.	சிந்து இலக்கியம்	... ரூ. 8-00
22.	மெய்க்கீர்த்திகள்	... ரூ. 20-00
23.	பிரபந்த தீபிகை	... ரூ. 12-00
24.	திராவிடமொழி இலக்கியங்கள்	... ரூ. 35-00
25.	தமிழில் விடுகதைகள்	... ரூ. 12-00
26.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	... ரூ. 15-00
27.	தஞ்சைமாவட்ட ஊர்ப்பெயர்கள்	... ரூ. 12-00
28.	சித்திரக்கவிகள்	... ரூ. 25-00
29.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்	... ரூ. 12-00
30.	கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்	... ரூ 12-00
31.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	... ரூ. 6 00
32	கண் மருத்துவம்	... ரூ. 50-00
33.	தமிழரின் தாயகம்	... ரூ. 10-00
34.	Language and Grammar-Heritage of the Tamils	... Rs. 22-00
35.	Cultural Heritage of the Tamils	... Rs. 20-00
36.	Literary Heritage of the Tamils	... Rs. 50-00
37.	Philosophical Heritage of the Tamils	... Rs. 22-00
38.	Heritage of the Tamils - Art & Architecture	... Rs. 25-00
39.	Epigraphical Evidences for Tamil studies	... Rs. 10-00
40.	Papers on Tamil Studies	... Rs. 15.00
41.	Tamil Drama	... Rs. 20-00
42.	A Study of the Perunkatai	... Rs. 12-00
43.	Thiru Murugan	... Rs. 5-00
44.	Dr. Mu. Va.	... Rs. 20-00
45.	Tamil Research through Journals	... Rs. 7-50
46.	Dissertations on Tamilology	... Rs. 10-00
47.	Tamil writers Directory	... Rs. 10-00
48.	Tamil-Text (An-Auto Instructional Course)	... Rs. 25-00
49.	Heritage of the Tamils-Siddha Medicine	... Rs. 45-00
50.	Siddha Medical Manuscripts in Tamil	... Rs. 8-00

Japonica - Dial 441913